மார்க்ஸ்
எங்கெல்ஸ்
லெனின்
நூல்கள்

# எங்கெல்ஸ்



## குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம்.ஏ.

**Ф. Энгельс**

ПРОИСХОЖДЕНИЕ СЕМЬИ, ЧАСТНОЙ СОБСТВЕННОСТИ И ГОСУДАРСТВА

В связи с исследованиями Льюиса Г. Моргана

*на тамильском языке*

**F. Engels**

THE ORIGIN OF THE FAMILY, PRIVATE PROPERTY AND THE STATE

In the Light of the Researches of Lewis H. Morgan

*in Tamil*

முதலாவது பதிப்பு 1962

இரண்டாவது பதிப்பு 1973

மூன்றாவது பதிப்பு 1978

நான்காவது பதிப்பு 1990

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1973

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Э $\frac{0101010000-098}{014(01)-90}$ 278—90

ISBN 5-01-002396-2

## பொருளடக்கம்


நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . 5

முதற் பதிப்புக்கு 1884இல் எழுதிய முன்னுரை . . . . . . . . . . . . . . 10

நான்காம் ஜெர்மன் பதிப்புக்கு 1891இல் எழுதிய முன்னுரை . . . . . . . . 14

I. ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய கலாசாரக் கட்டங்கள் . . . . . . . . 36

1. காட்டுமிராண்டி நிலை . . . . . . . . . 37

2. அநாகரிக நிலை . . . . . . . . . . 39

II. குடும்பம் . . . . . . . . . . . . . . 47

III. இராகோஸ் குலம் . . . . . . . . . . 137

IV. கிரேக்க குலம் . . . . . . . . . . . 161

V. அதீனிய அரசின் உதயம் . . . . . . . 176

VI. ரோமாபுரியில் குலமும் அரசும் . . . . 194

VII. கெல்டுகள் மற்றும் ஜெர்மானியர்கள் மத்தியில் குல அமைப்பு . . . . . . . . 212

VIII. ஜெர்மானியர்கள் மத்தியில் அரசு அமைதல் . . . . . . . . . . . . . . 236

IX. அநாகரிக நிலையும் நாகரிக நிலையும் . 256

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . 291

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 300

இலக்கிய மற்றும் புராணப் பெயரகராதி . 312

## நூல் அறிமுகம்

''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்ற இந்நூலை பி. எங்கெல்ஸ் 1884ஆம் ஆண்டு மார்ச் இறுதி முதல் மே இறுதி வரையிலான இரண்டே மாதங்களில் எழுதினார்.

மார்க்சின் கையெழுத்துப் பிரதிகளைப் புரட்டி பார்த்த பொழுது எங்கெல்ஸ், முற்போக்கு அமெரிக்க விஞ்ஞானி லூ. ஹெ. மார்கன் எழுதிய **பண்டைக்காலச் சமூகம்** என்ற நூலின் சுருக்க குறிப்பைக் கண்டுபிடித்தார். அதை 1880—1881இல் மார்க்ஸ் எழுதியிருந்தார். அதில் மார்க்சின் பல விமர்சன குறிப்புகளோடுகூட சொந்த கருத்துகளும், பிற நூல்கள், கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட கூடுதல் விவரங்களும் இடம் பெற்றிருந்தன. அச்சுருக்க குறிப்பைப் படித்து, அது மார்க்சும் தானும் சேர்ந்து உருவாக்கிய வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத்தையும் பூர்விக சமுதாயம் பற்றிய தம் கண்ணோட்டங்களையும் ஊர்ஜிதப்படுத்துவதைக் கண்ட எங்கெல்ஸ், மார்க்சின் குறிப்புகளையும் மார்கனின் நூலில் அடங்கியுள்ள ஒரு சில முடிவுகள், உண்மை விவரங்களையும் பரவலாகப் பயன்படுத்தி ஒரு தனி நூலை எழுதுவது அவசியம் என்ற முடிவிற்கு வந்தார். இது மார்க்ஸ் ''விட்டுச் சென்ற ஒரு பணியைச் செய்து முடிப்பதாக'' அமையுமென்று எங்கெல்ஸ் கருதினார். இந்நூலை எழுதும் பொழுது, கிரீஸ், ரோம், பண்டைய அயர்லாந்து, பண்டைய ஜெர்மானியர்கள் பற்றியெல்லாம் தான் நடத்திய ஆராய்ச்சிகளின் மூலம் கிட்டிய ஏராளமான விவரங்களையும் எங்கெல்ஸ் பயன்படுத்தினார்.

மார்க்சிய இலக்கியத்திலேயே முதன்முதலாக எங்கெல்ஸ் இந்நூலில் குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியை வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கு நிலையிலிருந்து விளக்குகிறார். குடும்பம் என்பதை ஒரு வரலாற்று கருத்தினமாக அணுகும் எங்கெல்ஸ், அதன் பல்வேறு வடிவங்களுக்கும்—பண்டைய குழு மணத்திலிருந்து துவங்கி, தனியுடைமை தோன்றிய பின் நிலைபெற்ற ஒருதாரக் குடும்பம் வரை—சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களுக்கும் இடையிலான அங்கக ரீதியான தொடர்பையும், இந்த வடிவங்கள் உற்பத்தி முறையின் மாற்றங்களை எப்படி சார்ந்தவை என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். உற்பத்திச் சக்திகள் வளர வளர சமுதாய அமைப்பின் மீது இரத்த உறவுமுறையின் தாக்கம் எப்படி குறைந்து வந்தது, தனியுடைமை வெற்றி பெற்ற பின் ''சொத்துடைமை அமைப்பு குடும்ப அமைப்பின் மீது முழுமையாக ஆதிக்கம் செலுத்தும்''* சமுதாயம் எப்படித் தோன்றியது என்றெல்லாம் காட்டுகிறார்.

பூர்ஷ்வாக் குடும்பத்தை எங்கெல்ஸ் கடுமையாக விமர்சிக்கிறார். தனியுடைமை ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலையில் பெண்களுடைய சமமின்மையின் பொருளாதார அடிப்படையை சுட்டிக் காட்டும் அவர், முதலாளித்துவ உற்பத்தி முறை ஒழித்துக் கட்டப்பட்டால்தான் பெண்கள் உண்மையான விடுதலையை அடைய முடியும் என்று கூறுகிறார். சோஷலிச சமுதாயத்தில்தான், பெண்கள் சமூக உற்பத்தியில் பரவலாக ஈடுபடுத்தப்படுவதையடுத்து, சமுதாய வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் பெண்களுக்கு முழு சமத்துவம் அளிக்கப்படும், வீட்டு வேலைகளிலிருந்து பெண்கள் விடுவிக்கப்படுவர், இப்பணியை சமுதாயம் மேன்மேலும் அதிகமாக தான் எடுத்துக் கொள்ளும், அப்பொழுதுதான் முழு சமத்துவம், பரஸ்பர மதிப்பு, உண்மையான அன்பு ஆகியவற்றின் அடிப்படையிலான உயரிய வகையான புதிய குடும்பம் நிலைபெறும் என்றார் எங்கெல்ஸ்.

பல்வேறு வகையான சொத்துடைமை வடிவங்கள் தோன்றி, வளர்ந்ததைப் பற்றி ஆராயவும், சமுதாய

---

* இப்பதிப்பில் பக்கம் 12ஐ பார்க்க.—ப-ர்.

அமைப்பின் பல்வேறு வடிவங்கள் எப்படி இவற்றைப் பொறுத்துள்ளன என்பதை ஆராயவும் நூலின் கணிச மான பகுதியை எங்கெல்ஸ் ஒதுக்குகிறார். தனியுடைமை அமைப்பு ஒன்றும் என்றென்றைக்கும் நிரந்தரமானதல்ல, பூர்விக வரலாற்றின் நீண்ட காலகட்டத்தில் உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாக இருந்தன என்று எங் கெல்ஸ் காட்டுகிறார். உற்பத்திச் சக்திகள் வளர்ந்து, உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதையடுத்து பிறருடைய உழைப்பின் விளைபொருளை அபகரிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது, எனவே தனியுடைமையும் மனி தனை மனிதன் சுரண்டுவதும் தோன்றுகின்றன, சமுதாய மானது பகைமுரண்பாட்டு வர்க்கங்களாகப் பிரிகிறது என்கிறார் எங்கெல்ஸ். இதனுடைய முதல் விளைவுதான் அரசின் தோற்றமாகும்.

அரசின் தோற்றம் மற்றும் அதன் சாரம் பற்றிய பிரச்சினைதான் எங்கெல்சின் நூலில் மையப் பொருளா கும். இப்பிரச்சினையை எங்கெல்ஸ் பன்முக ரீதி யில் ஆராய்ந்ததானது அரசைப் பற்றிய மார்க்சியப் போதனையை உருவாக்குவதில் ஒரு முக்கியக் கட்டமாக அமைந்தது. இந்த நோக்கில் இது லுயீ போனப்பார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற மூலச்சிறப்புள்ள மார்க்சின் நூல்களுடனும் எங்கெல்ஸ் எழுதிய டூரிங்குக்கு மறுப்பு நூலுடனும் ஒரே வரிசையில் நிற்கிறது.

அரசு என்பதை வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியாக சித்தரித்து, இது ஏதோ எல்லா மக்களின் நலன்களையும் சமமாகப் பாதுகாப்பதாக விளக்கமளிக்கும் விஞ்ஞானிகளுக்கு எங்கெல்சின் நூல் தக்க பதிலடி தருகிறது. பண்டைய ஏதன்ஸ், ரோமாபுரி மற்றும் ஜெர்மானியர்களிடையே அரசு தோன்றிய உதாரணங் களின் அடிப்படையில் எங்கெல்ஸ், அரசு என்பது தான் பிறக்கும் தருணத்திலிருந்தே, எந்த வர்க்கங்களின் கரங் களில் உற்பத்திச் சாதனங்கள் உள்ளனவோ அந்த வர்க்கங்களின் ஆதிக்க கருவியாகத் திகழுகிறது என்று தெட்டத் தெளிவாயும் ஆணித் தரமாயும் மெய்ப்பித்தார். தன்னுடைய நூலில் எங்கெல்ஸ், அரசின் பல்வேறு திட்ட வட்டமான வடிவங்களை, உதாரணமாக, முதலாளித்து

வத்தை ஆதரிப்பவர்கள் ஜனநாயகத்தின் உயர் வடிவமாக சித்தரிக்கும் பூர்ஷ்வா-ஜனநாயகக் குடியரசை ஆராய்கிறார். இக்குடியரசின் வர்க்கத் தன்மை ஜனநாயகப் போர்வையின் பின் மறைந்துள்ள பூர்ஷ்வா ஆதிக்கத்தின் வடிவம் என்கிறார் எங்கெல்ஸ்.

நாடாளுமன்ற மாயைகள் அத்தருணத்தில் ஏற்கெனவே தொழிலாளர் இயக்கத் தலைவர்களில் ஒரு சிலருக்கு இடையில், குறிப்பாக ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகளின் மத்தியில் பரவியிருந்தன. இதற்கெதிராக எச்சரித்த எங்கெல்ஸ், மூலதனத்தின் ஆதிக்கம் நிலைத்திருக்கும் வரை எவ்வித ஜனநாயக சுதந்திரமும் உழைப்பாளிகளுக்கு உண்மையான விடுதலையைப் பெற்றுத் தராது என்றார். அதே நேரத்தில், அவர் இந்த ஜனநாயக சுதந்திரத்தை—ஜனநாயக உரிமைகளை—பேணிக் காத்து வளர்ப்பதில் பாட்டாளிகளுக்குள்ள அக்கறையையும் கோடிட்டுக் காட்டினார்; இந்த உரிமைகள், சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான விடுதலைப் போராட்டத்திற்கு அதிகபட்சம் அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும்.

உற்பத்திச் சக்திகள் வளர வளர பொருளாயதச் செல்வங்களின் உற்பத்தி முறை மாறுகிறது; குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் தனியுடைமை தோன்றி, சமுதாயம் எதிரெதிர் வர்க்கங்களாக பிளவுறுவது தவிர்க்க இயலாததாக, நியதியானதாக மாறுகிறது; முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகள் மேற்கொண்டு வளர்ச்சியடையும் பொழுது, தனியுடைமையும் சுரண்டும் வர்க்கங்களும் உற்பத்தியின் வளர்ச்சிக்கு நேர்த் தடைகளாக மாறுகின்றன என்பதை எல்லாம் எங்கெல்ஸ் இந்நூலில் விளக்குகிறார். இது பாட்டாளி வர்க்கப் புரட்சியை தவிர்க்க இயலாததாக ஆக்குகிறது; மார்க்சும் எங்கெல்சும் பன்முறை சுட்டிக்காட்டியபடி, இப்புரட்சியின் பொழுது பழைய பூர்ஷ்வா அரசு இயந்திரம் உடைக்கப்பட்டு, ஜனநாயகத்தின் உயர் வடிவமாகிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்னும் புதிய வகையான அரசு தோற்றுவிக்கப்படுகிறது.

மூலச்சிறப்பான வடிவத்தில் அரசைப் பற்றி எங்கெல்சால் முன்வைக்கப்பட்ட மார்க்சியக் கருத்தமைப்பு,

புதிய வரலாற்று சகாப்தச் சூழ்நிலைகளுக்கேற்ப வி. இ. லெனினால் அரசும் புரட்சியும் என்ற நூலில் பன்முக ரீதியில் வளர்க்கப்பட்டது.

1890இல், பூர்விக சமுதாய வரலாறு பற்றி புதிய விவரங்கள் கிட்டியதையடுத்து, இந்நூலின் புதிய பதிப்பைத் தயாரிக்கும் பணியில் எங்கெல்ஸ் இறங்கினார். இப்பணியில் அவர் நவீன நூல்கள், கட்டுரைகள் அனைத்தையும் படித்தார், உதாரணமாக, ருஷ்ய விஞ்ஞானி ம.ம. கவலேவ்ஸ்கியின் நூல்களைப் படித்தார், பூர்வாங்க வாசகத்தில் பலவற்றைத் திருத்தினார், மாற்றினார், கணிசமான கூடுதல் விவரங்களை—குறிப்பாக, நவீன புதைபொருள், மானுடவியல் ஆராய்ச்சிகளின் பின்னணியில், குடும்பத்தைப் பற்றிய அத்தியாயத்தில்—சேர்த்தார். இந்த மாற்றங்கள், திருத்தங்களினால் எங்கெல்சின் முடிவுகள் மாறவில்லை, இவை புதிய ஊர்ஜிதத்தைப் பெற்றன, அவ்வளவே. மார்கனின் நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சில கருத்துகள் (உதாரணமாக, பூர்விக வரலாற்றைப் பற்றி மார்கன் தரும் காலவரையறுப்பு, அவர் பயன்படுத்தும் சொற்றொடர்கள் போன்றவை) புதிய விஞ்ஞான தகவல்களின் பின்னணியில் சரிபார்க்கப்பட வேண்டும் என்றாலும் எங்கெல்சின் நூலில் குறிப்பிடப்படும் முடிவுகள் பின்னரும் தம் முக்கியத்துவத்தை இழக்கவில்லை; இம்முடிவுகள் சரியானவை என்று விஞ்ஞான வளர்ச்சி மெய்ப்பித்தது.

எங்கெல்சுடைய நூலின் திருத்தப்பட்ட, புதிய விவரங்களடங்கிய நான்காவது பதிப்பு 1891ஆம் ஆண்டின் இறுதியில் ஷ்டுட்கார்ட்டில் வெளிவந்தது, பின்னர் இதில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை; இந்த நான்காவது பதிப்பிற்காக எங்கெல்ஸ் புதிய முன்னுரையை எழுதினார்.

இந்த நூல் 1891ஆம் ஆண்டின் 4வது ஜெர்மன் பதிப்பிற்கேற்ப, முதலாவது, நான்காவது பதிப்புகளுக்கு எழுதப்பட்ட முன்னுரைகளுடன் வெளியிடப்படுகிறது.

## முதற் பதிப்புக்கு 1884இல் எழுதிய முன்னுரை

ஓர் அர்த்தத்தில், பின்வரும் அத்தியாயங்கள் மார்க்ஸ் விட்டுச் சென்ற ஒரு பணியைச் செய்து முடிக்கும் வகையில் அமைந்தவையே. வரலாற்றைப் பற்றித் தன்னுடைய—எங்களுடைய என்று சில வரம்புகளுக்குட்பட்டு நான் சொல்லக் கூடும்—பொருள்முதல்வாத ஆராய்ச்சியின் மூலம் தான் கண்ட முடிவுகளின் தொடர்பில் மார்கனது ஆராய்ச்சி விளைவுகளை மக்களுக்கு முன்பாக வைத்து அதன் மூலம் அவற்றின் முக்கியத்துவம் முழுவதையும் தெளிவாக்க வேண்டும் என்று மார்க்ஸ் திட்டமிட்டிருந்தார். ஏனென்றால் நாற்பது ஆண்டுகளுக்கு முன் மார்க்ஸ் கண்டுபிடித்திருந்த வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தைத்தான் மார்கன் தன்னுடைய வழியில் அமெரிக்காவில் மறுபடியும் கண்டுபிடித்தார். மார்கன் அநாகரிகத்தையும் நாகரிகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது மார்க்ஸ் எந்த முடிவுகளைச் செய்தாரோ—பிரதான விஷயங்களில்—அதே முடிவுகளுக்கு வருமாறு இந்தக் கருத்தோட்டம் செய்தது. மேலும், ஜெர்மனியில் அதிகார வர்க்கச் சார்புள்ள பொருளியலாளர்கள் எப்படி பல ஆண்டுகளாக **மூலதனம்** என்ற நூலிலிருந்து ஆர்வத்துடன் திருடிய போதிலும் அந்த நூலைப் பற்றி விடாப்பிடியாக மௌனம் சாதித்து அமுக்கியும் வந்தார்களோ, அதே மாதிரியாக இங்கிலாந்தில் ''வரலாற்றுக்கு முந்திய'' விஞ்ஞானத்தின் சார்பாகப் பேசியவர்கள் மார்கன் எழுதிய **பண்டைக்காலச் சமூகம்** என்ற நூல்* விஷயமாக நடந்து கொண்டார்கள். காலஞ்

* *Ancient Society, or Researches in the Lines of Human Progress from Savagery through Barbarism to Civilization.* By Lewis

சென்ற என்னுடைய நண்பர் செய்ய முடியாமல் போன பணிக்குப் பதிலாக நான் செய்திருக்கின்ற பணி அற்ப மாகத்தான் இருக்க முடியும். மார்க்ஸ் மார்கனுடைய நூலிலிருந்து விரிவான பகுதிகளை* எடுத்து அவற்றுக்கு விமர்சனக் குறிப்புகளை எழுதியுள்ளார். அவை எனக்கு முன்னால் இருக்கின்றன. இந்நூலில் சாத்தியமான இடங் களில் அவற்றை அப்படியே வெளியிட்டிருக்கிறேன்.

பொருள்முதல்வாதக் கருத்தமைப்பின்படி—கடைசி யாகப் பார்க்கும் பொழுது—உடனடி வாழ்க்கையின் உற்பத்தியும் புனருற்பத்தியுமே வரலாற்றில் தீர்மான கரமான காரணியாகும். ஆனால் இது இருவகையான தன்மை கொண்டது. ஒரு பக்கத்தில், வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களை உற்பத்தி செய்வது—அதாவது உணவு, உடை, வீடு ஆகியவற்றையும் அவற்றைப் பெறு வதற்குத் தேவையான கருவிகளையும் உற்பத்தி செய் வது; மறு பக்கத்தில், மனிதர்களையே உற்பத்தி செய்வது —அதாவது மனித இனத்தைப் பெருக்குவது. ஒரு திட்ட வட்டமான வரலாற்றுச் சகாப்தத்தைச் சேர்ந்த, ஒரு திட்டவட்டமான நாட்டைச் சேர்ந்த மக்கள் எந்த சமூக அமைப்பின் கீழ் வாழ்ந்து வருகிறார்களோ அந்த சமூக அமைப்பை உற்பத்தியின் இரண்டு வகைகளும் கட்டுப் படுத்துகின்றன. ஒரு பக்கத்தில், உழைப்பின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதும் மறு பக்கத்தில், குடும்பத்தின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதும் இந்த அமைப்பைக் கட்டுப்படுத்துகின்றன. எந்த அளவுக்கு உழைப்பின் வளர்ச்சி குறைவாக இருக் கிறதோ, எந்த அளவுக்கு உழைப்பின் உற்பத்தியளவு குறுகியதாகவும் அதன் காரணமாக சமூகத்தின் செல்வ மும் குறுகியதாகவும் இருக்கிறதோ அந்த அளவுக்கு சமூக அமைப்பின் மீது குலமரபு உறவுகள் ஆதிக்கம் பெற்றிருப்

---

H. Morgan, London, MacMillan & Co., 1877. இப்புத்தகம் அமெரிக்காவில் அச்சிடப்பட்டது, லண்டனில் அநேக மாகக் கிடைப்பதில்லை. ஆசிரியர் சில ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

* கா. மார்க்ஸ் எழுதிய மார்கனுடைய ''பண்டைக்காலச் சமூகம்'' என்ற நூலின் சுருக்கம் இங்கு குறிப்பிடப் படுகிறது.—ப-ர்.

பதாகத் தோன்றும். எனினும் குலமரபு உறவுகளை அடிப் படையாகக் கொண்ட இந்தச் சமூகக் கட்டுக்கோப்புக்குள் ளாகவே உழைப்பின் உற்பத்தித் திறன் மேன்மேலும் வளர்கிறது; அத்துடன் கூடவே தனிச்சொத்தும் பரிவர்த் தனையும் வளர்கின்றன; செல்வத்தில் வேற்றுமைகளும் மற்றவர்களுடைய உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பும், அதன் மூலம் வர்க்க முரண் பாடுகளின் அடிப்படையும் வளர்கின்றன. இவை புதிய சமூக அம்சங்கள்; இவை தலைமுறைக்குப் பின் தலை முறையாக பழைய சமூகத்தின் கட்டுக்கோப்பைப் புதிய நிலைமைகளுக்கேற்பத் திருத்தியமைக்கப் பார்க்கின்றன. முடிவில், அவ்விரண்டிற்கும் இடையிலுள்ள பொருந்தா நிலை ஒரு முழுமையான புரட்சிக்கு இட்டுச் செல்கிறது. புதிதாக வளர்ச்சியடைந்த சமூக வர்க்கங்களின் மோதலில் குலமரபுக் குழுக்களின் அடிப்படையில் அமைந்திருந்த பழைய சமூகம் வெடித்துச் சிதறி விடுகிறது. அந்தப் பழைய சமூகத்தின் இடத்தில் அரசாக அமைக்கப்பட்டுள்ள ஒரு புதிய சமூகம் தோன்றுகிறது. அந்த அரசின் கீழ்நிலை அங்கங்களாக குலமரபுக் குழுக்கள் இனி இல்லை, வட்டார அடிப்படையில் அமைந்த குழுக்களே இருக் கின்றன. இந்தப் புதிய சமூகத்தில் சொத்துடைமை அமைப்பு குடும்ப அமைப்பின் மீது முழுமையாக ஆதிக்கம் செலுத்துகிறது. மேலும், இந்த சமூகத்தில் வர்க்க முரண் பாடுகளும் வர்க்கப் போராட்டங்களும் இப்பொழுது சுதந்திரமாக வளர்கின்றன. இந்த வர்க்க முரண்பாடு களும் வர்க்கப் போராட்டங்களுமே இதுவரை ஏடறிந்த எல்லா வரலாற்றுக்கும் உள்ளடக்கமாக இருக்கின்றன.

நமது ஏடறிந்த வரலாற்றின் இந்த வரலாற்றுக்கு முந்திய அடிப்படையின் முக்கியமான அம்சங்களைக் கண்டுபிடித்து மறுபடியும் நிர்மாணித்துக் கொடுத்தது தான் மார்கனுடைய மகத்தான சிறப்பாகும். மேலும், மிக வும் தொன்மையான கிரேக்க, ரோமானிய, ஜெர்மானிய வரலாற்றின் இதுவரை விடுவிக்க முடியாதிருந்த மிகவும் முக்கியமான புதிர்களை விடுவிப்பதற்குரிய வழியை வட அமெரிக்க செவ்விந்தியர்களின் குல உறவுகளில் கண்டு பிடித்ததும் மார்கனுடைய மகத்தான சிறப்பாகும். எனினும் அவருடைய நூல் ஒரே நாள் வேலையல்ல.

அவர் தன்னுடைய விவரத் தொகுப்பைப் புரிந்து கொள் வதற்கு நாற்பது ஆண்டுகள் போராடிக் கடைசியில் முழு வெற்றி பெற்றார். நம் காலத்தில் வெளியிடப்பட்டிருக் கின்ற, சகாப்தத்தைப் படைக்கின்ற நூல்களில் அவ ருடைய நூலும் இடம் பெற்றிருப்பது அதனால்தான்.

பின்வரும் விளக்கவுரையில் மார்கனிடமிருந்து நான் எடுத்துக் கொண்டிருப்பது எது, நானாகச் சேர்த்துக் கொண்டது எது என்று மொத்தத்தில் வாசகர் சுலபமாக வேறுபடுத்திப் பார்க்க முடியும். கிரீஸ், ரோமாபுரி பற்றிய வரலாற்றுப் பகுதிகளில் மார்கன் கொடுத்துள்ள விவரத் தொகுப்புகளுடன் நான் நின்று விடவில்லை; நான் சேக ரித்தவற்றையும் எழுதியிருக்கிறேன். கெல்டுகள், ஜெர் மானியர்கள் பற்றிய பகுதிகள் கணிசமான அளவுக்கு என் னுடைய சொந்தச் சரக்கேயாகும். இவை சம்பந்தமாக மார்கனிடம் இருந்தவை பெரும்பாலும் இரண்டாம் தர மான மூலாதாரங்களே. ஜெர்மானிய நிலைமைகளைப் பொறுத்தமட்டில் மார்கனுக்குக் கிடைத்தவை டாசிட் டஸ் எழுதிய நூலைத் தவிர திரு. ஃபிரீமான் எழுதிய கேவலமான மிதவாதப் புரட்டுகள் மட்டுமே. மார்க னுடைய நோக்கத்துக்குப் போதுமானவையாக இருந்த பொருளாதார வகையான வாதங்கள் என்னுடைய நோக்கத்துக்கு சிறிதளவில் கூடப் போதுமானவை அல்ல. அவை எல்லாவற்றையும் நானே புதிதாக விரித்துரைத் திருக்கிறேன். முடிவுரையாக ஒன்று: மார்கனைத் திட்ட மாக மேற்கோள் காட்டாமல் செய்யப்பட்டுள்ள முடிவு களுக்குப் பொறுப்பு நானே.

*1884 மே 26 வாக்கில் எழுதப்பட்டது*

# நான்காம் ஜெர்மன் பதிப்புக்கு 1891இல் எழுதிய முன்னுரை

## *பூர்விகக் குடும்பத்தின் வரலாற்றைப் பற்றி (பாஹோஃபென், மாக்லென்னான், மார்கன்)*

*இந்த நூலின் இதற்கு முந்திய பெரிய அளவுப் பதிப்புகள் எல்லாம் கடந்த சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பே விற்பனையாகித் தீர்ந்து விட்டபடியால் நான் ஒரு புதிய பதிப்பைத் தயாரிக்க வேண்டுமென்று பதிப்பாளர்* கடந்த சில காலமாக என்னை வற்புறுத்தி வந்தார். அதைக் காட்டிலும் அவசரமான பணிகள் ஏற்பட்டு இதுவரை அதைச் செய்ய இயலாதபடி தடுத்து விட்டன. முதல் பதிப்பு வெளியாகி ஏழு ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த ஏழு ஆண்டுகளில் குடும்பத்தின் மூல வடிவங்களைப் பற்றிய நமது அறிவில் முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனவே நூலின் பொருளை மேலும் விவரித்து மேம்படுத்தும் பணியில் நான் அக்கறையுடன் ஈடுபடுவது அவசியமாயிற்று. குறிப்பாக, மற்றொரு காரணமும் உண்டு. இந்த நூலை அப்படியே அச்சுப்பதிவு செய்து விட்டால், பிறகு நான் மேற்கொண்டு மாறுதல்கள் செய்வது சிறிது காலம் வரை இயலாமற் போய் விடும்.*

*ஆகவே நான் நூலின் முழு வாசகத்தையும் கவனத்துடன் மீண்டும் படித்துத் திருத்தினேன். சில விவரங்களைப் புதிதாகச் சேர்த்தேன். அவை இன்றைய விஞ்ஞான நிலையைக் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்கின்றன என்றே கருதுகிறேன். மேலும், குடும்பத்தின் வரலாறு பாஹோஃபெனிலிருந்து மார்கன் வரை பெற்ற வளர்ச்சியைக் குறித்து சுருக்கமான விமர்சனத்தை இந்த முன்னுரையில் தருகிறேன். இதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு: இங்கிலாந்தில் உள்ள ஏடறியா வரலாற்று மரபினரிடம் சிறிது இனவெறி படிந்துள்ளது; இவர்கள்*

---

* இ. டீட்ஸ்.—ப-ர்.

மார்கனுடைய முடிவுகளைத் திருடித் தம்முடையதாக்கிக் கொள்வதற்குச் சிறிதும் தயங்கவில்லை, எனினும் புராதனச் சமூக வரலாற்றைப் பற்றிய கருத்தோட்டங்களில் மார்கனின் கண்டுபிடிப்புகள் ஏற்படுத்திய புரட்சியை மௌனம் சாதிப்பதின் மூலம் அழித்து விடலாம் என்று இந்த மரபினர் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் தொடர்ந்து செய்து வருகின்றனர். இந்த ஆங்கில உதாரணத்தை மற்ற நாடுகளும் அடிக்கடிப் பின்பற்றி வருகின்றன.

என்னுடைய நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முதலில் இத்தாலிய மொழியில் வெளியிடப்பட்டது: *L'origine della famiglia, della proprietá privata e dello stato.* Versione riveduta dall'autore, di Pasquale Martignetti. Benevento 1885; பிறகு ருமேனிய மொழியில் யாஸி நகரிலிருந்து வெளியிடப்பட்ட *Contemporanul* என்னும் சஞ்சிகையில்[2] 1885 செப்டெம்பர் முதல் 1886 மே வரை வெளியிடப்பட்டது: *Originea familiei, proprietății private și a statului.* Traducere de Joan Nădejde. மேலும், டேனிஷ் மொழியில் வெளிவந்தது: *Familjeņs, Privatejendommens og Statens Oprindelse.* Dansk of Forfatteren gennemgaaet Udgave, besørget of Gerson Trier. København 1888. இந்த ஜெர்மன் பதிப்பை ஆதாரமாகக் கொண்டு அன்ரீ ரவே மொழிபெயர்த்த பிரெஞ்சு மொழிபெயர்ப்பு அச்சில் இருக்கிறது.

* * *

1860க்களின் தொடக்கம் வரை குடும்பத்தைப் பற்றிய வரலாறு என்று ஒன்றுமே இருக்கவில்லை. இத்துறையில் வரலாற்று விஞ்ஞானம் மோசஸ் அருளிய ஐந்து நூல்களின் செல்வாக்கின் கீழ் இன்னும் முழுமையாக இருந்து வந்தது. வேறு எந்த நூலையும் விட இவற்றில்தான் தந்தைவழிக் குடும்பத்தின் வடிவம் அதிகமான விவரங்களுடன் வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்தத் தந்தைவழிக் குடும்ப வடிவம்தான் குடும்பத்தின் மிகத் தொன்மையான வடிவமென்று அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டது மட்டுமன்றி, பலதார மணம் நீங்கலாக, குடும்பம் என்பது வரலாற்று ரீதியில் சிறிதும் வளர்ச்சி அடையவேயில்லை என்ற போக்கில் அந்தத் தந்தைவழிக் குடும்பமும் தற்

கால முதலாளி வர்க்கக் குடும்பமும் ஒன்றென்று இனங் காணப்பட்டது. அதிகமாகப் போனால், ஆதிமனித சகாப்த காலத்தில் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய காலம் இருந்திருக்கலாம் என்று மட்டும் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஒருதார மணம் மட்டுமன்றி, கீழ்த்திசை நாடு களின் பலதார மணமும் இந்திய-திபேத் வகைப்பட்ட பல கணவர் மணமும் நாம் நன்கறிந்தவைதான். ஆனால் இம்மூன்று வடிவங்களையும் எவ்விதமான வரலாற்றுத் தொடர்வரிசையிலும் வைக்க முடியாதிருந்தது; அவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் ஒன்றுக்குப் பக்கத் தில் இன்னொன்று இருக்கின்ற மாதிரிக் காட்சியளித்தன. பண்டைக் காலத்தைச் சேர்ந்த சில மக்களினங்கள் மத்தி யிலும் தற்காலத்தில் இன்னும் உள்ள சில காட்டுமிராண்டி கள் மத்தியிலும் மரபு வழியைத் தந்தைவழியாகக் கொள்ளாமல் தாய்வழியாகக் கொண்டு, அத்தாய்வழி மரபுமுறைதான் செல்லத்தக்கது என்று கருதப்பட்டது என்பதும் தற்காலத்தைச் சேர்ந்த பல மக்களினங் களிடையே சில திட்டவட்டமான பெரிய குழுக்களுக்குள் (அக்காலத்தில் அக்குழுக்கள் நெருங்கி ஆராயப்பட வில்லை) திருமணம் செய்தல் தடை செய்யப்பட்டிருக் கிறது என்பதும் இந்த வழக்கத்தை உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம் என்பதும் தெரிந்தவை என்பது மெய்யே; மேலும் புதிய உதாரணங்களும் இடைவிடாமல் வெளிப்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று எவருக்குமே தெரியவில்லை. எ.ப. டேய்லர் எழுதிய **மனிதகுலத்தின் ஆரம்ப வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள், இதரவை** (1865) என்ற நூலில் கூட அவை ''விசித்திரமான பழக்கவழக்கங்களாகவே'' காணப் படுகின்றன; எரியும் விறகை இரும்புக் கருவிகளால் தொடக் கூடாது என்று சில காட்டுமிராண்டிகளிடையே உள்ள மரபுத் தடை, இன்னும் அதைப் போன்ற மத சம்பந்தமான மூடத்தனங்களின் வரிசையில் அவையும் வைக்கப்பட்டு ''விசித்திரமான பழக்கவழக்கங்களாகத்'' தோற்றமளிக்கின்றன.

குடும்பத்தின் வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சி 1861இலிருந்து, பாஹொஃபென் எழுதிய **தாய் உரிமை** என்ற நூல் வெளிவந்ததிலிருந்துதான் தொடங்குகிறது.

இந்த நூலில் அதன் ஆசிரியர் பின்வரும் கருத்துகளை முன்வைக்கிறார்: 1) ஆரம்பத்தில் மனிதகுலம் வரை முறையற்ற புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த நிலையில்தான் இருந்தது; இந்நிலைக்கு ஆசிரியர் பொதுமகளிர் முறை (hetaerism) என்று பெயரிட்டிருக்கிறார். இந்தப் பெயர் முற்றிலும் பொருத்தமானது என்று கூற முடியாது; 2) இந்த வரைமுறையற்ற புணர்ச்சி காரணமாக யார் தந்தை என்று நிச்சயிக்க முடியவில்லை; ஆகவே மரபு வழியைத் தாய்வழியாகவே—தாய் உரிமைப்படிதான்—கணக்கிட முடியும்; மேலும், ஆரம்பத்தில் பண்டைக்கால மக்கள் எல்லோரிடமும் இந்த நிலைதான் இருந்தது; 3) எனவே தாய்மார்கள் என்ற முறையில், இளம் தலைமுறையினருடைய பெற்றோர்கள் என்று பெண்கள் மட்டுமே திட்டமாக நிச்சயிக்கப்பட முடிந்த காரணத்தால் அவர்கள் மிகவும் உயர்ந்த சலுகையுடனும் மரியாதையுடனும் நடத்தப்பட்டார்கள்; பாஹொஃபெனுடைய கருத்தின்படி, பெண்களின் பரிபூரண ஆட்சி (gynaecocracy) ஏற்படுகின்ற அளவுக்கு அந்த மரியாதை உயர்ந்திருந்தது; 4) ஒரு பெண் ஓர் ஆணுக்கு மட்டுமே உரியவள் என்கிற ஒருதார மணத்துக்கு மாறிச் சென்ற நிலை ஆதிக்கால மதக் கட்டளையை மீறியதையே குறித்தது (அதாவது, ஒரு பெண் மீது மற்ற ஆண்களுக்கும் உரிமையுண்டு என்னும் பண்டைக்காலப் பரம்பரை உரிமையை மீறியதைத்தான் இது குறித்தது); இந்த மதக் கட்டளையை மீறியதற்குப் பிராயச் சித்தம் செய்தாக வேண்டும், அல்லது அதைப் பொறுத்துக் கொண்டு அனுமதி கொடுப்பதற்குத் தட்சிணை தர வேண்டும், அதாவது அந்தப் பெண்ணைக் குறிப்பிட்ட காலத்துக்கு மற்ற ஆண்கள் அனுபவிப்பதற்கு ஒப்படைக்க வேண்டும்.

இந்தக் கருத்துகளுக்கு ஆதரவளிக்கின்ற சாட்சியங்களை பாஹொஃபென் பண்டைக்கால மூலச்சிறப்பான இலக்கியத்தின் பல பகுதிகளில் காண்கிறார். அவர் கடுமையாகப் பாடுபட்டு அவற்றைச் சேகரித்தார். ''பொது மகளிர் முறையிலிருந்து'' ஒருதார மணத்துக்கு மாறுகின்ற பரிணாம வளர்ச்சி, தாய் உரிமையிலிருந்து தந்தை உரிமைக்கு மாறுகின்ற பரிணாம வளர்ச்சி—குறிப்பாக கிரேக்க மக்களிடையே—மத சம்பந்தப்பட்ட கருத்து

களிடையே நிகழ்கின்ற பரிணாம வளர்ச்சியின் ஒரு விளைவாகத்தான், புதிய கண்ணோட்டத்தின் பிரதிநிதிகளான புதிய தெய்வங்கள் பழைய கண்ணோட்டத்தின் பிரதிநிதிகளான பழைய தெய்வங்களின் குழுவில் பலவந்தமாக நுழைவதன் ஒரு விளைவாகத்தான் நடைபெற்றது என்று அவர் கருதுகிறார். புதிய தெய்வங்கள் பழைய தெய்வங்களை மேன்மேலும் பின்னால் தள்ளுகின்றன. ஆக, பாஹொஃபெனுடைய கருத்துப்படி, ஆணும் பெண்ணும் பரஸ்பரம் வகிக்கின்ற சமூக நிலையில் வரலாற்று ரீதியான மாறுதல்களை உண்டாக்குவது மக்கள் வாழ்கின்ற எதார்த்த நிலைமைகளின் வளர்ச்சி அல்ல, அதற்கு பதிலாக இந்த நிலைமைகள் மக்கள் மனங்களில் உருவாக்குகின்ற மதம் சார்ந்த பிரதி பிம்பம்தான் அந்த மாறுதல்களை உண்டாக்குகிறது. பாஹொஃபென் இங்கு எஸ்கிலஸ் எழுதிய ஓரெஸ்தெயா என்ற நாடகத்தைச் சுட்டிக் காட்டுகிறார். கிரேக்க வீர யுகத்தில் நலிந்து வருகின்ற தாய் உரிமைக்கும் வளர்ந்து, வெற்றி பெற்று வருகின்ற தந்தை உரிமைக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டத்தை உணர்ச்சிகரமாகச் சித்திரிப்பதுதான் அந்த நாடகம் என்கிறார். கிளிதெம்னெஸ்த்ரா தனது காதலன் எகிஸ்தசுக்காக, அப்பொழுதுதான் ட்ரொஜன் யுத்தத்திலிருந்து[3] திரும்பி வந்த தன் கணவன் அகமெம்னானைக் கொன்று விட்டாள். ஆனால் அகமெம்னான் மூலம் அவள் பெற்ற மகனாகிய ஓரெஸ்தஸ் தந்தையின் கொலைக்குப் பழிவாங்குவதற்காகத் தன் தாயைக் கொலை செய்கிறான். அதற்காக எரீனியேக்கள் அவனைத் துரத்திச் செல்கின்றன. அவை தாய் உரிமையைப் பாதுகாக்கின்ற பிசாசுகளாகும். தாய் உரிமைப்படி, தாய்க் கொலைதான் எல்லாக் குற்றங்களையும் விட மிகவும் பாபகரமான, பிராயச்சித்தத்துக்கு இடமில்லாத குற்றமாகும். ஆனால் அபோல்லோ என்ற தெய்வமே தனது அசரீரியின் மூலம் இக்குற்றத்தைச் செய்யுமாறு ஓரெஸ்தசைத் தூண்டினார். அபோல்லோவும் மத்தியஸ்தம் செய்ய அழைக்கப்பட்டிருந்த அதீனா என்ற தெய்வமும்—இந்த இரு தெய்வங்களும் தந்தை உரிமை அடிப்படையில் அமைந்த புதிய அமைப்பைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்—ஓரெஸ்தசைப் பாதுகாக்கின்றனர். இரு

தரப்பினரையும் அதீனா விசாரிக்கிறாள். ஒரெஸ்தசுக்கும் எரீனியேக்களுக்கும் நடைபெறுகின்ற வாதத்தின் சர்ச்சை முழுவதும் சுருக்கித் தரப்படுகிறது. கிளிதெம்னெஸ்த்ரா தனது கணவனைக் கொன்றது ஒரு குற்றம், எனது தகப்பனாரைக் கொன்றது மற்றொரு குற்றம், ஆகவே அவள் இரண்டு குற்றங்களைச் செய்தவள் என்று ஒரெஸ்தஸ் கூறுகிறான். தன்னை விடப் பெரிய குற்றவாளி கிளிதெம்னெஸ்த்ரா, இந்த எரீனியேக்கள் அவளை விட்டுவிட்டுத் தன்னை ஏன் துன்புறுத்த வேண்டும் என்று அவன் கேட்கிறான். இக்கேள்விக்கு அடித்தாற் போன்ற பதில் வருகிறது:

''அவள் கொலை செய்த ஆணுடன் அவளுக்கு இரத்த உறவு ஏதுமில்லை.''*

இரத்த உறவு இல்லாத ஆணை—அவன் கொலை செய்தவளின் கணவனாக இருந்த போதிலும்—கொல்வது பிராயச்சித்தத்திற்கு உரியதே; அதற்கும் எரீனியேக்களுக்கும் சம்பந்தம் எதுவும் கிடையாது. இரத்தக் கலப்புள்ள உறவினர்களிடையே நடக்கும் கொலைகளுக்குப் பழிவாங்குவதுதான் எரீனியேக்களின் வேலை; இப்படிப்பட்ட கொலைகளில் தாய் உரிமைப்படி மிகவும் பாபகரமான கொலை தாய்க் கொலையே ஆகும். இப்பொழுது ஒரெஸ்தசுக்கு ஆதரவாக அபோல்லோ குறுக்கிடுகிறான். இந்தப் பிரச்சினையை வாக்களிப்பின் மூலம் முடிவு செய்யும்படி அதீனியன் நீதிபதிகளான ஏரியோபகைட்ஸ் என்பவர்களை அதீனா கேட்டுக் கொள்கிறாள். குற்றமில்லை எனத் தீர்ப்பளிப்பதை ஆதரிக்கின்ற வாக்குகளும் தண்டிப்பதை ஆதரிக்கின்ற வாக்குகளும் சமமாக இருக்கின்றன. நீதிமன்றத்தின் தலைவி என்ற முறையில் அதீனா ஒரெஸ்தசுக்கு ஆதரவாக வாக்களித்து அவன் குற்றவாளி அல்ல என்று தீர்மானிக்கிறாள். தாய் உரிமையைத் தந்தை உரிமை வெல்கிறது. ''இளைய மரபு வழியைச் சேர்ந்த தெய்வங்கள்'' என்று எரீனியேக்களால் வர்ணிக்கப்படுகின்ற தெய்வங்கள் எரீனியேக்களை

---

* எஸ்கிலஸ், ஒரெஸ்தெயா. யூமேனிடிஸ்.—ப-ர்.

வென்று விடுகின்றனர். முடிவில் புதிய அமைப்புக்குச் சேவை செய்வதற்குப் புதிய பதவியை ஏற்கும்படி எரீனியேக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு அதற்கு அவை யும் உடன்படுகின்றன.

ஓரெஸ்தெயா நாடகத்தைப் பற்றி இது புதிய, ஆனால் முற்றிலும் சரியான விளக்கம். இது இந்த நூலில் உள்ள சிறந்த, அழகான பகுதிகளில் மிகவும் மேலான, மிகவும் அழகான பகுதியாகும். ஆனால் அதே சமயத்தில், எஸ்கிலஸ் தம் காலத்தில் எரீனியேக்கள், அபோல்லோ மற்றும் அதீனா மீது எந்த அளவுக்கு நம்பிக்கை கொண் டிருந்தாரோ, குறைந்தபட்சம் அதே அளவுக்கு பாஹொ ஃபெனும் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. கிரேக்க வீர யுகத்தில் தாய் உரி மையைத் தூக்கியெறிந்து விட்டு அதனிடத்தில் தந்தை உரிமையை வைத்த அதிசயத்தை அவர்கள்தான் செய்த னர் என்று மெய்யாகவே அவர் நம்புகிறார். உலக வர லாற்றின் தீர்மானகரமான நெம்புகோல் மதம் என்று கருதுகின்ற இப்படிப்பட்ட கருத்தோட்டம் கடைசியில் வெறும் மாயாவாதத்துக்குத்தான் இட்டுச் செல்லும் என் பது தெளிவு. ஆகவே பாஹொஃபென் எழுதிய இந்தப் பெரிய நூலைப் படித்து முடிப்பது கடினமான பணியா கும். அது எல்லாக் காலத்திலும் லாபம் அளிக்கக் கூடிய பணியுமல்ல. ஆனால் இவையெல்லாம் அவர் ஒரு முன் னோடி என்ற சிறப்பைக் குறைக்க மாட்டா; ஏனென்றால் வரைமுறையற்ற புணர்ச்சி நடைபெற்ற, யாருக்கும் தெரியாத ஒரு பூர்விக நிலைமையைப் பற்றி வெறும் வார்த்தையளப்பு நடந்து கொண்டிருந்த காலத்தில் முதன்முதலாக ஆதாரங்களைக் காட்டியவர் அவர்தான். கிரேக்கர்கள் மற்றும் ஆசிய மக்களிடையில் ஒருதார மணத்துக்கு முன்னர் உண்மையாகவே இருந்து வந்த ஒரு நிலைமை பற்றிய அடையாளங்கள் பண்டைக்கால மூலச்சிறப்பான இலக்கியத்தில் மண்டிக் கிடக்கின்றன என்று அவர் நிரூபித்தார். ஒருதார மணத்துக்கு முந்திய அந்த நிலைமையில் ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் களுடன் பாலுறவு கொண்டது மட்டுமல்ல, ஒரு பெண் ணும் ஒருவனுக்கு மேற்பட்ட ஆண்களுடன் பாலுறவு கொண்டிருந்தாள். இது அக்காலத்தில் நிலைத்திருந்த

வழக்கத்தை மீறியதல்ல. இந்த வழக்கம் மறைகின்ற பொழுது தனது எச்சங்களை விட்டுச் செல்லாமல் போய் விடவில்லை. அவை வரம்புக்குட்பட்ட ஒப்படைப்பு என்னும் வடிவம் பெற்றிருந்தன. இதன்படி, ஒரு பெண் தன்னை வரம்புக்குட்பட்ட விதத்தில் ஆண்களிடம் ஒப் படைத்த பிறகுதான் ஒரே கணவனை மணந்து கொள் கின்ற உரிமையுண்டு என்று நிர்ப்பந்திக்கப்பட்டாள். ஆகவே, ஆதியில் மரபு வழியை, தாய்க்குப் பின் தாய் என்ற ரீதியில் பெண்வழியாக மட்டுமே கணக்கிட முடிந்தது. இன்னார்தான் தந்தை என்பது நிச்சயப்பட்ட அல்லது குறைந்தபட்சம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருதார மணம் வந்து விட்ட பிறகும் கூட பெண்வழி மரபு மட்டுமே செல்லத்தக்கது என்ற நிலை நெடுங்காலத்துக்கு நீடித் தது. மேலும், தனது குழந்தைகளைப் பெற்றவள் என்று நிச்சயமாகக் குறிப்பிடப்படக் கூடியவள் தாய் மட்டுமே என்ற இந்த மூலநிலை அத்தாய்க்கும், அதன் மூலம் பொது வாக எல்லாப் பெண்களுக்கும், அதன் பிறகு அவர்களுக்கு என்றுமே கிடைக்காத உயர்ந்த சமூக அந்தஸ்தை உறுதி செய்தது. இந்தக் கருத்துகளை பாஹொஃபென் இவ் வளவு தெளிவாகச் சொல்லவில்லை; அவருடைய மாயா வாதக் கருத்தோட்டம் அப்படிச் செய்வதைத் தடுத்தது. ஆனால் அவை சரி என்று அவர் நிரூபித்தார்; 1861ஆம் ஆண்டில் இது ஒரு முழுமையான புரட்சியே ஆகும்.

பாஹொஃபெனின் பெரிய நூல் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது—அதாவது இன்றைய குடும்பத்தின் வர லாற்றுக்கு முந்திய நிலையைப் பற்றி அக்காலத்தில் மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவாக அக்கறை காட்டிய நாட் டின் மொழியில் எழுதப்பட்டது. ஆகவே அவர் வெளியில் தெரியாத நிலையில் இருந்து விட்டார். இந்தத் துறையில் அவருக்கு அடுத்தவர் 1865ஆம் ஆண்டில் வந்தார். அவர் பாஹொஃபென் பெயரைக் கேள்விப்படவேயில்லை.

அவருக்குப் பிறகு வந்தவர் ஜா.ஃபெ. மாக்லென்னான் என்பவர்; முந்தியவருக்கு நேர்மாறானவர். திறமை மிக்க மாயாவாதிக்கு பதிலாக உணர்ச்சிக்கு இடமளிக்காத வழக்குரைஞர் வந்தார். வளமான கவித்துவக் கற் பனைக்கு பதிலாக இப்பொழுது தன்னுடைய வழக்கை விளக்குகின்ற வழக்குரைஞரின் உண்மையைப் போன்ற

வாதங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவர் காட்டு மிராண்டிகள், அநாகரிகர்கள் மற்றும் பண்டைக் காலத்தில் இருந்த, நவீன காலத்தில் இருக்கின்ற நாகரிகமடைந்த மக்களிடையில் கூட திருமணத்தின் ஒரு வடிவத்தைக் காண்கிறார். அதன்படி, மணமகன் தனியாகவோ அல்லது நண்பர்களுடனோ சென்று மணப்பெண்ணை உறவினர்களிடமிருந்து பலாத்காரமாகத் தூக்கி வருவதாகப் பாவனை செய்ய வேண்டும். முன்காலத்தில் நிலவிய ஒரு வழக்கமாகத்தான் இது இருக்க வேண்டும். அந்த முந்திய வழக்கத்தின்படி, ஒரு இனக்குழுவைச் சேர்ந்த ஆண்கள் தமது இனக்குழுவுக்கு வெளியிலிருந்து, மற்ற இனக்குழுக்களிலிருந்து பெண்களை பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு வந்து மனைவிகளாக்கிக் கொண்டார்கள். இந்தக் ''களவு முறைத் திருமணம்'' எப்படித் தோன்றியது? தமது இனக்குழுக்களுக்குள்ளாகவே ஆண்களுக்குப் போதிய எண்ணிக்கையில் பெண்கள் கிடைத்துக் கொண்டிருந்தமட்டில், இப்படிப்பட்ட மண முறைக்கு அவசியமில்லாதிருந்தது. ஆனால் இது எவ்வளவு சகஜமாக இருந்ததோ, அதே போல இன்னொன்றும் சகஜமாக இருக்கக் காண்கிறோம். வளர்ச்சியடையாத மக்களினங்களிடையில் சில குழுக்கள் இருக்கின்றன (1865ஆம் ஆண்டு வரை இக்குழுக்களும் இனக்குழுக்களும் ஒன்று என்றே கருதப்பட்டது); இக்குழுவுக்குள் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டிருந்தது, எனவே அந்தக் குழுவுக்கு வெளியிலிருந்துதான் ஆண் தனக்கு மனைவியையும் பெண் தனக்குக் கணவனையும் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது; மற்ற குழுக்களில் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த ஆண் தனது சொந்தக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் மணத்து கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்ற வழக்கம் இருந்து வருகிறது. முதல் ரகத்தைச் சேர்ந்த குழுவை புறமண முறைக் குழு (exogamous group) என்றும் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்த குழுவை அகமண முறைக் குழு (endogamous group) என்றும் மாக்லென்னான் அழைக்கிறார்; அதன் பிறகு சுற்றி வளைக்காமல் புறமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' அகமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' இடையில் உறுதியான முரண்பாட்டை நிறுவுகிறார். புறமண முறையைப்

பற்றி அவர் நடத்திய ஆராய்ச்சிகளே இந்த முரண்பாடு அவரது கற்பனையில்தான் இருக்கிறது என்ற உண்மையை பெரும்பாலான அல்லது எல்லா உதாரணங்களிலும் இல்லாவிட்டாலும், பல உதாரணங்களில் அவர் கண்ணெதிரே காட்டிய போதிலும் அவர் அந்த முரண்பாட்டையே தமது தத்துவம் முழுவதற்கும் அடிப்படையாகக் கொள்கிறார். அதன்படி, புறமண முறை இனக்குழுக்கள் தமது மனைவியரை மற்ற இனக்குழுக்களிலிருந்துதான் கொள்ளக் கூடும்; ஆனால் இனக்குழுக்களுக்கு இடையில் எப்பொழுதும் போர் நடைபெற்றுக் கொண்டிருப்பது காட்டுமிராண்டி நிலையின் குணாம்சம், ஆகவே மற்ற இனக்குழுக்களிலிருந்து மனைவியைப் பெறுவதற்கு பலாத்காரமாகக் கடத்திச் செல்வது ஒன்றுதான் வழி என்று அவர் கருதுகிறார்.

மாக்லென்னான் மேலும் வாதிடுகிறார்: புறமண முறை என்ற வழக்கம் எங்கிருந்து வந்தது? இரத்த உறவு முறை (consanguinity), முறைக்கேடான புணர்ச்சி (incest) ஆகிய கருத்துகளுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஏனென்றால் இவை மிகப் பிந்திய காலத்தில் வளர்ச்சி அடைந்த விஷயங்கள். ஆனால் பெண் குழந்தைகளை பிறந்தவுடனே கொன்று விடும் வழக்கம் காட்டுமிராண்டிகளிடம் பரவலாக இருக்கிறது; இந்த வழக்கத்துக்கும் புறமண முறைக்கும் சம்பந்தம் இருக்கக் கூடும். இந்த வழக்கம் ஒவ்வொரு இனக்குழுவிலும் ஆண்கள் உபரியாக இருக்கின்ற நிலைமையைத் தோற்றுவித்தது. இந்த நிலைமையின் அவசியமான, உடனடியான பின்விளைவாகப் பல ஆண்கள் ஒரு பெண்ணைப் பொதுவில் அனுபவித்தார்கள். அதுவே பல கணவர் மண முறை (polyandry) எனப்படுகிறது. இதன் விளைவு என்னவென்றால் குழந்தையின் தாய் யார் என்பது தெரிந்ததே தவிர, தந்தை யார் என்பது தெரியவில்லை. எனவே ஆணை முற்றிலும் விலக்கி விட்டுப் பெண்வழியில் மட்டுமே இரத்த உறவு கணக்கிடப்பட்டது—இதுதான் தாய் உரிமை. மேலும், ஒரு இனக்குழுவில் பெண்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டதின்—இந்தப் பஞ்சத்தைப் பல கணவர் மண முறை தணித்ததே தவிர, தீர்க்கவில்லை—மற்றொரு விளைவு மற்ற இனக்குழுக்களிலிருந்து பெண்கள் முறைப்படியாக, பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டதாகும்.

''ஆணும் பெண்ணும் சம அளவில் இல்லை என்ற ஒரே காரணத்தையே புறமண முறையும் பல கணவர் மண முறையும் குறிப்பிட முடியும் என்பதனால் புறமண முறை இனங்கள் அனைத்துமே ஆதியில் பல கணவர் மண முறைக்கு உட்பட்டவையாக இருந்தன என்று கருத வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கிறோம்.... ஆகவே புற மண முறை இனங்களிடையில் தாய்வழியில் மட்டுமே இரத்த உறவுகளை அங்கீகரிக்கின்ற முறைதான் முதன் முதலான இரத்த உறவுமுறையாக இருந்தது என்பது விவாதத்துக்கு அப்பாற்பட்டது என்றுதான் நாம் கருத வேண்டும்.'' (மாக்லென்னான், பண்டைக்கால வரலாற்றில் ஆராய்ச்சிகள், 1886. ''பூர்விக மண முறை'', பக்கம் 124.)

மாக்லென்னான் புறமண முறை என்று பெயரிட்ட முறை பொதுவில் பரவியிருப்பதையும் அதன் மாபெரும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியதுதான் அவருடைய சிறப்பாகும். ஆனால் புறமண முறைக் குழுக்கள் இருப்பதைக் கண்டுபிடித்தது நிச்சயமாக அவரல்ல; அவர் கண்டுபிடிக்காதது மட்டுமல்ல அதைப் புரிந்து கொள்ளவுமில்லை. மாக்லென்னானுக்கு மூலங்களாகப் பயன்பட்ட பல பார்வையாளர்களுடைய தனித்தனிக் குறிப்புகள் ஒரு பக்கமிருக்க, இந்தியாவில் மஹர்களிடையே இருக்கின்ற இந்த முறையை லாதாம் (விளக்க முறை இனவியல், 1859) துல்லியமாகவும் சரியாகவும் வர்ணித்திருக்கிறார். மேலும், அது பொதுவாக வழக்கத்தில் உள்ளது, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வருகிறது என்று லாதாம் அறிவித்தார். அவருடைய நூலின் இந்தப் பகுதியை மாக்லென்னானே மேற்கோள் காட்டியிருக்கிறார். மேலும், நமது மார்கன் கூட, ஏற்கெனவே 1847ஆம் ஆண்டிலேயே (*American Review* என்ற சஞ்சிகையில்) இராகோஸ்களைப் பற்றி எழுதிய கடிதங்களிலும் 1851இல் எழுதிய இராகோஸ் லீக் என்ற நூலிலும் இம்முறை இந்த இனக்குழுவில் இருப்பதாக நிரூபித்தார், அதைச் சரியாகவும் வர்ணித்தார். ஆனால், மாக்லென்னானுடைய வக்கீல் வாத மனப்பான்மை இந்த விஷயத்தில் ஏற்படுத்திய குழப்பம், தாய் உரிமைத் துறையில் பாஹொஃபெனுடைய மாயாவாதக் கற்பனை ஏற்படுத்திய குழப்பத்தை விட மிகவும் அதிகம் என்பதை நாம் பார்க்க முடியும்.

தாய்வழியாக அறிகின்ற மரபுமுறைதான் ஆதிமுறை என்று இவர் அங்கீகரித்தது—பின்னால் அவரே ஒத்துக் கொண்டபடி, பாஹெறாஃபென் இதை அவருக்கு முன்பே கூறியிருக்கிறார் என்ற போதிலும்—மாக்லென்னானின் மற்றொரு சிறப்பாகும். ஆனால் இங்கும் அவர் மிகவும் தெளிவில்லாதபடி இருக்கிறார். ''பெண்வழியில் மட்டுமே அறியப்பட்ட இரத்த உறவுமுறை'' என்பதைப் பற்றியே அவர் இடைவிடாமல் பேசுகிறார்; முந்திய கட்டத்துக்குச் சரியாக இருந்த இச்சொற்றொடரைப் பிந்திய வளர்ச்சிக் கட்டங்களுக்கும் பயன்படுத்துகிறார். இந்தப் பிந்திய வளர்ச்சிக் கட்டங்களில் மரபு வழியும் வாரிசுரிமையும் பெண்வழியில் மட்டுமே அறியப்பட்ட போதிலும் ஆண் வழியிலும் இரத்த உறவுமுறை அங்கீகரிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டு வருகிறது. இது சட்ட நிபுணருக்கு உரிய குறுகிய கண்ணோட்டம். அவர் வளைந்து கொடுக்காத ஒரு சட்டச் சொற்றொடரைத் தயாரித்துக் கொண்டு இடைக் காலத்தில் அது பொருந்தாதபடி மாறி விட்ட நிலைமைகளுக்கும் அதைத் திருத்தாமல் பயன்படுத்துகிறார்.

மாக்லென்னானுடைய தத்துவம் ஏற்கத் தக்கது என்று தோன்றினாலும் அது வலுவான அடிப்படையைக் கொண்டிருப்பதாக அவருக்கே தோன்றவில்லை என்பது வெளிப்படை. குறைந்தபட்சம், பின்வரும் உண்மை அவருக்கே புலப்பட்டிருக்கிறது:

''குறிப்பாக ஆண்வழி இரத்த உறவுமுறை''(அதாவது, ஆண்வழியாக மரபைக் குறிப்பிடுகின்ற முறை) ''உள்ள மக்களினங்களிடையில்தான் பெண்ணை'' (போலியாக) ''அபகரித்துச் செல்லும் திருமண வடிவம் மிகவும் தெளிவாகப் பதிந்தும் அழுத்தமாகவும் விளங்குகிறது என்பதைப் பார்க்க முடியும்'' (பக்கம் 140).

மேலும்,

''புறமண முறையும் ஆதிகால இரத்த உறவுமுறையும் அடுத்தடுத்து நிலவி வருகின்ற இடங்களில் குழந்தையைக் கொலை செய்தல் நாமறிந்த வரைக்கும் எங்குமே கடைப் பிடிக்கப்படவில்லை என்பது விசித்திரமான உண்மைதான்'' (பக்கம் 146).

இந்த இரண்டு உண்மைகளும் அவருடைய விளக்கத்தை நேரடியாக மறுக்கின்றன. இவற்றுக்கு எதிராகப் புதிய, இன்னும் சிக்கலான ஊகங்களை மட்டுமே அவரால் கூற முடியும்.

எனினும் இங்கிலாந்தில் அவருடைய தத்துவம் மிகவும் பாராட்டப்பெற்றது, அதிகமாக வரவேற்கப்பட்டது. குடும்பத்தைப் பற்றிய வரலாற்றின் ஸ்தாபகர் என்றும் அந்தத் துறையின் தலைசிறந்த நிபுணர் என்றும் மாக்லென்னான் அங்கே பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்டார். புறமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' அகமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' இடையில் அவர் கண்ட முரண்பாடு—அதில் சில விலக்குகளும் திருத்தங்களும் செய்யப்பட்ட போதிலும்—அன்று நிலவிய கருத்தோட்டத்திற்கு அடிப்படையாக இருந்தது. அதுவே பார்வையை மறைக்கின்ற திரையாக அமைந்து ஆராய்ச்சி செய்யப் படுகின்ற துறையில் சுதந்திரமாக ஆய்வு செய்வதை இயலாததாக்கி விட்டது; ஆகவே திட்டமான முன்னேற்றம் எதுவும் சாத்தியமில்லாமலாகி விட்டது. மாக்லென்னானை மிகையாக மதிப்பிடுதல் இங்கிலாந்தின் வழக்கமாகி விட்டது; ஆங்கில பாணியைப் பின்பற்றி மற்ற நாடுகளிலும் அது வழக்கமாகி விட்டது. புறமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' அகமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' இடையில் அவர் கண்ட முற்றிலும் தவறான முரண்பாட்டினால் அவர் செய்த தீமை அவருடைய ஆராய்ச்சியினால் விளைந்த நன்மையைக் காட்டிலும் அதிகமாக இருந்தது என்பதை மேற்கூறிய மிகையான மதிப்புக்கு எதிராகச் சுட்டிக்காட்டுதல் நம் கடமை.

இதற்கிடையில் மேன்மேலும் பல உண்மைகள் தெரிய வந்தன; அவை அவருடைய கச்சிதமான அமைப்பிற்குள் பொருந்தவில்லை. பலதார மணம், பல கணவர் மணம், ஒருதார மணம் என்ற மூன்று மண வடிவங்கள்தான் மாக்லென்னானுக்குத் தெரியும். ஆனால் ஒரு தடவை இதன் மீது கவனம் திருப்பப்பட்டதும், வளர்ச்சியில்லாத மக்களினங்களில் ஆண்களின் குழு ஒன்று பெண்களின் ஒரு குழுவைப் பொதுவில் அனுபவிக்கின்ற மண வடிவங்கள் இருக்கின்றன என்ற உண்மைக்கு மேன்மேலும் அதிகமான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், இந்தக்

குழு மணம் (communal marriage) ஒரு வரலாற்று உண்மையே என்று லப்பாக் (1870இல் அவர் எழுதிய நாகரிகத்தின் தோற்றம் என்ற நூலில்) அங்கீகரித்தார்.

இதை உடனடியாகத் தொடர்ந்து, 1871இல் புதிய மற்றும் பல விஷயங்களில் நிர்ணயமான ஆதாரங்களுடன் மார்கன் தோன்றினார். இராகோஸ் மக்களிடையில் நிலவி வந்த அலாதியான இரத்த உறவுமுறை அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த எல்லாப் பூர்விகக் குடிகளுக்கும் பொதுவானது என்றும் அது அங்குள்ள மண முறையிலிருந்து எதார்த்தத்தில் தோன்றுகின்ற இரத்த உறவுமுறையின் வரையறைகளுடன் நேரடியாக முரண்பட்டிருந்தாலும் அது ஒரு கண்டம் முழுவதிலும் பரவிக் கிடக்கிறது என்றும் மார்கன் உறுதியாகக் கருதினார். எனவே அவர் வினாக்குறிப்புகளையும் அட்டவணைகளையும் தயாரித்து அவற்றின் அடிப்படையில் மற்ற மக்களினங்களிடையில் நிலவும் இரத்த உறவுமுறைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி அமெரிக்க மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். அவர் விடைகளிலிருந்து பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தார்: 1) அமெரிக்க செவ்விந்தியர்களிடையே உள்ள இரத்த உறவுமுறை ஆசியாவிலும் பல இனக்குழுக்களிடையில் பரவியிருக்கிறது, அதிலிருந்து சிறிது மாறுபட்ட வடிவத்தில் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் பரவியிருக்கிறது; 2) ஹவாய்த் தீவுகளிலும் இதர ஆஸ்திரேலியத் தீவுகளிலும் இப்பொழுது அழியும் தறுவாயில் இருக்கின்ற குழு மண வடிவம் இதை முழுமையாக விளக்குகிறது; 3) எனினும் இந்தத் திருமண வடிவத்துடன் சேர்ந்து ஓர் இரத்த உறவுமுறையும் இதே தீவுகளில் நிலவுகிறது; அதற்கும் முந்திய காலத்தைச் சேர்ந்த, ஆனால் இப்பொழுது நசித்து விட்ட ஒரு குழு மண வடிவத்தைக் கொண்டுதான் இந்த இரத்த உறவுமுறையை விளக்க முடியும். மார்கன் தான் சேகரித்த விவரங்களையும் முடிவுகளையும் 1871ஆம் ஆண்டில் இரத்த உறவுமுறைகளும் மற்ற உறவுமுறைகளும் என்ற நூலில் வெளியிட்டார். அதன் மூலம் விவாதக் களத்தை விரிவுபடுத்தினார். அவர் இரத்த உறவுமுறைகளைத் தனது தொடக்க நிலையாகக் கொண்டு அவற்றுக்குரிய குடும்ப வடிவங்களை மறுநிர்மாணம் செய்து தந்தார்; அதன் மூலம் ஒரு

புதிய ஆராய்ச்சிப் பாதையையும் மனிதகுலத்தின் ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய வரலாற்றைப் பற்றி முன்னைவிட தொலைவாகப் பார்க்கும் பின்னோக்கு நிலையையும் வகுத்தளித்தார். இந்த ஆராய்ச்சி முறை சரியானது என்று அங்கீகரிக்கப்படுமானால் மாக்லென்னான் நிர்மாணித்த கச்சிதமான அமைப்பு காற்றில் கரைந்து விடும்.

பூர்விக மண முறை (பண்டைக்கால வரலாறு பற்றிய ஆராய்ச்சிகள், *1876)* என்ற தமது நூலின் புதிய பதிப்பில் மாக்லென்னான் தன்னுடைய தத்துவத்தை வலியுறுத்தினார். தன்னைப் பொறுத்தமட்டில், வெறும் ஊகங்களைக் கொண்டு குடும்பத்தைப் பற்றிய வரலாற்றைச் செயற்கையான முறையில் நிர்மாணித்த இவர் லப்பாக்கும் மார்கனும் தம்முடைய ஒவ்வொரு கூற்றுக்கும் ஆதாரங்களைக் காட்ட வேண்டும் என்று கோருவதுடன் ஸ்காட்லாந்து நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படக் கூடியதைப் போன்ற மறுக்க முடியாத ஆதாரங்களையே சமர்ப்பிக்க வேண்டும் என்கிறார். ஜெர்மானியர்கள் மத்தியில் ஒருவருடைய தாயின் சகோதரனுக்கும் சகோதரியின் மகனுக்கும் இடையிலிருந்த நெருங்கிய உறவுமுறையை (டாசிட்டஸ் எழுதிய ஜெர்மானியா, *20*ஆம் அத்தியாயத்தைப் பார்க்க) வைத்துக் கொண்டும் பிரிட்டானியர்கள் பத்து அல்லது பன்னிரண்டு நபர்களைக் கொண்ட குழுக்களாக அமைந்து தமது மனைவியரைப் பொதுவில் அனுபவித்து வந்தார்கள் என்னும் சீஸரின் அறிக்கையைக் கொண்டும் அநாகரிக மக்களிடையே பெண்கள் பொதுவில் இருப்பதைப் பற்றிப் பண்டைக்கால எழுத்தாளர்கள் தந்த இதர செய்திகள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டும் இந்த எல்லா மக்களினங்களிடையிலும் பல கணவர் மணம் விதியாக இருந்தது என்று தயங்காமல் முடிவு செய்கின்ற மாக்லென்னான் இப்படிக் கேட்கிறார்! தன்னுடைய வழக்கைத் தயாரிப்பதில் எல்லாவிதமான சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்கின்ற வாதியின் வழக்குரைஞர், பிரதிவாதியின் வழக்குரைஞர் மட்டும் தான் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லுக்கும் மிகவும் முறையான, சட்ட ரீதியில் மிகவும் சரியான ஆதாரங்களைத் தர வேண்டும் என்று வற்புறுத்துவதைப் போல இது இருக்கிறது.

குழு மணம் என்பது வெறும் கற்பனை என்று மாக்லென்னான் சாதிக்கிறார். ஆகவே அவர் பாஹொஃபெனுக்கும் வெகு தூரம் பின்தங்கி விடுகிறார். மார்கன் குறிப்பிட்ட இரத்த உறவுமுறைகள் சமூக மரியாதையைச் சுட்டிக்காட்டுகின்ற உரைகளே தவிர வேறொன்றுமில்லை என்று அவர் கூறுகிறார். செவ்விந்தியர்கள் முன் பின் தெரியாதவர்களை, வெள்ளைக்காரர்களைக் கூட ''சகோதரன்'' என்றும் ''தந்தை'' என்றும் அழைக்கிறார்கள். இந்த உண்மையே அதை நிரூபிக்கிறது என்கிறார். கத்தோலிக்க சமயப் பாதிரியார்களும் கன்னிமடத் தலைவிகளும் ''தந்தையே'' என்றும் ''தாயே'' என்றும் அழைக்கப்படுவதனால், ஆண்துறவிகளும் பெண்துறவிகளும் ஃபிரிமேசன்களும் இங்கிலாந்தின் கைத்தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களும் கூட பேரவைக் கூட்டத்தின் போது ''சகோதரரே'', ''சகோதரியே'' என்று அழைக்கப்படுவதனால் தந்தை, தாய், சகோதரன், சகோதரி என்பவை வெறும் விளிச் சொற்களே என்று ஒருவர் வாதிடுவதைப் போன்றதே இது. சுருக்கமாகக் கூறினால், மாக்லென்னானுடைய தற்காப்பு மிகவும் பலவீனமாக இருந்தது.

எனினும் ஒரு விஷயத்தில் மட்டும் அவரை யாரும் மறுக்கவில்லை. புறமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' அகமண முறை ''இனக்குழுக்களுக்கும்'' இடையில் அவர் நிறுவிய முரண்பாடு அவருடைய கருத்தமைப்புக்கு அடிப்படையாக இருந்தது. அந்த முரண்பாட்டை யாரும் மறுக்கவில்லை என்பது மட்டுமன்றி, குடும்பத்தின் வரலாறு முழுவதற்கும் அதுவே அச்சாணி என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த முரண்பாட்டை விளக்குவதற்கு மாக்லென்னான் செய்த முயற்சி போதுமானதல்ல, அது அவரே விவரித்த உண்மைகளுக்கு மாறுபாடாக இருக்கிறது என்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவர் வகுத்தளித்த முரண்பாடு—ஒன்றையொன்று விலக்கி வைக்கும் ரீதியிலமைந்த தனித்தனியான, சுயேச்சையான இரண்டு இனக்குழுக்கள் உண்டு, அதில் ஒரு இனக்குழு தனக்குள்ளாகவே மனைவியரைத் தேடிக் கொண்டது, இன்னொரு இனக்குழு இந்த முறையை முற்றிலும் தடை செய்திருந்தது என்ற முரண்

பாடு—மறுக்கப்பட முடியாத வேதவாக்காகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. உதாரணமாக, ஜிரோ-தெய்லோன் எழுதிய குடும்பத்தின் தோற்றம் (1874) என்ற நூலையும் லப்பாக் எழுதிய நாகரிகத்தின் தோற்றம் (நான்காம் பதிப்பு, 1882) என்ற நூலையும் கூட ஒப்பிட்டுப் பாருங்கள்.

இந்தக் கட்டத்தில்தான் மார்கன் எழுதிய முக்கிய மான நூலாகிய **பண்டைக்காலச் சமூகம்** (1877) பிரவேசிக் கிறது. அதை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. மார்கன் 1871ஆம் ஆண்டில் எதைத் தெளிவில்லாமல் ஊகித்தாரோ அது இங்கே முழுத் தெளிவுடன் வளர்க்கப்பட்டிருக்கிறது. அகமண முறையும் புறமண முறையும் ஒன்றுக்கொன்று எதிரான வையல்ல. இந்த நாள்வரை புறமண முறை ''இனக்குழுக் கள்'' எவையும் எங்குமே கண்டுபிடித்துச் சொல்லப்பட வில்லை. ஆனால் குழு மண முறை நிலவிய காலத்தில்— அநேகமாக அது எல்லா இடங்களிலும் ஏதாவதொரு காலத்தில் இருக்கவே செய்தது—ஒரு இனக்குழு என்பது சில குழுக்களை, குலங்களைக் கொண்டு அமைந்திருந்தது; அவை தாய்வழியில் இரத்த உறவுகள் கொண்டிருந்தன. இந்தக் குலங்கள் ஒவ்வொன்றும் தனக்குள்ளேயே மணம் செய்து கொள்ளக் கூடாதென்று கண்டிப்பான தடை இருந்தது. இதன் விளைவாக, ஒரு குலத்தைச் சேர்ந்த ஆண்கள் தமது இனக்குழுவிற்குள்ளேயே பெண்களை மனைவியராகக் கொள்ள முடிந்தது, வழக்கமாக அப்படித் தான் செய்தார்கள் என்றாலும் அந்த ஆண்கள் தமது குலத்துக்கு வெளியிலிருந்தே மனைவியரைக் கொள்ள வேண்டியிருந்தது. ஆக, குலத்தைப் பொறுத்தமட்டில், அது கண்டிப்பாகப் புறமண முறையைக் கொண்டிருந்தது, ஆனால் இந்த குலங்களைத் தன்னுள் கொண்டிருந்த இனக்குழு கண்டிப்பாக அகமண முறையைக் கடைப்பிடித் தது. இத்துடன் மாக்லென்னான் நிர்மாணித்திருந்த செயற்கையான அமைப்பின் கடைசி எச்சங்களும் தகர்ந்து விட்டன.

மார்கன் இத்துடன் திருப்தியடைந்து விடவில்லை. அவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட துறையில் இரண் டாவது நிர்ணயமான முன்னேற்றத்தைச் சாதிப்பதற்கு அமெரிக்க செவ்விந்தியர்களின் குலங்கள் ஒரு சாதனமாக

அவருக்குப் பயன்பட்டன. தாய் உரிமை அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த குலங்களே ஆதி வடிவம், அதிலிருந்துதான் பின்னால் தந்தை உரிமையை அடிப்படையாகக் கொண்ட குலங்கள் வளர்ந்தன என்று மார்கன் கண்டுபிடித்தார். இப்படித் தந்தை உரிமை அடிப்படையில் அமைந்தவையே பண்டைக்கால நாகரிகத்தைச் சேர்ந்த மக்களிடையே நாம் பார்க்கும் குலங்களாகும். முந்திய வரலாற்று ஆசிரியர்கள் அனைவருக்கும் கிரேக்க, ரோமானியக் குலங்கள் ஒரு புதிராக இருந்தன; ஆனால் அவை இப்பொழுது அமெரிக்க செவ்விந்தியக் குலங்களைக் கொண்டு விளக்கப்பட்டன. ஆக, பூர்விகச் சமூகத்தின் வரலாறு முழுவதற்கும் ஒரு புதிய அடிப்படை கண்டு பிடிக்கப்பட்டது.

பரிணாம வளர்ச்சியைப் பற்றி டார்வின் கண்டுபிடித்த தத்துவம் உயிரியல் துறையில் எவ்வளவு முக்கியமானதோ, உபரி மதிப்பைப் பற்றி மார்க்ஸ் கண்டுபிடித்த தத்துவம் அரசியல் பொருளாதாரத் துறையில் எவ்வளவு முக்கியமானதோ—அதே அளவுக்கு நாகரிகமடைந்த மக்களினங்களின் தந்தை உரிமைக் குலத்துக்குப் பூர்வாங்கமான கட்டமாக ஆதிகாலத் தாய் உரிமைக் குலம் இருந்தது என்ற மறு கண்டுபிடிப்பும் பூர்விகச் சமூகத்தின் வரலாற்றுத் துறையில் அதே முக்கியத்துவத்தைக் கொண்டதாகும். அதைக் கொண்டு குடும்பத்தைப் பற்றிய ஒரு வரலாற்றை முதல் தடவையாக மார்கன் உருவரையில் காட்ட முடிந்தது. தற்சமயம் கிடைத்துள்ள ஆதாரங்கள் அனுமதிக்கின்ற அளவுக்கு, குறைந்தபட்சம் மூலச் சிறப்பான வளர்ச்சிக் கட்டங்களாவது மொத்தத்தில் அந்த வரலாற்றில் பூர்வாங்கமாக நிறுவப்பட்டுள்ளன. பூர்விகச் சமூகத்தின் வரலாற்றை விளக்குவதில் இது ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்குகிறது என்பது தெளிவு. இந்த விஞ்ஞானம் தாய் உரிமைக் குலம் என்ற அச்சாணியைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது; அது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நாம் எந்தத் திசையில் ஆராய்ச்சிகளைச் செலுத்த வேண்டும் என்பது தெரிந்து விட்டது; எதை ஆராய வேண்டும், ஆராய்ச்சியின் முடிவுகளை எப்படி வகைப்படுத்த வேண்டும் என்பது தெரிந்து விட்டது. எனவே மார்கனுடைய நூல் வெளிவருவதற்கு முன்பிருந்

தத்தைக் காட்டிலும் தற்பொழுது இந்தத் துறையில் வேக மான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தின் ஏடறியா வரலாற்றுத் துறை ஆராய்ச்சியாளர்கள் மார்கனின் கண்டுபிடிப்புகளை இப்பொழுது பொதுவாக அங்கீகரிக்கிறார்கள்—இல்லை, அவற்றைத் திருடித் தம்முடையதாக்கிக் கொள்கிறார்கள். எனினும் ஆய்வுநோக்கில் ஏற்பட்டுள்ள இந்தப் புரட்சிக்கு மார்கனே காரணம் என்று அவர்களில் ஒருவர் கூட பகிரங்கமாக ஒத்துக் கொள்ள மாட்டார். இங்கிலாந்தில் அவருடைய நூலைப் பற்றி இயன்ற வரை மௌனம் சாதிக்கப்படுகிறது; அவருடைய முந்திய நூல்களை மட்டும் பெரிய மனதுடன் புகழ்ந்து பேசி விட்டு அவரை மறைத்து விடுகிறார்கள். மார்கனின் விளக்கவுரையிலுள்ள விவரங்களை ஆர்வத்துடன் பொறுக்கியெடுத்து விமர்சனம் செய்கிறார்கள், ஆனால் உண்மையாகவே மகத்தான அவருடைய கண்டுபிடிப்புகளைப் பற்றி பிடிவாதமாக மௌனம் சாதிக்கிறார்கள். பண்டைக்காலச் சமூகம் என்ற அந்த நூலின் மூலப் பதிப்பு இப்பொழுது விலைக்குக் கிடைப்பதில்லை. இத்தகைய நூல்கள் அமெரிக்காவில் லாபகரமான முறையில் விற்பனையாவதில்லை. இங்கிலாந்தில் இந்த நூல் திட்டமிட்டு அலட்சியப்படுத்தப்பட்டது என்று தோன்றுகிறது. சகாப்தத்தைப் படைக்கின்ற இந்த நூலின் ஜெர்மன் மொழிபெயர்ப்பு ஒன்றுதான் புத்தகக் கடைகளில் இன்னும் கிடைக்கின்ற ஒரே பதிப்பாகும்.

இப்படிப்பட்ட ஒதுக்கம் எங்கிருந்து வருகிறது? இது மௌனச் சதி என்று கருதாமலிருப்பது கடினமே. குறிப்பாக, வெறுமனே மரியாதைக்காகப் பல நூல்களிலிருந்து மேற்கோள்கள் தரும் பொழுது, தோழமை உணர்ச்சியைக் காட்டுவதற்கு பல சான்றுகளைத் தரும் பொழுது—அங்கீகரிக்கப்பட்டுள்ள நமது ஏடறியா வரலாற்றுத் துறை ஆராய்ச்சியாளர்களின் நூல்களில் இவை மண்டிக் கிடக்கின்றன—இந்த ஒதுக்கம் எங்கிருந்து வருகிறது? ஒரு வேளை, மார்கன் அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்பது காரணமா? மூலாதாரங்களைச் சேகரிப்பதில் ஏடறியா வரலாற்றுத் துறையைச் சேர்ந்த ஆங்கில ஆராய்ச்சியாளர்களிடம் மிகவும் பாராட்டத்தக்க, விடா முயற்சி இருந்தும் கூட, இந்த மூலாதாரங்களை வரிசைப்படுத்து

தல், வகைபிரித்தல் ஆகியவற்றை நிர்ணயிக்கின்ற பொது வான நோக்குக்கு, சுருக்கமாகக் கூறினால் அவர்களுடைய கருத்துகளுக்கு திறமை மிக்க இரண்டு அந்நிய நாட்டவர் களை—மார்கனையும் பாஹொஃபெனையும்—ஆதார மாகக் கொள்ள வேண்டியிருக்கிறதே என்பது காரணமா? ஜெர்மானியனையாவது சகித்துக் கொள்ளலாம்; அமெ ரிக்கனை எப்படி சகிப்பது? ஒரு அமெரிக்கனை நேருக்கு நேராக சந்திக்கின்ற பொழுது ஒவ்வொரு ஆங்கிலேய னுக்கும் நாட்டுப்பற்று பொங்கியெழுகிறது. நான் அமெ ரிக்காவில் இருந்த பொழுது இதற்குப் பல வேடிக்கையான உதாரணங்களைப் பார்த்தேன்.[4] இத்துடன் இன்னொரு விஷயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏடறியா வரலாற்றுத் துறையின் ஆங்கில மரபினருக்கு மாக்லென் னான் அதிகாரபூர்வமாகப் பிரகடனம் செய்யப்பட்ட ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்தார். குழந்தைக் கொலையிலிருந்து தொடங்கி பல கணவர் மண முறை மற்றும் கடத்திச் செல்லும் மண முறை மூலமாகத் தாய் உரிமைக் குடும்பத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கின்ற மாக்லென்னான் செயற்கையாக நிர்மாணித்த வரலாற்றுத் தத்துவத்துக்கு மிகவும் அதிகமான மரியாதை அளிப்பதே நாகரிகமானது என்று அவர்கள் கருதினார்கள். ஒன்றை யொன்று முற்றிலும் விலக்கி வைக்கின்ற புறமண முறை மற்றும் அகமண முறை "இனக்குழுக்களைப்" பற்றி மிக வும் அற்பமான சந்தேகத்தைத் தெரிவிப்பது கூட அப் பட்டமான முறையில் கலகம் செய்வதாகக் கருதப்பட் டது. ஆகவே மார்கன் இந்தப் புனிதமான சூத்திரங்களை வெறும் காற்றாகக் கரைந்து போகும்படி செய்ததால் ஒரு வகையில் மாபாவம் செய்த குற்றத்திற்கு உள்ளா னார். அது மட்டுமல்ல. சொன்னவுடனே விஷயம் வெளிப் படையாகப் புலப்படுகின்ற முறையில் மார்கன் சூத்திரங் களைப் பரிகரித்து விட்டார். புறமண முறைக்கும் அகமண முறைக்கும் இடையில் தடுமாறித் தள்ளாடிக் கொண் டிருந்த மாக்லென்னானின் பக்தர்கள் தங்கள் மண்டை களை உடைத்துக் கொண்டு "இதையெல்லாம் நெடுங் காலத்துக்கு முன்பே நாமே கண்டுபிடிக்காமல் போகின்ற அளவுக்கு முட்டாள்களாக இருந்து விட்டோமே" என்று வியப்புக் குரல் எழுப்புகின்ற நிலை ஏற்பட்டது.

அதிகாரபூர்வமான மரபினர் மார்கனைப் பற்றி அதிகமான அலட்சியத்தைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு விதமாக நடந்து கொள்ளாமல் இருப்பதற்கு அவர் செய்த இந்தக் குற்றம் போதாதா? எனினும், அதுவும் போதாது என்பதைப்போல மார்கன் ஃபூரியேயை நினைவூட்டுகின்ற முறையில் நாகரிகத்தை, பண்ட உற்பத்திச் சமூகத்தை, தற்காலச் சமூகத்தின் அடிப்படை வடிவத்தை விமர்சனம் செய்தது மட்டுமன்றி, கார்ல் மார்க்ஸ் உபயோகப்படுத்தியிருக்கக் கூடிய சொற்களில் சமூகத்தின் எதிர்கால மாற்றத்தையும் பற்றிப் பேசினார். இது எல்லை மீறிப் போவதுதானே. ஆகவே மார்கனுக்கு ''வரலாற்று ரீதியான ஆராய்ச்சிமுறை என்றாலே அதிகமான வெறுப்பு'' என்று மாக்லென்னான் அவர் மீது கடுங்கோபத்துடன் குற்றம் சாட்டினார். பேராசிரியர் ஜிரோ-தெய்லோன் 1884ஆம் ஆண்டில் கூட அந்தக் கருத்தை ஆமோதித்தார். அத்துடன் மார்கனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. 1874ஆம் ஆண்டில் (குடும்பத்தின் தோற்றம்) மாக்லென்னானின் புறமண முறை என்ற சிக்கலை விட்டு வெளியே வருவதற்கு வழி தெரியாமல், உதவி செய்ய யாருமில்லாமல் அலைந்தவரும் மார்கன் வந்து விடுதலை செய்ய வேண்டிய நிலையில் இருந்தவரும் இதே திரு. ஜிரோ-தெய்லோன்தானே?

பூர்விகச் சமூகத்தின் வரலாறு மார்கனுக்குக் கடன் பட்டுள்ள முறையில் பெற்ற இதர முன்னேற்றங்களை இங்கே நான் எடுத்துக் கொள்வது அவசியமல்ல; அவசியமானவை இந்நூலினூடே சொல்லப்பட்டிருக்கின்றன. அவருடைய இந்த முக்கியமான நூல் வெளியாகிப் பதினான்கு ஆண்டுகள் கழிந்துள்ளன. இக்காலத்தில் பூர்விகச் சமூகங்களின் வரலாறு சம்பந்தமான மூலாதாரங்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. மானுடவியல் ஆராய்ச்சியாளர்களும் பிரயாணிகளும் ஏடறியா வரலாற்றைத் தொழில்முறையில் பயில்பவர்களும் மட்டுமன்றி ஒப்பு நோக்குச் சட்டவியல் ஆய்வாளர்களும் இத்துறையில் ஈடுபட்டுப் புதிய ஆதாரங்களையும் புதிய கருத்துகளையும் வெளியிட்டுள்ளார்கள். அவற்றின் விளைவாக, குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து மார்கன் செய்த ஊகங்கள் ஆட்டங்கண்டு விட்டன, அவை நிலைகுலைந்து

விட்டன என்று கூடக் கூறலாம். ஆனால் புதிதாக சேகரிக்கப்பட்டுள்ள விவரங்கள் அவருடைய பிரதான கருதுகோள்களை நிராகரித்து அவற்றின் இடத்தில் மற்ற கருதுகோள்களை நிறுவுகின்ற நிலை சிறிதும் ஏற்படவில்லை. பூர்விகச் சமூகத்தின் வரலாற்றை ஆராய்வதில் மார்கன் ஏற்படுத்திய ஒழுங்குமுறை—அதன் பிரதான அம்சங்களில்—இன்றுவரை சரியாகவே இருந்து வருகிறது. இந்த மாபெரும் முன்னேற்றத்துக்கு அவரே ஆரம்பகர்த்தா என்ற விஷயம் எந்த அளவுக்கு மூடி மறைக்கப்பட்டு வருகிறதோ, அதே அளவுக்கு அதைப் பொதுவாக ஏற்றுக்கொள்வதும் அதிகரித்து வருகிறது என்று கூட நாம் கூற முடியும்.*

*லண்டன், ஜூன் 16, 1891*

**பிரெடெரிக் எங்கெல்ஸ்**

---

* நான் 1888 செப்டெம்பர் மாதத்தில் நியூயார்க்கிலிருந்து கப்பல் பயணம் செய்து திரும்பிய பொழுது அமெரிக்க சட்டப் பேரவையில் ராசெஸ்டர் மாவட்டப் பிரதிநிதியாக இருந்த ஒரு முன்னாள் உறுப்பினரைச் சந்தித்தேன். அவருக்கு லூயிஸ் மார்கனைத் தெரியும். ஆனால் அவர் மார்கனைப் பற்றி மிகக் குறைவான தகவலைத்தான் தெரிவிக்க முடிந்தது துரதிர்ஷ்டமே. மார்கன் ராசெஸ்டர் நகரில் தன்னுடைய ஆராய்ச்சிகளில் மட்டுமே ஈடுபாடுள்ள ஒரு சாதாரணக் குடிமகனாக வாழ்ந்து வந்தார். அவருடைய சகோதரர் இராணுவத்தில் கர்னல் அந்தஸ்து உடையவர்; வாஷிங்டனில் யுத்த இலாகாவில் பதவி வகித்தார். சகோதரருடைய உதவியின் மூலம் தன்னுடைய ஆராய்ச்சிகளில் அரசாங்கம் அக்கறை காட்டும்படி செய்வதிலும் பொதுச் செலவில் தன்னுடைய சில நூல்களை வெளியிடுமாறு செய்வதிலும் அவர் வெற்றி பெற்றார். சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த பொழுது தானும் உதவி செய்ததாக இந்த முன்னாள் உறுப்பினர் தெரிவித்தார். (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

# I

## ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய கலாசாரக் கட்டங்கள்

மனிதகுலத்தின் ஏடறியா வரலாற்றுத் துறையில் திட்ட வட்டமான ஒழுங்குமுறையை நுட்பமான அறிவுடன் புகுத்த முயன்றவர்களில் மார்கனே முதல்வராவார். முக்கியமான ஆதாரங்கள் இனிமேல் கிடைத்துத் திருத் தங்களுக்கு அவசியம் ஏற்பட்டாலொழிய அவருடைய பகுப்புமுறை தொடர்ந்து பின்பற்றப்படும் என்று எதிர் பார்க்கலாம்.

காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை, நாகரிக நிலை என்னும் மூன்று பிரதான சகாப்தங்களில் அவர் முதல் இரண்டு நிலைகளைப் பற்றியும் மூன்றாவது நிலைக்கு மாறிச் செல்வதைப் பற்றியும் மட்டுமே அக் கறை கொண்டிருந்தார் என்பது இயல்பே. அவர் உயிர் வாழ்வதற்குரிய பொருட்சாதனங்களை உற்பத்தி செய் வதில் பெற்ற முன்னேற்றத்துக்குத் தக்கபடி இவ்விரண்டு சகாப்தங்கள் ஒவ்வொன்றையும் கடைக்கட்டம், இடைக் கட்டம், தலைக்கட்டம் என்று மூன்று உட்கட்டங்களாகப் பிரித்தார். ஏனென்றால், அவர் கூறியபடி,

''புவியில் மனிதகுலம் தலையாய நிலை அடையும் பிரச்சினை முழுவதும் இத்துறையில் அவர்கள் அடைந் துள்ள திறனைப் பொறுத்ததாக இருந்தது; ஜீவராசி களில் மனிதன் மட்டும்தான் உணவு உற்பத்தியில் தனி முதலான அதிகாரம் பெற்றிருந்தான் என்று கூறலாம். உயிர்வாழ்வதற்குரிய மூலாதாரங்களின் பெருக்கத்தை வைத்தே மனிதகுல முன்னேற்றத்தின் மகத்தான சகாப் தங்கள் அநேகமாக நேரடியாக அடையாளங் கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றன''.

குடும்பத்தின் பரிணாமம் இதனுடன் சேர்ந்தே வளர்ச் சியடைகிறது. ஆனால் இப்பரிணாமத்தின் கட்டங்களை

வரம்பிட்டுக் காட்டுவதற்கு மேற்கூறிய நிர்ணயகரமான ஆதாரக் கோள்களை அது அளிக்கவில்லை.

### 1. காட்டுமிராண்டி நிலை

அ) கடைக்கட்டம். இது மனிதகுலத்தின் குழந்தைப் பருவம். மனிதன் தனது முதல் இருப்பிடமான வெப்ப மண்டல அல்லது அரை வெப்ப மண்டலக் காடுகளில் தான் இன்னும் வசித்து வந்தான்; குறைந்தபட்சம் பகுதியளவாவது மரங்களில்தான் குடியிருந்து வந்தான். கொன்று தின்னும் பெரிய மிருகங்களுக்கு நடுவில் அவன் தொடர்ந்து வசிக்க முடிந்ததை இது ஒன்றுதான் விளக்கு கிறது. பழங்கள், கொட்டைகள், கிழங்குகள் அவனுடைய உணவாகப் பயன்பட்டன. ஓசைச் சீருள்ள பேச்சு அமைந் ததே இந்தக் கட்டத்தின் பிரதான சாதனையாகும். வர லாற்றுக் காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிய வந்திருக் கின்ற மக்களினங்கள் எதுவுமே இந்த ஆதிமனித நிலை யில் இருக்கவில்லை. இந்தக் காலப் பகுதி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு நீடித்திருக்கக் கூடும் என்றா லும் அது இருந்ததைப் பற்றி நேரடியான சான்று எதுவும் நமக்குக் கிட்டவில்லை. ஆனால், மிருகங்களிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதை ஏற்றுக் கொண்டால் இந்த மாற்றக் காலகட்டத்தை ஒத்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாது.

ஆ) இடைக்கட்டம். இக்கட்டம் உணவுக்காக மீன்களை (இந்த இனத்தில் நண்டுகள், சிப்பிகள் மற்றும் நீரில் வாழும் இதர உயிரினங்களையும் நாம் சேர்த்துக் கொள் கிறோம்) பயன்படுத்தல், நெருப்பை உபயோகித்தல் ஆகியவற்றுடன் தொடங்குகிறது. இவ்விரண்டும் ஒன்றை யொன்று சார்ந்துள்ளன. ஏனெனில் நெருப்பை உப யோகிப்பதால் மட்டுமே மீன் உணவை முழுமையாகப் பெற இயலும். எனினும் இந்தப் புதிய உணவு மனிதனைத் தட்பவெப்ப நிலையிலிருந்தும் வட்டாரத்திலிருந்தும் சுதந்திரமடையச் செய்தது. மனிதன் ஆறுகளையும் கடற் கரையோரங்களையும் பின்பற்றிச் செல்வதன் மூலம்—காட்டுமிராண்டி நிலையிலும் கூட—உலக நிலப்பரப்பின் பெரும் பகுதியில் பரவிப் படர முடிந்தது. ஆரம்பக் கற்

காலத்தைச் சேர்ந்த கரடுமுரடான, பட்டை தீட்டப் படாத கற்கருவிகள் முழுமையாகவோ அல்லது அதிகப் பெரும்பான்மையாகவோ இந்தக் கட்டத்துக்குத்தான் உரியவை. அத்தகைய கற்கருவிகள் எல்லாக் கண்டங் களிலும் சிதறிக் கிடக்கின்றன. மனிதர்களின் இடப் பெயர்ச்சிக்கு இவை சான்றுகளாகும். மனிதர்கள் புதி தாகக் குடியேறிய பிரதேசங்களும் கண்டுபிடித்தலில் அவர்கள் காட்டிய இடைவிடாத செயல்வேட்கையும் அதனுடன் இணைந்த உரைசல் மூலம் தீயுண்டாக்கும் கலையில் திறமையும் புதிய உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்தன. மாவு தரத்தக்க கிழங்கு வகைகள் போன்ற உணவுப் பொருட்கள் வெப்பமுள்ள எருவில் அல்லது குழி அடுப்புகளில் வேகவைக்கப்பட்டன. குண் டாந்தடி, ஈட்டி ஆகிய முதல் ஆயுதங்கள் உருவாக்கப் பட்ட பிறகு கிடைத்த இறைச்சியும் அவ்வப்பொழுது உணவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. வேட்டைத் தொழில் ஒன்றை மட்டும் கொண்டு உயிர்வாழ்கின்ற மக் களினங்கள் என்று புத்தகங்களில் குறிக்கப்படுகின்றவை ஒருபோதும் இருக்கவில்லை. வேட்டையின் மூலம் கிடைக்கின்ற பலன்கள் மிகவும் நிச்சயமில்லாதபடியால் அது சாத்தியமில்லை. உணவுப் பொருட்களுக்குரிய மூலா தாரங்கள் தொடர்ச்சியாக நிச்சயமில்லாதிருந்ததன் விளைவாக இந்தக் கட்டத்தில் மனித இறைச்சியைத் தின்னும் முறை உண்டாகி அது நெடுங்காலம் வரை நீடித் ததாகத் தெரிகிறது. ஆஸ்திரேலியர்களும் போலினீஸி யர்களில் பலரும் இந்நாளிலும் கூடக் காட்டுமிராண்டி நிலையின் இந்த இடைக்கட்டத்திலேயே இருந்து வரு கின்றனர்.

இ) தலைக்கட்டம். இக்கட்டம் வில்லும் அம்பும் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. இதனால் காட்டு விலங்கின் இறைச்சி வாடிக்கையான உணவுப் பொருளாயிற்று, வேட்டையாடுதலும் சகஜமான தொழி லாயிற்று. வில், நாண், அம்பு ஆகியவை மிகவும் கூட்டா யமைந்த கருவி ஆகும். அதை உருவாக்குவதற்கு நெடுங் காலமாகச் சேகரிக்கப்பட்ட அனுபவமும் கூர்மையான மதிநுட்பமும் இருந்திருக்க வேண்டும், அதன் விளைவாக, இதர பல புதுப் படைப்புகளையும் அதே சமயத்தில் அறிந்

திருக்க வேண்டும். வில், அம்புகளை உபயோகித்த போதிலும் மண் பாண்டங்களைச் செய்யும் கலையை (இந்தக் கலை, அநாகரிக நிலைக்கு மாறிச் செல்வதின் ஆரம்பத்தைக் குறிக்கிறது என்று மார்கன் கருதுகிறார்) இன்னும் அறியாத மக்களினங்களை ஒப்புநோக்கினால், இந்த ஆரம்பக் கட்டத்தில் கூட கிராமங்களில் குடியமைத்துத் தங்குவதின் ஆரம்ப நிலைகளைப் பார்க்கிறோம். மரத்தால் செய்த கலயங்கள், சாமான்கள், நாரிலிருந்து (தறியில்லாமல்) கைவிரல்களால் துணி நெய்தல், நார் அல்லது நாணல் புல்லைக் கொண்டு கூடைகளை முடைதல், பட்டை தீட்டப்பட்ட (புதிய கற்காலத்தைச் சேர்ந்த) கற்கருவிகள் ஆகிய வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்வதில் ஓரளவுக்குத் தேர்ச்சி அடைந்திருப்பதையும் பார்க்கிறோம். மேலும், பெரும்பாலான இடங்களில் நெருப்பும் கற்கோடரியும் கொண்டு மரத்தைக் குடைந்து ஓடம் செய்யப்பட்டு விட்டது; சில இடங்களில் வீடு கட்டுவதற்கு மரக் கட்டைகளும் பலகைகளும் செய்யப்பட்டு விட்டன. உதாரணமாக, இந்த முன்னேற்றங்கள் எல்லாவற்றையும் வட மேற்கு அமெரிக்க செவ்விந்தியர்களிடையே காணலாம். அவர்களுக்கு வில்லும் அம்பும் பழக்கமானவை என்றாலும் மண் பாண்டக் கலையைப் பற்றித் தெரியாது. இரும்பு வாள் அநாகரிக நிலைக்கும் துப்பாக்கி நாகரிக நிலைக்கும் நிர்ணயமான ஆயுதமாக விளங்கியதைப் போல காட்டுமிராண்டி நிலைக்கு வில்லும் அம்பும் நிர்ணயமான ஆயுதங்களாக விளங்கின.

## 2. அநாகரிக நிலை

அ) **கடைக்கட்டம்** மண் பாண்டங்கள் பயன்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இது தொடங்குகிறது. கூடைகளும் மரப் பாத்திரங்களும் நெருப்பினால் எரிந்து விடாமல் இருப்பதற்காக அவற்றின் மீது களிமண்ணைப் பூசியதிலிருந்து இந்தக் கலை தோன்றியது என்பதைப் பல இடங்களில் கண்கூடாகக் காட்டலாம்; அநேகமாக எல்லா இடங்களிலும் இப்படித்தான் நடந்திருக்கும். அப்படிக் களிமண்ணைப் பூசப் போய் உள்ளே பாத்திரம் இல்லாமல்

உருவமைந்த களிமண்ணே பாத்திரமாகப் பயன்படக் கூடும் என்பது சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

பரிணாம வளர்ச்சியில் இந்த முனைவரை ஒரு திட்ட வட்டமான காலப் பகுதிக்குப் பிரதேச வித்தியாசம் எதுவுமின்றி எல்லா மக்களினங்களுக்கும் பொதுவாக செல்லத்தக்கது என்று நாம் கருத முடியும். ஆனால் அநாகரிக நிலை தொடங்கிய பிறகு, நாம் ஒரு கட்டத்தை எட்டுகிறோம். அந்தக் கட்டத்தில் இரண்டு மாபெரும் கண்டங்களுக்கு இடையில் இருக்கின்ற இயற்கை வேறுபாடுகள் செயல்படத் தொடங்குகின்றன. மிருகங்களைப் பழக்குதல், வளர்த்தல், பயிரிடுதல் ஆகியவை அநாகரிக நிலையின் விசேஷமான குணாம்சமாகும். பழைய உலகம் என்று சொல்லப்படுகின்ற கிழக்குக் கண்டத்தில் வீட்டில் வளர்ப்பதற்கு ஏற்ற அநேகமான எல்லா மிருகங்களும் சாகுபடி செய்யத் தக்க எல்லா தானிய வகைகளும் (ஒரு தானியத்தைத் தவிர) இருந்தன. ஆனால் மேற்குக் கண்டமாகிய அமெரிக்காவில் லாமா என்னும் ஒரு மிருகம்தான் வீட்டில் வளர்க்கக் கூடியதாக இருந்தது. அதுவும் கூட அக்கண்டத்தின் தெற்கிலுள்ள ஒரு பகுதியில்தான் இருந்தது. மேலும், அக்கண்டத்தில் சாகுபடி செய்வதற்கு மக்காச்சோளம் என்னும் ஒரேயொரு தானியம்தான் இருந்தது; ஆனால் அது எல்லாத் தானியங்களிலும் தலைசிறந்ததாகும். அன்று முதல் ஒவ்வொரு கோளார்த்தத்தைச் சேர்ந்த மக்கள்தொகையும் தனக்குரிய விசேஷமான பாதையில் முன்னேறியது அவற்றின் இயற்கை நிலைமைகளில் நிலவிய வேறுபாடுகளின் விளைவு எனலாம். மேலும், பல்வேறு கட்டங்களில் எல்லைகளில் அமைந்துள்ள ஸ்தல அடையாளக் குறிகளும் இரண்டு கோளார்த்தங்கள் சம்பந்தமாக ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றன.

ஆ) இடைக்கட்டம். கிழக்குக் கண்டத்தில் மிருகங்களைப் பழக்குவதிலிருந்து இது தொடங்குகிறது. மேற்குக் கண்டத்தில் உணவுக்குரிய பயிர்களை நீர்ப்பாசனத்தின் மூலம் சாகுபடி செய்தல், அடோபுகளையும் (சூரிய வெப்பத்தில் காய்ந்த செங்கற்கள்) கல்லையும் உபயோகித்துக் கட்டிடங்கள் கட்டுதல் ஆகியவற்றிலிருந்து இது தொடங்குகிறது.

நாம் மேற்குக் கண்டத்திலிருந்து தொடங்குவோம்; ஏனென்றால் அங்கே ஐரோப்பியர் ஆட்சி வரும் வரை இந்தக் கட்டம் எங்கேயும் எல்லை மீறி வளரவில்லை.

செவ்விந்தியர்களைக் கண்டுபிடித்த காலத்தில் அவர்கள் அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தில் இருந்தார்கள் (மிஸிஸிப்பி நதிக்குக் கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மக்கள் அனைவரும் இக்கட்டத்தைச் சேர்ந்தவர்கள்). அவர்கள் ஏற்கெனவே ஓரளவுக்கு மக்காச்சோளத்தைத் தோட்டச் சாகுபடி செய்து கொண்டும் ஒருவேளை பூசணிக்காய், முலாம்பழம் முதலிய தோட்டக் காய்கறிகளைப் பயிர் செய்து கொண்டும் இருந்தார்கள். அவர்களுடைய உணவின் மிகவும் கணிசமான பகுதியை இவை அளித்தன. அவர்கள் மரப் பலகைகளால் அரண் செய்யப்பட்ட கிராமங்களில் மரத்தினால் அமைக்கப்பட்ட வீடுகளில் வசித்தார்கள். வட மேற்கிலிருந்த இனக்குழுக்கள், குறிப்பாக கொலம்பியா நதிப் பிரதேசத்தில் வசித்தவர்கள் இன்னும் காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டத்திலேயே இருந்தார்கள். அவர்களுக்கு மண் பாண்டக் கலையோ, எவ்விதமான பயிர் சாகுபடியோ தெரியாது. மறு புறத்தில், நியூ மெக்சிகோவைச் சேர்ந்த புயேப்ளோ செவ்விந்தியர்கள்[5] எனப்பட்டவர்களும் மெக்சிகர்களும் மத்திய அமெரிக்கர்களும் பெருவியர்களும் ஐரோப்பியர்களுடைய ஆட்சி தொடங்கிய காலத்தில் அநாகரிக நிலையின் இடைக்கட்டத்திலே இருந்தார்கள். அவர்கள் அடோபுகள் அல்லது கற்களைக் கொண்டு கோட்டை போல் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தார்கள். அவர்கள் செயற்கையான பாசனமுள்ள தோட்டங்களில் மக்காச்சோளத்தையும் தட்பவெப்ப நிலைக்கும் இடத்துக்கும் தக்கபடி உண்ணத் தக்க வெவ்வேறு பயிர் வகைகளையும் விவசாயம் செய்தார்கள்; அவை அவர்களுக்குப் பிரதான உணவுத் தோற்றுவாயாக இருந்தன. மேலும், அவர்கள் ஒரு சில மிருகங்களையும் பழக்கி வைத்திருந்தனர். மெக்சிகர்கள் வான்கோழியையும் இதர பறவைகளையும் பழக்கி வைத்திருந்தார்கள். பெருவியர்கள் லாமா என்ற மிருகத்தைப் பழக்கி வைத்திருந்தார்கள். அது மட்டுமன்றி அவர்கள் உலோகத்தைப் பண்படுத்தவும் அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இரும்பைப் பற்றித் தெரியாது. அவர்கள்

கல் ஆயுதங்களையும் கற்கருவிகளையும் இன்னும் கைவிடாதிருந்ததற்கு இது ஒரு காரணமாகும். அங்கே ஸ்பெயின் நாட்டாரின் ஆட்சி ஏற்பட்டு அவர்கள் மேற்கொண்டு சுதந்திரமாக வளர்ச்சியடைவது நிறுத்தப்பட்டது.

கிழக்குக் கோளார்த்தத்தில் பாலும் இறைச்சியும் தரக் கூடிய மிருகங்களைப் பழக்குவதிலிருந்து அநாகரிக நிலையின் இடைக்கட்டம் ஆரம்பமாயிற்று. இந்தக் கட்டத்தில் மிகவும் பிந்திய காலம் வரை பயிர் சாகுபடி யாருக்கும் தெரியவில்லை என்று தோன்றுகிறது. கால் நடைகளைப் பழக்கி வளர்த்தல், பெரிய மந்தைகளைத் திரட்டியமைத்தல் ஆகியவை ஆரியர்களையும் செமைட்டுகளையும் எஞ்சிய அநாகரிக மக்கள் திரளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. கால்நடைகளின் பெயர்கள் ஐரோப்பிய ஆரியர்களுக்கும் ஆசிய ஆரியர்களுக்கும் இன்னும் பொதுவாகவே இருந்து வருகின்றன; ஆனால் சாகுபடி செய்யத் தக்க பயிர்களின் பெயர்கள் பொதுவாக இருப்பது மிகவும் அரிதாகும்.

கால்நடை மந்தைகளை அமைத்தல் வசதியுள்ள இடங்களில் மேய்ச்சல் வாழ்க்கைக்கு இட்டுச் சென்றது செமைட்டுகள் மத்தியில் இவ்வாழ்க்கை யூப்ரடீஸ், டைக்ரிஸ் நதிகளின் புல்வளமிக்க சமவெளிப் பிரதேசங்களில் ஏற்பட்டது. ஆரியர்களிடையில் இது இந்தியா, ஆக்ஸஸ் நதி, ஜக்ஸார்தஸ் நதி*, டான் நதி, நீப்பர் நதி ஆகியவற்றின் புல்வளமிக்க சமவெளிப் பிரதேசங்களிலும் ஏற்பட்டது. மிருகங்களைப் பழக்குதல் இப்படிப்பட்ட மேய்ச்சல் நிலங்களின் எல்லைகளில்தான் முதன் முதலாக நடைபெற்றிருக்க வேண்டும். ஆகவேதான் மேய்ச்சல் வாழ்க்கையைக் கடைப்பிடித்த மக்களினங்கள், உண்மையில் மனிதகுலத்தின் தொட்டிலாக இருந்திருக்க முடியாத பிரதேசங்களிலிருந்து தோன்றின, மேலும், அவர்களுடைய காட்டுமிராண்டி முன்னோர்களும் அநாகரிக நிலையின் கடைக்கட்டத்திலிருந்த மக்களும் கூட அநேகமாக வாழ்வதற்குத் தகுதியற்ற பிர

* —தற்காலத்தில் அமுதர்யா நதி மற்றும் சிர்தர்யா நதி.—ப-ர்.

தேசங்களிலிருந்து வந்தன என்று பிற்காலத் தலைமுறையினர் கருதினார்கள். இதையே மாற்றிச் சொல்வதென்றால், அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தைச் சேர்ந்தவர்கள் மேய்ச்சல் வாழ்க்கையில் ஈடுபட்ட பிறகு புல்லும் நீரும் நிறைந்த சமவெளிப் பிரதேசங்களைத் தாமாகவே கைவிட்டுத் தமது முன்னோர்கள் வசித்த காட்டுப் பிரதேசங்களுக்குத் திரும்பிச் சென்று விட வேண்டுமென்று என்றைக்குமே கருதியிருக்க மாட்டார்கள். ஆரியர்களும் செமைட்டுகளும் மேலும் வடக்கிலும் மேற்கிலும் துரத்தப்பட்ட பொழுது கூட மேற்கு ஆசிய, ஐரோப்பியக் காட்டுப் பிரதேசங்களில் அவர்கள் நிலையாகக் குடியேற முடியாது; தானியங்களைச் சாகுபடி செய்து தமது கால்நடைகளுக்கு அந்த சாதகக் குறைவான மண்ணில் தீவனம் அளிக்க முடிந்த பிறகு, குறிப்பாக அங்கே குளிர்காலத்தைக் கழிக்க முடிந்த பிறகுதான் அவர்கள் அந்தப் பிரதேசங்களில் நிலையாகக் குடியேற முடிந்தது. முக்கியமாக கால்நடைகளுக்குத் தீவனம் அளிக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டுத்தான் தானியச் சாகுபடி இங்கே கொண்டுவரப்பட்டது, சிறிது காலத்துக்குப் பிறகுதான் அது மனித ஊட்டத்துக்கு முக்கியமாயிற்று என்பதே அநேகமாக உண்மையாக இருக்கும்.

ஆரியர்களும் செமைட்டுகளும் தம்முடைய உணவில் இறைச்சி, பால் ஆகியவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொண்டதும் குழந்தைகள் வளர்ப்பில் இந்த உணவு ஏற்படுத்திய அனுகூலமான விளைவுகளும் இந்த இரண்டு இனங்களின் உயர்ந்த வளர்ச்சியை ஒருவேளை விளக்கக் கூடும். உண்மையாகப் பார்த்தால், அநேகமாகத் தாவர உணவை மட்டும் உட்கொள்கின்ற நிலைக்கு வந்து விட்ட நியூ மெக்சிகோவைச் சேர்ந்த புயேப்ளோ செவ்விந்தியர்களுடைய மூளை அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தில் இருக்கின்ற, இறைச்சியையும் மீனையும் அதிகமாகச் சாப்பிடுகின்ற செவ்விந்தியர்களுடைய மூளையை விடச் சிறியதாகும். இது எப்படி இருந்தாலும் இந்தக் கட்டத்தில் மனித இறைச்சியைத் தின்னும் பழக்கம் படிப்படியாக மறைந்து விடுகிறது; அது ஒரு மதச் சடங்காக அல்லது அநேகமாக அதைப் போலிருக்கின்ற மாந்திரீகமாக மட்டுமே எஞ்சி நிற்கிறது.

இ) தலைக்கட்டம். இது இரும்புக் கனியம் உருக்கப் படுவதிலிருந்து தொடங்குகிறது. எழுத்துகளைக் கண்டு பிடித்தல், இலக்கிய ஆவணங்களுக்கு அதைப் பயன் படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தக் கட்டம் நாகரிக நிலைக்கு முன்னேறுகிறது. நாம் முன்னர் பார்த்தபடி, இக்கட்டம் கிழக்குக் கோளார்த்தம் ஒன்றில் மட்டுமே சுயேச்சையாகக் கடக்கப்பட்டது. இக்கட்டத்தில் உற் பத்தியின் முன்னேற்றம் முந்திய கட்டங்கள் அனைத்தின் மொத்த உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாகும். வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்கர்களும் ரோமாபுரி நிறுவப்படு வதற்குச் சற்று முன்பிருந்த இத்தாலிய இனக்குழுக்களும் டாசிட்டஸ் காலத்திய ஜெர்மானியர்களும் வைக்கிங்கு களின் காலத்திய நார்மன்களும் இந்தக் கட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மாடுகள் இழுத்துச் செல் கின்ற இரும்புக் கலப்பைக் கொழுவை நாம் இங்குதான் முதலில் சந்திக்கிறோம். இது பரந்த அளவில் நிலத்தை உழுது பண்படுத்துவதைச் சாத்தியமாக்கிற்று. மேலும், அன்றைய நிலைமைகளில், உயிர்வாழ்வதற்குரிய சாதனங் கள் நடைமுறையில் வரம்பற்ற விதத்தில் அதிகரிப்பதை யும் சாத்தியமாக்கிற்று. இது சம்பந்தமாக, காடுகள் வெட்டித் திருத்தப்பட்டு வயல்களாகவும் மேய்ச்சல் நிலங் களாகவும் மாற்றப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இரும்புக் கோடரியும் மண்வெட்டியும் இல்லாமல் இதுவும் விரிந்த அளவில் சாத்தியமல்ல. இத்துடன் மக்கள்தொகை யும் வேகமாக அதிகரித்தது; சிறு பிரதேசங்களில் அடர்த் தியான மக்கள்தொகைப் பெருக்கமும் ஏற்பட்டது. நிலத்தை உழுது பயிரிடுகின்ற காலத்துக்கு முன்னால் மிகவும் அசாதாரணமான சந்தர்ப்பங்கள்தான் ஒரே மத்தியத் தலைமையின் கீழ் ஐந்து லட்சம் மக்களைத் திரட்டியிருக்க முடியும். அநேகமாக ஒருபோதும் இப்படி நடைபெறவில்லை.

நாம் ஹோமரின் கவிதைகளில், குறிப்பாக இலியாத் காவியத்தில் அநாகரிக நிலையின் தலைக்கட்டம் உச்சியி லிருப்பதைக் காண்கிறோம். மேம்படுத்தப்பட்ட இரும்புக் கருவிகள், துருத்திகள், மாவு அரைக்கும் திரிகை, குயவ னின் சக்கரம், எண்ணெய் மற்றும் மது தயாரித்தல்,

உலோகத் தயாரிப்பு ஒரு கலையாக வளர்ச்சி பெறுதல், பார வண்டிகள், யுத்த ரதங்கள், மரப் பலகைகள் மற்றும் மரச் சட்டங்களைக் கொண்டு கப்பல் கட்டுதல், கட்டிடச் சிற்பம் கலையாக வளரத் தொடங்கிய நிலை, ஸ்தூபி களும் கொத்தளங்களும் அமைந்த மதில் சுவர்கள் சூழ்ந்த நகரங்கள், ஹோமரின் காவியங்கள் மற்றும் கிரேக்கப் புராணம் முழுமையும்—இவை கிரேக்கர்கள் அநாகரிக நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு மாறி வந்த இடைக் காலத்தில் கொண்டுவந்த பாரம்பரியச் செல்வத்தில் முக்கியமானவை ஆகும். ஹோமர் சித்திரித்த கிரேக்கர் கள் எந்தக் கலாசாரக் கட்டத்திலிருந்து அதை விட மேலான கட்டத்துக்கு முன்னேறுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்களோ, அந்தக் கட்டத்தின் வாயிற்படி யில் கால் வைக்கத் தொடங்கியிருந்த ஜெர்மானியர் களைப் பற்றி சீஸரும் டாசிட்டசும் வர்ணித்திருக்கிறார் கள். கிரேக்கர்களின் மேற்குறிப்பிட்ட பாரம்பரியத்துடன் இந்த வர்ணனைகளை ஒப்புநோக்கினால், அநாகரிக நிலை யின் தலைக்கட்டத்தில் உற்பத்தி எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருந்தது என்று நாம் பார்க்கக் கூடும்.

மனிதகுலம் காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை ஆகியவற்றின் வழியே நாகரிக நிலையின் ஆரம்பத்தை எட்டியுள்ள பரிணாமத்தை இங்கு நான் மார்கனைப் பின்பற்றிச் சித்திரித்திருக்கிறேன். இந்தச் சித்திரத்தில் புதிதான, இன்னும் முக்கியமாக, மறுக்கப்பட முடியாத கூறுகள் ஏற்கெனவே மண்டிக் கிடக்கின்றன. அவை நேரடியாக உற்பத்தியிலிருந்து பெற்றவை என்பதால் மறுக்கப்பட முடியாதவை என்கிறோம். எனினும் நமது பயணத்தின் முடிவில் காணப் போகும் சித்திரத்துடன் ஒப்புநோக்கும் பொழுது இது மங்கலாகவும் சொற்பமாக வும் தோன்றும். அநாகரிக நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு மாறி வந்த இடைக்கால மாற்றத்தைப் பற்றி யும் அவ்விரண்டுக்கும் இடையிலுள்ள குறிப்பிடத்தக்க வேறுபாட்டைப் பற்றியும் ஒரு முழுத் தோற்றத்தைக் காட்டுவது சாத்தியப்படும். தற்சமயத்துக்கு மார்கனின் காலவரிசை முறையைப் பின்வருமாறு நாம் பொதுமைப் படுத்த முடியும்: காட்டுமிராண்டி நிலை—உபயோகிப் பதற்குத் தயாராக இருந்த இயற்கைப் பொருட்களை

உபயோகிப்பதே மேலோங்கியிருந்த ஒரு நிலை; மனிதன் உற்பத்தி செய்த பொருட்கள், பிரதானமாக, இப்படி உபயோகிப்பதற்கு வசதியாக இருந்த கருவிகளே ஆகும். அநாகரிக நிலை—கால்நடை வளர்ப்பு, நிலத்தில் பயிரிடுதல் ஆகியவை குறித்த அறிவைப் பெற்ற கட்டம் இது; மனித நடவடிக்கைகளின் மூலமாக இயற்கையின் உற்பத்தித் திறனைப் பெருக்குகின்ற வழிமுறைகள் இக் கட்டத்தில் கற்றுக் கொள்ளப்பட்டன. நாகரிக நிலை—இயற்கைப் பொருட்களை மேலும் பண்படுத்திக் கொள்வது பற்றி, தொழில் மற்றும் கலையைப் பற்றி அறிவைப் பெற்ற கட்டம் இது.

## II

## குடும்பம்

மார்கன் தன்னுடைய வாழ்க்கையில் பெரும் பகுதியை இராகோஸ் மக்கள் மத்தியில் கழித்தார். அவர்கள் நியூ யார்க் மாநிலத்தில் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் (செனீகா என்ற) ஒரு இனக்குழுவினர் அவரைச் சுவீகரித்து ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே இருந்த இரத்த உறவுமுறை அவர்களுடைய மெய்யான குடும்ப உறவுமுறைகளுக்கு முரண்பட்டிருந்தது என்பதை அவர் கண்டார். திருமணம் ஒவ்வொரு ஜோடிக்கிடையே நடைபெற்றது. இரு தரப்பினரும் திருமண உறவைச் சுலபமாக ரத்து செய்து விடலாம். இதை ''இணைக் குடும்பம்'' என்று மார்கன் குறிப்பிட்டார். அவர்களிடம் இத்திருமண முறை விதியாக இருந்தது. இத்திருமண ஜோடியின் குழந்தைகளை எல்லோரும் அறிந்திருந்தார்கள், அடையாளம் கண்டு கொண்டிருந்தார்கள். தகப்பனார், தாயார், மகன், மகள், சகோதரன், சகோதரி என்று யார், யாரைக் குறிப்பிட வேண்டும் என்பது பற்றிச் சந்தேகம் எதுவும் எழ முடியாது. ஆனால் அச்சொற்கள் எதார்த்தத்தில் உபயோகிக்கப்பட்டதோ வேறுவிதமாக இருந்தது. ஓர் இராகோஸ் தனது சொந்தக் குழந்தைகளை மட்டும் மகன், மகள் என்று அழைப்பதில்லை; அவர் தனது சகோதரனின் குழந்தைகளையும் தன்னுடைய மகன், மகள் என்றே அழைக்கிறார். அவர்களும் அவரை அப்பா என்றே அழைக்கிறார்கள். மறு பக்கத்தில், அவர் தனது சகோதரியின் குழந்தைகளை மருமகன், மருமகள் என்று அழைக்கிறார்; அவர்கள் அவரை மாமா என்று அழைக்கிறார்கள். இதற்கு எதிரிடையாக, ஓர் இராகோஸ் பெண் தனது சகோதரிகளின் குழந்தைகளைத் தனது சொந்தக் குழந்தைகளுடன்

சேர்த்துத் தன் மகன், மகள் என்றே அழைக்கிறாள்; அவர்களும் அவளை அம்மா என்றே அழைக்கிறார்கள். மறுபக்கத்தில், அவள் தன்னுடைய சகோதரர்களின் குழந்தைகளை மருமகன், மருமகள் என்று அழைக்கிறாள்; அவர்கள் அவளை அத்தை என்று அழைக்கிறார்கள். இதைப் போலவே சகோதரர்களின் குழந்தைகள் ஒருவரையொருவர் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்று அழைத்துக் கொள்கிறார்கள்; சகோதரிகளின் குழந்தைகள் இதைப் போலவே நடந்துக்கொள்கிறார்கள். இதற்கு எதிரிடையாக, ஒரு பெண்ணின் குழந்தைகளும் அவளுடைய சகோதரனுடைய குழந்தைகளும் ஒருவரையொருவர் தமது பெற்றோரின் உடன்பிறந்தாரின் சேய் என்று அழைக்கிறார்கள். இவை அர்த்தமில்லாத வெறும் சொற்களல்ல; ஆனால் இரத்த உறவுமுறையின் நெருங்கிய தன்மை மற்றும் விலகிய தன்மை, சமத்துவம் மற்றும் சமத்துவமின்மையைப் பற்றி நடைமுறையில் அமுலில் இருக்கின்ற கருத்துகளைக் குறிக்கின்ற சொற்களாகும். இக்கருத்துகள் முழுமையாக உருவாக்கப்பட்ட இரத்த உறவுமுறைக்கு அடிப்படையாகப் பயன்படுகின்றன. ஒரு தனிநபரது நூற்றுக்கணக்கிலே வேறுபட்ட உறவுகளை இது குறிப்பிட்டுச் சொல்ல முடியும். மேலும், இம்முறை எல்லா அமெரிக்க செவ்விந்தியர்களிடையிலும் முழு சக்தியுடன் அமுலில் இருப்பது மட்டுமன்றி (இதற்கு விதிவிலக்கு ஏதேனும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை) இந்தியாவின் ஆதிக்குடியினர் மத்தியிலும், தக்கணப் பிரதேசத்திலுள்ள திராவிட இனக்குழுக்கள், இந்துஸ்தானத்திலுள்ள கௌரா இனக்குழுக்கள் ஆகியோர் மத்தியிலும் அநேகமாக மாற்றமின்றி நிலவி வருகிறது. தென்னிந்தியாவிலுள்ள தமிழர்கள் மத்தியிலும் நியூயார்க் மாநிலத்திலுள்ள செனீகா இராகோஸ்கள் மத்தியிலும் இரத்த உறவுமுறையைக் குறிக்கும் சொற்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட உறவுகள் விஷயத்தில் இன்றும் கூட ஒன்றையே குறிக்கின்றன. எல்லா அமெரிக்க செவ்விந்தியர்களிடையிலும் இருப்பதைப் போல, இந்தியாவிலுள்ள இந்த இனக்குழுக்களிடையில் இருக்கின்ற குடும்ப வடிவத்திலிருந்து தோன்றும் உறவுகள் இரத்த உறவுமுறைக்கு முரண்பட்டிருக்கின்றன.

இதை விளக்குவது எப்படி? காட்டுமிராண்டி நிலையிலும் அநாகரிக நிலையிலும் எல்லா மக்களினங்களின் சமூக அமைப்பிலும் இரத்த உறவுமுறை நிர்ணயமான பாத்திரம் வகிக்கிறது. ஆகவே அவ்வளவு விரிந்து பரந்து கிடக்கின்ற ஓர் அமைப்பை வெறும் சொற்றொடர்களினால் விளக்கி விட முடியாது. பொதுவாக அமெரிக்கா முழுவதிலும் இருந்து வருகின்ற ஓர் அமைப்பு அது. ஆசியாவில் முற்றிலும் வேறுபட்ட இனத்தைச் சேர்ந்த மக்களினங்களிடையிலும் அது இருக்கிறது. அதன் ஏறத்தாழ வித்தியாசப்பட்ட வடிவங்கள் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா முழுவதிலும் மண்டிக் கிடக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்பை வரலாற்று ரீதியாக விளக்குவது அவசியம். உதாரணமாக, மாக்லென்னான் முயற்சி செய்ததைப் போல அதைத் தட்டிக் கழிக்க முடியாது. தந்தை, குழந்தை, சகோதரன், சகோதரி என்னும் சொற்கள் வெறும் மரியாதையைக் குறிக்கின்ற பட்டங்கள் அல்ல. அவை முற்றிலும் திட்டவட்டமான, மிகவும் கறாரான பரஸ்பரக் கடமைகளைத் தாங்கியுள்ளன. அந்தக் கடமைகளின் முழுமை இந்த மக்களினங்களின் சமூக அமைப்பில் முக்கியமான பகுதியாக இருக்கிறது. அதற்குரிய விளக்கமும் கண்டுபிடிக்கப்பட்டது. மிகவும் பிந்திய காலமான இந்த நூற்றாண்டின் முதற் பாதியில் கூட சான்ட்விச் (ஹவாய்) தீவுகளில் ஒரு குடும்ப வடிவம் நிலவியது. அமெரிக்க மற்றும் பண்டை இந்திய இரத்த உறவுமுறைகள் கோருகின்ற அதே மாதிரியான தாய், தந்தையர்களையும் சகோதரர், சகோதரிகளையும் மகன், புதல்வியரையும் மாமா, அத்தைமார்களையும் மருமகன், மருமகள்களையும் அது கொண்டிருந்தது. ஆனால் இதில் அதிசயம் என்னவென்றால், ஹவாய்த் தீவுகளில் நிலவிய இரத்த உறவுமுறையும் அங்கு எதார்த்தத்தில் நிலவிய குடும்ப வடிவத்துடன் முரண்பட்டிருந்ததுதான். அங்கே, சகோதரர், சகோதரிகளின் குழந்தைகள் எல்லோரும் விதிவிலக்கின்றி சகோதரர், சகோதரிகளாகவும் தங்களுடைய தாயார் மற்றும் அவளுடைய சகோதரிகளுடைய அல்லது தங்களுடைய தகப்பனார் மற்றும் அவருடைய சகோதரர்களுடைய பொதுவான குழந்தைகளாக மட்டுமன்றி தமது பெற்றோர்களின் எல்லாச்

சகோதரர், சகோதரிகளுடைய பொதுவான குழந்தை களாகவும் கருதப்பட்டனர். அமெரிக்க ரகத்தைச் சேர்ந்த இரத்த உறவுமுறைக்கு முன்னால் மிகவும் தொன்மையான குடும்ப வடிவம் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று கூறி னால்—அது அமெரிக்காவில் இப்பொழுது இல்லை, ஆனால் ஹவாய்த் தீவுகளில் இன்னும் மெய்யாகவே இருந்து வரு கிறது—மறு பக்கத்தில், ஹவாய் ரகத்தைச் சேர்ந்த இரத்த உறவுமுறை இன்னும் அதிகத் தொன்மையான ஆதிமனிதக் குடும்ப வடிவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அது எங்காவது இன்னும் நிலவுவதாக நிரூபிக்க முடியா தென்றாலும் அது இருந்திருக்க **வேண்டும்**; ஏனென்றால், அது இல்லாமல் அதற்குப் பொருத்தமான ஒரு இரத்த உறவுமுறை தோன்றியிருக்க முடியாது.

''குடும்பம் என்பது இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. அது ஒருபோதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறுகின்ற பொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது. அதற்கு மாறாக, இரத்த உறவுமுறைகள் இயக்கமற்றவை. அவை குடும்பம் அடை கின்ற முன்னேற்றத்தை நீண்ட இடைவெளி விட்டுக் குறித்து வைக்கின்றன. குடும்பம் தீவிரமாக மாற்ற மடைந்து விட்ட பொழுது மட்டுமே அவையும் தீவிர மாக மாறுகின்றன'' என்று மார்கன் கூறுகிறார்.

''இது அரசியல், சட்ட, சமய மற்றும் தத்துவஞான அமைப்புகளுக்கும் பொதுவாகவே பொருந்தும்'' என்று மார்க்ஸ் இத்துடன் சேர்த்துச் சொல்கிறார். குடும்பம் தொடர்ந்து வளர்ந்து வரும் பொழுது இரத்த உறவு முறை கட்டிதட்டிப் போகிறது. பின்னால் சொல்லப் பட்டது வழக்கமான வடிவத்தில் தொடர்ந்து இருக்கும் பொழுது குடும்பம் அதை மீறி வளர்ச்சியடைகிறது. பாரிஸ் நகரத்துக்கு அருகில் கண்டெடுத்த ஒரு மிருகத்தின் எலும்புக் கூட்டின் வளர்ப்புப் பை எலும்புகளைக் கொண்டு அது வளர்ப்புப் பையில் குட்டிகளை வைத்துப் பாலூட் டும் மிருகத்தின் எலும்புக் கூடு என்றும் தற்காலத்தில் இல்லாத வளர்ப்புப் பையுறுப்புள்ள அந்த மிருகம் ஒரு காலத்தில் அங்கு வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் குவியே

எப்படி உறுதியாக முடிவு செய்தாரோ, அதைப் போல நாமும் வரலாற்று வழியே மாற்றித் தரப்பட்ட ஒரு இரத்த உறவுமுறையைக் கொண்டு அதற்குப் பொருத்தமாக உள்ள, இன்று வழக்கிலில்லாத ஒரு குடும்ப வடிவம் ஒரு காலத்தில் இருந்தது என்று அதே உறுதியுடன் முடிவு செய்ய இயலும்.

இரத்த உறவுமுறைகள் என்றும் குடும்ப வடிவங்கள் என்றும் மேலே குறிப்பிட்டோமே, அவை இக்காலத்தில் இருந்து வருவனவற்றிலிருந்து மாறுபட்டுள்ளன. எப்படி என்றால், ஒவ்வொரு குழந்தைக்கும் சில தகப்பனார்களும் தாயார்களும் உண்டு. ஹவாய்த் தீவுகளிலுள்ள குடும்பத்துடன் பொருந்துகின்ற அமெரிக்க இரத்த உறவுமுறைப்படி, சகோதரனும் சகோதரியும் ஒரே குழந்தைக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருக்க முடியாது. அதற்கு மாறாக, ஹவாய்த் தீவுகளின் இரத்த உறவுமுறைப் படி பார்த்தால், இதுவே விதியாக இருந்த ஒரு குடும்பம் இருந்திருக்க வேண்டும். இது வரை பொது வாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த குடும்ப வடிவங்களுக்கு நேர் முரணாக இருக்கின்ற குடும்ப வடிவங்களின் வரிசை நம் முன்னே எதிர்ப்படுகின்றது. மரபு வழிப்பட்ட கருத் தோட்டத்துக்கு ஒருதார மண முறையும் அத்துடன் தனிப்பட்ட ஆண்கள் தரப்பில் பலதார மண முறையும் ஒருவேளை தனிப்பட்ட பெண்களின் தரப்பில் பல கணவர் மண முறையும் மட்டுமே தெரியும். அதிகாரச் சார்புள்ள சமூகம் விதிக்கின்ற வரம்புகள் நடைமுறையில் சந்தடி யில்லாமல், வெட்கமில்லாமல் மீறப்படுகின்றன என்ற உண்மையை அது பேசாமல் மறைக்கிறது. ஒழுக்கம் பேசு கின்ற ஃபிலிஸ்தைன்களின் வழக்கமே இதுதான். இதற்கு மாறாக, பூர்விகச் சமூகத்தின் வரலாறு பற்றிய ஆராய்ச்சி நமக்குக் காட்டுவதென்ன? ஆண்கள் பலதார மண முறை யிலும் அதே சமயத்தில் பெண்கள் பல கணவர் மண முறை யிலும் வாழ்கின்ற நிலைமைகளை இது வெளிப்படுத்து கிறது. ஆகவே அவர்கள் ஒவ்வொருவருடைய குழந்தை களும் அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள் என்று கருதப்படுகிறது. இந்த நிலைமைகளும் தம் முறைக்கு ஒரு முழு வரிசையான மாற்றங்களுக்கு ஆளாகி, இறுதி யில் ஒருதார மண முறையிலே வந்து முடிகின்றன. இந்த

மாற்றங்களின் தன்மை எப்படிப்பட்டதென்றால், பொது மணம் என்ற பிணைப்பில் உள்ள மக்கள் வட்டம்—ஆதியில் இது மிகவும் விரிவாக இருந்தது—மேன்மேலும் குறுகிக் கொண்டே வந்து கடைசியில் ஒரு ஜோடி தம்பதிகள் மட்டுமே மிஞ்சுகிறார்கள். இந்த நிலைதான் இன்று மேலோங்கியிருக்கிறது.

இவ்வாறு பின்னோக்கிச் சென்று குடும்பத்தின் வரலாற்றை நிர்மாணித்த மார்கன், தன்னுடைய சகாக்களில் பெரும்பான்மையோருடைய கருத்துக்கிணங்க, ஓர் ஆதிக் கட்டத்துக்கு வந்து சேர்ந்தார். அக்கட்டத்தில் ஒரு இனக் குழுவிற்குள் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவியது. ஆகவே, ஒவ்வொரு பெண்ணும் சம அளவில் ஒவ்வொரு ஆணுக்கும் சொந்தமாக இருந்தாள். அதே போல் ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணுக்கும் உரியவராக இருந்தான். ஆதியில் இப்படிப்பட்ட நிலைமை இருந்ததைப் பற்றி சென்ற நூற்றாண்டிலிருந்தே பேச்சு இருந்திருக்கிறது. ஆனால் அது மிகவும் பொதுப்படையான பேச்சாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த நிலைமையில் அக்கறை காட்டி அதன் அடையாளக் குறிகளைப் பரம்பரையான சரித்திரக் கதைகளிலும் சமயக் கதைகளிலும் முதலில் தேடியவர் பாஹொஃபென் ஆவார். இது அவர் ஆற்றிய மாபெரும் பணிகளில் ஒன்றாகும். அவர் கண்டுபிடித்த அடையாளக் குறிகள் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய ஒரு சமூகக் கட்டத்துக்கு நம்மை இட்டுச் செல்லவில்லை, அதற்கு மிகவும் பிற்காலத்தில் நிலவிய குழு மணம் என்ற வடிவத்துக்குத்தான் நம்மை இட்டுச் சென்றன என்பதையும் இன்று நாம் அறிவோம். அந்த ஆதி காலச் சமூகக் கட்டம் மெய்யாகவே இருந்தது என்றால், அது முன்னர் நிலவியதற்குரிய நேரடி சாட்சியங்கள் பிற்பட்ட காட்டுமிராண்டிகள் மத்தியில், சமூகப் புதைபடிவங்களில் கிடைக்கும் என்று சிறிதும் எதிர்பார்க்க முடியாதபடி அது அவ்வளவு தொன்மையான சகாப்தத்தைச் சேர்ந்ததாகும். இந்தப் பிரச்சினையை ஆராய்ச்சியின் முன்வரிசையில் வைத்த பெருமை பாஹொஃபெனைச் சேரும்.*

---

* பாஹொஃபென் தான் கண்டுபிடித்த அல்லது அனுமானித்த விஷயத்தை எவ்வளவு குறைவாகப் புரிந்து

மனிதகுலத்தின் பாலியல் வாழ்க்கையில் இந்த ஆரம்பக் கட்டம் இருந்ததை மறுப்பது சமீப காலத்தில் வழக்கமாகி விட்டது. மனிதகுலத்தை இந்த ''அவமானத்திலிருந்து'' பாதுகாப்பது இதன் நோக்கமாகும். இதற்கு நேரடி சாட்சியங்கள் இல்லை என்று கூறுவதுடன் மற்ற மிருகராசிகளின் உதாரணத்தையும் குறிப்பிடுகிறார்கள். லெதூர்னோ மிருகங்களிலிருந்து எண்ணற்ற விவரங்களைத் திரட்டினார் (**திருமணம், குடும்பம் ஆகியவற்றின் பரிணாமம்**, 1888). மிருகராசியிலும் கூடப் பூரணமாக வரைமுறையற்ற புணர்ச்சி என்பது அதன் கீழ்நிலைக் கட்டத்துக்கு உரியது என்று அந்த விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றனவாம். எனினும் இந்த விவரங்கள் அனைத்தையும் கொண்டு நான் செய்யக் கூடிய ஒரே முடிவு இதுதான்: மனிதனையும் அவனுடைய ஆதிகால வாழ்க்கை நிலைமைகளையும் பொறுத்தமட்டில் இந்த விவரங்கள் எதையும் சிறிதளவும் நிரூபிக்கவில்லை. முதுகெலும்பு உள்ள மிருகங்கள் நெடுங்காலம் ஜோடியாக இணைந்திருப்பதை உடலியல் காரணங்களைக் கொண்டு விளக்க முடியும். உதாரணமாக, பறவை

---

கொண்டார் என்பதற்கு இந்த ஆதிகால நிலையை அவர் **பொதுமகளிர் முறை** என்று வர்ணித்ததே சான்றாகும். திருமணமாகாத அல்லது ஒருதார மணம் புரிந்து கொண்ட ஆண்களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் நடந்த கலவியைக் குறிப்பதற்கு கிரேக்கர்கள் இந்தச் சொல்லைப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். சமூகத்தில் நிச்சயமான மண முறை ஒன்று வழக்கிலிருப்பதாகவும் அதற்குப் புறம்பாக இத்தகைய கலவி நிகழ்வதாகவும் இந்தச் சொல் எப்பொழுதும் உணர்த்தி வந்திருக்கிறது; குறைந்தபட்சம், நடப்பில் சாத்தியமானது என்ற அளவில் விபசார முறையையும் இச்சொல் குறிக்கும். வேறு எந்தப் பொருளிலும் இச்சொல் ஒருபோதும் உபயோகிக்கப்பட்டதில்லை. மார்கனைப் போலவே நானும் இந்தப் பொருளில்தான் இதை உபயோகிக்கிறேன். வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட ஆண்பெண் உறவுகள் அவ்வக் காலத்தில் மக்களுடைய வாழ்க்கையின் எதார்த்த நிலைமைகளிலிருந்து தோன்றவில்லை, அவர்களுடைய சமயக் கருத்துகளிலிருந்தே தோன்றின என்று பாஹொஃபென் கருதினார். ஆகவே அவருடைய மிகவும் முக்கியமான கண்டுபிடிப்புகள் அவருடைய விசித்திரமான நம்பிக்கையினால் எல்லா இடங்களிலும் நம்ப முடியாத அளவுக்குக் குழப்பப்பட்டிருக்கின்றன. (**எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.**)

களில், பெண் பறவைக்கு அடை காக்கும் காலத்தில் துணை தேவைப்படுகிறது. மாறாத ஒருதார மணத்துக்குப் பறவையினத்திலிருந்து உதாரணங்கள் தருவது மனிதர் களைப் பொறுத்தமட்டில் எதையும் நிரூபிக்காது; ஏனென் றால் மனிதர்கள் பறவையினத்திலிருந்து தோன்றவில்லை. மாறாத ஒருதார மணம்தான் நற்பண்பின் உச்சியைக் குறிக்கும் என்று கருதுவதானால் அப்பொழுது நாடாப் புழுவுக்குத்தான் முதல் பரிசு கொடுக்க வேண்டும். அதன் உடம்பு முழுவதும் ஐம்பது முதல் இருநூறு வரை தனிப் பகுதிகளாக அமைந்திருக்கிறது; அந்த ஒவ்வொரு பகுதி யிலும் தனித்தனியே ஆண் பிறப்புறுப்பும் பெண் பிறப் புறுப்பும் ஜோடியாக இருக்கின்றன. நாடாப்புழு தன் ஒவ் வொரு பகுதியிலும் தனக்குள்ளே புணர்ச்சி செய்தபடி தன் வாழ்நாள் முழுவதையும் கழிக்கிறது. பாலூட்டி வளர்க்கும் மிருக இனத்தை மட்டும் எடுத்துக் கொள்வ தென்றால், அவற்றிடையே வரைமுறையற்ற புணர்ச்சி, குழு மணத்தின் சூசகங்கள், பலதார மணம், ஒருதார மணம் ஆகிய பாலியல் வாழ்க்கை சம்பந்தப்பட்ட எல்லா வடிவங்களையும் நாம் காண்கிறோம். பல கணவர் மண முறை ஒன்று மட்டுமே இல்லை. இதை மனித இனம் ஒன்று தான் சாதிக்க முடிந்தது. நமது மிக நெருங்கிய உறவினர் களான நான்கு கைக் குரங்குகளும் கூட ஆணும் பெண் ணும் குழுவாக இணைவதில் சாத்தியமான சகல வேறு பாடுகளையும் புலப்படுத்துகின்றன. மேலும், இன்னும் நெருங்கி வந்து நான்கு மனிதக் குரங்கு வகைகளை மட் டும் எடுத்துக் கொள்வதென்றால், அவை சில சமயங்களில் ஒருதார மண முறையிலும் சில சமயங்களில் பலதார மண முறையிலும் வாழ்கின்றன என்று மட்டுமே லெதூர்னோவினால் சொல்ல முடிகிறது. ஆனால் ஜிரோ-டெய்லோன் மேற்கோள் காட்டிய சோஸ்யூர் அவை ஒருதார மண வாழ்க்கையில் இருக்கின்றன என்று வலி யுறுத்துகிறார். வெஸ்டர்மார்க் என்பவர் தான் எழுதிய **மனித இனத் திருமணத்தின் வரலாறு** (லண்டன், 1891) என்ற நூலில் மனிதக் குரங்குகளிடையில் ஒருதார மண முறை இருப்பதாக சமீப காலத்தில் வலியுறுத்தியவையும் எவ்விதத்திலும் நிரூபணம் ஆகி விட முடியாது. சுருக்க மாகச் சொன்னால்,

''மற்றபடி, பாலூட்டி வளர்க்கும் பிராணிகளிடையில் அறிவு வளர்ச்சியின் அளவுக்கும் பாலுறவு வடிவத்துக் கும் இடையில் கறாரான சம்பந்தம் எதுவும் அறவே இல்லை''

என்று நேர்மையான லெதூர்னோ ஒத்துக் கொள்கின்ற முறையில்தான் அந்தச் செய்திகள் உள்ளன.

மேலும், எஸ்பினாஸ் என்பவர் (மிருகச் சமூகங்கள், 1877) பட்டவர்த்தனமாகச் சொல்லி விடுகிறார்:

''மிருகங்களிடையே பார்க்கக் கூடிய உன்னதமான சமூகக் குழு மந்தை என்பதாகும். அது குடும்பங்களைத் தன்னுள் கொண்டு அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது; ஆனால் ஆரம்ப முதலாகவே குடும்பமும் மந்தையும் ஒன்றுக்கொன்று முரண்பாட்டில்தான் இருக்கின்றன; குடும் பம் வளர்ந்தால் அந்த அளவுக்கு மந்தை சுருங்குகிறது, மந்தை வளர்ந்தால் அந்த அளவுக்குக் குடும்பம் சுருங்கு கிறது.''

மனிதக் குரங்குகளின் குடும்பங்கள், இதர சமூகக் குழுக்கள் சம்பந்தமாக நமக்கு இறுதி முடிவாக எதுவுமே தெரியாது என்பதை மேற்கூறியவை எடுத்துக்காட்டு கின்றன. செய்திகள் ஒன்றுக்கொன்று நேர்முரணாக இருக் கின்றன. இதில் ஆச்சரியப்படுவதற்குமில்லை. காட்டு மிராண்டி நிலையிலுள்ள மனித இனக்குழுக்களைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் கூட எவ்வளவு முரண் பாடாகவும், விமர்சன முறையில் பரிசீலிக்க வேண்டி யவையாகவும் சலித்துப் பார்க்க வேண்டியவையாகவும் இருக்கின்றன! ஆனால் குரங்குச் சமூகங்களை ஆராய்வது மனிதச் சமூகங்களை ஆராய்வதை விட அதிகக் கடின மாகும். ஆகவே இப்படிப்பட்ட அறவே நம்ப முடியாத செய்திகளிலிருந்து பெறக் கூடிய ஒவ்வொரு முடிவையும் நாம் தற்சமயத்துக்கு நிராகரிக்க வேண்டும்.

எனினும் எஸ்பினாசிடமிருந்து காட்டிய மேற்கோள் இன்னும் சிறப்பான குறிப்பு ஒன்றைத் தருகிறது. உயர்தர மிருகங்களிடையே மந்தையும் குடும்பமும் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கவில்லை, ஆனால் எதிர்நிலையாக இருக்கின்றன. புணர்ச்சி வேட்கைக் காலத்தில் ஆண் மிருகங்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற பொறாமை கூடி

வாழும் ஒவ்வொரு மந்தையையும் எப்படி கட்டுத்தளரச் செய்கிறது அல்லது தற்காலிகமாகக் கலைத்து விடுகிறது என்று எஸ்பினாஸ் துல்லியமாக வர்ணிக்கிறார்.

''எங்கே குடும்பம் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறதோ, அங்கே மந்தைகள் அபூர்வமான விதிவிலக்குகளாக இருக்கின்றன. மறு பக்கத்தில், எங்கே சுயேச்சையான புணர்ச்சி அல்லது பலதார மணம் நிகழ்வது விதியாக இருக்கிறதோ, அங்கே அநேகமாக இயல்பாகவே மந்தை சேர்கிறது.... மந்தையாகச் சேர வேண்டுமென்றால், அதற்குக் குடும்ப உறவுகள் தளர்த்தப்பட்டிருக்க வேண்டும், தனிப்பட்ட சுதந்திரம் மறுபடியும் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் நாம் பறவைகள் மத்தியில் ஒன்றுசேர்ந்த கூட்டங்களைப் பார்ப்பது அபூர்வம்.... மறு பக்கத்தில், பாலூட்டி வளர்க்கும் மிருகங்களிடையில் அநேகமாக ஒன்றுதிரண்ட சமூகங்களைப் பார்க்கிறோம். இங்கே தனி மிருகம் குடும்பத்திற்குள் ஐக்கியமாகி விடுவதில்லை என்பதே இதற்குக் காரணம்.... ஆக, அது தொடங்கும் பொழுது மந்தையின் கூட்டு உணர்ச்சிக்குக் குடும்பத்தின் கூட்டு உணர்ச்சியைக் காட்டிலும் பெரிய எதிரி வேறு இருக்க முடியாது. நாம் பின்வருமாறு சொல்லத் தயங்க வேண்டியதில்லை: குடும்பத்தைக் காட்டிலும் உயர்ந்த சமூக வடிவம் பரிணமித்திருக்கிறது என்றால், அது அடிப்படையான மாற்றங்களுக்கு உள்ளான குடும்பங்களைத் தன்னுள் சேர்த்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மையே அதற்கு ஒரே காரணமாகும். இதே காரணத்தினால்தான் இந்தக் குடும்பங்கள் முன்னை விட மிகவும் சாதகமான சூழ்நிலைமைகளில் பின்னர் தம்மைத் திருத்திக் கொள்ள முடிந்ததும் சாத்தியமாயிற்று'' [எஸ்பினாஸ் எழுதிய முன்குறிப்பிட்ட நூல்; இதை ஜிரோ-டெய்லோன் தாம் எழுதிய **திருமணம், குடும்பம் ஆகியவற்றின் தோற்றம்** *(1884)* என்ற நூலில் 518—520ஆம் பக்கங்களில் மேற்கோள் காட்டுகிறார்].

மனிதச் சமூகங்களைப் பற்றி முடிவுகள் எடுப்பதில் மிருகச் சமூகங்களுக்கும் சிறிதளவு மதிப்பு இருக்கிறது, ஆனால் அது எதிர்மறைப் பொருளில் இருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. நாம் தெரிந்து கொண்டுள்ள வரைக்கும் முதுகெலும்புள்ள மிருக இனத்தைச் சேர்ந்த உயர்தரப் பிராணிகளிடையே பலதார மணம், இணை மணம் ஆகிய இரண்டு குடும்ப வடிவங்கள் மட்டுமே இருந்து வருகின்றன. இவ்விரண்டு வடிவங்களிலும் ஒரே வயது

வந்த ஆண்தான், ஒரே கணவர்தான் அனுமதிக்கப்பட முடியும். ஆணின் பொறாமை குடும்பத்தின் பந்தத்தையும் வரம்புகளையும் குறிக்கிறது; அது மிருகக் குடும்பத்தை மந்தையுடன் சச்சரவிட்டுக் கொள்ளும்படி செய்கிறது. மந்தை என்னும் உயர்தரச் சமூக வடிவம் சில சந்தர்ப்பங்களில் சாத்தியமில்லாததாக ஆக்கப்படுகிறது, வேறு சில சந்தர்ப்பங்களில் தளர்த்தப்படுகிறது அல்லது புணர்ச்சி வேட்கைக் காலத்தில் அறவே கலைக்கப்பட்டு விடுகிறது; அல்லது, அதிகபட்சம் பார்த்தால், ஆணின் பொறாமை மந்தை தொடர்ச்சியாக வளர்வதைத் தடுக்கிறது. மிருகக் குடும்பமும் ஆதிகாலத்திய மனிதச் சமூகமும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை என்று நிரூபிக்க இது ஒன்றே போதும்; மிருக நிலையிலிருந்து படிப்படியாக மேலே வந்து கொண்டிருந்த ஆதிகால மனிதனுக்குக் குடும்பம் என்பதே தெரியாது, அல்லது அதிகபட்சமாகச் சொன்னால், மிருகங்களிடையே இருந்திராத குடும்பம் ஒன்றைப் பற்றி மட்டுமே தெரியும் என்று நிரூபிக்க இது ஒன்றே போதும். மனிதனாக மாறிக் கொண்டுவந்த மிருகம்—எந்த ஆயுதமும் இல்லாத மிருகம்—தனிமையில், சிறிய எண்ணிக்கையில், மந்தை வாழ்க்கையின் உச்ச வடிவமாகிய தனித் தம்பதி வடிவத்தில் உயிர்தப்பி வாழ முடிந்தது. கொரில்லா, சிம்பன்சி என்னும் குரங்குகள் இப்படி வாழ்வதாக வேடர்களின் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு வெஸ்டர்மார்க் கூறுகிறார். மிருக நிலையிலிருந்து வெளிப்பட்டுப் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு, இயற்கை கண்ட மாபெரும் முன்னேற்றத்தைச் சாதிப்பதற்கு மற்றொரு அம்சமும் கூடுதலாகத் தேவைப்பட்டது: தனிமனிதனுடைய தற்காப்புத் திறன் போதாது என்பதால் அதற்கு பதிலாக மனிதக் கூட்டத்தின் ஒன்றுபட்ட பலமும் கூட்டு முயற்சியும் அவசியமாயிற்று. இந்நாளில் மனிதக் குரங்குகள் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போன்ற நிலைமைகளிலிருந்து மனிதக் கட்டத்துக்கு மாறிச் செல்வதை விளக்குவது முற்றிலும் இயலாததே. இந்த மனிதக் குரங்குகள் படிப்படியாக அழிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றவையாக, எப்படியும் சீரழிந்து கொண்டிருக்கின்றவையாக, ஓரத்தில் ஒதுங்கிப் போனவை போல் தோன்றுகின்றன. அவற்றின் குடும்ப வடிவங்

களுக்கும் ஆதிகால மனிதனுடைய குடும்ப வடிவங்களுக்கும் இடையில் ஒப்புமை காட்டி அதன் அடிப்படையில் செய்கின்ற முடிவுகள் அனைத்தையும் நிராகரிப்பதற்கு இது ஒன்றே போதிய காரணமாகும். எனினும் வயது வந்த ஆண்களிடையே பரஸ்பர சகிப்புத் தன்மையும் பொறாமை இல்லாத மனநிலையும் பெரிதான, நிரந்தரமான குழுக்களை நிறுவுவதற்கு முதல் நிபந்தனையாக இருந்தன; இக்குழுக்களிடையிலிருந்துதான் மிருக நிலையிலிருந்து மனித நிலைக்கு முன்னேறுகின்ற மாற்றத்தைச் சாதிக்க முடிந்தது. வரலாற்றின் மறுக்க முடியாத சான்றுகளைக் கொண்ட, இக்காலத்தில் கூட இங்குமங்கும் கண்டு ஆராயப்படக் கூடியதாக உள்ள மிகவும் தொன்மையான, மிகவும் ஆதியான குடும்ப வடிவமாக நாம் எதைப் பார்க்கிறோம்? அது குழு மணமே. இந்த வடிவத்தில் முழுக் குழுக்களாக ஆண்களும் முழுக் குழுக்களாகப் பெண்களும் ஒருவருக்கொருவர் சொந்தமாயுள்ளனர். இந்த வடிவத்தில் பொறாமைக்கு அவ்வளவு அதிக இடம் கிடையாது. மேலும், பின்னால் வந்த வளர்ச்சிக் கட்டத்தில், பல கணவர் மணம் எனப்படுகின்ற, மற்றவற்றிலிருந்து வேறுபட்ட வடிவத்தையும் பார்க்கிறோம். இது எல்லாவிதமான பொறாமை உணர்ச்சிகளுக்கும் இன்னும் பாதகமானது. ஆகவே இது மிருகங்கள் மத்தியில் சிறிதும் இல்லை. எனினும் நமக்குத் தெரிந்த குழு மண வடிவங்களைத் தொடர்ந்து அதற்கேயுரிய சிக்கலான நிலைமைகள் வருவதால் அவை அதற்கு முந்திய, இன்னும் எளிமையான பாலியல் உறவுகள் சம்பந்தப்பட்ட வடிவங்களைக் கட்டாயமாகச் சுட்டிக்காட்டுகின்றன; ஆகவே கடைசியாகப் பார்க்கும் பொழுது, மிருக நிலையிலிருந்து மனித நிலைக்கு மாறிய கட்டத்துக்கும் பொருத்தமான, வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய காலகட்டத்தையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே, மிருகங்களிடையே உள்ள மண வடிவங்களைக் குறித்துப் பேசுவது, அவை எங்கிருந்து நம்மை நிரந்தரமாக இட்டுச் சென்றதாகக் கருதப்பட்டதோ, அதே இடத்துக்கு நம்மைக் கொண்டு வந்து சேர்க்கிறது.

அப்படியானால் வரைமுறையற்ற புணர்ச்சி என்பதற்கு அர்த்தமென்ன? இக்காலத்தில் அல்லது முந்திய

காலங்களில் அமுலிலிருந்த கட்டுப்பாடுகள் இருக்க வில்லை என்பதுதான் அதற்கு அர்த்தம். பொறாமை என்னும் தடுப்பு தகர்ந்து விட்டதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். நிச்சயமானது என்று எதையாவது சொல்வதென்றால், பொறாமை என்பது ஒப்புநோக்கில் பிற்காலத்தில் தோன்றிய ஓர் உணர்ச்சி என்பதுதான். இது முறைகேடான புணர்ச்சி பற்றிய கருத்தோட்டத்திற்கும் பொருந்தும். ஆதியில் சகோதரனும் சகோதரியும் கணவன், மனைவியாக வாழ்ந்தது மட்டுமல்ல, பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் பாலியல் உறவுகள் இருப்பது பல மக்களினங்களில் இன்று கூட அனுமதிக்கப்பட்டு வருகிறது. பேரிங் ஜலசந்தியைச் சேர்ந்த கவியாட்டுகள் மத்தியிலும் அலாஸ்காவுக்கு அருகேயுள்ள கடியாக் தீவில் உள்ள மக்கள் மத்தியிலும் பிரிட்டிஷ் வட அமெரிக்காவின் உள் பிரதேசங்களில் வாழும் டின்னேக்கள் மத்தியிலும் இது நிலவுவதாக பான்கிராஃப்ட் சாட்சியமளிக்கிறார் (வட அமெரிக்காவின் பசிபிக் பிராந்திய மாநிலங்களைச் சேர்ந்த சுதேச இனக்குழுக்கள், 1875, முதல் தொகுதி). சிப்பேவா செவ்விந்தியர்களிடையிலும் சிலி நாட்டிலுள்ள கூகூக்கள் இடையிலும் கரிபியர்கள் மற்றும் இந்தோ சீனாவைச் சேர்ந்த கரேன்களிடையிலும் இதே விஷயத்தைப் பற்றி லெதூர்னோ அறிக்கைகளைத் திரட்டியிருக்கிறார். பார்தியர்கள், பாரசீகர்கள், ஸ்கிதியர்கள், ஹூணர்கள் ஆகியோரைப் பற்றி பண்டைக்கால கிரேக்கர்களும் ரோமானியர்களும் தந்துள்ள செய்திகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. முறைக்கேடான புணர்ச்சி என்ற புதுப்புனைவு (அது நிச்சயமாக ஒரு புதுப்புனைவுதான்; மதிப்பு மிகுந்த புதுப்புனைவு) ஏற்படுவதற்கு முன்னால், பெற்றோர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் இடையில் நிகழும் புணர்ச்சி வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களிடையே நிகழும் புணர்ச்சியை விட—மிகவும் அற்பவாத நாடுகளில் கூட அதிகமான பீதியை உண்டாக்காமலே இது இன்றைக்கும் நிலவுகிறது—அதிக அருவருப்பாக இருக்க முடியாது. உண்மையில், அறுபதுக்கு மேல் வயதாகி மணமாகாதிருந்த பெண்கள் போதிய செல்வம் படைத்திருந்தால் சுமார் முப்பது வயதுள்ள வாலிபர்களை மணந்து கொள்வது அவ்வப்பொழுது நடைபெறுகிறது.

எனினும் நமக்குத் தெரிந்துள்ள குடும்பத்தின் புராதன வடிவங்களுடன் சேர்த்துச் சொல்லப்படும் முறைக்கேடான புணர்ச்சிபற்றிய கருத்தோட்டங்களை—அவை நமது கருத் தோட்டங்களுக்கு முற்றிலும் வேறாக இருப்பது மட்டு மன்றி, பெரும்பாலும் நேர்முரணாகவும் இருக்கின்றன— நீக்கி விடுவோமானால், மிஞ்சுகின்ற பாலியல் உறவை வரைமுறையற்ற புணர்ச்சி என்று மட்டுமே வர்ணிக்க முடி யும். பிற்காலத்தில் வழக்கத்தால் நிறுவப்பட்ட கட்டுப் பாடுகள் இன்னும் ஏற்படவில்லை என்னும் அளவில் அது வரைமுறையற்றது. இதைக் கொண்டு விதரணையற்ற, வரைமுறையற்ற புணர்ச்சி அன்றாட நடைமுறையாக இருந்தது என்று முடிவு செய்வது அவசியமல்ல. குறிப் பிட்ட காலத்துக்கு தனித்தனி ஜோடிகள் அமைவது விலக் கப்படவில்லை. உண்மையைச் சொல்வதென்றால், குழு மண முறையில் கூட அவைதான் பெரும்பான்மையாக உள்ளன. இந்த ஆதி நிலையை மறுப்பவர்களில் கடைசி யாக வந்திருப்பவர் வெஸ்டர்மார்க். குழந்தை பிறக்கின்ற வரை ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்திருக்கும் நிலை ஒவ் வொன்றையும் திருமணம் என்று அவர் வரையறுத்தால், அப்பொழுது இப்படிப்பட்ட திருமணம் வரைமுறை யற்ற புணர்ச்சி நிகழ்கின்ற நிலைமைகளிலும் தாராள மாக ஏற்பட முடியும்; அது வரைமுறையற்ற புணர்ச் சிக்கு, அதாவது பழக்கவழக்கங்களால் புணர்ச்சிக்கு ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் இல்லாத நிலைக்கு முரணாகவும் இருக்காது என்று குறிப்பிட வேண்டும்.

''வரைமுறையற்ற புணர்ச்சியில் தனிநபர்களின் விருப்புவெறுப்புகள் நசுக்கப்படுகின்றன'', ஆகவே ''விப சாரம்தான் அதன் மிகவும் உண்மையான வடிவமாகும்''

என்ற கருத்திலிருந்து வெஸ்டர்மார்க் தொடங்கு கிறார் என்பது உறுதி.

ஆதிகால நிலைமைகளை விபசாரம் என்ற கண்ணா டியை அணிந்து கொண்டு பார்க்கும் வரை அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது என்று தோன்றுகிறது. குழு மண முறையை விவாதிக்கின்ற பொழுது இந்த விஷயத் துக்கு மீண்டும் வருவோம்.

இந்த வரைமுறையற்ற புணர்ச்சி என்ற ஆதிநிலையிலிருந்து அநேகமாக மிகவும் முந்திய ஒரு கட்டத்திலேயே பின்சொல்லப்படுபவை வளர்ந்தன என்று மார்கன் கருதுகிறார்:

1. இரத்த உறவுக் குடும்பம். இது குடும்பத்தின் முதல் கட்டமாகும். இங்கே திருமணம் புரிகின்ற குழுக்கள் தலைமுறை வரிசையிலே வைக்கப்பட்டுள்ளன. குடும்பம் என்ற வரம்புக்குள் அடங்கிய எல்லா தாத்தாக்களும் பாட்டிகளும் பரஸ்பரம் கணவன், மனைவியர் ஆவார்கள். அவர்களின் குழந்தைகளும்—தந்தையர்களும் தாயார்களும்—அதே போல் பரஸ்பரம் கணவன், மனைவியர் ஆவார்கள். இவர்களுடைய குழந்தைகள் ஒருவருக்கொருவர் கணவன், மனைவியராகவுள்ள மூன்றாம் வட்டமாக அமைவார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள்—அதாவது முதலில் சொல்லப்பட்டவர்களின் கொள்ளுப் பேரர்கள், கொள்ளுப்பேத்திகள்—தம் முறைக்கு ஒரு நான்காம் வட்டமாக அமைவார்கள். ஆக, இந்தக் குடும்ப வடிவத்தில், முன்னோர்களும் வழிவந்தோரும், பெற்றோர்களும் குழந்தைகளும் மட்டுமே (இன்றைய முறையில் எடுத்துக் கூறுவதென்றால்) ஒருவருக்கொருவர் திருமண உரிமைகள், கடமைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். சகோதரர்களும் சகோதரிகளும், ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட, மூன்றுவிட்ட, மற்ற சகோதரர்கள், சகோதரிகள் எல்லோரும் பரஸ்பரம் சகோதரர், சகோதரிகள் ஆவார்கள். அந்த ஒரே காரணத்தினால்தான் அவர்கள் பரஸ்பரம் கணவன், மனைவியரும் ஆவார்கள். இந்தக் கட்டத்தில் சகோதரன், சகோதரி என்ற உறவில் உடலுறவு கொள்வதும் சகஜமாக அடங்கியிருந்தது.* இப்படிப்

---

* மார்க்ஸ் 1882இன் வசந்த காலத்தில் தாம் எழுதிய ஒரு கடிதத்தில்[6] வாக்னரின் நிபலுங் இசை நாடகத்தில் ஆதிகாலத்தைப் பற்றிய முழுப் புரட்டுகளை மிகவும் வன்மையாக எதிர்த்தார். ''தன் சகோதரியைத் தன் மனைவி என்று கூறிக் கொண்டு ஒரு சகோதரன் தழுவிக் கொள்வதைப் பற்றி யாராவது கேள்விப்பட்டதுண்டா?''[7] வாக்னர் படைத்த ''காமப் பித்தேறிய கடவுளர்கள்'' இவர்கள். வாக்னர் இந்தக் கடவுளர்களின் காதல் லீலைகளுடன் நவீன கால பாணியில் முறைக்கேடான புணர்ச்சி என்னும் மசாலாவையும் சேர்த்துக் கொடுத்தார். அதற்கு

பட்ட குடும்பத்தை அதன் பிரதிநிதித்துவ வடிவத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால், அதில் ஒரு ஜோடியின் சந்ததியினர் அடங்கியிருப்பார்கள். அந்தச் சந்ததியினரி

---

மார்க்ஸ் பின்வருமாறு பதிலளித்தார்: ''ஆதிகாலத்தில் சகோதரிதான் மனைவியாக இருந்தாள்; அதுதான் ஒழுக்கமாகவும் இருந்தது.'' (1884ஆம் ஆண்டுப் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

வாக்னரின் நண்பரும் அவருடைய ரசிகருமான ஒரு பிரெஞ்சுக்காரர் (போன்னியே) இந்தக் குறிப்பை ஏற்கவில்லை. வாக்னர் தனக்கு முன்மாதிரியாக எடுத்துக் கொண்ட, காலத்தால் முற்பட்ட எட்டாவில், ஓகிஸ்ட் ரெக்காவிலேயே[8] பிரேயாவை லோகி பின்வருமாறு கடிந்து கொள்வதை அவர் சுட்டிக்காட்டுகிறார்: ''நீ கடவுளர்களுக்கு முன்பாக உன் சொந்தச் சகோதரனையே தழுவினாய்''. அந்தக் காலத்துக்கு முன்பே சகோதரன், சகோதரிக்கு இடையில் திருமணம் தடை செய்யப்பட்டிருந்ததென்று அவர் வாதிடுகிறார். பண்டைக்காலப் புராணங்களில் நம்பிக்கை முற்றிலும் அழிந்திருந்த ஒரு காலத்தின் வெளியீடுதான் ஓகிஸ்ட்ரெக்கா ஆகும். அது கடவுளர்களை லூஸியனின் வகையில் நையாண்டி செய்கின்றது. மெஃபிஸ்டோபிலசைப் போன்ற லோகி, பிரேயாவை இவ்வாறு கடிந்து கொள்கிறான் என்றால் அது வாக்னருக்கும் பாதகமானதே. சில பாடல்களுக்கு அப்பால் லோகி நியோர்ட்டிடம் கூறுகிறார்: ''உனது சகோதரி மூலம் நீ (இந்த) மகனைப் பெற்றாய்'' (vidh systur thinni gaztu slikan mög). இங்கே நியோர்ட் ஒரு அசா அல்ல, அவர் ஒரு வானா; வானா நாட்டில் சகோதரர், சகோதரிகளுக்கு இடையில் திருமணம் நடைபெறும் வழக்கம் நிலவுகிறது, ஆனால் அது அசாக்களிடையில் வழக்கமல்ல என்று அவர் இங்லிங்கா புராணத்தில் சொல்கிறார்.[9] அசாக்களை விட வானாக்கள் காலத்தால் முற்பட்ட தெய்வங்கள் என்பதைக் குறிப்பதாக இது தோன்றலாம். எப்படியிருந்தாலும் அசாக்களிடையே அவர்களுக்குச் சமமாகவே நியோர்ட் வாழ்ந்தார். எனவே குறைந்தபட்சம் தெய்வங்கள் மத்தியிலாவது சகோதரர், சகோதரிகளிடையில் திருமணம் நிகழ்வது நார்வே நாட்டு தெய்வீகப் புராணங்கள் தோன்றிய காலத்தில் வெறுப்புண்டாக்கவில்லை என்பதற்கு ஓகிஸ்ட்ரெக்கா ஒரு சான்றாகும். வாக்னரை மன்னிக்க விரும்புபவர்கள் எட்டாவைக் குறிப்பிட்டுக் காட்டுவதை விட கேதேயை மேற்கோள் காட்டுவது மேலாகும். ஏனென்றால் கேதே கடவுளும் தேவதாசியும் பற்றிய தமது பாடலில் பெண்களுடைய மதரீதியான ஆத்ம சமர்ப்பணத்தைப் பற்றி அதே மாதிரியான தவறு

டையிலும் ஒவ்வொரு தலைமுறையைச் சேர்ந்த சந்ததி யின்ரும் சகோதரர், சகோதரிகளாகவே இருக்கிறார்கள்; அந்தக் காரணத்திற்காகவே அவர்கள் எல்லோரும் பரஸ்பரம் கணவன், மனைவியராகவும் இருக்கிறார்கள்.

இரத்த உறவுக் குடும்பம் என்பது அழிந்து விட்டது. வரலாற்றுக்குத் தெரிந்த மிகவும் வளர்ச்சியற்ற மக்களினங்கள் கூட இந்தக் குடும்ப வடிவத்துக்கு நிரூபிக்கக் கூடிய உதாரணங்களைத் தரவில்லை. எனினும் அது இருந்திருக்கத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வரும்படி ஹவாய்த் தீவுகள் வகைப்பட்ட இரத்த உறவுமுறை நம்மை நிர்ப்பந்திக்கிறது. இம்முறை போலினீஸியா முழுவதிலும் இன்றைக்கும் நிலவியிருக்கிறது. அது வெளியிடுகின்ற இரத்த உறவுகள் இப்படிப்பட்ட குடும்ப வடிவம் ஒன்றிலிருந்துதான் தோன்ற முடியும். மேலும், குடும்பத்தின் பிந்திய வளர்ச்சி முழுவதும் நம்மை இதே முடிவுக்கு வந்து சேரும்படி நிர்ப்பந்திக்கிறது; இந்தக் குடும்ப வடிவத்தை அவசியமான ஆரம்பக் கட்டமாக உத்தேசித்துக் கொள்ளச் செய்கிறது.

2. **பூனலுவா குடும்பம்.** பெற்றோர்களும் குழந்தைகளும் பரஸ்பரம் உடலுறவு கொள்வதை விலக்கியது குடும்ப அமைப்பில் முதல் முன்னேற்றமாக இருந்தால், சகோதரர், சகோதரிகள் பரஸ்பரம் உடலுறவு கொள்வதை விலக்கியது இரண்டாவது முன்னேற்றமாக இருந்தது. உடலுறவில் ஈடுபடுபவர்கள் வயதில் முன்னைவிட அதிகமாக ஒத்திருப்பதைப் பார்க்கும் பொழுது இந்த முன்னேற்றம் முதல் முன்னேற்றத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாகவும் கடினமாகவும் இருந்திருக்க வேண்டும். அது படிப்படியாகவே நடைபெற்றது. கூடப் பிறந்த—அதாவது ஒரு தாய் வயிற்றில் பிறந்த—சகோதரர், சகோதரிகள் உடலுறவு கொள்வது விலக்கப்பட்டதிலிருந்து இது அநேகமாகத் தொடங்கியிருக்க வேண்டும். முதலில் தனித்தனிச் சந்தர்ப்பங்களில் விலக்கப்பட்டு பிறகு படிப்படியாகப் பொது விதியாக ஆகியிருக்க வேண்

---

செய்கிறார்; அவர் அதை நவீன கால விபசாரத்துடன் மிகவும் ஒத்திருப்பதாகக் கருதுகிறார். **(1891ஆம் ஆண்டு நான்காம் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

டும் (ஹவாய்த் தீவுகளில் இந்த நூற்றாண்டில் இந்த விதிக்கு இன்னும் விலக்குகள் இருந்தன), கடைசியில் தூர சகோதரர், சகோதரிகளிடையே, அதாவது நாம் வழக்கமாகச் சொல்கின்ற ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட, மூன்றுவிட்ட சகோதரர், சகோதரிகளிடையிலும் கூடத் திருமணம் தடை செய்யப்படுவதில் வந்து முடிந்திருக்க வேண்டும். மார்கனுடைய கருத்தின்படி, அது

''இயற்கைத் தேர்வு என்ற கோட்பாடு செயல்படுவதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்''.

இந்த முன்னேற்றத்தின் மூலமாக, ஒரு இரத்தத்தைக் கொண்டே வம்ச விருத்தி செய்வது தடை செய்யப்பட்ட இனக்குழுக்கள், சகோதரர், சகோதரிகளிடையே திருமணம் நடப்பது விதியாகவும் கடமையாகவும் இருந்து வந்த இனக்குழுக்களை விட அதிக வேகமாகவும் முழுமையாகவும் நிச்சயமாக வளர்ச்சியடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த முன்னேற்றத்தின் விளைவு எவ்வளவு பலமாக இருந்தது என்பதை அதிலிருந்து நேரடியாகத் தோன்றி உத்தேசித்ததற்கு மேலாகவே வளர்ச்சியடைந்த குலம் என்ற அமைப்பு நிருபிக்கிறது. உலகத்தின் எல்லா அநாகரிக மக்களினங்களின் என்றில்லாவிட்டாலும் அவற்றில் மிகப் பெரும்பான்மையானவற்றின் சமூக அமைப்புக்கு குலம்தான் அடிப்படையாக இருந்தது; கிரீசிலும் ரோமாபுரியிலும் அதிலிருந்து நேரடியாக நாம் நாகரிகத்துக்குச் செல்கிறோம்.

ஆதிகாலக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் சில தலைமுறைகளில் பிளவுபட வேண்டியிருந்தது. புராதனப் பொதுவுடைமை வகைப்பட்ட பொதுக் குடும்ப நிர்வாகம் அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தின் கடைசிப் பகுதி வரை விலக்கெதுவுமின்றி நிலவியது; அது குடும்பச் சமூகத்துக்கு ஒரு குறிப்பிட்ட உச்ச அளவை நிர்ணயித்தது. அந்த அளவு சூழ்நிலைமைகளுக்குத் தக்கவாறு மாறுபட்டாலும் ஒவ்வொரு ஸ்தல வட்டாரத்திலும் அநேகமாகத் திட்டமாகவே இருந்தது. ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் உடலுறவு கொள்வது முறையல்ல என்ற கருத்து தோன்றியவுடன் இத்தகைய பழைய குடும்பச் சமூகங்கள் பிரிந்து புதிய குடும்பச் சமூகங்கள் தோன்று

வதை அது தூண்டவே செய்தது (இந்தக் குடும்பச் சமூகங்கள் குடும்பக் குழுக்களுடன் பொருந்தியிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல). சகோதரிகளைக் கொண்ட ஒரு குழு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்கள் குடும்பச் சமூகத்தின் மூலக்கருவாக அமைந்தன. அவர்களின் கூடப் பிறந்த சகோதரர்கள் இன்னொரு குடும்பச் சமூகத்துக்கு மூலக்கருவாக அமைந்தனர். மார்கன் பூனலுவா குடும்பம் என்று அழைக்கின்ற குடும்பத்தின் வடிவம் இந்த முறையில் அல்லது இதே மாதிரியான முறையில் இரத்த உறவுக் குடும்பத்திலிருந்து வளர்ந்தது. ஹவாய்த் தீவுகளில் சில சகோதரிகள்—அவர்கள் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளாகவோ அல்லது இரத்த சம்பந்தமுள்ள பல தாய் வயிற்றுக் குழந்தைகளாகவோ (அதாவது ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட அல்லது இன்னும் தூரச் சகோதரிகளாக) இருக்கலாம்—தமது பொதுவான கணவன்மார்களுடைய பொதுவான மனைவிகளாக இருந்தனர். ஆனால் அவர்களுடைய சகோதரர்கள் இந்த உடலுறவிலிருந்து விலக்கப்பட்டனர். இந்தக் கணவன்மார்கள் ஒருவரையொருவர் சகோதரன் என்று அழைத்துக் கொள்ளாமல்—அவர்கள் இனியும் சகோதரர்களாக இருக்க வேண்டியதில்லை—''பூனலுவா'' என்று, அதாவது கூட்டாளி, பங்காளி என்று அழைத்துக் கொண்டார்கள். அதைப் போலவே கூடப்பிறந்த சகோதரர்களையோ அல்லது இரத்த சம்பந்தமுள்ள பல தாய் வயிற்றுப் பிள்ளைகளான சகோதரர்களையோ கொண்ட ஒரு குழுவினர் சில பெண்களைப் பொது மணம் செய்து கொண்டனர். அவர்கள் இவர்களுடைய சகோதரிகள் அல்ல. இந்தப் பெண்கள் ஒருவரையொருவர் ''பூனலுவா'' என்று அழைத்துக் கொண்டார்கள். இதுதான் குடும்ப அமைப்பின் மூலச்சிறப்பான வடிவமாகும். பிற்காலத்தில் இதிலிருந்து வரிசையாகச் சில திரிபுகள் தோன்றின. அதன் முக்கியமான குணாம்சம் பின்வருமாறு: ஒரு குறிப்பிட்ட குடும்ப வட்டத்திற்குள் இருக்கின்ற எல்லாக் கணவர்கள், மனைவியர்களுக்கும் இடையில் பொது உறவு. ஆனால் அதிலிருந்து அந்த மனைவியரின் சகோதரர்கள்—முதலில் கூடப்பிறந்த சகோதரர்களும் பிறகு இரத்த சம்பந்தமுள்ள பிற தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களும்—விலக்கப்பட்டனர்;

மறு பக்கத்தில், அந்தக் கணவன்மார்களின் சகோதரிகளுக்கும் இந்த விலக்கு உண்டு.

இந்தக் குடும்ப வடிவம் அமெரிக்க முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரத்த உறவுகளை மிகவும் துல்லியமாகக் காட்டுகிறது. எனது தாயின் சகோதரிகளின் குழந்தைகள் அவளுக்கும் குழந்தைகளாகவே இருந்து வருகிறார்கள். அதே போல் என் தகப்பனாருடைய சகோதரரின் குழந்தைகளும் அவருக்கும் குழந்தைகளாகவே இருந்து வருகிறார்கள். அந்தக் குழந்தைகள் எல்லோரும் எனக்கு சகோதரர், சகோதரிகள் ஆவர். ஆனால் எனது தாயின் சகோதரர்களுடைய குழந்தைகளோ இப்பொழுது அவளுக்கு மருமான், மருமக்களாக இருக்கிறார்கள். என்னுடைய தகப்பனாரின் சகோதரிகளுடைய குழந்தைகளும் அவருக்கு மருமான், மருமக்களாக இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் எல்லோரும் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரர், சகோதரிகள் ஆவர். ஏனென்றால் எனது தாயின் சகோதரிகளுடைய கணவர்கள் எல்லோரும் எனது தாயின் கணவர்களாக இன்னும் இருக்கும் பொழுது, எனது தந்தையாரின் சகோதரர்களுடைய மனைவியர் அனைவரும் எனது தந்தையாருடைய மனைவிகளாகவே நடைமுறையில் இல்லாவிட்டாலும் உரிமைப்படி இருக்க, சகோதரர், சகோதரிகளுக்கு இடையில் உடலுறவு நிகழ்வதைத் தடுக்கும் சமுதாயத் தடையானது இதுவரை சகோதரர், சகோதரிகளாகக் கருதப்பட்டு வந்த ஒன்று விட்ட சகோதரர், சகோதரிகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்தது: சிலர் (தூர உறவினர்களும் உட்பட) சகோதரர், சகோதரிகளாக முன்போலவே இருந்து வருகிறார்கள்; மற்றவர்கள்—ஒரு பக்கத்தில் சகோதரர்களுடைய குழந்தைகளும் மறு பக்கத்தில் சகோதரிகளுடைய குழந்தைகளும்—இனிமேல் சகோதரர், சகோதரிகளாக இருக்கவே முடியாது; தாயாகவோ, தந்தையாகவோ அல்லது இரண்டு பேருமாகவோ அவர்களுக்குப் பொதுவான பெற்றோர்கள் இனிமேல் இருக்க முடியாது; எனவே மருமான், மருமகள் என்ற, ஆண், பெண் தாயாதிகள் என்ற வகுப்பு முதல் தடவையாக அவசியப்படுகிறது; முந்திய குடும்ப அமைப்பில் இது அர்த்தமற்றதாகக் கருதப்பட்டிருக்கும். ஏதாவது ஒரு வகையில் ஒருதார

மணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்ப வடிவத்தையும் பார்த்தால், அமெரிக்காவின் உறவு முறை என்பது மிகவும் அபத்தமாகவே தோன்றுகிறது. ஆனால், பூனலுவா குடும்பமோ, அதை அதன் கடைசி நுண்ணிய விவரங்கள் வரைக்கும் பகுத்தறிவு பூர்வமாக விளக்கவும் இயல்பானதென்று நியாயப்படுத்தவும் செய்கிறது. எந்த அளவுக்கு இந்த உறவுமுறை நிலவியிருந்ததோ, குறைந்தபட்சம், அதே அளவுக்கு இந்தப் பூனலுவா குடும்பமோ அல்லது அதைப் போன்ற ஒரு வடிவமோ இருந்திருக்க வேண்டும்.

இந்தக் குடும்ப வடிவம் ஹவாய்த் தீவுகளில் உண்மையில் இருந்ததென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெயினிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற பாதிரியார்களைப் போன்று புனித மதப் போதகர்கள் கிறிஸ்துவ மதத்துக்கு ஒவ்வாத இந்த உறவுகளில் ''அருவருப்பு'' ஒன்றை மட்டும் காணாமல் கூடுதலாகச் சிறிது பார்க்க முடிந்திருந்தால் இந்தக் குடும்ப வடிவம் போலினீஸியா முழுவதிலும் நிலவுவதை அநேகமாக எடுத்துக்காட்டியிருக்க முடியும்.* அந்தக் காலத்தில் அநாகரிக நிலையின் இடைக்கட்டத்திலிருந்த பிரிட்டானியர்கள் ''பத்து நபர்களாகவோ, பன்னிரண்டு நபர்களாகவோ சேர்ந்து தமது மனைவியர்களைப் பொதுவில் அனுபவித்து வந்தார்கள்; மிகப் பெரும்பாலும் சகோதரர்கள் சகோதரர்களுடன்

---

* பாஹொஃபென் தாம் கண்டுபிடித்ததாக நினைத்துக் கொள்ளும் வரைமுறையற்ற புணர்ச்சி என்னும் உறவின் அடையாளங்கள், "Sumpfzeugung" என்றழைக்கப்படுவது குழு மணத்துக்குத்தான் பின்னோக்கிக் கொண்டு போய் விடுகிறது என்பதில் இனிமேல் எவ்விதமான சந்தேகமும் இருக்க முடியாது. ''இந்தப் 'பூனலுவா' திருமணங்கள் 'சட்டத்திற்கு உட்படாதவை' என்று பாஹொஃபென் கருதினால் அந்தக் காலப் பகுதியைச் சேர்ந்த மனிதனும் அதே மாதிரி தற்காலத்தில் தகப்பன் வழியிலோ, தாய் வழியிலோ வந்த ஒன்றுவிட்ட அல்லது அதை விடத் தூர உறவுள்ள சகோதரர், சகோதரிகளிடையில் நடக்கும் திருமணங்களை முறைகேடானவை என்றே கருதுவான், அதாவது இரத்த உறவுக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர், சகோதரிகளிடையில் நடைபெறும் திருமணங்களாகவே கருதுவான்.'' (மார்க்ஸ்.) **(எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

சேர்ந்து அல்லது பெற்றோர்களும் அவர்களுடைய குழந்தைகளும் சேர்ந்து இப்படிப் பொதுவில் அனுபவித்தனர்'' என்று சீஸர் சொல்கின்ற பொழுது அதைக் குழு மணம் என்று விளக்குவதே மிகவும் பொருத்தமாகும். மனைவியரைப் பொதுமையிலே வைத்துக் கொள்ள முடிகின்ற அளவுக்கு வயது வந்த பத்து அல்லது பன்னிரண்டு மகன்கள் அநாகரிக காலத்திய தாய்மார்களுக்குக் கிடையாது; ஆனால் பூனலுவா குடும்பத்துடன் பொருந்தியுள்ள அமெரிக்க உறவுமுறையில் பல சகோதரர்கள் இருக்க வாய்ப்புண்டு, ஏனென்றால் ஒரு மனிதனுடைய ஒன்றுவிட்ட சகோதரர்களும் தூர சகோதரர்களும் அவருடைய சகோதரர்களாவார்கள். ''பெற்றோர்களும் அவர்களுடைய குழந்தைகளும் சேர்ந்து'' என்னும் கூற்று சீஸர் நிலைமையைத் தவறாகப் புரிந்து கொண்டதைக் குறிக்கலாம். எனினும் இந்த முறை, தகப்பனாரும் மகளும் அல்லது தாயும் மகனும் ஒரே திருமணக் குழுவில் இருப்பதை விலக்குகிறது என்றாலும் தகப்பனும் மகனும் அல்லது தாயும் மகளும் அதிலிருப்பதை அறவே விலக்கவில்லை. காட்டுமிராண்டி மக்களினங்களிடையிலும் அநாகரிக மக்களினங்களிடையிலும் மனைவியரைப் பொதுவில் வைத்திருப்பதைப் பற்றி ஹெரடோட்டஸ் மற்றும் இதர பண்டைக்கால எழுத்தாளர்கள் எழுதியுள்ள விவரங்களுக்கு இந்தக் குழு மண வடிவம் அல்லது இதைப் போன்ற மற்றொரு குழு மண வடிவம் மிக எளிதான விளக்கம் தருகிறது. கங்கை நதிக்கு வடக்கேயுள்ள அயோத்தியைச் சேர்ந்த திகூர்களைப் பற்றி வாட்ஸனும் கேயும் எழுதியுள்ள **இந்திய மக்கள்** என்னும் நூலில் தருகின்ற வர்ணனைக்கும் இது பொருந்தும்:

''அவர்கள் ஒன்றாகவே'' (அதாவது ஆண், பெண் உறவில்) ''கூடி வாழ்கிறார்கள்; பெரிய கூட்டுச் சமூகங்களாக அநேகமாக வரைமுறையின்றிக் கூடி வாழ்கிறார்கள். அவர்களில் இருவர் திருமணமானவர்களாகக் கருதப்பட்டாலும் அந்த பந்தம் பெயரளவில்தான் இருக்கிறது.''

மிகவும் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் குலம் என்னும் அமைப்பு பூனலுவா குடும்பத்திலிருந்துதான் நேரடியாகத் தோன்றியதாகத் தெரிகிறது. ஆஸ்திரேலிய

வகுப்பு முறையும்[10] அதற்குத் தொடக்க நிலையாக இருக்கலாம் என்பது உண்மையே. ஆஸ்திரேலியர்களுக்குக் குலங்கள் உண்டு, ஆனால் அவர்களிடையில் பூனலுவா குடும்பம் இன்னும் ஏற்படவில்லை. குழு மணத்தின் பண்படையாத வடிவத்தையே அவர்கள் பெற்றுள்ளனர்.

குழுக் குடும்பத்தின் எல்லா வடிவங்களிலும் ஒரு குழந்தையின் தகப்பனார் யார் என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலாது; ஆனால் அந்தக் குழந்தையின் தாய் யார் என்பதை உறுதியாகச் சொல்லலாம். அந்தக் குடும்பத் தொகுதி முழுவதிலுமுள்ள குழந்தைகள் எல்லோரையும் அவள் தன் குழந்தைகள் என்றே அழைத்தாலும், அக்குழந்தைகளின் பால் ஒரு தாய்க்குரிய கடமைகளை அவள் செய்யுமாறு விதிக்கப்பட்டிருந்தாலும் அவள் மற்ற குழந்தைகளிலிருந்து தன்னுடைய சொந்தக் குழந்தைகளை அறிந்து வைத்திருக்கிறாள். குழு மண முறை இருக்கின்ற இடங்களில் எல்லாம் தாய்வழியாக மட்டுமே மரபு வழியைக் கண்டறிய முடியும் என்றும், ஆகவே பெண்வழி மட்டுமே ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும் தெளிவாகிறது. உண்மையாகப் பார்த்தால், காட்டுமிராண்டி நிலையிலுள்ள மக்களினங்கள் அனைத்திலும், அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தைச் சேர்ந்த மக்களினங்களிலும் இப்படித்தான் இருக்கிறது. இதை முதன்முதலில் கண்டுபிடித்தது பாஹொஃபெனுடைய இரண்டாவது மாபெரும் சாதனை ஆகும். மற்றவை நீங்கலாகத் தாய் மூலமாக மட்டுமே பரம்பரையை அங்கீகரிப்பதையும் அதிலிருந்து காலப் போக்கில் தோன்றிய வாரிசு உறவுகளையும் அவர் தாயுரிமை என்று குறிப்பிட்டார். சுருக்கத்தைக் கருதி நான் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறேன். எனினும் இது பொருத்தமான சொல் அல்ல, ஏனென்றால் சட்ட ரீதியான அர்த்தத்தில் உரிமை என்று குறிப்பிடக் கூடியது எதுவும் இந்த சமுதாயக் கட்டத்தில் இன்னும் ஏற்படவில்லை.

பூனலுவா குடும்பத்தில் குறியடையாளமான குழுக்கள் இரண்டு உள்ளன, அவற்றில் ஒன்றை எடுத்துக் கொள்ளலாம்: அதாவது, ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகள், கிளை வயிற்றுச் சகோதரிகள் (அதாவது ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகளின் வழி வந்த

ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட அல்லது அதை விடத் தூர மான உறவுள்ள சகோதரிகள்) ஆகியோரையும் அவர் களின் குழந்தைகளையும் அவர்களுடைய தாயின் வழி வந்த கூடப்பிறந்த சகோதரர்களையும் கிளை உறவுச் சகோதரர்களையும் (நமது அனுமானக் கூற்றின்படி இவர் கள் அவர்களுடைய கணவர்கள் அல்ல) கொண்ட குழுவை எடுத்துக் கொள்வோம். அதைப் பார்க்கும் பொழுது ஆதி வடிவக் குல அமைப்பின் உறுப்பினர்களாகப் பின் னால் வெளிப்பட்ட நபர்களின் குழு ஒன்று அப்படியே நமக்குக் கிடைக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் பொது வான மூலத்தாய் உண்டு; அவள் மூலமாகத் தலைமுறை தலைமுறையாக வந்த பெண் சந்ததியினர் அனைவரும் அவள் வழிப் பிறந்த காரணத்தால் சகோதரிகள் ஆவார் கள். ஆனால் இந்தச் சகோதரிகளின் கணவர்கள் அவர் களுடைய சகோதரர்களாக இனிமேல் இருக்க முடியாது; எனவே அவர்கள் இந்த மூலத்தாய் வழி வந்தவர்களாக இருக்க முடியாது; எனவே அவர்கள் இந்த இரத்த உறவுக் குழுவை, பின்னர் அமைந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் இவர்களுடைய குழந்தைகள் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களே, ஏனென்றால் தாய்வழி ஒன்றே நிர்ணயமானது, அது ஒன்றே நிச்சயமானது. தாய்த் தரப்பிலிருந்து வந்த மிகவும் தூரமான தாயாதி உறவுள்ளவர்களையும் உள்ளிட்ட எல்லா சகோதரர், சகோதரிகளிடையேயும் பாலியல் உறவு தடை செய்யப் படுவது நிலைநாட்டப்பட்டு விட்டால் போதும், அத்துடன் மேற்குறிப்பிட்ட குழு ஒரு குலமாக மாற்றமடைந்து விடு கிறது, அதாவது தமக்குள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படாதிருக்கின்ற பெண்வழி இரத்த உறவினர் களைக் கொண்ட, கறாராக நிர்ணயிக்கப்பட்ட ஒரு வட்ட மாக அது தன்னை அமைத்துக் கொள்கிறது. அது முதல் சமுதாயம், சமயம் சம்பந்தப்பட்ட மற்ற பொது அமைப் புகளைக் கொண்டு தன்னை அது மேன்மேலும் கெட்டிப் படுத்திக் கொள்கிறது, அதே இனக்குழுவைச் சேர்ந்த மற்ற குலங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்கிறது. இதை இன்னும் விரிவாகப் பின்னர் நாம் ஆராய்வோம். குலம் என்பது பூனலுவா குடும்பத்திலிருந்து அவசியத் தேவையாக மட்டுமன்றி வெளிப்படையாகவே

பரிணாமமடைந்தது என்று நாம் கருதினால், குல அமைப்புகளைப் பெற்றிருந்ததாக இனங்கண்டு கொள்ளப்பட்ட எல்லா மக்களினங்களிடையிலும்—அதாவது அநாகரிக மற்றும் நாகரிக நிலையில் இருக்கின்ற அநேகமாக எல்லா மக்களினங்களிடையிலும்—இந்தக் குடும்ப வடிவம் முன்னர் இருந்ததை அநேகமாக சந்தேகமில்லாததாக அனுமானிப்பதற்கு நமக்கு ஆதாரமுண்டு.

மார்கன் தனது நூலை எழுதிய காலத்தில் குழு மண முறையைப் பற்றி நமக்கு மிகவும் குறைவாகவே தெரிந்திருந்தது. வகுப்புகளாகத் திரண்டிருந்த ஆஸ்திரேலியர்களிடையே நிலவிய குழு மணங்களைப் பற்றிச் சிறிதளவு தெரிந்திருந்தது. மேலும், மார்கன் 1871ஆம் ஆண்டிலேயே ஹவாய்த் தீவுகளில் நிலவிய பூனலுவா குடும்பத்தைப் பற்றித் தனக்குக் கிடைத்த தகவலை வெளியிட்டிருந்தார். ஒரு பக்கத்தில், அமெரிக்க செவ்விந்தியர்களிடையே இருந்த உறவுமுறைக்குப் பூனலுவா குடும்பம் முழு விளக்கம் அளித்தது; மார்கனுடைய ஆராய்ச்சிகள் அனைத்துக்கும் இதுவே தொடக்க நிலையாக இருந்தது; மறு பக்கத்தில், தாயுரிமைக் குலம் அதிலிருந்து பெறப்படுவதற்குக் கிளை பிரியுமிடமாகவும் இருந்தது. கடைசியாக, ஆஸ்திரேலிய வகுப்புகளை விட எவ்வளவோ மேலான வளர்ச்சித் தரத்தை அது பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே பூனலுவா குடும்பம் என்பது ஒரு வளர்ச்சிக் கட்டம், அந்தக் கட்டம் நிச்சயமாக இணைக் குடும்பத்துக்கு முந்தியதாக இருக்க வேண்டும் என்று மார்கன் நினைத்ததும் அது ஆதிகாலத்தில் பொதுவாகவே நிலவியது என்று முடிவு செய்ததும் நாம் புரிந்து கொள்ளக் கூடியதே. அதன் பிறகு குழு மண முறையின் இதர வடிவங்களின் தொடர்வரிசையைப் பற்றி நாம் அறிந்துள்ளோம். இந்த விஷயத்தில் மார்கன் வெகு தூரம் சென்று விட்டார் என்று நாம் இன்று அறிகிறோம். எனினும் அவர் கண்ட பூனலுவா குடும்பத்தில் குழு மணத்தின் உச்ச வடிவத்தை, மூலச்சிறப்பான வடிவத்தை எதிரிட்டது அவருடைய அதிர்ஷ்டமே. இந்த வடிவத்திலிருந்துதான் அதை விட மேலான கட்டத்துக்கு மாற்றம் ஏற்பட்டதை மிகச் சுலபமாக விளக்க முடிந்தது.

குழு மணத்தைப் பற்றி நம்முடைய அறிவை மிகவும்

வளப்படுத்தியதற்கு லோரிமர் பைஸன் என்ற ஆங்கில மத போதகருக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் அவர் குடும்பத்தின் இந்த வடிவத்தை அதன் மூலச்சிறப்பான இருப்பிடமாகிய ஆஸ்திரேலியாவில் பல ஆண்டுகளாக ஆராய்ந்தார். தெற்கு ஆஸ்திரேலியா விலுள்ள மவுன்ட் காம்பியேர் என்ற இடத்திலிருக்கின்ற நீக்ரோ மக்களிடம் வளர்ச்சியின் கீழ்க்கட்டத்தை அவர் கண்டார். இங்கே இனக்குழு முழுவதும் குரோக்கி, குமைட் எனப்படுகின்ற இரு பெரும் வகுப்புகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொன்றுக்குள்ளேயும் பாலியல் உறவு கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மறு பக்கத்தில் ஒரு வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும் அடுத்த வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறவிக் கணவனாக இருக்கிறான்; அவளும் அவனுக்குப் பிறவி மனைவியாக இருக்கிறாள். இங்கே தனிநபர்களல்ல, முழுக் குழுக்கள் பரஸ்பரம் மணமுடிக்கப்படுகின்றன; வகுப்புடன் வகுப்பு மணம் செய்து கொள்கிறது. இன் னொன்றையும் குறித்துக் கொள்ள வேண்டும்: இரு புற மண முறை வகுப்புகளாகப் பிரிவு செய்யப்பட்டதால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற ஒதுக்கலைத் தவிர வயது வேறுபாடு அல்லது நெருங்கிய இரத்த உறவு போன்ற வற்றைக் குறித்து ஒதுக்கி வைத்தல் எதுவுமே இல்லை. ஒரு குரோக்கிக்கு ஒவ்வொரு குமைட் பெண்ணும் உரி மைப்படி மனைவி ஆவாள். ஆனால் குமைட் பெண் வழியாக அவருக்குப் பிறக்கின்ற மகளும் தாயுரிமைப்படி ஒரு குமைட் ஆவதால் அந்த மகளும் தனது தந்தை உட்பட ஒவ்வொரு குரோக்கிக்கும் பிறவி மனைவியா கிறாள். எப்படி இருப்பினும், நமக்குத் தெரிந்திருக்கிற படி இந்த வகுப்பு அமைப்பு இங்கே எவ்விதமான தடை யும் விதிக்கவில்லை. எனவே உட்குழு மண முறையைக் கட்டுப்படுத்துகின்ற லேசான முயற்சிகள் எல்லாவற்றை யும் மீறி, பெற்றோர்கள், பிள்ளைகள் இடையில் புணர்ச்சி நடைபெறுவது பயங்கரமானது என்று விசேஷமாகக் கருதப்படாமலிருந்த ஒரு காலத்தில் இந்த அமைப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் இந்த வகுப்பு அமைப்பு வரைமுறையற்ற புணர்ச்சி நிலவிய நிலை யிலிருந்து நேரடியாகத் தோன்றியிருக்க வேண்டும், அல்லது

மண வகுப்புகள் ஏற்பட்ட பொழுது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் புணர்ச்சி வழக்கத்தால் ஏற்கெனவே தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் இன்றைய நிலை இரத்த உறவுக் குடும்பம் வந்த வழியைக் காட்டுகிறது; அதிலிருந்து ஏற்பட்ட முதல் முன்னேற்றத்தை இது குறிக்கிறது. இரண்டாவது அனுமானம் மிகவும் சாத்தியமானதாகும். எனக்குத் தெரிந்த வரையில் ஆஸ்திரேலியாவில் பெற்றோர்கள், பிள்ளைகள் இடையே திருமணத் தொடர்புகள் இருப்பதைப் பற்றி தகவல் கிடையாது. புறமண முறையின் பிற்கால வடிவம், அதாவது தாயுரிமை கொண்டாடும் குலம், அது தோன்றுவதற்கு முன்பே பொதுவாக இப்படிப்பட்ட உடலுறவுக்குத் தடை இருந்தது என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

இரு வகுப்பு முறை என்பது தெற்கு ஆஸ்திரேலியாவில் மவுன்ட் காம்பியேரைத் தவிர அதற்கு இன்னும் கிழக்கில் டார்லிங் நதி பாயும் இடங்களிலும் வட கிழக்குப் பிரதேசத்திலுள்ள குவின்ஸ்லாந்திலும் நிலவியது, எனவே மிகவும் பரவலாக இருந்தது. இந்த முறை சகோதரர், சகோதரிகளிடையில் மட்டுமே திருமணத்துக்குத் தடை செய்திருந்தது; தாய் தரப்பைச் சேர்ந்த சகோதரர்களுடைய குழந்தைகளுக்கு இடையிலும் சகோதரிகளுடைய குழந்தைகளுக்கு இடையிலும் திருமணத்துக்குத் தடை செய்திருந்தது. இவர்கள் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதே அதற்குக் காரணம். மறு பக்கத்தில், சகோதரனின் குழந்தைகளுக்கும் சகோதரியின் குழந்தைகளுக்கும் இடையில் திருமணம் செய்தல் அனுமதிக்கப்பட்டது. உட்குழு மண முறையைத் தடை செய்வதில் இன்னொரு காலடி எடுத்து வைத்ததைக் காமிலராய் மக்களிடம் காணலாம். இவர்கள் நியூ சவுத் வேல்சிலுள்ள டார்லிங் நதிப் பிரதேசத்தில் உள்ளனர். இங்கே ஆதியிலிருந்த இரண்டு வகுப்புகள் நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன; இவற்றில் ஒவ்வொரு வகுப்பும் இன்னொரு திட்டவட்டமான வகுப்புடன் மொத்தமாக மணம் புரிந்து கொள்கிறது. முதல் இரண்டு வகுப்புகளும் பரஸ்பரம் பிறவிக் கணவன், மனைவியராக உள்ளனர். தாய் முதலாவது வகுப்பைச் சேர்ந்தவளா அல்லது இரண்டாவது

வகுப்பைச் சேர்ந்தவளா என்பதைப் பொறுத்துக் குழந்தைகள் மூன்றாவது அல்லது நான்காவது வகுப்பில் உறுப்பினர்கள் ஆகிறார்கள். மேலும், இந்த மூன்றாவது, நான்காவது வகுப்புகளும் பரஸ்பரம் மணம் புரிந்து கொள்கின்றன; அவர்களின் குழந்தைகள் மீண்டும் முதலாவது மற்றும் இரண்டாவது வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆகிறார்கள். ஆக, ஒரு தலைமுறை எப்பொழுதும் முதலாவது, இரண்டாவது வகுப்புகளைச் சேர்ந்ததாக இருக்கும்; அதற்கடுத்த தலைமுறை மூன்றாவது, நான்காவது வகுப்புகளைச் சேர்ந்ததாக இருக்கும்; அதற்கும் அடுத்த தலைமுறை மீண்டும் முதலாவது, இரண்டாவது வகுப்புகளைச் சேர்ந்ததாக இருக்கும். இந்த அமைப்பு முறைப்படி, (தாய் தரப்பில் வந்த) சகோதரர், சகோதரிகளுடைய குழந்தைகள் கணவன், மனைவி ஆக முடியாது. ஆனால் அவர்களுடைய பேரக் குழந்தைகள் கணவன், மனைவி ஆகலாம். இது ஒரு விசித்திரமான சிக்கல் நிறைந்த அமைப்பு முறை. இத்துடன் பின்னாலுள்ள தாயுரிமைக் குலங்களை ஒட்டச் செய்ததனால் அது மேலும் சிக்கலடைந்தது. ஆனால் இங்கு இதைப் பற்றி ஆராய முடியாது. ஆக, உட்குழு மண முறைக்குத் தடை போடுகின்ற உணர்வுகள் எப்படித் தம்மை மீண்டும் மீண்டும் நிலைநாட்டிக் கொள்கின்றன என்று பார்க்கிறோம்; எனினும் அவை தடவிக் கொண்டு போகின்ற ரீதியில், தன்னியல்பான முறையில், நோக்கத்தைப் பற்றித் தெளிவான சிந்தனையின்றிச் செயல்படுகின்றன.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தமட்டில், குழு மணம் என்பது இன்னும் வகுப்பு மணமாகத்தான் இருக்கிறது; அதாவது கண்டம் முழுவதிலும் பரவியுள்ள ஆண்களின் ஒரு முழு வகுப்பிற்கும் அதே போல் கண்டம் முழுவதும் பரவியுள்ள பெண்களின் முழு வகுப்பிற்கும் இடையிலான மணமாகும். நெருங்கிப் பார்க்கும் பொழுது இந்தக் குழு மணம், விபசார முறையினால் கறைபடிந்த கற்பனையினால் அற்பவாதி நினைத்துக் கொள்வதைப் போல அவ்வளவு மோசமானதல்ல. அதற்கு மாறாக, அது இருந்தது என்று சந்தேகப்படுவதற்குக் கூட நெடுங்காலம் பிடித்தது. மேலும் சமீப காலத்தில் அது மறுபடியும் மறுக்கப்பட்டிருக்கிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்

கும் ஓர் ஆராய்ச்சியாளருக்கு அது தளர்வான ஒருதார மணத்தின் வகையைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது; சில இடங்களில், அவ்வப்பொழுது சோரம் போய்க் கொண்டிருக்கின்ற பலதார மணமாகவும் அவருக்குத் தோன்றுகிறது. இத்திருமண உறவுகளை—நடைமுறையில் இவை ஒரு சராசரி ஐரோப்பியனுக்குத் தன்னுடைய திருமண வழக்கங்களைத்தான் நினைவூட்டுகின்றன—ஒழுங்குபடுத்துகின்ற விதியைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு நபர் பல ஆண்டுகள் பாடுபட்டாக வேண்டும். பைஸனும் ஹோவிட்டும் அப்படித்தான் பாடுபட்டார்கள். இந்த விதிப்படி, ஓர் ஆஸ்திரேலிய நீக்ரோ தன் வீட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் முகாமுக்கு முகாமாக, இனக்குழுவுக்கு இனக்குழுவாக வேற்று மக்களிடையில் அன்னியனாகச் சுற்றித் திரிகின்ற காலத்திலும் சிறிதும் கவடில்லாமல், எதிர்க்கவும் செய்யாமல் அவனிடம் தம்மை ஒப்படைக்கின்ற பெண்கள் மிகவும் அடிக்கடி அவனுக்குக் கிடைக்கிறார்கள். அதே விதிப்படி, சில மனைவியரை உடைய ஒருவன் தன்னுடைய விருந்தினருக்கு அன்றைய இரவுக்குத் தன் மனைவியரில் ஒருத்தியைத் தருகிறான். இது ஒழுக்கக் கேடு, சட்டமுறையை மீறுதல் என்று ஐரோப்பியன் பார்க்கலாம். ஆனால் அங்கே கண்டிப்பான விதி ஒன்று ஆட்சி புரிகிறது. அந்தப் பெண்கள் அந்த அன்னியருடைய மண வகுப்பைச் சேர்ந்தவர்கள்; எனவே அவர்கள் அவனுடைய பிறவி மனைவியராவர். ஒருவருக்கு ஒருத்தி என்னும் இதே அறச் சட்டமே தமக்குரிய மண வகுப்புக்கு வெளியே பாலியல் உறவைத் தடை செய்கிறது; அது மீறப்பட்டால் இனக்குழுவை விட்டு வெளியேற்றும் தண்டனை விதிக்கிறது. பெண்களைப் பலவந்தமாகக் கடத்திச் செல்வது அடிக்கடி நடைபெறுகிறது; சில இடங்களில் இது பொது விதியுமாகும். இவ்விஷயத்திலும் இவ்வகுப்பு விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படுகிறது.

இங்கும்கூட பெண்களைக் கடத்திச் செல்கின்ற முறை ஒருதார மண முறைக்கு—குறைந்தபட்சம், இணை மண வடிவத்தில்—மாற்றம் பெறுவதன் அறிகுறியை ஏற்கெனவே வெளிப்படுத்துகிறது. ஒரு வாலிபன் தன்னுடைய நண்பர்களது உதவியுடன் ஒரு பெண்ணைக் கடத்திக்

கொண்டு அல்லது அவளுடன் வீட்டை விட்டு ஓடிப் போன பிறகு அவர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக அவளுடன் பாலியல் உறவு கொள்கிறார்கள். ஆனால் அதன் பிறகு, அவளைக் கடத்தி வந்தவனே அவளுடைய கணவனாகக் கருதப்படுகிறான். அதற்கு மாறாக, கடத்தி வரப்பட்ட அந்தப் பெண் அந்த ஆணை விட்டு ஓடிப் போய் இன்னொருவனால் பிடிக்கப்பட்டால் அவள் அவனுக்குத்தான் மனைவி ஆகிறாள். முன்வந்தவன் தன் முதன்மை உரிமையை இழக்கிறான். ஆக, ஒன்றையொன்று விலக்கி வைக்கின்ற உறவுகளும் நீண்ட காலத்துக்கோ, குறுகிய காலத்துக்கோ தம்பதிகளாக இருப்பதும் அவற்றுடன் கூடப் பலதார மணமும் குழு மணத்துடன் சேர்ந்தும் குழு மணத்திற்குள்ளேயும் கூடத் தம்மை நிறுவிக் கொள்கின்றன. இந்தக் குழு மணம் பொதுவாகவே தொடர்ந்து நீடிக்கிறது. ஆக, இங்கும் கூடக் குழு மணம் படிப்படியாக நசித்து வருகிறது. ஐரோப்பியர்களுடைய நிர்ப்பந்தத்தின் விளைவாக முதலில் மறையப் போவது குழு மணமா அல்லது அதைக் கடைப் பிடிக்கின்ற ஆஸ்திரேலிய நீக்ரோக்களா என்பதே கேள்வி ஆகும்.

எது எப்படியிருப்பினும் ஆஸ்திரேலியாவில் உள்ள முழு வகுப்புகளிடையில் மணம் என்பது குழு மணத்தின் மிகவும் கீழான, புராதனமான வடிவமாகும்; ஆனால் பூனலுவா குடும்பம் என்பது, நமக்குத் தெரிந்தவரையில், அதன் உச்ச வளர்ச்சிக் கட்டமாகும். முன்னர் சொல்லப் பட்டது சுற்றித் திரிகின்ற காட்டுமிராண்டிகளின் சமூக அந்தஸ்துக்குப் பொருத்தமான வடிவமாகத் தோன்றும். பின்னால் சொல்லப்பட்டது இருக்க வேண்டுமென்றால் முதலில் பொதுவுடைமை ரீதியில் அமைந்த கூட்டுச் சமூகங்களின் ஒப்பீட்டளவில் நிலையான குடியேற்றங்கள் இருந்திருக்க வேண்டும். இது அதற்கடுத்த மேலான வளர்ச்சிக் கட்டத்துக்கு நிச்சயமாகக் கொண்டு செல்கிறது. இவை இரண்டுக்கும் இடையில் இடைநிலைக் கட்டங்கள் நிச்சயமாக இருக்கும். இங்கே இப்பொழுது தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற, இன்னும் பரிசீலனை செய்யப்படாத ஆராய்ச்சித் துறை நமக்கு முன்னே இருக்கிறது.

**3. இணைக் குடும்பம்.** குழு மணத்தின் போதோ அல்லது அதற்கு முன்னரோ நீண்ட காலத்துக்கோ, குறுகிய காலத்துக்கோ ஒரு வகையான இணை வாழ்க்கை இருந்தது. ஆணுக்குப் பல மனைவியர் இருப்பினும் அவர்களில் ஒருத்தி அவனுடைய பிரதான மனைவியாக (அவனுக்கு மிகப் பிடித்தமான மனைவி என்று அவளைக் கூறுவதற்கு அநேகமாக இடமில்லை) இருந்தாள். அதே போல், அவளுடைய பல கணவர்களில் அவனும் பிரதான கணவனாக இருந்தான். இந்த நிலைமை கிறிஸ்துவ மத போதகர்கள் மத்தியில் குழப்பமுண்டாக்கியது. அவர்கள் குழு மண முறையில் சில சமயங்களில் பெண்களை முறைக்கேடாகப் பொதுவில் அனுபவிப்பதையும் சில சமயங்களில் ஒழுக்கத்தை மீறிய பிறன் மனை நயத்தலையும் பார்க்கிறார்கள். எனினும் குல அமைப்பு வளர்ச்சியடைந்த பொழுது வழக்கமாகி விட்ட இணை முறை அவசியத்தின் காரணமாக மேன்மேலும் நிலைபெற்றது. இப்பொழுது பரஸ்பரம் மணம் செய்து கொள்ள முடியாமல் போய் விட்ட ''சகோதரர்களின்'' குழுக்களும் ''சகோதரிகளின்'' குழுக்களும் எண்ணிக்கையில் அதிகரித்த பொழுது இந்த இணை முறை மேலும் நிலைபெற்றது. இரத்த உறவினர்கள் தமக்குள் திருமணம் செய்து கொள்வதைத் தடை செய்வதற்குக் குலம் அளித்த தூண்டுதல்கள் விஷயங்களை ஓட விரட்டின. இப்படித்தான், இராகோஸ் மக்களிடையிலும் அநாகரிக நிலையின் கடைக் கட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான செவ்விந்திய இனக்குழுக்கள் இடையிலும் அவர்களுடைய அமைப்பு அங்கீகரிக்கின்ற எல்லா உறவினர்களுக்கு இடையிலும் திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உறவினர்கள் சில நூறு வகைப்பட்டவர்களாவர். இந்த மணத் தடைகளின் சிக்கல்கள் அதிகரித்தபடியால் குழு மணங்கள் மேன்மேலும் நடைபெற முடியாமல் ஆயின. அவற்றுக்கு பதிலாக இணைக் குடும்பம் ஏற்பட்டது. இந்தக் கட்டத்தில் ஒருவன் ஒருத்தியுடன் வாழ்கிறான். எனினும் பலதார மணமும் சமயங்களில் சோரம் போவதும் ஆணின் உரிமை என்னும் வகையில் அந்த வாழ்க்கை நடைபெறுகிறது. பொருளாதாரக் காரணங்களுக்காகப் பலதார மணம் செய்து கொள்ளுதல் அநேகமாகக் கிடையாது.

அதே சமயத்தில் இணைந்து வாழும் காலத்தில் பெண் கற்புடன் இருக்க வேண்டும் என்பது மிகவும் கண்டிப்பாக வற்புறுத்தப்படுகிறது. அவள் சோரம் போனால் குரூரமாகத் தண்டிக்கப்படுகிறாள். இரு தரப்பினரும் திருமண உறவைச் சுலபமாக ரத்து செய்து கொள்ளலாம்; அப்பொழுது குழந்தைகள் முன்போலவே தாய்க்கு மட்டுமே சொந்தமாவார்கள்.

இரத்த உறவினர்களிடையில் மண விலக்கு இடைவிடாது விரிவடைவதில் இயற்கைத் தேர்வும் தொடர்ந்து செயல்படுகிறது. மார்கன் கூறியபடி,

''இரத்த உறவில்லாத குலங்களிடையே நடக்கும் திருமணங்கள் உடலிலும் உள்ளத்திலும் மேலும் வலிமை மிக்க மக்களைப் படைப்பதற்கு உதவின. வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற இரு இனக்குழுக்கள் ஒரு மக்களினமாகக் கலக்கின்ற பொழுது புதிய மண்டையும் மூளையும் அவ்விரண்டு இனக்குழுக்களின் திறமைகளின் மொத்தத்துக்கு ஏற்ப விரிவடையவும் நீளவும் செய்யும்.''

ஆகவே, குலங்கள் ரீதியிலமைந்த இனக்குழுக்கள் தம்மைக் காட்டிலும் பிற்போக்கான இனக்குழுக்களை வென்று விடும் அல்லது தம்முடைய உதாரணத்தின் சக்தியினால் தம்முடன் இழுத்துச் செல்லும்.

ஆகவே, வரலாற்றுக்கு முந்திய காலத்தில் குடும்பம் அடைந்திருந்த வளர்ச்சி இரு பாலினருக்கு இடையில் பொது மணம் நிலவிய வட்டம் இடைவிடாது குறுகிக் கொண்டு வந்ததில் அடங்கியிருக்கிறது. ஆரம்பத்தில் இனக்குழு முழுவதுமே இவ்வட்டத்திற்குள் இருந்தது. முதலில் நெருங்கிய உறவினர்களையும் பிறகு மேன் மேலும் தூர உறவினர்களையும் ஒருவர் பின் ஒருவராக விலக்கி வைத்தும், கடைசியில் திருமணம் ஒன்றினாலேயே உறவினர்களானவர்களையும் விலக்கி வைத்தும் குழு மணத்தின் ஒவ்வொரு வடிவமும் நடைமுறையில் இயலாதபடி செய்யப்பட்டது. முடிவில் ஒரே ஒரு தாம்பத்திய ஜோடிதான் எஞ்சியது; அது தற்பொழுது இன்னும் தளர்ந்த முறையில்தான் இணைக்கப்பட்டுள்ளது; அது தான் மூலக்கூறு; அதுவும் கலைந்து விட்டால் திருமணமே இல்லாது போய் விடும். ஒருதார மணம் ஏற்பட்டதில்

இக்கால அர்த்தத்தில் ஒருவன் ஒருத்தி காதலுக்குச் சிறிது கூடச் சம்பந்தமில்லை என்பதை இது ஒன்றே எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கட்டத்திலுள்ள எல்லா மக்களினங்களின் நடைமுறையும் இதற்கு மேலும் ஆதாரங்களைத் தருகிறது. முந்திய குடும்ப வடிவங்களில் பெண்கள் பஞ்சம் ஆணுக்கு ஒருபோதும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக, தேவைக்கு அதிகமாகவே பெண்கள் கிடைத்தார்கள். ஆனால் இப்பொழுது பெண்கள் கிடைப்பது கிராக்கியாகி விட்டது. அவர்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே இணை மண முறையுடன் பெண்களைக் கடத்திச் செல்வதும் பெண்களை விலைக்கு வாங்குவதும் தொடங்குகின்றன. மிகவும் ஆழமாக வேரூன்றிய மாறுதல் வந்து விட்டதன் பரவலான அறிகுறிகள் இவை; அதற்கு மேல் ஒன்றுமில்லை. இந்த அறிகுறிகளை, பெண்களைக் கொள்வதற்காக இருந்த வழிமுறைகளைப் பற்றிய அறிகுறிகளை மட்டுமே ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஏட்டறிவாளியான மாக்லென்னான் குடும்பங்களின் விசேஷ வடிவங்களாக உருமாற்றி, அவற்றைக் ''களவு முறைத் திருமணம்'' என்றும் ''விலைக்கு வாங்குதல் மூலமாக நடக்கும் திருமணம்'' என்றும் அழைத்தார். மேலும், அமெரிக்க செவ்விந்தியர்கள் மற்றும் (அதே கட்டத்திலிருக்கின்ற) இதர மக்களினங்களிடையிலும் கல்யாண ஏற்பாடு என்பது சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடைய விவகாரம் அல்ல; பல சமயங்களில் அவர்களைக் கலந்து கொள்வதுமில்லை. அது அவர்களுடைய தாய்மார்கள் சம்பந்தப்பட்ட விவகாரம். ஆக, முற்றிலும் அறிமுகம் இல்லாத இரண்டு நபர்களுக்கு இடையில்தான் அடிக்கடி நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது. திருமண நாள் நெருங்கும் பொழுதுதான் இந்த ஏற்பாடு முடிவு செய்யப்பட்டிருப்பதைப் பற்றி இரு நபர்களும் அறிகிறார்கள். திருமணத்திற்கு முன் மணமகளின் குல உறவினர்களுக்கு (அதாவது பெண்ணின் தாய்வழி வந்த உறவினர்களுக்குத்தான், தந்தைக்கும் அவருடைய உறவினர்களுக்கும் அல்ல) மணமகன் பரிசுகள் அளிக்கிறான். இந்தப் பரிசுகள் மணம் பேசப்பட்ட பெண்ணை வாங்கியதற்குரிய பரிசுகளாகப் பயன்படுகின்றன. அவளோ, அவனோ விரும்பினால் திருமணத்தை ரத்து

செய்து கொள்ளலாம். எனினும் பல இனக்குழுக்களில், உதாரணமாக இராகோஸ்களிடையில் இப்படிப்பட்ட திருமண ரத்துக்களுக்கு எதிராகப் பொதுமக்கள் உணர்ச்சி படிப்படியாக வளர்ந்தது. சச்சரவுகள் ஏற்படும் பொழுது இரு தரப்பினருடைய குல உறவினர்கள் குறுக்கிட்டு சமரசப்படுத்த முயல்கிறார்கள். அந்த முயற்சிகள் தோற்ற பிறகுதான் கணவனும் மனைவியும் பிரிகிறார்கள். குழந்தைகள் தாயிடமே விடப்படுகின்றன. இருவரும் மறுபடியும் திருமணம் புரிய உரிமை பெற்றவர்களாகிறார்கள்.

இணைக் குடும்பம் என்பது சுதந்திரமான தனிக் குடும்ப வாழ்வை அவசியப்படுத்துவதற்கு அல்லது விரும்பச் செய்வதற்கு இயலாத அளவுக்கு மிகவும் பலவீனமாகவும் ஸ்திரமின்றியும் இருந்தது. அது முற்காலத்திலிருந்து வந்த பொதுவுடைமைக் குடும்ப வாழ்க்கையைக் கலைத்து விடவில்லை. ஆனால் பொதுவுடைமைக் குடும்ப வாழ்க்கை என்பது குடும்பத்தில் பெண்ணின் மேலாதிக்கத்தைக் குறிக்கும்; இயற்கையான தந்தை யார் என்று நிச்சயமாக நிர்ணயிக்க முடியாத காரணத்தால் இயற்கையான தாயை மட்டும் அங்கீகரிக்கின்ற நிலை பெண்களுக்கு, அதாவது தாய்மார்களுக்கு அதிகமான மதிப்பு அளிப்பதைக் குறிப்பதைப் போன்றதே இது. சமுதாயம் தொடங்கும் பொழுது ஆணுக்குப் பெண் அடிமையாக இருந்தாள் என்பது 18ஆம் நூற்றாண்டின் அறிவியக்க காலத்திலிருந்து நமக்குக் கைமாற்றித் தரப்பட்டுள்ள கருத்துகள் எல்லாவற்றிலும் மிகவும் அபத்தமான கருத்தாகும். எல்லாக் காட்டுமிராண்டிகளிடையிலும் அநாகரிக நிலையின் கடைக்கட்டத்திலும் இடைக்கட்டத்திலும் உள்ள மக்களிடையிலும் ஓரளவுக்கு அதன் தலைக்கட்டத்திலுள்ள மக்களிடையிலும் பெண் சுதந்திரமான நிலையிலிருந்தது மட்டுமன்றி மிகவும் மதிப்புமிக்க நிலையை வகித்து வந்தாள். செனீகா இராகோஸ்கள் மத்தியில் பல ஆண்டுகள் மத போதகராக இருந்த ஆஷர் ரைட் என்பவர் இணைக் குடும்பத்தில் இன்னும் பெண் வகித்து வருகின்ற நிலையைப் பற்றித் தருகின்ற சாட்சியத்தைக் காண்போம்:

''அவர்களுடைய குடும்ப அமைப்பைப் பொறுத்த மட்டில், பழைய நீளமான வீடுகளில் வசித்த பொழுது''

(சில குடும்பங்களைத் தழுவியிருந்த பொதுவுடைமைக் குடும்பங்கள்) ''...ஏதாவது ஒரு கிளான்'' (குலம்) ''அநேக மாக மேலோங்கியிருந்திருக்கக் கூடும்; பெண்கள் மற்ற கிளான்களிலிருந்து'' (குலங்களிலிருந்து) ''கணவன்மார் களைக் கொண்டார்கள்.... பெண் பிரிவே வீட்டில் சகஜ மாக ஆட்சி புரிந்தது. சேமிக்கப்பட்ட பொருட்கள் பொது விலிருந்தன. தன் பங்குக்குப் பொருட்களைக் கொண்டு வந்து தருவதற்கு வழியில்லாத, துரதிர்ஷ்டம் பிடித்த கணவன் அல்லது காதலன் கஷ்டப்பட வேண்டியதே. அவனுக்கு வீட்டில் எத்தனை குழந்தைகள் இருந்த போதி லும், எத்தனை பொருட்கள் இருந்த போதிலும் எந்த வினாடியிலும் அவனை வெளியேறும்படி உத்தரவிட முடியும். அப்படி உத்தரவிடப்பட்ட பிறகு அதை மீற முயல்வது அவனுக்கே நல்லதல்ல. அந்த வீட்டில் அவன் இனியும் இருக்க முடியாது. அவன் தனது கிளானுக்கு'' (குலத்துக்கு) ''திரும்பி விட வேண்டியதுதான் அல்லது வெளியேறிச் சென்று வேறு கிளானில் புதிய திருமண உறவைத் தொடங்க வேண்டியதுதான்—அப்படி அடிக் கடி நடைபெற்றது. பொதுவாக, மற்ற இடங்களைப் போலவே கிளான்களில்'' (குலங்களில்) ''பெண்கள்தான் பெரும் சக்தியாக இருந்தார்கள். தேவையான சந்தர்ப்பங் களில், தலைவனின் கொம்புகளைத் தட்டியெறிந்து—அதை அப்படித்தான் குறிப்பிட்டார்கள்—அவனைச் சாதாரண வீரர்களின் அணியில் தள்ளுவதற்கு அவர்கள் தயங்கியதில்லை.''

பொதுவுடைமைக் குடும்பத்தில் பெரும்பாலான பெண்கள் அல்லது எல்லாப் பெண்களுமே ஒரேயொரு குலத்தைச் சேர்ந்தவர்கள்; ஆண்களே பல்வேறு குலங் களிலிருந்து வந்தவர்கள். பூர்விக காலத்தில் பெண்கள் எல்லா இடங்களிலும் மேலோங்கிய நிலையில் இருந்து வந்ததற்கு எதார்த்த அடிப்படை இதுவே. இதை பாஹொஃபென் கண்டுபிடித்தது அவர் செய்த மூன்றா வது பெரும் சேவையாகும். இன்னொன்றையும் நான் சேர்த்துக் கூறலாம். காட்டுமிராண்டி மற்றும் அநாகரிக நிலையிலுள்ள மக்கள் மத்தியில் பெண்கள் மீது அளவுக்கு மீறிய வேலை சுமத்தப்பட்டிருக்கிறது என்று பிரயாணி களும் மத போதகர்களும் எழுதியிருக்கின்ற செய்திகள் மேற்கூறியவற்றுடன் எவ்விதத்திலும் முரண்படவில்லை. இரு பாலாரிடையேயும் உழைப்புப் பிரிவினையை நிர் ணயிப்பதற்குரிய காரணங்கள் வேறு, சமுதாயத்தில் இரு

பாலாருடைய அந்தஸ்தை நிர்ணயிப்பதற்குரிய காரணங்கள் வேறு. நாம் முறையானதென்று கருதுவதற்கு மேல் கடுமையாக உழைக்கின்ற பெண்களைக் கொண்ட மக்களினங்கள் நமது ஐரோப்பியர்கள் பெண்களுக்குத் தருகின்ற மதிப்பை விட அதிகமாக உண்மையான மதிப்பு வைத்திருக்கிறார்கள். போலி உபசாரங்களால் சூழப்பட்ட, எல்லாவிதமான உண்மையான உழைப்பிலிருந்தும் விலக்கப்பட்டுள்ள நாகரிகச் சீமாட்டியின் சமூக அந்தஸ்து அநாகரிக நிலையைச் சேர்ந்த, கடுமையாக உழைக்கின்ற பெண்ணின் அந்தஸ்தை விட சமூக ரீதியில் மிகவும் கீழானதாகும். அந்தப் பெண் தன் மக்கள் மத்தியில் உண்மையாகவே ஒரு சீமாட்டியாக (lady, frowa, Frau—எசமானி) கருதப்பட்டாள். அவள் வகித்த நிலையின் தன்மையினால் அவள் அப்படி இருந்தாள்.

இன்று அமெரிக்காவில் குழு மணத்தின் இடத்தை இணைக் குடும்பம் முழுவதும் கைப்பற்றி விட்டதா என்பதை இன்னும் காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டத்திலேயே இருக்கின்ற வட மேற்கு அமெரிக்க, மேலும் குறிப்பாக, தென் அமெரிக்க மக்களினங்களிடையே மேலும் நெருங்கி ஆராய்வதன் மூலமாகவே முடிவு கட்ட இயலும். பின்சொன்ன மக்களினங்களிடையே பாலுறவுச் சுதந்திரம் நிலவுவதைப் பற்றி ஏராளமான உதாரணங்கள் கொடுக்கப்படுவதால் பழைய குழு மணம் முழுமையாக ஒடுக்கப்பட்டிருந்ததாக அனுமானிக்க முடியாது. எப்படியிருப்பினும், அதன் எல்லா அடையாளங்களும் இன்னும் மறைந்து விடவில்லை. குறைந்தபட்சம் நாற்பது வட அமெரிக்க இனக்குழுக்களில், ஒரு குடும்பத்தின் மூத்த சகோதரியைத் திருமணம் செய்து கொள்கின்ற ஆண் அவளுடைய சகோதரிகள் எல்லோரையும்—அவர்கள் உரிய வயதை அடைந்ததும்—தனது மனைவிகளாகக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறான். சகோதரிகளைக் கொண்ட ஒரு முழுக் குழுவுக்கு கணவன்மார்கள் பொதுவாக இருந்த அமைப்பின் எச்சம் இது. மேலும், கலிபோர்னிய தீபகற்பத்திலுள்ள (காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டத்தைச் சேர்ந்த) இனக்குழுக்களிடையே சில விழாக்கள் உண்டு. அவ்விழாக் காலங்களில் வரைமுறையற்ற புணர்ச்சியில் ஈடுபடுவதற்காக சில "இனக்குழுக்

கள்'' திரண்டு வருகின்றன என்று பான்கிராஃப்ட் கூறுகிறார். இவை அநேகமாக குறிப்பிட்ட குலங்களாகும்; ஒரு குலத்தின் பெண்கள் இன்னொரு குலத்தைச் சேர்ந்த ஆண்கள் எல்லோரையும் பொதுவான கணவர்களாகவும், அதே போல் ஒரு குலத்தின் ஆண்கள் இன்னொரு குலத்தின் பெண்கள் எல்லோரையும் பொதுவான மனைவியராகவும் கொண்டிருந்த பழங்காலத்தை இவற்றிற்கு மங்கலாக நினைவூட்டுவதைக் குறிப்பவையே இந்த விழாக்கள். இந்த வழக்கம் ஆஸ்திரேலியாவில் இன்றும் நிலவுகிறது. சில மக்களினங்களில் வயதானவர்கள், தலைவர்கள் மற்றும் மந்திரவாதி-புரோகிதர்கள் பொது மனைவியர் முறையைத் தமது நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதும் பெரும்பாலான பெண்களைத் தமக்கே ஏக போகமாக்கிக் கொள்வதும் நடைபெறுகின்றன. ஆனால் அவர்கள் கூட, தம் முறைக்கு சில விழாச் சமயங்களிலும் மக்கள் பெருந்திரளாகக் கூடுகின்ற காலங்களிலும் பழைய பொதுமையை அனுமதித்து, தமது மனைவியர் வாலிபர்களுடன் இன்பம் துய்ப்பதை அனுமதிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இப்படிக் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறுகின்ற சாடர்னேலியத் திருவிழாக்களுக்கு[11] வெஸ்டர்மார்க் தனது நூலின் 28—29ஆம் பக்கங்களில் வரிசை வரிசையாக உதாரணங்களைத் தருகிறார். இந்த விழாக்களில் அந்த பழைய சுதந்திரமான புணர்ச்சி முறை குறுகிய காலத்துக்கு அமுலுக்கு வருகிறது. இந்தியாவைச் சேர்ந்த ஹோக்கள், சாந்தால்கள், பஞ்சாரர்கள், கோட்டர்கள் மற்றும் சில ஆப்பிரிக்க மக்களினங்கள் இதற்கு உதாரணமாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் வெஸ்டர்மார்க் இவற்றைக் குழு மணத்தின் எச்சங்களாகக் கருதாமல்—அவர் குழு மணத்தையே மறுக்கிறார்—பண்டைக்கால மனிதனுக்கும் பிற விலங்குகளுக்கும் பொதுவாக இருந்த புணர்ச்சி வேட்கைக் காலத்தின் எச்சங்கள் என்று இதிலிருந்து முடிவு கட்டுகிறார்.

இப்பொழுது பாஹோஃபெனுடைய நான்காவது மாபெரும் கண்டுபிடிப்புக்கு வருகிறோம். அதுதான் குழு மணத்திலிருந்து இணை மண முறைக்கு மாறிய, பரவலாக இருந்த வடிவமாகும். தெய்வங்களின் பண்டைக்கால் கட்டளைகளை மீறியதற்காகச் செய்யப்படு

கின்ற பிராயச்சித்தம், ஒரு பெண் கற்பு உரிமையைப் பெறுவதற்குச் செய்யும் தவம் என்று பாஹொஃபென் புரிந்து கொண்டாரே, அது உண்மையிலே என்ன? பொதுக் கணவர்களைக் கொண்ட பழைய முறையிலிருந்து விடு பட்டுத் தன்னை ஒருவருக்கு மட்டுமே ஒப்படைக்கின்ற உரிமையைப் பெறுவதற்காகச் செய்கின்ற தவத்தின் மாயத் தோற்றமே அது. இத்தவம் குறிப்பிட்ட வரம்பு களில் ஒப்படைப்பு என்னும் வடிவத்தைப் பெறுகிறது. பாபிலோனியப் பெண்கள் ஆண்டுக்கு ஒரு தடவை மிலிட்டா ஆலயத்தில் தங்களை ஒப்படைக்க வேண்டி யிருந்தது. இதர மத்திய கிழக்கு நாட்டு மக்களினங்கள் தமது இளம் பெண்களை சில ஆண்டுகளாக அனெய்டிஸ் தேவதையின் ஆலயத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் கள். அங்கே அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட, தங்களுக்குப் பிடித்தமான ஆண்களுடன் சுதந் திரமாகக் காதல் செய்ய வேண்டும். பிறகுதான் அவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். மதத் திரையினால் மூடப்பட்ட இத்தகைய வழக்கங்கள் மத்திய தரைக் கடலுக்கும் கங்கை நதிக்கும் இடையி லுள்ள ஆசிய மக்களினங்களில் அநேகமாக எல்லாவற்றுக் கும் பொதுவாகும். பிராயச்சித்தக் காணிக்கையின் சுமை காலப்போக்கில் படிப்படியாகக் குறைக்கப்படுகிறது. இதை பாஹொஃபெனே குறிப்பிட்டார்:

''ஒவ்வொரு ஆண்டும் அர்ப்பணம் செய்து கொள் வதற்கு பதிலாக ஒரேயொரு நிகழ்ச்சியுடன் நின்று விடு கிறது. பெருமாட்டிகளுடைய பொதுமகளிர் முறைக்குப் பிறகு இளம் பெண்களின் பொதுமகளிர் முறை வரு கிறது. அது திருமண சமயத்தில் அமுலுக்கு வந்ததற்கு பதிலாக திருமணத்துக்கு முன்பு அமுலுக்கு வருகிறது. வரைமுறையின்றி எல்லோரிடமும் தன்னை ஒப்படைத் தது மாறி சில நபர்களிடம் ஒப்படைத்தல் நடக்கிறது'' (தாய் உரிமை, பக்கம் XIX).

இதர மக்களினங்களில் மதத் திரை இல்லை. பண்டைக்காலத்தில் திரேஸியர்கள், கெல்டுகள் மத்தி யிலும் தற்காலத்தில் இந்தியாவின் பல ஆதிக்குடிகள், மலாய் மக்களினங்கள், பசிபிக் கடல் தீவு மக்கள் மற்றும்

பல அமெரிக்க செவ்விந்தியர்கள் மத்தியிலும் பெண்களுக்குத் திருமணம் நடைபெறுகின்ற வரை பாலியல் உறவு விஷயத்தில் மிகவும் அதிகமான சுதந்திரம் உண்டு. அநேகமாகத் தென் அமெரிக்கா முழுவதிலும் இப்படித்தான் இருக்கிறது. அந்தக் கண்டத்துக்குள் சிறிதளவு நுழைந்து பார்த்த எவரும் அதற்குச் சான்று தருவார்கள். அகஸீஸ் என்பவர் (பிரேஸில் நாட்டில் பிரயாணம், போஸ்டன் மற்றும் நியூயார்க், 1886, பக்கம் 266) செவ்விந்தியப் பரம்பரையில் வந்த ஒரு பணக்காரக் குடும்பத்தைப் பற்றிப் பின்வரும் தகவலைக் கூறுகிறார். அந்த வீட்டிலுள்ள மகளுக்கு அவர் அறிமுகம் செய்யப்பட்ட பொழுது அவளுடைய தந்தையாரைப் பற்றி விசாரித்தார். தந்தையார் என்றால் தாயின் கணவர், பராகுவேக்கு எதிராக நடைபெறுகின்ற போரில் சேவை செய்யும் அதிகாரி என்று கருதிக் கொண்டார். ஆனால் தாயாரோ சிரித்துக் கொண்டே, naõ tem pai, é filha da fortuna—இவளுக்குத் தந்தை இல்லை, இவள் சந்தர்ப்பவசமாகப் பிறந்த பெண் என்று விடை கூறினாள்.

"இங்குள்ள செவ்விந்தியப் பெண்கள் அல்லது கலப்பினப் பெண்கள் முறைக்கேடான வழியில் பிறந்த தம்முடைய குழந்தைகளைப் பற்றி இப்படி எப்பொழுதும் பேசுகின்றனர். அவர்களுடைய உணர்வில் குற்ற மனோபாவமோ, வெட்கமோ கிடையாது. இது மிகவும் சகஜம். அப்படி இல்லாதிருப்பதே விதிவிலக்கு என்று தோன்றுகிறது. குழந்தைகள்... பெரும்பாலும் தாயைப் பற்றி மட்டுமே அறிந்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களைப் பற்றிய கவலையும் பொறுப்பும் அவள் மீதே விழுகின்றன. ஆனால் தந்தையைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அந்தத் தந்தை மீது தனக்கோ, தன் குழந்தைகளுக்கோ எவ்வித உரிமையும் இருப்பதாகத் தாய் மாருக்குப் படுவதாகவும் தோன்றவில்லை."

நாகரிக மனிதனுக்கு இங்கே மிகவும் விசித்திரமாகத் தோன்றுவது தாயுரிமைப்படியும் குழு மணத்திற்குள்ளும் இருக்கின்ற விதியே தவிர வேறில்லை.

ஒரு சில மக்களினங்களில் மணமகனுடைய நண்பர்கள், உறவினர்கள் அல்லது திருமணத்துக்கு வந்த விருந்தினர்கள் திருமணத்தின் பொழுதே மணமகள் மீது தமக்

குள்ள பழைய சம்பிரதாய உரிமையைக் கையாள்கின்ற னர்; மணமகன் மணமகளைக் கடைசியாகத்தான் அனுப விக்கிறான். பண்டைக்கால பெலியாரிக் தீவுகளிலும் ஆப் பிரிக்காவைச் சேர்ந்த ஆகில்கள் இடையிலும் இப்பழக்கம் இருந்தது. அபிஸ்ஸீனியாவைச் சேர்ந்த பெரியாக்கள் மத்தியில் இன்று கூட இப்படியே. வேறு சில மக்களினங் களில் அதிகாரப் பதவியிலிருக்கின்ற ஒருவர்—இனக்குழு அல்லது குலத்தின் தலைவர், காசிக், ஷமான், புரோகிதர், சிற்றரசர் அல்லது வேறு எந்தப் பட்டம் பெற்றிருந்தா லும் சரி—கூட்டுச் சமூகத்தின் பிரதிநிதியாக மணம களுடன் முதல் இரவு உரிமையை அனுபவிக்கிறார். நவீன புத்தார்வவாதப் பூச்சு எப்படியிருப்பினும் இந்த jus primae noctis* இன்றைய நாள் வரை குழு மணத்தின் ஒரு எச்சமாக அலாஸ்கா பிரதேசத்திலுள்ள பெரும்பாலான குடிகளிடையிலும் (பான்கிராஃப்ட், சுதேச இனக்குழுக்கள், முதல் தொகுதி, பக்கம் 81) வடக்கு மெக்சிகோவிலுள்ள தாஹூக்களிடையிலும் (அதே நூல், பக்கம் 584) இதர மக்களினங்களிலும் நீடித்திருக்கிறது. குறைந்தபட்சம் ஆதியில் கெல்டிக் நாடுகளாயிருந்தவற்றில் இது மத்திய காலம் முழுவதிலும் இருந்தது. அங்கே அது குழு மணத்தி லிருந்து நேரடியாக ஏற்பட்டது—உதாரணமாக, ஆர கான். காஸ்தீலில் விவசாயி என்றும் பண்ணையடிமையாக இருக்கவில்லை, ஆனால் ஆரகானில், ஃபெர்டினாண்டு கத்தோலிக்கர் 1486இல் ஆணை[12] பிறப்பிக்கின்ற வரை மிக மோசமான பண்ணையடிமை முறை நிலவியது. இந்தச் சட்டம் பின்வருமாறு:

''மேற்கூறப்பட்ட பிரபுக்கள்'' (செனோர்கள், பாரன் கள்) ''...விவசாயி திருமணம் புரிந்து கொண்ட பெண்ணு டன் முதல் இரவில் படுக்கக் கூடாது என்றும், திருமணம் நடந்த இரவில் அவள் படுக்கைக்குச் சென்ற பிறகு தமது அதிகாரத்துக்கு அறிகுறியாக அவர்கள் கட்டிலையும் அவளையும் தாண்டுவது கூடாது என்றும், மேற்கூறப் பட்ட பிரபுக்கள் விவசாயியினுடைய புத்திரர்கள் அல்லது புத்திரிகளின் சேவைகளை, ஊதியம் தந்தோ, தராமலோ, அவர்களுடைய சித்தத்துக்கு விரோதமாகப் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது என்றும் நாம் தீர்ப்பளித்துப்

---

* —முதல் இரவு உரிமை.—ப-ர்.

பிரகடனம் செய்கிறோம்.'' (சுகன்ஹைம், பண்ணையடிமை முறை, பீட்டர்ஸ்பர்க், 1861, பக்கம் 355; கடலோனிய மொழியிலுள்ள மூலத்திலிருந்து மேற்கோள் தரப் பட்டுள்ளது.)

அவர் குறிப்பிடுகின்ற ''பொதுமகளிர் முறை'' அல்லது "Sumpfzeugung" இலிருந்து ஒருதார மணத்துக்கு மாற்ற மடைந்த காலம் நெடுகிலும் அந்த மாற்றத்தைக் கொண்டுவந்தவர்கள் பெண்களே என்று பாஹொஃபென் கூறுவது மீண்டும் முற்றிலும் சரியானதே. பொருளாதார நிலைமைகளின் வளர்ச்சியின் விளைவாக, அதாவது பழைய பொதுவுடைமை முறை பலவீனமடைந்து மக்கள்தொகை யின் அடர்த்தி அதிகரித்ததன் விளைவாகப் பழைய சம் பிரதாய பாலியல் உறவுகள் தமது வெகுளித்தனமான, பூர்விகமான காட்டுத் தன்மையை இழந்து வர வர அந்த உறவுகள் மேன்மேலும் தரக்குறைவாக, ஒடுக்குபவை யாகப் பெண்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அவர் கள் கற்புரிமைக்கு, விடுதலை என்ற முறையில் குறிப்பிட்ட ஒரு நபரைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் திருமணம் செய்து கொள்வதில் வேட்கை கொண்டிருந் திருக்க வேண்டும். இந்த முன்னேற்றம் ஆண்களிடமிருந்து தோன்றியிருக்க முடியாது. அவர்கள் நடைமுறைக் குழு மணத்தின் இன்பங்களைக் கைவிடுவதற்கு ஒருபோதும்—இன்றைய நாள் வரையிலும் கூட—கனவு கூடக் கண்ட தில்லை என்ற காரணமே இதற்குப் போதும். பெண்கள் முயன்று இணை மண முறை நோக்கி மாற்றம் கண்ட பிறகுதான் ஆண்கள் கண்டிப்பான ஒருதார மணத்தை—அது பெண்களுக்கு மட்டுமே என்பதைச் சொல்ல வேண்டி யதில்லை—புகுத்த முடிந்தது.

காட்டுமிராண்டி நிலைக்கும் அநாகரிக நிலைக்கும் இடைப்பட்ட எல்லைக் கோட்டில்தான் இணைக் குடும் பம் எழுந்தது; முக்கியமாகக் காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டத்திலும் சிற்சில இடங்களில் மட்டும் அநா கரிக நிலையின் கடைக்கட்டத்திலும் அது தோன்றியது. காட்டுமிராண்டி நிலைக்குக் குறிப்பு அம்சமாகக் குழு மணமும் நாகரிக நிலைக்குக் குறிப்பு அம்சமாக ஒருதார மணமும் இருப்பதைப் போல அநாகரிக நிலைக்கு இணைக் குடும்பம் குறிப்பு அம்சமாக உள்ளது. அது நிலையான

ஒருதார மணத்தை நோக்கி மேலும் வளர்ச்சியடைவதற்கு இதுவரை செயல்பட்டிருப்பதாக நாம் அறிந்துள்ள வற்றிலிருந்து மாறுபட்ட காரணங்கள் தேவைப்பட்டன. இணைக் குடும்பத்தில் குழு அதன் கடைசி அலகுக்குக் குறுக்கப்பட்டு விட்டது; இரு அணுக்களைக் கொண்ட மூலக்கூறாக, ஒருவனும் ஒருத்தியுமாகக் குறுக்கப்பட்டு விட்டது. இயற்கைத் தேர்வு குழு மணத்தின் வட்டத்தை இடைவிடாது குறுக்கித் தன்னுடைய பணியை முடித்தது. இந்தத் திசையில் மேற்கொண்டு செய்வதற்கு அதற்கு ஒன்றும் இருக்கவில்லை. புதிய, சமூக ரீதியான விசைச் சக்திகள் செயல்படாமல் இருந்திருந்தால் இணைக் குடும்ப முறையிலிருந்து ஒரு புதிய குடும்ப வடிவம் தோன்று வதற்குக் காரணமே இருந்திருக்காது. ஆனால் இந்த விசைச் சக்திகள் செயல்படத் தொடங்கின.

நாம் இணைக் குடும்பத்தின் மூலச்சிறப்பான கள மாகிய அமெரிக்காவை விட்டுப் புறப்படுகிறோம். குடும் பத்தின் முன்னைவிட மேலான வடிவம் அங்கே வளர்ந்தது என்று நாம் முடிவு செய்வதற்கு ஆதாரம் எதுவும் கிடை யாது, அல்லது அந்தக் கண்டத்தைக் கண்டுபிடித்துக் குடியேறுவதற்கு முன்பு அங்கே எந்தக் காலத்திலும், எந்தப் பகுதியிலும் கண்டிப்பான ஒருதார மணம் இருந் தது என்பதற்கும் ஆதாரம் எதுவும் கிடையாது. ஆனால் பழைய உலகத்தில் வேறுவிதமான நிலைமை இருந்தது.

இங்கே மிருகங்களைப் பழக்குவதும் மந்தைகளைப் பெருக்குவதும் இதுவரை கேட்டறியாத செல்வத்திற்குரிய ஓர் ஊற்றுக்கண்ணைத் தோற்றுவித்து, புத்தம் புதிய சமூக உறவுமுறைகளைப் படைத்தன. அநாகரிக நிலை யின் கடைக்கட்டம் வரை வீடும் உடைகளும், நேர்த்தி யற்ற ஆபரணங்களும், உணவு பெறுவதற்கும் தயாரிப் பதற்கும் பயன்பட்ட கருவிகளும், அதாவது படகுகளும் ஆயுதங்களும், மிகவும் சாதாரண ரகத்தைச் சேர்ந்த வீட்டுச் சாமான்களும் மட்டுமே நிலையான செல்வமாக இருந்தன. உணவுக்கு நாள்தோறும் பாடுபட வேண்டி யிருந்தது. ஆனால் இப்பொழுது குதிரைகள், ஒட்டகங் கள், கழுதைகள், மாடுகள், வெள்ளாடுகள், செம்மறியாடு கள், பன்றிகள் ஆகியவற்றின் மந்தைகளுடன் முன்னே போய்க் கொண்டிருக்கின்ற, மேய்ச்சல் தொழில் புரிந்த

மக்களினங்கள்—இந்தியாவில் ஐந்து நதிகள் பாய்கின்ற பகுதியிலும் கங்கை நதிப் பிரதேசத்திலும் ஆரியர்கள், அதை விட நீர் வளமிக்க ஆக்ஸஸ், ஐக்ஸார்தஸ் ஆறுகள் பாய்கின்ற புல்வெளிப் பிரதேசங்களில் உள்ள ஆரியர்கள், யூப்ரடீஸ், டைக்ரிஸ் ஆறுகள் பாய்கின்ற பிரதேசங்களில் இருந்த செமைட்டுகள்—தம்மிடமிருந்த உடைமைகளை வெறுமனே மேற்பார்வை செய்து மிகவும் சாதாரணமான முறையில் கவனிப்பதன் மூலமாகவே அவற்றின் எண்ணிக்கையை மேன்மேலும் அதிகமாகப் பெருக்கவும் பால், இறைச்சி உள்ளிட்ட ஊட்டம் நிறைந்த உணவைப் பெறவும் முடிந்தது. உணவு சேகரிப்பதற்கு இதுவரை கையாண்ட முறைகள் அனைத்தும் பின்னுக்குத் தள்ளப் பட்டன. ஒரு காலத்தில் அவசியமாக இருந்த வேட்டைத் தொழில் இப்பொழுது அபூர்வமாக ஈடுபடுகின்ற வேலையாக மாறி விட்டது.

ஆனால் இந்தப் புதிய செல்வம் யாருடைய உடைமையாக இருந்தது? சந்தேகமின்றி, ஆரம்பத்தில் அது குலத்தின் உடைமையாக இருந்தது. ஆனால் மந்தைகளின் மீது தனியுடைமை என்பது மிகவும் ஆரம்பக் கட்டத்திலேயே வளர்ந்திருக்க வேண்டும். மோஸசின் முதல் நூல் என்று கூறப்படுகின்ற புத்தகத்தில் தந்தை ஆப்ரஹாம் ஒரு குடும்பச் சமூகத்தின் தலைவர் என்ற முறையில் கால் நடை மந்தைகளுக்கு உடைமையாளராக இருந்தாரா அல்லது ஒரு குலத்தின் உண்மையான பரம்பரைத் தலைவர் என்ற அந்தஸ்தினால் அவற்றுக்கு உடைமையாளராக இருந்தாரா என்பதை அப்புத்தகத்தின் ஆசிரியருடைய நோக்கிலிருந்து கண்டுபிடிப்பது கடினம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது, நவீன கால அர்த்தத்தில் அவரைச் சொத்துடைமையாளர் என்று கருதக் கூடாது. அதே போல் நிச்சயமான விஷயம் என்னவென்றால், உண்மையான வரலாற்றின் தொடக்கக் கட்டத்தில் மந்தைகள் குடும்பத் தலைவர்களுக்குத் தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையாக (separate property) எங்குமே இருக்கக் காண்கிறோம்; அநாகரிக நிலைக் காலத்துக் கலைப் பொருட்களும் உலோகச் சாமான்களும் சுகவாழ்க்கைப் பொருட்களும், கடைசியாக, மனிதக் கால்நடைகளான அடிமைகளும் இருந்ததைப் போலவே அவையும் இருந்தன.

ஏனென்றால் இப்பொழுது அடிமை முறையும் தோற்று விக்கப்பட்டது. அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தில் அடிமையினால் எந்தப் பயனுமில்லை. இக்காரணத்திற் காகவே அமெரிக்க செவ்விந்தியர்கள் தாம் தோற் கடித்த எதிரிகளை அதற்கு மேலான கட்டத்தில் நடத் தியதற்கு முற்றிலும் வேறாக நடத்தினார்கள். ஆண்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது வெற்றி பெற்ற இனக்குழு அவர்களை சகோதரர்களாக சுவீகரித்துக் கொண்டது. பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள் அல்லது அவர்களையும் உயிர் பிழைத்த அவர்களுடைய குழந்தை களையும் அதே போல் சுவீகரித்துக் கொண்டார்கள். இந்தக் கட்டத்தில் மனித உழைப்புச் சக்தி தன்னைப் பராமரிப்பதற்குரிய செலவுக்கு மேலாகக் கணிசமான உபரியைத் தரவில்லை. கால்நடை வளர்ப்பு, உலோகங் களைப் பண்படுத்தல், துணி நெசவுத் தொழில், கடைசி யாக, வயல் விவசாயம் செய்தல் ஆகியவை புகுத்தப் பட்ட பின் இது மாறியது. முன்பு சுலபமாகக் கிடைத்து வந்த மனைவிமார்களுக்கு எப்படி இப்பொழுது ஒரு பரி வர்த்தனை மதிப்பு ஏற்பட்டு விலைக்கு வாங்கப்பட்டார் களோ, அதே போல்தான் உழைப்புச் சக்தி விஷயத்தி லும் நடைபெற்றது. அதிலும் குறிப்பாகக் கால்நடை மந்தைகள் குடும்பச் சொத்துக்களாக இறுதியிலே மாற்றப் பட்ட பிறகு இப்படி நடைபெற்றது. கால்நடைகள் பெருகிய வேகத்தில் குடும்பம் வளர்ச்சியடையவில்லை. கால்நடைகளைப் பராமரிப்பதற்கு அதிகமான ஆட்கள் தேவைப்பட்டனர். போரில் சிறைப்பிடிக்கப்பட்ட கைதி கள் இந்த வேலைக்குப் பயன்பட்டனர். மேலும், அவர் களைக் கால்நடைகளைப் போலவே பெருகச் செய்ய முடிந்தது.

இச்செல்வங்கள் குடும்பங்களின் தனியுடைமையாக மாறி அங்கே வேகமாகப் பெருகத் தொடங்கியதுமே அவை இணை மண முறை மற்றும் தாயுரிமைக் குலத்தின் மீது நிறுவப்பட்டிருந்த சமுதாயத்துக்குப் பலமான அடி கொடுத்தன. இணை மண முறை என்பது குடும்பத்தில் ஒரு புதிய அம்சத்தைப் புகுத்தியிருந்தது. அது இயற்கை யான தாயாருக்குப் பக்கத்தில் அத்தாட்சி பெற்ற இயற் கைத் தகப்பனாரை—இன்றைய ''தகப்பனார்களில்''

பலரை விட அவர் உண்மையான தகப்பனாராக இருக்கக் கூடும்—நிறுத்தியது. அன்று குடும்பத்தில் நிலவிய உழைப்புப் பிரிவினையின்படி, உணவையும் அதற்குத் தேவையான கருவிகளையும் பெறுவதும் அதன் விளைவாக, அவற்றின் உடைமையாளராக இருப்பதும் ஆணின் பொறுப்பாக இருந்தது. இருவரும் பிரிகின்ற பொழுது அவன் அவற்றைத் தன்னுடன் கொண்டு சென்றான்; பெண் வீட்டுச் சாமான்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டதைப் போன்றதே இது. ஆகவே, அந்தக் கால சமுதாய வழக்கப்படி, உணவுப் பொருட்களுக்குரிய புதிய மூலாதாரங்களாகிய கால்நடைகளுக்கும் ஆணே உடைமையாளனாக இருந்தான். பிற்காலத்தில் புதிய உழைப்புக் கருவியாகிய அடிமைக்கும் அவனே உடைமையாளனாக இருந்தான். ஆனால் அதே சமுதாயத்தின் வழக்கப்படி, குழந்தைகள் அவனுடைய உடைமைக்கு வாரிசாக முடியவில்லை. ஏனென்றால் இவ்விஷயத்தில் நிலைமை பின்வருமாறு இருந்தது:

தாயுரிமைப்படி, அதாவது பெண்வழியாக மட்டுமே மரபு வழி கணக்கிடப்பட்டு வந்த வரை, குலத்தில் கடைப் பிடிக்கப்பட்ட பரம்பரை வாரிசு முறையின்படி இறந்து விட்ட குலத்தின் உறுப்பினருடைய உடைமைக்குக் குல உறவினர்கள்தான் முதலில் வாரிசுகளாக இருந்தார்கள். உடைமை குலத்துக்குள்ளேதான் தங்கியிருக்க வேண்டும் முதலில், சம்பந்தப்பட்ட உடைமைகள் சொற்பம் என்பதனால் மிகவும் நெருங்கிய குல உறவினர்களிடம், அதாவது தாயாருடைய தரப்பைச் சேர்ந்த இரத்த உறவினர்களிடம் அவை சேர்ந்திருக்கக் கூடும். ஆனால் இறந்தவனுடைய குழந்தைகள் அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்களல்ல, அவர்களுடைய தாயாருடைய குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆரம்பத்தில் அவர்கள் தாயாருடைய மற்ற இரத்த உறவினர்களோடு கூடவே தாயிடமிருந்து சுவீகரித்துக் கொண்டு வந்தார்கள்; பிற்காலத்தில் ஒரு வேளை அவளுடைய உடைமையில் அவர்கள் முதல் உரிமை பெற்றிருந்திருக்கலாம். ஆனால் தந்தையிடமிருந்து அவர்கள் சுவீகரிக்க முடியாது, ஏனென்றால் அவர்கள் தகப்பனாருடைய குலத்தைச் சேர்ந்தவர்களல்ல. அந்த உடைமை அந்தக் குலத்துக்குள்ளேதான் தங்க வேண்டும்.

மந்தைகளின் உடைமையாளன் மரணமடைந்து விட்டால் அந்த மந்தைகள் முதலில் அவனுடைய சகோதரர், சகோதரிகளிடமும் சகோதரிகளின் குழந்தைகளிடமும் அல்லது அவனுடைய தாயின் சகோதரிகளின் சந்ததியாரிடம் போய்ச் சேர்ந்தன. ஆனால் அவனுடைய குழந்தைகளுக்கு வாரிசுரிமை கிடையாது.

இப்படி, செல்வம் பெருகிய பொழுது, அது ஒரு பக்கத்தில், குடும்பத்தில் பெண்ணை விட ஆணுக்கு முக்கியமான அந்தஸ்தைக் கொடுத்தது, மறு பக்கத்தில், தனது குழந்தைகளுக்குச் சாதகமான வழியில் பரம்பரை வாரிசு முறையை மாற்ற இந்த வலுப்பெற்ற நிலையைப் பயன் படுத்திக் கொள்ள ஆணுக்கு ஒரு தூண்டுதலை அளித்தது. ஆனால் தாயுரிமைப்படி மரபு வழி இருந்த வரை இப்படி நடக்க முடியாது. ஆகவே தாயுரிமையைத் தூக்கியெறிய வேண்டியதாயிற்று. அது தூக்கியெறியப்பட்டது. இப்பொழுது நமக்குத் தோன்றுவதைப் போல இது அவ்வளவு கஷ்டமானதல்ல. ஏனென்றால் இந்தப் புரட்சி—மனித குலம் சந்தித்த மிக நிர்ணயமான புரட்சிகளில் இதுவும் ஒன்றாகும்—ஒரு குலத்தின் எந்த உறுப்பினனையும் பாதிக்க வேண்டியதில்லை. எல்லா உறுப்பினர்களும் முன் போலவே இருந்து வர முடியும். இனிமேல் ஆண்களின் சந்ததிகள் குலத்துக்குள்ளேயே இருக்க வேண்டும். பெண்களின் சந்ததிகள் குலத்திலிருந்து விலக்கப்பட்டுத் தந்தையின் குலத்துக்கு மாற்றப்பட வேண்டும் என்று சாதாரணமாகத் தீர்மானம் செய்தால் போதும். பெண்வழியாக மரபு வழியைத் தீர்மானித்தல், தாய்வழியாக வாரிசுரிமையைத் தீர்மானித்தல் ஆகிய இரண்டும் தூக்கியெறியப்பட்டன. ஆண்வழி மரபுமுறையும் தந்தைவழியாக வாரிசுரிமை முறையும் அமைக்கப்பட்டன. நாகரிக மக்களினங்களிடையில் இந்தப் புரட்சி எப்படி, எப்பொழுது நிறைவேற்றப்பட்டது என்பதைப் பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. இது முழுவதும் ஏடறியா வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த நிகழ்ச்சியாகும். இது மெய்யாகவே நிறைவேற்றப்பட்டது என்பதற்குக் குறிப்பாக பாஹொஃபென் திரட்டியுள்ள, தாயுரிமைக்குரிய ஏராளமான எச்சங்கள் தேவைக்கும் அதிகமாகவே நிரூபித்துள்ளன. அது எவ்வளவு சுலபமாக நிறைவேற்றப்பட்டது என்பதற்குப் பல

செவ்விந்திய இனக்குழுக்களைப் பார்த்தாலே போதும். செல்வப் பெருக்கத்தின் காரணமாகவும் மாறிப் போன வாழ்க்கை முறையின் (காடுகளிலிருந்து புல்வெளிப் பிரதேசங்களுக்கு இடம் மாறியது) காரணமாகவும் ஓரளவுக்கு நாகரிகம், மத போதகர்கள் ஆகியோரின் தார்மிக செல்வாக்கினாலேயும் அது அந்த இனக்குழுக்களில் சமீப காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இன்னும் நிறைவேறி வருகிறது. மிசூரியைச் சேர்ந்த எட்டு இனக் குழுக்களில் ஆறு ஆண்வழி மரபுமுறையையும் வாரிசுரிமை முறையையும் கொண்டுள்ளன; எஞ்சிய இரண்டு இன்னும் பெண்வழி மரபுமுறையையும் வாரிசுரிமை முறையையும் வைத்துக் கொண்டுள்ளன. ஷானீக்கள், மாயாமிக்கள், டிலாவேக்கள் ஆகியோரிடையே குழந்தைகள் தகப்பனாரிடமிருந்து சொத்தை சுவீகரிக்கச் செய்வதற்கு குழந்தைகளுக்குத் தந்தையின் குலத்திலுள்ள பெயர்களில் ஒன்றைச் சூட்டி அவர்களைத் தந்தையின் குலத்துக்கு மாற்றி விடுவது வழக்கமாகி விட்டது. ''பெயர்களை மாற்றுவதன் மூலம் பொருட்களை மாற்ற முயல்வது மனிதனுடைய உள்ளார்ந்த தர்க்க முறையாகும்! நேரடி நலன் போதிய நோக்கத்தைப் படைக்கின்ற இடங்களிலெல்லாம் சம்பிரதாயத்தை ஊடுருவி உடைத்துக் கொண்டு வெளி வருவதற்கு சம்பிரதாயத்துக்குள்ளாகவே ஓட்டைகளைத் தேடுவதும் அப்படியே!'' (மார்க்ஸ்.) அதன் விளைவாக, அதிகமான குழப்பம் ஏற்பட்டது. தந்தை உரிமைக்கு மாறியதன் மூலமாக மட்டுமே விஷயங்களை மறுபடியும் நேராக்க முடிந்தது, அவை பகுதியளவுக்கு நேராக்கப்பட்டன. ''மொத்தத்தில் இதுவே மிகவும் இயற்கையான மாற்றமாகத் தோன்றுகிறது.'' (மார்க்ஸ்.) பழைய உலகத்தில் நாகரிக நிலையைச் சேர்ந்த மக்களினங்களிடையில் இந்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்குக் கையாண்ட வழிமுறைகளைப் பற்றி ஒப்புநோக்குச் சட்டவியல் நிபுணர்கள் நமக்கு என்ன சொல்லக் கூடும்—அவை பெரும்பாலும் ஊகங்களே—என்று அறிந்து கொள்வதற்கு ம. கவலேவ்ஸ்கி எழுதிய **குடும்பம், உடைமை ஆகியவற்றின் தோற்றமும் பரிணாமமும் பற்றிய சுருக்க வரலாறு** (ஸ்டாக்ஹோம், 1890) என்னும் நூலைப் பார்க்க.

தாயுரிமை தூக்கியெறியப்பட்டது **பெண்ணினம் உலக**

வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வி ஆகும். ஆண் வீட்டிலும் ஆட்சியின் கடிவாளத்தைக் கைப்பற்றினான். பெண் இழி நிலைக்குத் தள்ளப்பட்டாள், அடிமைப்படுத்தப்பட்டாள்; ஆணின் உடலின்ப வேட்கைக்குக் கருவியானாள், கேவலம் குழந்தைகளைப் பெறுகின்ற சாதனமாக ஆகி விட்டாள். இது பெண்களின் நிலையைக் கீழே இறக்கி விட்டது. இது வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்க மக்களிடையில், இன்னும் அதிகமாக, மூலச்சிறப்பான யுகத்தைச் சேர்ந்த கிரேக்க மக்களிடையில் குறிப்பாக வெளிப்படுவதைக் காணலாம்; இந்தத் தாழ்வு நிலை படிப்படியாக முலாம் பூசப்பெற்றும் மாறு வேடத்தில் மறைக்கப்பட்டும் ஓரளவுக்கு நயமான வடிவத்தில் காட்டப்பட்டும் வந்திருக்கிறது. ஆனால் அது ஒழிக்கப்படவில்லை.

இப்படி நிலைநாட்டப்பட்ட ஆணின் ஏகபோக ஆட்சியினால் ஏற்பட்ட முதல் விளைவு இப்பொழுது இடைக் காலக் குடும்ப வடிவமாகத் தோன்றிய தந்தைவழிக் குடும்பத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. அதன் முக்கிய அடையாளம் பலதார மணமல்ல (பலதார மணத்தைப் பற்றிப் பின்னால் எழுதுவோம்); அதற்கு பதிலாக,

> ''சுதந்திரமில்லாதவர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும் இருக்கின்ற பல நபர்களை குடும்பத் தலைவனுடைய தந்தையதிகாரத்தின் கீழ் ஒரு குடும்பமாகத் திரட்டியமைப்பதுதான். செமைட்டு வடிவத்தில் இந்தக் குடும்பத் தலைவன் பலதார மண முறையில் வாழ்கிறான்; சுதந்திரமில்லாதவர்களுக்கு மனைவியும் குழந்தைகளும் உண்டு. அந்த அமைப்பு முழுவதின் நோக்கமெல்லாம் கால்நடை மந்தைகளை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பராமரித்து வளர்ப்பதாகும்.''*

சுதந்திரமில்லாதவர்களை உள்ளிணைத்துக் கொள்வது, தந்தையதிகாரம் ஆகியவைதான் முக்கியமான குணாம்சங்கள். இதன்படி, இந்த வகைக் குடும்ப வடிவத்துக்குத் தலைசிறந்த மாதிரியாக ரோமானியக் குடும்பம் இருக்கிறது. Familia என்ற சொல் ஆரம்பத்தில் நவீன கால அற்பவாதிகளின் இலட்சியத்தை, உணர்ச்சிப் பசப்பும் குடும்பச் சச்சரவும் சேர்ந்து கலவையான இலட்சி

* L. H. Morgan, *Ancient Society*, pp. 465—466.—ப-ர்.

யத்தைக் குறிக்கவில்லை. ஆரம்பத்தில் ரோமானியர்கள் மத்தியில் அது திருமணமானவர்களையும் அவர்களுடைய குழந்தைகளையும் குறிக்கவில்லை, அடிமைகளை மட்டுமே குறித்தது. Famulus என்றால் வீட்டு அடிமை என்று பொருள். Familia என்பது ஒரு நபருக்குச் சொந்தமான அடிமைகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கும். காயுஸ் காலத்தில் கூட familia, id est patrimonium (வாரிசுச் சொத்து) சம்பந்தமாக உயில் எழுதப்பட்டது. ரோமானியர்கள் ஒரு புதிய சமுதாய அமைப்பை வர்ணிப்பதற்காக இந்தச் சொல்லை உருவாக்கினார்கள். இந்த அமைப்பின் தலைவன் தன் கீழ் மனைவியையும் குழந்தைகளையும் சில அடிமைகளையும் ரோமானியத் தந்தையதிகாரத்துக்கு உட்பட்டு அவர்களுடைய வாழ்வையோ, மரணத்தையோ முடிவு செய்கின்ற அதிகாரத்துடன் வைத்திருந்தான்.

''ஆகவே, இந்தச் சொல் லத்தீன் இனக்குழுக்களின் இரும்புக் கவசம் அணிந்த குடும்ப அமைப்பை விடப் பழமையானதல்ல; அது வயல் விவசாயத்துக்குப் பிறகும் சட்ட சம்மதமாக்கப்பட்ட அடிமை முறைக்குப் பின்னும் கிரேக்கர்களும் (ஆரிய) லத்தீனியர்களும் பிரிக்கப்பட்ட பிறகும் ஏற்பட்டது.''*

மார்க்ஸ் இதற்குக் கூடுதலாகப் பின்வருமாறு தெரிவிக்கிறார்: ''நவீன காலக் குடும்பம் அடிமை முறையை (servitus) மட்டுமன்றி பண்ணையடிமை முறையையும் கரு அளவில் தன்னுள் கொண்டிருக்கிறது. ஏனென்றால் அது ஆரம்பத்திலிருந்து கட்டாய விவசாய வேலைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. சமுதாயத்திற்குள்ளும் அதன் அரசிற்குள்ளும் பின்னால் விரிவான அளவில் வளர்ச்சியடையப் போகின்ற எல்லா முரண்பாடுகளையும் அது தனக்குள் குறுவடிவத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது.''

இப்படிப்பட்ட குடும்ப வடிவம் இணை மணம் ஒருதார மணத்துக்கு மாறியதைக் காட்டுகிறது. மனைவியின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக, எனவே குழந்தைகளின் தகப்பனார் இவர்தான் என்பதை உறுதி செய்வதற்காக ஆணின் பரிபூரண அதிகாரத்தின் கீழ் பெண்

* *Ibid.*, p. 470.

வைக்கப்படுகிறாள். அவளை அவன் கொலை செய்தால் அது உரிமையைப் பயன்படுத்துவதைத் தவிர வேறல்ல.

தந்தைவழிக் குடும்பத்துடன் நாம் ஏடறிந்த வரலாற்றுக்குள் நுழைகிறோம்; ஒப்புநோக்குச் சட்டவியல் என்ற விஞ்ஞானம் நமக்கு முக்கியமான உதவியளிக்கக் கூடிய களத்துக்கு வந்து விடுகிறோம். உண்மையாகவே, அது இங்கே நமக்குக் கணிசமான முன்னேற்றம் அளித்திருக்கிறது. Zádruga (நட்புறவுப் பாங்கு என்பதைப் போன்ற அர்த்தத்தைக் கொண்டது) என்ற பெயராலும் அல்லது Bratstvo (சகோதரத்துவம் என்று அர்த்தம்) என்ற பெயராலும் ஸெர்பியர்களிடையிலும் பல்கேரியர்களிடையிலும், சிறிது மாறிய வடிவத்தில் கிழக்கத்திய மக்களினங்களிடையிலும் இன்று கூட நாம் பார்க்கக் கூடிய தந்தைவழி வீட்டுச் சமூகம் என்பது, குழு மணத்திலிருந்து வளர்ச்சியடைந்த தாயுரிமைக் குடும்பத்திற்கும் நவீன உலகம் அறிந்துள்ள தனிப்பட்ட குடும்பத்திற்கும் இடையில் மாறிச் செல்லும் கட்டமாக அமைந்துள்ளது என்று மக்சீம் கவலேவ்ஸ்கி நிரூபித்ததற்கு (**குடும்பம், உடைமை ஆகியவற்றின் தோற்றமும் பரிணாமமும் பற்றிய சுருக்க வரலாறு**, ஸ்டாக்ஹோம், 1890, பக்கங்கள் 60—100) நாம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். பழைய உலகத்தின் நாகரிகமடைந்த மக்களினங்களான ஆரியர்கள், செமைட்டுகள் விஷயத்தில் மட்டுமாவது இது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

இப்படிப்பட்ட குடும்பச் சமூகத்துக்கு இன்றுள்ள சிறப்பான உதாரணமாக தெற்கு ஸ்லாவ் Zádruga இருக்கிறது. அது ஒரு தந்தையின் பரம்பரையில் வந்த சில தலைமுறைகளைச் சேர்ந்த சந்ததியாரையும் அவர்களுடைய மனைவியரையும் கொண்டிருக்கிறது; அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தில் வாழ்கிறார்கள், தமது வயல்களில் பொதுவில் விவசாயம் செய்கிறார்கள், பொதுச் சேமிப்பிலிருந்து உணவும் துணியும் பெற்று உபயோகிக்கிறார்கள், எல்லா உபரிப் பொருட்களையும் பொதுவில் வைத்துக் கொள்கிறார்கள். வீட்டு எசமானனின் (domàćin) தலைமை நிர்வாகத்தின் கீழ் அந்தக் குடும்பச் சமூகம் இருக்கிறது. வெளிவிவகாரங்களில் அந்தச் சமூகத்துக்கு அவனே பிரதிநிதி; சிறிய பொருட்களைப் பற்றி அவன் எப்படி வேண்டு

மானாலும் முடிவு செய்யலாம்; நிதிகளை அவனே நிர்வகிக்கிறான். அவற்றுக்கும் வாடிக்கையான விவகாரங்களை நடத்துவதற்கும் அவனே பொறுப்பாளி. அவன் தேர்ந்தெடுக்கப்படுகிறான், வயதில் அவன் மூத்தவனாக இருக்க வேண்டும் என்பது சிறிதும் அவசியமில்லை. வீட்டு எசமானி (domàćica) பெண்களையும் அவர்களுடைய வேலைகளையும் ஒழுங்குபடுத்துகிறாள். அவள் அநேகமாக வீட்டு எசமானனின் மனைவியாகவே இருப்பாள். இளம் பெண்களுக்குக் கணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவள் முக்கியமான, பெரும்பாலும் தீர்மானமான பங்கு வகிக்கிறாள். எனினும் குடும்ப கவுன்சிலுக்குத்தான் தலைமையான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கவுன்சிலில் வயதுவந்த ஆண்கள், பெண்கள் அனைவரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வீட்டு எசமானன் இந்த மன்றத்திடம் தன்னுடைய செயல்களை விவரிக்கிறான். அந்த மன்றம் முக்கியமான முடிவுகளையெல்லாம் செய்கிறது, குடும்பச் சமூக உறுப்பினர்களிடையே நீதி வழங்குகிறது; முக்கியமான வாங்கல், விற்பனைகளை, குறிப்பாக நிலச் சொத்தை வாங்கல், விற்பனை பற்றி இதுவே முடிவு செய்கிறது, இதரவை.

ருஷ்யாவிலும் இப்படிப்பட்ட பெரிய குடும்பச் சமூகங்கள் இருக்கின்றன என்பது சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் நிரூபிக்கப்பட்டது.* அவை ஒப்ஷீனா, அதாவது கிராமச் சமூகத்தைப் போலவே ருஷ்ய மக்களுடைய வழக்கங்களில் அதே அளவுக்கு ஆழமாக வேரூன்றியுள்ளன என்பது இப்பொழுது பொதுவாகவே அங்கீகரிக்கப்படுகிறது. மிகவும் பழமையான ருஷ்யச் சட்டத் தொகுப்பாகிய யாரஸ்லாவின் பிராவ்தா என்பதில் டால்மேஷியச் சட்டங்களில்[13] இருப்பதைப் போலவே ''வெர்வ்'' (vervj) என்னும் பெயரில் அவை காணப்படுகின்றன. போலிஷ், செக் வரலாற்று மூலாதாரங்களிலும் அவற்றைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

தனிப்பட்ட குடும்பம் (அதன் நவீன அர்த்தத்தில்) பொருளாதார அலகு என்ற முறையில் ஜெர்மானியர்

---

* ம. கவலேவ்ஸ்கி பூர்விக சட்டமுறை, முதல் வெளியீடு, ''குலம்'' (மாஸ்கோ, 1886) என்னும் நூல் இங்கே குறிப்பிடப்படுகிறது.—ப-ர்.

களிடையிலும் ஆதியில் இருக்கவில்லை என்று ஹொய்ஸ்லர் எழுதினார் (ஜெர்மானியச் சட்டமுறையின் அடிப்படைகள்). ''வீட்டுச் சமூகம்''தான் ஆதியில் இருந்தது. அதில் சில தலைமுறைகள் அல்லது தனித்தனிக் குடும்பங்கள் அடங்கும். அநேகமாக சுதந்திரமில்லாதவர்கள் பலரும் அதில் இருந்தார்கள். ரோமானியக் குடும்பமும் கூட இந்த ரகத்தைச் சேர்ந்தது என்று இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது. எனவே அதன் விளைவாக, வீட்டு எசமானனின் பரிபூரண அதிகாரமும் சரி, அவனைப் பொறுத்தமட்டில் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு உரிமைகள் எதுவும் இல்லாதிருப்பதும் சரி சமீப காலத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டுள்ளன. அதைப் போல, அயர்லாந்திலுள்ள கெல்ட் மக்களிடையிலும் இப்படிப்பட்ட குடும்பச் சமூகங்கள் இருந்ததாகக் கருதப்படுகிறது. பிரான்சிலும் நிவர்னேயில் அவை parçonneries என்ற பெயரில் பிரெஞ்சுப் புரட்சிக் காலம் வரை நீடித்திருந்தன. பிரான்ஷ்-கொந்தே பிரதேசத்தில் அவை இன்றளவும் கூட முழுவதும் அழியாமலிருக்கின்றன. லுவான் மாவட்டத்தில் (சவோன் மற்றும் லுவார் பகுதி) பல பெரிய விவசாயி வீடுகளைக் காணலாம். அவற்றில் கூரை வரைக்கும் உயரமுள்ள நடுப் பொது அறையும் அதைச் சுற்றிப் படுக்கையறைகளும் இந்தப் படுக்கையறைகளுக்குச் செல்வதற்கு ஆறிலிருந்து எட்டு வரையுள்ள மாடிப்படிகளும் இருக்கின்றன. இந்த வீடுகளில் ஒரே குடும்பத்தின் சில தலைமுறைகள் வசிக்கின்றன.

இந்தியாவில் நிலத்தைப் பொதுவில் விவசாயம் செய்து வந்த வீட்டுச் சமூகத்தைப் பற்றி மகா அலெக்சாந்தர் காலத்திலிருந்த நியார்கஸ் என்பவர் எழுதியிருக்கிறார். அந்த முறை இன்று கூட அதே வட்டாரத்தில், பஞ்சாபிலும் நாட்டின் வட மேற்குப் பகுதி முழுவதிலும் இருக்கிறது. காக்கஸசில் அது இருப்பதாக கவலேவ்ஸ்கியே சான்றளிக்க முடிந்தது. அல்ஜீரியாவில் கபீல்களிடையே அது இன்னும் இருக்கிறது. அமெரிக்காவில் கூட அது இருந்தது என்று சொல்லப்படுகிறது. சுரிடா விவரித்த, பண்டைக்கால மெக்சிகோவில் இருந்த calpullis[14] போன்றதே இது என்று நிரூபிப்பதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. மறு பக்கத்தில், பெரு நாட்டில் ஒரு வகையான

மார்க் அமைப்பு (பெருவில் இந்த மார்க்கை marca என்று கூறியது விந்தையே) ஸ்பானிஷ் நாடுபிடிப்பு நடந்த காலத்தில், அவ்வப்பொழுது விளைச்சல் நிலம் பங்கிடப்பட்டு வந்த நிலையில், அதாவது தனிநபர் வேளாண்மை நிலவிய காலத்தில் இருந்ததாக குனோவ் ஓரளவுக்குத் தெளிவாக நிரூபித்திருக்கிறார். (*Ausland*[15], *1890*, இதழ்கள் *42—44*.)

எப்படியிருப்பினும், நிலத்தில் பொது உடைமையும் பொது விவசாயமும் கொண்டிருந்த தந்தைவழி வீட்டுச் சமூகம் என்பது இதுவரையில் இருந்ததை விட வேறுவிதமான முக்கியத்துவத்தை இன்று பெற்றுள்ளது. பழைய உலகத்தைச் சேர்ந்த நாகரிக மக்களினங்களிடையிலும் இதர சில மக்களினங்களிடையிலும் தாயுரிமைக் குடும்பத்துக்கும் தனிப்பட்ட குடும்பத்துக்கும் இடையே அது வகித்த முக்கியமான மாற்றக் காலப் பாத்திரத்தை நாம் இனிமேல் சந்தேகிப்பதற்கில்லை. கவலேவ்ஸ்கி இதிலிருந்து மேலும் ஒரு முடிவுக்கு வருகிறார்: இந்த மாற்றக் காலகட்டத்திலிருந்துதான் கிராம அல்லது மார்க் சமூகம் தனிநபர் விவசாயத்துடனும் முதலில் அவ்வப்பொழுதும் பிறகு நிரந்தரமாகவும் விளைச்சல் நிலங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் பங்கு பிரித்துத் தருவதுடனும் கூடியதாக வளர்ச்சி பெற்றெழுந்தது என்பது அவருடைய முடிவாகும். இதைப் பற்றிப் பிறகு எழுதுவோம்.

இந்த வீட்டுச் சமூகங்களுக்குள்ளே நிலவிய குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் ஒன்றைக் கவனித்தாக வேண்டும்: குறைந்தபட்சம் ருஷ்யாவில் மட்டுமாவது, வீட்டின் தலைவன் இளம் பெண்கள், குறிப்பாக தனது மருமகள்மார் விஷயத்தில் தனது பதவியைப் படுமோசமான முறையில் துர்ப்பிரயோகம் செய்து வந்தான், பெரும்பாலும் அவர்களைத் தன்னுடைய காமக்கிழத்திகளாக மாற்றியிருந்தான். இந்த நிலைமைகள் ருஷ்ய நாடோடிப் பாடல்களில் மிகவும் பச்சையாகவே பிரதிபலிக்கப் பட்டுள்ளன.

தாயுரிமை தூக்கியெறியப்பட்டதைத் தொடர்ந்து ஒருதார மண முறை வேகமாக வளர்ந்தது. ஒருதார மண முறைக்கு வருமுன்னர் பலதார மண முறையைப் பற்றியும் பல கணவர் மண முறையைப் பற்றியும் இன்னும் சிறிது சொல்வோம். இவ்விரண்டு மண முறைகளும் ஏதா

வதொரு நாட்டில் அக்கம்பக்கமாக நிலவியிருந்தாலொழிய—அப்படி அவை எந்த ஒரு நாட்டிலும் இருக்கவில்லை என்பது எல்லோரும் அறிந்ததே—அவை விதிவிலக்குகளாக, வரலாற்றில் அபூர்வமாக நிகழும் சம்பவமாகத் தான் இருக்க முடியும். பலதார மண முறையிலிருந்து விலக்கப்பட்ட ஆண்கள் பல கணவர் மண முறையில் எஞ்சிய பெண்களுடன் தங்களைத் திருப்தி செய்து கொள்ள முடியவில்லை; சமூக அமைப்புகள் எப்படி இருப்பினும் இருபாலாரின் எண்ணிக்கை இதுவரை ஓரளவுக்கு சமமாகவே இருந்து வந்தது; எனவே இந்த மண வடிவமோ, அந்த மண வடிவமோ பொது வழக்காக அமையப்பெற முடியவில்லை. ஓர் ஆண் பலதார மணத்தில் ஈடுபடுதல் என்பது அடிமை முறையின் ஒரு விளைவு என்பது மெய்யே. அதுவும் சில அசாதாரணமான உதாரணங்களுடன் நின்றுவிட்டது. செமைட்டுக் குடும்பத்தில் குடும்பத் தலைவன் மட்டுமே—அதிகமாகப் போனால், அவனுடைய இரண்டொரு புத்திரர்கள் மட்டுமே—பலதார மணத்தில் வாழ்ந்தார்கள். மற்றவர்கள் ஒரு ஆணுக்கு ஒரு மனைவியுடன் திருப்தி அடைய வேண்டியிருந்தது. கீழ்த்திசை நாடுகள் முழுவதிலும் இதே நிலைதான் இன்று நிலவுகிறது. பலதார மணம் என்பது செல்வர்களுக்கும் பிரபுக்களுக்கும் உரிய சலுகை ஆகும்; முக்கியமாக, பெண்ணடிமைகளை விலைக்கு வாங்குவதன் மூலம் இம்மனைவியர் சேகரிக்கப்பட்டார்கள். பெருந்திரளான மக்கள் ஒருதார மணத்திலேயே வாழ்கின்றனர். இதே போன்ற விதிவிலக்கைத் தான் இந்தியாவிலும் திபேத்திலும் உள்ள பல கணவர் மணமும் தருகிறது. அது குழு மணத்திலிருந்து தோன்றியது சந்தேகத்திற்கிடமின்றி சுவாரசியமான விஷயம் என்பதால் அதை இன்னும் நெருங்கி ஆராய்வது அவசியமே. எப்படி இருப்பினும், பல கணவர் மணம் நடைமுறையில் முகமதியர்களுடைய சந்தேகம் நிறைந்த அந்தப்புரங்களை விட மிகவும் சகிக்கக் கூடியதாகத் தோன்றுகிறது. இந்தியாவில், குறைந்தபட்சம் நாயர்கள் சமூகத்தில் ஆண்கள் மூன்று அல்லது நான்கு அல்லது அதற்கும் அதிகமானவர்கள் குழுக்களாக அமைந்து ஒரே மனைவியைப் பொதுவில் கொண்டிருக்கின்றனர். ஆனால் அதே சமயத்தில் அந்த ஆண்களில் ஒவ்வொருவரும் வேறு

மூன்று அல்லது அதற்கும் அதிகமான நபர்களோ கொண்ட குழுக்களாக அமைந்து ஒரே மனைவியைப் பொதுவில் கொண்டிருக்கலாம்; அதே மாதிரி மூன்றாவது மனைவி, நான்காவது மனைவி என்று போய்க் கொண்டே இருக்கலாம். இந்தத் திருமணக் கிளப்களில் ஒரு புதிய மண வடிவத்தை—கிளப் மணத்தை—மாக்லென்னான் கண்டுபிடிக்காதது அதிசயமே. ஆண்கள் ஒரே சமயத்தில் இப்படி சில கிளப்களில் சேர்ந்திருக்கலாம்; இதை அவரே வர்ணித்திருக்கிறார். எனினும் இந்தக் கிளப் திருமணம் என்பது அசலான பல கணவர் மணம் அல்ல; அதற்கு மாறாக, ஜிரோ-டெய்லோன் குறித்துள்ளபடி, இது குழு மணத்தின் ஒரு விசேஷமான வடிவமே. இதில் ஆண்கள் பலதார மணத்தில் வாழ்கிறார்கள், பெண்கள் பல கணவர் மணத்தில் வாழ்கிறார்கள்.

4. **ஒருதார மணக் குடும்பம்.** அநாகரிக நிலையின் இடைக் கட்டம் தலைக்கட்டத்துக்கு மாறிச் செல்லும் காலப் பகுதியில் இணைக் குடும்பத்திலிருந்து இது தோன்றுகிறது என்பதை ஏற்கெனவே சுட்டிக்காட்டினோம். அதன் இறுதி வெற்றி நாகரிகம் தொடங்குவதற்குரிய அடையாளக் குறிகளில் ஒன்று. அது ஆணின் மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் தெளிவான நோக்கம் விவாதத்திற்கு இடமில்லாத தந்தைமுறையுள்ள குழந்தைகளைப் பெறுவதுதான். இக்குழந்தைகள் உரிய காலத்தில் தமது தகப்பனாரின் இயற்கையான வாரிசுகள் என்ற முறையில் அவருடைய சொத்தைச் சுவீகரிக்கலாம் என்பதற்காக இந்தத் தந்தைமுறை அவசியமாயிற்று. திருமண உறவின் அதிகமான இறுக்கத்தில்தான் இணை மணத்திலிருந்து ஒருதார மணக் குடும்பம் வேறுபட்டிருக்கிறது. இப்பொழுது இரு தரப்பினரும் விரும்புகின்ற பொழுது இதை ரத்து செய்ய முடியாது. இப்பொழுது ஆண் மட்டுமே அதை ரத்து செய்து தன்னுடைய மனைவியைத் தள்ளி வைக்கலாம் என்பது விதியாகி விட்டது. மண வாழ்வில் உண்மையாக நடந்து கொள்ளாதிருக்கின்ற உரிமை இப்பொழுதும் கூட ஆணுக்கே உண்டு. குறைந்த பட்சம், வழக்கம் அதை அனுமதிக்கிறது (காமக்கிழத்தியை வீட்டில் கொண்டுவந்து வைத்துக் கொள்ளாத

வரையில் கணவனுக்கு இந்த உரிமையை Code Napoléon* தெளிவாகவே வழங்குகிறது)[16]. சமுதாயம் மேலும் வளர்ச்சியடைகின்ற பொழுது இந்த உரிமை மேன்மேலும் பிரயோகிக்கப்படுகிறது. பெண் பண்டைக்காலப் பாலியல் நடைமுறையை நினைவுபடுத்திக் கொண்டு அதை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்பினால் அவள் முன்னெப்போதையும் விடக் கடுமையாக தண்டிக்கப்படுகிறாள்.

கிரேக்கர்களிடையில் இந்தப் புதிய குடும்ப வடிவத்தை அதன் முழுக் கடுமையுடன் நாம் பார்க்கிறோம். மார்க்ஸ் குறிப்பிட்டபடி, புராணத்தில் பெண் தெய்வங்கள் வகிக்கின்ற நிலை ஆரம்பக் காலத்தைக் காட்டுகிறது; அப்பொழுது பெண்கள் பிற்காலத்தைக் காட்டிலும் சுதந்திரமான, மதிப்புள்ள நிலையில் இருந்தனர். ஆனால் வீர யுகத்தில் ஆண்களின் மேலாதிக்கம், பெண்ணடிமைகளின் போட்டி ஆகியவற்றினால் பெண்கள் ஏற்கெனவே கீழ்நிலைக்குத் தாழ்த்தப்பட்டு விட்டதைப் பார்க்கிறோம். டெலிமாகஸ் தன் தாயாரின் பேச்சில் குறுக்கிட்டு வாய் மூடும்படி அவளைக் கட்டளையிடுவதை நாம் ஒடிஸி என்னும் காவியத்தில் படிக்கலாம்.** ஹோமரின் காவியத்தில் சிறைபிடிக்கப்பட்ட இளம் பெண்கள் வெற்றியாளர்களுடைய காமவெறிக்கு இலக்காகின்றனர். இராணுவத் தலைவர்கள் பதவி வரிசைப்படி ஒருவர் பின் ஒருவராக அழகான பெண்களைத் தமக்குப் பொறுக்கிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு பெண்ணடிமைக்காக அஹில்லசும் அகமெம்னானும் சண்டை போட்டுக் கொள்வதைச் சுற்றி இலியாத் என்னும் காவியம் சுழல்கிறது என்பதை நாம் அறிவோம். ஹோமரின் ஒவ்வொரு முக்கியமான வீரனுடன் சேர்த்து ஓர் அடிமைப் பெண் குறிப்பிடப்படுகிறாள்; அவள் அந்த வீரனுடைய கூடாரத்தில் வசிக்கிறாள், அவன் படுக்கையைப் பகிர்ந்து கொள்கிறாள். நாட்டுக்குத் திரும்புகின்ற பொழுது இந்தப் பெண்கள் கணவன்மார்களுடைய வீடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். எஸ்கிலஸ் எழுதிய நாடகத்தில் அகமெம்னான் கஸ்ஸான்டிராவை அப்படித்தான் வீட்டுக்குக்

* —நெப்போலியன் சட்டம்.—ப-ர்.

** ஹோமர், ஒடிஸி, முதல் பாடல்.—ப-ர்.

கொண்டு செல்கிறான்.* இந்தப் பெண்ணடிமைகளுக்குப் பிறக்கும் புத்திரர்கள் தகப்பனாருடைய சொத்தில் ஒரு சிறு பகுதியைப் பெறுகிறார்கள்; அவர்கள் சுதந்திர மனிதர்களாகக் கருதப்படுகிறார்கள். இப்படி டெலமானுக்கு முறைக்கேடாகப் பிறந்த மகனே டியூகுரோஸ் என்பவன்; அவன் தன் தகப்பனாருடைய பெயரை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டான். திருமணம் செய்து கொண்ட மனைவி இதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும், ஆனால் தன்னைப் பொறுத்தமட்டில், கற்புடனும் தாம்பத்திய ஒழுக்கத்துடனும் இருக்க வேண்டும். நாகரிகக் காலத்தில் இருந்ததை விட வீர யுகத்தில் கிரேக்க மனைவி அதிக மரியாதையுடன் நடத்தப்பட்டாள் என்பது உண்மையே. ஆனால் அவளுடைய கணவனைப் பொறுத்தமட்டில், அவள் அவனுடைய சட்டபூர்வமான வாரிசுகளுக்குத் தாயாகவும் அவனுடைய முக்கியமான வீட்டு வேலைக்காரியாகவும் பெண்ணடிமைகளை மேற்பார்வை செய்பவளாகவும் இருந்தாள். அவன் விரும்புகின்ற பொழுது இந்தப் பெண்ணடிமைகளைத் தன் காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்ளலாம், அவ்விதமே வைத்துக் கொள்ளவும் செய்தான். ஒருதார மணத்துக்குப் பக்கத்திலேயே அடிமை முறையும் இருந்ததனால்தான், ஆணுக்கு முற்றிலும் சொந்தமாக அழகிய இளம் பெண்ணடிமைகள் இருந்ததனால்தான் ஆரம்பத்திலிருந்தே ஒரு தார மணம் என்பது பெண்களுக்கு மட்டுமே என்னும் பிரத்யேகமான தன்மையை முத்திரையாகக் கொண்டிருந்தது, அத்தன்மை இன்றும் கூட அதில் இருக்கிறது.

பிற்காலத்தைச் சேர்ந்த கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில், நாம் டோரியர்களையும் அயோனியர்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். முந்தியவர்கள் ஹோமர் குறிப்பிடுவதை விடப் பல அம்சங்களில் மிகவும் பழமையான மண உறவுமுறைகளைக் கொண்டிருந்தார்கள்; அதற்கு ஸ்பார்டா மூலச்சிறப்பான உதாரணமாக இருந்தது. ஸ்பார்டாவில் இணை மண வடிவத்தை நாம் காண்கிறோம். அது அங்கே அரசைப் பற்றி நிலவிய கருத்தோட்டங்களுக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டிருந்தது. அந்த

* எஸ்கிலஸ், ஒரெஸ்தெயா. அகமெம்னான்.—ப-ர்.

மண வடிவம் குழு மணத்தின் பல அம்சங்களைத் தன்னிடம் இன்னும் கொண்டிருந்தது. குழந்தைகள் பிறக்கவில்லை என்றால் திருமணங்கள் ரத்து செய்யப்பட்டன. அனாக்சன்டிரிடஸ் என்னும் அரசன் (கி.மு. சுமார் 560) முதலாவது மலட்டு மனைவியைத் தவிர இரண்டாவது மனைவியையும் கொண்டிருந்தான்; இரண்டு குடும்பங்களை நடத்தினான். இதே காலத்தைச் சேர்ந்த அரிஸ்டோனஸ் என்னும் அரசனுடைய இரண்டு மனைவியரும் மலடிகள். அவன் ஒரு மனைவியைப் போக விட்டுவிட்டு மூன்றாவது மனைவியாக ஒரு பெண்ணைக் கைக்கொண்டான். மறு பக்கத்தில், சில சகோதரர்கள் ஒரே மனைவியைப் பொதுவில் வைத்துக் கொள்ளலாம். நண்பனுடைய மனைவியை விரும்புகின்ற நபர் அவளை அவனுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஒருவன் தன் மனைவியை ''பொலிகாளை'' என்று பிஸ்மார்க் வர்ணிக்கக் கூடிய நபருக்கு—அவன் குடிமகனாக இல்லாவிட்டாலும் கூட—தருவது முறையானதாகக் கருதப்பட்டது. ப்ளூடார்கின் நூலில் பின்வரும் சம்பவம் வர்ணிக்கப்படுகிறது: ஸ்பார்டாவைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் ஒருவன் அவளைத் தான் காதலிப்பதாகச் சொல்லிப் பின்தொடர்கிறான். அவள் தன் கணவனைப் போய்ப் பார்க்குமாறு அவனை அனுப்பி வைக்கிறாள். இது அதிகமான பாலியல் சுதந்திரத்தைக் குறிப்பதாக ஷோமான் கூறுகிறார். ஆகவே, மெய்யான கூடா ஒழுக்கம், அதாவது கணவனுக்குத் தெரியாமல் மனைவி சோரம் போவது கேள்விப்படாத விஷயமாகவே இருந்தது. மறு பக்கத்தில், ஸ்பார்டாவில், அதன் உச்ச நிலையிலாவது, வீட்டுச் சேவக அடிமை முறை என்பது கேள்விப்படாததாகும். பண்ணையடிமை ஹெலட்டுகள் எனப்பட்டோர் பண்ணைகளில் ஒதுக்கப்பட்டுத் தனியாக வாழ்ந்து வந்தனர். எனவே ஸ்பார்டியாட்டுகள்[17] எனப்படுவோர் அந்தப் பெண்களுடன் உடலுறவு கொள்வதற்குச் சபலம் குறைவாக இருந்தது. இத்தகைய சூழ்நிலையில், ஸ்பார்டாவைச் சேர்ந்த பெண்கள் மற்ற கிரேக்கப் பெண்கள் எல்லோரையும் விட மிகவும் அதிக கௌரவமான நிலையில் இருந்தார்கள் என்பது முற்றிலும் இயற்கையே. பண்டைக்காலத்தவர்கள் கிரேக்கப் பெண்களிடையில் ஸ்பார்டாவின் பெண்களையும் அதீனியப்

பொதுமகளிரில் பொறுக்கியெடுத்த பகுதியினரையும் பற்றி மட்டுமே மரியாதையுடன் பேசினார்கள். அந்தப் பெண்களின் பேச்சுகளை ஏட்டில் பதிவு செய்யத் தக்கவையாகக் கருதினார்கள்.

அயோனியர்களிடையில்—இவர்களுக்கு ஏதன்ஸ் குறியடையாளமாக இருந்தது — விஷயங்கள் முற்றிலும் வேறுவிதமாக இருந்தன. இளம் பெண்கள் நூல் நூற்றல், நெசவு செய்தல், துணி தைத்தல் ஆகியவற்றையே கற்றார்கள்; அதிகமாகப் போனால், சிறிதளவு படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் அநேகமாக முற்றிலும் தனிமையில் வைக்கப்பட்டிருந்தார்கள்; பெண்களுடன் மட்டுமே உறவாடினார்கள். வீட்டில் பெண்கள் வசிக்கும் பகுதி தனிப் பகுதியாக இருந்தது. அது மேல் மாடியிலோ, வீட்டின் பின்பகுதியிலோ இருந்தது. அங்கே ஆண்கள் சுலபமாகப் போக முடியாது, குறிப்பாக அன்னியர்கள் நுழையவே முடியாது. ஆண்கள் வீட்டுக்கு வந்தால் பெண்கள் இத்தனிப் பகுதிக்குப் போய் விடுவார்கள். பெண்ணடிமைகள் உடன் வந்தாலொழிய பெண்கள் வெளியே போவதில்லை. வீட்டில் அவர்கள் அநேகமாகக் காவலில்தான் வைக்கப்பட்டிருந்தார்கள். பிறன் மனைவியைக் கூடுபவர்களுக்கு அச்சமூட்டுவதற்காக மோலோசிய வேட்டைநாய்கள் வைக்கப்பட்டிருந்தன என்று அரிஸ்டஃபானஸ் கூறுகிறார்.* குறைந்தபட்சமாகப் பார்த்தால், ஆசிய நகரங்களில், பெண்களைக் காவல் செய்வதற்கு அலிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஹெரடோட்டஸ் காலத்திலேயே ஹியோஸ் தீவில் வர்த்தகத்துக்காக அலிகள் உற்பத்தி செய்யப்பட்டார்கள். அந்த அலிகள் அநாகரிகர்களுக்காக மட்டுமல்ல என்று வாக்ஸ்முத் கூறுகிறார். யூரிபிடிசின் நாடகத்தில் மனைவி oikurema**, அதாவது வீட்டைக் கவனித்துக் கொள்வதற்குரிய பொருள் (இச்சொல் அஃறிணையில் உள்ளது) என்று வர்ணிக்கப்படுகிறாள். உண்மையிலேயே குழந்தையைப் பெற்றெடுக்கின்ற வேலை தவிர அதீனிய

* அரிஸ்டஃபானஸ், ஃபெஸ்மஃபோரியாக்களின் திருவிழாவில் பெண்கள்.— ப-ர்.

** யூரிபிடிஸ், ஒரெஸ்தஸ்.— ப-ர்.

னுக்கு அவள் வீட்டின் தலைமை வேலைக்காரிதான், மற்றபடி அதிகமல்ல. கணவனுக்கு அவனுடைய உடற்பயிற்சியும் பொது விவகாரங்களும் இருந்தன. அவற்றிலிருந்து மனைவி விலக்கப்பட்டிருந்தாள். இவற்றுடன் கூடுதலாக, அவனுடைய விருப்பத்துக்குப் பெண்ணடிமைகளும் இருந்தார்கள். மேலும், ஏதன்சின் உச்ச கட்டத்தில் விபசாரம் பரந்த அளவில் நடைபெற்றது; குறைந்தபட்சமாகக் கூறினால், அரசு அதற்கு உதவி செய்தது. இந்த விபசாரம் ஒன்றின் அடிப்படையில் மட்டுமே பிரபலமான கிரேக்கப் பெண்கள் வளர்ச்சியடைந்தார்கள். ஸ்பார்டாவின் பெண்கள் தமது குணச்சிறப்பால் உயர்ந்ததைப் போல கிரேக்கப் பெண்கள் தம்முடைய மதிநுட்பத்தாலும் கலாரசனையாலும் பண்டைக்காலப் பெண்களின் பொதுவான தரத்துக்கு மேலே உயர்ந்து நின்றார்கள். ஒருத்தி பெண்ணாக இருக்க வேண்டுமென்றால் அவள் முதலில் பொதுமகளாக இருக்க வேண்டும் என்ற நிலை அதீனியக் குடும்பத்தைப் பற்றிய மிகக் கடுமையான கண்டனமாகும்.

காலப் போக்கில் மற்ற அயோனியர்கள் மட்டுமன்றி, மூல நாட்டிலும் காலனிகளிலும் இருந்த கிரேக்கர்கள் அனைவருமே இந்த அதீனியக் குடும்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு தமது குடும்ப உறவுகளை மேன்மேலும் உருவாக்கினார்கள். எனினும் எவ்வளவுதான் தனிமைப்படுத்தலும் காவலும் இருந்த போதிலும் கணவன்மார்களை வஞ்சிப்பதற்கு கிரேக்கப் பெண்களுக்கு அடிக்கடி வாய்ப்புகள் கிடைத்தன. சொந்த மனைவியருடன் காதல் செய்வதற்கு வெட்கப்பட்ட அந்தக் கணவர்கள் பொதுமகளிருடன் பலவிதமான காதல் லீலைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் பெண்களைத் தாழ்வுபடுத்தியது ஆண்களுக்கு எதிராகவே திரும்பியது, அவர்களையும் தாழ்வுபடுத்தியது. கடைசியில், அவர்கள் சிறுவர்களுடன் முறைகேடான உடலுறவு கொள்கின்ற நிலைக்குக் கீழிறங்கினார்கள்; கானிமீடு பற்றிய கட்டுக்கதையை வைத்துக் கொண்டு அவர்கள் தம்மையும் தமது தெய்வங்களையும் தாழ்வுபடுத்திக் கொண்டார்கள்.

பண்டைக்காலத்தில் மிகவும் நாகரிகமுள்ள, உயர்ந்த வளர்ச்சி பெற்ற மக்களினத்தில் நாம் அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய அளவில் ஒருதார மண முறையின்

தோற்றம் இப்படித்தான் இருந்தது. அது தனிநபர் பாலியல் காதலினால் ஏற்படவில்லை, அத்துடன் அதற்கு சிறிதும் சம்பந்தமில்லை. ஏனென்றால் முன்போலவே திருமணங்கள் வசதிக்காகச் செய்து கொண்ட திருமணங்களாகவே இருந்தன. இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளாதார நிலைமைகளை—அதாவது, ஆதிகால, இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை—அடிப்படையாகக் கொண்டு தோன்றிய முதல் குடும்ப வடிவம் அது. குடும்பத்தை ஆண் ஆட்சி செய்தல், தன்னுடையது எனக் கூறக் கூடிய குழந்தைகளைப் பெறுதல், தன்னுடைய செல்வத்துக்கு வாரிசுகளைப் பெறுதல் ஆகியவை மட்டுமே ஒருதார மணத்தின் இலட்சியங்கள் என்று கிரேக்கர்கள் ஒளிவுமறைவில்லாமல் ஒத்துக் கொண்டார்கள். மற்றபடி, அது ஒரு சுமை. தெய்வங்களுக்கும் அரசுக்கும் மூதாதையர்களுக்கும் நிறைவேற்றித் தீர வேண்டிய கடமை. ஏதன்சில் சட்டம் திருமணத்தைக் கட்டாயமாக்கியது மட்டுமன்றி, திருமணக் கடமைகள் என்று சொல்லப்பட்டவற்றில் குறைந்தபட்சக் கடமைகளை ஆண் நிறைவேற்றுவதையும் கட்டாயமாக்கியது.

ஆக, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு சமரசமாக ஒருதார மண முறை வரலாற்றில் தோன்றவில்லை; அத்தகைய சமரசத்தின் உச்ச வடிவமாக அது தோன்றவில்லை என்பது நிச்சயம். அதற்கு மாறாக, ஒரு பால் மற்றொரு பாலை அடிமைப்படுத்துதலாக அது தோன்றுகிறது; ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய காலங்களில் அறவே அறிந்திராத இரு பால் சச்சரவைப் பற்றிய பிரகடனமாகவே அது தோன்றுகிறது. மார்க்சும் நானும் 1846இல் எழுதிய, பிரசுரிக்கப்படாத பழைய கையெழுத்துப் பிரதியில்* பின்வருமாறு எழுதினோம்: ''குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேலைப் பிரிவினைதான் முதல் வேலைப் பிரிவினை ஆகும்''. இன்று இத்துடன் நான் பின்வருமாறு சேர்த்துக்

* ஜெர்மன் சித்தாந்தம் என்னும் நூல் இங்கு குறிப்பிடப்படுகிறது.—ப-ர்.

கூறுவேன்: வரலாற்றில் தோன்றிய முதல் வர்க்கப் பகைமை ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பகைமை வளர்வதுடன் பொருந்துகிறது; முதல் வர்க்க ஒடுக்குமுறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்கு கின்ற ஒடுக்குமுறையுடன் பொருந்துகிறது. ஒருதார மண முறை வரலாற்று ரீதியில் மகத்தான முன்னேற்றமாகும். ஆனால் அதே சமயத்தில், அது அடிமைமுறையுடனும் தனிச்சொத்துடனும் சேர்ந்தாற்போலவே இன்றளவும் நீடிக்கின்ற ஒரு யுகத்தைத் துவக்கியது. அந்த யுகத்தில் ஒவ்வொரு முன்னேற்றமும் அதே போல் சார்புநிலையில் ஒரு பின்னடைவாகவும் இருக்கிறது; அதில் ஒரு குழுவின் துன்பத்தையும் ஒடுக்கப்படுதலையும் ஆதார மாகக் கொண்டு மற்றொரு குழு நல்வாழ்க்கையும் வளர்ச்சியும் அடைகிறது. அது நாகரிக சமுதாயத்தின் உயிரணு வடிவமாகும். அதன் மூலமாக, அந்தச் சமுதாயத்தில் முழு வளர்ச்சி அடைகின்ற பகைமை களின், முரண்பாடுகளின் தன்மையை நாம் ஏற் கெனவே ஆராய முடியும்.

இணைக் குடும்பத்தின் வெற்றியுடனோ, ஒருதார மண முறையின் வெற்றியுடனோ கூட உடலுறவுக்கு இருந்த பழைய, சார்புரீதியான சுதந்திரம் நிச்சயமாக மறைய வில்லை.

''பழைய திருமண வாழ்க்கை முறை பூனலுவா குழுக் கள் படிப்படியாக மறைந்ததன் மூலம் இப்பொழுது மேலும் குறுகலான வரம்புகளுக்குள் குறுக்கப்பட்டு, முன் னேறி வரும் குடும்பத்தை இன்னும் சூழ்ந்து நின்றது, அது நாகரிக நிலையின் எல்லை வரைக்கும் அதைப் பின் தொடரும்.... கடைசியில் பொதுமகளிர் முறையின் புதிய வடிவத்தில் அது மறைந்தது. இந்த வடிவம் குடும் பத்தின் மீது விழுகின்ற கரிய நிழல் போல நாகரிகச் சமூகத்தில் மனிதகுலத்தைப் பின்தொடர்கிறது.''

பொதுமகளிர் முறை என்பதை ஒருதார மணத்துக்கு உடனுடனாக ஆண்களுக்கும் மணமாகாத பெண்களுக்கும் மண நிலைக்குப் புறம்பான உடலுறவு என்று மார்கன் பொருள் கொள்கிறார். இது நாகரிக காலம் முழுவதிலும் பல்வேறு வடிவங்களில் செழித்து வளர்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. அது பகிரங்க விபசாரமாகத்

தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இந்தப் பொதுமகளிர் முறை நேரடியாகக் குழு மணத்திலிருந்து வந்ததாக, கற்புரிமையை வாங்குவதற்குச் செலுத்தும் காணிக்கை என்ற முறையில் பெண்கள் உடலுறவுக்குத் தம்மை ஒப்படைத்ததிலிருந்து வந்ததாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். பணத்துக்காக உடலுறவுக்கு உடன்படுதல் முதலில் ஒரு மதச் சடங்காக இருந்தது. அந்தச் சடங்கு காதல் தெய்வத்தின் ஆலயத்தில் நடைபெற்றது. அந்தப் பணமும் முதலில் ஆலயத்தின் கருவூலப் பெட்டிகளுக்குச் சென்றது. அர்மீனியாவிலுள்ள அனெய்டிசின் ஹாய்ரொடியூல்களும்[18] கோரிந்திலுள்ள அஃப்ரோடைடியின் ஹாய்ரொடியூல்களும் இந்தியாவில் ஆலயங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தேவதாசிகளும் (அவர்கள் பாயதேர்கள் என்று சொல்லப்பட்டனர்—இது போர்த்துகீசிய bailadeira, அதாவது நடனமங்கை என்ற சொல்லின் திரிபாகும்) முதன்முதலில் வந்த விபசாரிகள். இப்படிக் காணிக்கைக்காகத் தம்மை ஒப்படைக்கின்ற முறை ஆதியில் எல்லாப் பெண்களுக்கும் உரிய கடமையாகும். பின்னர் அவர்கள் எல்லோருடைய சார்பிலும் பெண் பூசாரிகள் மட்டும் அதைக் கடைப்பிடித்தார்கள். மற்ற மக்களினங்களிடையில் திருமணத்துக்கு முன்பு இளம் பெண்களுக்குத் தரப்பட்டிருந்த உடலுறவுச் சுதந்திரத்திலிருந்து பொதுமகளிர் முறை தோன்றி வளர்ந்துள்ளது—ஆகவே இதுவும் குழு மணத்தின் எச்சம்தான்—இன்னொரு வழியாக நம்மிடம் வந்திருக்கிறது. மிகவும் முந்திய காலமாகிய அநாகரிக நிலையின் தலைக்கட்டத்திலேயே சொத்து வேறுபாடு ஏற்பட்ட பொழுது அடிமையுழைப்புக்குப் பக்கத்திலேயே இங்குமங்குமாகக் கூலியுழைப்பும் தோன்றுகிறது. அதே சமயத்தில், அதன் அவசியமான தொடர்ச்சியாக, பெண்ணடிமையைப் பலவந்தம் செய்வதற்குப் பக்கத்தில் சுதந்திரமான பெண்கள் விபசாரத்தைத் தொழிலாகக் கொள்வதும் தோன்றுகிறது. இப்படி, குழு மணம் நாகரிகத்துக்கு அளித்திருக்கின்ற பரம்பரைச் சொத்து இரு தரப்புள்ளது. நாகரிகம் படைத்தவை அனைத்தும் எப்படி இரு தரப்பும், இரு பேச்சும், சுய முரண்பாடும் பகைமையும் கொண்டிருக்கின்றனவோ, அப்படிப்பட்டதே இதுவும்: ஒரு பக்கத்தில் ஒருதார மண

முறை, மறு பக்கத்தில் பொதுமகளிர் முறை—இதனுள் விபசாரம் என்ற அதன் மிகத் தீவிரமான வடிவமும் அடங்கும். மற்ற எந்த சமுதாய உறவுமுறையையும் போலப் பொதுமகளிர் முறையும் ஒரு சமுதாய உறவு முறையே. அது பழைய புணர்ச்சிச் சுதந்திரத்தின் தொடர்ச்சியே—ஆண்களுக்குச் சாதகமான தொடர்ச்சி. குறிப்பாக ஆளும் வர்க்கத்தினர் எதார்த்தத்தில் இதை சகித்துக் கொள்வது மட்டுமன்றி ஆர்வத்துடன் கடைப் பிடித்தாலும் அதைப் பேச்சளவில் கண்டிக்கிறார்கள். ஆனால் எதார்த்தத்தில் இந்தக் கண்டனம் விபசாரத்தில் ஈடுபடுகின்ற ஆண்களைத் தாக்கவில்லை, பெண்களைத் தான் தாக்குகிறது. பெண்பால் மீது ஆண்பால் செலுத் தும் சர்வ ஆதிக்கம் சமூகத்தின் அடிப்படையான விதி என்று மீண்டும் பிரகடனம் செய்வதற்காகப் பெண்கள் பகிஷ்காரம் செய்யப்பட்டு, சமூகத்துக்கு வெளியே தள்ளப்படுகிறார்கள்.

எனினும் இதனால் ஒருதார மண முறைக்குள்ளேயே இரண்டாவது முரண்பாடு வளர்கிறது. பொதுமகளிர் முறையின் மூலம் சொகுசான வாழ்க்கை நடத்துகின்ற கணவனுக்குப் பக்கத்திலேயே புறக்கணிக்கப்பட்ட மனைவியும் நிற்கிறாள். ஆப்பிளில் ஒரு பாதியைத் தின்று விட்ட பிறகு முழு ஆப்பிளைக் கையில் வைத்திருக்க முடி யாது என்பதைப் போல முரண்பாட்டில் ஒரு பாதி இல்லா மல் மறு பாதியை மட்டும் கொள்வது சாத்தியமல்ல. எனினும் ஆண்கள் வேறுவிதமாக நினைத்துக் கொண்ட தாகத் தோன்றுகிறது—மனைவியர்கள் அவர்களுக்குப் பாடம் புகட்டுகின்ற வரை. ஒருதார மண முறையுடன் அதற்கு முன்பு இல்லாத இரண்டு நிரந்தரமான சமுதாயப் பிரமுகர்கள் காட்சியில் தோன்றுகிறார்கள்—மனைவியின் கள்ளக் காதலனும் மனைவியால் வஞ்சிக்கப்பட்ட கணவ னும். பெண்கள் மீது ஆண்கள் வெற்றி பெற்று விட்டார் கள், ஆனால் வெற்றியாளர்களுக்கு முடி சூட்டுகின்ற வேலையை தோற்றவர்கள் பெருந்தன்மையுடன் மேற் கொண்டார்கள். மனைவியின் கூடா ஒழுக்கம்—அது தடை செய்யப்பட்டது, கடுமையாகத் தண்டிக்கப்பட் டது, ஆனால் அதை ஒழிக்க முடியவில்லை—ஒருதார மண முறைக்கும் பொதுமகளிர் முறைக்கும் பக்கத்தில் தவிர்க்க

முடியாத சமுதாய உறவுமுறையாகி விட்டது. குழந்தைகளுடைய உண்மையான தந்தை யார் என்பது முன்பு போலவே இப்பொழுதும், அதிகபட்சமாகப் பார்த்தால், ஒரு தார்மிக நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டிருக்கின்ற விஷயமாகி விட்டது. தீர்வு காண முடியாத இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக Code Napoléonஇன் 312வது ஷரத்து பின்வருமாறு உத்தரவிட்டது:

"L'enfant conçu pendant le mariage a pour père le mari"—''மண வாழ்க்கையில் கருவுற்ற குழந்தைக்குக் கணவனே தந்தை ஆவார்''.

மூவாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்ற ஒருதார மணத்தின் இறுதி விளைவு இதுதான்.

ஆக, தனிப்பட்ட குடும்பத்தில், அதன் வரலாற்று ரீதியான தோற்றத்தை உண்மையாகப் பிரதிபலிக்கின்ற சமயங்களிலும் ஆணுடைய தனியாதிக்கத்தின் விளைவாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் சச்சரவைத் தெளிவாக வெளிப்படுத்தும் சமயங்களிலும் நமக்கு ஒரு சிற்றுருவ ஓவியம் கிடைக்கிறது. அதில் சமுதாயத்திலுள்ள பகைமைகளும் முரண்பாடுகளும் தெரிகின்றன. நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து வர்க்கங்களாகப் பிரிந்த சமுதாயம் அந்தப் பகைமைகளிலும் முரண்பாடுகளிலும் இயங்கி வருகிறது. சமுதாயத்தினால் அவற்றுக்குத் தீர்வு கண்டுபிடித்துத் தோற்கடிக்க முடியவில்லை. தனது முழு உறவுமுறையின் ஆதித் தன்மையை நிர்ணயிக்கின்ற விதிகளின்படி எங்கே மண வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறதோ, அவ்வகைப்பட்ட ஒருதார மணத்தின் உதாரணங்களை—ஆனால் கணவனுடைய ஆதிக்கத்தை எதிர்த்து மனைவி கலகம் செய்கின்ற உதாரணங்களை—நான் இங்கு குறிப்பிடுகிறேன் என்பது இயற்கையே. எல்லாத் திருமணங்களும் இப்படிப்பட்டவை அல்ல என்பது ஜெர்மானிய அற்பவாதிக்கு நன்றாகத் தெரிந்திருப்பதைப் போல வேறு எவருக்கும் தெரியாது. அவருக்கு அரசை ஆட்சி செய்யத் திறனில்லை என்பதைப் போல வீட்டையும் ஆட்சி செய்யத் திறனில்லை. எனவே நியாயமாகவே அவருடைய மனைவிதான் முழு உரிமை

யோடு ஆட்சி செய்கிறாள். அவர் ஆட்சி செய்வதற்குத் தகுதியற்றவர். ஆனால் அவர் தன்னைத் தானே தேற்றிக் கொள்ளும் முறையில், துரதிர்ஷ்டத்தில் சிக்கிய தனது தோழராகிய பிரெஞ்சுக்காரரைக் காட்டிலும் தான் எவ்வளவோ மேல் என்று கற்பனை செய்து கொள்கிறார்; ஜெர்மானிய அற்பவாதியை விட பிரெஞ்சுக்காரர் பல சமயங்களில் இன்னும் மோசமான நிலையில் இருக்கிறார்.

எனினும் கிரேக்கர்களிடையே மூலச்சிறப்பான, கடுமையான வடிவத்தில் நிலவிய தனிப்பட்ட குடும்பம் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் தோன்றவில்லை. எதிர்காலத்தில் உலகை வெல்லப் போகிறவர்கள் என்ற முறையில் ரோமானியர்கள் கிரேக்கர்களை விட நயத்தில் குறைவாக இருந்தாலும் நெடு நோக்குக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையில் பெண்ணுக்கு அதிகமான சுதந்திரமும் மரியாதையும் அளிக்கப்பட்டன. மனைவியின் மேல் ஜீவமரண அதிகாரம் தனக்கு இருந்ததனால் தனது மனைவியின் மண வாழ்க்கை விசுவாசத்துக்குப் போதிய பாதுகாப்புகள் இருப்பதாக ரோமானியன் நம்பினான். மேலும், கணவனைப் போலவே மனைவியும் சுயமாகத் திருமணத்தை ரத்து செய்ய முடியும். ஆனால், ஜெர்மானியர்கள் வரலாற்றில் பிரவேசித்த பிறகுதான் ஒருதார மணத்தின் வளர்ச்சியில் மிகவும் பெரிய முன்னேற்றம் உறுதியாக நடைபெற்றது. ஒருவேளை, அவர்களுடைய வறுமையின் காரணமாக இணைக் குடும்பத்திலிருந்து ஒருதார மண முறை முழுமையாக வளர்ச்சியடைந்து தோன்றியதாகத் தெரியவில்லை. டாசிட்டஸ் கூறிய மூன்று சந்தர்ப்பங்களைக் கொண்டு நாம் இந்த முடிவுக்கு வருகிறோம். முதலாவதாக, திருமணத்தின் புனிதத் தன்மையில் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தாலும்—''ஒவ்வொரு மனிதனும் ஒரு மனைவியுடன் திருப்தி கொண்டவனாக இருந்தான்; பெண் கற்பு என்னும் அரண் சூழ வாழ்ந்தாள்''—அந்தஸ்துள்ள ஆண்கள் மற்றும் இனக்குழுத் தலைவர்கள் மத்தியில் பலதார மணம் நிலவியது. இது இணை மண முறை நிலவிய அமெரிக்கர்களின் நிலையை ஒத்திருந்தது. இரண்டாவதாக, தாயுரிமையிலிருந்து தந்தையுரிமைக்குச் சிறிது காலத்துக்கு முன்னரே மாறியிருக்க முடியும். ஏனென்றால்

தாயின் சகோதரன்—தாயுரிமைப்படி, குலத்தில் மிகவும் நெருங்கிய ஆண் உறவினன் அவனே — சொந்தத் தந்தையை விட அநேகமாக நெருங்கிய உறவினனாக இனியும் கருதப்பட்டான். இதுவும் அமெரிக்க செவ்விந்தியர்களின் கருத்துடன் பொருந்துகிறது. மார்க்ஸ் அடிக்கடிக் கூறியபடி, நமது ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய இறந்த காலத்தைப் புரிந்து கொள்வதற்குரிய திறவுகோல் அமெரிக்க செவ்விந்தியர்கள் மத்தியிலிருந்துதான் கிடைத்தது. மூன்றாவதாக, ஜெர்மானியர்கள் மத்தியில் பெண்கள் உயர்வாக மதிக்கப்பட்டார்கள். அவர்கள் பொது விவகாரங்களிலும் செல்வாக்கு பெற்றிருந்தார்கள். இவை ஒருதார மணத்தின் குணாம்சமாகிய ஆணின் ஆதிக்கத்துடன் நேரடியாக முரண்படுகின்றன. இந்த அம்சங்களில் எல்லாம் ஸ்பார்டா மக்களிடையில் அதே போல் இணை மண முறை முழுமையாக மறைந்து விடவில்லை என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். ஆக, இதன் தொடர்பாகவும் கூட, ஜெர்மானியர்கள் வந்த பிறகு ஒரு புத்தம்புதிய அம்சம் உலக ஆதிக்கத்தைப் பெற்றது. ரோமானிய உலகின் அழிவுக் குவியல் மீது இனங்கள் கலந்ததிலிருந்து வளர்ச்சியடைந்த புதிய ஒருதார மண முறை ஆணின் ஆதிக்கத்தை மென்மையான வடிவங்களைக் கொண்டு மறைத்தது; குறைந்தபட்சம் வெளித்தோற்றத்திலாவது, மூலச்சிறப்பான பண்டைக்காலம் அறிந்திருந்ததை விட மிகவும் சுதந்திரமான, மதிப்புள்ள நிலையைப் பெண்கள் வகிப்பதற்கு அனுமதித்தது. முதல் தடவையாக, மிகவும் பெரிய தார்மிக முன்னேற்றத்துக்குரிய சாத்தியத்தைப் படைத்தது. இதை நாம் ஒருதார மண முறையிலிருந்துதான் பெறுகிறோம்; அதற்கு நாம் ஒருதார மண முறைக்குக் கடமைப்பட்டுள்ளோம். இதற்கு முன்னர் உலகெங்குமே அறியப்படாத நவீன காலத்தின் தனிப்பட்ட காதல் என்னும் முன்னேற்றம் சந்தர்ப்பத்தைப் பொறுத்து ஒருதார மணத்துக்குள்ளேயோ அதற்கு இணைகரமாகவோ அல்லது அதற்கு எதிராகவோ நடைபெற்றிருக்கலாம்.

எனினும், ஜெர்மானியர்கள் இன்னமும் இணைக் குடும்பத்தில் வாழ்ந்து வந்தார்கள்; மேலும், அவர்கள் இயன்ற வரை அதற்குப் பொருத்தமான பெண் நிலையை ஒரு

8—1559

தார மணத்துடன் ஒட்ட வைத்து விட்டார்கள் என்ற சூழ்நிலையிலிருந்துதான் இந்த முன்னேற்றம் நிச்சயமாகத் தோன்றியது. ஜெர்மானியர்களின் கட்டுக்கதையான, அதிசயமான, தார்மிகத் தூய்மையுள்ள மனப்போக்கின் விளைவாக அது தோன்றவில்லை. ஒருதார மணத்தில் தோன்றிய வெளிப்படையான அதே தார்மிக முரண்பாடுகளை இணைக் குடும்பம் நடைமுறையில் வெளிப்படுத்தவில்லை என்பதுடன் அந்த மனப்போக்கு நின்று விடுகிறது. இதற்கு மாறாக, ஜெர்மானியர்கள் குடிபெயர்ந்து சென்றதில், குறிப்பாகத் தென்கிழக்கில் கருங்கடலின் ஓரத்திலுள்ள சமவெளிகளிலுள்ள நாடோடிகளை நோக்கிச் சென்றதில் கணிசமான ஒழுக்கக் குறைவுக்கு ஆளானார்கள்; குதிரைச் சவாரியைக் கற்றதை ஒதுக்கி விட்டால் மற்றபடி அவர்களிடமிருந்து மோசமான, இயற்கைக்கு விரோதமான கெட்ட பழக்கங்களைக் கற்றுக் கொண்டார்கள்: டாய்ஃபால்களைப் பற்றி அம்மியானசும் ஹெருல்களைப் பற்றி புரோகோபியசும் இதற்கு வெளிப்படையான சான்றுகளை அளித்துள்ளனர்.

நாமறிந்தவற்றுள் ஒருதார மண முறை என்ற ஒரே குடும்ப வடிவத்திலிருந்துதான் நவீன காலக் காதல் வளர்ந்திருக்க முடியும் என்ற போதிலும் இந்தக் காதல் அதற்குள் கணவன், மனைவியின் பரஸ்பரக் காதலாக மட்டுமே அல்லது பெரும்பாலும் கணவன், மனைவியின் காதலாக வளர்ந்தது என்று கூற முடியாது. ஆணின் ஆதிக்கத்தின் கீழுள்ள கண்டிப்பான ஒருதார மணத்தின் தன்மை முழுவதுமே இதை அனுமதிப்பதில்லை. வரலாற்று ரீதியில் சுறுசுறுப்பான எல்லா வர்க்கங்களிடையிலும், அதாவது எல்லா ஆளும் வர்க்கங்களிடையிலும் திருமணம் என்பது இணைமண முறைக் காலத்திலிருந்து பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட, சௌகரியத்துக்கான திருமணமாகவே இருந்து வந்தது. வரலாற்று ரீதியிலே பாலிணை விழைவாக, (குறைந்தபட்சம் ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த) எந்த நபரும் ஈடுபட உரிமை பெற்றிருந்த பாலிணை விழைவாக காதல் பெற்றிருந்த முதல் வடிவம், புணர்ச்சி வேட்கையின்—காதலின் துல்லியமான குணாம்சம் இதுதான்—மிகவும் சிறந்த வடிவமாகக் காதல் பெற்றிருந்த முதல் வடிவம், மத்திய காலத்

தைச் சேர்ந்த வீரக் காதல், கணவன், மனைவியின் காதல் அல்ல. அதற்கு மாறாக, அதன் மூலச்சிறப்பான வடிவத்தில், புரோவான்ஸல் மக்களிடையே, அது பிறன் மனைவியைக் கூடுவதை நோக்கி நேராக, முழு வேகத்துடன் போகிறது. அதன் பெருமைகளைப் பற்றி அவர்களுடைய கவிஞர்கள் அதிகமாகப் பாடியிருக்கிறார்கள். ''ஆல்பாக்கள்'' (albas) என்று சொல்லப்படுபவை, ஜெர்மன் மொழியில் Tagelieder *(அருணோதய கீதங்கள்)* என்று சொல்லப்படுபவை புரோவான்ஸல் காதல் கவிதைகளிலேயே தலைசிறந்த கவிதைகளாம். போர்வீரன் எப்படி தனது காதலியுடன், அதாவது அடுத்தவனுடைய மனைவியுடன் படுத்திருக்கிறான், காவற்காரன் எப்படி வெளியே காவல் காத்திருக்கிறான், அருணோதயத்தின் (alba) முதற் கிரணங்கள் தோன்றியதும் போர்வீரன் யாருக்கும் தெரியாமல் தப்பி விடக் காவற்காரன் அவனை எப்படி அழைக்கிறான் என்பவற்றை அந்தக் கவிதைகள் ஒளிமயமான வர்ணங்களில் வர்ணிக்கின்றன. காதலன் பிரிகின்ற காட்சி கவிதையின் உச்ச நிலையாக அமைந்திருக்கிறது. வடக்கு பிரெஞ்சுக்காரர்களைப் போல மதிப்புக்குரிய ஜெர்மானியர்களும் இந்தக் கவிதைப் பாணியை மேற்கொண்டார்கள்; மேலும், அதனுடன் பொருந்தி நின்ற வீரக் காதலின் நடத்தை முறைகளையும் மேற்கொண்டனர். இதே கருத்துக்குறிப்புள்ள தலைப்பில் நமது பழைய வோல்ஃப்ராம் வான் எஷென்பாஹ் மிகவும் அழகான மூன்று அருணோதய கீதங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். அவர் எழுதியுள்ள மூன்று நீளமான வீரக் கவிதைகளை விட இவை சிறந்தவை என்பது என்னுடைய கருத்தாகும்.

நம் காலத்திய முதலாளித்துவத் திருமணம் இருவகைப்பட்டது. கத்தோலிக்க நாடுகளில், அதற்கு முன்பு நடைபெற்றதைப் போல, பெற்றோர்கள் தம்முடைய இளம் முதலாளித்துவ மகனுக்கு தகுந்த மனைவியைத் திருமணம் செய்து வைக்கிறார்கள். அதன் இயற்கையான விளைவு இதுதான்: ஒருதார மணத்திலுள்ள முரண்பாடு முழுமையாக மலர்ந்து வெளிப்படுகிறது—கணவன் தரப்பில் செழித்தோங்கும் பொதுமகளிர் முறை, மனைவியின் தரப்பில் செழித்தோங்கும் கள்ளக் காதலன் முறை. மரணத்துக்கு மருந்து எதுவுமில்லை என்பதைப் போல, திரு

மணமான பெண்ணின் கள்ளக் காதலுக்கும் பரிகாரம் எதுவுமில்லை என்னும் ஒரே காரணத்திற்காகத்தான் கத்தோலிக்க திருச்சபை திருமண ரத்துரிமையை ஒழித்தது என்பதில் சந்தேகமில்லை. மறு பக்கத்தில், புரோடஸ்டேன்ட் நாடுகளில் முதலாளித்துவ இளைஞன் தனது வர்க்கத்துக்குள்ளாகவே அநேகமாக சுதந்திரமாகவே மனைவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறான் என்பதே விதி. இதன் விளைவாக, ஓரளவுக்குக் காதல் அடிப்படையில் திருமணம் இருக்க முடியும். ஒழுக்க முறையை முன்னிட்டு, புரோடஸ்டேன்ட் போலி ஆசாரத்துக்கு ஏற்ப, அத்திருமணத்தில் காதல் இருப்பதாகவே எப்பொழுதும் அனுமானிக்கப்படுகிறது. இதில், ஆண்கள் பொதுமகளிரைத் தீவிரமாகத் தேடுவதில்லை, பெண் கள்ளக் காதலனுடன் கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுவதும் அவ்வளவுக்கு விதியாக இல்லை. எனினும் ஒவ்வொரு திருமண ரகத்திலும் மக்கள் திருமணம் புரிவதற்கு முன்பிருந்த நிலையிலேயே இருப்பதனாலும், புரோடஸ்டேன்ட் நாடுகளின் குடிமக்கள் பெரும்பாலும் அற்பவாதிகளாகவே இருப்பதனாலும் இந்த புரோடஸ்டேன்ட் ஒருதார மணம் என்பது—சிறந்த உதாரணங்களை சராசரியாக எடுத்துக் கொண்டு பார்த்தால்—சலிப்பு நிறைந்த மண வாழ்க்கைக்கே இட்டுச் செல்கிறது. இதுவே இல்லற இன்பம் என்று வர்ணிக்கப்படுகிறது. திருமணத்தின் இவ்விரண்டு ரகங்களையும் நாவல் சிறப்பாகப் பிரதிபலிக்கிறது: கத்தோலிக்க பாணிக்கு பிரெஞ்சு நாவல், புரோடஸ்டேன்ட் பாணிக்கு ஜெர்மன் நாவல். இரண்டு ரகங்களிலும் ''ஆணுக்குக் கிடைக்கிறது'': ஜெர்மன் நாவலில் இளைஞனுக்குப் இளம் பெண் கிடைக்கிறாள், பிரெஞ்சு நாவலில் மனைவியினால் ஏமாற்றப்பட்டவன் என்ற பட்டம் கணவனுக்குக் கிடைக்கிறது. இருவரில் யாருடைய நிலைமை மிகவும் மோசமானது என்று காண்பது எப்பொழுதும் சுலபமல்ல. எனவேதான் பிரெஞ்சு முதலாளி வர்க்கத்துக்கு, ஜெர்மன் நாவலின் தூங்கி வழிகிற தன்மையைக் கண்டால் பயமேற்படுகிறது. ஜெர்மானிய அற்பவாதிக்கோ, பிரெஞ்சு நாவலின் ''ஒழுக்கக் கேட்டைக்'' கண்டால் அதே போன்ற பயமேற்படுகிறது. எனினும் ''பெர்லின் தலைநகரமாகிக் கொண்டிருப்பதால்'' ஜெர்மன் நாவல்கள் சிறிதளவு

தைரியத்துடன் பொதுமகளிர் முறை, கள்ளக் காதல் நாயகன் ஆகியவற்றைப் பற்றி சமீப காலத்தில் எழுதத் தொடங்கியுள்ளன. அங்கே அவை இருப்பது நெடுங்காலமாகத் தெரிந்ததே.

எனினும் இந்த இரண்டு உதாரணங்களிலும் சம்பந்தப்பட்டவர்களுடைய வர்க்க நிலைதான் திருமணத்தை நிர்ணயிக்கிறது; அந்த அளவுக்கு அது வசதிக்காகச் செய்யப்பட்ட திருமணமாகவே என்றும் இருக்கிறது. இவ்விரு உதாரணங்களிலும் இந்த வசதித் திருமணம் பெரும்பாலும் படுமோசமான விபசாரமாகி விடுகிறது. இது சில சமயங்களில் கணவன், மனைவி இருவர் தரப்பிலும் நடக்கும்; ஆனால் மனைவியின் தரப்பில் மிகவும் பொதுவாக நடைபெறுகிறது. அவளுக்கும் சாதாரண விலைமகளுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் அவள், ஒரு கூலித் தொழிலாளி தனது உழைப்பை விற்பதைப் போலன்றி நிரந்தர அடிமைத்தனத்துக்குத் தன்னுடைய உடலை விற்பனை செய்கிறாள் என்பதே. வசதித் திருமணங்கள் எல்லாவற்றிற்கும் ஃபூரியேயின் பின்வரும் சொற்கள் பொருத்தமானவை:

''இலக்கணத்தில் இரண்டு எதிர்மறைகள் உடன்பாட்டுப் பொருள் ஆவதைப் போல, திருமண ஒழுக்கங்களில் இரண்டு விபசாரங்கள் ஒரு நன்னடத்தை ஆகின்றன.''

ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையே, அதாவது தற்காலத்தில் பாட்டாளி வர்க்கத்திடையேதான் கணவன், மனைவி உறவுக்கு இடையில் காதல் என்பது விதியாக முடியும்; அப்படி விதியாக இருக்கிறது. இந்த உறவு அதிகார முறைப்படி அனுமதிக்கப்பட்டதா, இல்லையா என்பது முக்கியமல்ல. ஆனால் இங்கே மூலச்சிறப்பான ஒருதார மணத்துக்குரிய எல்லா அடிப்படைகளும் நீக்கப்படுகின்றன. இங்கே உடைமை என்பது அறவே கிடையாது. இந்த உடைமையைப் பாதுகாத்து வாரிசிடம் விட்டுச் செல்வதற்காகவே ஒருதார மண முறையும் ஆண் ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டன. ஆகவே, இங்கே ஆண் ஆதிக்கத்தை வலியுறுத்துவதற்குத் தூண்டுகோல் எதுவும் கிடையாது. இன்னும் அதிகமென்னவென்றால், அதற்கு வழிவகைகளும் கிடையாது. இந்த ஆண் ஆதிக்கத்தைப்

பாதுகாப்பது முதலாளி வர்க்கச் சட்டமே. அந்தச் சட்டம் உடைமை வர்க்கத்தினருக்கும் பாட்டாளி வர்க்கத்துடன் அவர்களுடைய உறவுகளுக்காகவும் தான் இருக்கிறது. அதனால் பணச் செலவு ஏற்படும், ஆகவே தொழிலாளியின் வறுமை காரணமாக, மனைவியின் பால் அவனுடைய அணுகுமுறையில் இந்தச் சட்டத்துக்கு முக்கியத்துவம் இல்லை. இங்கே முற்றிலும் வேறான தனிப்பட்ட உறவுகளும் சமூக உறவுகளும் நிர்ணயமான காரணப் பொருட்களாக இருக்கின்றன. இது தவிர, பெரிய அளவுத் தொழில்துறை பெண்களை வீட்டிலிருந்து உழைப்புச் சந்தைக்கும் பாக்டரிக்கும் மாற்றி விட்டிருப்பதாலும் அவளைக் குடும்பத்தின் உணவுக்கு வேலை செய்பவளாகப் பெரும்பாலும் ஆக்கி விடுவதாலும் பாட்டாளியின் இல்லத்தில் ஆணின் ஆதிக்கத்தின் கடைசி எச்சங்கள் அடிப்படையை இழந்து விட்டன. ஒருதார மண முறை நிலைத்த பிறகு உறுதியாக வேரூன்றிய பெண்களைக் கொடுமைப்படுத்துகின்ற போக்கு மட்டும் ஒருவேளை இங்கே சிறிதளவு இருக்கலாம். எனவே பாட்டாளிக் குடும்பம், அதன் கறாரான அர்த்தத்தில் இனியும் ஒருதார மணத்தின் ரகத்தைச் சேர்ந்ததல்ல—மிகவும் தீவிரமான காதல் மற்றும் இரு தரப்பினரது பரஸ்பர விசுவாசம் இருந்தாலும் சரி, எவ்விதமான சமய அல்லது லௌகிக ஆசிகளைப் பெற்றிருந்தாலும் சரி. எனவே ஒருதார மண முறையுடன் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டுள்ள பொதுமகளிர் முறையும் கள்ளக் காதல் நாயக முறையும் இங்கே அநேகமாக அற்பமான பாத்திரத்தையே வகிக்கின்றன. திருமணத்தை ரத்து செய்கின்ற உரிமையைப் பெண் நடைமுறையில் திரும்பப் பெற்று விட்டாள்; கணவனும் மனைவியும் இணைந்து வாழ முடியவில்லை என்றால் இருவரும் பிரிந்து செல்லவே விரும்புகிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால், சொல்லிலக்கணத்தின் அர்த்தத்தில்தான் பாட்டாளித் திருமணம் ஒருதார மணமாகுமே தவிர அந்தச் சொல்லின் வரலாற்றிற்குரிய அர்த்தத்தில் ஆகாது.

சட்டங்களியற்றுதல் முன்னேறுகின்ற பொழுது பெண் புகார் செய்வதற்குரிய எல்லாக் காரணங்களும் மேன்மேலும் நீக்கப்படுகின்றன என்று நமது சட்டவியல்

நிபுணர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். நவீன கால நாகரிகச் சட்ட அமைப்புகள் இரண்டு விஷயங்களை மேன்மேலும் அங்கீகரிக்கின்றன: முதலாவதாக, திருமணம் வெற்றி பெற வேண்டுமென்றால் அது இரு தரப்பினரும் விருப்ப பூர்வமாகச் செய்து கொண்ட ஒப்பந்தமாக இருக்க வேண்டும்; இரண்டாவதாக, மண வாழ்க்கையில் உரிமைகள், கடமைகள் விஷயத்தில் இரு தரப்பினரும் சமநிலையில் இருக்க வேண்டும். இவ்விரண்டு கோரிக்கைகளும் முரணில்லாமல் நிறைவேற்றப்பட்டால் பெண் கேட்கக் கூடிய எல்லாமே கிடைத்து விட்டதாகவே இருக்கும்.

இது வெறும் வக்கீலின் வாதமே. இதே போன்ற வக்கீல் வாதத்தைக் கொண்டுதான் தீவிரக் குடியரசுவாதியான முதலாளியும் பாட்டாளியை நிராகரிக்கிறான். உழைப்பு ஒப்பந்தம் என்பதும் இரு தரப்பினரும் விருப்ப பூர்வமாகச் செய்து கொண்ட ஒப்பந்தம் என்றுதான் சொல்லப்படுகிறது. ஆனால் சட்டம் அந்த இரண்டு தரப்பினரையும் ஏட்டளவில் சமநிலையில் வைத்த உடனேதான் அது விருப்ப பூர்வமாகச் செய்து கொண்ட ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. ஒரு வர்க்கத்தின் நிலைமையினால் அதற்குக் கிடைக்கின்ற அதிகாரம், அது மறு தரப்பின் மீது பிரயோகிக்கின்ற நிர்ப்பந்தம், இரு தரப்பினருடைய உண்மையான பொருளாதார நிலைமை ஆகியவற்றைப் பற்றி சட்டத்துக்கு அக்கறையே கிடையாது. மேலும், அந்த உழைப்பு ஒப்பந்தம் முடிகின்ற வரை இரு தரப்பினருக்கும் சம உரிமைகள்—ஏதாவது ஒரு தரப்பு அவற்றை வெளிப்படையாக வற்புறுத்தாமல் கைவிட்டாலொழிய—இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பொருளாதார நிலைமை சம உரிமைகளின் சாயலைக் கூடக் கைவிடுமாறு தொழிலாளியைக் கட்டாயப்படுத்துகிறதே—இதைப் பற்றி சட்டம் எதுவும் செய்ய இயலாது.

திருமணத்தைப் பொறுத்தமட்டில் இரு தரப்பினரும் திருமணம் செய்து கொள்ளத் தமது சுயேச்சையான விருப்பத்தைப் பதிவு செய்த உடனே மிகவும் முற்போக்கான சட்டம் கூட முழுமையாகத் திருப்தி அடைந்து விடுகிறது. சட்டத் திரைகளுக்குப் பின்னால் என்ன நடக்கிறது—அங்குதானே எதார்த்த வாழ்க்கை நடைபெறுகிறது—இந்த சுயேச்சையான ஒப்பந்தத்துக்கு எப்படி வந்தார்கள்

ஆகியவற்றைப் பற்றி சட்டத்துக்கும் சட்ட நிபுணருக்கும் கவலை கிடையாது. எனினும் இந்தச் சுயேச்சையான ஒப்பந்தம் உண்மையில் எப்படிப்பட்டது என்பது சட்ட நிபுணர் பல்வேறு நாடுகளின் சட்டங்களை மிகவும் சாதாரணமாக ஒப்பிட்டுப் பார்த்தாலே தெரிந்து விடும். பெற்றோர்களுடைய உடைமையில் குழந்தைகளுக்குப் பங்கு கிடைப்பது சட்டத்தால் உத்தரவாதம் செய்யப்பட்டு, வாரிசுரிமையை மறுக்க முடியாதபடிச் செய்துள்ள நாடுகளில்—ஜெர்மனி, பிரெஞ்சுச் சட்டத்தைப் பின்பற்றுகின்ற நாடுகள், இதரவற்றில்—திருமண விஷயத்தில் பெற்றோர்களுடைய ஒப்புதலைக் குழந்தைகள் பெற்றாக வேண்டும். ஆங்கிலச் சட்டத்தின் கீழுள்ள நாடுகளில்—இங்கே திருமணத்துக்குப் பெற்றோர்களுடைய ஒப்புதல் சட்டப்படி அவசியமல்ல—பெற்றோர்கள் தமது உடைமையை உயில் மூலம் யாருக்கு எழுதி வைக்கலாம் என்பதில் முழு சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விரும்பினால், தம் குழந்தைகளுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்காதிருக்கலாம். ஆகவே, அப்படி இருந்த போதிலும், இன்னும் சரியாகச் சொல்வதென்றால் அப்படி இருப்பதனால்தான் வாரிசுரிமையாகப் பெறக் கூடிய சொத்துள்ள வர்க்கங்களிடையில் திருமண சுதந்திரம் என்பது பிரான்ஸ், ஜெர்மனியை விடக் கடுகளவேனும் அதிகமாக பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ இல்லை.

மண வாழ்க்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சட்ட ரீதியான சமநிலை குறித்தும் அதே நிலைதான் இருக்கிறது. சட்டத்திற்கு முன்பாக இருவரும் சமமற்ற நிலையில் இருக்கிறார்கள். இது முந்திய சமுதாய நிலைமைகள் விட்டுச் சென்ற மரபுரிமைச் செல்வமாகும். இச்சமமற்ற நிலை பெண்களைப் பொருளாதார ரீதியில் ஒடுக்குவதனால் ஏற்படுகின்ற விளைவு ஆகும், அதற்கு அது காரணமல்ல. பற்பல தம்பதிகளையும் அவர்களுடைய குழந்தைகளையும் கொண்டிருந்த புராதனப் பொதுவுடைமைக் குடும்பத்தில் பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வீட்டு நிர்வாகமும் ஆண் உணவு தேடித் தருவது எப்படி சமுதாய ரீதியில் அவசியமான தொழிலாக இருந்ததோ, அதே போலப் பொதுத் தன்மையான, சமுதாய ரீதியில் அவசியமான தொழிலாக இருந்தது. தந்தைவழிக்

குடும்பத்தில் இந்த நிலைமை மாறி விட்டது; ஒருதார மண வகைப்பட்ட, தனிப்பட்ட குடும்பத்தில் இன்னும் அதிகமாகவே மாறி விட்டது. வீட்டு நிர்வாகம் தனது பொதுத் தன்மையை இழந்தது. அது சமூகத்தின் அக்கறையைப் பெற்ற விவகாரமாக இனிமேல் இருக்கவில்லை. அது தனிப்பட்ட சேவை ஆகி விட்டது. மனைவி முதல் வீட்டு வேலைக்காரியாக மாறினாள். அவள் சமூக உற்பத்தியிலிருந்து வெளியே தள்ளப்பட்டாள். நவீன காலப் பெரிய அளவுத் தொழில்துறை மட்டுமே அவளுக்கு—அதிலும் பாட்டாளி வர்க்கப் பெண்ணுக்கு மட்டுமே—சமூக உற்பத்தியில் பங்கெடுக்கின்ற வழியை மறுபடியும் திறந்து விட்டது. ஆனால் எவ்விதத்தில் என்று பார்த்தால், அவள் குடும்பச் சேவையில் தன் கடமைகள் எல்லாவற்றையும் முடிக்கின்ற பொழுது சமூக உற்பத்தியிலிருந்து விலக்கப்பட்டு எதுவும் சம்பாதிக்க முடியாதவளாகிறாள்; சமூகத் தொழிலில் பங்கெடுத்து சுயேச்சையாக சம்பாதித்து வாழ்வதற்கு அவள் விரும்புகின்ற பொழுது குடும்பக் கடமைகளை நிறைவேற்ற முடிகின்ற நிலையில் இருப்பதில்லை. பாக்டரியில் வேலை செய்கின்ற பெண்ணுக்கு ஏற்படுவதுதான் மருத்துவம், சட்டம் உட்பட மற்ற வேலைகளில் உள்ள பெண்களுக்கும் ஏற்படுகிறது. பகிரங்கமாகவோ, மறைவாகவோ உள்ள பெண்ணின் வீட்டு அடிமைத்தனத்தின் அடிப்படையில்தான் நவீன காலத் தனிப்பட்ட குடும்பம் இருக்கிறது. நவீன காலச் சமுதாயம் என்பதும் தனிப்பட்ட குடும்பங்களை அலகுகளாகக் கொண்டிருக்கின்ற மொத்தமே. இன்று, மிகப் பெரும்பாலான சமயங்களில் ஆண் குடும்பத்துக்குச் சம்பாதிப்பவனாக, உணவு அளிப்பவனாக இருக்க வேண்டியிருக்கிறது. குறைந்தபட்சம், உடைமை வர்க்கங்களில் இப்படித்தான். இது அவனுக்கு ஆதிக்க நிலையைத் தருகிறது. அதற்கு விசேஷமான சட்ட ரீதியான சலுகைகள் அவசியமில்லை. குடும்பத்தில் அவன்தான் முதலாளி; அவன் மனைவி பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறாள். எனினும் தொழில்துறை உலகில், முதலாளி வர்க்கத்தின் விசேஷமான, சட்ட ரீதியான சலுகைகள் எல்லாம் ஒரு புறம் ஒதுக்கப்பட்டு, இரண்டு வர்க்கங்களின் சட்ட ரீதியான சமநிலை ஸ்தாபிக்கப்

பட்ட பிறகே பாட்டாளி வர்க்கத்தை அழுத்திக் கொண்டிருக்கின்ற பொருளாதார ஒடுக்குமுறையின் குறிப்பான தன்மை மிகவும் கூர்மையாக வெளித் தெரிகிறது. இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான பகைமையை ஜனநாயகக் குடியரசு ஒழிப்பதில்லை. அதற்கு மாறாக, அதைச் சண்டை போட்டு முடிவு காண்பதற்குத் தான் களம் அமைத்துக் கொடுக்கிறது. நவீனக் குடும்பத்தில் பெண் மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தின் அலாதித் தன்மையும் அவர்களிடையில் உண்மையான சமூக சமத்துவத்தை நிறுவுவதற்குரிய அவசியமும் வழிமுறையும் அதே போன்றதே. அவ்விருவரும் சட்டத்தின் முன்பாக முழுமையான சமநிலையில் இருக்கும் பொழுதே அவை முழு உருவத்தில் வெளிக்காட்டப்படும். பெண்ணினம் முழுவதையும் சமூக உற்பத்தியில் மீண்டும் புகுத்துவது தான் பெண்களின் விடுதலைக்குரிய முதல் நிபந்தனை என்பது அப்பொழுதுதான் தெளிவாகும். தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகு என்னும் தன்மையை ஒழிக்க வேண்டும் என்பதை இது மீண்டும் கோருகிறது.

* * *

மனிதகுல வளர்ச்சியின் மூன்று முக்கியமான கட்டங்களுடன் பொதுவாகவும் மொத்தமாகவும் பொருந்துகின்ற மூன்று முக்கியமான மண வடிவங்கள் உள்ளன: காட்டுமிராண்டி நிலை—குழு மணம்; அநாகரிக நிலை—இணை மணம்; நாகரிக நிலை—ஒருதார மணம், இதற்குத் துணையாகக் கள்ளக் காதல் நாயக முறையும் விபசாரமும். அநாகரிக நிலையின் தலைக்கட்டத்தில் இணை மணத்துக்கும் ஒருதார மணத்துக்கும் இடையில் பெண்ணடிமைகள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்துவதும் பலதார மண முறையும் உள்ளன.

இந்தத் தொடரில் குறிக்க வேண்டிய முன்னேற்றம், குழு மணத்திலுள்ள பாலுறவுச் சுதந்திரம் பெண்களிடமிருந்து மேன்மேலும் பறிக்கப்படுகிறதே தவிர ஆண்களிடமிருந்து பறிக்கப்படவில்லை என்ற பிரத்யேகமான உண்மையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை நமது மொத்த விளக்கமும் எடுத்துக்காட்டியிருக்கிறது. எதார்த்

தத்தில் ஆண்கள் விஷயத்தில் குழு மணம் இன்று வரை இருந்து வருகிறது. சட்ட ரீதியிலும் சமுதாய ரீதியிலும் பெண்ணுக்குக் கொடிய விளைவுகளை உண்டாக்கத்தக்க அதே குற்றம் ஆணைப் பொறுத்தமட்டில் கௌரவமானதாகக் கருதப்படுகிறது; அதிகமாகப் போனால், அவனுடைய ஒழுக்கத்துக்கு அது அற்பமான கறை; அதை அவன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறான். நம் காலத்தில் முதலாளித்துவப் பண்ட உற்பத்தி முறை பழைய பரம்பரையான பொதுமகளிர் முறையை எவ்வளவு அதிகமாக மாற்றித் தகவமைக்கிறதோ, எவ்வளவு அதிகமாக அது பகிரங்கமான விபசாரமாக மாறுகிறதோ அந்த அளவுக்கு அதன் விளைவுகள் மேன்மேலும் சீர்குலைவானவையாக இருக்கின்றன. மேலும், பெண்களை விட ஆண்களையே இது அதிகமாக சீர்குலைக்கிறது. பெண்களிடையில், விபசாரம் தன் வலையில் சிக்கிக் கொள்கின்ற பரிதாபத்துக்கு உரியவர்களையே தாழ்த்தி விடுகிறது. அவர்களும் பொதுவாக நம்பப்படுகின்ற அளவுக்குத் தாழ்ந்து விடவில்லை. மறு பக்கத்தில், அது ஆண் உலகம் முழுவதின் தன்மையையே தாழ்த்தி விடுகிறது. ஆக, பத்தில் ஒன்பது உதாரணங்களில் நிச்சயதார்த்தத்துக்கும் திருமணத்துக்கும் இடையே உள்ள நீண்ட காலம் அநேகமாக ஆணுக்கு தாம்பத்திய வாழ்க்கையில் துரோகம் செய்வதற்குரிய தயாரிப்புப் பள்ளியாகவே இருக்கிறது.

நாம் ஒரு சமூகப் புரட்சியை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அதில், இது வரை இருந்துள்ள ஒருதார மணத்தின் பொருளாதார அடிப்படைகள் அனைத்தும், ஒருதார மணத்தின் பிற்சேர்க்கையான விபசாரத்தின் அடிப்படைகளைப் போல மறைந்து விடுவது நிச்சயமாகும். ஒரு நபரிடம், அதாவது ஒரு ஆணிடம் கணிசமான அளவுக்குச் செல்வம் குவிந்ததிலிருந்துதான், இச்செல்வத்தை மற்ற குழந்தைகளுக்கு அல்லாமல் தன்னுடைய சொந்தக் குழந்தைகளுக்கு விட்டுச் செல்ல வேண்டுமென்ற விருப்பத்திலிருந்துதான் ஒருதார மணம் தோன்றியது. இந்த நோக்கம் நிறைவேறுவதற்குப் பெண் ஒருதார மண முறையில் இருக்க வேண்டும், ஆனால் ஆணுக்கு அது அவசியமல்ல. எனவே பெண்ணுக்குரிய இந்த ஒருதார மணம் ஆணுடைய பகிரங்கமான அல்லது மறைமுகமான பல

தார மணத்துக்குத் தடையாக இருக்கவில்லை. எனினும் வரப் போகின்ற சமூகப் புரட்சி, குறைந்தபட்சம் நிரந்தர மான, மரபுவழிச் செல்வத்தின் பெரும் பகுதியை—உற் பத்திச் சாதனங்களை—பொதுச் சொத்தாக மாற்றி விடு வதன் மூலம் வாரிசு முறை பற்றிய இந்தக் கவலைகளை யெல்லாம் அதிகமாகக் குறைத்து விடும். பொருளாதாரக் காரணங்களிலிருந்து ஒருதார மணம் தோன்றியதால், இக்காரணங்கள் மறைகின்ற பொழுது அதுவும் மறைந்து விடுமா?

அது மறைவதற்கு பதிலாக நடைமுறையில் முழு மையாக ஈடேறுதல் ஆரம்பமாகும் என்று பதில் கூறினால் அது தவறாகாது. ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களைப் பொது உடைமையாக மாற்றும் பொழுது கூலியுழைப் பும் பாட்டாளி வர்க்கமும் மறைந்து விடுகின்றன; அத்துடன் ஒரு குறிப்பிட்ட—புள்ளிவிபரப்படி கணக்கிடத் தக்க—எண்ணிக்கையிலுள்ள பெண்கள் பணத்திற்காகத் தம்மை விற்க வேண்டிய அவசியமும் மறைந்து விடு கிறது. விபசாரம் மறைகிறது. ஒருதார மணம் நலிந்து போவதற்கு பதிலாக முடிவில்—ஆணுக்கும் சேர்த்து— எதார்த்தமாகிறது.

எப்படி இருந்தாலும், ஆணின் நிலைமை கணிசமாக மாறி விடுகிறது. ஆனால் பெண்ணின் நிலைமை, எல்லாப் பெண்களின் நிலைமை முக்கியமான மாற்றங்களுக்கு உள்ளாகிறது. உற்பத்திச் சாதனங்கள் பொதுச் சொத் தாக மாற்றப்படுகின்ற பொழுது தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகாக இருப்பதும் முடி வடைகிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமூகத் தொழி லாக மாற்றப்படுகிறது. குழந்தைகளின் பராமரிப்பும் கல்வியும் பொது விவகாரம் ஆகி விடுகின்றன. எல்லாக் குழந்தைகளையும்—அவர்கள் மண உறவில் பிறந்தவர் களாயினும் சரி, மண உறவுக்கு வெளியே பிறந்தவர்களா யினும் சரி—சமுதாயம் சமமாகக் கவனித்துக் கொள் கிறது. எனவே ''விளைவுகளைப்'' பற்றிய கவலை— இதுவே பெண் தான் காதலிக்கின்ற ஒருவனுக்குத் தன்னைச் சுதந்திரமாகக் கொடுப்பதைத் தடுக்கின்ற தார்மிக, பொருளாதார ரீதியான, மிகவும் முக்கியமான சமூகக் காரணியாகும்—மறைந்து விடும். கட்டுப்படுத்தப்

படாத உடலுறவு மேன்மேலும் படிப்படியாக அதிகரிப்பதற்கு இது காரணமாகாதா? அத்துடன் பெண்ணின் கற்பைப் பற்றியும் மானக்கேட்டைப் பற்றியும் பொது மக்கள் கருத்து முன்னைவிட அதிக நயமான முறையில் மேலோங்குவதற்கு இது காரணமாகாதா? முடிவாக, நவீன உலகில் ஒருதார மணமும் விபசாரமும் எதிர்மறைகளாக இருப்பினும் அவை ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத எதிர்மறைகளாக, அதே சமுதாய ஒழுங்கமைப்பின் இரண்டு துருவங்களாக இருப்பதை நாம் பார்க்கவில்லையா? தன்னுடன் ஒருதார மணத்தையும் படுகுழிக்குள் இழுத்துச் செல்லாமல் விபசாரம் மறைந்து விட முடியுமா?

இங்கே ஒரு புதிய காரணி செயல்படத் தொடங்குகிறது. அது ஒருதார மணம் வளர்ந்த காலத்தில்—அதிக பட்சமாகச் சொன்னால்—கருவடிவத்தில்தான் இருந்தது; அதுதான் தனிப்பட்ட காதல்.

மத்திய காலத்துக்கு முன்னால் தனிப்பட்ட காதல் என்று எதுவும் இருக்கவில்லை. அழகு, நெருக்கமான பழக்கம், ஒத்த விருப்பங்கள் முதலியவை ஆண், பெண் இடையில் பாலுறவு வேட்கையை ஏற்படுத்தின; யாருடன் இந்த நெருக்கமான உறவில் ஈடுபடுவது என்ற கேள்வி குறித்து ஆணோ, பெண்ணோ முற்றிலும் அலட்சியமாக இருக்கவில்லை என்பவை வெளிப்படையாகும். ஆனால் நம் காலத்திய காதலுக்கும் இதற்கும் தூரம் அதிகம். பண்டைக்காலம் முழுவதிலும் பெற்றோர்கள்தான் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். இரு தரப்பினரும் மறுத்துப் பேசாமல் உடன்பட்டனர். பண்டைக்காலத்தில் இருந்த அற்பமான கணவன், மனைவி காதல் கூட அகநிலை விருப்பமல்ல, புறநிலைக் கடமையே. அது திருமணத்துக்குக் காரணமல்ல, மண வாழ்க்கையின் தொடர்புப் பொருளே. நவீன கால அர்த்தத்தைக் கொண்ட காதல் உறவுகள் பண்டைக்காலத்தில் அதிகார பூர்வமான சமுதாயத்துக்கு வெளியில் மட்டுமே நிகழ்ந்தன. எந்த இடையர்களின் காதல் வாழ்க்கையின் இன்பதுன்பங்களைப் பற்றி தியோக்ரிடசும் மோஸ்கசும் பாடினார்களோ அல்லது லோங்கஸ் எழுதிய **டாஃப்னிசும் குளோவும்** என்ற காவியம் பாடியதோ அவர்கள் வெறும் அடிமைகளே; சுதந்திரமான குடிமகனின் துறையான

அரசு விவகாரங்களில் அவர்களுக்குப் பங்கு இல்லை. எனினும் அடிமைகளிடம் இருப்பதைத் தவிர, காதல் உறவுகள் நலிந்து கொண்டிருக்கின்ற பண்டை உலகின் சீர்குலைவுப் பொருட்களாகத்தான் காணப்படுகின்றன. அந்தக் காதல் உறவுகளும் அதிகார பூர்வமான சமுதாயத்துக்கு வெளியிலிருக்கின்ற பெண்களுடன்தான், அதாவது பொதுமகளிருடன்தான், அதாவது அந்நியப் பெண்கள் அல்லது சுதந்திரமளிக்கப்பட்ட பெண்களுடன்தான் இருந்தன. ஏதென்சில் அதன் வீழ்ச்சிக் கட்டத்தில் இவை நடந்தன. ரோமாபுரியில், சக்கரவர்த்திகளின் காலத்தில் இவை நடந்தன. சுதந்திரமான ஆண், பெண் குடிமக்களிடையில் காதல் உறவுகள் கள்ளக் காதல் நாயக வடிவத்தில்தான் நடைபெற்றன. நம் கால அர்த்தத்தில் காதல் என்பது பண்டைக்கால மூலச்சிறப்பான மரபைச் சேர்ந்த காதல் கவிஞராகிய வயதான அனாக்ரியோனுக்கு ஒரு பொருட்டல்ல. காதலிக்கப்படுகின்ற நபர் பெண்ணாகவோ, ஆணாகவோ இருக்க வேண்டும் என்பது அவருக்குச் சிறிதும் முக்கியமல்ல.

நமது காதல் வெறும் பாலுறவு வேட்கையிலிருந்து, பண்டைக்காலத்து மக்களின் erosஇலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கிறது. முதலாவதாக, அது பரஸ்பரக் காதலாக இருக்க வேண்டும். இந்த அம்சத்தில் ஆணுக்குச் சமமாகப் பெண் இருக்கிறாள். பண்டைக்காலத்தில் பாலுறவு வேட்கையின் போது எல்லா சமயங்களிலும் பெண்ணின் அனுமதியைப் பெறவில்லை. இரண்டாவதாக, இரு தரப்பினரும் அன்புடையவர் அருகில் இல்லாததை அல்லது பிரிவைப் பெரிய—எல்லாவற்றிலும் பெரியதாக இல்லாவிட்டாலும்—துன்பம் என்று கருதுகின்ற பொழுதுதான் காதல் தீவிரமும் நிரந்தரமும் பெற்று விளங்குகிறது; அவர்கள் ஒருவரையொருவர் அடைவதற்கு மாபெரும் அபாயங்களைச் சந்திக்கிறார்கள், உயிரைப் பணயம் வைப்பதற்குக் கூட முன்வருகிறார்கள். அதிகமாகச் சொல்வதென்றால், பண்டைக்காலத்தில் இது கள்ளக் காதலில்தான் நடைபெற்றது. கடைசியாக, பாலுறவை மதிப்பிடுவதற்கு ஒரு புதிய தார்மிக அளவுகோல் கிடைக்கிறது. பாலுறவு சட்டபூர்வமானதா, இல்லையா என்று மட்டும் கேட்கப்படவில்லை; அது பரஸ்பரக் காத

விலே விளைந்ததா, அல்லவா என்றும் கேட்கப்படுகிறது. நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளித்துவ நடைமுறையில் இதர தார்மிக அளவுகோல்களுக்கு ஏற்படுவதை விட மேலான கதி இதற்கு ஏற்படவில்லை—இதை அப்படியே புறக்கணித்து விடுகிறார்கள். அதே சமயத்தில், அதன் கதி மோசமும் அல்ல. இதரவற்றைப் போல அது தத்துவ ரீதியில், ஏட்டளவில் அங்கீகரிக்கப்படுகிறது. இதற்கு மேல் தற்சமயம் எதிர்பார்க்க முடியாதுதான்.

பண்டைக்காலம் காதலின் தொடக்கத்துடன் எங்கே முடிந்ததோ அதில், அதாவது கள்ளக் காதலுடன் மத்திய காலம் தொடங்கியது. நாம் வீரக் காதலை ஏற்கெனவே கவனித்தோம்; அக்காதல் அருணோதய கீதங்களைப் படைத்தது. இப்படிப்பட்ட காதலின் நோக்கம் மண வாழ்க்கையை முறிப்பதே; இதற்கும் மண வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் சக்தியுள்ள காதலுக்கும் இடையில் பெரும் பள்ளம் இருக்கிறது. வீர யுகம் இந்தப் பள்ளத்தைக் கடப்பதற்கு முழுமையாகப் பாலம் அமைக்கத் தவறியது. நாம் விளையாட்டுத்தனமான லத்தீன்காரர்களை விட்டு அறப்பண்புடைய ஜெர்மானியர்களிடம் வருகின்ற பொழுது கூட எதைப் பார்க்கிறோம்? **நிபலுங்குகளைப் பற்றிய பாடலில்** கிரீம்ஹில்ட் என்பவள் ஸிக்ஃபிரிட் தன்னைக் காதலிப்பதைப் போல சிறிதும் குறையாமல் அவனை இரகசியமாகக் காதலிக்கிறாள், ஆனால் தன்னை ஒரு போர்வீரனுக்குத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருப்பதாக குந்தர் தெரிவித்த போது (அந்தப் போர்வீரனுடைய பெயரை குந்தர் தெரிவிக்கவில்லை) அதற்குப் பின்வருமாறு பதிலளிக்கிறாள்:

''தாங்கள் என்னைக் கேட்க வேண்டிய அவசியமில்லை; நான் உங்கள் கட்டளைப்படியே என்றும் நடப்பேன்; பிரபுவே, தாங்கள் என் கணவனாக யாரைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ, அவரையே நான் மணம் செய்து கொள்வேன்.''*

இந்த விஷயத்தில் அவர் அவளுடைய காதலையும் கணக்கிலெடுத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் அவ

* **நிபலுங்குகளைப் பற்றிய பாடல்**, பத்தாம் பாடல்.—ப-ர்.

ளுக்குச் சிறிதும் ஏற்படவில்லை. குந்தர் புரூன்ஹில்டைக் கண்ணால் பார்க்காமலேயே அவளைத் திருமணம் செய்து கொள்ள முயல்கிறான். அதே போல ஏட்ஸெலும் கிரீம் ஹில்டை மணக்க முயல்கிறான். குட்ரூன்[19] நூலிலும் இதேதான் நடக்கிறது. அதில் அயர்லாந்தின் ஸிகெபான்ட் நார்வே நாட்டைச் சேர்ந்த உட்டேயை மணக்கவும் ஹெகெலிங்கன் நாட்டைச் சேர்ந்த ஹெடல் அயர்லாந்தின் ஹீல்தேயை மணக்கவும் முயல்கிறார்கள். கடைசியாக, மோர்லாந்து நாட்டு ஸிக்ஃபிரிடும் ஓர்மனியின் ஹார்ட்முதும் ஸீலாந்தின் ஹெர்விக்கும் குட்ரூனை மணக்க முயல்கின்றனர். இங்கேதான் முதல் தடவையாக, குட்ரூன் தன் சுயவிருப்பப்படி கடைசியாகச் சொல்லப்பட்ட நபரை மணக்க முடிவு செய்கிறாள். ஒரு இளவரசனுக்கு மணமகளைப் பெற்றோர்கள் தேர்ந்தெடுப்பது விதியாக இருந்தது. பெற்றோர்கள் இறந்திருந்தால் அவன் மிக முக்கியமான மானியக்காரர்களைக் கலந்து கொண்டு—எல்லா விஷயங்களிலும் அவர்களுடைய சொல்லுக்கு அதிகமான மதிப்பு உண்டு—தன் மணப் பெண்ணைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். இது வேறுவிதமாக இருக்க முடியாது. இளவரசன் விஷயம் போலவே, வீரப் பெருந்தகை, பாரன் விஷயத்திலும் திருமணம் என்பது ஒரு அரசியல் நடவடிக்கையாக, புதிய உறவுகளின் மூலம் அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்கின்ற வாய்ப்பாக இருந்தது. வம்சத்தின் நலன்—தனிநபருடைய நலன் அல்ல—நிர்ணயமான காரணியாகும். இங்கே, திருமண விஷயத்தில் காதலுக்கு எப்படி மதிப்பு ஏற்படும்?

மத்திய கால நகரங்களைச் சேர்ந்த கில்டு நபர் விஷயத்திலும் இப்படியேதான். அவனைப் பாதுகாத்த அதே சலுகைகள், விசேஷ நிபந்தனைகளுடன் கூடிய கில்டு உரிமைப் பத்திரங்கள், பிற கில்டுகளிலிருந்தும் சக கில்டு நபர்களிடமிருந்தும் தன்னுடைய கையாட்களிடமிருந்தும் பயிற்சியாளர்களிடமிருந்தும் சட்டப்படி தன்னைப் பிரித்து வைக்கின்ற செயற்கையான வரையறைகள் ஆகியவை தனக்குத் தகுதியுள்ள மனைவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய வட்டத்தை அதிகமான அளவுக்குக் குறுக்கி விட்டிருந்தன. இந்தச் சிக்கலான அமைப்பின் கீழ் தனக்கு மிகவும் தகுதியுள்ள மணமகள் யார் என்ற

பிரச்சினை தனிப்பட்ட விருப்பத்துக்கு பதிலாக குடும்ப நலன் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது.

எனவே, மத்திய காலத்தின் இறுதிக் கட்டம் வரையில் திருமணம் என்பது மிகப் பெரும்பாலும் ஆரம்பத்திலிருந்தபடியே தான் இருந்தது, அதாவது சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரால் முடிவு செய்யப்படவில்லை. தொடக்கத்தில் ஒருவன் பிறக்கும் போதே மணந்து கொண்டுதான் பிறந்தான்—தனக்கு மாறுபட்ட பாலைச் சேர்ந்த ஒரு முழுக் குழுவை மணந்திருந்தான். குழு மணத்தின் பிந்திய வடிவங்களிலும் இது போன்ற உறவு அநேகமாக இருந்திருக்கும்; ஆனால் குழு மேன்மேலும் அதிகமாகக் குறுக்கப்பட்டு வந்திருக்கும். இணை மணத்தில் குழந்தைகளின் திருமணத்துக்குத் தாயார்கள் ஏற்பாடு செய்வதே விதி. இங்கும் கூட புதிய உறவுமுறையின் பிணைப்புகள், குலத்திலும் இனக்குழுவிலும் இளம் தம்பதிகளுடைய நிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற யோசனைகளே நிர்ணயகரமான காரணியாக உள்ளன. மேலும், பொதுச் சொத்தைக் காட்டிலும் தனிச்சொத்து மேலோங்கிய பொழுது வாரிசுரிமையில் அக்கறை ஏற்பட்டதுடன் தந்தையுரிமையும் ஒருதார மணமும் மேல் நிலைக்கு வந்து விட்டன; திருமணம் முன்னை விட அதிகமாகப் பொருளாதாரக் காரணங்களைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. விலை கொடுத்துப் பெண்ணை வாங்கும் திருமணத்தின் வடிவம் மறைகிறது. ஆனால் பெண் மட்டுமன்றி ஆணும் சொந்த குணங்களைக் கொண்டு மதிக்கப்படாமல் சொத்துக்களைக் கொண்டு மதிக்கப்படும் வழியிலே அந்தப் பேரம் அதிகரிக்கின்ற முறையில் நடத்தி முடிக்கப்படுகிறது. திருமணத்துக்கு இரு தரப்பினரின் பரஸ்பர விருப்பம் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் அதிமுக்கியமான காரணமாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஆளும் வர்க்கங்களின் நடைமுறையில் ஆரம்பத்திலிருந்து இடம் பெறவில்லை. அதிகமாகச் சொன்னால், புத்தார்வக் கற்பனைக் கதைகளில் அல்லது ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மத்தியில் மட்டும்தான் இது நடைபெற்றது. ஆனால் அவைதான் முக்கியத்துவம் இல்லாதவையாயின.

பூகோளக் கண்டுபிடிப்புகள் என்ற யுகத்தைத்

தொடர்ந்து முதலாளித்துவ உற்பத்தி உலக வர்த்தகம் மற்றும் பட்டறை உற்பத்தியின் மூலம் உலகத்தை வெற்றி கொள்ளப் புறப்பட்ட பொழுது இருந்த நிலைமை இது தான். இப்படிப்பட்ட மண வடிவம் அதற்கு மிகவும் பொருத்தமாக இருந்திருக்க வேண்டும் என்று ஒருவர் நினைக்கலாம். ஆம், உண்மையில் அப்படித்தான் இருந் தது. எனினும்—உலக வரலாற்றின் முரண்நகை ஆழங் காண முடியாதது—முதலாளித்துவ உற்பத்தி முறைதான் அதில் தீர்மானகரமான உடைப்பை ஏற்படுத்தியது. அது எல்லாப் பொருட்களையும் பண்டங்களாக மாற்றி விட்ட தன் மூலம் பண்டைக்காலப் பரம்பரை உறவுகள் எல்லா வற்றையும் கரைத்து விட்டது; மரபுவழிப்பட்ட பழக்கங் கள், வரலாற்று ரீதியான உரிமைகள் இருந்த இடத்தில் வாங்கி விற்பனை செய்யும் பேரத்தை, ''சுதந்திரமான'' ஒப்பந்தத்தைக் கொண்டுவந்தது. முந்திய சகாப்தங் களுடன் ஒப்பிடுகின்ற பொழுது நாம் அடைந்துள்ள முன் னேற்றம் அனைத்தும், சுவீகரித்துக் கொண்ட நிலைமை களிலிருந்து ஒப்பந்தம் செய்து கொண்ட நிலைமைகளுக்கு (from status to contract) வ்ளர்ச்சியடைந்ததில் அடங்கி யுள்ளது என்று ஆங்கில சட்ட நிபுணர் ஹெ.ஸா. மெயின் கூறிய பொழுது தாம் ஏதோ மாபெரும் கண்டுபிடிப்பைச் செய்து விட்டதாக நம்பினார். இக்கூற்று—அது சரியாக இருக்கின்ற அளவுக்கு—நெடுங்காலத்துக்கு முன்பே கம் யூனிஸ்டு அறிக்கையில் உள்ளதே.

ஆனால் ஒப்பந்தங்களைச் செய்து முடிக்க வேண்டு மென்றால் தம்மையும் தமது செய்கைகளையும் உடை மைகளையும் சுதந்திரமாகக் கையாளக் கூடிய நபர்கள், ஒருவருக்கொருவர் சமத்துவ நிலையில் உள்ள நபர்கள் முதலில் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ''சுதந்திர மான'', ''சமத்துவமான'' மனிதர்களைப் படைப்பதே முதலாளித்துவ உற்பத்தியின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். ஆரம்பத்தில் இது அரை உணர்வுள்ள முறை யில், மத வேடத்தில் நடைபெற்றாலும் லூதர் மற்றும் கால்வினுடைய மதச் சீர்திருத்தக் காலத்திலிருந்து[20] இது ஒரு கோட்பாடாக உறுதிப்பட்டது, அதாவது ஒரு நபர் தனது செயல்களை நிறைவேற்றுகின்ற பொழுது தன் சித்தத்தின் மீது முழு அதிகாரம் செலுத்தினால் மட்டுமே

அவன் தன் செயல்களுக்கு முழுப் பொறுப்பாளி ஆகிறான் என்றும் ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கின்ற எல்லாக் கட்டாயங்களையும் எதிர்ப்பது ஒழுக்கத்தின் பாற்பட்ட கடமை என்றும் அக்கோட்பாடு வலியுறுத்தியது. ஆனால் இந்தக் கோட்பாடு திருமணத்தின் முந்திய நடைமுறையுடன் எப்படிப் பொருந்தும்? முதலாளி வர்க்கக் கருத்தோட்டங்களின்படி, திருமணம் என்பது ஓர் ஒப்பந்தம், ஒரு சட்ட விவகாரம், உண்மையிலேயே எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான சட்ட விவகாரம், ஏனென்றால் அது இரண்டு நபர்களின் உடலையும் உள்ளத்தையும் வாழ்க்கை முழுவதற்குமே முடித்து விடுகிறது. உண்மைதான், அந்தப் பேரம் சம்பிரதாய முறையில் சுதந்திரமாகத்தான் முடிக்கப்பட்டது. இரு தரப்பினரின் ஒப்புதலைப் பெறாமல் அது முடிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஒப்புதல் எப்படிப் பெறப்பட்டது, உண்மையாகவே திருமணத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் யார் என்பவை எல்லோரும் நன்கறிந்தவையே. ஆனால் மற்ற எல்லா ஒப்பந்தங்களுக்கும் முடிவெடுப்பதற்கு உண்மையான சுதந்திரம் இருக்க வேண்டுமென்று கோருகின்ற பொழுது இதற்கு ஏன் கோரக் கூடாது? திருமணம் செய்து கொள்ளப் போகின்ற இரு இளம் நபர்களுக்குத் தம்மை, தமது உடல்களையும் உறுப்புகளையும் சுதந்திரமாக ஒப்படைக்கின்ற உரிமை கிடையாதா? வீரப் பெருந்தன்மையின் விளைவாகக் காதல் ஒரு புதுப்பாணி ஆகவில்லையா? பிறர் மனைவியருடன் முறைக்கேடான உறவு கொள்ளும் வீரக் காதலுக்கு எதிராக கணவன், மனைவியரிடையே காதல் என்பது அதன் சரியான பூர்ஷ்வா வடிவமில்லையா? ஒருவரையொருவர் காதலிப்பது கணவன், மனைவியின் கடமையானால் காதலர்களும் பிறரையன்றி ஒருவரையொருவர் மணப்பதுதானே கடமையாகும். மேலும், பெற்றோர்கள், உறவினர்கள், கல்யாணத் தரகர்கள், திருமணம் முடிப்பவர்கள் ஆகியோருக்கு இருக்கும் உரிமையை விடக் காதலர்களின் உரிமை உயர்ந்திருக்கவில்லையா? சுதந்திரமாக, தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கின்ற உரிமை சிறிதும் தயங்காமல் திருச்சபைக்குள்ளும் மதத்துக்குள்ளும் பலவந்தமாக நுழைந்து விட்டதென்றால், இளைய தலைமுறையின்

உடலையும் ஆன்மாவையும் உடைமையையும் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் முடிவு செய்ய மூத்த தலைமுறை உரிமை கொண்டாடும் இடத்துக்கு வந்தவுடன் அது எப்படி நின்று விட முடியும்?

பழைய சமுதாய உறவுகளை எல்லாம் தளர்த்தி, சம்பிரதாயக் கருத்தோட்டங்களின் அடிப்படைகளை எல்லாம் குலுக்கி விட்ட காலகட்டத்தில் இந்தக் கேள்விகள் தோன்றவே செய்யும். ஒரேயடியில் உலகத்தின் அளவு சுமார் பத்து மடங்கு பெரிதாகி விட்டது. மேற்கு ஐரோப்பியர்கள் அரைக்கோளத்தின் நான்கில் ஒரு பகுதியைப் பார்த்ததற்கு மாறாக இப்பொழுது உலகம் முழுவதையுமே பார்க்க முடிந்தது. அவர்கள் உலகத்தின் மற்ற எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றுவதற்கு விரைந்தார்கள். நாட்டின் பழைய, குறுகிய தடைகள் மறைந்து விட்டதைப் போல மத்திய காலத்தின், வகுத்தளிக்கப்பட்ட சிந்தனா முறையினால் ஏற்பட்ட ஆயிரம் ஆண்டுக் காலத் தடைகளும் மறைந்தன. மனிதனுடைய புறக்கண்ணுக்கும் அகக்கண்ணுக்கும் எதிரே எல்லையற்ற அடிவானம் விரிந்து தோன்றியது. இந்தியாவின் செல்வத்தினால், மெக்சிகோ, பொடோஸியின் தங்க, வெள்ளிச் சுரங்கங்களினால் வசீகரிக்கப்பட்டுள்ள வாலிபனுக்குக் கௌரவத்தின் நல்ல நோக்கங்களாலும் பல தலைமுறைகளாகக் கைமாற்றித் தரப்பட்டிருக்கின்ற மதிப்புமிக்க கில்டுச் சலுகைகளினாலும் என்ன லாபம்? அது முதலாளி வர்க்கத்தின் யாத்திரைத் தன்மையுள்ள வீரப் பெருந்தகைக் காலப் பகுதியாகும்; அதற்கும் புத்தார்வக் கற்பனையும் காதல் கனவுகளும் இருந்தன—ஆனால் அவை முதலாளி வர்க்க அடிப்படையில், முடிவாகப் பார்க்கும் பொழுது, முதலாளி வர்க்கக் குறிக்கோள்களைக் கொண்டிருந்தன.

வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கம், குறிப்பாகப் புரோடஸ்டேன்ட் நாடுகளில்—மற்ற நாடுகளைக் காட்டிலும் அங்கேதான் இருக்கின்ற ஒழுங்கமைப்பு அதிகமாகக் குலுக்கப்பட்டது—திருமண விஷயத்திலும் ஒப்பந்த சுதந்திரத்தை மேன்மேலும் அங்கீகரித்து மேலே வர்ணித்தபடி நிறைவேற்றியது. திருமணம் வர்க்க வகைப்பட்ட திருமணமாகவே இருந்தது; ஆனால் அந்த வர்க்க வரம்புகளுக்குள் இரு தரப்பினருக்கும் ஓரள

வுக்குச் சுதந்திரமாகத் தேர்வு செய்கின்ற உரிமை இருந்தது. மேலும், பரஸ்பரக் காதல், கணவன், மனைவியின் உண்மையான, சுதந்திரமான ஒப்புதல் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டிராத ஒவ்வொரு திருமணமும் ஒழுக்கக் கேடானது என்று ஏட்டளவிலும் ஒழுக்கத் தத்துவத்திலும் கவிதா வர்ணனையிலும் அசைக்க முடியாத படி நிலைநாட்டியதைப் போல் வேறெதுவும் நிலை நாட்டப்படவில்லை. சுருக்கமாகக் கூறினால், காதல் திருமணம் ஒரு மனித உரிமை என்று பிரகடனம் செய்யப்பட்டது. அது droit de l'homme* மட்டுமல்ல, அத்துடன் விதிவிலக்காக, droit de la femme** ஆகும்.

ஆனால் இந்த மனித உரிமை மனித உரிமைகள் எனப்பட்ட மற்றெல்லாவற்றிலிருந்தும் ஓர் அம்சத்தில் வேறுபட்டிருந்தது. இரண்டாவதாகச் சொல்லப்பட்டவை நடைமுறையில் ஆளும் வர்க்கத்துக்கு, முதலாளி வர்க்கத்துக்கு மட்டும் உரியவையாக இருந்த பொழுது, ஒடுக்கப்பட்ட வர்க்கத்திடமிருந்து, பாட்டாளி வர்க்கத்திடமிருந்து அவை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பறிக்கப்பட்டு விட்ட பொழுது வரலாற்றின் முரண்நகை மீண்டும் தன்னை இங்கே வலியுறுத்திக் காட்டிக் கொள்கிறது. வழக்கமான பொருளாதாரச் செல்வாக்குகள் ஆளும் வர்க்கத்தின் மீது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஆகவே அது விதிவிலக்கான சந்தர்ப்பங்களில்தான் உண்மையிலேயே சுதந்திரமான திருமணங்களைக் காட்ட முடியும். ஆனால் ஒடுக்கப்பட்டிருக்கின்ற வர்க்கத்தில் இவை விதியாக இருக்கின்றன என்று நாம் அறிவோம்.

திருமணத்தில் முழு சுதந்திரம் என்பது முதலாளித்துவ உற்பத்தியையும் அது படைக்கின்ற சொத்து உறவுகளையும் ஒழிப்பதன் மூலம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் இன்னும் இவ்வளவு பலமான தாக்கத்தைச் செலுத்துகின்ற துணைப் பொருளாதாரக் காரணங்கள் எல்லாவற்றையும் அகற்றிய பிறகுதான் பொதுவாகச்

---

* Droit de l'homme என்பது ஒரு சிலேடையாகும்; அதற்கு ஒரே சமயத்தில் ''மனித உரிமை'' மற்றும் ''ஆணின் உரிமை'' என்று பொருளாகும்.—ப-ர்.

** —பெண்ணின் உரிமை.—ப-ர்.

செயல்பட முடியும். அப்பொழுதுதான் பரஸ்பர அன்பைத் தவிர வேறு எந்த நோக்கமும் இருக்காது.

ஒருவன் பால் அல்லது ஒருத்தியின் பால் அன்பு காட்டுவது காதலின் இயல்பு. எனினும் இன்று பெண் மட்டுமே அதைப் பூர்ணமாக நடைமுறையில் காட்டுகிறாள். எனவே காதல் திருமணம் அதன் இயல்பிலேயே ஒருதார மணமாகத்தான் இருக்கிறது. குழு மணத்திலிருந்து ஒருதார மணத்துக்கு முன்னேற்றமடைந்தது முக்கியமாகப் பெண்களினால் ஏற்பட்டது என்று பாஹொஃபென் கருதியது எவ்வளவு சரியானது என்று பார்த்தோம். இணை மணத்திலிருந்து ஒருதார மணத்துக்கு மாறியது மட்டுமே ஆண்களால் ஏற்பட்டது என்று கொள்ள முடியும். மேலும், வரலாற்று ரீதியாகப் பார்த்தால், இதன் விளைவாகப் பெண்களின் நிலை மேலும் மோசமடைந்தது, திருமணமான ஆண்களின் ஒழுக்கக் கேட்டுக்கு வழி கிடைத்தது. ஆண்களுடைய வழக்கமான ஒழுக்கக் கேட்டைப் பெண்கள் சகித்துக் கொண்டிருக்கும்படி கட்டாயப்படுத்துகின்ற பொருளாதார நோக்கங்கள்—தமது வாழ்க்கையைப் பற்றிய கவலை, அதற்கும் மேலாக, தமது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை—மறைகின்ற பொழுது ஏற்படுகின்ற ஆண், பெண் சமத்துவம் பெண்கள் பல கணவர் மண முறைக்குப் போய் விடுவதை விட ஆண்கள் உண்மையிலேயே ஒருதார மணத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பேருதவி செய்யும் என்று முந்திய அனுபவத்தின் அடிப்படையில் கூறலாம்.

எனினும் சொத்து உறவுகளிலிருந்து எழுந்ததன் விளைவாக ஒருதார மணத்தின் மீது முத்திரையாக விழுந்துள்ள எல்லா குணாம்சங்களும் உறுதியாக மறையும். அவை பின்வருவன: முதலாவதாக, ஆணின் ஆதிக்கம்; இரண்டாவதாக, திருமணத்தை ரத்து செய்ய முடியாமை. ஆணின் பொருளாதார ஆதிக்கத்தின் விளைவாகத்தான் அவன் மண வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகிறான். அது மறைகின்ற பொழுது இதுவும் போய் விடும். திருமணத்தை ரத்து செய்ய முடியாமை என்பது ஓரளவுக்கு ஒருதார மணம் தோன்றியுள்ள பொருளாதார நிலைமைகளின் விளைவாகவும் ஓரளவுக்கு இந்தப் பொருளாதார நிலைமைகளுக்கும் ஒருதார மணத்துக்கும் உள்ள தொடர்பு

இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாமலும் மதத்தினால் மிகைப்படுத்திக் கூறப்பட்டும் வந்த காலத்திலிருந்து ஏற்பட்ட மரபின் விளைவாகவும் இருக்கிறது. இன்று அது ஆயிரம் மடங்கு உடைந்து விட்டது. காதல் திருமணங்கள் மட்டுமே ஒழுக்கமானவை என்றால் பரஸ்பர அன்பு நீடிக்கின்ற மண வாழ்க்கைதான் ஒழுக்கமுடையதாகும். தனிப்பட்ட காதல் முனைப்பு எவ்வளவு காலம் இருக்கும் என்பது, குறிப்பாக ஆண்களிடம், நபருக்கு நபர் மிகவும் வேறுபடுகிறது. அந்தக் காதல் நிச்சயமாக முடிந்து விடுதல் அல்லது மற்றொரு நபர் மீது ஏற்படுகின்ற புதுக் காதல், பிரிந்து போதலை அந்தத் தம்பதிகளுக்கும் சமுதாயத்துக்கும் நன்மையாகச் செய்கின்றது. விவாகரத்து நடவடிக்கைகள் என்னும் பயனில்லாத சேற்றில் இறங்கி நடக்கின்ற அனுபவம் மக்களுக்கு நேராது.

முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு வந்து கொண்டிருக்கின்ற அழிவுக்குப் பிறகு பால் உறவுகளை ஒழுங்கு படுத்துவதைப் பற்றி நாம் ஊகமாகச் சொல்லக் கூடியது பெரும்பாலும் எதிர்மறையாகவே இருக்கிறது. இதைத் தவிர கூடுதலாக என்ன இருக்கும்? ஒரு புதிய தலைமுறை வளர்ச்சியடைந்த பிறகு அது முடிவு கட்டப்படும். அந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஆண்களுக்கு பணத்தைக் கொண்டு அல்லது சமூக ரீதியான இதர அதிகாரச் சாதனங்களைக் கொண்டு ஒரு பெண்ணை இணங்கச் செய்யும்படி தம் வாழ்க்கையில் என்றைக்குமே நேராது. பெண்கள் உண்மைக் காதலுக்காக மட்டுமன்றி வேறெந்த நோக்கத்துக்காகவும் எந்த ஆணுக்கும் என்றைக்குமே இணங்க மாட்டார்கள், அல்லது பொருளாதார விளைவுகளைப் பற்றி அஞ்சி தம்முடைய காதலனுக்குத் தம்மைக் கொடுப்பதற்குத் தயங்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படாது. அப்படிப்பட்ட மக்கள் தோன்றியவுடனே, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நாம் இன்று நினைக்கிறோமோ, அதைச் சிறிதும் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு நபருடைய நடைமுறையை ஒட்டி தமது சொந்த நடைமுறையையும் அதற்குப் பொருத்தமான தமது சொந்தப் பொதுமக்கள் அபிப்பிராயத்தையும் நிலைநாட்டுவார்கள். விஷயம் அத்துடன் முடிந்து விடும்.

நாம் மார்கனை விட்டு வெகு தூரம் வந்து விட்டபடியால், அவரிடம் திரும்பிச் செல்வோம். நாகரிக நிலைக் காலத்தில் வளர்ச்சியடைந்த சமுதாய அமைப்புகளைப் பற்றிய வரலாற்று ரீதியான ஆராய்ச்சி அவருடைய நூலின் விஷயத்துக்கு அப்பாற்பட்டதாகும். எனவே அவர் இக் காலப் பகுதியில் ஒருதார மணத்தின் கதியைப் பற்றி சுருக்கமாகத்தான் ஆராய்கிறார். அவர் ஒருதார மணக் குடும்பத்தின் வளர்ச்சியை ஒரு முன்னேற்றமாக, முழுமையான ஆண், பெண் சமத்துவத்துடன் கிட்டத்தட்ட ஒட்டியிருப்பதாகக் கருதுகிறார். எனினும் இந்தக் குறிக்கோளை எட்டி விட்டதாக அவர் கருதவில்லை. அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

''குடும்பம் என்பது தொடர்ச்சியாக நான்கு வடிவங்களைக் கடந்து வந்திருக்கிறது, இப்பொழுது அது ஐந்தாவது வடிவத்தில் இருக்கிறது என்று உண்மையை ஒத்துக் கொண்டால், இந்த வடிவம் நிரந்தரமாக இருக்குமா என்ற கேள்வி உடனே எழுகிறது. அதற்குத் தரக் கூடிய பதில் இதுதான்: சென்ற காலத்தில் நடந்ததைப் போல, சமுதாயம் முன்னேற அதுவும் முன்னேறும்; சமுதாயம் மாற அதுவும் மாறும். அது சமுதாய அமைப்பின் படைப்பு; அதன் பண்பாட்டை அது பிரதிபலிக்கும். நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து ஒருதார மணக் குடும்பம் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது, நவீன காலத்தில் கணிசமாக மேம்பட்டிருக்கிறது. எனவே ஆண், பெண் சமத்துவம் முழுமையாக சாதிக்கப்படுகின்ற வரை அது மேலும் மேம்பட முடியும் என்று குறைந்தபட்சமாகக் கருதிக் கொள்ளலாம். நெடுந்தூர எதிர்காலத்தில் ஒருதார மணக் குடும்பத்தினால் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமற் போனால், அதற்குப் பின்னால் வரப் போகின்றவற்றின் இயல்பை ஆருடம் கூற முடியாது.''

## III

## இராகோஸ் குலம்

இப்பொழுது மார்கனுடைய மற்றொரு கண்டுபிடிப்புக்கு வருகிறோம். குறைந்தபட்சமாகச் சொல்வதென்றால், இரத்த உறவுமுறைகளிலிருந்து குடும்பத்தின் புராதன வடிவத்தைப் புனரமைத்ததைப் போன்ற முக்கியத்துவத்தைப் பெற்றது இது. அமெரிக்க செவ்விந்திய இனக்குழுவுக்குள் உள்ள குலக் குழுக்கள்—இவை மிருகங்களின் பெயர்களைக் கொண்டிருந்தன—கிரேக்கர்களின் geneaஉடனும் ரோமானியர்களின் gentesஉடனும் ஒன்றானவை. இவற்றில் அமெரிக்க வடிவமே குலத்துக்குரிய ஆதி வடிவம்; கிரேக்க, ரோமானிய வடிவங்கள் பிற்காலத்தில் அதிலிருந்து தோன்றியவையே; குலம், பிராட்ரி, இனக்குழு ஆகியவையாக இருந்த புராதன கால கிரேக்க, ரோமானிய சமுதாய அமைப்பு முழுவதும் அமெரிக்க செவ்விந்திய சமுதாய அமைப்பை மிகவும் ஒத்திருக்கிறது. நமக்குத் தெரிந்திருக்கின்ற செய்திகள் காட்டுகின்ற அளவுக்கு குலம் என்பது அநாகரிகர்கள் நாகரிக நிலையில் நுழைகின்ற வரைக்கும் அதற்குப் பிறகும் பெற்றிருந்த அமைப்பு. இதை நிரூபித்தது புராதன கிரேக்க, ரோமானிய வரலாற்றின் மிகவும் புரிந்து கொள்ள இயலாத பகுதிகளை ஒரே அடியில் தெளிவாக்கியது; அதே சமயத்தில், அரசு அமைக்கப்படுவதற்கு முன்பாகப் பண்டைக்காலத்தின் சமுதாய அமைப்பின் அடிப்படையான அம்சங்கள் மீது எதிர்பாராத ஒளியைப் பாய்ச்சியது. இதைப் புரிந்து கொண்ட பிறகு அது மிகச் சுலபம் என்று தோன்றக் கூடும்; எனினும் மார்கன் அதை மிகச் சமீப காலத்தில்தான் கண்டுபிடித்தார். 1871இல் வெளியிடப்பட்ட தமது

முந்திய நூலில்* இந்த இரகசியத்தை இன்னும் அவர் புரிந்து கொள்ளவில்லை. அதை அவர் கண்டுபிடித்த பிறகு வழக்கமாகவே அதிகமான தன்னம்பிக்கையுள்ள, வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பற்றிய ஆங்கில வரலாற்றாசிரியர்கள் சுண்டெலியைப் போல சிறிது காலத்துக்கு மௌனமாக இருக்க வேண்டியிருந்தது.

இரத்த உறவுமுறையைக் கொண்ட இந்தக் குலக் குழுவுக்கு மார்கன் gens என்று பொதுப்பண்டையாகப் பெயர் வைத்தார். இது லத்தீன் சொல். இதுவும் இதற்குச் சமமான பொருளுடைய genos என்னும் கிரேக்கச் சொல்லும் gan (ஜெர்மன் மொழியில் ஆரிய gயை k என்று வழங்குவது பொது விதியாகும், ஆகவே kan) என்ற பொதுவான ஆரியச் சொல்லிலிருந்து பெறப்பட்டவையாகும், அதற்கு ''பெற்றெடுப்பது'' என்று பொருள். Gens, genos, சம்ஸ்கிருத janas, கோதிக் மொழியில் kuni (மேற்கூறிய விதிப்படி அமைந்தது), பண்டைக்கால நோர்டிக், ஆங்கில-சாக்சன் kyn, ஆங்கில மொழியில் kin, மத்திய மேல் ஜெர்மன் மொழியில் künne—இவையனைத்தும் ஒரே மாதிரியாக குலத்தை, மரபு வழியைக் குறிக்கின்றன. எனினும் லத்தீன் gens மற்றும் கிரேக்க genos ஒரு பொது முன்னோரின் (இங்கே ஓர் ஆண் முன்னோரின்) சந்ததியினர் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கின்ற குலக் குழுவைக் குறிப்பதற்கே விசேஷமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இக்குழு சில சமூக, மத உறவுமுறைகளின் மூலம் ஒரு தனிச் சமூகமாக, ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சமூகத்தின் தோற்றமும் அதன் தன்மையும் நமது வரலாற்றாசிரியர்கள் அனைவருக்கும் புரிந்து கொள்ள இயலாதவையாக இருந்தன.

பூனலுவா குடும்பம் சம்பந்தமாக, ஒரு குலத்தின் ஆதி வடிவம் எப்படிப்பட்டது என்பதை நாம் ஏற்கெனவே மேலே பார்த்தோம். பூனலுவா திருமணத்தின் விசேஷத்தாலும் அதில் அவசியமாகவே ஆதிக்கம் வகித்த கருத்தோட்டங்களுக்குப் பொருத்தமாகவும், குலத்தின் ஸ்தாபகரான குறிப்பிட்ட ஒரு தனிப் பெண்ணை மூலமாகக் கொண்டு அடையாளங்கண்டு கொள்ளப்பட்ட சந்ததியின

---

* இத்தொகுதி, பக்கம் 71 பார்க்க.—ப-ர்.

ராயுள்ள நபர்களே அதில் அடங்கியிருந்தனர். இந்தக் குடும்ப வடிவத்தில் தந்தை யார் என்பது நிச்சயமல்ல; ஆகவே பெண்வழிப் பரம்பரையே செல்லத்தக்கது. சகோதரர்கள் சகோதரிகளை மணக்கக் கூடாது, வேறு மரபு வழியைச் சேர்ந்த பெண்களையே மணக்கலாம் என்பதால் அந்தப் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தாயுரிமைப்படி அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களல்ல. எனவே ஒவ்வொரு தலைமுறையின் புதல்விகளின் குழந்தைகள் மட்டுமே குலக் குழுவில் இருப்பார்கள்; புதல்வர்களின் குழந்தைகள் தங்கள் தாயின் குலத்துக்குச் சென்றுவிடுகின்றனர். இந்த இரத்த உறவுக் குழு அதே இனக் குழுவுக்குள் இருக்கும் அதே மாதிரியான குழுக்களிலிருந்து வேறாக, ஒரு தனிக் குழுவாகத் தன்னை அமைத்துக் கொண்ட பிறகு அது என்னவாகிறது?

மார்கன் இராகோஸ்களின் குலத்தை, குறிப்பாக செனீகா இனக்குழுவின் குலத்தை ஆதி குலத்தின் மூலச் சிறப்பான வடிவமாக எடுத்துக் கொள்கிறார். அவர்களிடையில் எட்டு குலங்கள் உள்ளன. அவை பின்வரும் மிருகங்களின் பெயர்களைத் தாங்கியுள்ளன: 1) ஓநாய், 2) கரடி, 3) ஆமை, 4) பீவர், 5) மான், 6) உள்ளான் குருவி, 7) நாரை, 8) பருந்து. ஒவ்வொரு குலத்திலும் பின்வரும் பழக்கங்கள் இருக்கின்றன:

1. அது தனது சாகெம் (சமாதான காலத்தில் தலைவன்) என்பவரையும் தனது தலைவனையும் (யுத்தத்தின் போது தலைவன்) தேர்ந்தெடுக்கிறது. குலத்திற்குள்ளிருந்துதான் சாகெம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; குலத்தில் அவனுடைய பதவி பரம்பரையானது; எப்பொழுது பதவி காலியானாலும் உடனே அது நிரப்பப்பட வேண்டும். யுத்தத் தலைவனைக் குலத்திற்கு வெளியிலிருந்தும் தேர்ந்தெடுக்கலாம், அந்தப் பதவி சில சமயம் காலியாகவும் இருக்கலாம். முந்திய சாகெமின் மகன் எப்போதும் சாகெம் பதவிக்கு வந்ததில்லை. ஏனென்றால் இராகோஸ்களிடையே தாயுரிமை நிலவியது. மகன் மற்றொரு குலத்தைச் சேர்ந்தவனாவான். ஆனால் சகோதரனோ, சகோதரியின் மகனோ பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஆண், பெண் எல்லோரும் தேர்தலில் வாக்களித்தனர். தேர்தல் முடிவை எஞ்சிய ஏழு

குலங்களும் உறுதிப்படுத்த வேண்டும். அதன் பிறகு தான் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் சடங்கு முறைப்படி பதவியில் அமர்த்தப்பட்டான். இராகோஸ்களின் கூட்டு முழுவதன் பொதுக் கவுன்சில் இச்சடங்கை நடத்தி வைக்கும். இதன் முக்கியத்துவம் பின்னால் விளக்கப்படும். குலத்திற்குள் சாகெம் தந்தை முறையில், தார்மிக அதிகாரத்தைக் கொண்டிருந்தான். அவனிடம் பலாத்காரச் சாதனங்கள் எவையுமில்லை. அவன் தன்னுடைய பதவியின் காரணமாக செனீகா இனக்குழுவின் கவுன்சிலிலும் உறுப்பினனாக இருந்தான்; அதே போல் இராகோஸ்களின் கூட்டின் பொதுக் கவுன்சிலிலும் உறுப்பினனாக இருந்தான். யுத்தத் தலைவன் இராணுவப் படையெடுப்புகளின் போது மட்டுமே ஆணைகள் பிறப்பிக்க முடியும்.

2. சாகெமையும் யுத்தத் தலைவனையும் குலம் விருப்பப்பட்டால் நீக்கி விட முடியும். இதையும் ஆண்கள், பெண்கள் சேர்ந்தே செய்தார்கள். அதன் பிறகு நீக்கப்பட்டவர்கள் சாதாரண வீரர்களாகவும் தனிப்பட்ட நபர்களாகவும் மற்றவர்களைப் போலவே இருந்தார்கள். இனக்குழுவின் கவுன்சில் குலத்தின் விருப்பங்களுக்கு எதிராகக் கூட சாகெம்களை நீக்க முடியும்.

3. எந்த உறுப்பினரும் குலத்துக்குள் திருமணம் செய்யக் கூடாது. இது குலத்தின் அடிப்படை விதி, அதை ஒன்று சேர்த்து வைத்திருக்கின்ற பிணைப்பு. நேரடியாகவுள்ள இரத்த உறவுமுறையின் எதிர்மறை வெளியீடு இது. நேரடி இரத்த உறவுமுறையின் காரணமாகத்தான் அதற்குள் இருக்கின்ற தனிநபர்கள் உண்மையாகவே ஒரு குலம் ஆகிறார்கள். மார்கன் இந்தச் சாதாரண விஷயத்தைக் கண்டுபிடித்ததன் மூலம் குலத்தின் தன்மையை முதல் தடவையாக வெளிப்படுத்தினார். அதுவரை யாரும் குலத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்குக் காட்டுமிராண்டிகள், அநாகரிகர்களைப் பற்றி முன்னர் எழுதப்பட்டவையே சான்றாகும். அவற்றில் குல அமைப்பில் உள்ள பல்வேறு ஸ்தாபனங்கள்: இனக்குழு, கிளான், தூம் முதலானபடிப் புரிந்து கொள்ளாமலும் வரைமுறையின்றியும் குறிக்கப்படுகின்றன. மேலும், இவற்றின் தொடர்பாக, இப்படிப்பட்ட எந்த ஸ்தாபனத்திலும் திருமணம் தடை செய்யப்பட்டிருந்தது என்று சில சமயங்களில்

வற்புறுத்தப்பட்டது. இது மிகவும் அதிகமான குழப்பத்தை ஏற்படுத்தியது. திரு. மாக்லென்னான் நெப்போலியனைப் போல அதில் குறுக்கிட்டு இனக்குழுக்கள் தமக்குள் மணம் தடை செய்யப்பட்டுள்ள இனக்குழுக்கள் (புறமண முறை), தமக்குள் மணம் அனுமதிக்கப்பட்டுள்ள இனக் குழுக்கள் (அகமண முறை) எனப் பிரிக்கப்பட்டுள்ளது என்று உத்தரவு போட்டார். இப்படி விஷயங்களை முழு வதும் குழப்பிய பிறகு தன்னுடைய அபத்தமான இரண்டு பிரிவுகளில் பழமையானது எது—புறமண முறையா, அக மண முறையா—என்ற மிகவும் ஆழமான ஆராய்ச்சி யில் அவர் இறங்க முடிந்தது. இரத்த உறவுமுறையில் அமைந்த குலத்தையும் அதன் விளைவாக அதன் உறுப் பினர்களுக்கு இடையில் திருமணம் சாத்தியமில்லாதிருப் பதையும் கண்டுபிடித்த பிறகு இந்த முட்டாள்தனம் உடனே நின்று விட்டது. இராகோஸ்களை நாம் கண்டு கொள்ளும் காலத்தில் குலத்துக்குள்ளே திருமணம் செய்து கொள்வதைத் தடை செய்கின்ற விதி கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படை.

4. இறந்து போனவர்களுடைய சொத்து குலத்தின் இதர உறுப்பினர்களுக்கு இடையில் வினியோகிக்கப்பட் டது. எப்படியும் அது குலத்துக்குள் இருக்க வேண்டும். இராகோஸ் விட்டுச் செல்லக் கூடிய சொத்து அற்பமானதே என்பதால் அது குலத்துக்குள் அவனுடைய மிகவும் நெருங்கிய உறவினர்களிடையில் பிரித்துக் கொடுக்கப் பட்டது; ஆண் இறந்தால், அவனுடைய உடன்பிறந்த சகோதரர், சகோதரிகள், தாய் மாமன் ஆகியோருக்கு; பெண் இறந்தால், அவளுடைய குழந்தைகளுக்கு, உடன் பிறந்த சகோதரிகளுக்கு, ஆனால் சகோதரர்களுக்கு இல்லை. கணவன், மனைவி ஒருவரிடமிருந்து ஒருவர் சொத் தைச் சுவீகரிக்க முடியாது, தகப்பனாரிடமிருந்து குழந்தைகளும் சுவீகரிக்க முடியாது என்பதற்கு அதுதான் காரணம்.

5. குலத்தின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி, பாதுகாப்பு, குறிப்பாக அந்நியர்கள் செய்யும் தீமைகளுக்குப் பழி வாங்குவதில் ஆதரவளிப்பது கடமை ஆகும். தனிநபர் தன்னுடைய பாதுகாப்புக்குக் குலத்தை நம்பியிருந்தான், நம்பியிருக்க முடிந்தது. அவனுக்கு

யாராவது தீமை செய்தால், அது குலத்துக்குச் செய்த தீமையாகும். இதிலிருந்து—குலத்தின் இரத்த உறவுகளிலிருந்து—இரத்தப் பழி வாங்கும் கடமை எழுந்தது. இதை இராகோஸ்கள் நிபந்தனையின்றி அங்கீகரித்தார்கள். குலத்தில் உறுப்பினனாக இல்லாத ஒருவன் குல உறுப்பினனைக் கொன்றால், கொல்லப்பட்டவனுடைய குலம் முழுவதும் இரத்தப் பழி வாங்குவதாக சபதமெடுக்கும். முதலில் மத்தியஸ்த முயற்சி நடைபெறும். கொலை செய்தவனின் குலத்தின் கவுன்சில் கூட்டப்படும். விஷயத்தை சுமுகமாக முடிப்பதற்குரிய ஆலோசனைகள்—பெரும்பாலும் வருத்தம் தெரிவித்தல், அதிக மதிப்புடைய பரிசுகளைக் கொடுத்தல்—கொல்லப்பட்டவனுடைய குலத்தின் கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்படும். இவை ஏற்றுக் கொள்ளப்பட்டால், விவகாரம் முடிந்து விடும். இல்லையென்றால், பாதிக்கப்பட்டவனுடைய குலம் ஒரு நபரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை இரத்தப் பழி வாங்குவதற்கு நியமிக்கும். கொலையாளியைத் துரத்திச் சென்று பழி வாங்குவது இவர்களுடைய கடமை. இது நடந்தால், கொலையாளியின் குலத்துக்குப் புகார் செய்ய உரிமை கிடையாது. விவகாரம் சரிசெய்யப்பட்டதாகக் கருதப்படும்.

6. குலத்துக்குத் திட்டவட்டமான பெயர்களும் பெயர் வரிசைகளும் உண்டு. இனக்குழு முழுவதிலும் அப்பெயரை உபயோகிப்பதற்கு அந்தக் குலத்துக்கு மட்டுமே உரிமையுண்டு. ஆகவே ஒரு தனிநபருடைய பெயர் அவனுடைய குலத்தையும் குறிக்கும். குலத்தின் பெயரைக் கொண்டவனுக்குக் குல உரிமைகளும்இயல்பாகவே உண்டு.

7. குலம் அந்நியர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும், அதன் மூலம் அவர்களை மொத்த இனக்குழுவுக்குள் கொண்டுவர முடியும். கொல்லப்படாத யுத்தக் கைதிகள் குலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலமாக செனீகா இனக்குழுவில் உறுப்பினர்களானார்கள். அதன் மூலமாக அவர்கள் இனக்குழு, குலத்தின் எல்லா உரிமைகளையும் பெற்றார்கள். குலத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் இந்த சுவீகாரம் நடைபெறும்—ஆண்கள் அந்நியனை சகோதரர் அல்லது சகோதரி உறவில் வைத்தார்கள்; பெண்கள் அவனைக் குழந்தை உறவில்

வைத்தார்கள். இதை உறுதிப்படுத்த சடங்குமுறைப் படி குலத்திற்குள் ஏற்கப்படுதல் அவசியம். மிகக் குறை வான உறுப்பினர்களைக் கொண்ட குலங்கள் இன்னொரு குலத்திலிருந்து, அதன் ஒப்புதலின் பேரில், பெருந்திர ளாகச் சுவீகாரம் செய்வதன் மூலம் பெரும்பாலும் பெருக் கப்பட்டன. இராகோஸ்களிடையில் சுவீகாரச் சடங்கு இனக்குழுவின் கவுன்சிலின் பொதுக் கூட்டத்தில் நடத்தப் பட்டது. அது நடைமுறையில் மதச் சடங்காகவே மாற்றப்பட்டது.

8. செவ்விந்தியக் குலங்களில் விசேஷமான மதச் சடங்குகள் இருந்ததாக நிரூபிப்பது கடினமே. எனினும் செவ்விந்தியர்களின் மதச் சடங்குகள் அநேகமாக குலங் களுடன் சம்பந்தப்பட்டவை. இராகோஸ்கள் ஆண்டு தோறும் ஆறு மதச் சடங்குகளை நடத்தினார்கள். அவற்றின் போது சாகெம்களும் யுத்தத் தலைவர்களும் தம் முடைய பதவியின் காரணமாக ''நம்பிக்கையின் காவலர் களாக'' சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் புரோகிதக் காரியங்களையும் நடத்தினார்கள்.

9. குலத்துக்கு ஒரு பொதுவான இடுகாடு உண்டு. நியூயார்க் மாநில இராகோஸ்கள் வெள்ளையர்களால் நெருக்கப்பட்டபடியால் அவர்களுடைய இடுகாடு மறைந்து விட்டது. ஆனால் முன்பு அது இருந்தது. மற்ற செவ்விந் திய இனக்குழுக்களில், உதாரணமாக, டஸ்கரோராக்கள் மத்தியில், அது இன்னும் இருந்து வருகிறது. இந்த இனக் குழு இராகோஸ்களுடன் நெருங்கிய உறவு கொண்டது. டஸ்கரோராக்கள் கிறிஸ்துவர்கள் என்ற போதிலும் தமது இடுகாட்டில் ஒவ்வொரு குலத்துக்கும் ஒரு விசேஷமான வரிசை ஏற்பாடு செய்துள்ளனர். ஆகவே ஒரு தாயும் குழந்தைகளும் ஒரே வரிசையில் அடக்கம் செய்யப்படு கிறார்கள்; ஆனால் தகப்பனார் அந்த வரிசையில் அடக்கம் செய்யப்படுவதில்லை. இராகோஸ்கள் மத்தியில் சவ அடக்கத்தின் போது குலத்தின் உறுப்பினர்கள் அனைவரும் வந்திருப்பார்கள். அவர்கள் சமாதியைத் தயார் செய்தல், சவ அடக்கச் சொற்பொழிவாற்றுதல் முதலியவற்றைச் செய்வார்கள்.

10. குலத்துக்கு ஒரு கவுன்சில் உண்டு. அது குலத்தி லுள்ள வயதுவந்த ஆண்கள், பெண்கள் அனைவரையும்

கொண்ட ஜனநாயக சபை ஆகும். அக்கவுன்சிலில் எல்லோருக்கும் சம வாக்குரிமை உண்டு. இந்த கவுன்சில் சாகெம்களையும் யுத்தத் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கவோ, நீக்கவோ செய்தது; ''நம்பிக்கையின் காவலர்களையும்'' நியமித்தது] அல்லது நீக்கியது. கொல்லப்பட்ட குலத்தின் உறுப்பினர்களுக்காக மன்னிப்புக் காணிக்கைகள் (wergeld) பெறுவதா அல்லது இரத்தப் பழி வாங்குவதா என்பதைப் பற்றியும் அது முடிவு செய்தது. அது அந்நியர்களைக் குலத்திற்குள் சுவீகரித்தது. சுருக்கமாகக் கூறினால், குலத்துக்குள் அதுவே முழு அதிகாரத்தைக் கொண்டிருந்தது.

குறியடையாளமான ஒரு செவ்விந்தியக் குலத்தின் செயற்பாடுகள் இவையே.

''இராகோஸ் குலத்தின் எல்லா உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக இருந்தார்கள். ஒருவன் அடுத்தவனுடைய சுதந்திரத்தைக் காக்கக் கடமைப்பட்டிருந்தான். அவர்கள் விசேஷ உரிமைகளிலும் தனிப்பட்ட உரிமைகளிலும் சமமாகவே இருந்தார்கள். சாகெம்களும் யுத்தத் தலைவர்களும் உயர்நிலை உரிமை கோரவில்லை; அவர்கள் இரத்த உறவினால் இணைக்கப்பட்டிருந்த ஒரு சகோதரக் குழுவாக அமைகிறார்கள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்—இவை ஒருபோதும் வரையறுக்கப்படவில்லை என்றாலும்—குலத்தின் முக்கியமான கோட்பாடுகளாக இருந்தன. குலம் என்பது சமூக அமைப்பின் அலகு; செவ்விந்திய சமூக அமைப்புக்கு அதுவே அடிப்படை. செவ்விந்தியர்களின் குணாம்சத்தில் எங்கும் நிலவுகின்ற இயல்பாகிய சுதந்திர உணர்வையும் தன் மதிப்பையும் விளக்குவதற்கு இது உதவுகிதது.''

வட அமெரிக்க செவ்விந்தியர்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அவர்கள் எல்லோரும் தாயுரிமைப்படிக் குலங்களில் திரட்டப்பட்டிருந்தார்கள். டகோடாக்களைப் போன்ற ஒரு சில இனக்குழுக்களில் மட்டுமே குலங்கள் நசித்துக் கொண்டிருந்தன; ஒஜிப்வாக்கள், ஓமாஹாக்கள் போன்ற வேறு சில இனக்குழுக்களில் தந்தையுரிமைப்படிக் குலங்கள் திரட்டப்பட்டிருந்தன.

ஐந்து, ஆறு அல்லது அதற்கும் அதிகமான குலங்களைக் கொண்ட செவ்விந்திய இனக்குழுக்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் மூன்று, நான்கு அல்லது அதற்கும்

அதிகமான குலங்கள் ஒரு விசேஷமான குழுவில் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தன. இந்தக் குழுவை மார்கன்—செவ்விந்தியச் சொல்லுக்குச் சமமான கிரேக்கச் சொல்லை அப்படியே மொழிபெயர்த்து—பிராட்ரி (சகோதரக் குழு) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாக, செனீகாக்களிடையில் இரண்டு பிராட்ரிகள் உள்ளன. முதல் பிராட்ரியில் 1வது குலம் முதல் 4வது குலம் வரை இருக்கின்றன. இரண்டாவது பிராட்ரியில் 5வது குலம் முதல் 8வது குலம் வரை இருக்கின்றன. நெருங்கி ஆராய்கின்ற பொழுது, மொத்தத்தில் இந்த பிராட்ரிகள் ஆரம்பத்தில் இனக்குழுவிலிருந்த ஆதிக் குலங்களையே குறிக்கின்றன. ஏனென்றால் குலத்துக்குள் மணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்ட பிறகு ஒவ்வொரு இனக்குழுவிலும் குறைந்தபட்சம் இரண்டு குலங்களாவது இருப்பது அவசியமாயிற்று, அப்பொழுதுதான் அது சுதந்திரமாக நிலைத்திருக்க முடியும். இனக்குழு வளர்ச்சியுற்ற பொழுது ஒவ்வொரு குலமும் மீண்டும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட குலங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை இப்பொழுது தனித்தனிக் குலங்களாக இருக்கின்றன; இந்தச் சேய்க் குலங்களைத் தன்னுள் அணைத்துக் கொண்டிருக்கின்ற ஆதிக் குலம் பிராட்ரியாக வாழ்ந்து வருகிறது. செனீகாக்களிடையிலும் பெரும்பான்மையான இதர செவ்விந்திய இனக் குழுக்களிடையிலும் ஒரு பிராட்ரியிலுள்ள குலங்கள் சகோதர குலங்கள் ஆகும்; மற்ற பிராட்ரியில் இருக்கும் குலங்கள் அவற்றுக்கு பங்காளிக் குலங்கள் ஆகும். அமெரிக்க இரத்த உறவுமுறையில் இந்தப் பெயர்களுக்கு மிகவும் உண்மையான, அர்த்தமுள்ள முக்கியத்துவம் உண்டு என்பதை நாம் பார்த்தோம். ஆதியில் எந்த செனீகாவும் தனது பிராட்ரிக்குள் மணம் புரிய முடியாது என்பது மெய்யே, ஆனால் இந்தத் தடை நெடுங்காலத்துக்கு முன்பே செயலற்றுப் போய் விட்டது; அது இப்பொழுது குலத்துடன் நின்று விடுகிறது. ''கரடியும்'' ''மானும்'' தான் ஆதியிலிருந்த இரண்டு குலங்களாகும்; அவற்றிலிருந்துதான் மற்றவை தோன்றின என்று செனீகாக்களிடையே ஒரு பழைய மரபு உண்டு. இந்தப் புதிய அமைப்பு வேரூன்றியவுடன் அது அவசியத்துக்கேற்றபடி மாற்றியமைக்கப்பட்டது. ஒரு பிராட்ரியில் குலங்கள்

செத்துப் போயிருந்த பொழுது, சமநிலை ஏற்படுத்துவதற்காக மற்ற பிராட்ரிகளிலிருந்து மொத்த குலங்களே அதற்கு மாற்றப்பட்டன. ஒரே பெயரைக் கொண்டிருக்கின்ற குலங்கள் வெவ்வேறு இனக்குழுக்களின் பிராட்ரிகள் மத்தியில் பல்வேறு முறையாகச் சேர்க்கப்பட்டிருந்ததை இது விளக்குகிறது.

இராகோஸ்களிடையில் பிராட்ரியின் செயற்பாடுகள் பகுதி சமூக ரீதியாகவும் மறு பகுதி மத ரீதியாகவும் இருக்கின்றன. 1) பிராட்ரிகள் ஒன்றுக்கு எதிராக மற்றொன்று நின்று கொண்டு பந்து விளையாட்டு விளையாடுகின்றன. ஒவ்வொரு பிராட்ரியும் தனது சிறந்த ஆட்டக்காரர்களை அனுப்புகிறது. பிராட்ரியின் மற்ற உறுப்பினர்கள் வரிசையாக நின்று ஆட்டத்தைப் பார்க்கிறார்கள், தத்தம் தரப்பினருடைய வெற்றி வாய்ப்பைப் பற்றி பந்தயம் வைத்துக் கொள்கிறார்கள். 2) இனக்குழுவின் கவுன்சில் கூட்டத்தில் ஒவ்வொரு பிராட்ரியின் சாகெம்களும் யுத்தத் தலைவர்களும் சேர்ந்து அமர்கின்றனர்; இரண்டு குழுக்களும் எதிரெதிராக அமர்கின்றன. ஒவ்வொரு பேச்சாளனும் ஒவ்வொரு பிராட்ரியின் உறுப்பினர்களையும் தனி ஸ்தாபனம் என்ற வகையில் விளித்துப் பேசுகிறான். 3) இனக்குழுவுக்குள் கொலை நடைபெற்றிருந்து, கொல்லப்பட்டவனும் கொலையாளியும் ஒரே பிராட்ரியைச் சேராதவர்களாக இருந்தால், பாதிக்கப்பட்ட குலம் பெரும்பாலும் தனது சகோதரக் குலங்களுக்கு வேண்டுகோள் அனுப்பும். இவை தம்முடைய பிராட்ரியின் கவுன்சிலைக் கூட்டி ஒரு அமைப்பு என்ற வகையில் மற்ற பிராட்ரிக்குச் சொல்லியனுப்பும்; இவ்விஷயத்தை சரிப்படுத்துவதற்கு அதன் கவுன்சிலைக் கூட்டுமாறு கேட்டுக் கொள்ளும். இங்கும் பிராட்ரிதான் ஆதிக் குலமாகத் தோற்றமளிக்கிறது; அதிலிருந்து தோன்றிய பலவீனமான, தனிப்பட்ட குலத்தை விட வெற்றி பெறுவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளதாக அது தோற்றமளிக்கிறது. 4) முக்கியமான நபர்கள் மரணமடைந்தால், எதிர் பிராட்ரி இறுதிச் சடங்குகளுக்கும் சவ அடக்கத்துக்கும் ஏற்பாடு செய்தது. மரணமடைந்தவனுடைய பிராட்ரி துக்கம் அனுஷ்டித்து சவ ஊர்வலத்தில் சென்றது. ஒரு சாகெம் மரணமடைந்தால், எதிர் பிராட்ரி இராகோஸ்களின் சமஷ்டி கவுன்சிலுக்குப் பதவி

காலியாக இருப்பதைத் தெரிவித்தது. 5) ஒரு சாகெம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பொழுது பிராட்ரியின் கவுன்சில் அரங்கில் மீண்டும் தலைகாட்டியது. சகோதரக் குலங்கள் தேர்தல் முடிவை உறுதி செய்வது சகஜமாகக் கருதப்பட்டது. ஆனால் மற்றொரு பிராட்ரியின் குலங்கள் அதற்கு எதிராக இருக்கலாம். அப்படி நேர்கின்ற பொழுது இந்த பிராட்ரியின் கவுன்சில் கூடி எதிர்ப்பை ஆதரித்தால், தேர்தல் ரத்து செய்யப்படும். 6) முன்னர், இராகோஸ்களுக்கு விசேஷமான, மதவகைப்பட்ட இரகசியச் சடங்குகள் இருந்தன. இவற்றை வெள்ளையர்கள் medicine lodges* என்று அழைத்தார்கள். செனீகாக்களிடையே ஒரு பிராட்ரிக்கு ஒன்று வீதம் இரண்டு மதக் குழுவினர் இவற்றைக் கொண்டாடினார்கள்; புதிதாகச் சேரும் உறுப்பினர்களுக்கு முறையான சேர்த்துக் கொள்ளும் சடங்கு இருந்தது. 7) நாடுபிடித்த காலத்தில்[21] திளாஸ்கலாவின் நான்கு இடங்களில் வசித்த நான்கு lineages (இரத்த உறவுமுறைக் குழுக்கள்) நான்கு பிராட்ரிகளாக இருந்தால்—இது அநேகமாக நிச்சயமாக இருக்கும்—கிரேக்கர்களிடையே இருந்த பிராட்ரிகளைப் போல, ஜெர்மானியர்களிடையே இருந்த குலக் குழுக்களைப் போல இந்த பிராட்ரிகள் இராணுவப் பிரிவுகளாகப் பணியாற்றின என்பதை இது நிரூபிக்கிறது. ஒவ்வொன்றும் தனித்தனி அணியாக இந்த நான்கு lineages போருக்குச் சென்றன; ஒவ்வொன்றுக்கும் தனியான இராணுவ உடுப்பும் கொடியும் இருந்தன, தனித் தலைவனும் இருந்தான்.

பிராட்ரியில் சில குலங்கள் அமைந்திருந்தது போலவே மூலச்சிறப்பான வடிவத்தில் சில பிராட்ரிகளும் ஒரு இனக் குழுவாக அமைந்திருந்தன. சில சமயங்களில், மிகவும் பலவீனமான இனக்குழுக்களுக்குள் மத்திய கண்ணியாகிய பிராட்ரி இல்லாதிருந்தது. அமெரிக்காவிலுள்ள செவ்விந்திய இனக்குழுவின் தனித்தன்மையான குணாம்சங்கள் எவை?

1. அது சொந்த நிலப்பரப்பும் சொந்தப் பெயரும் கொண்டிருப்பது. ஒவ்வொரு இனக்குழுவும் எதார்த்தத்தில் குடியிருக்கின்ற பிரதேசத்துடன் கூடுதலாக வேட்டை

---

*—மாய மந்திரக் கூட்டங்கள்.—ப-ர்.

யாடுவதற்கும் மீன்பிடிப்பதற்கும் கணிசமான பிரதேசத்தைப் பெற்றிருந்தது. அதன் பிரதேசத்துக்கும் அடுத்த இனக்குழுவின் பிரதேசத்துக்கும் இடையில் பரந்த நடுநிலைப் பிரதேசம் இருந்தது. இரு இனக்குழுக்களின் மொழிகளும் தொடர்புடையவையாக இருந்த இடங்களில் இந்த நடுநிலைப் பிரதேசத்தின் அளவு சிறியதாக இருந்தது; அப்படி இல்லாத இடங்களில் விரிவாக இருந்தது. இப்படிப்பட்ட நடுநிலைப் பிரதேசம் தான் ஜெர்மானியர்களுடைய எல்லைக் காடு, சீஸரின் சுயேவிகள் தமது பிரதேசத்தைச் சுற்றிலும் அமைத்த பொட்டல் காடு, டேனிஷ்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் இடையிலிருந்த îsarnholt (டேனிஷ் மொழியில் jarnved, limes Danicus); ஜெர்மானியர்களுக்கும் ஸ்லாவ்களுக்கும் இடையிலிருந்த சாக்சன் காடு மற்றும் branibor (ஸ்லாவ் மொழியில் தற்காப்புக் காடு)—இதிலிருந்து பிராண்டன்பர்க் தன் பெயரைப் பெறுகிறது. சரியாக வரையறுக்கப்படாத எல்லைகளைக் கொண்டு இப்படிக் குறிக்கப்பட்ட பிரதேசம்தான் இனக்குழுவின் பொது நிலம். அடுத்துள்ள இனக்குழுக்களும் இதை அப்படியே அங்கீகரித்தன. அதை ஆக்கிரமிக்காதபடி இனக்குழு பாதுகாத்தது. பெரும்பாலும், மக்கள்தொகை மிகவும் அதிகமாகப் பெருகிய பொழுது மட்டுமே எல்லைகளின் நிச்சயமற்ற தன்மை நடைமுறையில் சிக்கலேற்படுத்தியது. இனக்குழுவின் பெயர்கள் சிந்தித்து முடிவு செய்யப்படவில்லை, அவை தற்செயலாகவே அமைந்தன என்று தோன்றுகிறது. ஒரு இனக்குழு தனக்குப் பக்கத்திலுள்ள இனக்குழுவை அதன் சொந்தப் பெயரில் அல்லாமல் வேறு பெயரில் அழைப்பதும் காலப் போக்கில் அடிக்கடி நடந்தது. உதாரணமாக, ஜெர்மானியர்கள் (die Deutschen) விஷயத்தில் இப்படி நடைபெற்றது. அவர்களுடைய முதல் வரலாற்றுப் பொதுப் பெயரான ஜெர்மானியர்கள் (Germanen) என்பது கெல்டுகளால் தரப்பட்ட பெயராகும்.

2. அந்தந்த இனக்குழுவுக்கு மட்டுமே உரித்தான ஒரு **கிளைமொழி**. உண்மையில் இனக்குழு, கிளைமொழி ஆகிய இரண்டும் சேர்ந்தே நிலவின. கிளைப் பகுப்பு மூலமாகப் புதிய இனக்குழுக்களையும் புதிய கிளைமொழிகளையும் நிலைநிறுத்துவது சமீப காலம் வரையில் அமெ

ரிக்காவில் முன்னேறிக் கொண்டுதான் இருந்தது. இப்பொழுதும் கூட அது முற்றிலும் நின்று விடவில்லை. பலவீனமடைந்த இரண்டு இனக்குழுக்கள் ஒன்றிணைகின்ற சந்தர்ப்பத்தில், விதிவிலக்காக, நெருங்கிய உறவுள்ள இரண்டு கிளைமொழிகள் அந்த ஒரே இனக்குழுவுக்குள் பேசப்படுகின்றன. அமெரிக்க இனக்குழுக்களின் சராசரித் தொகை 2,000. எனினும் சிரோக்கிகளின் தொகை 26,000 ஆகும்; அமெரிக்காவில் ஒரே கிளைமொழியைப் பேசுகின்ற செவ்விந்தியர்களின் மிகப் பெரிய தொகை இவர்களுடையதே.

3. குலங்கள் தேர்ந்தெடுத்த சாகெம்களையும் யுத்தத் தலைவர்களையும் பதவியில் நியமித்தல்.

4. அவர்களுடைய குலத்தின் விருப்பத்துக்கு எதிராகக் கூட அவர்களை மீண்டும் பதவியிலிருந்து நீக்கும் உரிமை. சாகெம்களும் யுத்தத் தலைவர்களும் இனக்குழுவின் கவுன்சிலின் உறுப்பினர்கள் என்பதால் அவர்கள் சம்பந்தமாக இனக்குழுவின் உரிமைகள் சொல்லாமலே விளங்கும். எங்கெல்லாம் இனக்குழுக்களின் கூட்டு ஏற்படுத்தப்பட்டு, இக்கூட்டின் சமஷ்டி கவுன்சிலில் எல்லா இனக்குழுக்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனவோ, அங்கெல்லாம் அந்த அமைப்பிற்கு மேலே கூறப்பட்ட உரிமைகள் மாற்றப்பட்டிருந்தன.

5. பொதுவான மதக் கருத்துகள் (புராணங்கள்) மற்றும் வழிபாட்டுச் சடங்குகளைப் பெற்றிருத்தல்.

''அநாகரிகர்களுடைய வழக்கப்படி அமெரிக்க செவ்விந்தியர்கள் மதபக்தியுள்ள மக்களாக இருந்தார்கள்.''*

இன்னும் அவர்களுடைய புராணங்கள் எவ்விதத்திலும் விமர்சன ரீதியில் ஆராயப்படவில்லை. அவர்கள் தம்முடைய மதக் கருத்துகளுக்கு, பலவகைப்பட்ட ஆவிகளுக்கு மனித உருவம் கொடுத்திருந்தனர். எனினும் அவர்கள் வாழ்ந்த அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தில் அவற்றிற்கு உடம்பு வகைப்பட்ட உருவங்கள், அதாவது விக்கிரகங்கள் கிடையா. அது இயற்கை வழிபாடு, பஞ்சபூத வழிபாடு; அது பல தெய்வ வழிபாட்டை

* L. H. Morgan, *Ancient Society*, p. 115.—ப-ர்.

நோக்கி வளர்ச்சியடைந்தது. எல்லா இனக்குழுக்களுக்கும் திட்டவட்டமான வழிபாட்டு வடிவங்களுடன், அதாவது நடனங்கள், விளையாட்டுகளுடன் முறையான விழாக்கள் இருந்தன. குறிப்பாக, நடனமாடுதல் மதச் சடங்குகள் அனைத்திலும் முக்கியமான பகுதியாக இருந்தது; ஒவ்வொரு இனக்குழுவும் தனது மதச் சடங்குகளைத் தனித் தனியாக நடத்தியது.

6. பொது விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஒரு இனக்குழுவின் கவுன்சில் இருந்தது. அது தனித்தனிக் குலங்களின் எல்லா சாகெம்களையும் யுத்தத் தலைவர்களையும் கொண்டிருந்தது. அக்குலங்களின் உண்மையான பிரதிநிதிகள் அவர்களே, ஏனென்றால் அவர்களை எப்பொழுதும் நீக்க முடியும். இக்கவுன்சில் பகிரங்கமாகக் கூடியது. இனக்குழுவின் மற்ற உறுப்பினர்கள் அங்கே குழுமியிருந்தார்கள். விவாதத்தில் பங்கெடுப்பதற்கும் தமது கருத்துகளைத் தெரிவிக்கவும் அவர்களுக்கு உரிமை இருந்தது. கவுன்சில் முடிவு செய்தது. கவுன்சிலில் முறையிடுவதற்கு அங்கேயிருந்த எல்லோருக்கும் உரிமை உண்டு. பெண்கள் கூட தமது கருத்தைத் தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதியின் மூலமாகத் தெரிவிக்கலாம். இராகோஸ்களிடையே கடைசி முடிவுகளை ஏகமனதாகத்தான் செய்ய வேண்டும். ஜெர்மன் மார்க் சமூகத்திலும் பல முடிவுகள் இப்படித் தான் செய்யப்பட்டன. குறிப்பாக, மற்ற இனக்குழுக்களுடன் உறவுகளை முறைப்படுத்துகின்ற வேலை இனக் குழுக் கவுன்சிலின் பொறுப்பாகும். அது தூதர்களை வரவேற்றது, தானும் அனுப்பியது; யுத்தப் பிரகடனம் செய்தது, சமாதானத்தையும் நிறைவேற்றியது. யுத்தம் ஏற்பட்ட பொழுது பிரதானமாகத் தொண்டர்கள்தான் யுத்தத்தை நடத்தினார்கள். ஒரு இனக்குழு எந்தெந்த இனக்குழுக்களுடன் திட்டவட்டமாக சமாதான உடன்படிக்கையைச் செய்து கொள்ளவில்லையோ அவற்றுடன் கோட்பாட்டளவில் யுத்த நிலையில் இருந்தது. இப்படிப்பட்ட எதிரிகளின் மீது நடத்தப்படுகின்ற இராணுவப் படையெடுப்புகளைப் பெரும்பாலும் ஒரு சில தலைசிறந்த வீரர்களே திட்டமிட்டு நடத்தினார்கள். அவர்கள் ஒரு யுத்த நடனம் ஆடுவார்கள். அந்த நடனத்தில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் அதன் மூலம் படை

யெடுப்பில் கலந்து கொள்வதற்குத் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிப்பார்கள். உடனே ஒரு படையணி அமைக்கப்பட்டு யுத்தத்துக்குப் புறப்பட்டுச் சென்றது. இனக்குழுவின் பிரதேசம் தாக்கப்படுகின்ற பொழுது அதன் பாதுகாப்பும் பிரதானமாக தொண்டர்களைக் கொண்டு இதே மாதிரியாக நடத்தப்பட்டது. படைகள் புறப்படுகின்ற பொழுதும் திரும்புகின்ற பொழுதும் எப்பொழுதும் பொது விழாக்கள் நடத்திக் கொண்டாடப் பட்டன. இம்மாதிரியான படையெடுப்புகளுக்கு இனக் குழுவின் கவுன்சிலின் அனுமதி அவசியமில்லை. யாரும் அனுமதி கோரவில்லை; அனுமதி அளிக்கப்படவுமில்லை. டாசிட்டஸ் வர்ணித்த ஜெர்மானிய பரிவாரங்கள் நடத்திய தனிப்பட்ட படையெடுப்புகளைப் போல அவை ஒரே மாதிரியாக இருந்தன. ஆனால் ஒரு வேறுபாடு இருந்தது: ஜெர்மானியர்களிடையே பரிவாரங்களின் கூட்டம் அதிக நிரந்தரமான தன்மையை ஏற்கெனவே பெற்றிருந்தது. சமாதான காலங்களில் அது ஒரு பலமான மூலக்கருவாக இருந்தது. போர் நடைபெறும் பொழுது அந்த மூலக் கருவைச் சுற்றி பாக்கியிருக்கும் தொண்டர்கள் குழுக் களாகத் திரண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட இராணுவப் பிரிவுகள் எண்ணிக்கையில் பலமாக இருந்தது அபூர்வமே. செவ்விந்தியர்களின் மிக முக்கியமான இராணுவப் படையெடுப்புகள்—வெகு தூரம் செல்ல வேண்டியிருந்த படையெடுப்புகள் கூட—மிகவும் குறைந்த எண்ணிக்கையுள்ள வீரர்களைக் கொண்டு நடத்தப்பட்டன. ஒரு முக்கியமான நடவடிக்கைக்கு இப்படிப்பட்ட சில படைகள் திரளும் பொழுது ஒவ்வொரு குழுவும் தன்னுடைய தலைவருக்கு மட்டுமே பணிந்தது. இத்தலைவர்களின் கவுன்சிலைக் கொண்டு படையெடுப்புத் திட்டத்தின் ஒற்றுமை அநேகமாக உத்தரவாதம் செய்யப்பட்டது. நான்காம் நூற்றாண்டில் மேல் ரைன் பிரதேசத்தைச் சேர்ந்த அலமான்னிகள் இப்போர்முறையைப் பின்பற்றினார்கள் என்று அம்மியானஸ் மார்ஸெலினஸ் வர்ணித்தார்.

7. சில இனக்குழுக்களில் ஒரு முதன்மைத் தலைவனைக் காண்கிறோம். ஆனால் அவனுடைய அதிகாரங்கள் குறைவுதான். சாகெம்களில் அவனும் ஒருவன். அவசரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில்,

கவுன்சிலைக் கூட்டி முடிவு செய்கின்ற வரை அவனே தற்காலிக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நிர்வாக அதிகாரத்தைக் கொண்ட ஓர் அதிகாரியை உருவாக்கு வதற்கு இது பலவீனமான, ஆனால் மேற்கொண்டு ஏற் பட்ட வளர்ச்சி காட்டியதைப் போல, பொதுவாகவே பயனற்ற, நன்கு முதிராத முயற்சியே. எதார்த்தத்தில், தலைமைத் தளபதிதான் பெரும்பாலான சந்தர்ப்பங் களில்—எல்லாவற்றிலும் இல்லாவிடினும் கூட—இப் படிப்பட்ட அதிகாரியாக வளர்ச்சியடைந்தார் என்பதைக் காண முடியும்.

அமெரிக்க செவ்விந்தியர்களில் பெரும்பான்மையினர் இனக்குழு ஒருமைப்பாடு என்ற கட்டத்துக்கு மேலே என்றுமே போகவில்லை. எண்ணிக்கையில் சிறிய இனக் குழுக்கள், பரந்த எல்லைப் பிரதேசங்களினால் ஒன்றி லிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டும் நிரந்தரமான போர் களினால் பலவீனமாகவும் இருக்கின்ற இனக்குழுக்கள் பிரம்மாண்டமான பிரதேசத்தில் இருந்தன; ஆனால் அதில் வசித்த மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அவசர நிலை யின் விளைவாக அங்குமிங்கும் இரத்த உறவுமுறையுள்ள இனக்குழுக்களுக்கு இடையில் உடன்படிக்கைகள் செய்யப் பட்டு அவசர நிலை மறைந்ததும் அவை ரத்து செய்யப் பட்டன. ஆனால் சில வட்டாரங்களில் ஆதியில் இரத்த உறவு கொண்டிருந்து பின்னால் வேற்றுமைப்பட்டுப் போன இனக்குழுக்கள் மீண்டும் நிரந்தரமான இனக்குழுக் களின் கூட்டுகளில் ஒன்றுபட்டன; ஆகவே தேசிய இனத் தின் உருவாக்கத்தில் முதல் நடவடிக்கையைச் செய்தன. அமெரிக்காவில் இத்தகைய இனக்குழுக்களின் கூட்டின் மிகவும் முன்னேறிய வடிவத்தை இராகோஸ்களிடையே காண்கிறோம். அவர்கள் மிஸிஸிப்பி நதிக்கு மேற்கே யுள்ள தமது ஆதி இருப்பிடங்களிலிருந்து குடிபெயர்ந்து —அங்கே அவர்கள் மாபெரும் டகோடா குடும்பத்தின் கிளையாக அநேகமாக இருந்திருக்கக் கூடும்—நீடித்து அலைந்து திரிந்த பிறகு இன்று நியூயார்க் மாநிலமாக இருக்கும் பிரதேசத்தில் தங்கினார்கள். அவர்கள் செனீ காக்கள், கயூகாக்கள், ஒனோன்டகாக்கள், ஒனெய்டாக் கள், மோஹாக்கள் என்று ஐந்து இனக்குழுக்களாகப்

பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மீன், வேட்டையில் கிடைத்த மிருகங்கள், பண்படாத காய்கறித் தோட்டம் ஆகியவற்றைக் கொண்டு வாழ்ந்தார்கள். பெரும்பாலும் மரப்பலகை வேலிகளால் பாதுகாக்கப்பட்ட கிராமங்களில் அவர்கள் வசித்தார்கள். அவர்களுடைய மொத்த எண்ணிக்கை 20,000க்கு மேல் எப்பொழுதுமே இருக்கவில்லை; ஐந்து இனக்குழுக்களுக்கும் பொதுவான சில குலங்கள் அவர்களிடம் இருந்தன; ஒரே மொழியின் நெருங்கிய உறவு கொண்ட கிளைமொழிகளை அவர்கள் பேசினார்கள், தொடர்ச்சியாக இருந்த பிரதேசத்தில் வசித்தார்கள். அப்பிரதேசம் ஐந்து இனக்குழுக்களுக்கும் பிரித்துத் தரப்பட்டிருந்தது. அது புதிதாகப் பிடிக்கப்பட்ட பிரதேசம் என்பதால் தாங்கள் வெளியேற்றியவர்களை எதிர்த்து இந்த இனக்குழுக்கள் நெருக்கமான ஒத்துழைப்புக் கொள்வது இயற்கையே; அது பழக்கமாகி விட்டது. மிகவும் சமீபமாகச் சொன்னால், 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு முறையான ''நிரந்தரக் கூட்டு'', இனக்குழுக்களின் கூட்டு உருவாகியது; அது தனது புதிய பலத்தை உணர்ந்து உடனே ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டு தனது சக்தியின் உச்ச நிலையில், சுமார் 1675இல், சுற்றியிருந்த பரந்த பிரதேசங்களைக் கைப்பற்றியது; அங்கே வசித்தவர்களில் சிலரைத் துரத்தி விட்டு, மற்றவர்களைக் கப்பம் கட்டும்படி நிர்ப்பந்தித்தது. இராகோஸ் இனக்குழுக்களின் கூட்டுதான் செவ்விந்தியர்கள் எட்டிய அதிக முன்னேற்றமுள்ள சமூக அமைப்பாகும். அப்பொழுது] செவ்விந்தியர்கள் (அதாவது, மெக்சிகர்கள், நியூமெக்சிகர்கள், பெருவியர்கள் நீங்கலாக) அநாகரிக நிலையின் கடைக்கட்டத்திலிருந்து வெளிவரவில்லை. இந்த இனக்குழுக்களின் கூட்டின் அடிப்படையான குணாம்சங்கள் பின்வருமாறு:

1. முழுமையான சமத்துவம் மற்றும் இனக்குழுவின் உள்விவகாரங்களில் சுதந்திரம் என்ற அடிப்படையில் ஐந்து இரத்த உறவுமுறையுள்ள இனக்குழுக்களிடையில் நிரந்தரமான கூட்டு உருவாகியது. இந்த இரத்த உறவுமுறை இனக்குழுக்களின் கூட்டின் உண்மையான அடிப்படையாக இருந்தது. ஐந்து இனக்குழுக்களில் மூன்று தந்தை இனக்குழுக்கள் என்று அழைக்கப்பட்டன—அவை

பரஸ்பரம் சகோதரர்களாக இருந்தன. மற்ற இரண்டு இனக்குழுக்களும் மகன் இனக்குழுக்கள் என்று அழைக்கப் பட்டன—அவையும் தம்மிடையே சகோதரர்களாக இருந் தன. மிகவும் பழமையான மூன்று குலங்களுக்கு இந்த ஐந்து இனக்குழுக்கள் எல்லாவற்றிலும் வாழ்கின்ற பிரதிநிதிகள் இன்னும் இருந்தார்கள். வேறு மூன்று குலங் களுக்கோ மூன்று இனக்குழுக்களில் பிரதிநிதிகள் இருந் தனர். இக்குலங்கள் ஒவ்வொன்றின் உறுப்பினர்களும் ஐந்து இனக்குழுக்கள் எல்லாவற்றிலும் சகோதரர்களாக இருந்தனர். கிளைமொழி வேறுபாடுகளைக் கொண்ட பொது மொழியே அவர்களுடைய பொது மரபு வழிக்கு வெளியீடாகவும் சான்றாகவும் இருந்தது.

2. இனக்குழுக்களின் கூட்டின் உறுப்பாக சமஷ்டிக் கவுன்சில் இருந்தது. இதில் ஐம்பது சாகெம்கள் இருப் பார்கள்; எல்லோரும் சம அந்தஸ்து, சம மரியாதை உடையவர்கள். இனக்குழுக்களின் கூட்டு சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களிலும் இக்கவுன்சில் கடைசி முடிவு களைச் செய்யும்.

3. இனக்குழுக்களின் கூட்டு அமைக்கப்பட்ட காலத் தில் இந்த ஐம்பது சாகெம்களும் அதன் குறிக்கோள் களுக்குப் பொருத்தமாக விசேஷமாக உருவாக்கப்பட்ட புதிய பதவிகளை வகிப்பவர்கள் என்ற வகையில் இனக் குழுக்களுக்கும் குலங்களுக்குமிடையே வினியோகிக்கப் பட்டிருந்தனர். சாகெம்களின் பதவிகள் காலியாகும் பொழுது சம்பந்தப்பட்ட குலங்கள் அவர்களைப் புதி தாகத் தேர்ந்தெடுத்தன; பதவியிலிருந்து நீக்குகின்ற உரிமையும் குலங்களிடம் இருந்தது. ஆனால் அவர்களைப் பதவியிலமர்த்துகின்ற உரிமை மட்டும் சமஷ்டி கவுன்சி லிடம் இருந்தது.

4. இந்தக் கூட்டு சாகெம்கள் தமது இனக்குழுக்களி லும் சாகெம்களாக இருந்தனர்; இனக்குழுவின் கவுன்சி லில் ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்தானமும் ஒரு வாக்கும் இருந்தன.

5. சமஷ்டி கவுன்சிலின் எல்லா முடிவுகளும் ஏகமன தான முடிவுகளாகவே இருக்க வேண்டும்.

6. இனக்குழு ரீதியில்தான் வாக்களிப்பு நடை பெற்றது; கட்டுப்படுத்துகின்ற முடிவைச் செய்வதற்கு

முன் ஒவ்வொரு இனக்குழுவும் ஒவ்வொரு இனக்குழுவையும் சேர்ந்த எல்லா கவுன்சில் உறுப்பினர்களும் அதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

7. ஐந்து இனக்குழுவின் கவுன்சில்களில் ஒவ்வொன்றும் சமஷ்டி கவுன்சிலைக் கூட்டலாம். ஆனால் சமஷ்டி கவுன்சிலுக்குத் தன்னைத் தானே கூட்டுவதற்கு அதிகாரம் கிடையாது.

8. கூடி இருக்கும் மக்களுக்கு முன்பாக அதன் கூட்டங்கள் நடைபெற்றன; ஒவ்வொரு இராகோசுக்கும் பேச உரிமை இருந்தது; ஆனால் கவுன்சில் ஒன்றே முடிவு செய்தது.

9. இனக்குழுக்களின் கூட்டுக்கு அதிகார பூர்வமான தலைவன் கிடையாது, தலைமையான நிர்வாக அதிகாரியும் கிடையாது.

10. எனினும் இனக்குழுக்களின் கூட்டில் இரண்டு உயர் யுத்தத் தலைவர்கள் இருந்தனர்; இருவருக்கும் சம உரிமைகளும் சம அதிகாரமும் உண்டு (ஸ்பார்டா மக்களின் இரண்டு ''அரசர்கள்'', ரோமாபுரியில் இரண்டு கான்சல்கள்).

நானூறு ஆண்டுகளுக்கு மேலாக இராகோஸ்கள் இந்த சமுதாய அமைப்பின் கீழ்தான் வாழ்ந்தார்கள், இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். அதைப் பற்றி மார்கனுடைய வர்ணனையைச் சற்று விரிவாகவே நான் தந்திருக்கிறேன்; ஏனென்றால் இன்னும் அரசு பற்றித் தெரிந்து கொள்ளாத ஒரு சமுதாய அமைப்பை ஆராய்வதற்கு அது வாய்ப்பளிக்கிறது. அரசு ஏற்படுவதற்கு சம்பந்தப்பட்ட பொதுமக்கள் திரளிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்ற தனித்த ஒரு விசேஷமான சமூக அதிகாரம் முதலில் இருக்க வேண்டும். மேலும், ஜெர்மன் மார்க்கின் அமைப்பு அரசிலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டிருக்கின்ற ஒரு சுத்தமான சமுதாயத் தன்மையுள்ள அமைப்பே—அது பின்னால் அரசுக்கு அடிப்படையாக வெகுவாகப் பயன்பட்டது என்றாலும் கூட—என்று மௌரர் இயல்புணர்ச்சியுடன் அங்கீகரிக்கிறார்; எனவே மார்க்குகள், கிராமங்கள், மேனர்கள், நகரங்கள் ஆகியவற்றின் ஆதி அமைப்பிலிருந்தும் அதற்கு அக்கம்பக்கமாகவும் பொது அதிகாரம் படிப்படியாக எழுவதை மௌரர் தமது எல்லா நூல்களிலும் ஆராய்கிறார். ஆதியில் ஒன்றுபட்டிருந்த இனக்குழு படிப்படியாக ஒரு

பிரம்மாண்டமான கண்டத்திலே பரவிப் படர்ந்தது எப்படி என்று வட அமெரிக்க செவ்விந்தியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்; இனக்குழுக்கள் பிரிவினை மூலம் எப்படி மக்களினங்களாக, இனக்குழுக்களின் மொத்தக் குழுக்களாக ஆயின என்றும் காட்டுகின்றனர்; பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாதவையாக அமையும் வரை மொழிகள் மாறி வந்தது மட்டுமன்றி, ஆதி ஒற்றுமையின் ஒவ்வொரு சுவடும் மறைகின்ற வரை அவை எப்படி மாறி வந்தன என்றும் காட்டுகின்றனர்; அதே சமயத்தில், இனக்குழுக்களிலுள்ள தனித்தனிக் குலங்கள் எப்படி பலவாகச் சிதறின என்றும் காட்டுகின்றனர்; பழைய தாய்வழிக் குலங்கள் எப்படி பிராட்ரிகளாக நீடித்தன என்றும் இந்த மிகப் பழமையான குலங்களின் பெயர்கள் மிகவும் தொலைவிலுள்ள, நெடுங்காலத்துக்கு முன்னரே பிரிந்து விட்ட இனக்குழுக்களிலும் அதே போல எப்படி இருந்து வருகின்றன என்றும் காட்டுகின்றனர்—பெரும்பாலான செவ்விந்திய இனக்குழுக்களில் ''ஓநாய்'', ''கரடி'' என்பவை இன்னும் குலப் பெயர்களாக இருக்கின்றன. பொதுவாகச் சொன்னால், மேலே வர்ணித்த சமூக அமைப்பு அவை எல்லாவற்றிற்கும் பொருந்தும்—அவற்றில் பல இரத்த உறவுமுறை இனக்குழுக்களின் கூட்டு என்ற அளவுக்கு வளர்ச்சியடையவில்லை என்பது நீங்கலாக.

ஆனால் குலம் ஒரு சமுதாய அலகாக அமைந்ததுமே அதிலிருந்து குலங்கள், பிராட்ரிகள், இனக்குழு ஆகியவற்றின் முழு அமைப்பும் அநேகமாகக் கட்டாயமான அவசியத்தை முன்னிட்டு—ஏனென்றால் அது இயல்பே—வளர்வதைக் காண்கிறோம். அவை மூன்றும் இரத்த உறவுமுறையைப் பல்வேறு அளவுகளில் கொண்டிருந்த குழுக்களே; அவற்றில் ஒவ்வொன்றும் தன்னுள் முழுமையானது, தன் விவகாரங்களைத் தானே கவனித்துக் கொள்கிறது; அதே பொழுதில் ஒவ்வொன்றும் மற்றவற்றுக்குத் துணையாக இருக்கிறது. அவற்றின் பொறுப்பில் வருகின்ற விவகாரத் துறை கடைக்கட்டத்தில் இருக்கின்ற அநாகரிகர்களின் சமூக விவகாரங்கள் அனைத்தையும் உள்ளடக்கியிருந்தது. எனவே குலத்தை சமுதாய அலகாக நாம் பார்க்கின்ற இடங்களில் எல்லாம் மேலே வர்ணித்த மாதிரியான இனக்குழுவின் அமைப்பு ஒன்றும் இருக்

கும் என்று எதிர்பார்க்கலாம். மேலும், போதிய மூலாதாரங்கள் இருக்கின்ற இடங்களில்—உதாரணமாக, கிரேக்கர்கள், ரோமானியர்களிடையில் இருந்ததைப் போல—நாம் அதைக் கண்டுபிடிப்பது மட்டுமன்றி, எங்கே மூலாதாரங்கள் இல்லையோ அங்கே அமெரிக்க சமுதாய அமைப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தல் நம்மை மிகவும் கடினமான சந்தேகங்களிலிருந்தும் புதிர்களிலிருந்தும் கரையேற்றி விடும் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

மேலும், இந்தக் குல அமைப்பு அதன் குழந்தைத்தனமான எளிமையில் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! போர்வீரர்கள், போலீஸ்காரர்கள் இல்லாமல், பிரபுக்கள், அரசர்கள், கவர்னர்கள், நீதிபதிகள் இல்லாமல், சிறைகள் இல்லாமல், வழக்கு விசாரணைகள் இல்லாமல் எல்லாமே ஒழுங்காக நடைபெறுகின்றன. எல்லா சண்டை, சச்சரவுகளும் சம்பந்தப்பட்ட எல்லோரும் பங்கு கொண்டு தீர்க்கப்படுகின்றன—குலம் அல்லது இனக்குழு அல்லது தனிப்பட்ட குலங்கள் தமக்குள்ளே அவற்றைத் தீர்த்துக் கொள்கின்றன. இரத்தப் பழி வாங்குதல் பயமுறுத்தக் கூடியது என்றாலும், அது மிகவும் தீவிரமான, அபூர்வமாகவே கடைப்பிடிக்கப்படுகின்ற நடவடிக்கையாகவே இருக்கிறது. அதன் நாகரிகமான வடிவமே நம் காலத்திய மரண தண்டனை; அதில் நாகரிகத்தின் எல்லா சாதகங்களும் குறைகளும் உள்ளன. இன்றிருப்பதை விடப் பல விவகாரங்கள் பொதுவில் இருந்த போதிலும் கூட—சில குடும்பங்கள் வீட்டு விவகாரங்களைப் பொதுவில், பொதுவுடைமை வழியில் நடத்துகின்றன; நிலம் இனக்குழுவின் உடைமை; சிறு தோட்டங்கள் மட்டுமே குடும்பங்களுக்குத் தற்காலிகமாகத் தரப்படுகின்றன—நம்முடைய விரிவான, சிக்கலான நிர்வாக இயந்திரத்தில் ஒரு துணுக்குக் கூட அவசியப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் முடிவெடுக்கிறார்கள்; பெரும்பாலான விஷயங்களில் தொன்று தொட்டு வந்த பழக்கம் ஏற்கெனவே எல்லாவற்றையும் முறைப்படுத்தியிருக்கிறது. ஏழை, தேவையுள்ளவன் என்று யாரும் இருக்க முடியாது—முதியோர்கள், நோயாளிகள் மற்றும் யுத்தத்தில் அங்கஹீனர்களானவர்கள் விஷயத்தில் பொதுவுடைமைக் குடும்பமும் குலமும் தமது கடமைகளை உணர்ந்திருக்கின்றன. பெண்

கள் உட்பட எல்லோரும் சுயேச்சையானவர்கள், சமமான வர்கள். இன்னும் அடிமைகளுக்கு இடமில்லை; அந்நிய இனக்குழுக்களை அடிமைப்படுத்துதலுக்கும் இடமில்லை என்பது விதியாக இருந்தது. இராகோஸ்கள் ஏரீக்களையும் ''நடுநிலை இனங்களையும்''[22] உத்தேசமாக 1651 இல் வென்ற பொழுது அவர்களை இனக்குழுக்களின் கூட்டில் சமத்துவமுடைய உறுப்பினர்களாகச் சேருமாறு அழைத்தார்கள்; தோற்கடிக்கப்பட்டவர்கள் மறுத்த பிறகுதான் அவர்கள் தங்கள் பிரதேசத்திலிருந்து விரட்டப் பட்டார்கள். இத்தகைய சமுதாயத்தினால் உருவாக்கப் பட்ட ஆண்கள், பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை கெடுக்கப்படாத செவ்விந்தியர்களுடன் பழகிய எல்லா வெள்ளையர்களுக்கும் ஏற்பட்ட போற்றுதல் எடுத்துக் காட்டுகிறது. இந்த அநாகரிகர்களின் தன்மதிப்பு, நேர்மை, நற்குண வலிமை, துணிவு பற்றிய பாராட்டு அது.

இந்தத் துணிவுக்கு நாம் சமீபத்தில் ஆப்பிரிக்காவில் உதாரணங்களைக் கண்டோம். சில மாதங்களுக்கு முன் நூபியர்களைப் போல, சில ஆண்டுகளுக்கு முன் ஸுலூ கஃபர்களும்—இந்த இரண்டு இனக்குழுக்களிலும் குல அமைப்புகள் இன்னும் அழிந்து விடவில்லை—எந்த ஐரோப்பிய இராணுவமும் செய்ய முடியாததைச் செய் துள்ளனர்.[23] அவர்களிடம் வெறும் தடிகளும் ஈட்டிகளுமே ஆயுதங்களாக இருந்தன; துப்பாக்கிகள் கிடையாது. மறு புறமோ துப்பாக்கிகள் குண்டு மாரி பொழிந்தன. எனினும் இவர்கள், நெருக்கமாக அணிவகுத்துப் போராடுவதில் உலகிலேயே தலைசிறந்தவர்கள் என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்ற ஆங்கிலக் காலாட்படையினருடைய துப் பாக்கி ஈட்டிகள் வரைக்கும் முன்னேறி அவர்கள் ஒழுங்கு குலைந்து சிதறிப் போகச் செய்தார்கள், சில சமயங்களில் பின்வாங்கும் படியும் செய்தார்கள். இவ்வளவுக்கும் இரு தரப்பினருக்கும் இடையில் ஆயுத பலத்தில் மாபெரும் வேறுபாடு இருந்தது, அவர்கள் இராணுவச் சேவை செய்யவில்லை, இராணுவப் பயிற்சியும் அவர்களுக்குக் கிடையாது. ஒரு கஃபர் 24 மணி நேரத்தில் குதிரையைக் காட்டிலும் அதிக வேகமாக அதிக தூரம் ஓடக் கூடியவன் என்று ஆங்கிலேயர்கள் குறைப்பட்டுக் கொண்டதே அவர் களுடைய திறமைக்கும் பலத்துக்கும் சிறந்த சான்றாகும்.

கஃபர்களுடைய மிகவும் சிறிய தசைநார் கூடக் கசைக் கயிறு போல உறுதியாகவும் உருக்கைப் போலவும் இருக்கிறது என்று ஓர் ஆங்கில ஓவியர் கூறினார்.

வர்க்கப் பிரிவினைகள் தோன்றுவதற்கு முன்பு மனிதர்களும் மனித சமுதாயமும் இருந்த நிலை இதுவே. அன்றைய மனிதர்களுடைய நிலையை இன்றைய நாகரிக மக்களின் மிகப் பெரும்பாலோருடைய நிலையுடன் ஒப்பிட்டால் இன்றைய பாட்டாளி, சிறு விவசாயி ஆகியவர்களுக்கும் பண்டைக்காலக் குலத்தின் சுதந்திரமான உறுப்பினனுக்கும் இடையில் மாபெரும் இடைவெளி இருப்பதைக் காண்போம்.

விஷயத்தின் ஒரு பக்கம் இது. எனினும் இந்த அமைப்பின் அழிவு தவிர்க்க முடியாதது என்பதை நாம் மறக்கக் கூடாது. அது இனக்குழுவுக்கு மேலே வளரவில்லை. இனக்குழுக்களின் கூட்டு அதன் வீழ்ச்சியின் ஆரம்பத்துக்குச் சமிக்கையாக இருந்தது என்பதை நாம் பின்னர் காண்போம். இராகோஸ்கள் மற்றவர்களை அடிமைப்படுத்துவதற்குச் செய்த முயற்சிகளும் இதை எடுத்துக்காட்டியுள்ளன. இனக்குழுவுக்கு வெளியே சட்டம் கிடையாது. வெளிப்படையான சமாதான உடன்படிக்கைகள் இல்லாத இடங்களில் இனக்குழுக்களிடையே யுத்தங்கள் நடைபெற்றன. மற்ற எல்லா மிருகங்களிடமிருந்தும் மனிதனை வேறுபடுத்திக் காட்டுகின்ற கொடூரத்துடன் யுத்தம் நடத்தப்பட்டது; சுயநலத்தின் காரணமாக இந்தக் கொடூரம் பின்னர் தணிக்கப்பட்டது. நாம் அமெரிக்காவில் பார்த்ததைப் போல குல அமைப்பு முழு மலர்ச்சி பெற்றிருக்க வேண்டுமானால் அதற்கு மிகவும் வளர்ச்சி குன்றிய உற்பத்தி வடிவம் இருக்க வேண்டும்; எனவே மிகவும் குறைவான எண்ணிக்கையிலுள்ள மக்கள் விரிவான நிலப்பரப்பில் பரவியிருந்ததன் காரணமாக, வெளி இயற்கை மனிதனிடமிருந்து வேறுபட்டதாக, எதிரியாக, புரியாததாக இருந்து அவன் மீது அநேகமாக முழுமையான ஆதிக்கம் செலுத்த வேண்டும். இந்த ஆதிக்கம் மனிதனுடைய குழந்தைத்தனமான மதக் கருத்துகளில் பிரதிபலிக்கப்படுகிறது. இனக்குழு மனிதனுக்கு—அவன் சம்பந்தமாகவும் வெளியார் சம்பந்தமாகவும்—எல்லையாகஇருந்தது. இனக்குழு, குலம், அவற்றின் அமைப்புகள் புனிதமானவை, மீறக்

கூடாதவை; இயற்கையினால் அமைக்கப்பட்ட மேலான சக்தி; உணர்ச்சி, சிந்தனை, செயல் ஆகிய எல்லாவற்றிலும் மனிதன் அதற்கு முற்றிலும் கீழ்ப்பட்டவனாக இருந்தான். இந்த சகாப்தத்தின் மக்கள் கவர்ச்சிகரமாக நமக்குத் தோன்றினாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடு இல்லாதவர்களாக இருந்தனர். மார்க்ஸ் கூறியபடி, அவர்கள் பூர்விகக் கூட்டு வாழ்க்கையின் தொப்பூழ்க் கொடியுடன் பிணைக்கப்பட்டிருந்தார்கள். இந்தப் பூர்விகக் கூட்டு வாழ்க்கையின் பலத்தை உடைக்க வேண்டியிருந்தது, அது உடைக்கப்பட்டது. ஆனால் அதை உடைத்த செல்வாக்குடைய சக்திகள் பண்டைக்காலக் குல சமுதாயத்தின் எளிமையான, தார்மிக மேன்மையிலிருந்து இழிநிலையாகவும் வீழ்ச்சியாகவும் நமக்குத் தொடக்கத்திலிருந்தே தோன்றுகின்றன. கீழ்த்தரமான பேராசை, மிருகத்தனமான காமவெறி, பொருளாசை, பொதுச் சொத்துக்களை சுயநலத்துக்காகக் கொள்ளையடித்தல் ஆகிய இழிந்த நலன்களே புதிய நாகரிக சமுதாயத்தை, வர்க்க சமுதாயத்தை வரவேற்கின்றன. திருட்டு, கற்பழித்தல், ஏமாற்றுதல், நம்பிக்கைத் துரோகம் ஆகிய மிகவும் மோசமான வழிவகைகள் வர்க்கங்கள் இல்லாத பழைய குல சமுதாயத்தைக் குழிபறித்துக் குப்புறத் தள்ளி விடுகின்றன. மேலும், இந்தப் புதிய சமுதாயம் அதன் 2,500 ஆண்டுக் கால வாழ்க்கையில் சுரண்டப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற அதிகப் பெரும்பான்மையினருக்குப் பாதகமாக சொற்ப எண்ணிக்கையிலுள்ள சிறுபான்மையினருடைய வளர்ச்சியாக இருந்ததைத் தவிர ஒருபோதும் வேறுவிதமாக இருக்கவில்லை; இன்று அது முன்னைக் காட்டிலும் கூடுதலாக அப்படியே இருக்கிறது.

# IV

## கிரேக்க குலம்

கிரேக்கர்களும் பெலாஸ்கியர்களும் அதே மூல இனக் குழுவிலிருந்து தோன்றிய மற்ற மக்களினங்களும் அமெரிக்கர்களைப் போலவே ஏடறியா வரலாற்றுக் காலத்திலிருந்தே குலம், பிராட்ரி, இனக்குழு, இனக்குழுக்களின் கூட்டு என்ற அதே அங்ககமான தொடர்வரிசை முறையைக் கொண்டிருந்தார்கள். பிராட்ரி இல்லாமற் போய் விடலாம்; உதாரணமாக, டோரியர்களிடையே அது இல்லை. இனக்குழுக்களின் கூட்டு எங்குமே இன்னும் முழு வளர்ச்சி பெறாதிருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் குலம் அடிப்படை அலகாக இருந்தது. கிரேக்கர்கள் வரலாற்றில் நுழைந்த காலத்தில் அவர்கள் நாகரிகத்தின் வாயிற்படியில் இருந்தார்கள். கிரேக்கர்களுக்கும் மேற்கூறிய அமெரிக்க இனக்குழுக்களுக்கும் இடையில் அநேகமாக மாபெரும் இரண்டு முழுமையான சகாப்தங்கள் இருக்கின்றன. வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்கர்கள் அந்த அளவுக்கு இராகோஸ்களை விட்டு முன்சென்றிருக்கிறார்கள். கிரேக்க குலம் இக்காரணத்துக்காகவே இராகோஸ் குலத்தின் பழமையான தன்மையைப் பெற்றிருக்கவில்லை. குழு மணத்தின் முத்திரை கணிசமான அளவுக்கு மங்கலாகிக் கொண்டிருந்தது. தாயுரிமை தந்தையுரிமைக்கு வழிவிட்டது; அதனால் மேலோங்கிய தனிச்சொத்து குல அமைப்பில் முதல் உடைப்பை உண்டாக்கியது. முதல் உடைப்பைத் தொடர்ந்து இயல்பாகவே இரண்டாவது உடைப்பும் ஏற்பட்டது. தந்தையுரிமை ஏற்பட்ட பிறகு ஒரு பணக்காரப் பெண்ணின் செல்வம் திருமண உறவின் மூலம் அவளுடைய கணவனைச் சேர்ந்ததாகும், அதாவது மற்றொரு

குலத்துக்குச் சேர்ந்ததாகும். ஆக, குலச் சட்டம் அனைத்தின் அடிப்படையும் உடைக்கப்பட்டது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், குலத்துக்குள் செல்வத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அந்தப் பெண் தன் குலத்துக்குள்ளேயே மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது மட்டுமன்றி அப்படி மணப்பது கடமையாகவும் ஆக்கப்பட்டது.

குரோட் எழுதிய இரேக்க வரலாறு என்ற நூலின்படி, அதீனியக் குலம் பின்வருவனவற்றால் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தது:

1. பொதுவான மதச் சடங்குகள், குலத்தின் ஆதி முன்னோர் என்று கருதப்பட்டு அதற்கேற்ப விசேஷப் பெயர் அளிக்கப்பட்டிருந்த ஒரு தெய்வத்துக்கு வணக்கம் தெரிவிக்கும் பொருட்டு புரோகிதர்களுக்கு விசேஷமான சலுகையுரிமைகள்.

2. பொதுவான இடுகாடு (டெமஸ்தேனஸ் எழுதிய யூபுலைடிஸ் நூலை ஒப்புநோக்குக).

3. பரஸ்பர வாரிசுரிமைகள்.

4. பலாத்காரத்துக்கு எதிராக ஒருவருக்கொருவர் உதவி, பாதுகாப்பு மற்றும் ஆதரவளித்தல்.

5. சில சந்தர்ப்பங்களில் குலத்துக்குள்ளேயே மணக்கும்படி பரஸ்பர உரிமையும் கடமையும், குறிப்பாகப் பெற்றோர்கள் இல்லாத பெண்கள் அல்லது பணக்காரப் பெண் வாரிசுகளுக்கு.

6. குறைந்தபட்சம் சில சந்தர்ப்பங்களிலாவது, பொதுச் சொத்துக்கு உடைமை கொண்டிருத்தல், அதற்கென்று ஓர் அர்ஹனும் (தலைவன்) பொருளாளரும் இருத்தல்.

சில குலங்களைப் பிணைத்து வைத்திருந்த பிராட்ரி இன்னும் குறைவான நெருங்கிய உறவைக் கொண்டிருந்தது. ஆனால் இங்கேயும் இதே போன்ற தன்மையுள்ள பரஸ்பர உரிமைகளையும் கடமைகளையும் காண்கிறோம். விசேஷமான மதச் சடங்குகளில் ஒன்றுகூடித் தொழுதல், பிராட்ரியின் உறுப்பினன் கொல்லப்பட்டால், அதற்கு வழக்குத் தொடர்கின்ற உரிமை ஆகியவற்றில் இதைக் காண்கிறோம். மேலும், ஒரு இனக்குழுவின் எல்லா பிராட்ரிகளும் சில பொதுவான புனிதச் சடங்குகளைப் பிரபுக்களிடமிருந்து (ஏவுபட்ரிடுகளிலிருந்து) பொறுக்கப்பட்ட

ஃபிலோபஸிலியஸ் (இனக்குழுவின் தலைவன்) என்பவனது தலைமையின் கீழ் குறித்த காலமுறைப்படி நடத்தின.

குரோட் மேற்கூறியபடி எழுதினார். மார்க்ஸ் மேலும் கூடுதலாக எழுதுவதாவது: ''கிரேக்க குலத்தில் காட்டுமிராண்டியை (உதாரணம், இராகோஸ்) தவறுக்கிடமின்றிக் கண்டுபிடிக்க முடியும்''. மேலும் நாம் ஆராய்கின்ற பொழுது அவன் இன்னும் சரியாகத் தெரிகிறான்.

உண்மையில் கிரேக்க குலத்துக்குப் பின்வரும் குணாம்சங்களும் உண்டு:

7. தந்தையுரிமைப்படி மரபு வழி.

8. பணக்காரப் பெண் வாரிசு தவிர மற்றவர்கள் குலத்துக்குள்ளே மணம் புரிந்து கொள்வதற்குத் தடை. இந்த விலக்கும் அதை ஒரு கட்டளையாக அமைத்திருப்பதும் பழைய விதியின் செல்லத்தக்க தன்மையைத் தெளிவாக நிரூபிக்கின்றன. ஒரு பெண் மணக்கும் பொழுது தன் குலத்தின் மதச் சடங்குகளைக் கைவிடுகிறாள், தன் கணவனுடைய குலத்தின் மதச் சடங்குகளைப் ஏற்கிறாள், கணவனுடைய பிராட்ரியில் அவள் சேர்க்கப்படுகிறாள் என்று எங்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதியிலிருந்து இது தொடர்கிறது. இதுவும் டிகயோர்கசுடைய நூலின் பிரபலமான ஒரு பகுதியும் குலத்துக்கு வெளியே மணம் செய்வதுதான் விதி என்று நிரூபிக்கின்றன. ஆணோ, பெண்ணோ யாரும் தமது குலத்துக்குள் மணக்க அனுமதிக்கப்படவில்லை என்று பெக்கர் தான் எழுதிய ஹரீக்லஸ் என்ற நூலில் நேரடியாக அனுமானிக்கிறார்.

9. சுவீகாரத்தின் மூலம் குலத்துக்குள் சேர்கின்ற உரிமை; குடும்பத்தால் சுவீகாரம் செய்வதன் மூலம் கடைப்பிடிக்கப்பட்டது, ஆனால் பொதுச் சடங்குகளுடன் நடைபெற வேண்டும், அதுவும் அசாதாரணமான சந்தர்ப்பங்களில் மட்டுமே.

10. தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் நீக்குவதற்கும் உரிமை. ஒவ்வொரு குலத்துக்கும் ஒரு அர்ஹன் இருந்தான் என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தப் பதவி குறிப்பிட்ட சில குடும்பங்களின் பரம்பரையுரிமை என்று எங்குமே சொல்லப்படவில்லை. அநாகரிகக் காலத்தின் முடிவு வரைக்கும் கறாரான பரம்பரைக்கு எதிராகவே நிலைமை பெரும்பாலும் இருந்தது; குலத்துக்குள் ஏழைகள், பணக்காரர்களுக்கு இடையில் முழு

சமத்துவம் நிலவியபடியால் இது முற்றிலும் பொருத்த மில்லாததாகும்.

குரோட் மட்டுமன்றி, நீபூர், மொம்ஸென், மூலச்சிறப் பான பண்டைக்காலத்தின் இதர முந்திய வரலாற்றாசிரியர் கள் அனைவரும் குலம் என்ற பிரச்சினையைத் தீர்க்கத் தவறினார்கள். அதன் தனித்தன்மையான குணாம்சங் கள் பலவற்றை அவர்கள் சரியாகக் குறிப்பிட்டார்கள் என்றாலும், அதைக் குடும்பங்களின் குழுவாகவே எப்பொழு தும் கருதியபடியால் குலத்தின் தன்மை மற்றும் தோற்றத் தைத் தாங்களே புரிந்து கொள்ள இயலாதபடிச் செய்து விட்டார்கள். குல அமைப்பில் குடும்பம் சமுதாயத்தின் அலகாக ஒருபோதும் இருக்கவில்லை, அப்படி இருக்கவும் முடியாது. ஏனென்றால் கணவனும் மனைவியும் அவசிய மாகவே வேறுபட்ட இரண்டு குலங்களைச் சேர்ந்தவர் களாக இருந்தார்கள். குலம் முழுவதும் பிராட்ரிக்குச் சொந்தம்; பிராட்ரி முழுவதும் இனக்குழுவுக்குச் சொந் தம். ஆனால் குடும்பத்தைப் பொறுத்தமட்டில், அதில் ஒரு பாதி கணவனுடைய குலத்துக்கும் மறு பாதி மனைவி யின் குலத்துக்கும் சொந்தம். அரசும் கூட பொதுச் சட்டத் தில் குடும்பத்தை அங்கீகரிக்கவில்லை. இன்றைக்கும் கூட அது சிவில் சட்டத்தில்தான் இருக்கிறது. எனினும் ஏட றிந்த வரலாறு அனைத்தும் தனிப்பட்ட ஒருதாரக் குடும் பத்தை மூலக்கருவாகக் கொண்டு அதைச் சுற்றியே சமு தாயமும் அரசும் படிப்படியாக உருப்பெற்றன என்ற அபத் தமான கருத்திலிருந்துதான்—இது குறிப்பாக 18ஆம் நூற்றாண்டில் மறுக்க முடியாத கருத்தாக நிலைத்து விட்டது —தொடங்குகிறது; உண்மையில், தனிப்பட்ட ஒருதாரக் குடும்பம் நாகரிகக் காலத்துக்கு மிகவும் முற்பட்டதல்ல. ஆகவே முந்திய கருத்து அபத்தமே.

மார்க்ஸ் மேலும் கூறுகிறார்: ''திரு. குரோட் தயவு செய்து இதையும் கவனிக்கட்டும். கிரேக்கர்கள் புராணங் களிலிருந்து தமது குலங்களைக் கண்டுபிடித்த போதிலும், தாங்களே படைத்த தெய்வங்களையும் தெய்வாம்ச புருஷர்களையும் கொண்ட அந்தப் புராணங்களை விட குலங்கள் வயதில் மூத்தவையாகும்.''

முக்கியமான, முற்றிலும் சந்தேகப்பட முடியாத சாட்சி என்ற முறையில் மார்கன் குரோட்டை விரும்பி மேற்

கோள் காட்டுகிறார். ஒவ்வோர் அதீனியக் குலமும் தனது பிரபலமான முன்னோரிடமிருந்து பெறப்பட்ட பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டிருந்தது என்று குரோட் மேலும் கூறுகிறார்; சொலோன் காலத்துக்கு முன்பு பொது விதியாகவும், அதற்குப் பின்னரும் ஒருவன் தன்னுடைய சொத்து சம்பந்தமாக உயிலெழுதி வைக்காமல் இறந்து போனாலும், அவன் சொத்துக்கு அவனுடைய குல உறுப்பினர்கள் (gennêtes) வாரிசானார்கள் என்றும், ஒருவன் கொல்லப்பட்டால், முதலில் அவனுடைய உறவினர்களும் அதற்கடுத்தபடியாக குலத்தின் உறுப்பினர்களும் கடைசியாக பிராட்ரி உறுப்பினர்களும் குற்றவாளி மீது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதற்கு உரிமையும் கடமையும் பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறுகிறார்:

''மிகவும் பண்டைக்கால அதீனியச் சட்டங்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறவை எல்லாம் குலப் பிரிவுகளையும் பிராட்ரிப் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.''

பொது முன்னோர்களிடமிருந்து குலங்கள் பிறந்தது ''பள்ளிப் படிப்புள்ள அற்பவாதிகளுக்கு'' (மார்க்ஸ்) தலைவலி ஏற்படுத்துகின்ற புதிராகவே இருந்து வந்தது. இது இயற்கைதான், இந்த முன்னோர்களெல்லாம் வெறும் கட்டுக்கதை என்று அவர்கள் சாதிப்பதால் குலங்கள் எப்படி தனித்தனியான, தனித்தன்மையுள்ள, ஆதியில் முற்றிலும் தொடர்பில்லாமலிருந்த குடும்பங்களிலிருந்து வளர்ச்சியடைந்தன என்பதை விளக்க முடியாமல் தவிக்கின்றனர். எனினும் குலங்கள் இருப்பதை விளக்குவதற்காகவாவது எப்படியாகிலும் அவர்கள் இதை விளக்கியாக வேண்டும். எனவே அவர்கள் வார்த்தைச் சுழலைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். மரபு வரலாறு என்பது கட்டுக்கதையே, ஆனால் குலம் என்பது உண்மையானது என்ற சொற்றொடருக்கு அப்பால் அவர்கள் போகவில்லை. இறுதியில் குரோட் பின்வருமாறு கூறுகிறார் (அடைப்புக் குறிகளுக்குள் இருக்கும் கூற்றுகள் மார்க்ஸ் எழுதியிருப்பதாகும்):

''இந்த மரபு வரலாற்றைப் பற்றி நாம் மிகவும் அபூர்வமாகத்தான் கேள்விப்படுகிறோம். ஏனென்றால்

வழிபாட்டிலிருந்து கிரேக்கப் புராணம் முழுவதும் குலங்கள், பிராட்ரிகளினால்தான், அவற்றுக்குள்ளாகவேதான் வளர்ச்சியடைந்தது. பிராட்ரிக்கு ஒரு தலைவன் (phratriarchos) இருந்தான்; மேலும், டெ குலான்ஷ் கருத்தின்படி, கட்டுப்படுத்தும்படியான முடிவுகளைச் செய்கின்ற பொதுக் கூட்டங்களும் நீதிமன்றமும் நிர்வாகமும் இருந்தன. பிற்காலத்தைச் சேர்ந்த அரசும் கூட குலத்தைப் புறக்கணிக்கின்ற பொழுதே பிராட்ரியிடம் சில பொதுக் கடமைகளை ஒப்படைத்தது.

இரத்த உறவுள்ள சில பிராட்ரிகள் ஒரு இனக்குழுவாக அமைந்தன. ஆட்டிக்காவில் ஒவ்வொன்றும் மூன்று பிராட்ரிகளைக் கொண்ட நான்கு இனக்குழுக்கள் இருந்தன; ஒவ்வொரு பிராட்ரியிலும் முப்பது குலங்கள் இருந்தன. குழுக்கள் இவ்வளவு கவனமாகப் பிரிக்கப்பட்டிருப்பது தன்னியல்பாகத் தோன்றிய அமைப்பில் உணர்வு பூர்வமாக, திட்டமிட்ட முறையில் குறுக்கிட்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இது எப்படி, எப்பொழுது, ஏன் செய்யப்பட்டது என்பதை கிரேக்க வரலாறு வெளியிடவில்லை. ஏனென்றால் கிரேக்கர்கள் பாதுகாத்து வைத்திருந்த நினைவுகள் வீர யுகத்துக்கு முந்திச் செல்லவில்லை.

கிரேக்கர்கள் ஒப்புநோக்கில் சிறிய நிலப்பரப்பில் அடர்த்தியாகக் குழுமியிருந்தார்கள். எனவே அவர்களுடைய கிளைமொழி வேறுபாடுகள் பரந்த அமெரிக்கக் காடுகளில் வளர்ச்சியடைந்த கிளைமொழிகளின் வேறுபாடுகளைக் காட்டிலும் குறைவாகவே தெரிந்தன. எனினும் இங்கே கூட ஒரு முக்கிய கிளைமொழியைக் கொண்டிருந்த இனக்குழுக்களே ஒரு பெரிய கூட்டில் ஒன்றுபட்டிருந்தன என்று பார்க்கிறோம். சின்னஞ்சிறிய ஆட்டிக்காவும் கூடத் தனக்கு ஒரு கிளைமொழியைக் கொண்டிருந்தது; அது பின்னால் கிரேக்க உரைநடை மொழியாயிற்று.

ஹோமரின் காவியங்களில் கிரேக்க இனக்குழுக்கள் ஏற்கெனவே சிறு மக்களினங்களாக இணைந்துள்ளதைப் பொதுவாகக் காண்கிறோம். எனினும், அவற்றினுள் குலங்களும் பிராட்ரிகளும் இனக்குழுக்களும் தமது முழுச் சுதந்திரத்தை இன்னும் வைத்துக் கொண்டிருந்தன. அவர்

கள் ஏற்கெனவே அரண் சூழ்ந்த நகரங்களில் வாழ்ந்தார்கள். கால்நடை மந்தைகளின் வளர்ச்சி, விவசாயம், ஆரம்பக் கைத்தொழில்கள் ஆகியவற்றுடன் மக்கள்தொகையும் பெருகிறது. அதனுடன் செல்வ விஷயத்தில் இன்னும் அதிகமான வேறுபாடுகள் வந்து சேர்ந்தன. பழைய, இயற்கையாக வளர்ச்சியடைந்த ஜனநாயகத்துக்குள் இவை ஒரு புதிய பிரபுத்துவ அம்சத்தைத் தோற்றுவித்தன. பல்வேறு சிறு மக்களினங்கள் மிகச் சிறந்த நிலத்துக்காகவும் கொள்ளைக்காகவும் இடைவிடாது போரிட்டு வந்தன. யுத்தக் கைதிகளை அடிமைகளாக்குவது ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாக இருந்தது.

இந்த இனக்குழுக்களின், சிறு மக்களினங்களின் அதிகார அமைப்பு பின்வருமாறு:

1. நிரந்தரமான அதிகாரத்தைக் கொண்டது கவுன்சில் (bulê). ஆதியில் அது அநேகமாக குலத் தலைவர்களைக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும்; பின்னர் அவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்து விட்டபடியால் அவர்கள் பொறுக்கப்பட்டார்கள். இது பிரபுத்துவ அம்சத்தை வளர்க்கவும் பலப்படுத்தவும் ஒரு வாய்ப்பை உருவாக்கியது. வீர யுகத்தைச் சேர்ந்த கவுன்சில் பிரபுக்களை (kratistoi) கொண்டு அமைக்கப்பட்டிருந்தது என்று டியொனீசியஸ் திட்டமாகக் கூறுகிறார். முக்கிய விவகாரங்களில் கவுன்சில்தான் இறுதியான முடிவைச் செய்யும். எஸ்கிலஸ் எழுதிய நாடகங்களில் ஒன்றில் தீபஸ் நகர கவுன்சில் ஒரு வழக்கில் கட்டுப்படுத்துகின்ற முடிவைச் செய்தது: இடியோக்ளசின் சடலத்தை முழு மரியாதையுடன் அடக்கம் செய்ய வேண்டும்; பலினீகசின் சடலத்தை நாய்கள் தின்னும்படி வெளியே எறிந்து விட வேண்டும்.* பிற்காலத்தில், அரசு உதித்ததிலிருந்து இக்கவுன்சில் ஒரு செனெட்டாக மாற்றப்பட்டது.

2. மக்கள் சபை (agora). இராகோஸ்களிடையே கவுன்சில் கூட்டங்கள் நடைபெறுகின்ற பொழுது ஆண்களும் பெண்களுமாக மக்கள் வட்டமாகச் சுற்றி நின்று முறைப்படி விவாதங்களில் பங்கெடுத்து, அதன் மூலம் முடிவுகளை உருவாக்கினார்கள் என்று நாம் பார்த்தோம்.

---

* எஸ்கிலஸ், தீபசிற்கு எதிராக எழுவர். — ப-ர்.

ஹோமர் காலத்து கிரேக்கர்களிடையில்—ஒரு பழைய ஜெர்மானிய சட்டச் சொல்லை உபயோகிப்பதானால்—இந்த Umstand (சுற்றி நின்று கொண்டிருப்பவர்கள்) ஒரு முழுமையான மக்கள் சபையாக வளர்ந்து விட்டது. பண்டைக்கால ஜெர்மானியர்களிடையிலும் இப்படியே நடைபெற்றது. முக்கியமான விவகாரங்களைப் பற்றி முடிவெடுப்பதற்கு கவுன்சில் இந்த சபையைக் கூட்டியது. ஒவ்வொரு ஆணுக்கும் பேச உரிமையிருந்தது. கையைத் தூக்கிக் காட்டுவதன் மூலம் (எஸ்கிலசின் நாடகமான முறையிடுபவர்கள் என்பதில்) அல்லது கோஷமிடுவதன் மூலம் முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவு சர்வசக்தி கொண்டது, இறுதியானது, ஏனென்றால், ஷோமான் தமது கிரீசின் பண்டைக்காலப் பழக்கங்கள் என்னும் நூலில் கூறியபடி,

''நிறைவேற்றுவதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு தேவைப்படுகின்ற விஷயத்தை விவாதிக்கும் பொழுது மக்களைத் தம்முடைய சித்தத்துக்கு எதிரானவற்றை ஒத்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்துகின்ற எந்தச் சாதனங்களைப் பற்றியும் ஹோமர் ஒரு குறிப்பும் தரவில்லை.''

இனக்குழுவின் வயதுவந்த ஒவ்வொரு ஆண் உறுப்பினனும் ஒரு போர்வீரனாக இருந்த இக்காலத்தில் மக்களுக்கு எதிராக நிறுத்தப்படக் கூடிய முறையில் மக்களிடமிருந்து தனியான சமூக அதிகாரம் என்பதாக ஒன்று இன்னும் இருக்கவில்லை. புராதன ஜனநாயகம் இன்னும் முழு மலர்ச்சியிலிருந்தது. கவுன்சில் மற்றும் பஸிலியசின் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பற்றி முடிவு செய்கின்ற பொழுது இது தொடக்க நிலையாக இருந்தாக வேண்டும்.

*3*. இராணுவத் தளபதி (basileus). இதைப் பற்றி மார்க்ஸ் பின்வரும் கருத்தைக் கூறுகிறார்: ''ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள்—அவர்களில் பெரும்பாலோர் சிற்றரசர்களின் பிறவிச் சேவகர்கள்—பஸிலியசை நவீன அர்த்தத்திலுள்ள அரசனாகக் காட்டுகிறார்கள். அமெரிக்கக் குடியரசுவாதியாகிய மார்கன் இதை மறுக்கிறார். பசப்புக்கார கிளாட்ஸ்தனையும் அவர் எழுதிய உலகத்தின் இளமை என்னும் நூலையும் பற்றி அவர் மிகவும் கிண்டலாக, ஆனால் உண்மையாகப் பின்வருமாறு எழுதுகிறார்:

"திரு. கிளாட்ஸ்தன் வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்கத் தலைவர்களை அரசர்களாகவும் சிற்றரசர்களாகவும் வாசகர்களுக்குச் சித்திரித்துக் காட்டுகிறார். அத்துடன் அவர்களுக்கு கனவான்களின் குணங்களையும் சூட்டுகிறார். எனினும் கிரேக்கர்களிடையே மூத்த மகன் வாரிசாகும் வழக்கம் பொதுவாக போதுமான அளவுக்கு, ஆனால் தெளிவில்லாதபடி வரையறுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது என்று அவரே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது."

உண்மையாகப் பார்த்தால், இத்தகைய நிபந்தனைகளுடன் கூடிய மூத்த மகன் வாரிசு முறை போதுமான அளவுக்கு, ஆனால் தெளிவில்லாதபடி வரையறுக்கப்பட்டிருப்பது இல்லாமைக்கு ஒப்பானதே என்பதை கிளாட்ஸ்தனே உணர்ந்திருக்க வேண்டும்.

இராகோஸ்களிடையிலும் இதர செவ்விந்தியர்களிடையிலும் தலைவர் பதவி குறித்து வாரிசு முறைக்குள்ள இடம் என்ன என்று முன்னரே பார்த்தோம். எல்லா அதிகாரிகளும் பெரும்பாலும் குலத்துக்குள்ளாகவே தேர்ந்தெடுக்கப்பட்டபடியால், அந்த அளவுக்கு அவர்கள் குலத்துக்குள் வாரிசு முறையிலேயே இருந்து வந்தார்கள். காலியாகின்ற பதவியில் முந்திய அதிகாரியின் அடுத்த குல உறவினனை, அதாவது அவனுடைய சகோதரனையோ, சகோதரியின் மகனையோ—அவனை நிராகரிப்பதற்குப் போதிய காரணங்கள் இருந்தாலொழிய—அமர்த்துவது நாளடைவில் வழக்கமாகி விட்டது. கிரீசில், தந்தையுரிமையின் கீழ், பஸிலியஸ் பதவி பொதுவாகவே மகனுக்கு அல்லது புதல்வர்களில் ஒருவனுக்குத் தரப்பட்டது என்ற விஷயம் பொதுத் தேர்தல் மூலம் வாரிசைத் தேர்ந்தெடுப்பதில் புதல்வர்களுக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக்கலாம் என்பதையே குறிக்கிறது; ஆனால் பொதுத் தேர்தல் இல்லாமல் சட்டப்படி வாரிசாகப் பதவிக்கு வர முடியும் என்று அது உட்கிடையாகக் கூடக் குறிக்கவில்லை. இங்கே, இராகோஸ்கள் மற்றும் கிரேக்கர்கள் மத்தியில் குலங்களுக்குள்ளே விசேஷமான பிரபுத்துவக் குடும்பங்களின் முதல் முளைகளை நாம் காண்கிறோம். மேலும், கிரேக்கர்களிடையே பிற்காலத்தில் வரப் போகும் பரம்பரைத் தலைவர் பதவி முறையின் அல்லது முடியாட்சி முறையின் முதல் முளைகளைக் காண்கிறோம். எனவே கிரேக்கர்

களிடையில் பஸிலியஸ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம், அவர்களின் அங்கீகாரம் பெற்ற உறுப்பினால்—கவுன்சில் அல்லது அகோரா—உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ரோமானிய அரசனை (rex) பொறுத்தமட்டில் இப்படி நடைபெற்றது.

இலியாத் காவியத்தில் ''ஆண்களின் தலைவனாகிய'' அகமெம்னான் கிரேக்கர்களின் தலைமை அரசனாகச் சித்திரிக்கப்படவில்லை; முற்றுகையிடப்பட்டிருக்கும் நகரத்துக்கு முன்பாகவுள்ள கூட்டு இராணுவத்தின் தலைமைத் தளபதியாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறான். மேலும், கிரேக்கர்களிடையில் உட்பிளவுகள் ஏற்பட்ட பொழுது அவனுடைய இந்தத் தன்மையைத் தான் ஒடிஸியஸ் பிரபலமான ஒரு பகுதியில் சுட்டிக்காட்டுகிறான்: நமக்குப் பல தளபதிகள் இருப்பது நல்லதல்ல, நம் எல்லோருக்கும் ஒரு தளபதியே இருக்கட்டும் முதலியன (இத்துடன் செங்கோலைப் பற்றி மக்களிடையே பிரபலமடைந்திருக்கும் வரிகள் பின்னால் சேர்க்கப்பட்டவை).* ''ஒடிஸியஸ் இந்த இடத்தில் ஆட்சி முறையைப் பற்றிப் பிரசங்கம் செய்யவில்லை; போர்க்களத்தில் தலைமைத் தளபதிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று அவன் வற்புறுத்துகிறான். டிராய் முன்னே ஒரு இராணுவமாக மட்டுமே காட்சியளிக்கின்ற கிரேக்கர்களுக்கு அகோராக் கவுன்சிலின் நடவடிக்கைகள் போதிய ஜனநாயகத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. அஹில்லஸ் பரிசுகளைப் பற்றி, அதாவது யுத்த லாபங்களைப் பிரிப்பதைப் பற்றிப் பேசுகின்ற பொழுது அகமெம்னானை அல்லது வேறு யாராவதொரு பஸிலியஸைப் பங்குபிரிப்பவனாகச் செய்யவில்லை, எப்பொழுதும் 'ஆஹேயர்களின் புதல்வர்களையே', அதாவது மக்களையே பங்குபிரிப்பவர்களாகச் செய்கிறான். 'ஜேயசின் புதல்வன்', 'ஜேயசால் ஊனூட்டப் பெற்றவன்' ஆகிய அடைமொழிகள் எதையும் நிரூபிக்கவில்லை, ஏனென்றால் ஒவ்வொரு குலமும் ஒரு தெய்வத்தின் வம்சவழியில் வந்ததுதான்; மேலும், இனக்குழுத் தலைவனுடைய குலமோ ஒரு 'முக்கியமான' தெய்வத்

* ஹோமர், இலியாத், இரண்டாவது பாடல்.—ப-ர்.

தின், இங்கே ஜேயசின் வம்சவழியில் வந்தது. பன்றி மேய்ப்பவனான யூமியஸ், இன்னும் மற்றவர்களைப் போன்ற சுதந்திரமில்லாதவர்களும் கூட 'தெய்வத் தன்மை பெற்றவர்கள்' (dioi மற்றும் theioi), இது ஒடிஸி காவியத்தில் கூட, ஆகவே இலியாத் காவியத்துக்கு மிகவும் பிந்திய காலத்தில் கூட அப்படி இருந்தது. மேலும், ஒடிஸி யில் தூதனாகிய மூலியசுக்கு 'மாவீரன்' என்று பட்டம் தரப்படுவதைக் காண்கிறோம்; டெமடோகஸ் என்னும் கண் பார்வையில்லாத பாடகனுக்கும் அதே பட்டம் சூட் டப்படுகிறது. சுருக்கமாகக் கூறுவதென்றால், ஹோம ருடைய அரசுடைமை என்று சொல்லப்படுவதைக் குறிப் பதற்கு கிரேக்க எழுத்தாளர்கள் பயன்படுத்திய basileia என்ற சொல்லும் (ஏனென்றால் அதன் சிறப்பான அம்சம் இராணுவத் தலைமையே ஆகும்) அதனுடன் சேர்த்து தலைவர்களின் கவுன்சில், மக்கள் சபை ஆகியவையும் இராணுவ ஜனநாயகம் என்றே பொருள்படும்''(மார்க்ஸ்).

பஸிலியசுக்கு இராணுவ வேலைகள் மட்டுமன்றி மத சம்பந்தமான வேலைகளும் நீதிமன்ற வேலைகளும் இருந் தன; பிந்தியவை தெளிவாகக் குறிக்கப்படவில்லை; இனக் குழுவின் அல்லது இனக்குழுக்களின் கூட்டின் மிக உயர்ந்த பிரதிநிதி என்ற முறையில் அவன் இராணுவ வேலை களைச் செய்தான். சிவில் மற்றும் நிர்வாக வேலைகளைப் பற்றி எங்குமே குறிப்பிடப்படவில்லை; ஆனால் அவன் தனது பதவியின் காரணமாகக் கவுன்சில் உறுப்பினனாக இருந்ததாகத் தோன்றுகிறது. சொல் இலக்கணப்படி, பஸிலியஸ் என்ற சொல்லை König என்று ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்ப்பது முற்றிலும் சரியானதே; ஏனென்றால் König (Kuning) என்ற சொல் Kuni, Künneஇலி ருந்து வந்தது, அது குலத் தலைவனைக் குறிக்கிறது. ஆனால் பழைய கிரேக்க மொழியைச் சேர்ந்த பஸிலியஸ் என்ற சொல் König (அரசன்) என்ற சொல்லின் நவீன அர்த்தத்துடன் எவ்வழியிலும் பொருந்தவில்லை. தூகிடி டஸ் பண்டை basileia என்பதை patrikê, அதாவது குலத்தி லிருந்து பெறப்பட்டது என்று திட்டமாகக் குறிக்கிறார்; அதற்குக் குறிப்பிட்ட, ஆகவே வரையறுக்கப்பட்ட வேலை கள் இருந்தன என்றும் கூறுகிறார். அது தவிர, வீர யுகத் தைச் சேர்ந்த basileia என்பது சுதந்திர மனிதர்கள் மீது

செலுத்திய தலைமை என்றும் பஸிலியஸ் ஒரு இராணுவத் தலைவன், நீதிபதி, தலைமைப் புரோகிதன் என்றும் அரிஸ்டாட்டில் கூறுகிறார். எனவே பிற்காலத்தில் ஏற்பட்ட அர்த்தத்தில் பஸிலியசுக்கு அரசாங்க அதிகாரம் கிடையாது.*

ஆக, வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்கச் சமூக அமைப்பில் பண்டைக் குல அமைப்பு இன்னும் விறுவிறுப்புடன் இருப்பதை நாம் காண்கிறோம்; ஆனால் அதன் நசிவின் தொடக்கத்தையும் நாம் காண்கிறோம்: தந்தையுரிமையும் தந்தையின் சொத்துக்குக் குழந்தைகள் வாரிசாவதும் அமுலுக்குவந்து விட்டன, இந்த வாரிசு முறை குடும்பத்துக்குள் செல்வம் குவிவதற்கு வழி செய்து குலத்துக்கு எதிராக அதற்குச் சக்தியைக் கொடுத்தது; செல்வத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டதன் விளைவாக, ஆட்சி முறை பாதிக்கப்பட்டுப் பரம்பரைப் பிரபுத்துவ முறை மற்றும் முடியாட்சி முறையின் முளைகள் துளிர்த்தன; அடிமைமுறையில் முதலில் யுத்தக் கைதிகள் மட்டுமே அடிமைகளாக்கப்பட்டார்கள், ஆனால் அது இனக்குழுவின் சக உறுப்பினர்களை

---

* கிரேக்க பஸிலியஸ் மாதிரி, அஸ்டெக் இராணுவத் தலைவனும் நவீன அர்த்தத்தில் சிற்றரசனாகத் தவறாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறான். ஸ்பானிஷ்காரர்களின் தகவல்களை மார்கன்தான் முதன்முதலாக வரலாற்று ரீதியில் விமர்சித்தார்; அவர்கள் முதலில் விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டும் மிகைப்படுத்தியும் கூறினார்கள், பின்னர் வேண்டுமென்றே திரித்தும் கூறியுள்ளனர். மெக்சிகர்கள் அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தில் இருந்தார்கள், ஆனால் நியூமெக்சிகோவைச் சேர்ந்த புயேப்ளோ செவ்விந்தியர்களை விட உயர்வான தரத்திலிருந்தார்கள்; அரைகுறையான தகவல்களைக் கொண்டு முடிவு செய்யக் கூடிய அளவில் அவர்களுடைய சமூக அமைப்பு பின்வருவனவற்றிற்குப் பொருத்தமாக இருந்தது என்று மார்கன் எடுத்துக்காட்டினார்: மூன்று இனக்குழுக்களைக் கொண்ட கூட்டு; அது வேறு சில இனக்குழுக்கள் தனக்குக் கப்பம் கட்டுமாறு செய்தது; அது சமஷ்டிக் கவுன்சிலாலும் சமஷ்டி இராணுவத் தலைவனாலும் நிர்வாகம் செய்யப்பட்டது; அந்த இராணுவத் தலைவனை ஸ்பானிஷ்காரர்கள் ''சக்கரவர்த்தியாகச்'' செய்து விட்டார்கள். (**எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.**)

யும் குலத்தின் சக உறுப்பினர்களையும் கூட அடிமைப் படுத்துவதற்கு ஏற்கெனவே வழியை அமைத்து வந்தது; முன்பு இனக்குழுக்களிடையில் நடைபெற்ற சண்டைகள் இப்பொழுது கால்நடைகளையும் அடிமைகளையும் செல் வங்களையும் கைப்பற்றுகின்ற நோக்கத்துடன் நிலத்திலும் கடலிலும் திட்டமிட்ட படையெடுப்புகளாக, இழிந்து முறையான வாழ்க்கைத் தொழிலாக மாறி விட்டன; சுருக்கமாகக் கூறினால், செல்வம் மிகவுயர்ந்த சம்பத் தாகப் புகழப்பட்டது, மதிக்கப்பட்டது, செல்வத்தைப் பல வந்தமாகக் கொள்ளையடிப்பதை நியாயப்படுத்துவதற் காகப் பண்டைய குல விதிமுறைகள் வேண்டுமென்றே தவறான வழியில் செலுத்தப்பட்டன. ஒன்றே ஒன்றுதான் இல்லை; குல அமைப்பின் பொதுவுடைமை மரபுகளுக்கு எதிராகத் தனி நபர்கள் புதிதாகச் சேர்த்த சொத்தைப் பாதுகாப்பதற்கு மட்டுமன்றி, முன்பு துச்சமாக மதிக்கப் பட்ட தனியுடைமையைப் புனிதப்படுத்துவதுடன் அப் படிப் புனிதப்படுத்துவதே மனிதச் சமூகத்தின் மிக உயர்ந்த நோக்கமென்று பிரகடனப்படுத்துவதற்கு மட்டு மன்றி, சொத்து சேர்ப்பதற்கு இடையறாது வளர்ந்து கொண்டிருந்த புதிய வடிவங்களுக்கும் அதன் விளைவாக மேன்மேலும் செல்வத்தைப் பெருக்குவதற்கும் பொது மக்களுடைய அங்கீகாரம் என்னும் முத்திரையைப் பதிப் பதற்கும் உரிய ஒரு ஸ்தாபனம் இல்லை. சமூகத்தில் புதி தாக எழுந்து கொண்டிருந்த வர்க்கப் பிரிவினையை நிரந் தரமாக்குவது மட்டுமன்றி உடைமையில்லாத வர்க்கத்தை உடைமை வர்க்கம் சுரண்டுவதற்குள்ள உரிமையையும் முந்தியதன் மீது பிந்தியது செலுத்தும் ஆதிக்கத்தையும் நிரந்தரமாக்கக் கூடிய ஒரு ஸ்தாபனம் இல்லை.

அந்த ஸ்தாபனம் வந்து சேர்ந்தது. அரசு உருவாக்கப் பட்டது.

# V

## அதீனிய அரசின் உதயம்

*அரசு எப்படி வளர்ச்சியடைந்தது, குல அமைப்பின் சில உறுப்புகள் எப்படி மாற்றப்பட்டன, புதிய உறுப்புகள் தோன்றியதால் வேறு சில எப்படி அகற்றப்பட்டன, முடிவில் எல்லாமே உண்மையான அரசாட்சி உறுப்புகளால் எப்படி அழிக்கப்பட்டன, குலங்கள், பிராட்ரிகள், இனக்குழுக்கள் மூலம் தற்காத்துக் கொண்டிருந்த உண்மையான ''ஆயுதமேந்திய மக்களுக்கு'' பதிலாக அரசாட்சி உறுப்புகளின் சேவையிலிருக்கின்ற, ஆகவே மக்களுக்கு எதிராகவும் உபயோகிக்கப்படக் கூடிய ஆயுதமேந்திய ''சமூக அதிகாரம்'' எப்படி ஏற்பட்டது? இவை அனைத்தையும் பண்டைக்கால ஏதன்சில் நன்கு பார்க்கக் கூடிய மாதிரி, குறைந்தபட்சம் ஆரம்ப நிலையில் வேறெங்கும் பார்க்க முடியாது. இம்மாற்றத்தின் வடிவங்களை மொத்தத்தில் மார்கனே வர்ணிக்கிறார். இம்மாறுதல்களை ஏற்படுத்திய பொருளாதார உள்ளடக்கத்தை நானே பெரிதும் தர வேண்டியிருந்தது.*

*வீர யுகத்தில் அதீனியர்களின் நான்கு இனக்குழுக்களும் ஆட்டிக்காவின் தனித்தனிப் பகுதிகளில் இன்னும் இருந்தன. அவற்றில் இருந்த பன்னிரண்டு பிராட்ரிகளும் கூட கிக்ராப்சைச் சேர்ந்த பன்னிரண்டு நகரங்களில், இன்னும் தனித்தனியே இருப்பிடம் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. மக்கள் சபை, மக்கள் கவுன்சில், பஸிலியஸ் என்னும் ஆட்சி முறை வீர யுகத்தைச் சேர்ந்தது. ஏடறிந்த வரலாறு தெரிவிக்கின்ற மிகப் பிந்திய காலத்தில் நிலம் ஏற்கெனவே பிரிக்கப்பட்டுத் தனிச்சொத்தாக மாற்றப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அநாகரிக நிலையின் தலைக்கட்டத்தின் இறுதியில் ஒப்புநோக்கில்*

வளர்ச்சியடைந்திருந்த பண்ட உற்பத்திக்கும் அதற்கு அளவான பண்ட வர்த்தகத்துக்கும் இது பொருத்தமாக இருந்தது. தானிய உற்பத்தி தவிர மதுவும் எண்ணெயும் தயாரிக்கப்பட்டன. ஏஜியன் கடல் வழியாக நடைபெற்ற வர்த்தகம் ஃபினீஷியர்களிடமிருந்து மேன்மேலும் ஆட்டிக்கா மக்களின் கைக்கு மாறியது. நிலத்தை வாங்கி விற்பதன் விளைவாகவும் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்குமிடையிலும் வர்த்தகத்திற்கும் கப்பல் போக்குவரத்திற்குமிடையிலும் உழைப்புப் பிரிவினை தொடர்ந்து வளர்ந்ததன் விளைவாகவும் குலங்கள், பிராட்ரிகள் மற்றும் இனக்குழுக்களின் உறுப்பினர்கள் வெகு சீக்கிரத்தில் தமக்குள் ஒன்றுகலந்தனர். பிராட்ரிகளும் இனக்குழுக்களும், சொந்த நாட்டினராயினும் அந்த அமைப்புகளைச் சேராத, ஆகவே தம் இருப்பிடத்திலேயே அந்நியர்களாக இருக்கின்ற நபர்களைத் தமது மாவட்டத்தில் சேர்த்துக் கொண்டன. ஏனென்றால், சமாதான காலத்தில் ஒவ்வொரு பிராட்ரியும் ஒவ்வொரு இனக்குழுவும் ஏதன்சிலுள்ள மக்கள் கவுன்சிலையும் பஸிலியசையும் கலந்தாலோசிக்காமலேயே தமது சொந்த விவகாரங்களை நிர்வகித்தன. ஆனால் பிராட்ரியிலோ, இனக்குழுவிலோ சேராத, அந்தப் பிரதேசத்தில் வசித்த மக்கள் இயற்கையாகவே இந்த நிர்வாகத்தில் பங்கெடுக்க முடியவில்லை.

குல அமைப்பின் உறுப்புகளின் முறையான வேலையை இது மிகவும் பாதித்ததனால் வீர யுகத்திலேயே இதற்கு ஒரு பரிகாரம் தேவைப்பட்டது. தீஸியசினால் தயாரிக்கப்பட்டது என்று சொல்லப்படுகின்ற அமைப்பு அமுலாக்கப்பட்டது. ஏதன்சில் ஒரு மத்திய நிர்வாகம் அமைக்கப்பட்டது இதன் பிரதான அம்சமாகும். இனக்குழுக்கள் இதுவரை சுயேச்சையாகக் கவனித்து வந்த சில விவகாரங்கள் பொது விவகாரங்களாக அறிவிக்கப்பட்டு ஏதன்சில் இருந்த பொது கவுன்சிலுக்கு மாற்றப்பட்டன. அதன் மூலம் அதீனியர்கள், அமெரிக்காவிலுள்ள எந்த சுதேசி மக்களினமும் என்றைக்கும் சென்றதைக் காட்டிலும் கூடுதலாகவே ஒரு அடி சென்றார்கள். அண்டையிலுள்ள இனக்குழுக்கள் வெறுமனே கூட்டாகச் சேருவது மறைந்து இப்பொழுது எல்லா இனக்குழுக்களையும் ஒரேயொரு

மக்களினமாகக் கலப்பது வந்து சேர்ந்தது. இது பொது வான அதீனிய மக்கள் சட்டமுறையைத் தோற்றுவித்தது. அந்த சட்டமுறை தனிப்பட்ட இனக்குழுக்களின், குலங்களின் சட்ட ரீதியான விதிமுறைகளைக் காட்டிலும் மேலாக இருந்தது. ஏதன்சின் குடிமக்கள் என்ற முறையில் அது அவர்களுக்கு, தமது சொந்த இனக்குழுவுக்கு வெளியிலிருந்த பிரதேசங்களிலும் கூட, குறிப்பிட்ட உரிமைகளையும் கூடுதலான சட்டப் பாதுகாப்பையும் கொடுத்தது. எனினும் குல அமைப்புக்குக் குழி பறிப்பதற்கு இது முதல் படியேயாகும். ஏனென்றால் ஆட்டிக்காவின் எல்லா இனக்குழுக்களுக்கும் அந்நியர்களாக இருந்த, அதீனியக் குல அமைப்புக்கு முற்றிலும் புறம்பானவர்களாக, புறம்பாகவே இருந்து வந்த குடிமக்களைப் பிற்காலத்தில் சேர்த்துக் கொள்வதை நோக்கிச் செல்வதற்குரிய முதல் படி இது. தீஸியசால் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகின்ற மற்றொரு நடவடிக்கை, குலங்கள், பிராட்ரிகள், இனக்குழுக்கள் என்ற வேறுபாடு இல்லாமல் மக்களினம் முழுவதையும் ஏவுபட்ரிடுகள் அல்லது பிரபுக்கள், கெயொமோர்கள் அல்லது நிலத்தில் பயிர் செய்பவர்கள், டெமியுர்குகள் அல்லது கைவினைஞர்கள் என்று மூன்று வகுப்புகளாகப் பிரித்து, பொதுப் பதவிகளை விசேஷ உரிமையாகப் பிரபுக்களுக்கு அளித்தது. பொதுப் பதவிகளை வகிக்கின்ற உரிமையைப் பிரபுக்களுக்கு ஒதுக்கியதைத் தவிர இந்தப் பிரிவினை செயல்படவில்லை என்பது உண்மையே. ஏனென்றால் அது வகுப்புகளிடையில் சட்ட ரீதியான மற்ற எந்த வேறுபாடுகளையும் தோற்றுவிக்கவில்லை. எனினும் ஓசையின்றி வளர்ச்சியடைந்த புதிய சமூக அம்சங்களை அது நமக்கு வெளிப்படுத்துவதால் அது முக்கியமாகும். குலத்தில் குறிப்பிட்ட குடும்பங்கள் வழக்கமாகப் பதவி வகித்தல் ஏற்கெனவே இந்தக் குடும்பங்களின் அதிகமாக மறுக்கப்படாத உரிமையாக வளர்ந்திருப்பதை இது காட்டுகிறது; ஏற்கெனவே தமது செல்வத்தினால் பலம் பெற்றிருந்த இந்தக் குடும்பங்கள் தமது குலத்துக்கு வெளியே சலுகை பெற்ற ஒரு வர்க்கமாக ஒன்றுசேரத் தொடங்கின என்றும் இது காட்டுகிறது; உதித்துக் கொண்டிருந்த அரசு இந்தக் கைப்பற்றுதலை அனுமதித்தது என்றும்

இது காட்டுகிறது. மேலும், விவசாயிகளுக்கும் கைவினைஞர்களுக்கும் இடையிலான உழைப்புப் பிரிவினை குலங்களாகவும் இனக்குழுக்களாகவும் இருந்த பழைய பிரிவினையின் தலைமை நிலையை எதிர்த்துச் சமூக ரீதியில் போட்டி போடுகின்ற அளவுக்கு பலமடைந்து விட்டது என்றும் இது காட்டுகிறது. கடைசியாக, குல சமுதாயத்துக்கும் அரசுக்கும் இடையில் சமரசப்படுத்த முடியாத முரண்பாட்டையும் அது பிரகடனம் செய்கிறது. அரசை அமைப்பதற்குச் செய்த முதல் முயற்சி குலங்களை உடைத்தெறிவதாகவே இருந்தது: ஒவ்வொரு குலத்தின் உறுப்பினர்களும் தனியுரிமை பெற்றவர்களாகவும் கீழ்நிலையானவர்களாகவும் பிரிக்கப்பட்டார்கள்; பிந்தியவர்கள் தொழில் புரியும் இரு வர்க்கங்களாக மேலும் பிரிக்கப்பட்டார்கள்; இப்படி ஒருவருக்கொருவர் எதிராக நிறுத்தப்பட்டார்கள்.

சொலோன் காலம் வரைக்கும் ஏதன்சின் பிந்திய அரசியல் வரலாறு அரைகுறையாக மட்டுமே தெரிய வந்திருக்கிறது. பஸிலியஸ் பதவி வழக்கில்லாமல் போயிற்று; பிரபுக்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ஹன்கள் அரசின் தலைவர்களானார்கள். கி.மு. 600ஆம் ஆண்டு வாக்கில் சகிக்க முடியாமல் போகின்ற வரை பிரபுக்களுடைய ஆட்சி இடைவிடாமல் வலுப்பெற்றது. பணமும் கந்துவட்டி முறையும் பொதுமக்களுடைய சுதந்திரத்தை நசுக்குவதற்குப் பிரதான சாதனங்களாகப் பயன்பட்டன. பிரபுக்கள் பிரதானமாக ஏதன்சிலும் அதைச் சுற்றிலும் வசித்தார்கள். அங்கே கடல் வழி வர்த்தகமும் துணைத் தொழிலாக அவ்வப்பொழுது நடைபெற்ற கடல் கொள்ளையும் அவர்களுடைய செல்வத்தைப் பெருக்கி, பணச் செல்வத்தை அவர்களிடம் குவித்தன. இங்கிருந்து வளர்ந்த பண முறை அரிக்கின்ற அமிலத்தைப் போல இயற்கைப் பொருளாதார அடிப்படையிலிருந்த கிராமச் சமூகங்களின் மரபுவழிப்பட்ட வாழ்க்கையில் ஊடுருவியது. குல அமைப்புக்கும் பண முறைக்கும் அறவே பொருத்தமில்லை. ஆட்டிக்காவின் சிறு நிலவுடைமை விவசாயிகளின் நசிவு தங்களைப் பாதுகாத்து வந்த பழைய குலப் பந்தங்கள் தளர்ந்து போனதுடன் ஒன்றுசேர்ந்தது. கடன்காரர்களின் பத்திரங்

களும் அடமானப் பத்திரங்களும்—அதற்குள் அதீனியர்கள் அடமானத்தையும் படைத்திருந்தார்கள்—குலத்தையோ, பிராட்ரியையோ மதிக்கவில்லை. பழைய குல அமைப்புக்குப் பணம், கடன், பணக் கடன் ஆகியவை பற்றி ஒன்றும் தெரியாது. எனவே இடைவிடாது விரிவடைந்து வந்த பிரபுக்களின் பணவியல் ஆட்சி ஒரு புதிய சட்டத்தை, வழக்கம் என்ற சட்டத்தை உருவாக்கியது. கடன்பட்டவனிடமிருந்து கடன் கொடுத்தவனைப் பாதுகாப்பதற்கும் பணம் வைத்திருப்பவன் சிறு விவசாயியைச் சுரண்டுவதை அனுமதிப்பதற்கும் இது உருவாக்கப்பட்டது. ஆட்டிக்காவின் நிலங்கள் அனைத்தும் அடமானக் கம்பங்கள் நாட்டப்பட்டுக் காட்சியளித்தன. அந்தக் கம்பங்கள், நாட்டப்பட்டிருக்கும் நிலங்கள் இன்னாருக்கு, இவ்வளவு தொகைக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்ற வாசகத்தைத் தாங்கி நின்றன. இம்மாதிரியாகக் குறிப்பிடப்படாத நிலங்கள் பெரும்பாலும் காலங்கடந்த அடமானங்களுக்காகவும் வட்டி செலுத்தாததற்காகவும் விற்பனை செய்யப்பட்டு, பிரபுக் குடும்பங்களில் பிறந்த கந்துவட்டிக்காரர்களின் உடைமையாகி விட்டன. குத்தகைக்காரனாக இருக்க அனுமதிக்கப்படுவதில், தன் உழைப்பில் ஆறில் ஐந்து பகுதியைக் குத்தகையாகப் புது எசமானருக்குச் செலுத்தி ஆறில் ஒரு பகுதியைக் கொண்டு வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதில் விவசாயி மகிழ்ச்சியடைந்தான். இது மட்டுமன்றி, துண்டு நிலத்தை விற்று வந்த தொகை கடனுக்கு ஈடு கட்டுவதாக இல்லாமல் போனால், அல்லது அந்தக் கடனுக்கு அடமானப் பொருள் இல்லையென்றால், கடன் வாங்கியவன் கடனை அடைப்பதற்குத் தன் குழந்தைகளை வெளிநாட்டில் அடிமைகளாக விற்றேயாக வேண்டும். தகப்பனார் தன் குழந்தைகளைத் தானே விற்பது—தந்தையுரிமை, ஒருதார மணமுறை ஆகியவற்றின் முதல் பலன் இப்படியிருந்தது! மேலும், இரத்தம் குடிப்பவனுக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லையானால், அவன் கடன் வாங்கியவனையே அடிமையாக விற்று விடலாம். அதீனிய மக்களிடையே நாகரிகத்தின் ஆனந்தமான அருணோதயம் இப்படித்தான் இருந்தது.

முன்பெல்லாம் மக்களுடைய வாழ்க்கை நிலைமைகள்

குல அமைப்புடன் இன்னும் பொருந்தியிருந்த பொழுது இப்படிப்பட்ட புரட்சி நடப்பது அசாத்தியமே; ஆனால் இங்கே அது எப்படி ஏற்பட்டது என்று யாருக்குமே தெரிய வில்லை. ஒரு வினாடி இராகோஸ்களிடம் திரும்பச் செல் வோம். தாங்கள் ஒன்றும் செய்யாமலே, நிச்சயமாகத் தங்களுடைய சித்தத்திற்கு விரோதமாக அதீனியர்கள் மீது திணிக்கப்பட்டதைப் போன்ற ஒரு நிலை இராகோஸ் களிடையில் ஏற்படுவது நினைக்க முடியாததாகும். அங்கே, வாழ்க்கைச் சாதனங்களுக்குரிய உற்பத்தி முறை—எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் அது மாறாதிருந் தது—வெளியிலிருந்து புகுத்தப்பட்ட மாதிரி இப்படிப் பட்ட சச்சரவுகளை ஒருபோதும் தோற்றுவித்திருக்க முடி யாது; பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலும் சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடை யிலும் முரண்பாட்டைத் தோற்றுவித்திருக்க முடியாது. இயற்கையின் சக்தியைக் கட்டுப்படுத்துவதிலிருந்து இரா கோஸ்கள் இன்னும் வெகு தூரத்தில் இருந்தார்கள்; ஆனால் அவர்கள் இயற்கை விதித்த வரம்புகளுக்குள் தமது உற்பத்திக்குத் தாமே எசமானர்களாக இருந்தார் கள். அவர்களுடைய சிறிய தோட்டங்களில் விளைச்சல் பாதிக்கப்படுதல், அவர்களுடைய ஏரிகளிலும் ஆறுகளி லும் மீன்கள் செத்து விடுதல் அல்லது அவர்களுடைய காடுகளில் வேட்டை மிருகங்கள் இல்லாமற் போய் விடுதல் ஆகியவை ஒரு புறமிருக்க, தமது ஜீவனோபாயத்துக்குரிய முறையினால் என்ன விளைவு ஏற்படும் என்பதை அவர் கள் அறிந்தே இருந்தார்கள். விளைவு பின்வருமாறுதான் இருக்கும்: வாழ்க்கைக்குரிய சாதனங்கள் குறைந்து விடும் அல்லது பெருகி விடும், ஆனால் முன்னர் சிந்தித்திராத சமூகக் கொந்தளிப்புகள், குலப் பந்தங்களை அறுத்தல், குலங்களின், இனக்குழுக்களின் உறுப்பினர்களைப் பகை மையுள்ள, ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிக் கொண் டிருக்கின்ற வர்க்கங்களாகப் பிளவுபடுத்துதல் ஒருபோதும் ஏற்படாது. உற்பத்தி மிகவும் குறுக்கப்பட்ட வரம்பு களுக்குள் நடைபெற்றது; ஆனால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளின் மீது கட்டுப்பாடு வைத்துக் கொண்டிருந்தார்கள். அநாகரிக நிலையில் உற் பத்தியிலிருந்த பிரம்மாண்டமான அனுகூலம் இதுவே.

நாகரிகம் வந்த பிறகு இது போய் விட்டது. இப்பொழுது இயற்கைச் சக்திகளின் மீது மனிதன் செலுத்துகின்ற மாபெரும் கட்டுப்பாட்டின் அடிப்படையில், இப்பொழுது சாத்தியமான சுதந்திரமான கூட்டுறவின் அடிப்படையில் அதைத் திரும்பப் பெறுவதே அடுத்த தலைமுறைகளின் கடமையாக இருக்கும்.

கிரேக்கர்களிடையில் அப்படியில்லை. கால்நடை மந்தைகள், சொகுசுப் பொருட்கள் மீது தனியுடைமை தோன்றியது தனிநபர்களிடையே பண்டப் பரிவர்த்தனைக்கு வழிவகுத்தது; விளைபொருட்களைப் பண்டங்களாக மாற்றுதலுக்கு வழிவகுத்தது. இதனைத் தொடர்ந்து வந்த புரட்சி முழுவதற்குமுள்ள வேர் இங்கேதான் இருக்கிறது. உற்பத்தியாளர்கள் தம்முடைய விளைபொருளைத் தாமே இனியும் நேரடியாக அனுபவிக்காத பொழுது, பண்டப் பரிவர்த்தனையின் போது அது தம் கையிலிருந்து போக அனுமதித்த பொழுது அதன் மேல் அவர்கள் கட்டுப்பாட்டை இழந்து விட்டார்கள். அது என்னவாகும் என்பது அவர்களுக்குத் தெரியாது; அந்த விளைபொருள் பின்னால் உற்பத்தியாளர்களுக்கு எதிராகத் திருப்பப்படலாம், அவர்களை ஒடுக்குவதற்கும் சுரண்டுவதற்கும் உபயோகிக்கப்படலாம் என்ற சாத்தியக் கூறு தலைதூக்கியது. எனவே தனிநபர்களிடையில் பரிவர்த்தனையை ஒழிக்காமல் எந்த சமுதாயத்தாலும் அதிக காலத்துக்குத் தன் சொந்த உற்பத்திக்குத் தானே எசமானனாக இருக்கவோ, தனது உற்பத்திச் செயல்முறையின் சமூக விளைவுகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்தவோ இயலாது.

எனினும் தனிநபர்களிடையில் பரிவர்த்தனை நிலைநாட்டப்பட்ட பிறகு, விளைபொருட்களைப் பண்டங்களாக மாற்றிய பிறகு விளைபொருள் உற்பத்தியாளன் மீது தன்னுடைய ஆட்சியை எவ்வளவு வேகமாக ஏற்படுத்துகிறது என்பதை அதீனியர்கள் சீக்கிரமாகவே தெரிந்து கொண்டார்கள். பண்டங்களின் உற்பத்தியுடன் தனித்தனி நபர்கள் சொந்தத்துக்கு நிலத்தைச் சாகுபடி செய்வதும் வந்தது. விரைவில் அதைத் தொடர்ந்து நிலத்தில் தனியுடைமை வந்தது. அதன் பிறகு பணம் வந்தது. பணம் என்பது மற்ற எல்லாவற்றை

யும் பரிவர்த்தனை செய்து கொள்வதற்குரிய சர்வ வியாபகமான பண்டமாகும். ஆனால் மனிதர்கள் பணத்தைப் படைத்த பொழுது தாங்கள் ஒரு புதிய சமூகச் சக்தியை, சமுதாயம் முழுவதுமே தலைவணங்க வேண்டிய ஒரே சர்வவியாபகமான சக்தியைப் படைப்பதாகச் சிறிதும் கருதவில்லை. தன்னைப் படைத்தவர்களின் சித்தமோ, அறிவோ இல்லாமல் திடீரென்று தோன்றிய, இளமையின் மிருக பலம் வாய்ந்த இந்தப் புதிய சக்தியின் ஆதிக்கத்தை அதீனியர்கள் உணர்ந்தார்கள்.

என்ன செய்வது? பணத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்துக்கு எதிரே பண்டைய குல அமைப்பு சக்தியற்றதாகத் தன்னை நிரூபித்துக் கொண்டது மட்டுமல்ல, பணம், கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கியவர்கள், பலவந்தமாகக் கடன் வசூல் ஆகியவற்றுக்குத் தனது கட்டுக்கோப்புக்குள்ளாகவே இடமளிப்பதற்கும் அது இயலாததாக இருந்தது. ஆனால் புதிய சமூகச் சக்தி வந்து விட்டது. நல் விருப்பங்களாலோ, பழைய நற்காலம் திரும்ப வராதா என்று ஏங்கிக் கிடப்பதனாலோ பணத்தையும் கந்துவட்டி முறையையும் ஒழிக்க முடியவில்லை. மேலும், குல அமைப்பில் வேறு சில சிறிய உடைப்புகளும் ஏற்பட்டு விட்டன. ஆட்டிக்கா முழுவதிலும், குறிப்பாக ஏதன்ஸ் நகரத்திலும் குல உறுப்பினர்களும் பிராட்ரி உறுப்பினர்களும் வரைமுறையின்றிக் கலந்தது தலைமுறைக்குத் தலைமுறை அதிகரித்தது. ஓர் அதீனியன் தன்னுடைய குலத்துக்கு வெளியே நிலப் பகுதிகளை விற்க அனுமதிக்கப்பட்டிருந்தாலும், தான் குடியிருக்கும் வீட்டை அப்படி விற்பதற்கு இன்னும் தடுக்கப்பட்டிருந்தான் என்ற போதிலும் இக்கலப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொழில்துறையும் பண்டப் பரிவர்த்தனையும் முன்னேறிய பொழுது விவசாயம், கைத்தொழில், பல்வேறு சிறு தொழில்களிலுள்ள பல வகைகள், வர்த்தகம், கப்பலோட்டுதல் முதலிய உற்பத்தியின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையில் உழைப்புப் பிரிவினை முன்னை விட அதிக முழுமையாக வளர்ச்சியடைந்தது. மக்கள்தொகையினர் அவரவர் செய்த தொழிலுக்கேற்ப ஓரளவுக்கு நன்கு வரையறுக்கப்பட்ட குழுக்களாக இப்பொழுது பிரிக்கப்பட்டனர். அந்த ஒவ்வொரு குழுவும் குலத்திலோ, பிராட்ரியிலோ

இடம்பெறாத சில புதிய பொதுவான நலன்களைப் பெற்றிருந்தது; எனவே அவற்றை கவனித்துக் கொள் வதற்குப் புதிய பதவிகளைப் படைப்பது அவசியமாயிற்று. அடிமைகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதி கரித்திருந்தது. இந்த ஆரம்பக் கட்டத்திலேயே சுதந்திர முள்ள அதீனியர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக அடிமைகள் இருந்திருக்க வேண்டும். ஆதியில் குல அமைப்பில் அடிமைமுறை கிடையாது, எனவே அது சுதந்திரமற்றவர்களின் இந்தப் பெருங்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிவகைகளை அறியாதிருந் தது. மேலும் கடைசியாக, வர்த்தகம் அதிகமான அந்நியர் களைக் கவர்ச்சித்தபடியால் அவர்கள் ஏதன்சில் தங்கி விட்டார்கள், ஏனென்றால் அங்கே பணம் சம்பாதிப் பது இன்னும் சுலபமாக இருந்தது. பழைய விதிமுறை களின்படி, இந்த அந்நியர்களுக்கு உரிமைகளோ, சட்டப் பாதுகாப்போ கிடையாது. ஏதன்சில் மரபுவழியாக வந் திருக்கின்ற சகிப்புத் தன்மை இருந்த போதிலும் அந்த மக்களிடையே அவர்கள் கலவரத்திற்குரிய, அந்நிய அம்சமாகவே இருந்தார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், குல அமைப்பு முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. சமுதாயம் குல அமைப்பின் எல் லைகளைத் தாண்டி நாள்தோறும் மேன்மேலும் விரிவடைந்து கொண்டிருந்தது; தன் கண்களுக்கு முன்பாக நடைபெறுகின்ற மிகவும் துன்பகரமான தீமைகளைக் கூட தடுக்கவோ, தணிக்கவோ அது சக்தியில்லாதிருந்தது. ஆனால், இதற்கிடையில் ஓசையில்லாமல் அரசு வளர்ந்து விட்டது. முதலில் நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும், பிறகு நகரத் தொழிலின் பல்வேறு பிரிவுகளுக்கும் இடையே எழுந்த உழைப்புப் பிரிவினையால் ஏற்பட்ட புதுக் குழுக்கள் தமது நலன்களைப் பாதுகாப்பதற்குப் புதிய உறுப்புகளை உருவாக்கின; எல்லாவகைப்பட்ட பொதுப் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. பிறகு இளம் அரசுக்கு, எல்லாவற்றிற்கும் மேலே, சொந்தமாக ஆயுதப் படைகள் தேவைப்பட்டன. கப்பலோட்டிய அதீனியர் களிடையே அது முதலில் கப்பற்படையாகத்தான் இருந்திருக்க முடியும். அது அவ்வப்பொழுது சிறு யுத் தங்களுக்கும் வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாப்பதற்கும்

பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். சொலோனுக்கு முன்பு, திட்டவட்டமாகக் கூற முடியாத ஒரு காலத்தில் ஒவ்வொரு இனக்குழுவிலும் பன்னிரண்டு நௌக்ரரிகள் எனப்படும் சிறு பிரதேச மாவட்டங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு நௌக்ரரியும் ஒரு யுத்தக் கப்பலைத் தயாரித்து அதனுடன் சாதனமும் நபர்களும் தர வேண்டியிருந்தது. மேலும், இரண்டு குதிரை வீரர்களையும் அனுப்ப வேண்டும். இந்த ஏற்பாடு குல அமைப்பை இரண்டு முனைகளில் தாக்கியது: முதலாவதாக, அது உருவாக்கிய சமூக அதிகாரம் ஆயுதமேந்திய மக்கள்தொகை மொத்தத்துடன் இனியும் ஒன்றாக இருக்கவில்லை; இரண்டாவதாக, அது பொதுக் காரியங்களுக்காக, மக்களை இரத்த உறவுக் குழுக்களின் அடிப்படையில் அல்லாமல் பிரதேச அடிப்படையில், பொதுக் குடியிருப்புப் படி, பிரித்து வைத்தது. இதன் முக்கியத்துவத்தைப் பின்னர் பார்ப்போம்.

குல அமைப்பு சுரண்டப்படுகின்ற மக்களுக்கு உதவியளிக்க முடியாதபடியால் அவர்கள் உதித்துக் கொண்டிருந்த அரசின் பாதுகாப்பைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. சொலோன் நிர்வாக அமைப்பின் மூலம் அரசும் அவர்களுக்கு உதவி செய்தது. அதே சமயத்தில், பழைய அமைப்பைப் பாதிக்கின்ற வகையில் அது தன்னைப் பலப்படுத்திக் கொண்டது. சொலோன் கி.மு. 594இல் தனது சீர்திருத்தத்தை எப்படிக் கொண்டுவந்தார் என்பதைப் பற்றி இங்கே நமக்கு அக்கறையில்லை. சொலோன் சொத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் அரசியல் புரட்சிகள் என்று சொல்லப்படுகின்ற தொடர்வரிசையைத் துவக்கி வைத்தார். இதுவரை நடந்திருக்கின்ற புரட்சிகள் எல்லாமே ஒரு வகைச் சொத்தை எதிர்த்து இன்னொரு வகைச் சொத்துக்குப் பாதுகாப்பளிப்பதற்கு நடைபெற்றவையே. ஒரு வகைச் சொத்தை அழிக்காமல் அவை இன்னொரு வகைச் சொத்தைப் பாதுகாக்க முடியாது. மகத்தான பிரெஞ்சுப் புரட்சியில் முதலாளித்துவச் சொத்தைப் பாதுகாப்பதற்காக நிலப்பிரபுத்துவச் சொத்து பலியிடப்பட்டது. சொலோன் செய்த புரட்சியில் கடன் வாங்கியவர்களின் சொத்தின் நன்மைக்காக கடன் கொடுத்தவர்களின் சொத்து நஷ்டமடைய வேண்டியிருந்தது. கடன்கள் வெறுமனே ரத்து செய்யப்

பட்டன. துல்லியமான விவரங்கள் நமக்குத் தெரியாது. ஆனால் அடமானம் வைக்கப்பட்ட நிலங்களிலிருந்து அடமான அறிவிப்புக் கம்பங்களைத் தான் அகற்றியதாக வும் கடன் காரணமாக வெளியே விற்கப்பட்டவர்களும் ஓடிப் போனவர்களும் வீடு திரும்பச் செய்ததாகவும் சொலோன் தன்னுடைய கவிதைகளில் பெருமையுடன் கூறியிருக்கிறார். சொத்து உரிமைகளைப் பகிரங்கமாக மீறுவதன் மூலமாகத்தான் இதைச் செய்திருக்க முடியும். உண்மையிலேயே, முதலிலிருந்து கடைசிவரை, எல்லா அரசியல் புரட்சிகளும் என்று சொல்லப்படுவனவற்றின் குறிக்கோள் ஒரு வகைப்பட்ட சொத்தைப் பறிமுதல் செய்வதன் மூலம்—களவாடுவதன் மூலம் என்றும் கூற லாம்—பிறிதொரு வகைப்பட்ட சொத்தைப் பாதுகாப் பதேயாம். இப்படியாக, சொத்து உரிமைகளை மீறிக் கெடுப்பதன் மூலமாக மட்டுமே தனிச்சொத்தை 2,500 ஆண்டுகளாகப் பாதுகாக்க முடிந்தது என்பது முற்றிலும் உண்மையாகும்.

சுதந்திரமான அதீனியர்கள் மறுபடியும் அடிமை யாக்கப்படாமல் தடுப்பதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டியிருந்தது இது முதலில் பொது நடவடிக்கைக ளின் மூலம் சாதிக்கப்பட்டது: உதாரணமாக, கடன் வாங் கிய நபரை அடமானம் வைக்கின்ற ஒப்பந்தங்கள் தடை செய்யப்பட்டன. மேலும், ஒரு நபர் சொந்தமாக வைத்துக் கொள்ளக் கூடிய நிலத்துக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப் பட்டது. குறைந்தபட்சம், பிரபுக்கள் விவசாயிகளுடைய நிலங்களைக் கவர்வதைத் தடுப்பது இதன் நோக்கம். அதன் பிறகு அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்யப் பட்டன. அவற்றில் நமக்கு முக்கியமானவை பின்வரு மாறு:

ஒவ்வொரு இனக்குழுவிலிருந்தும் நூறுபேர் வீதம் கவுன்சில் உறுப்பினர்களின் எண்ணிக்கை நானூறுக்கு உயர்த்தப்பட்டது. ஆக, இன்னும் இனக்குழுவே அடிப் படையாக இருந்தது. ஆனால் இது ஒன்றுதான் பழைய அமைப்பிலிருந்து எடுத்துப் புதிய அரசியலமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்ட அம்சமாகும். மற்றபடி, சொலோன் சொந்த நிலம், சாகுபடி அளவு ஆகிய வற்றைக் கொண்டு, குடிமக்களை நான்கு வகுப்புகளாகப்

பிரித்தார். முதல் மூன்று வகுப்புகளுக்கும் குறைந்தபட்சச் சாகுபடி அளவு 500, 300, 150 மிதிம்னசுகள் (ஒரு மிதிம்னஸ் என்பது சுமார் 41 லிட்டர்கள்) தானியம் என்று சொலோன் நிர்ணயித்தார். அதை விடக் குறைந்த நிலம் உள்ளவர்களும் நிலமே இல்லாதவர்களும் நான்காவது வகுப்பைச் சேர்ந்தவர்கள். முதல் மூன்று வகுப்புகளின் உறுப்பினர்கள்தான் பதவி வகிக்க முடியும். உச்ச உயர் பதவிகள் முதல் வகுப்பினருக்கு அளிக்கப்பட்டன. மக்கள் சபையில் பேசுவதற்கும் வாக்களிப்பதற்கும் மட்டுமே நான்காம் வகுப்பினருக்கு உரிமையிருந்தது. ஆனால் இங்கே எல்லா அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இங்கே எல்லா அதிகாரிகளும் தமது செய்கைகளுக்கு பதிலளித்தாக வேண்டும்; எல்லாச் சட்டங்களும் இங்கே முடிவு செய்யப்பட்டன; இங்கு நான்காவது வகுப்புதான் பெரும்பான்மையாக இருந்தது. செல்வத்தின் பாற்பட்ட சலுகைகள் என்ற வடிவத்தில் பிரபுத்துவச் சலுகைகள் ஓரளவுக்குப் புதுப்பிக்கப்பட்டிருந்தன, ஆனால் தீர்மான கரமான அதிகாரம் மக்களிடம் இருந்தது. போர்ப் படைகளைத் திருத்தியமைப்பதற்கும் இந்த நான்கு வகுப்புகளே அடிப்படையாக இருந்தன. முதல் இரண்டு வகுப்புகளும் குதிரைப் படையைத் தந்தன; மூன்றாவது வகுப்பு கவசமணிந்த காலாட்படையைக் கொடுத்தது; நான்காவது வகுப்பு கவசமில்லாத சாதாரண காலாட்படையில் அல்லது கப்பற்படையில் பணி புரிந்தது. இவ்வகுப்பினருக்கு அநேகமாக ஊதியம் அளிக்கப்பட்டிருக்கலாம்.

இப்படியாக, நிர்வாக அமைப்பில் தனியுடைமை என்ற முற்றிலும் புதிய அம்சம் ஒன்று புகுத்தப்பட்டது. அவரவர் சொந்தமாக வைத்துள்ள நில அளவுக்குத் தகுந்தபடி குடிமக்களின் உரிமைகளும் கடமைகளும் தரவாரியாக அமைக்கப்பட்டன; உடைமை வர்க்கங்கள் செல்வாக்கு அதிகரித்த பொழுது பழைய இரத்த உறவுக் குழுக்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன, குல அமைப்பு மற்றொரு தோல்விக்கு உள்ளாயிற்று.

எனினும் சொத்துக்குத் தகுந்தபடி தரவாரியாக அரசியல் உரிமைகளைத் தருவது அரசின் இன்றியமையாத செயல் அல்ல. அரசு அமைப்பின் வரலாற்றில் அது முக்கியமாக இருந்திருக்கலாம், எனினும் பல அரசுகள், அதிலும்

அதிக முழுமையாக வளர்ச்சி பெற்றிருந்த அரசுகள் அது இல்லாமலே இயங்கின. ஏதன்சில் கூட அது தற்காலிகமான பாத்திரமே வகித்தது. அரிஸ்டிடிஸ் காலத்திலிருந்து எல்லாப் பதவிகளும் எல்லாக் குடிமக்களுக்கும் எட்டக் கூடியவையாக இருந்தன.

அடுத்த எண்பது ஆண்டுகளில் அதீனியச் சமூகம் ஒரு போக்கில் படிப்படியாகச் சென்றது; அதற்கடுத்த நூற்றாண்டுகளிலும் அதே போக்கில் சென்று அது மேலும் வளர்ச்சியடைந்தது. சொலோனுக்கு முந்திய காலப் பகுதியில் நிலத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்குவது மிதமிஞ்சி நடைபெற்றது. அது இப்பொழுது தடுக்கப் பட்டது. நிலச் சொத்து வரையறையின்றிக் குவிக்கப் பட்டிருந்ததும் தடுக்கப்பட்டது. வர்த்தகமும் அடிமை உழைப்பின் மூலம் மேன்மேலும் வளர்கின்ற கைத்தொழில் களும் கலைத் தொழில்களும் ஆதிக்கம் செலுத்துகின்ற தொழில்களாக மாறின. அறிவியக்கம் வளர்ச்சியடைந் தது. பழைய மிருகத்தனமான முறையில் தங்களுடைய சொந்தக் குடிமக்களைச் சுரண்டுவதற்குப் பதிலாக இப் பொழுது அதீனியர்கள் பிரதானமாக அடிமைகளையும் அதீனியர்களல்லாத வாடிக்கைக்காரர்களையும் சுரண்டி னார்கள். ஜங்கம சொத்துகள், பணம், அடிமைகள், கப்பல் கள் என்ற வடிவத்தில் செல்வம் மேன்மேலும் அதி கரித்தது. ஆனால் சில வரையறைகளோடிருந்த முதல் காலப் பகுதியில் நிலம் வாங்குவதற்குரிய சாதனமாக இருந்தது மாறி அதுவே ஓர் இலட்சியமாகி விட்டது. இது, ஒரு புறத்தில் புதிய, செல்வமிக்க, தொழில்துறை மற்றும் வர்த்தக வர்க்கம் பிரபுக்களின் பழைய அதிகாரத்துடன் வெற்றிகரமாகப் போட்டியிடுவதை உண்டாக்கி விட்டது. ஆனால், மறு புறத்தில், இது பழைய குல அமைப்புக்கு எஞ்சியிருந்த கடைசி ஆதாரத்தையும் பிடுங்கி விட்டது. குலங்கள், பிராட்ரிகள், இனக்குழுக்களின் உறுப்பினர் கள் இப்பொழுது ஆட்டிக்கா முழுவதிலும் சிதறிக் கிடந் தார்கள், ஒருவரோடொருவர் முற்றிலும் கலந்து விட் டிருந்தனர். எனவே அவை அரசியல் அமைப்புகள் என்ற முறையில் சிறிதும் பயன்படவில்லை. அதீனியக் குடிமக் களில் ஏராளமானவர்கள் எந்தக் குலத்தையும் சேர்ந் திருக்கவில்லை. அவர்கள் வெளியிலிருந்து வந்து குடிமக்

களாக சுவீகரித்துக் கொள்ளப்பட்டவர்கள், ஆனால் பழைய இரத்த உறவுமுறை அமைப்புகள் எதிலும் சுவீகரித்துக் கொள்ளப்படவில்லை. மேலும், பாதுகாப்பு மட்டுமே பெற்று வந்த அந்நியக் குடியேறிகளின்[24] எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் வகுப்புகளின் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரபுத்துவம் தனது முந்திய சலுகைகளைத் திரும்பப் பெறுவதற்கு முயன்றது; குறுகிய காலத்துக்குத் தன்னுடைய மேலாதிக்கத்தைத் திரும்பவும் பெற்றது. ஆனால் கிளிஸ்தேனிசின் புரட்சி (கி.மு. 509) அதை இறுதியாக வீழ்த்தியது. அத்துடன் குல அமைப்பின் கடைசி எச்சங்களும் வீழ்ச்சியடைந்தன.

கிளிஸ்தேனிஸ் தனது புதிய நிர்வாக அமைப்பில் குலங்களையும் பிராட்ரிகளையும் ஆதாரமாகக் கொண்டிருந்த பழைய நான்கு இனக்குழுக்களையும் புறக்கணித்தார். அவற்றினிடத்தில் முற்றிலும் புதிய ஒரு அமைப்பு வந்தது; ஏற்கெனவே நௌக்ராரிகளில் முயன்றிருந்தபடி குடிபுகுந்த இடத்துக்குத் தகுந்தபடி குடிமக்களைப் பிரிப்பதை அது முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இப்பொழுது நிர்ணயிக்கின்ற அம்சமாக இருந்தது இரத்த உறவுமுறை அமைப்பில் அங்கமல்ல, குடிபுகுந்த இடமே; இப்பொழுது பிரிக்கப்பட்டது மக்களல்ல, பிரதேசமே; அரசியல் ரீதியில் மக்கள்தொகை பிரதேசத்தின் இணைப்பாகம் ஆகி விட்டது.

ஆட்டிக்கா முழுவதும் சுயாட்சியுள்ள நூறு சமுதாயப் பிரதேசங்கள் அல்லது டேம்களாகப் பிரிக்கப்பட்டது. ஒரு டேமிலுள்ள குடிமக்கள் (டேமாட்டுகள்) தமது அதிகார பூர்வமான தலைவனையும் (டேமார்ஹ்) பொருளாளரையும் முப்பது நீதிபதிகளையும் தேர்ந்தெடுத்தார்கள்; அந்த நீதிபதிகள் சில்லறை விவகாரங்களை முடிவு செய்கின்ற அதிகாரத்தைக் கொண்டிருந்தார்கள். டேமின் குடிமக்களுக்குத் தனிக் கோவில், காவல் தேவதை இருந்தது அல்லது மாவீரன் இருந்தான். அவர்களே பூசாரிகளையும் தேர்ந்தெடுத்தார்கள். டேமில் தலைமையான அதிகாரம் டேமாட்டுகளின் மன்றத்திடம் இருந்தது. இது சுயாட்சியுள்ள அமெரிக்க நகரக் கூட்டுச் சமூகத்தின் முன்மாதிரி என்று மார்கன் சரியாகக் குறிப்பிடுகிறார். உச்ச வளர்ச்சி

பெற்ற நவீன அரசு எந்த அலகுடன் முடிகிறதோ அதே அலகுடன் ஏதன்சில் உதித்துக் கொண்டிருந்த அரசு தொடங்கியது.

ஒரு இனக்குழுவில் இப்படிப்பட்ட பத்து அலகுகள் (டேம்கள்) இருந்தன. பழைய குல இனக்குழுவிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இது ஸ்தல இனக்குழு என்று இப்பொழுது சொல்லப்பட்டது. ஸ்தல இனக்குழு என்பது சுயாட்சியுள்ள அரசியல் நிறுவனம் மட்டுமன்றி, ஒரு இராணுவ அமைப்புமாகும். அது ஒரு பிலார்ஹை, அதாவது இனக்குழுவின் தலைவனைத் தேர்ந்தெடுத்தது, அவன் குதிரைப் படைகளுக்குத் தலைமை தாங்கினான்; மேலும், அது காலாட்படைகளுக்குத் தலைமை தாங்குவதற்கு ஒரு டாக்ஸியார்ஹையும் இனக்குழுப் பிரதேசத்தில் திரட்டப்பட்ட படை முழுவதற்கும் தலைமை வகித்த ஸ்டிரடேகசையும் தேர்ந்தெடுத்தது. மேலும், அது ஐந்து யுத்தக் கப்பல்களையும் ஆட்களையும் தளபதியையும் கொடுத்தது; அது ஓர் ஆட்டிக்கா மாவீரனையும் தனது காவல் தெய்வமாகப் பெற்றுக் கொண்டது, அந்த மாவீரன் பெயரையே அது தாங்கியிருந்தது. கடைசியாக, அது ஏதன்ஸ் கவுன்சிலுக்கு ஐம்பது பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்தது.

இவை எல்லாவற்றின் முடிவுநிலையாக அதீனிய அரசு இருந்தது. பத்து இனக்குழுக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்நூறு நபர்களைக் கொண்ட கவுன்சிலாலும், கடைசிக் கட்டத்தில் மக்கள் சபையாலும் அது நடத்தப்பட்டது. ஒவ்வொரு குடிமகனும் அந்த சபையில் கலந்து கொண்டு வாக்களிக்க முடியும். அத்துடன், அர்ஹன்களும் இதர அதிகாரிகளும் வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகளையும் நீதிமன்றங்களையும் கவனித்துக் கொண்டார்கள். ஏதன்சில் தனித்தலைமையான நிர்வாக அதிகாரி எவருமே கிடையாது.

இந்தப் புதிய நிர்வாக அமைப்பின் மூலமாகவும் பகுதியளவுக்கு அந்நியக் குடியேறிகளையும் பகுதியளவுக்கு விடுவிக்கப்பட்ட அடிமைகளையும் கொண்டும் பாதுகாப்பு பெற்று வந்தவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டும் குல அமைப்பின் உறுப்புகள் பொது விவகாரங்களிலிருந்து நீக்கப்பட்டன. அவை தனிப்பட்ட சங்

கங்கள், மதச் சங்கங்கள் என்ற நிலைக்கு இறங்கி விட்டன. ஆனால் அவற்றின் தார்மிக செல்வாக்கும் பழைய குல அமைப்பின் காலத்தைச் சேர்ந்த மரபுவழிக் கருத்துகளும் அபிப்பிராயங்களும் நெடுங்காலம் நீடித்திருந்த பிறகு, படிப்படியாகத்தான் மறைந்தன. பிற்காலத்தில் ஏற்பட்ட அரசு அமைப்பில் இது நன்கு தெரிய வந்தது.

மக்கள் திரளினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்கின்ற சமூக அதிகாரமே அரசின் அடிப்படையான குணாம்சம் என்று நாம் பார்த்தோம். அக்காலத்திய ஏதன்சில் ஒரு மக்கள் படையும் மக்களால் நேரடியாக ஆட்களும் சாதனங்களும் அளிக்கப்பட்ட கப்பற்படையும் தான் இருந்தன. வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து பாது காப்பதற்கும் மக்கள்தொகையில் ஏற்கெனவே அதிகப் பெரும்பான்மையாகி விட்டிருந்த அடிமைகளைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் இவ்விரண்டும் பயன் பட்டன. குடிமக்களைப் பொறுத்தமட்டில், சமூக அதி காரம் முதலில் ஒரு போலீஸ் படை என்ற வடிவத்தில் மட்டுமே இருந்தது. அரசு தோன்றிய காலத்திலிருந்து போலீஸ் படை இருந்து வந்ததனால்தான் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பாவி பிரெஞ்சுக்காரர்கள் நாகரிகமடைந்த தேசங்கள் என்று கூறுவதற்கு பதிலாக போலீஸ் தேசங்கள் (nations policées)* என்று கூறினார்கள். இப்படியாக, அதீனியர்கள் தமது அரசுடன் ஒரு போலீஸ் படையையும் நிறுவினார்கள். இது வில்லும் அம்பும் தாங்கிய காலாட்படையினரையும் குதிரைப் படையினரையும் கொண்ட போலீஸ் படை ஆகும். தெற்கு ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லாந்திலும் இவர்களை Landjäger என்று கூறுகிறார்கள். இந்தப் போலீஸ் படையில் இருந்தவர்கள் அடிமைகளே. இந்தப் போலீஸ் வேலையை சுதந்திரமான அதீனியர் மிகவும் தகுதிக்குறைவானதாகக் கருதினார்; ஆயுதமேந்திய அடிமை என்னைக் கைது செய்தால் கூடப் பரவாயில்லை, ஆனால் நான் இந்தக் கேவலமான வேலையைச் செய்ய மாட்டேன் என்று நினைக்கின்ற அளவுக்குச் சென்றார். இது பண்டைய குல வகைப்பட்ட

* இது சிலேடையாகும்: policé என்னும் பிரெஞ்சுச் சொல் ''நாகரிகமடைந்த'' என்பதையும் police என்னும் சொல் ''போலீஸ்'' என்பதையும் குறிக்கின்றன.—ப-ர்.

மனப்பான்மையின் ஒரு வெளியீடாகும். போலீஸ் படை இல்லாமல் ஒரு அரசு இருக்க முடியாது. ஆனால் அது இன்னும் பிஞ்சுப் பருவத்தில் இருந்தது; பழைய குல உறுப்பினர்களுக்கு மதிப்புக் குறைவானதாகத் தோன்றிய ஒரு தொழிலுக்குப் பெருமை தேடித் தருகின்ற அளவுக்குப் போதிய தார்மிக செல்வாக்கை அந்த அரசு பெற்றிருக்க வில்லை.

பிரதான உருவரைகளில் முழுமை பெற்ற இந்த அரசு அதீனியர்களுடைய புதிய சமூக நிலைமையுடன் எவ்வளவு நன்றாகப் பொருந்தியிருந்தது என்பது செல்வமும் வர்த்தகமும் தொழில்துறையும் விரைவாக வளர்ச்சியடைந்ததிலிருந்து புலனாயிற்று. சமூக, அரசியல் அமைப்புகள் ஆதாரப்பட்டிருந்த வர்க்கப் பகை முரண்பாடு இப்பொழுது பிரபுக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையில் ஏற்படவில்லை; அது அடிமைகளுக்கும் சுதந்திரமான மனிதர்களுக்கும், பாதுகாப்பு பெற்று வந்தவர்களுக்கும் முழு உரிமையுள்ள குடிமக்களுக்கும் இடையில்தான் ஏற்பட்டிருந்தது. ஏதன்ஸ் சுபிட்சத்தின் உச்ச நிலையில் இருந்த பொழுது பெண்கள், குழந்தைகள் உட்பட சுதந்திரமான அதீனியர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 90,000 தான்; இரு பாலாருமடங்கிய அடிமைகளின் தொகை 3,65,000; மற்றும் பாதுகாப்பு பெற்று வந்தவர்கள்—அதாவது அந்நியக் குடியேறிகளும் விடுதலை செய்யப்பட்ட அடிமைகளும்—45,000. ஆக, வயதுவந்த ஒவ்வொரு ஆண் குடிமகனுக்கும் குறைந்தபட்சம் 18 அடிமைகளும் இரண்டு பாதுகாப்பு பெற்று வந்தவர்களும் இருந்தார்கள். அடிமைகளில் பலர் பெரிய கூடங்களைக் கொண்ட தொழில் பட்டறைகளில் மேற்பார்வையாளர்களின் கீழ் ஒன்றாக வேலை செய்தார்கள்; அவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்ததை இது விளக்கும். வர்த்தகமும் தொழில்துறையும் வளர்ச்சியடைந்த பொழுது சிலரிடம் செல்வம் திரண்டு குவிவதும் நடந்தது; சுதந்திரமான குடிமக்கள் பெருந்திரளாக ஏழ்மையடைந்தார்கள். அவர்கள் கைத்தொழில்களில் ஈடுபட்டு அடிமையுழைப்புடன் போட்டி போட வேண்டும், இல்லையேல் பஞ்சைகளாக வேண்டும். மேற்கூறிய இரண்டில் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். கைத்தொழிலில் ஈடுபட்டு

அடிமையுழைப்புடன் போட்டி போடுவது கேவலமாக, இழிவாகக் கருதப்பட்டது; மேலும், அதில் வெற்றி பெறுவது அரிதே. அன்றைக்கிருந்த சந்தர்ப்பங்களில் பஞ்சைகளாவதுதான் நடைபெற்றது. அவர்கள் பெரும்பான்மையினர் என்பதால் தாங்கள் வீழ்ச்சியடைந்த பொழுது அதீனிய அரசையும் கீழே இழுத்து விட்டார்கள். அரசர்களுக்கு முன்னால் கெஞ்சிக் குழைகின்ற ஐரோப்பியப் பள்ளியாசிரியர்கள் நம்மை நம்பச் செய்வதற்கு விரும்புவதைப் போல ஏதன்ஸ் ஜனநாயகத்தினால் வீழ்ச்சியடையவில்லை. அது சுதந்திரமான மனிதனுடைய உழைப்பைக் கேவலப்படுத்திய அடிமைமுறையினால்தான் வீழ்ச்சியடைந்தது.

அதீனியர்களிடையில் அரசு எழுந்தது பொதுவாக அரசு நிர்மாணத்துக்குக் குறியடையாளமான உதாரணமாக இருக்கிறது. ஏனென்றால், ஒரு பக்கத்தில், அது தூய்மையான வடிவத்தில் நடைபெற்றது, வெளிநாட்டு, உள்நாட்டு பலாத்காரம் குறுக்கிடாமல் அது நடைபெற்றது (பிஸிஸ்டிராடஸ் ஆட்சியைக் கைப்பற்றியது குறுகிய காலத்துக்கே, அதன் பிறகு அது எந்தச் சுவடுமில்லாமல் மறைந்து விட்டது); ஏனென்றால், மறுபக்கத்தில், அது அரசின் மிகவும் வளர்ச்சியடைந்த வடிவத்தை, ஜனநாயகக் குடியரசைப் பிரதிநிதித்துவம் செய்தது, அந்த அரசு குல சமுதாயத்திலிருந்து நேரடியாக வெளிவந்தது; கடைசியாக, ஏனென்றால், முக்கியமான எல்லா விவரங்களும் போதுமான அளவில் நமக்குத் தெரிந்திருக்கின்றன.

# VI

## ரோமாபுரியில் குலமும் அரசும்

ரோமாபுரி நிறுவப்பட்டதைப் பற்றிய கட்டுக்கதை யின்படி, பல லத்தீன் குலங்கள் (100 குலங்கள் என்று கட்டுக்கதை கூறுகிறது) ஒரு இனக்குழுவாக ஒன்றுசேர்ந்து முதன்முதலாகக் குடிபுகுந்தன. நூறு குலங்களைக் கொண் டிருந்ததாகச் சொல்லப்பட்ட ஒரு சபேல்லியன் இனக்குழு வும் விரைவில் அங்கே குடிபுகுந்தது; கடைசியில் நூறு குலங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்ட, பலவிதமான அம்சங்களைக் கொண்ட மூன்றாவது இனக்குழுவும் வந்து அவற்றுடன் சேர்ந்து கொண்டது. இங்கே குலம் ஒன்றைத் தவிர மற்றவை அனைத்துமே இயற்கைப் பொருட்கள் அல்ல, சில சந்தர்ப்பங்களில் குலமும் கூடப் பழைய இருப் பிடத்திலிருந்து வந்த தாய்க் குலத்தின் ஒரு கிளையே என்பவற்றை இக்கதை முதல் பார்வையிலேயே வெளிப் படுத்துகிறது. செயற்கையாக அமைக்கப்பட்ட அடை யாளங்களை இந்த இனக்குழுக்கள் தாங்கியுள்ளன; எனி னும் அவை பெரும்பாலும் இரத்த உறவு உள்ளவர்களைக் கொண்டவையாக இருந்தன; மேலும், செயற்கையாக அமைக்கப்படாமல், இயற்கையாக வளர்ந்த பண்டைய இனக்குழுவின் மாதிரியிலிருந்து அவை அமைக்கப்பட்டன. மேலும், இந்த மூன்று இனக்குழுக்களில் ஒவ்வொன்றுக்கும் ஓர் உண்மையான, பழைய இனக்குழு மூலக்கருவாக இருந்திருப்பதும் சாத்தியமே. இணைக்கின்ற கண்ணி யாகிய பிராட்ரியில் பத்து குலங்கள் அடங்கியிருந்தன. அந்த பிராட்ரி குரியா என்று அழைக்கப்பட்டது, ஆகவே மொத்தம் அவற்றின் எண்ணிக்கை 30 ஆகும்.

ரோமானியக் குலம் என்ற அமைப்பும் கிரேக்க குலம் என்பதும் ஒன்றேயென்பது அங்கீகரிக்கப்பட்ட உண்மை.

அமெரிக்க செவ்விந்தியர்களிடம் காணப்படுகின்ற புராதன வடிவத்தைத் தாங்குகின்ற சமுதாய அலகிலிருந்து அதன் தொடர்ச்சியாக வெளிவந்ததே கிரேக்க குலம் என்று கூறினால், அது ரோமானியக் குலத்துக்கும் பொருந்தும். எனவே அதைப் பற்றி விவரிப்பதை நாம் சுருக்கிக் கொள்ளலாம்.

குறைந்தபட்சம் ரோமாபுரியின் ஆதிகாலத்தில் ரோமானியக் குலத்துக்குப் பின்வரும் அமைப்பு இருந்தது:

1. மரணமடைந்து விட்ட குல உறுப்பினர்களின் சொத்தைப் பரஸ்பரம் சுவீகாரம் செய்து கொள்ளும் உரிமை; சொத்து குலத்துக்குள்ளேயே இருந்தது. கிரேக்க குலத்தில் இருந்த மாதிரியே ரோமானியக் குலத்தில் தந்தையுரிமை ஏற்கெனவே அமுலில் இருந்ததால் பெண் மரபு வழியில் வந்த குழந்தைகள் வாரிசுரிமையைப் பெறுவதிலிருந்து விலக்கப்பட்டனர். நாமறிந்த மட்டில் எழுதப்பட்ட ரோமானியச் சட்டங்களிலேயே மிகப் பழமையான பன்னிரண்டு பட்டியல்கள் என்னும் சட்டங்களின்படி[25] சொந்தக் குழந்தைகள்தான் சொத்துக்கு முதல் வாரிசாக உரிமையைப் பெற்றார்கள்; சொந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால், அக்னேட்டுகள் (அதாவது, ஆண் மரபு வழியைச் சேர்ந்த இரத்த உறவினர்கள்) அவர்கள் இடத்துக்கு வந்தனர். அவர்களும் இல்லாவிட்டால், குல உறுப்பினர்கள் வாரிசுகளாயினர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சொத்து குலத்துக்குள்ளேயே இருந்தது. செல்வப் பெருக்கம், ஒருதார மணம் ஆகியவற்றால் படைக்கப்பட்ட புதிய சட்ட வரையளவுகள் குலத்தின் செயல்முறையில் படிப்படியாக ஊடுருவுவதை இங்கு நாம் பார்க்கிறோம். ஆதியில் குலத்தின் உறுப்பினர்களுக்கு இருந்த சம வாரிசுரிமை நடைமுறையில், முன்னே கூறியபடி அநேகமாக நெடுங்காலத்துக்கு முன்பே, அக்னேட்டுகளோடு முதலில் குறுக்கப்பட்டு, பிறகு குழந்தைகளுக்கும் ஆண் மரபு வழியில் வந்த அவர்களுடைய சந்ததியினருக்குமாகக் குறுக்கப்பட்டது. பன்னிரண்டு பட்டியல்களில் இது தலைகீழ் வரிசையில் தரப்படுகிறது என்பது உண்மையே.

2. ஒரு பொது இடுகாடு வைத்திருத்தல். கிளாடியா என்ற பட்ரீஷியக் குலம் ரெகில்லியிலிருந்து வந்து ரோமாபுரியில் குடிபுகுந்த பொழுது சிறிய நிலப் பகுதியையும்

நகரத்தில் ஒரு பொது இடுகாட்டையும் பெற்றது. அகஸ்டசின் காலத்தில் கூட டியூடபர்க் காட்டில் வீழ்ச்சியடைந்த வாரசின் தலை ரோமாபுரிக்குக் கொண்டுவரப்பட்டு gentilitius tumulusஇல்* அடக்கம் செய்யப்பட்டது. எனவே அவனுடைய குலத்துக்கு (குவின்டிலியா குலத்துக்கு) சொந்தமாக ஒரு இடுகாடு இருந்தது.

3. பொதுவான மத விழாக்கள். இந்த sacra gentilitia** பிரசித்தமானவை.

4. குலத்துக்குள்ளாகத் திருமணம் செய்யக் கூடாது என்ற தடை. ரோமாபுரியில் இது எழுத்து வடிவிலான சட்டமாக எக்காலத்திலும் இருந்ததாகத் தோன்றவில்லை. எனினும் அந்த வழக்கம் இருந்தது. நம் காலத்துக்கு எட்டியிருக்கின்ற எண்ணற்ற ரோமானிய தம்பதிகளின் பெயர்களில் ஒன்றிலாவது கணவனுக்கும் மனைவிக்கும் ஒரே குலப் பெயர் இருக்கவில்லை. வாரிசுச் சட்டமும் இந்த விதியை நிருபிக்கிறது. திருமணத்தின் மூலம் ஒரு பெண் தனது அக்னேட் உரிமைகளை இழக்கிறாள், தனது குலத்தை விட்டுப் போய் விடுகிறாள். அவளோ, அவளுடைய குழந்தைகளோ அவளது தகப்பனாரின் சொத்துக்கு வாரிசாக முடியாது, தகப்பனாரின் சகோதரர்களின் சொத்துக்கும் வாரிசாக முடியாது; அப்படியில்லாவிட்டால், தகப்பனாரின் குலம் அந்தச் சொத்தை இழந்து விடும். ஒரு பெண் தனது சொந்த குலத்தைச் சேர்ந்த நபரைத் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்ற ஊகம் ஒன்றுதான் இந்த விதிக்கு அர்த்தத்தைத் தருகிறது.

5. நிலத்தைப் பொதுவாக வைத்திருத்தல். ஆதிகாலத்தில்,இனக்குழுப் பிரதேசம் முதலில் பிரிக்கப்பட்டதிலிருந்து இப்படித்தான் இருந்தது. லத்தீன் இனக்குழுக்களுக்கு இடையில் நிலத்தில் ஒரு பகுதி இனக்குழுவிடமும் ஒரு பகுதி குலத்திடமும் ஒரு பகுதி அன்று தனிப்பட்ட குடும்பங்களாக அநேகமாக இருக்க முடியாத குடும்பங்களிடமும் உடைமையாக இருந்தது. ரோமுலஸ் என்பவர்தான் முதலில் தனிநபர்களுக்கு நிலத்தை வழங்கினார் என்று

* —குல இடுகாட்டில்.—ப-ர்.

** —குலத்தின் புனித விழாக்கள்.—ப-ர்.

கூறப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் சுமார் ஒரு ஹெக்டேர் (இரண்டு யூகரா) நிலம் தரப்பட்டது. எப்படியிருப்பினும், அதற்குப் பின்னாலும் குலங்களின் உடைமையில் நிலம் இன்னும் இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். அரசு நிலங்களைப் பற்றி இங்கே சொல்வது அவசியமல்ல; குடியரசின் உள்நாட்டு வரலாறு முழுவதுமே அவற்றைச் சுற்றிச் சுழன்றது.

6. ஆபத்துக்களின் போது உதவி செய்வதும் பாதுகாப்பு அளிப்பதும் குல உறுப்பினர்களின் பரஸ்பரக் கடமையாகும். இதன் அற்பமான எச்சங்களைத்தான் ஏடறிந்த வரலாறு பதிவு செய்திருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே ரோமானிய அரசு மிகவும் தலைமையான பலத்தைக் கொண்டிருந்ததனால் ஆபத்துக்களின் போது உதவியளிக்கின்ற கடமை அதற்கு ஏற்பட்டது. அப்பியஸ் கிளாடியஸ் கைது செய்யப்பட்ட பொழுது சொந்த விரோதிகள் உட்பட அவனது குலம் முழுவதுமே துக்கத்திலாழ்ந்தது. இரண்டாவது பூனிக் யுத்தத்தின்[26] போது கைது செய்யப்பட்ட குல உறுப்பினர்களைப் பணம் கொடுத்து விடுவிப்பதற்கு அந்தக் குலங்கள் எல்லாம் ஒன்றுபட்டன. இதைச் செய்யக் கூடாது என்று செனெட் தடை செய்திருந்தது.

7. குலப் பெயரைத் தாங்குவதற்கு உரிமை. சக்கரவர்த்திகள் ஏற்படுகின்ற காலம் வரை இது அமுலிலிருந்தது. விடுதலை செய்யப்பட்ட அடிமைகள் தமது முந்திய எசமானர்களின் குலப் பெயர்களைத் தாங்களும் வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். எனினும் அவர்களுக்கு அந்தக் குலத்தின் உரிமைகள் தரப்படவில்லை.

8. குலத்திற்குள் அந்நியர்களை சுவீகரித்துக் கொள்வதற்கு உரிமை. ஒரு குடும்பத்தில் சுவீகரித்துக் கொள்வதின் மூலம் இது செய்யப்பட்டு, (செவ்விந்தியர்கள் மத்தியில் இருப்பதைப் போல) அப்படியே குலத்துக்குள் சுவீகரித்துக் கொள்வதில் முடிந்தது.

9. தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவோ, பதவியிலிருந்து நீக்கவோ உரிமை இருப்பதாக எங்குமே கூறப்படவில்லை. எனினும் ரோமாபுரியின் முதல் காலப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அரசனிலிருந்து கீழாக, எல்லாப் பதவிகளும் தேர்தல் அல்லது நியமனத்தின்

மூலம் நிரப்பப்பட்டதனாலும் குரியாக்கள் தமது புரோகி தர்களைத் தேர்ந்தெடுத்ததினாலும் குலத் தலைவர் கள் (principes) விஷயத்திலும் தேர்தல் முறை இருந்தது என்று நாம் ஊகிப்பதற்கு நியாயமுண்டு. ஒரே குடும்பத்தி லிருந்து வேட்பாளர்களைப் பொறுக்குவது என்ற விதி ஏற்கெனவே எவ்வளவுதான் நன்கு நிலைநாட்டப்பட் டிருந்தாலும் பரவாயில்லை.

ரோமானியக் குலத்தின் உரிமைகளும் கடமைகளும் இப்படித்தான் இருந்தன. தந்தையுரிமைக்கு முழுமையாக மாறியது என்ற ஒரு விதிவிலக்கைத் தவிர, அவை இரா கோஸ் குலத்தின் உரிமைகள், கடமைகளை அப்படியே பிரதிபலிக்கும் உண்மையான பிம்பமாகும். இங்கும் ''இரா கோசை தவறுக்கிடமின்றிக் கண்டுபிடிக்க முடியும்.''

ரோமானியக் குல அமைப்பைப் பற்றி நமது மிகப் பிரசித்தி பெற்ற வரலாற்றாசிரியர்களிடையேயும் கூட இன்னும் குழப்பமிருப்பதைப் பின்வரும் உதாரணம் காட்டுகிறது. குடியரசு காலத்திலும் அகஸ்டஸ் காலத் திலும் இருந்த ரோமானியப் பெயர்களைப் பற்றிய ஆராய்ச்சி நூலில் (ரோமானிய ஆராய்ச்சிகள், பெர்லின், 1864, தொகுதி 1) மொம்ஸென் பின்வருமாறு எழுதுகிறார்:

''குலத்தால் சுவீகரிக்கப்பட்ட நபர்களும் அதன் பாது காப்பு பெற்று வந்த நபர்களும் உட்பட—ஆனால் அடிமை கள் விலக்கப்பட்டிருந்தனர்—குலத்தின் எல்லா ஆண் உறுப்பினர்களும் குலப்பெயரைத் தாங்கியிருப்பதுடன் பெண்களும் அந்தப் பெயரை வைத்துக் கொண்டுள்ள னர்.... இனக்குழு'' [Stamm] (மொம்ஸென் gens என்னும் சொல்லை இப்படி மொழிபெயர்க்கிறார்) ''என்பது... ஒரு பொதுவான—மெய்யான, ஊகிக்கப்பட்ட அல்லது புனைந்து உருவாக்கப்பட்ட கூட—முன்னோரிடமிருந்து பெறப்பட்ட ஒரு சமூகம். அது பொதுவான சடங்குகள், இடுகாடுகள், வாரிசுரிமை ஆகியவற்றால் ஒன்றுசேர்க்கப் பட்டுள்ளது. தம்மளவில் சுதந்திரமானவர்களான எல்லாத் தனிநபர்களும், ஆகவே பெண்களும் அச்சமூகத்தில் பதிவு செய்யப்படலாம், பதிவு செய்யப்பட வேண்டும். திருமணமான பெண்ணின் குலப் பெயரை நிர்ணயிப்பது மட்டும் சற்றுக் கஷ்டமானது, தமது சொந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரையும் மணம் புரியக் கூடாது என்று தடுக்கப்பட்டு வந்த வரையிலும் இந்தக் கஷ்டம் இருக்கவில்லை; மேலும், நெடுங்காலம் வரை

குலத்துக்கு உள்ளே மணம் புரிவதை விட வெளியே மணம் புரிவது பெண்களுக்கு அதிகக் கஷ்டமாக இருந்தது என்பது வெளிப்படையாகும். இந்த உரிமை, குலத்துக்கு வெளியே மணம் புரியும் உரிமை (gentis enuptio) ஒரு தனிப் பட்ட சலுகையாகவும் பரிசாகவும் 6ஆம் நூற்றாண்டிலேயே வழங்கப்பட்டது.... ஆனால், எங்கெல்லாம் இப்படி வெளியில் மணம் நடந்ததோ, அங்கெல்லாம் ஆதி காலத்தில் பெண்கள் தமது கணவர்களின் இனக்குழுவுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். பண்டைக்கால மத வகைப் பட்ட திருமணத்தின் மூலம் பெண் தனது கணவனின் சட்ட பூர்வமான, சடங்கு முறையுள்ள சமூகத்தில் முழுமையாகச் சேர்ந்து தனது சமூகத்தை விட்டு விலகினாள். இதைப் போன்று நிச்சயமானது வேறொன்றுமில்லை. மணமான பெண் தனது குல உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் செயல்பூர்வமான மற்றும் செயலற்றதான வாரிசு உரிமைகளை இழக்கிறாள், ஆனால் தன் கணவனின், தன் குழந்தைகளின், அவனுடைய குல உறுப்பினர்களின் வாரிசுக் குழுவினுள் நுழைகிறாள் என்பது யாருக்குத் தான் தெரியாது? மேலும், கணவன் அவளைத் தனது குழந்தையைப் போல சுவீகரித்து தன் குடும்பத்துக்குள் கொண்டுவந்தால், அவனுடைய குலத்திலிருந்து அவள் எப்படிப் பிரிந்திருக்க முடியும்?'' (பக்கங்கள் 8—11.)

இப்படி, ஒரு குறிப்பிட்ட குலத்தைச் சேர்ந்த ரோமானியப் பெண்கள் ஆதியில் தமது குலத்திற்கு உள்ளாக மட்டும் மணம் புரிய உரிமை பெற்றிருந்தனர் என்று மொம்ஸென் வலியுறுத்துகிறார்; ஆகவே ரோமானியக் குலம் அகமண முறைக் குலமேயாகும், புறமண முறைக் குலமல்ல என்பது அவருடைய கருத்து. இக்கருத்து மற்ற மக்களினங்கள் எல்லாவற்றின் அனுபவத்துக்கும் முரண்பட்டிருக்கிறது; அது லிவி என்பவர் எழுதிய நூலின் (நூல் 39, அத்தியாயம் 19) சர்ச்சைக்கிடமான ஒரு பகுதியை—அந்த ஒரு பகுதியை மட்டுமே என்று சொல்லாவிட்டாலும் கூட—பிரதானமாக ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியின்படி, ரோமாபுரி நிறுவப்பட்டு 568 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது கி. மு. 186இல் செனெட் பின்வருமாறு உத்தரவிட்டது:

"uti Feceniae Hispallae datio, deminutio, gentis enuptio, tutoris optio item esset; quasi ei vir testamento dedisset; utique ei ingenuo nubere liceret, neu quid ei qui eam duxisset, ob id fraudi

ignominiaeve esset"—''ஃபெஸெனியா ஹிஸ்பால்லாவுக்கு தனது சொத்தை முடிவு செய்ய உரிமையுண்டு, அதைக் குறைக்க உரிமையுண்டு, குலத்துக்கு வெளியே மணம் புரிய உரிமையுண்டு, ஒரு பாதுகாப்பாளரைப் பொறுக்கிக் கொள்ள உரிமையுண்டு. தனது'' (மரணமடைந்த) ''கணவன் உயிலின் மூலமாக இந்த உரிமையைக் கொடுத்திருப்பதைப் போல அவள் இப்படி நடந்து கொள்ளலாம். அவள் ஒரு சுதந்திரமான நபரை மணம் புரிவதற்கு அனுமதிக்கப்படுவாள்; மேலும், அவளை மணம் புரியும் ஆணுக்கு இதனால் கெட்ட நடத்தைப் பழியும் அவப்பெயரும் சேராது.''

இங்கே விடுதலையடைந்த அடிமையான ஃபெஸெனியா குலத்துக்கு வெளியே மணம் புரிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டாள் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இதன்படி, அவளுடைய கணவன் தன்னுடைய மரணத்துக்குப் பிறகு குலத்துக்கு வெளியே மணம் புரிந்து கொள்வதற்கான உரிமையை உயிலின் மூலம் அவளுக்கு வழங்க உரிமையுள்ளவன் என்பதும் அதைப் போல சந்தேகத்திற்கிடமில்லாததாகும். ஆனால் எந்தக் குலத்துக்கு வெளியே?

மொம்ஸென் ஊகிக்கின்றபடி, ஒரு பெண் தனது குலத்துக்குள்ளேதான் மணம் புரிந்தாக வேண்டுமென்றால், மணமான பிறகு அவள் இந்த குலத்துக்குள்ளேயே தங்கினாள் என்றாகும். ஆனால் முதலாவதாக, அது ஒரு அகமண முறைக் குலம் என்ற வாதம் நிரூபிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, அந்தப் பெண் குலத்துக்குள்ளேதான் மணம் புரிய வேண்டுமென்றால், ஆணும் அதே மாதிரி செய்ய வேண்டியவனே. இல்லாவிட்டால், அவனுக்கு என்றைக்கும் மனைவி கிடைக்க மாட்டாள். தனக்கே இல்லாத, தன்னாலேயே அனுபவிக்கப் பெறாத ஓர்உரிமையை ஆண் உயிலின் மூலம் தன்னுடைய மனைவிக்குத் தர முடியும் என்ற நிலையை அடைகிறோம்; இது சட்ட ரீதியில் அபத்தமாகும். மொம்ஸென் இதை உணர்ந்து பின்வருமாறு ஊகிக்கிறார்:

''குலத்துக்கு வெளியே மணம் செய்து கொள்வதற்கு ஆட்சியில் இருக்கின்ற நபரின் ஒப்புதல் மட்டுமன்றி, குலத்தின் எல்லா உறுப்பினர்களின் ஒப்புதலையும் பெற வேண்டுமென்று சட்டம் அநேகமாகக் கோரியிருக்கும்'' (பக்கம் 10, குறிப்பு).

முதலாவதாக, இது மிகவும் துணிவான ஊகம்; இரண்டாவதாக, நூல் பகுதியின் தெளிவான வாசகத்துக்கு இது முரணாகும். கணவனுக்கு பதிலாக செனெட் அவளுக்கு இந்த உரிமையை வழங்குகிறது; கணவன் கொடுக்க முடிந்திருப்பதைக் காட்டிலும் கூடுதலாகவோ, குறைவாகவோ அது ஒன்றும் வழங்கவில்லை. ஆனால் அது ஒரு பரிபூரண உரிமையைத் தருகிறது. அதில் நிபந்தனைகள் எதுவும் கிடையாது. எனவே அவள் இந்த உரிமையைப் பயன்படுத்துவதனால் அவளுடைய புதிய கணவன் பாதிக்கப்படக் கூடாது. இந்த உரிமையை அவள் பயன்படுத்துவதனால் அவளுக்கு எத்தகைய தொல்லையும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நிகழ்கால, எதிர்கால கான்சல்களுக்கும் பிரேட்டர்களுக்கும் செனெட் உத்தரவு கூடப் போடுகிறது. ஆகவே மொம்ஸெனின் ஊகம் முற்றிலும் தவறு என்று தோன்றுகிறது.

மேலும், ஒரு பெண் மற்றொரு குலத்தைச் சேர்ந்த ஆணை மணந்தாள் என்றும் ஆனால் அவள் தன் குலத்துக்குள்ளேயே தங்கி விட்டாள் என்றும் வைத்துக் கொள்வோம். மேலே காட்டிய மேற்கோளின்படி, அப்பொழுது அவள் தன் சொந்த குலத்துக்கு வெளியே மணப்பதை அவளுடைய கணவன் அனுமதிக்கும் உரிமை பெற்றவனாகிறான்; அதாவது, தான் சேராத ஒரு குலத்தின் விவகாரங்கள் குறித்து ஏற்பாடுகள் செய்வதற்கு அவனுக்கு உரிமையுண்டு. இது முற்றிலும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதிருப்பதால் இதைப் பற்றி நாம் மேலும் எழுதுவது அவசியமில்லை.

அந்தப் பெண் முதலில் இன்னொரு குலத்தைச் சேர்ந்த ஒரு ஆணை மணந்தாள்; அதன் காரணமாக வேறு சிக்கலெதுவுமின்றி தனது கணவனுடைய குலத்தில் அங்கம் வகித்தாள் என்று நாம் ஊகிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மொம்ஸெனே இதை ஒத்துக் கொள்கிறார். அப்பொழுது இந்த விஷயம் முழுவதும் தானே விளங்கும். அந்தப் பெண் தன்னுடைய திருமணத்தால் தனது பழைய குலத்திலிருந்து பிரிக்கப்பட்டு கணவனுடைய குலக் குழுவுக்குள் சுவீகரிக்கப்பட்டு அந்தப் புதிய குலத்தில் ஒரு விசேஷ நிலையை வகிக்கிறாள். இப்பொழுது அவள் குலத்தில் ஒரு உறுப்பினர்,

ஆனால் இரத்த உறவு கொண்டவள் அல்ல. அவள் சுவீ கரிக்கப்பட்ட முறையானது மணத்தின் மூலமாக அவள் புகுந்திருக்கும் குலத்துக்குள்ளேயே மணம் புரிந்து கொள் வதற்குத் தடையே இல்லாதவாறு தொடக்கத்திலிருந்தே விலக்கி வைக்கிறது. மேலும், பொதுவான பரம்பரை உரிமைகளைக் கொண்ட குலக் குழுவுக்குள் அவள் சுவீகரிக்கப்பட்டிருக்கிறாள்; கணவன் மரணமடைகின்ற பொழுது அவனுடைய சொத்தில் ஒரு பகுதியை, அதாவது குலத்தின் சக உறுப்பினனுக்குரிய ஒரு பகுதிச் சொத்தை அவள் பெறுகிறாள். இந்தச் சொத்து குலத்துக்குள்ளே தான் இருக்க வேண்டும், தனது முதல் கணவனின் குலத் துக்குள்ளேதான் அவள் மணக்க வேண்டும், வேறு குலத் துக்குள் மணம் புரியக் கூடாது என்பதை விட இயற்கை யானது எது? எனினும் விலக்கு அளிக்கப்பட வேண்டு மானால், அந்தச் சொத்தை விட்டுச் சென்ற முதல் கண வனைக் காட்டிலும் அதைச் செய்ய அதிகாரமளிப்பதற்கு வேறு யாருக்குத் தகுதியுண்டு? தன் சொத்தில் ஒரு பகு தியை அவளுக்குக் கொடுத்து அதே சமயத்தில் திருமணத் தின் மூலம் அல்லது திருமணத்தின் விளைவாக அந்தச் சொத்தை இன்னொரு குலத்திற்கு மாற்றி விடுவதற்கும் அவளை அனுமதித்த பொழுது அந்தச் சொத்துக்கு இன் னும் அவன் சொந்தக்காரனாகவே இருந்தான். எனவே உண்மையிலே அவன் தன்னுடைய சொத்தைத்தான் முடிவு செய்திருக்கிறான். அந்தப் பெண்ணுக்கும் அவளுடைய கணவனின் குலத்துக்கும் இடையிலுள்ள உறவைப் பொறுத்தமட்டில், கணவன்தான் சுதந்திரமாக முடிவு செய்து திருமணத்தின் மூலம் தனது குலத்துக்குள் அவளைப் புகுத்தினான். எனவே இன்னொரு திருமணத் தின் மூலம் இந்தக் குலத்தை விட்டுச் செல்வதற்கு அவ ளுக்கு அதிகாரமளிப்பதற்கும் அவன்தான் சரியான நபர் என்றும் இயற்கையாகப் படுகிறது. சுருக்கமாகக் கூறி னால், அகமண முறை வகைப்பட்ட ரோமானியக் குலம் என்னும் விசித்திரமான கருத்தைக் கைவிட்டு, அது ஆரம் பத்தில் புறமண முறைக் குலமாகவே இருந்ததென்று மார்கனுடன் சேர்ந்து நாமும் கருதுகின்ற அதே வினாடி யில் விஷயம் எளிமையானதாகவும் வெளிப்படையான தாகவும் தோன்றும்.

கடைசியாக, மற்றொரு கருத்தும் இருக்கிறது. அது அநேகமாக மிகவும் அதிகமான அளவு ஆதரவைப் பெற்றிருக்கிறது. லிவியின் நூலில் அந்தப் பகுதியின் சரியான அர்த்தம் பின்வருமாறு என்று கருதப்படுகிறது:

''விடுதலையடைந்த அடிமைப் பெண்கள் (libertae) விசேஷ அனுமதி இல்லாமல் e gente enubere" (குலத்துக்கு வெளியே மணக்க) ''கூடாது அல்லது capitis diminutio minima* சம்பந்தப்பட்டதாக, குலக் குழுவிலிருந்து விலகிச் செல்வதில் முடியக் கூடிய எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது'' (லாங்கே எழுதிய **ரோமானியப் பண்டைக்காலப் பழக்கங்கள்**, பெர்லின், 1856, தொகுதி 1, பக்கம் 195; இதில் ஹூஷ்கேயைக் குறிப்பிடுகின்ற பொழுது லிவியின் நூலிலிருந்து நாம் எடுத்துக் கொண்ட பகுதி விமர்சிக்கப் படுகிறது).

இந்த ஊகம் சரியானால், அந்த நூல் பகுதி சுதந்திர மான ரோமானியப் பெண்களின் அந்தஸ்தைப் பற்றி நிரூபிப்பது மிகவும் குறைவு; மேலும், அவர்கள் குலத்துக் குள்ளாகவே மணம் புரியக் கடமைப்பட்டவர்கள் என்று கூறுவதற்கு ஆதாரம் இன்னும் குறைவு.

Enuptio gentis என்னும் சொற்றொடர் இந்த ஒரு நூல் பகுதியில்தான் வருகிறது. ரோமானிய இலக்கியம் முழு வதிலும் வேறெங்கும் இது காணப்படவில்லை. Enubere (வெளியில் மணம் புரிதல்) என்ற சொல் லிவியின் நூலில் மூன்று முறைதான் வருகிறது; அதுவும் குலத்தைக் குறிப் பிட்டுச் சொல்லப்பட்டதல்ல. ரோமானியப் பெண்கள் தமது குலத்துக்குள்ளேதான் மணக்க அனுமதிக்கப்பட் டார்கள் என்ற விசித்திரமான கருத்து ஏற்பட்டதற்கு இந்த ஒரு நூல் பகுதியே காரணமாகும். ஆனால் அதைச் சிறிதும் நிலைநிறுத்த முடியாது. ஏனென்றால், அந்தப் பகுதி விடுதலையடைந்த அடிமைப் பெண்களின் மீதுள்ள விசேஷமான கட்டுப்பாடுகளைக் குறிப்பதாக இருக்க வேண்டும், அப்படியானால் அது பிறவியிலேயே சுதந்திரம் பெற்ற பெண்கள் (ingenuae) சம்பந்தமாக எதையும் நிரூபிக்க வில்லை; அல்லது அது பிறவியிலேயே சுதந்திரம் பெற்ற பெண்களுக்கும் பொருந்தியதாக இருக்க வேண்டும், அப்

* —குடும்ப உரிமைகளை இழப்பதுடன்.—ப-ர்.

படியானால் பெண்கள் குலத்துக்கு வெளியே மணம் புரிவது பொது விதியாக இருந்தது என்பதையும் திருமணத்தின் மூலமாகத் தமது கணவனுடைய குலத்துக்கு மாற்றப்பட்டார்கள் என்பதையும்தான் அது நிரூபிக்கிறது. எனவே அது மொம்ஸெனுக்கு எதிராகவும் மார்கனுக்கு ஆதரவாகவும் இருக்கிறது.

ரோமாபுரி நிறுவப்பட்டு சுமார் 300 ஆண்டுகளுக்குப் பிறகு குலத்தின் பந்தங்கள் இன்னும் அதிக பலமாக இருந்ததனால் ஒரு பட்ரீஷியக் குலம், ஃபேபியன்களின் குலம் செனெட்டின் அனுமதியைப் பெற்று அண்டை நகரமாகிய வெயி மீது தானாகவே ஒரு படையெடுப்பை நடத்த முடிந்தது. அணிவகுத்துச் சென்ற 306 ஃபேபியன்கள் மறைவுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. வீட்டில் விட்டு வந்திருந்த ஒரு சிறுவன் குலத்தைப் பெருக்கினான்.

நாம் கூறியபடி, பத்து குலங்கள் ஒரு பிராட்ரியை அமைத்தன; இங்கே அது குரியா என்று அழைக்கப்பட்டது; கிரேக்க பிராட்ரியைக் காட்டிலும் முக்கியமான சமூகச் செயல்கள் அதற்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குரியாவுக்கும் சொந்த மதச் சடங்குகளும் புனிதச் சின்னங்களும் பூசாரிகளும் உண்டு. பூசாரிகள் ஒரு குழுவாக ரோமானியப் பூசாரிச் சங்கங்களில் ஒன்றில் திரண்டிருந்தனர். பத்து குரியாக்கள் கொண்டது ஒரு இனக்குழு. மற்ற லத்தீன் இனக்குழுக்களைப் போலவே அதற்கு ஆதியில் அநேகமாக ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் இராணுவத் தளபதியாகவும் உயர்தரப் பூசாரியாகவும் இருந்திருக்கிறான். அந்த மூன்று இனக்குழுக்களும் சேர்ந்து ரோமானிய மக்களினமாக (populus Romanus) இருந்தன.

ஆக, ஒரு குலத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள்தான்—ஆகவே ஒரு குரியாவிலும் இனக்குழுவிலும் சேர்ந்திருப்பவர்கள்தான்—ரோமானிய மக்களினத்தைச் சேர்ந்திருப்பவர்களாக இருக்க முடியும். இந்த மக்களினத்தின் முதல் நிர்வாக அமைப்பு பின்வருமாறு: முதலில் பொது விவகாரங்களை செனெட் நடத்தி வந்தது, அது முந்நூறு குலங்களின் தலைவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது என்பதை நீபூர் என்பவரே முதன்முதலில் சரி

யாகக் கூறினார்; குலங்களில் முதியவர்கள் என்ற வகையில் அவர்கள் தந்தையர்கள் (patres) என்றும் அமைப்பு என்ற முறையில் செனெட் (மூத்தோர் கவுன்சில், senex என்றால் மூத்த, வயதான என்று பொருள்) என்றும் அழைக்கப்பட்டார்கள். அங்கேயும் ஒவ்வொரு குலத்திலும் ஒரே குடும்பத்திலிருந்து நபர்களைப் பொறுக்குகின்ற வழக்கம் முதல் பரம்பரைப் பிரபுத்துவத்தை அமைத்தது. இந்தக் குடும்பங்கள் தம்மைப் பட்ரீஷியன்கள் என்று அழைத்துக் கொண்டன; செனெட் பதவிகளும் மற்ற எல்லாப் பதவிகளும் தமக்கு மட்டுமே உரிமையானவை என்று கோரின. மக்கள் காலப் போக்கில் இந்தக் கோரிக்கைகளை அனுமதித்தபடியால் அவை அங்கீகரிக்கப்பட்ட உரிமையாகி விட்டன. முதலில் இருந்த செனெட்டர்களுக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் பட்ரீஷியன் என்ற பட்டத்தையும் அதற்குரிய சலுகைகளையும் ரோமுலஸ் வழங்கியதாகக் கூறுகின்ற கட்டுக்கதை இந்த உண்மையை வெளியிடுகிறது. அதீனிய bulê என்பதைப் போலவே இந்த செனெட்டும் பல விவகாரங்களை முடிவு செய்வதற்கும் மிக முக்கியமான நடவடிக்கைகளைப் பற்றி, குறிப்பாக புதிய சட்டங்களைப் பற்றிப் பூர்வாங்க விவாதங்களை நடத்தவும் அதிகாரம் பெற்றிருந்தது. புதிய சட்டங்களைப் பற்றி comitia curiata (குரியாக்களின் சபை) எனப்படும் மக்கள் சபையில் முடிவு செய்யப்பட்டது. அதில் கூடியிருக்கும் மக்கள் குரியா முறையில் வைக்கப்பட்டிருந்தார்கள்; ஒவ்வொரு குரியாவிலும் அவர்கள் அநேகமாக குல ரீதியில் வைக்கப்பட்டிருக்கலாம். பிரச்சினைகளைப் பற்றி முடிவு செய்கின்ற பொழுது முப்பது குரியாக்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்கு இருந்தது. குரியாக்களின் சபை சட்டங்களை நிறைவேற்றியது அல்லது நிராகரித்தது; rex (அரசன் என்று சொல்லப்பட்டவன்) உட்பட எல்லா உயர் அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்தது; யுத்தப் பிரகடனம் செய்தது (ஆனால் செனெட் சமாதானத்தை முடிவு செய்தது); தலைமை நீதிமன்றம் என்ற வகையில், ரோமானியக் குடிமக்களுக்கு மரண தண்டனை விதிக்கத் தக்க எல்லா வழக்குகளையும் பற்றி—சம்பந்தப்பட்ட தரப்பினர் மேன் முறையீடு செய்கின்ற பொழுது—முடிவு செய்தது. கடைசியாக, செனெட்டுக்

கும் மக்கள் சபைக்கும் பக்கத்தில் ரெக்ஸ் இருந்தான், இவன் கிரேக்க பஸிலியஸ் போன்றவனேதான்; ஆனால் மொம்ஸென் எழுதுவதைப் போல கிட்டத்தட்ட சர்வாதிக்கம் பெற்ற அரசன் அல்ல.* ரெக்ஸ் என்பவனும் இராணுவத் தளபதியாகவும் உயர்தரப் பூசாரியாகவும், சில நீதிமன்றங்களுக்குத் தலைமை அதிகாரியாகவும் இருந்தான். அவனுக்கு சிவில் வேலைகள் இல்லை. இராணுவத் தளபதி என்ற முறையில் கட்டுப்பாட்டு அதிகாரத்தின் விளைவாக வந்து சேர்ந்தவற்றைத் தவிர, நீதிமன்றத் தலைவன் என்ற முறையில் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டிய அதிகாரத்தின் விளைவாக வந்து சேர்ந்தவற்றைத் தவிர குடிமக்களின் உயிர், சுதந்திரம், சொத்து விஷயங்களில் அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ரெக்ஸ் பதவி பரம்பரையாக வருவதல்ல. அதற்கு மாறாக, முந்திய ரெக்ஸ் பிரேரணை செய்ய, குரியாக்களின் கூட்டத்தில் அவன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிறகு, இரண்டாவது கூட்டத்தில் உரிய சடங்குகளுடன் பதவியில் அமர்த்தப்பட்டான். அவனைப் பதவியிலிருந்து விலக்கவும் முடிந்தது என்பதற்கு டார்க்வினியஸ் சுபெர்பசுக்கு ஏற்பட்ட கதி உதாரணமாகும்.

---

* —லத்தீன் சொல்லாகிய rex என்பது கெல்டிக்-ஐரிஷ் மொழியிலுள்ள righ (இனக்குழுத் தலைவன்) என்பதற்கும் கோதிக் மொழியிலுள்ள reiks என்பதற்கும் சமமாகும். நமது Fürst (ஆங்கிலத்தில் first, டேனிஷ் மொழியில் förste) போலவே இது ஆதியில் குலத் தலைவனையோ, இனக்குழுத் தலைவனையோ குறித்தது என்ற விஷயம் பிற்காலத்தில் வந்த அரசனுக்கு, தமது மக்களினத்தின் இராணுவத் தலைவனுக்கு thiudans என்ற விசேஷச் சொல்லை கோத்கள் 4ஆம் நூற்றாண்டிலிருந்தே உபயோகித்து வந்தார்கள் என்பதிலிருந்து தெரிகிறது. உல்ஃபிலா மொழிபெயர்த்துள்ள பைபிளில் ஆர்டக்ஸெர்க்ஸசும் ஹீராடும் reiks என்று ஒருபோதும் அழைக்கப்படவில்லை, thiudans என்றுதான் அழைக்கப்பட்டார்கள். சக்கரவர்த்தி டைபேரியசின் அரசும் reiki என்னாமல் thiudinassus என்றுதான் அழைக்கப்பட்டது. கோதிக் thiudansஇன் பெயரில் அல்லது நாம் தவறாக மொழிபெயர்க்கின்ற அரசர் Thiudareiks, Theodorich, அதாவது Dietrich என்னும் பெயரில் இந்த இரண்டு பெயர்களும் ஒன்றாகவே கலந்திருக்கின்றன. (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

வீர யுகத்தைச் சேர்ந்த கிரேக்கர்களைப் போலவே, அரசர்கள் என்று சொல்லப்பட்டவர்களுடைய காலத்தைச் சேர்ந்த ரோமானியர்கள் ஒரு இராணுவ ஜனநாயகத்தில் வாழ்ந்தார்கள். அது குலங்கள், பிராட்ரிகள் மற்றும் இனக்குழுக்களை ஆதாரமாகக் கொண்டிருந்தது; அவற்றிலிருந்துதான் அது வளர்ச்சியடைந்தது. குரியாக்களும் இனக்குழுக்களும் ஓரளவுக்கு செயற்கையான அமைப்புகள் என்றாலும், ஆதியில் அவை முளைத்தெழுந்த சமூகத்தின் மெய்யான, இயற்கையான மாதிரிகளைப் பின்பற்றி ஒழுங்கமைக்கப்பட்டவை. அச்சமூகம் இவற்றை எல்லாப் பக்கங்களிலும் இன்னும் சூழ்ந்திருந்தது. மேலும், இயற்கையாக வளர்ந்த பட்ரீஷியப் பிரபுத்துவம் ஏற்கெனவே பலத்தைப் பெற்றிருந்த போதிலும், ரெக்ஸ்கள் படிப்படியாகத் தமது அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்கு முயன்று வந்த போதிலும் இவையனைத்தும் அமைப்பின் ஆதியான, அடிப்படையான தன்மையை மாற்றவில்லை; இது மிகவும் முக்கியமானதாகும்.

இதற்கிடையில் ரோமாபுரியில் மக்கள்தொகையும் ரோமானியப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள்தொகையும் நாடுபிடித்தலின் மூலம் விரிவடைந்து பகுதியளவுக்குக் குடியேறுதல் வழியாகவும் பகுதியளவுக்கு அடிமைப்படுத்தப்பட்ட, அநேகமாக லத்தீன் மாவட்டங்களில் வசித்தவர்களாலும் அதிகரித்தன. இந்தப் புதிய குடிமக்கள் எல்லோரும் (கிளாயென்ட்டுகளைப்* பற்றிய பிரச்சினையைத் தற்சமயம் இங்கே எடுத்துக் கொள்ளவில்லை) பழைய குலங்கள், குரியாக்கள், இனக்குழுக்களுக்கு வெளியே இருந்தார்கள். எனவே அவர்கள் populus Romanus எனப்படுகின்ற முறையான ரோமானிய மக்களைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள் சுதந்திரமானவர்கள்; சொந்தத்தில் நிலம் வைத்துக் கொள்ள முடியும்; அவர்கள் வரி செலுத்த வேண்டும், இராணுவச் சேவைக்கும் போக வேண்டியவர்களே. ஆனால் அவர்கள் பதவி வகிக்க முடியாது; குரியாக்களின் கூட்டத்தில் பங்கெடுக்கவோ,

* கிளாயென்ட் (client)—பண்டைக்கால ரோமாபுரியில் உயர்குடிப் பிரபுக்களின் பாதுகாப்பைப் பெற்று வந்த, சார்புநிலையில் இருந்த சுதந்திரமான மனிதன்.—ப-ர்.

வெற்றி கொள்ளப்பட்ட அரசு நிலங்களின் வினியோகத்தில் பங்கு கொள்ளவோ முடியாது. அவர்கள் அரசியல் உரிமைகளிலிருந்து விலக்கப்பட்ட பிளெப்ஸ் ஆக இருந்தார்கள். இடைவிடாது அதிகரித்துக் கொண்டிருந்த எண்ணிக்கை, இராணுவப் பயிற்சி, ஆயுத பலம் ஆகியவற்றின் விளைவாக அவர்கள் பழைய populusக்கு ஆபத்தாக மாறி இருந்தார்கள். இந்த populus தன் எண்ணிக்கை அதிகரிக்காதபடி தன் அணிகளுக்குள் அந்நியர்கள் புக இடமின்றி அடைத்து விட்டிருந்தது. மேலும், populusக்கும் பிளெப்சுக்கும் இடையில் நிலம் ஓரளவுக்கு சமமாகவே பிரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது; ஆனால், இன்னும் கணிசமான வளர்ச்சியடையாத வர்த்தகச் செல்வமும் தொழிற்செல்வமும் பிரதானமாக பிளெப்ஸ்களிடமே இருந்திருக்கக் கூடும்.

கட்டுக்கதையாக வந்துள்ள ரோமாபுரியின் ஆரம்ப வரலாறு முழுவதும் முற்றிலும் இருள் சூழ்ந்திருக்கிறது; இதை விளக்குவதற்குச் செய்யப்பட்ட பகுத்தறிவு-காரியவாத வகைப்பட்ட முயற்சிகளினாலும் பிற்காலத்தில் வந்த, சட்டத் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்—அவர்களுடைய நூல்கள் நமக்கு மூலாதார விஷயங்களைத் தருகின்றன—தந்துள்ள செய்திகளினாலும் இந்த இருள் மேலும் அதிகமடைந்திருப்பதால், பண்டைய குல அமைப்பை ஒழித்த புரட்சியின் காலம், போக்கு, காரணங்கள் பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் சொல்ல முடியாது. பிளெப்சுக்கும் populusக்கும் இடையே எழுந்த மோதல்களே அதற்குக் காரணங்களாக இருந்தன என்ற ஒன்று மட்டுமே நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

புதிய நிர்வாக அமைப்பு ரெக்ஸ் செர்வியஸ் துல்லியஸ் என்பவரால் தயாரிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அது கிரேக்க மாதிரியில், குறிப்பாக சொலோன் அமைப்பின் மாதிரியில் அமைந்திருந்தது. அது ஒரு புதிய மக்கள் சபையை உருவாக்கியது; populus, பிளெப்ஸ் என்ற வேறுபாடு இல்லாமல் இராணுவச் சேவை செய்பவர்கள் எல்லோரும் அதில் சேர்க்கப்பட்டனர், இராணுவச் சேவை செய்யாதவர்கள் விலக்கப்பட்டனர். இராணுவச் சேவை செய்ய வேண்டிய ஆண் மக்கள்தொகை முழுவதும் சொத்தின் அடிப்படையில் ஆறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்

டது. முதல் ஐந்து வகுப்புகளிலும் சொத்து வகைப்பட்ட குறைந்தபட்சத் தகுதிகள் பின்வருமாறு இருந்தன: முதல் வகுப்பு—1,00,000 அஸ்கள்*; இரண்டாம் வகுப்பு—75,000 அஸ்கள்; மூன்றாம் வகுப்பு—50,000 அஸ்கள், நான்காம் வகுப்பு—25,000 அஸ்கள், ஐந்தாம் வகுப்பு—11,000 அஸ்கள். இவை முறையே சுமார் 14,000, 10,500, 7,000, 3,600, 1,570 மார்க்குகளுக்கு சமம் என்று டியூரோ டெ லா மால் கூறுகிறார். இதை விடக் குறைவான சொத்தை உடையவர்கள் பாட்டாளிகள் என்ற ஆறாம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இராணுவச் சேவை, வரிகள் ஆகியவற்றிலிருந்து அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தது. சென்தூரியாக்களின் சபை (comitia centuriata) என்ற புது சபையில் குடிமக்கள் போர்வீரர்களின் அணியைப் போல அமைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் நூறு நபர்களைக் கொண்ட சென்தூரியாக்களாகத் திரட்டப்பட்டிருந்தார்கள். அவற்றில் ஒவ்வொரு சென்தூரியாவுக்கும் ஒரு வாக்கு இருந்தது. முதல் வகுப்பினர் 80 சென்தூரியாக்களையும் இரண்டாவது வகுப்பினர் 22 சென்தூரியாக்களையும் மூன்றாவது வகுப்பினர் 20 சென்தூரியாக்களையும் நான்காவது வகுப்பினர் 22 சென்தூரியாக்களையும் ஐந்தாவது வகுப்பினர் 30 சென்தூரியாக்களையும் ஆறாவது வகுப்பினர் முறைமைக்காக ஒரு சென்தூரியாவையும் திரட்டிக் கொடுத்தார்கள். இவற்றுடன் கூடுதலாக, பெரும் செல்வர்களான குதிரைப் படையினரின் 18 சென்தூரியாக்களும் இருந்தன. மொத்தம் 193 சென்தூரியாக்கள் இருந்தன. பெரும்பான்மைக்கு 97 வாக்குகள் அவசியம். ஆனால் குதிரைப் படையினரும் முதல் வகுப்பினரும் மட்டுமே சேர்ந்தால், 98 வாக்குகள் ஆகின்றனர், எனவே அவர்களே பெரும்பான்மையாகின்றனர். அவர்கள் ஒன்றுசேர்ந்திருக்கும் பொழுது மற்ற வகுப்பினரைக் கலந்து கொள்ளாமலேயே செல்லத்தக்க முடிவுகள் செய்யப்பட்டன.

முன்னர் குரியாக்களின் கூட்டம் பெற்றிருந்த அரசியல் அதிகாரங்கள் எல்லாம் (பெயரளவில் இருந்த சில அதிகாரங்கள் மட்டும் இல்லை) இப்பொழுது சென்தூரி

* அஸ்—பழைய ரோமானிய நாணயம்.—ப-ர்.

யாக்களின் இந்தப் புதிய சபையிடம் வந்து சேர்ந்தன; ஆகவே குரியாக்களும் அவற்றிலிருந்த குலங்களும்—ஏதன்சில் நடைபெற்றதைப் போல—வெறும் தனிப்பட்ட, மத சம்பந்தப்பட்ட சங்கங்களின் நிலைக்குத் தாழ்த்தப் பட்டன. அவை இன்னும் நெடுங்காலத்துக்கு இதே நிலையில் உறங்கிக் கொண்டிருந்தன. குரியாக்களின் கூட்டம் விரைவில் மறைந்து விட்டது. மூன்று பழைய குல இனக் குழுக்களையும் அரசிலிருந்து விலக்குவதற்காகப் பிரதேச ரீதியிலமைந்த நான்கு இனக்குழுக்கள் புகுத்தப் பட்டன. ஒவ்வொரு இனக்குழுவும் நகரத்தின் கால் பகுதியில் வசித்தது. அவை சில அரசியல் உரிமைகளையும் பெற்றிருந்தன.

ஆகவே ரோமாபுரியிலும் கூட அரச அதிகாரம் என்று சொல்லப்படுவது ஒழிக்கப்படுவதற்கு முன்பே, தனிப்பட்ட இரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பழைய சமூக அமைப்பு ஒழிக்கப்பட்டது. அதனிடத்தில் பிரதேசப் பிரிவினை, சொத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய, உண்மையான அரசு அமைப்பு வந்து சேர்ந்தது. இராணுவச் சேவை செய்ய வேண்டியவர்களான குடிமக்களைக் கொண்டு இங்கே சமூக அதிகாரம் அமைந்திருந்தது. அந்த அதிகாரம் அடிமைகளுக்கு எதிராக மட்டுமன்றி, பாட்டாளிகள் எனப்பட்டோருக்கும் எதிராகத் திருப்பப்பட்டிருந்தது. இவர்கள் இராணுவச் சேவையிலிருந்தும் ஆயுதம் வைத்திருக்கின்ற உரிமையிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

உண்மையான அரச அதிகாரத்தை அபகரித்திருந்த டார்க்வினியஸ் சுபெர்பஸ் என்ற கடைசி ரெக்ஸ் துரத்தப்பட்ட பிறகும் ரெக்ஸ் ஸ்தானத்தில் இரண்டு இராணுவத் தளபதிகள் (கான்சல்கள்) சம அதிகாரங்களுடன் (இராகோஸ்களிடையே இருப்பதைப் போல) நியமிக்கப் பட்ட பிறகும் இந்தப் புதிய அமைப்பு மேலும் வளர்க்கப் பட்டது. பதவிகளைப் பெறுவதற்கும் அரசு நிலங்களில் பங்கு பெறுவதற்கும் பட்ரீஷியன்களுக்கும் பிளெபியன்களுக்கும் இடையில் நடந்த போராட்டத்தைக் கொண்ட ரோமானியக் குடியரசின் வரலாறு முழுவதும் இந்தப் புதிய அமைப்பிற்குள் வளர்ந்தது. கடைசியில், பட்ரீஷியப் பிரபுக்கள் பெரிய நிலவுடைமையாளர்களை, பணக்காரர்

களைக் கொண்ட ஒரு புதிய வர்க்கத்தில் கலந்து விட்டனர். அவர்கள் இராணுவச் சேவையினால் சீர்குலைவுற்ற விவசாயிகளின் எல்லா நிலங்களையும் படிப்படியாகக் கவர்ந்தார்கள், இப்படி உருவாக்கப்பட்ட பிரம்மாண்டமான பண்ணைகளை அடிமைகளை உபயோகித்து விவசாயம் செய்தார்கள்; இத்தாலியின் மக்கள்தொகையைக் குறைத்தார்கள், அதன் மூலம் சக்கரவர்த்தி ஆட்சிக்கு மட்டுமன்றி, பின்னர் வந்த ஜெர்மானிய அநாகரிகக் கூட்டங்களுக்கும் வழி திறந்தார்கள்.

# VII

## கெல்டுகள் மற்றும் ஜெர்மானியர்கள் மத்தியில் குல அமைப்பு

பலவகைப்பட்ட காட்டுமிராண்டி மற்றும் அநாகரிக மக்களினங்களிடம் கிட்டத்தட்ட தூய்மையான வடிவத்தில் இன்னும் இருக்கின்ற குல அமைப்புகளைப் பற்றிக் கூறுவதற்கு இங்கே இடமில்லை. ஆசியாவைச் சேர்ந்த நாகரிக மக்களினங்களின் பண்டைக்கால வரலாற்றில் காணப்படுகின்ற இப்படிப்பட்ட அமைப்புகளின் அடையாளங்கள் விஷயத்திலும் அப்படியே. இரண்டையும் எங்குமே காண முடியும். சில உதாரணங்கள் போதுமானவையாக இருக்கும். குலத்தை அடையாளங்கண்டு கொள்வதற்கு முன்பே, அதைத் தவறாகப் புரிந்து கொள்ள மிகப் பெரிய முயற்சி செய்த மாக்லென்னான் அதைச் சுட்டிக்காட்டி அதன் முக்கியமான உருவரைகளை மொத்தத்தில் சரியாக வர்ணித்தார்; கால்மிக்குகள், சிர்காஸியர்கள், சமோயெதுகள் இடையிலும் வார்லிகள், மஹார்கள், மணிபுரிகள் என்ற மூன்று இந்திய மக்களினங்களிடையிலும் இருந்த இந்த அமைப்பைப் பற்றி அவர் எழுதியிருக்கிறார். சமீபத்தில் மக்சீம் கவலேவ்ஸ்கி அதை வர்ணித்துள்ளார்; ப்ஷாவ்கள், ஹேவ்ஸுர்கள், ஸ்வானேடியர்கள் மற்றும் இதர காக்கஸஸ் இனக்குழுக்களிடையில் அவர் அதைக் கண்டுபிடித்தார். கெல்டுகள் மற்றும் ஜெர்மானியர்கள் மத்தியில் குலம் இருந்ததைப் பற்றிச் சுருக்கமான குறிப்புகளைத் தருவதுடன் இங்கே நிறுத்திக் கொள்ளலாம்.

நம் காலம் வரைக்கும் நீடித்துள்ள பழமையான கெல்டுச் சட்டங்கள் குலம் இன்னும் முழு வீரியத்துடன் இருப்பதையே காட்டுகின்றன. அயர்லாந்தில் ஆங்கிலேயர்கள் அதைப் பலாத்காரமாக அழித்த பிறகும் மக்கள் மனத்தில், குறைந்தபட்சம் உள்ளுணர்வாக, இன்னும் அது உயிரோடிருக்கிறது. சென்ற நூற்றாண்டின் மத்தியில்

ஸ்காட்லாந்தில் அது முழு மலர்ச்சியுடன் இருந்து வந்தது; இங்கும் கூட ஆங்கிலேயர்களின் ஆயுதங்கள், சட்டங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்குத்தான் அது கீழ்ப்படிந்தது.

ஆங்கிலேய நாடுபிடிப்புக்குப்[27] பல நூற்றாண்டுகளுக்கு முன்னால்—11ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வராத—பண்டைய வேல்ஸ் சட்டங்கள் முழுக் கிராமங்களில்—விதிவிலக்குகளாகவும் முன்பு எங்கும் நிலவியிருந்த ஒரு வழக்கத்தின் எச்சங்களாகவும் இருந்த போதிலும்—பொது விவசாயம் இருந்ததைக் காட்டுகின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்த விவசாயத்துக்கு ஐந்து ஏக்கர் நிலம் இருந்தது. அதே சமயத்தில், வேறொரு நிலப் பகுதியும் பொதுவில் விவசாயம் செய்யப்பட்டு அதன் பலன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அயர்லாந்து, ஸ்காட்லாந்து உதாரணங்களைக் கொண்டு பார்க்கும் பொழுது இந்த கிராமச் சமூகங்கள் குலங்களையும் குலங்களின் துணைப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதில் ஒரு சந்தேகமும் இருக்க முடியாது. நேரமின்மையால் (என்னுடைய குறிப்புகள் 1869இலிருந்து உள்ளன[28]) நான் மேற்கொள்ள முடியாதிருக்கின்ற வேல்ஸ் சட்டங்கள் பற்றிய மறு விசாரணை இதை நேரடியாக உறுதிப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால், கெல்டுகளிடையில் இணை மணம் 11ஆம் நூற்றாண்டில் ஒரு தார மண முறைக்கு இன்னும் இடம் கொடுக்காமலே இருந்தது என்பதை வேல்ஸ் மற்றும் அயர்லாந்தின் மூலாதாரங்கள் நிரூபிக்கின்றன. வேல்சில் திருமணம் என்பது ஏழாண்டுகள் பூர்த்தியடைவதற்கு முன் ரத்து செய்யப்படக் கூடியதாக அல்லது ரத்து செய்வதற்குரிய அறிவிப்புத் தரக் கூடியதாக இருந்தது. ஏழாண்டுகள் பூர்த்தியடைவதற்கு இன்னும் மூன்றே இரவுகள் எஞ்சியிருந்தாலும் கூட தம்பதிகள் பிரிந்து போக முடியும். அப்பொழுது அவர்களுடைய சொத்து அவர்களிடையில் பிரிக்கப்பட்டது. பெண் பாகப் பிரிவினையைச் செய்வாள்; ஆண் இரண்டு பாகங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான். வீட்டுச் சாமான்கள் சில விசித்திரமான விதிகளின்படி பிரிக்கப்பட்டன. திருமணத்தை ஆண் ரத்து செய்தால், அவன் பெண்ணின் சீதனத்தையும் மற்றும் இதர

சில சாமான்களையும் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். பெண் ரத்து செய்ய விரும்பினால், அவளுடைய பங்கு குறைவாகக் கிடைக்கும். குழந்தைகளில் இரண்டு கணவனுக்கும் ஒன்று (அதாவது நடுக் குழந்தை) மனைவிக்கும் தரப்பட்டனர். திருமண ரத்துக்குப் பிறகு பெண் மீண்டும் மணம் புரிந்து, புதுக் கணவனுடைய கட்டிலில் ஒரு காலை வைத்திருந்த நிலையிலும் முதல் கணவன் வந்து அவளைக் கூப்பிட்டால், அவள் அவனைப் பின் தொடர்வதே கடமையாகும். ஆனால் இருவர் ஏழு ஆண்டுகள் கூடி வாழ்ந்தால், திருமணச் சடங்குகள் எதுவுமின்றியே, கணவன், மனைவி என்று கருதப்பட்டார்கள். திருமணத்துக்கு முன்னால் பெண்கள் கற்புடன் இருக்க வேண்டும் என்பது கண்டிப்பாகப் பின்பற்றப்படவில்லை; அது வற்புறுத்தப்படவுமில்லை. இவ்விஷயங்கள் சம்பந்தமான விதிமுறைகள் மிகவும் தளர்வாக இருந்தன. அவை பூர்ஷ்வா ஒழுக்கமுறைகள் எல்லாவற்றுக்கும் எதிரானவை. ஒரு பெண் சோரம் போனால், அவளை அடிப்பதற்குக் கணவனுக்கு உரிமையுண்டு (தண்டனை இல்லாமல் அவளை அடிப்பதற்கு உரிமை அளிக்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களில் இது ஒன்று); ஆனால் அதற்குப் பிறகு அவன் வேறு பரிகாரம் கோர முடியாது, ஏனென்றால்,

*"ஒரு குற்றத்துக்குப் பரிகாரம் பெற வேண்டும் அல்லது பழிவாங்க வேண்டும், இரண்டும் அமுலாக்கப்பட முடியாது."**

சொத்துப் பிரிவினையின் போது தனக்குரிய உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாமல் பெண் திருமணத்தை ரத்து செய்ய அனுமதித்த காரணங்கள் மிகவும் மாறுபாடானவையே. ஆணின் வாய் நாற்றம் போதுமான காரணமாக இருந்தது. முதல் இரவில் பெண்ணை அனுபவிக்கின்ற உரிமையைத் திரும்பப் பெறுவதற்காக இனக்குழுத் தலைவனுக்கு அல்லது அரசனுக்குத் தர வேண்டிய பணம் (இது gobr merch எனப்பட்டது; மத்திய காலச் சொல்லான

---

* பி. எங்கெல்ஸ், வேல்சின் பண்டைய சட்டங்களும் விதிமுறைகளும், தொகுதி 1, 1841, பக்கம் 93.—ப-ர்.

marcheta என்பதும் marquette என்ற பிரெஞ்சுச் சொல்லும் இதனடியாகப் பிறந்தவை) சட்டத் தொகுப்பில் முக்கிய மான இடத்தைப் பெற்றிருக்கிறது. மக்கள் சபைகளில் பெண் வாக்களிக்க உரிமையிருந்தது. இம்மாதிரியான நிலைமைகள் அயர்லாந்திலும் இருந்தன என்று காட்டப் பட்டிருக்கிறது; கால வரம்புள்ள திருமணங்கள் அங்கும் வழக்கமாக இருந்தன; பாகப் பிரிவினையின் போது வீட்டு வேலை செய்ததற்குப் பெண்ணுக்கு ஊதியமுண்டு என்ற அளவுக்குத் தாராளமான, நன்கு வரையறுக்கப்பட்ட சலு கைகள் இருந்தன; மற்ற மனைவியருக்குப் பக்கத்திலேயே ''முதல் மனைவி'' இருந்து வந்தாள்; மரணமடைந்தவ னுடைய சொத்தைப் பிரிக்கின்ற பொழுது ஒழுக்கமுறை யில் பிறந்த குழந்தைகளுக்கும் ஒழுக்கக்கேடாகப் பிறந்த குழந்தைகளுக்கும் இடையில் வேறுபாடு காட்டப்பட வில்லை—இவை அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது இணை மணத்தைப் பற்றிய ஒரு சித்திரம் நமக்குக் கிடைக்கிறது. இதனுடன் ஒப்பிடுகின்ற பொழுது வடக்கு அமெரிக்காவில் செல்லத்தக்கதாயிருந்த திருமண வடிவம் கண்டிப்பானது என்று தோன்றும். ஆனால் சீஸ ருடைய காலத்தில் குழு மண முறையில் வாழ்ந்து கொண் டிருந்த ஒரு மக்களினத்துக்கு 11ஆம் நூற்றாண்டில் இது வியப்பான விஷயமல்ல.

அயர்லாந்தில் குலம் (sept; இனக்குழு clainne, கிளான் என்று சொல்லப்பட்டது) இருந்ததாகவும் அதை வர்ணித் தும் பழங்காலச் சட்டத் தொகுப்புகளில் எழுதப்பட்டிருக் கிறது; அவை மட்டுமன்றி, 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலச் சட்ட நிபுணர்களும் அதை உறுதிப்படுத்தியும் வர்ணித்தும் எழுதியிருக்கிறார்கள். கிளான் நிலங்களை ஆங்கில அரசனுடைய சொந்த நிலங்களாக மாற்றுவதற் காக அவர்கள் அங்கே அனுப்பப்பட்டார்கள். இக்காலம் வரை நிலம், தலைவர்கள் அதை ஏற்கெனவே தம்முடைய சொந்த நிலமாக மாற்றியிருந்த இடங்களைத் தவிர, கிளானின் அல்லது குலத்தின் பொதுச் சொத்தாக இருந்து வந்தது. ஒரு குல உறுப்பினன் இறந்து அதன் விளைவாக ஒரு குடும்பம் கலைக்கப்படும் பொழுது அந்தக் குலத் தின் தலைவன் (ஆங்கிலச் சட்ட நிபுணர்கள் அவனை caput cognationis என்று அழைக்கிறார்கள்) குலத்தின் நிலம்

முழுவதையும் மறுபடியும் மற்ற குடும்பங்களிடையே பிரித்துக் கொடுத்தான். ஜெர்மனியில் கடைப்பிடிக்கப் பட்டதைப் போன்ற விதிகளின்படியே இந்தப் பிரிவினை பொதுவாக நடைபெற்றிருக்க வேண்டும். Rundale எனப் பட்டவற்றில் விளைநிலங்கள் பொதுவில் வைக்கப்பட்ட சில கிராமங்களை நாம் இன்னும் காண முடியும். 40—50 ஆண்டுகளுக்கு முன்னர் அவை அதிகமாகவே இருந்தன. ஒவ்வொரு விவசாயியும்—முன்பு குலத்தின் பொதுச் சொத்தாக இருந்து இப்பொழுது ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட அந்த நிலத்தின் தனிப்பட்ட குத்தகை தாரன்—தனது பங்கு நிலத்திற்குக் குத்தகை செலுத்து கிறான். ஆனால் சாகுபடிக்குரிய நிலம், பசும்புல் நிலம் எல்லாம் ஒன்றாக்கப்பட்டு இடத்துக்கும் தரத்துக்கும் தக்க முறையில் துண்டு நிலங்களாகப் பிரித்துத் தரப்படு கின்றன. மோசெல் நதிப் பிரதேசத்தில் அவற்றை Gewanne என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு Gewanneஇலும் ஒவ் வொருவருக்கும் பங்கு கிடைக்கிறது. சதுப்பு நிலமும் மேய்ச்சல் நிலங்களும் பொதுவாகப் பயன்படுத்தப்படு கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கூட மறுபிரிவினை எப்பொழுதாவது—சில சமயங்களில் ஆண்டுதோறும்— செய்யப்பட்டது. இப்படிப்பட்ட rundale வகைக் கிராமத் தின் நிலப் படம் ஜெர்மனியில் மோசெல் நதிப் பிரதேசத் தில் அல்லது ஹோஹ்வால்தேயில் உள்ள விவசாயக் குடும்பச் சமூகத்தை (Gehöferschaft) போலவே காணப்படு கிறது. குலம் “factions”* என்பவற்றிலும் பிழைத்திருக்கிறது. மிகவும் முட்டாள்தனமான, அர்த்தமற்ற வேறுபாடு களின் அடிப்படையில் எழுந்ததாகத் தோன்றக் கூடிய, ஆங்கிலேயர்கள் அறவே புரிந்து கொள்ள முடியாத கட்சி களை ஐரிஷ் விவசாயிகள் அடிக்கடி நிறுவுகிறார்கள். ஒருவரையொருவர் செமத்தியாக அடிக்கும் பொழுது வேடிக்கை பார்ப்பதற்குத் திரள்வதே இந்தக் கட்சிகளின் ஒரே நோக்கம் என்று தோன்றுகிறது. அவை அழிக்கப் பட்ட குலங்களின் செயற்கையான அவதாரங்கள், பிற்கால மாற்றுப் பொருட்கள்; அவை பரம்பரையாக வருகின்ற குல உணர்வின் தொடர்ச்சியை அலாதியான முறையில்

* —‘‘கட்சிகள்.’’—ப-ர்.

வெளிப்படுத்துகின்றன. நிற்க, சில இடங்களில் ஒரே குலத்தின் உறுப்பினர்கள் அநேகமாகப் பழைய பிரதேசத்திலேயே ஒன்றாகக் கூடி வாழ்கின்றனர். உதாரணமாக, 1830ஆம் ஆண்டுகளில் மொனாகான் பிரதேச வாசிகளில் மிகப் பெரும்பான்மையினர் நான்கு குடும்பப் பெயர்களை மட்டுமே கொண்டிருந்தனர்; அதாவது அவர்கள் நான்கு குலங்களிலிருந்து அல்லது கிளான்களிலிருந்து சந்ததியினராக வந்தவர்கள்.*

---

* நான் அயர்லாந்தில் சில நாட்கள் தங்கியிருந்த பொழுது[29] அங்குள்ள கிராம மக்கள் எப்படி குலக் காலத்தியக் கருத்தமைப்புகளில் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மறுபடியும் உணர்ந்தேன். விவசாயி நிலக்கிழாரின் குத்தகைக்காரனாகத்தான் இருக்கிறான். அந்த நிலக்கிழாரை ஒரு மாதிரியான கிளான் தலைவனாகவே விவசாயி இன்னும் கருதுகிறான்; அவர் எல்லோருடைய நன்மைக்காகவே விவசாயத்தை மேற்பார்வை செய்ய வேண்டும். குத்தகையின் வடிவத்தில் கப்பம் வாங்குகின்ற உரிமை அவருக்கு உண்டு, விவசாயி கஷ்டப்படுகின்ற பொழுது அவர் உதவி செய்ய வேண்டும் என்று அவன் கருதுகிறான். அதே போல் வசதியாக வாழ்கின்ற ஒவ்வொருவரும் அண்டையில் ஏழ்மையிலுள்ளவர்கள் கஷ்டப்படுகின்ற காலங்களில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது கடமை என்றும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட உதவி தர்மம் செய்வதல்ல. கிளானின் ஏழை உறுப்பினன் கிளானின் பணக்கார சக உறுப்பினனிடமிருந்து அல்லது கிளான் தலைவனிடமிருந்து உரிமையின் பேரில் பெறுவது அது. ஐரிஷ் விவசாயிகளுடைய மூளையில் முதலாளி வர்க்கச் சொத்து பற்றிய நவீனக் கருத்துகளைப் பதிய வைப்பது முற்றிலும் இயலாத காரியம் என்று அரசியல் பொருளியலாளர்களும் சட்ட நிபுணர்களும் ஏன் புகார் செய்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. உரிமைகளை மட்டுமே பெற்ற, கடமைகளே இல்லாத சொத்து ஒன்று இருக்க முடியும் என்பது அந்த விவசாயிகளுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். பல ஐரிஷ்காரர்கள் இப்படிப்பட்ட அப்பாவித்தனமான குலக் கருத்தமைப்புகளுடன் திடீரென்று இங்கிலாந்து அல்லது அமெரிக்காவின் பெரிய நகரங்களில் முற்றிலும் வேறுவிதமான ஒழுக்க, சட்ட அளவுகோல்களுடன் உள்ள மக்களிடையே தள்ளப்படுகின்ற பொழுது அவர்கள் ஒழுக்கம், நீதி பற்றிய தமது கருத்துகளில் குழப்பமடைந்து, சிறிதும் பிடிப்பில்லாது கூட்டம் கூட்டமாக மனமுறிவுக்கு இரையாக வேண்டிய நிலைக்கு ஆளாவதில் வியப்

ஸ்காட்லாந்தில் குல அமைப்பின் வீழ்ச்சி 1745ஆம் ஆண்டுக் கலகத்தை[30] ஒடுக்கியதிலிருந்து ஆரம்பமாகிறது. இந்த அமைப்பில் ஸ்காட்லாந்து கிளான் துல்லியமாக எந்தக் கண்ணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம். அது ஒரு கண்ணி என்பதில் சந்தேகமில்லை. வால்டர் ஸ்காட்டின் நாவல்கள் ஸ்காட்லாந்தின் குன்றுப் பிரதேசங்களைச் சேர்ந்த கிளானைப் பளிச்சென்று நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்துகின்றன. அதைப் பற்றி மார்கன் பின்வருமாறு கூறுகிறார்: இந்த கிளான்

''அமைப்பிலும், உணர்ச்சியிலும் குலத்தின் மிகச் சிறந்த மாதிரியாகும். தன் உறுப்பினர்கள் மீது குல வாழ்க்கைக்கு இருந்த சக்திக்கும் அது ஒரு அசாதாரணமான உதாரணமாகும்.... அவர்களுடைய விரோதங்கள், இரத்தப் பழி வாங்குதல், குல ரீதியில் அங்கங்கே வசித்தல், நிலங்களைப் பொதுவில் பயன்படுத்தல், கிளான் உறுப்பினன் தலைவனிடமும் மற்ற உறுப்பினர்களிடமும் காட்டும் விசுவாசம்—இவற்றில் குல சமுதாயத்தின் வழக்கமான, விடாப்பிடியான குணாம்சங்களைக் காண்கிறோம்.... மரபுமுறை ஆண்வழியில் இருந்தது; ஆண்களின் குழந்தைகள் கிளானின் உறுப்பினர்களாகவே இருந்தார்கள். அதன் பெண் உறுப்பினர்களது குழந்தைகள் முறையே தங்கள் தகப்பனாருடைய கிளான்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.''*

ஸ்காட்லாந்தில் முன்பு தாயுரிமை அமுலில் இருந்தது. இதைப் பிக்டுகளின் அரச குடும்பம் நிரூபிக்கிறது. இந்த அரச குடும்பத்தில் வாரிசுரிமை பெண்வழியில் இருந்தது என்று பீட் கூறுகிறார். மேலும், மத்திய காலம் வரை ஸ்காட்லாந்து மக்களிடையிலும் வேல்ஸ் மக்களிடையிலும் பூனலுவா குடும்பத்தின் அடையாளங்கள் இருந்தன என்பதை முதல் இரவு உரிமை எடுத்துக்காட்டுகிறது. நஷ்ட ஈடு கொடுத்து இவ்வுரிமையை மீட்காவிட்டால் முந்திய பொதுக் கணவன்மார்களின் கடைசிப் பிரதிநிதியான கிளான் தலைவன் அல்லது அரசன் ஒவ்வொரு மணமகளிடமும் இவ்வுரிமையைக் கோர முடியும்.

---

பில்லை. (1891ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட நான்காம் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

* L. H. Morgan, *Ancient Society*, pp. 357—358.—ப-ர்.

* * *

மக்களினங்கள் குடிபெயர்ந்து சென்ற வரைக்கும் ஜெர்மானியர்கள் குலங்களில் அமைக்கப்பட்டிருந்தார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். அவர்கள் கிறிஸ்துவ சகாப்தம் தொடங்குவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னால்தான் டான்யூப், ரைன், விஸ்லா ஆகிய நதிகளுக்கும் வடக்குக் கடல்களுக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பில் குடியேறினார்கள் என்பது வெளிப்படை. கிம்பிரிகளும் டியூட்டானிகளும், கூட்டமாக இடம் பெயர்ந்து செல்வதில் இன்னும் ஈடுபட்டிருந்தார்கள். மேலும், சுயேவிகளோ, சீஸரது காலம் வரை எங்கும் குடியேறவில்லை. அவர்கள் குலங்களாகவும் இரத்த உறவுமுறைக் குழுக்களாகவும் (gentibus cognationibusque) குடியேறினார்கள் என்று சீஸர் திட்டவட்டமாகக் கூறுகிறார். Gens Julia*ஐச் சேர்ந்த ரோமானியர் ஒருவர் gentibus என்று சொல்லும் பொழுது அதற்குத் திட்டமான அர்த்தம் உண்டு. அந்த அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளவே முடியாது. இது எல்லா ஜெர்மானியர்களுக்குமே பொருந்தும். வெற்றி கொள்ளப்பட்ட ரோமானிய மாகாணங்களிலும் குல ரீதியில்தான் குடியேற்றம் நடந்ததாகத் தோன்றுகிறது. டான்யூப் நதிக்குத் தெற்கிலிருந்த படையெடுக்கப்பட்ட நிலப்பரப்பில் குலங்களாக (genealogiae) மக்கள் குடியேறினார்கள் என்ற விவரத்தை அலமான்னியச் சட்டம்[31] உறுதி செய்கிறது. Genealogia என்ற சொல் பிற்காலத்தில் மார்க் அல்லது கிராமச் சமூகம் என்ற சொற்களுக்குரிய அர்த்தத்திலேதான் உபயோகிக்கப்பட்டது. இந்த genealogiae என்பவை பெரிய வீட்டுச் சமூகங்களே, அவற்றுக்கு இடையில் நிலம் பங்கிடப்பட்டிருந்தது, அவற்றிலிருந்துதான் பிற்காலத்தில் கிராமச் சமூகங்கள் வளர்ச்சியுற்றன என்ற கருத்தைச் சமீபத்தில் கவலேவ்ஸ்கி வெளியிட்டார். Fara என்பதற்கும் இது சரியாக இருக்கலாம். அலமான்னியச் சட்டத்தில் genealogia என்று குறிக்கப்படுவதைத் துல்லியமாக இல்லாவிட்டாலும் அநேகமாக அதைப் போன்றதைத்தான் புர்குண்டியர்களும் லாங்கோபார்டுகளும்—எனவே கோதிக் இனக்

* —ஜூலியா குலம்.—ப-ர்.

குழுவும் ஹெர்மினோனியன் அல்லது மேல் ஜெர்மன் இனக்குழுவும்— fara என்ற சொல்லால் குறித்தார்கள். இது மெய்யாகவே குலத்தைக் குறிக்கிறதா அல்லது வீட்டுச் சமூகத்தைக் குறிக்கிறதா என்பது மேலும் ஆராயப்பட வேண்டியதாகும்.

குலம் என்பதற்கு ஜெர்மானியர்கள் எல்லோரிடமும் ஒரு பொதுவான சொல் இருந்ததா, இருந்திருக்குமானால் அந்தச் சொல் என்ன என்ற விஷயத்தில் மொழி பற்றிய ஆவணங்கள் சந்தேகத்தையே தருகின்றன. சொல்லிலக் கணத்தின்படி, கிரேக்கச் சொல் genos, லத்தீன் சொல் gens ஆகிய இரண்டும் கோதிக் சொல் kuni, மத்திய மேல் ஜெர்மன் künne இரண்டுடனும் பொருந்துகின்றன, அதே அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்படுகின்றன. பெண் என்ற சொல்லும் ஒரே வேர்ச்சொல்லிலிருந்து—கிரேக்க மொழியில் gyne, ஸ்லாவ் மொழியில் žena, கோதிக் மொழியில் qvino, பழங்கால நோர்ஸ் மொழியில் kona, kuna—பெறப்படுவதைக் கொண்டு நாம் தாயுரிமைக் காலத்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்படுகிறோம். முன்னே கூறியபடி, புர்குண்டியர்கள், லாங்கோபார்டுகள் மத்தியில் fara என்ற சொல் வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். கிரிம் என்பவர் அதை fisan—பெற்றெடுத்தல் என்ற உத்தேச வேர்ச் சொல்லிலிருந்து பெறுகிறார். அதைக் காட்டிலும் வெளிப் படையான faran—செல்லுதல்*, திரிதல், திரும்ப வருதல் என்ற வேர்ச்சொல்லிலிருந்து அதை அடையாளம் கண்டு கொள்ளவே நான் விரும்புகிறேன். இந்தச் சொல் நாடோடியாக வாழ்கின்ற மக்களின் திட்டவட்டமான ஒரு பகுதியை—இது உறவினர்களைக் கொண்டது என்று சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்—குறிப்பிடுகிறது. முதலில் கிழக்கிலும் பிறகு மேற்கிலும் பல நூற்றாண்டுகளாக சுற்றித் திரிந்த போக்கில் இந்தச் சொல் படிப்படியாக குலக் கூட்டுச் சமூகத்துக்கும் பிரயோகிக்கப்பட்டது. மேலும், கோதிக் மொழியில் sibja, ஆங்கில-சாக்சன் மொழியில் sib, பழங்கால மேல் ஜெர்மன் மொழியில் sippia, sippa —இரத்த உறவினர்கள்** என்ற சொற்களும் உள்ளன.

---

* —ஜெர்மன் மொழியில் fahren.—ப-ர்.

** —ஜெர்மன் மொழியில் Sippe.—ப-ர்.

பன்மையை மட்டுமே குறிக்கும் sifjar என்ற சொல் (உறவினர்கள்) பழங்கால நோர்ஸ் மொழியில் உள்ளது. ஒருமைச் சொல் Sif என்ற பெண் தெய்வத்தை மட்டுமே குறிக்கிறது. கடைசியாக, ஹில்டெபிராண்டைப் பற்றிய பாடலில்[32] இன்னொரு சொல் வருகிறது. அப்பாடலில் ஹில்டெபிராண்ட் ஹாதுபிராண்ட் என்பவனைக் கேட்கிறார்:

''மக்களிலுள்ள ஆண்களில் உன் தகப்பனார் யார்... நீ எந்தக் குலத்தைச் சேர்ந்தவன்?'' ("eddo huêlîhhes *cnuosles* du sîs").

குலம் என்பதற்கு ஜெர்மன் மொழியில் பொதுவான சொல் ஒன்று இருந்திருக்குமானால் அது கோதிக் மொழி kuni என்ற சொல்லாக இருந்திருக்கக் கூடும். நெருக்கமான உறவுள்ள இதர மொழிகளிலுள்ள சொற்களுடன் அது பொருந்துவதனால் மட்டும் இதைக் குறிக்கவில்லை; குலம் அல்லது இனக்குழுவின் தலைவனை ஆதியில் குறித்த kuning—அரசன்* என்ற சொல்லும் அதிலிருந்து தான் பிறந்தது என்ற உண்மையும் அதைக் குறிக்கிறது. Sibja, இரத்த உறவினர்கள் என்ற சொல் நாம் ஆராய்வதற்குத் தகுதியற்றதாகத் தெரிகிறது. குறைந்தபட்சம், பழங்கால நோர்ஸ் மொழியில் sifjar என்ற சொல் இரத்த உறவினர்களை மட்டுமன்றி திருமண வழியாக வந்த உறவினர்களையும் குறித்தது. எனவே அது குறைந்தபட்சம் இரண்டு குலங்களின் உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. எனவே sif என்ற சொல் குலத்தைக் குறிக்கின்ற சொல்லாக இருக்க முடியாது.

மெக்சிகோ மக்கள், கிரேக்க மக்களிடையே இருந்ததைப் போலவே ஜெர்மானியர்களிடையிலும் குதிரை வீரர்களும் ஆப்பு போன்ற காலாட்படையினரும் போர் செய்வதற்குக் குல ரீதியில்தான் அணிவகுத்து நிறுத்தப்பட்டார்கள். குடும்பங்களாகவும் இரத்த உறவினர்களாகவும் நிறுத்தப்பட்டதாக டாசிட்டஸ் எழுதுகின்ற பொழுது அவருடைய தெளிவில்லாத சொற்பிரயோகத்தை விளக்குவது எது? அவர் காலத்தில் ரோமாபுரியில்

---

* —ஜெர்மன் மொழியில் König.—ப-ர்.

குலம் என்பது நெடுங்காலமாகவே உயிரில்லாத கூடாக இருந்தது என்பதுதான்.

டாசிட்டஸ் நூலில் தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்ட ஒரு பகுதியுண்டு; அதில் அவர் பின்வருமாறு சொல்கிறார்: தாயின் சகோதரன் தனது மருமகனைத் தன் மகனாகவே கருதுகிறான்; தாய்மாமனுக்கும் மருமகனுக்கும் இடையிலுள்ள இரத்த உறவு, தகப்பனார்—மகன் உறவை விட அதிகப் புனிதமானது, நெருக்கமானது என்று சிலர் கூறுகின்றனர்; ஆக, ஜாமீன் நபர்களைக் கோருகின்ற பொழுது, யாருக்காக ஜாமீன் கோரப்படுகிறதோ, அவனுடைய மகனை விட அவனுடைய சகோதரியின் மகனை ஜாமீனாக ஒப்படைப்பது நல்லது என்று கருதப்படுகிறது. தாயுரிமைக் குலம்—ஆக, ஓர் ஆதிக் குலம்—எச்சமாகத் தப்பிப் பிழைத்திருப்பதை இங்கே பார்க்கிறோம்; அது ஜெர்மானியர்களை இனங்காட்டுகின்ற குறியடையாளமாகவும் வர்ணிக்கப்படுகிறது.*

---

* தாய்மாமனுக்கும் மருமகனுக்கும் இடையிலுள்ள உறவின் நெருக்கமான தன்மையை—பல மக்களினங்களிலே காணப்படுகின்ற தாயுரிமையின் எச்சமே இது—வீர யுகத்தைச் சேர்ந்த தொல்கதைகளில்தான் கிரேக்கர்கள் அறிந்திருக்கிறார்கள். டியாடோரஸ் எழுதிய நூலில் (IV, 34) மிலியாகர் தெஸ்டியசின் குமாரர்களைக் கொல்கிறான். அவர்கள் அவனுடைய தாயான அல்தேயாவின் சகோதரர்களாவர். அவள் இதை மிகவும் பாபகரமான குற்றமாகக் கருதுவதால் அவனை, அதாவது தன் சொந்த மகனைச் சபிக்கிறாள், அவன் சாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறாள். ''தெய்வங்கள் அவள் விருப்பத்தை நிறைவேற்றின, மிலியாகரின் வாழ்க்கையை முடித்தன என்று சொல்லப்படுகிறது.'' அதே ஆசிரியர் சொல்கிறபடி (டியாடோரஸ், IV, 43 மற்றும் 44), ஹெராக்லசின் தலைமையில் சென்ற அர்கோனாட்டுகள் திராகியாவில் இறங்கினார்கள். அவர்கள் அங்கே பீனியஸ் என்பவன் தனது இரண்டாவது மனைவியின் தூண்டுதலின் பேரில் முதல் மனைவியின் மூலம் பிறந்த தன் புதல்வர்கள் இருவரையும் மோசமாக நடத்தி வருவதைக் கண்டார்கள். அவன் முதல் மனைவியைத் தள்ளி வைத்திருக்கிறான். அவளுடைய பெயர் கிளியோபாத்ரா போரியாட். ஆனால் அர்கோனாட்டுகள் மத்தியிலும் சில போரியாட்டுகள் இருக்கிறார்கள், அவர்கள் கிளியோபாத்ராவின் சகோதரர்கள். எனவே அவர்கள் மோசமாக நடத்தப்

இவ்விதக் குலத்தின் உறுப்பினன் தான் நிறைவேற்ற ஒத்துக் கொண்ட பொறுப்புக்கு ஜாமீனாகத் தன் மகனைக் கொடுத்துத் தகப்பனின் நம்பிக்கை மோசடியால் மகன் பலியாக நேர்ந்தால், அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியவன் தகப்பன் ஒருவனே. ஆனால் ஒரு சகோதரியின் மகன் பலியாக்கப்படும் பொழுது புனிதமான குல விதி மீறப்படுகிறது. அந்தச் சிறுவனை அல்லது வாலிபனைப் பாதுகாப்பதற்கு மற்றவர்களை விடக் கடமைப் பட்டிருக்கிற அடுத்த இரத்த உறவினன் அவனுடைய மரணத்துக்குப் பொறுப்பாகிறான். அவன் அந்தச் சிறுவனை ஜாமீனாகத் தந்திருக்கக் கூடாது அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும். ஜெர்மானியர்கள் மத்தியில் குல அமைப்பு இருந்ததற்கு வேறெந்த அடையாளக் குறிகளும் நமக்கு இல்லாமற் போனாலும் இந்த நூல் பகுதி ஒன்றே அதற்குப் போதுமான சான்றாகும்.

இதை விடத் தீர்மானகரமான சான்று—அது சுமார் 800 ஆண்டுகள் கழித்து வருவதால் அதைத் தீர்மானகரமானது என்கிறோம்—*Völuspâ* என்கிற பழங்கால நோர்ஸ் பாடலில் தெய்வங்களின் அந்திக்காலம் மற்றும் உலகத்தின் முடிவு பற்றி எழுதப்பட்டிருக்கின்ற ஒரு பகுதியாகும். ''பெண்ஞானியின் மனக்காட்சி'' என்னும் இப்பகுதியில் கிறிஸ்துவ சமயத்தின் அம்சங்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்று பாங்க், புக்கே ஆகியோர் காட்டியிருக்கின்றனர். ஊழிப் பெருவெள்ளத்துக்கு முன் ஒழுக்கக் கேடும் ஊழலும் எங்கும் நிறைந்திருக்கின்ற காலப் பகுதியைப் பற்றிய வர்ணனையில் இந்த வாசகம் காணப்படுகிறது:

"Broedhr munu berjask ok at bönum verdask,
munu *systrungar* sifjum spilla."

''சகோதரர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள்; ஒருவரையொருவர் மடித்துக் கொள்வார்கள்.

---

பட்டு வந்த அந்தப் புதல்வர்களுக்குத் தாய்மாமன் முறையாக வேண்டும். எனவே அவர்கள் உடனே மருமகன்களின் உதவிக்குச் சென்று அவர்களை விடுவிக்கிறார்கள், அவர்களைக் காவல் செய்தவர்களைக் கொல்கிறார்கள். **(எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

மேலும், சகோதரிகளின் குழந்தைகள் இரத்த உறவுமுறையின் பிணைப்புகளை முறித்தெறிவார்கள்.''

Systrungr என்பதற்குத் தாயின் சகோதரியின் மகன் என்று அர்த்தம். சகோதரிகளின் குழந்தைகள் இரத்த உறவை நிராகரிப்பது சகோதரனைக் கொலை செய்த குற்றத்தை விடக் கொடிய குற்றமாகும் என்று கவிஞர் கருதுகிறார். தாயின் தரப்பைச் சேர்ந்த இரத்த உறவை வலியுறுத்துகின்ற systrungar என்ற சொல்லில் அதன் உச்சி இருக்கிறது. Syskina-börn (சகோதரர், சகோதரிகளின் குழந்தைகள்) அல்லது syskina-synir (சகோதரர், சகோதரிகளின் புதல்வர்கள்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தால், இரண்டாவது வரி முதல் வரியிலிருந்து உச்ச நிலைக்குப் போயிருக்காது, அதற்கு பதிலாகக் கீழ்நிலைக்கு இறங்குவதாக இருக்கும். எனவே *Völuspâ* இயற்றப்பட்ட வைக்கிங்குகள் காலத்திலும் ஸ்காண்டிநேவியாவில் தாயுரிமை பற்றிய நினைவு இன்னும் அழியாமலிருந்தது.

மற்றபடி, டாசிட்டஸ் காலத்தில், ஜெர்மானியர்களிடையில்—குறைந்தபட்சம், அவர்களைப் பற்றித்தான் அவருக்கு அதிகமாகத் தெரியும்—ஏற்கெனவே தாயுரிமை தந்தையுரிமைக்கு வழிவிட்டு விட்டது. குழந்தைகள் தகப்பனாரின் வாரிசுகளே; குழந்தைகள் இல்லாவிட்டால், சகோதரர்களும் தந்தை, தாய் வழி வந்த மாமன்மார்களும் வாரிசுகளாவார்கள். தாயின் சகோதரனை வாரிசுரிமைக்குள் அனுமதிப்பது மேற்கூறிய வழக்கத்தைப் பாதுகாப்பதுடன் சம்பந்தப்பட்டதாகும்; மேலும், அக்காலத்தில் ஜெர்மானியர்களிடையில் தந்தையுரிமை எவ்வளவு அண்மையில் ஏற்பட்டிருந்தது என்பதையும் அது நிரூபிக்கிறது. பிந்திய மத்திய காலத்தில் கூட தாயுரிமையின் அடையாளச் சின்னங்களை நாம் பார்க்கிறோம். இக்காலகட்டத்தில், குறிப்பாகப் பண்ணையடிமைகள் மத்தியில் தந்தைமை இன்னும் சந்தேகத்திற்குரியதாகவே இருந்தது. எடுத்துக்காட்டாக, ஓடிப் போன பண்ணையடிமை ஒரு நகரத்திலிருந்து திருப்பியனுப்பப்பட வேண்டுமென்று ஒரு நிலக்கிழார் கோரிய பொழுது, அவன் பண்ணையடிமைதான் என்பதை நிலைநாட்டுவதற்கு அவனது தாய் தரப்பிலிருந்து மட்டுமே வந்த மிக

நெருங்கிய ஆறு இரத்த உறவினர்களின் பிரதிக்ஞைகள் தேவைப்பட்டன; உதாரணமாக, ஔக்ஸ்பர்க், பாஸெல், கைஸர்ஸ்லவுடர்ன் ஆகிய இடங்களில் இப்படித் தான் இருந்தது (மௌரர், நகர அமைப்பு, I, பக்கம் 381).

அன்று நசியத் தொடங்கியிருந்த தாயுரிமையின் மற்றொரு எச்சம் பெண்ணினத்தின் பால் ஜெர்மானியர்கள் வைத்திருந்த மதிப்பே; ரோமானியக் கண்ணோட்டத்தின் படி இதை விளக்குவது மிகக் கடினமே. ஜெர்மானியர் களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்று வதற்கு உத்தரவாதமாக உயர்குடிக் குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் சிறந்த பணயக் கைதிகள் என்று கருதப்பட்டார்கள். தமது மனைவியரும் புதல்வியரும் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்படலாம் என்ற பயங்கரமான சிந்தனையைப் போல் யுத்தத்தில் அவர் களுக்கு வீரியத்தைக் கொடுத்த சிந்தனை வேறொன்றும் இல்லை; பெண் புனிதமானவள், ஓரளவுக்கு எதிர்காலத்தை முன்னறிவிக்கக் கூடியவள் என்று அவர்கள் கருதினார் கள்; மிகவும் முக்கியமான விவகாரங்களில் அவளுடைய ஆலோசனையின்படி நடந்தார்கள். லீப் நதி மேலிருந்த புருக்டேரிய இனக்குழுவின் விலேடா என்கிற பூசாரிப் பெண் படேவிய எழுச்சி முழுவதையும் இயக்குகிற சக்தி யாக இருந்தாள். இந்த எழுச்சியின் போது ஜெர்மானி யர்களுக்கும் பெல்ஜியர்களுக்கும் தலைமை தாங்கிய சிவி லிஸ், கோலில் ரோமானிய ஆட்சியின் அடிப்படைகளையே குலுக்கினான்.[33] வீட்டில் பெண்களுக்கிருந்த அதிகாரத்தை யாரும் மறுக்கவில்லை என்று தெரிகிறது. கிழவர்கள், குழந்தைகளின் உதவியுடன் பெண்கள்தான் எல்லா வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது; ஆண்கள் வேட்டையாடச் சென்றார்கள், குடித்தார்கள், வீணே காலத்தைக் கழித்தார்கள் என்று டாசிட்டஸ் கூறுகிறார். ஆனால் நிலங்களைப் பயிர் செய்தது யார் என்று அவர் எழுதவில்லை; அடிமைகள் கட்டாயக் கட்டணங்களை மட்டுமே கொடுத்து வந்தார்கள், அவர்கள் கட்டாய உழைப்பு எதுவும் செய்யவில்லை என்று அவரே தெளி வாகக் கூறியிருக்கிறார். எனவே செய்ய வேண்டிய விவசாய வேலை எவ்வளவு குறைவாக இருந்தாலும்

அதை வயதுவந்த ஆண்களின் பெரும் பகுதியினர் தான் செய்தார்கள் என்று தோன்றுகிறது.

மேலே எடுத்துக்காட்டியபடி, திருமண வடிவம், ஒரு தார மணத்தைப் போல படிப்படியாக ஆகிக் கொண்டிருந்த இணை மணமே ஆகும். கண்டிப்பான ஒருதார மணம் இன்னும் ஏற்படவில்லை, ஏனென்றால் பலதார மணம் செல்வர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் (கெல்டுகளைப் போலன்றி) பெண்கள் கண்டிப்பாகக் கற்புடன் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ஜெர்மானியர்களுடைய திருமண பந்தத்தின் மீற முடியாத தன்மையைப் பற்றி டாசிட்டஸ் மனமுருகி எழுதுகிறார்; பெண் சோரம் போவது ஒன்றைத்தான் திருமணரத்துக்குக் காரணமாகக் காட்டுகிறார். ஆனால் அவருடைய வர்ணனையில் பல இடைவெளிகள் இருக்கின்றன; மேலும், ஒழுக்கக் கேட்டில் திளைத்த ரோமானியர்களை ஒழுக்கத்தின் ஆதர்சமாகக் காட்டுவதற்கு அது வெளிப்படையாக முயற்சி செய்கிறது. ஒன்று மட்டும் உறுதி: காடுகளில் வாழ்ந்த ஜெர்மானியர்கள் ஒழுக்கத்தின் பேருருவமாக இருந்தார்களென்றால், அவர்களை மற்ற சராசரி ஐரோப்பியர்களின் தரத்துக்கு இறக்கி விடுவதற்கு வெளியுலகத்துடன் சிறிதளவு தொடர்பு மட்டுமே போதுமானதாக இருந்தது. ரோமானிய வாழ்க்கையின் வேகச் சுழலில் கண்டிப்பான ஒழுக்கத்தின் கடைசி அறிகுறி ஜெர்மன் மொழியை விட விரைவாக மறைந்து விட்டது. தூர் நகரத்து கிரிகோரியைப் படித்தால் போதும். நாகரிக முலாம் பூசிய சிற்றின்ப வாழ்க்கை ரோமாபுரியில் இருந்ததைப் போல ஜெர்மனியின் ஆதிகாலக் காடுகளில் இருக்க முடியவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். ஆக, இந்த அம்சத்திலும் ரோமானிய உலகை விட ஜெர்மானியர்கள் உயர்ந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால் அதற்காக எந்த மக்களினத்திலும் எக்காலத்திலும் பொது விதியாக இருக்காத காம இச்சைக் கட்டுப்பாடு அவர்களிடம் இருந்ததாகக் கற்பிக்க வேண்டியதில்லை.

தனது தகப்பனார், உறவினர்களின் நட்புகளை மட்டுமன்றி சண்டைகளையும் சுவீகரித்துக் கொள்ள வேண்டிய கடமையும் குல அமைப்பிலிருந்துதான் தோன்றியது. மன்னிப்புக் காணிக்கை (wergeld), அதாவது கொலை செய்த

தற்கு அல்லது காயப்படுத்தியதற்கு இரத்தப் பழி வாங்குவதற்கு பதிலாகப் பிராயச்சித்தம் செய்கின்ற முறையில் செலுத்தும் தொகையும் அதைப் போன்றதே. இந்த மன்னிப்புக் காணிக்கை ஓர் அலாதியான ஜெர்மன் ஏற்பாடு என்று ஒரு தலைமுறைக்கு முன்னர் கருதப்பட்டது. குல அமைப்பிலிருந்து தோன்றிய இரத்தப் பழியின் இந்த நயமான வடிவத்தை நூற்றுக்கணக்கான மக்களினங்கள் கடைப்பிடித்தன என்று அதற்கு பின்னர் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, விருந்தோம்பல் என்ற கடமையைப் போல, அமெரிக்க செவ்விந்தியர்களிடம் அது காணப்படுகிறது; விருந்தோம்பல் முறையைப் பற்றி டாசிட்டஸ் தரும் வர்ணனை (ஜெர்மானியா, அத்தியாயம் 21) விவரங்களில் கூட செவ்விந்தியர்களைப் பற்றி மார்கன் அளித்த வர்ணனையை ஒத்திருக்கிறது.

டாசிட்டஸ் காலத்தைச் சேர்ந்த ஜெர்மானியர்கள் ஏற்கெனவே விளை நிலங்களை முடிவாகப் பங்கீடு செய்திருந்தார்களா, இல்லையா, அது சம்பந்தப்பட்ட நூல் பகுதிகளின் சரியான அர்த்தம் என்ன என்பவற்றைப் பற்றி நடைபெற்ற உணர்ச்சிகரமான, இடைவிடாத சர்ச்சை இப்பொழுது பழைய சங்கதியாகி விட்டது. அநேகமாக எல்லா மக்களினங்களிலும் விளை நிலங்கள் குலங்களினால் பொதுவில் உழுது பயிர் செய்யப்பட்டன, பிற்காலத்தில் பொதுவுடைமைக் குடும்பச் சமூகங்களினால் பொதுவில் உழுது பயிர் செய்யப்பட்டன (இந்த வழக்கம் சுயேவிகளிடையில் இன்னும் நீடித்திருப்பதை சீஸர் கண்டார்), பிற்காலத்தில் அந்த நிலம் தனித்தனிக் குடும்பங்களிடையில் பங்கு பிரிக்கப்பட்டும் அவ்வப்பொழுது மறுபடியும் பங்கீடு செய்யப்பட்டும் வந்தது, அவ்வப்பொழுது நடைபெறுகின்ற இந்த மறு பங்கீடு இன்றைய தினம் வரை ஜெர்மனியின் சில பகுதிகளில் இருக்கிறது என்பவை நிலைநாட்டப்பட்ட பிறகு நாம் இவ்விஷயங்களில் இனியும் முயற்சியை வீணாக்க வேண்டியதில்லை. ஜெர்மானியர்கள் 150 ஆண்டுகளில் பொது விவசாயத்திலிருந்து—சுயேவிகளிடம் இவ்வழக்கம் இருந்ததாக சீஸர் திட்டவட்டமாகக் கூறுகிறார்; அவர்களிடம் பிரிவோ, பிரிவான விளை நிலமோ, தனிப்பட்ட விளை நிலமோ எதுவும் கிடையாது என்று அவர் கூறுகிறார்—டாசிட்டஸ் காலத்தில் ஆண்டு

தோறும் நிலத்தை மறு பங்கீடு செய்வதுடன் சேர்ந்த தனிப்பட்ட விவசாயத்துக்கு வந்து சேர்ந்தார்கள் என்றால், அது நிச்சயமாகப் போதிய முன்னேற்றமே. அந்தக் கட்டத்திலிருந்து அவ்வளவு குறுகிய காலத்தில், வெளித் தலையீடு எதுவுமின்றி நிலத்தில் முழுமையான தனியுடைமைக்கு மாறுதல் சாத்தியமே அல்ல. எனவே டாசிட்டஸ் நூலில் அவரே அநேகமாகச் சொல்வதைத்தான் நான் உணர முடியும்: அவர்கள் ஆண்டுதோறும் விளை நிலத்தை மாற்றுகிறார்கள் (அல்லது மறு பங்கீடு செய்கிறார்கள்); அதில் போதுமான பொது நிலமும் மிஞ்சுகிறது. விவசாயத்துக்கும் நிலத்தைப் பயன்படுத்தலுக்கும் உரிய அந்தக் கட்டம் அக்காலத்திய ஜெர்மானியர்களின் குல அமைப்புக்கு முற்றிலும் சரியாக இருந்தது.

மேலேயுள்ள பாராவை முந்திய பதிப்புகளில் உள்ளபடியே விட்டு வைக்கிறேன். இதற்கிடையில் இந்தப் பிரச்சினை மற்றொரு அம்சத்தைப் பெற்றிருக்கிறது. தந்தை வழி வீட்டுச் சமூகம் சர்வப்பொதுவாக இல்லாவிட்டாலும் பரவலாக இருந்தது, தாயுரிமை வகைப்பட்ட பொதுவுடைமைக் குடும்பத்துக்கும் நவீன காலத்திய தனிப்பட்ட குடும்பத்துக்கும் இடையில் அது இணைப்புக் கண்ணியாக இருந்தது என்பதை கவலேவ்ஸ்கி நிரூபித்துக் காட்டியிருப்பதனால்(மேலே பக்கம் 44 பார்க்க*)நிலம் பொதுச் சொத்தாக இருந்ததா, தனிச் சொத்தாக இருந்ததா—மௌரரும் வெயிட்சும் இன்னும் இதைத்தான் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்—என்பது இப்பொழுது பிரச்சினை அல்ல, பொதுச் சொத்து என்ன வடிவம் கொண்டிருந்தது என்பதே பிரச்சினையாகும். சீஸர் காலத்தில் சுயேவிகள் நிலத்தைப் பொதுவுடைமையாக வைத்திருந்தது மட்டுமன்றி நிலத்தைப் பொதுக் கணக்கில் பொதுவில் விவசாயம் செய்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களுடைய பொருளாதார அமைப்பின் அலகு குலமா அல்லது வீட்டுச் சமூகமா அல்லது இடைநிலைப் பொதுவுடைமை வகைப்பட்ட இரத்த உறவுக் குழுவா; அல்லது

---

* இங்கே எங்கெல்ஸ் குறிப்பிடுகின்ற பக்கம் நான்காவது ஜெர்மன் பதிப்பிலுள்ள பக்கமாகும். இத்தொகுதியில் பக்கங்கள் 96—97ஐப் பார்க்க.—ப-ர்.

வெவ்வேறு ஸ்தல நில நிலைமைகளைப் பொறுத்து இந்த மூன்று குழுக்களுமே இருந்து வந்தனவா என்ற கேள்விகள் இன்னும் நெடுங்காலம் வரை சர்ச்சைக்குரிய விஷயங்களாகவே இருந்து வரும். டாசிட்டஸ் வர்ணித்திருக்கின்ற நிலைமைகள் மார்க் அல்லது கிராமச் சமூகங்களைப் பற்றியவை அல்ல, அதற்கு பதிலாக வீட்டுச் சமூகத்தைப் பற்றித்தான் கூறுகின்றன, வீட்டுச் சமூகம்தான் நெடுங் காலத்திற்குப் பிறகு, மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக கிராமச் சமூகமாக வளர்ந்தது என்று கவலேவ்ஸ்கி எழுதுகிறார்.

எனவே ரோமானியர் காலத்தில் தாங்கள் வசித்திருந்த பிரதேசங்களிலுள்ள ஜெர்மானியக் குடியிருப்புகளும், பின்னர் ரோமானியர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட பிரதேசங்களிலுள்ள ஜெர்மானியக் குடியிருப்புகளும் கிராமங்களாக இருந்திருக்க முடியாது; அவை சில தலைமுறைகளைக் கொண்ட பெரும் குடும்பச் சமூகங்களாகத் தான் இருந்திருக்க வேண்டும். அவை அதற்கேற்றபடி மாபெரும் நிலப்பரப்பில் விவசாயம் செய்து சுற்றியுள்ள களர் நிலத்தை ஒரு பொது மார்க்காக தம் பக்கத்தில் வசிப்பவர்களுடன் சேர்ந்து பயன்படுத்தி இருக்கின்றன. அப்படியானால், விளை நிலத்தை மாற்றுவதைப் பற்றி டாசிட்டஸ் நூலில் வருகின்ற பகுதி வேளாண்மையியல் அர்த்தத்தையே உண்மையாகக் கொண்டிருக்கும்; அதாவது, சமூகம் ஆண்டுதோறும் வெவ்வேறு நிலங்களில் விவசாயம் செய்து வந்தது, முந்திய ஆண்டில் விவசாயம் செய்யப்பட்ட நிலம் தரிசாக விடப்பட்டது அல்லது முற்றிலும் கைவிடப்பட்டது என்றாகும். மக்கள்தொகை அடர்த்தி இல்லாதிருந்தபடியால் கையிருப்பில் போதிய களர் நிலம் இருந்திருக்கும், அதனால் நிலத் தகராறுகளே தேவையில்லாத நிலை ஏற்பட்டிருக்கும். பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகுதான், அன்றைய உற்பத்தி நிலைமைகளில் பொது விவசாயம் செய்ய முடியாத அளவுக்கு வீட்டுச் சமூகங்களின் உறுப்பினர்களின் தொகை அதிகரித்த பிறகுதான் வீட்டுச் சமூகங்கள் கலைந்தன என்று சொல்லப்படலாம். முன்னர் பொதுவில் வைக்கப்பட்டிருந்த விளை நிலங்களும் பசும்புல் நிலங்களும் இப்பொழுது உருவாகியிருந்த தனித்தனிக் குடும்பங்களிடையில்

எல்லோருக்கும் தெரிந்த முறையில், முதலில் அவ்வப் பொழுதும் பிறகு நிரந்தரமாகவும் பிரித்துத் தரப்பட்டன; ஆனால் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் நீர்நிலைகளும் பொதுச் சொத்தாகவே இருந்து வந்தன.

ருஷ்யாவைப் பொறுத்தமட்டில், இந்த வளர்ச்சிப் போக்கு வரலாற்று ரீதியில் முழுமையாக நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஜெர்மனியும் இரண்டாம் பட்சமாக மற்ற ஜெர்மானிய இன நாடுகளும் சம்பந்தப்பட்ட மட்டில், கிராமச் சமூகத்தை டாசிட்டஸ் காலத்துக்கு அடையாளம் கண்டுபிடித்துச் செல்கின்ற முந்திய கருத்தை விட இந்த ஊகம் பல அம்சங்களில் மூலாதார விஷயங்களுக்குச் சிறப்பான விளக்கம் தருகிறது, சிக்கல்களுக்குச் சுலபமான விடையும் தருகிறது என்பதை மறுக்க முடியாது. மிகவும் பழைய ஆவணங்களை, உதாரணமாக, Codex Laureshamensisஐ[34], பொதுவாக, கிராம மார்க் சமூகத்தைக் கொண்டு விளக்குவதைக் காட்டிலும் வீட்டுச் சமூகத்தைக் கொண்டு விளக்குவது சுலபம். மறு பக்கத்தில், அது புதிய சிக்கல்களையும் விடை காண வேண்டிய புதிய பிரச்சினைகளையும் முன்வைக்கிறது. இங்கே மேலும் அதிகமாக ஆராய்ச்சி செய்தால்தான் தீர்வு கிடைக்கும். ஜெர்மனியிலும் ஸ்காண்டிநேவியாவிலும் இங்கிலாந்திலும் வீட்டுச் சமூகம் ஒரு இடைநிலைக் கட்டமாக இருந்திருக்கக் கூடும் என்பது பெரும்பாலும் சாத்தியமே.

சீஸர் காலத்தில் ஜெர்மானியர்கள் ஓரளவுக்குத்தான் குடிதங்கி வாழத் தொடங்கியிருந்தார்கள், ஓரளவுக்கு அப்படி வாழ்வதற்கு இன்னும் வழி தேடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் டாசிட்டஸ் காலத்தில் அவர்கள் ஏற்கெனவே ஒரு நூற்றாண்டுக் காலம் குடிதங்கி இருந்தார்கள். அதனால் வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் நன்கு தெரிந்தது. அவர்கள் மரக்கட்டைகளைக் கொண்டு வீடுகளைக் கட்டி வசித்தார்கள்; அவர்களுடைய உடை இன்னும் ஆதிகாலக் காட்டு ரகத்தைச் சேர்ந்ததாக இருந்தது, அதாவது முரட்டுக் கம்பளிகளையும் மிருகத் தோல்களையும் அணிந்தார்கள்; பெண்களும் பிரபுக்களும் சணல் உள்ளாடைகளை உபயோகித்தார்கள். அவர்கள் பால், இறைச்சி,

காடுகளில் பொறுக்கிய கனிகள், இன்னும் பிளினி சொல்வதைப் போல, ஓட்ஸ் தானியக் கூழும் (அயர்லாந்திலும் ஸ்காட்லாந்திலும் இது கெல்டுகளின் தேசிய உணவாக இன்று வரை இருந்து வருகிறது) ஆகியவற்றை—உண்டு வாழ்ந்தார்கள். அவர்களின் செல்வம் கால்நடைகளே; ஆனால் அவை கீழ்ரக இனத்தைச் சேர்ந்தவை: மாடுகள் சிறியவையாகவும் அவலட்சணமாகவும் கொம்புகள் இல்லாமலும் இருந்தன; குதிரைகள் சிறியவையாக இருந்தன, வேகமாக ஓட முடியாது. பணம், அதாவது ரோமானிய நாணயங்கள் மட்டுமே சொற்பமாகப் புழங்கின; அவற்றை எப்பொழுதாவது உபயோகித்தார்கள். அவர்கள் தங்கம் அல்லது வெள்ளிச் சாமான்கள் செய்யவில்லை, அந்த உலோகங்களுக்கு எவ்வித மதிப்பும் தரவில்லை. இரும்பு சொற்பமாகத்தான் கிடைத்தது, குறைந்தபட்சம் ரைன், டான்யூப் நதிக் கரைகளில் வசித்த இனக்குழு மக்கள் மத்தியில் இரும்பு முழுவதும் அநேகமாக இறக்குமதி செய்யப்பட்டது, வெட்டியெடுக்கப்படவில்லை. கிரேக்க, லத்தீன் எழுத்துகளைப் பின்பற்றிய ரூனிக் வரிவடிவம் இரகசிய பரிபாஷை என்ற முறையில் மதச் சடங்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நரபலி இன்னும் வழக்கமாக இருந்தது. சுருக்கமாகக் கூறினால், அநாகரிக நிலையின் இடைக்கட்டத்திலிருந்து தலைக் கட்டத்துக்கு அப்பொழுதுதான் வந்து கொண்டிருந்த மக்கள் அவர்கள். ரோமானியர்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்த இனக்குழுக்களுக்கு ரோமானியத் தொழிற்பண்டங்களை இறக்குமதி செய்து கொள்ள முடிந்தது; அதனால் அவை சொந்தமாக உலோகத் தொழில் மற்றும் துணி நெசவுத் தொழிலை வளர்க்காதபடித் தடுக்கப்பட்டன. ஆனால் வட கிழக்கில், பால்டிக் பிரதேசத்தில் இருந்த இனக்குழுக்கள் இந்தத் தொழில்களை வளர்த்தன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஷ்லேஸ்விக் சதுப்பு நிலங்களில் கண்டெடுத்த கவச அணிகளும்—நீண்ட இரும்பு வாள், கவசம், வெள்ளியில் செய்யப்பட்ட தலைக் காப்பணி முதலியன—அவற்றுடன் 2ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியைச் சேர்ந்த ரோமானிய நாணயங்களும் மக்களினங்கள் குடிபெயர்ந்ததனால் பரப்பப்பட்ட ஜெர்மன் உலோகச் சாமான்களும், ரோமானிய

அசல்களை மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை கூட—தனித்தன்மையுள்ள சிறந்த வேலைப்பாட்டைக் காட்டுகின்றன. நாகரிக ரோமானியப் பேரரசுக்குக் குடியேறியதினால் இந்த சுதேசித் தொழில் இங்கிலாந்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் நசித்துப் போயிற்று. இந்தத் தொழில் எப்படி ஒரே சீராகத் தோன்றி வளர்ச்சியடைந்தது என்பதை வெண்கலப் பித்தான்கள் காட்டுகின்றன. புர்குண்டியிலும் ருமேனியாவிலும் அஸோவ் கடலோரத்திலும் கண்டெடுக்கப்பட்ட இம்மாதிரிப் பொருட்கள் பிரிட்டிஷ், ஸ்வீடிஷ் பொருட்களை உற்பத்தி செய்த அதே பட்டறையில்தான் செய்யப்பட்டிருக்கக் கூடும்; அதே சமயம் அவை ஜெர்மனியில் உற்பத்தி செய்யப் பட்டவை என்பதில் சந்தேகமில்லை.

அவர்களுடைய நிர்வாக அமைப்பு அநாகரிக நிலையின் தலைக்கட்டத்துக்குப் பொருத்தமாகவே இருந்தது. டாசிட்டஸ் கூறுகிறபடி, எங்குமே தலைவர்களின் (principes) கவுன்சில் இருந்தது. இது சொற்ப முக்கியத்துவமுடைய விவகாரங்களை முடிவு செய்தது, மக்கள் சபை முடிவு செய்வதற்கு முக்கியமான விவகாரங்களைத் தயாரித்துக் கொடுத்தது. அநாகரிக நிலையின் கடைக்கட்டத்தில், குறைந்தபட்சம் நமக்குத் தெரிந்த இடங்களில், அமெரிக்கர்களிடையில் இருந்த மாதிரி இந்த மக்கள் சபை குலத்தில் மட்டுமே கூட்டப்பட்டது; இனக்குழுவிலோ, இனக்குழுக்களின் கூட்டிலோ நடைபெறவில்லை. இராகோஸ்களிடம் இருந்ததைப் போல, கவுன்சில் தலைவர்கள் (principes) இராணுவத் தலைவர்களிலிருந்து (duces) கூர்மையாக வேறுபடுத்திக் காட்டப்பட்டனர்; கவுன்சில் தலைவர்கள் ஏற்கெனவே ஓரளவுக்கு கால்நடை, தானியம், இதரவற்றை அன்பளிப்புகளாகத் தம் இனக்குழு மக்களிடமிருந்து பெற்று வாழ்ந்தார்கள். அமெரிக்காவில் நிலவியதைப் போல அவர்கள் பொதுவாக ஒரேயொரு குடும்பத்திலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கிரீசிலும் ரோமாபுரியிலும் நடந்ததைப் போல தந்தையுரிமைக்கு மாற்றம் தேர்வுப் பதவிகள் பரம்பரைப் பதவிகளாகப் படிப்படியாக மாறியதற்கு உதவியது. இது ஒவ்வொரு குலத்திலும் ஒரு பிரபுத்துவக் குடும்பத்தை உண்டாக்கியது. இந்தப் பழமையான, இனக்குழுப்

பிரபுத்துவம் என்று சொல்லப்பட்டது மக்களினங்கள் குடி பெயர்ந்த பொழுது அல்லது அதற்குச் சிறிது பின்னரோ பெரும்பாலும் மறைந்து போயிற்று. பிறப்பைப் பற்றிக் கவலைப்படாமல் தகுதி ஒன்றுக்காகவே இராணுவத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுடைய அதிகாரம் குறைவே; தம் சொந்த உதாரணத்தைக் கொண்டு அவர்கள் அதைச் செலுத்த வேண்டியிருந்தது. டாசிட்டஸ் வெளிப்படையாகவே சொல்கிறபடி, இராணுவத்தில் உண்மையான கட்டுப்பாட்டு அதிகாரம் புரோகிதர்களிடம் இருந்தது. மக்கள் சபைதான் மெய்யான அதிகாரம். அரசனோ, இனக்குழுத் தலைவனோ தலைமை வகித்தான்; மக்கள் முடிவெடுத்தார்கள்: அவர்களுடைய முணுமுணுப்பு மறுப்பைக் குறித்தது, கோஷங்களும் ஆயுதங்களின் ஒலிகளும் ஒப்புதலைக் குறித்தன. மக்கள் சபைதான் நீதிமன்றம்; அதில் புகார்கள் செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டன, மரண தண்டனைகள் விதிக்கப்பட்டன. கோழைத்தனம், துரோகம், இயற்கைக்கு விரோதமான கெட்ட பழக்கங்கள் ஆகியவற்றிற்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது. குலங்களும் மற்ற துணைப் பிரிவுகளும் கூட்டமாகக் கூடித் தீர்ப்பளித்தன. அவற்றுக்குத் தலைவனே தலைமை வகித்தான்; ஆதிகால ஜெர்மன் நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் இருந்ததைப் போல அத்தலைவன் நடவடிக்கைகளை இயக்குபவனாக, கேள்வி எழுப்புபவனாக மட்டுமே இருக்க முடியும். ஜெர்மானியர்களிடையில் என்றும் எங்கணும் சமூகம் முழுவதும் சேர்ந்தே தீர்ப்பளிக்கும்.

இனக்குழுக்களின் கூட்டுகள் சீஸர் காலத்திலிருந்து ஏற்பட்டன. அவற்றில் சிலவற்றுக்கு ஏற்கெனவே அரசர்கள் இருந்தார்கள். கிரேக்கர்கள், ரோமானியர்களிடையே நடந்த மாதிரி தலைமை இராணுவத் தளபதி எதேச்சாதிகாரத்தை விரும்பத் தொடங்கினான்; சில சமயங்களில் அதைப் பெறுவதில் வெற்றியும் அடைந்தான். தகாத முறைகளில் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் எவ்விதத்திலும் சர்வாதிகார ஆட்சியாளர்களாக இருக்கவில்லை, எனினும் அவர்கள் குல அமைப்பின் விலங்குகளை உடைக்கத் தொடங்கினார்கள். விடுதலை செய்யப்பட்ட அடிமைகள் எந்தக் குலத்திலும் உறுப்பினர்களாக இருக்க

முடியாத காரணத்தால் பொதுவாகத் தாழ்ந்த நிலையில் இருந்தார்கள். எனினும் புதிய அரசர்களுக்குப் பிரிய மானவர்கள் என்ற முறையில் அவர்கள் பதவி, செல்வம், பட்டங்களை அடிக்கடி பெற்றார்கள். ரோமானியப் பேரரசைத் தோற்கடித்த பிறகு இராணுவத் தளபதிகள் விஷயத்தில் இப்படியே நடைபெற்றது; அவர்கள் இப்பொழுது பெரிய நாடுகளுக்கு அரசர்களானார்கள். பிராங்கு மக்கள் மத்தியில் அரசனுடைய அடிமைகளும் விடுதலை பெற்றவர்களும் முதலில் அரசவையிலும் பிறகு அரசிலும் முக்கியப் பாத்திரம் வகித்தார்கள். புதிய பிரபுக்களில் பெரும் பகுதியினர் அவர்களுடைய சந்ததியில் வந்தவர்களே.

அரச மரபு தோன்றுவதற்குக் குறிப்பாக ஒரு அமைப்பு மிகவும் சாதகமாக இருந்தது. அதுதான் பரிவாரம் எனப்படுவது. சொந்த விருப்பப்படி யுத்தங்களை நடத்துகின்ற நோக்கத்துக்காக, குலத்துக்குப் பக்கத்திலேயே தனிப்பட்ட படைகள் அமெரிக்க செவ்விந்தியர்களிடையில் எப்படி ஏற்பட்டிருந்தன என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். ஜெர்மானியர்களிடையில் இந்தத் தனிப்பட்ட படைகள் நிரந்தரமான படைகளாக வளர்ச்சியடைந்திருந்தன. புகழ் பெற்ற இராணுவத் தளபதி தன்னைச் சுற்றி யுத்தக் கொள்ளைக்கு ஆசைப்படுகின்ற இளம் போர்வீரர்களின் படையைச் சேர்த்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கு அவனும், அவனுக்கு அவர்களும் விசுவாசமாக இருப்பதாகப் பிரதிக்ஞை செய்திருந்தனர். அவன் அவர்களுக்கு உணவளித்தான், பரிசுகள் கொடுத்தான்; ஒரு மெய்க்காப்பாளர் படை, உடனடியாகச் சிறு படையெடுப்புகளில் இறங்கக் கூடிய துருப்புகள், பெரிய யுத்தங்களை நடத்துவதற்குப் பயிற்சி பெற்ற அதிகாரிகளின் குழு என்ற வரிசைக் கிரம முறையில் அவர்களை அணிதிரட்டினான். இப்பரிவாரங்கள் பலவீனமாகவே இருந்திருக்க வேண்டும்; உதாரணமாக, இத்தாலியில் ஒடொவாகரில் அவை அப்படித்தான் இருந்தன என்று அறிகிறோம். எனினும் பழைய வெகுஜன சுதந்திரத்தின் நசிவுக்கு அவை கருவாக இருந்தன; மக்களினங்கள் குடிபெயர்ந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் அவை அப்படித்தான் இருந்தன; காரணம், முதலா

வதாக, அவை அரசனுடைய அதிகாரம் எழுவதற்குச் சாதகமான நிலையை உண்டாக்கின, இரண்டாவதாக, டாசிட்டஸ் குறிப்பிட்டபடி, தொடர்ச்சியான யுத்தங்களினாலும் கொள்ளையடிக்கும் படையெடுப்புகளாலும் தான் அவற்றை ஒன்றாகத் திரட்டி வைத்திருக்க முடியும். கொள்ளையடித்தலே முக்கியமான நோக்கமாக மாறி இருந்தது. அக்கம்பக்கத்தில் கொள்ளைக்கு வழியில்லாவிட்டால் தலைவன் மற்ற மக்களினங்களின் மீது தனது பரிவாரங்களை நடத்திச் சென்றான்; அங்கே போர் இருக்கும், கொள்ளையடிக்க வாய்ப்பும் இருக்கும். ரோமானியக் கொடியின் கீழ், ஜெர்மானியர்களுக்கு எதிராகவே பெரும் எண்ணிக்கையில் போரிட்ட ஜெர்மன் துணைப் படைகளில் இப்படிப்பட்ட பரிவாரங்கள் சில இருந்தன. ஜெர்மானியர்களுக்கு அவமானமும் பழியும் ஏற்படுத்திய கூலிப் படைகளின் முதல் வித்துக்கள் அவை. ரோமானியப் பேரரசை வென்ற பிறகு அரசர்களின் இந்த பரிவாரமும் சுதந்திரமற்றவர்கள் மற்றும் ரோமானியர்களைச் சேர்ந்த அரச சேவகர்களும் சேர்ந்து, பிற்காலத்தில் உருவான பிரபுத்துவத்தின் இரண்டாவது பிரதானப் பகுதியாக அமைந்தனர்.

பொதுவாகக் கூறினால், மக்களினங்களாக இணைந்த ஜெர்மானிய இனக்குழுக்கள் வீர யுகத்தில் கிரேக்கர்களிடையேயும் அரசர்கள் என்று சொல்லப்பட்டோரின் காலத்தைச் சேர்ந்த ரோமானியர்களிடையேயும் வளர்ந்திருந்த அதே நிர்வாக அமைப்பைத்தான் கொண்டிருந்தன: அதாவது மக்கள் சபைகள், குலத் தலைவர்களின் கவுன்சில்கள், மெய்யான அரச அதிகாரத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்த இராணுவத் தளபதிகள். குல அமைப்பில் தோன்றக் கூடிய, உச்ச வளர்ச்சி பெற்ற நிர்வாக அமைப்பு இதுதான்; அநாகரிக நிலையின் தலைக் கட்டத்தின் ஆட்சியின் ஆதர்ச வடிவம் இதுவே. இந்த நிர்வாக அமைப்பு எந்த வரம்புக்குள் போதுமானதாக இருந்ததோ, அதைக் கடந்து சமுதாயம் மேலே சென்றதுமே குல அமைப்பு முடிந்து விட்டது; அது உடைந்து போய் அதன் இடத்தில் அரசு ஏற்பட்டது.

# VIII

## ஜெர்மானியர்கள் மத்தியில் அரசு அமைதல்

டாசிட்டஸ் கூறுகிறபடி, ஜெர்மானியர்கள் எண்ணிக்கையில் மிகவும் அதிகமாக இருந்தார்கள். வெவ்வேறு ஜெர்மன் மக்களினங்களின் தொகையைப் பற்றி சீஸர் உத்தேசமான கணக்கைத் தந்திருக்கிறார். ரைன் நதியின் இடது கரையில் தோன்றிய உசிபேதன்கள், தென்க்தெரன்களின் எண்ணிக்கை (பெண்கள், குழந்தைகள் உட்பட) 1,80,000 என்று அவர் கூறுகிறார். ஆக, ஒரே மக்களினத்தில் சுமார் ஒரு லட்சம் பேர்.* இராகோஸ்களின் மிகச் செழிப்பான காலத்தில், மாபெரும் ஏரிகளிலிருந்து ஒஹாயோ, பொடோமக் வரையுள்ள நாடெங்கிலும் அவர்கள் பீதியை உண்டாக்கிக் கொண்டிருந்த பொழுது, அவர்களுடைய தொகை 20,000 கூட இருக்கவில்லை. இந்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் ஜெர்மானியர்களின் தொகை கணிசமானதே. ரைன் பிரதேசத்தில் வாழ்ந்த தனித்தனி மக்களினங்களை—விவரங்களின் மூலம் அவர்களைப் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியும்—ஒரு நிலப்படத்தில் திரட்டிப் பார்த்தால், அவற்றில் ஒவ்வொன்றும் சராசரி ஒரு பிரஷ்ய நிர்வாக மாவட்டத்

---

* கோல் நாட்டின் கெல்டுகள் குறித்து டியாடோரஸ் நூலில் உள்ள ஒரு பகுதி இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்துகிறது: ''கோலில் வெவ்வேறு எண்ணிக்கையை கொண்ட பல மக்களினங்கள் வாழ்கின்றன; அவற்றில் மிகவும் பெரியதின் தொகை 2 லட்சம், மிகவும் சிறியதின் தொகை 50,000'' (Diodorus Siculus, V, 25). எனவே சராசரித் தொகை 1,25,000. கோல் நாட்டின் தனித்தனி மக்களினங்கள் மற்றவற்றை விட அதிக வளர்ச்சியடைந்திருந்தன; எனவே அவர்கள் ஜெர்மானியர்களை விட அதிக எண்ணிக்கையில் இருந்திருக்க வேண்டும். (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

தின் விஸ்தீரணத்தை, அதாவது சுமார் 10,000 சதுர கிலோமீட்டர் அல்லது 182 பூகோளச் சதுர மைல் பிரதேசத்தை நிரப்புவதை நாம் காண்போம். ரோமானியர்களின் Germania Magna* என்பது விஸ்லா நதி வரைக்கும் செல்கிறது; அது மொத்தமாக 5 லட்சம் சதுர கிலோமீட்டர்கள்தான். எந்தவொரு மக்களினத்துக்கும் சராசரி 1 லட்சம் என்று கணக்கிட்டால், Germania Magnaஇன் மொத்த மக்கள்தொகை 50 லட்சம் என்றாகும். ஒரு சதுர கிலோமீட்டருக்கு 10 நபர்கள் அல்லது ஒரு பூகோளச் சதுர மைலுக்கு 550 நபர்கள் என்பது இன்றைய நிலைமைகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது மிகவும் சொற்பமே, எனினும் அநாகரிக நிலையிலுள்ள மக்களினக் குழுக்களுக்கு இது ஒரு பெரும் தொகைதான். ஆனால் அன்று வாழ்ந்து வந்த ஜெர்மானியர்கள் அனைவரும் இந்த எண்ணிக்கையில் அடங்கியிருக்கவில்லை. கோதிக் மூலத்திலிருந்து வந்த ஜெர்மானியர்களான பஸ்தார்னியன்கள், பியூகினியர்கள் மற்றும் இதரர்கள் டான்யூப் நதியின் முகத்துவாரத்தை எட்டும் வரை கார்ப்பேதிய மலைகளின் சாரல் நெடுக வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் அறிவோம். ஜெர்மானியர்களின் ஐந்தாவது முக்கியமான இனக்குழுக்களின் குழு என்று பிளினி அவர்களை வர்ணிக்கும் அளவுக்கு அவர்களின் எண்ணிக்கை இருந்தது. அவர்கள் ஏற்கெனவே கி. மு. 180இல் பெர்ஸியஸ் என்ற மாசிடோனிய அரசனுடைய கூலிப் படைகளாக ஊழியம் செய்து வந்தார்கள். மேலும், அகஸ்டஸ் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் நெடுந்தொலைவிலுள்ள ஆட்ரியானொபிளுக்குப் பக்கம் வரை இன்னும் வழி செய்து கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தொகை 10 லட்சம் என்று நாம் வைத்துக் கொண்டால், அப்பொழுது கிறிஸ்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் ஜெர்மானியர்களுடைய தொகை அநேகமாக 60 லட்சத்துக்குக் குறையாமல் இருந்திருக்கும்.

ஜெர்மனியில் குடியேறிய பிறகு மக்கள்தொகை மிகவும் வேகமாக அதிகரித்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட தொழில்துறை முன்னேற்றமே இதை நிரூபிப்

---

* —மாபெரும் ஜெர்மனி.—ப-ர்.

பதற்குப் போதுமானது. ஷ்லேஸ்விக் சதுப்பு நிலத்தில் கண்டெடுத்த பொருட்கள்—அவற்றுடன் கண்டெடுக்கப் பட்ட ரோமானிய நாணயங்களைக் கொண்டு பார்க்கும் பொழுது—3ஆம் நூற்றாண்டிலிருந்து வந்தவை. எனவே அக்காலத்தில் பால்டிக் பிரதேசத்தில் உலோகத் தொழிலும் துணி நெசவுத் தொழிலும் ஏற்கெனவே நன்கு வளர்ச்சியடைந்திருந்தன, ரோமானியப் பேரரசுடன் விறுவிறுப்பான வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது, பணம் படைத்தவர்கள் ஓரளவுக்கு வசதியாக வாழ்க்கையை அனுபவித்தார்கள்—இவை அனைத்தும் மக்கள்தொகையின் அடர்த்தி அதிகரித்ததற்குச் சான்றுகளாகும். இக்காலத்தில் ஜெர்மானியர்கள் ரைன் நதி, ரோமானிய எல்லையோரக் கோட்டைகள், டான்யூப் ஆகியவற்றின் வடகடலிலிருந்து கருங்கடல் வரை நீண்ட எல்லை நெடுகிலும் பொதுவான தாக்குதலைத் தொடங்கினார்கள். மேன்மேலும் பெருகிக் கொண்டிருந்த மக்கள்தொகை வெளியே பரவ முயற்சித்ததற்கு நேரடியான சான்று இது. போராட்டம் நடந்த மூன்று நூற்றாண்டுகளில் கோதிக் மக்களினங்களின் பிரதான பகுதி (ஸ்காண்டிநேவிய கோத்துகளும் பர்குண்டியர்களும் தவிர) தென் கிழக்கு நோக்கி நகர்ந்து பரந்த தாக்குதல் முனையின் இடது அணியாக அமைந்தது. மேல் ஜெர்மானியர்கள் (ஹெர்மினோனியர்கள்) மேல் டான்யூப் பகுதியிலுள்ள இந்த முனையின் நடுப்பகுதியில் முன்னேறிச் சென்றார்கள். மேலும், இன்று பிராங்குகள் என்று அழைக்கப்படுகின்ற இஸ்டெவோனியர்கள் வலது அணியில் ரைன் நதிக் கரையோரமாக முன்னேறிச் சென்றார்கள். பிரிட்டனை வெல்வது இங்கெவோனியர்களின் பொறுப்பாயிற்று. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோர்ந்து, வலிமையிழந்து, உதவியற்றிருந்த ரோமானியப் பேரரசு படையெடுத்து வந்த ஜெர்மானியர்களைத் தடுக்க முடியாதிருந்தது.

முந்திய அத்தியாயங்களில் பண்டைக்கால கிரேக்க, ரோமானிய நாகரிகத்தின் தொட்டிலின் அருகில் நாம் நின்றோம். இப்பொழுது நாம் அதன் சமாதிக்கு அருகில் நிற்கிறோம். ரோமானிய உலக ஆதிக்கத்தின் இழைப்புளி பல நூற்றாண்டுகளாக எல்லா மத்திய தரைக் கடல் நாடுகளையும் இழைத்து சமப்படுத்தி வந்தது. எங்கெல்

லாம் கிரேக்க மொழி எதிர்க்கவில்லையோ, அங்கெல்லாம் தேசிய மொழிகள் விலகிக் கொள்ள, ஒரு கொச்சையான லத்தீன் மொழி வந்து சேர்ந்தது. தேசிய இன வேறுபாடுகள் எவையும் இப்போதில்லை; கோல்கள், இபேரியர்கள், லிகூரியர்கள், நோரிகர்கள் என்று யாருமில்லை—எல்லோரும் ரோமானியர்களாகி விட்டனர். ரோமானிய நிர்வாகமும் ரோமானியச் சட்டமும் எங்கணுமே பழைய இரத்த உறவுமுறைக் குழுக்களை கலைத்து விட்டன, அதன் மூலம் ஸ்தல மற்றும் தேசிய சுயவெளியீட்டின் கடைசி எச்சங்களைக் கலைத்து விட்டன. புதிதாக வந்த ரோமானிய முறை இந்த இழப்பை ஈடு செய்ய முடியவில்லை. அது எந்த ஒரு தேசிய இனத்தையும் புலப்படுத்தவில்லை, தேசிய இனத் தன்மையற்ற நிலையைத் தான் புலப்படுத்தியது. புதிய தேசிய இனங்கள் அமைவதற்குரிய அம்சங்கள் எங்கும் இருந்தன. பல்வேறு மாகாணங்களில் லத்தீன் கிளைமொழிகள் மேன்மேலும் வேறுபட்டு வந்தன. ஒரு காலத்தில் இத்தாலி, கோல், ஸ்பெயின், ஆப்பிரிக்கா ஆகியவற்றை சுயேச்சையான பிரதேசங்களாகச் செய்து வைத்திருந்த இயற்கை எல்லைகள் இன்னும் இருந்தன, இன்னும் தம் சக்தியை உணர்த்தி வந்தன. எனினும் இந்த அம்சங்களை இணைத்துப் புதிய தேசிய இனங்களை உருவாக்கக் கூடிய சக்தி எங்குமே இருக்கவில்லை; வளர்ச்சியடைவதற்குச் சிறிதளவு திறமையோ அல்லது எதிர்க்கும் சக்திக்கு அற்ப அறிகுறியோ எங்குமில்லை; படைப்பு ஆற்றலைப் பற்றிப் பேசவே வேண்டாம். இந்த மாபெரும் பிரதேசத்திலிருந்த மிகப் பெரிய மனிதக் கூட்டத்தை ரோமானிய அரசு என்ற பந்தம் ஒன்றுதான் ஒன்றாகத் திரட்டி வைத்திருந்தது. அந்த அரசு காலப்போக்கில் அவர்களுடைய பரம விரோதியாக, ஒடுக்குபவராக மாறி விட்டது. ரோமாபுரியை மாகாணங்கள் சீரழித்திருந்தன. ரோமாபுரியே மற்ற நகரங்களைப் போல ஒரு மாகாண நகரமாகி விட்டது. அதற்கென்று தனி உரிமைகள் இருந்தன, ஆனால் அது இப்பொழுது ஆட்சி செய்யவில்லை, உலகப் பேரரசின் மையமாக இப்பொழுது இல்லை, சக்கரவர்த்திகள், துணைச் சக்கரவர்த்திகளின் இருப்பிடமாகவும் கூட இப்பொழுது இல்லை. அவர்கள் கான்ஸ்டாண்டிநோப்பிளி

லும் டிரியரிலும் மிலானிலும் இருந்தார்கள். ரோமானிய அரசு தன் குடிமக்களைச் சுரண்டுவதற்காக மட்டுமே அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான, சிக்கல் மிகுந்த இயந்திரமாகி விட்டது. வரிகளும் அரசுச் சேவைகளும் பல விதமான கட்டாய வசூல்களும் மக்களை மேன்மேலும் வறுமையில் ஆழ்த்தின. அரசின் அதிகாரிகள், வ்ரி வசூலிப்பவர்கள், போர்வீரர்கள் ஆகியோருடைய பணம் பிடுங்கும் நடவடிக்கைகள் இந்தச் சுமையைத் தாங்க முடியாத படிச் செய்தன. உலகில் ஆதிக்கம் வகித்த ரோமானிய அரசு இத்தகைய நிலைமையை ஏற்படுத்தி இருந்தது. உள்நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்துவதையும் வெளிப்புறத்திலுள்ள அநாகரிகர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதையும்தான் அது தன்னுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஆனால் அது ஏற்படுத்திய ஒழுங்குமுறை படுமோசமான ஒழுங்கின்மையை விடக் கீழானதாக இருந்தது. எந்த அநாகரிகர்களிடமிருந்து குடிமக்களைப் பாதுகாப்பதாக அது நடித்ததோ, அந்த அநாகரிகர்களை விமோசனமளிப்பவர்கள் என்று குடிமக்கள் வாழ்த்தி வரவேற்றார்கள்.

சமூக நிலைமைகளும் அதே அளவுக்குப் படுமோசமாக இருந்தன. குடியரசின் கடைசி ஆண்டுகளிலிருந்தே ரோமானிய ஆதிக்கம் வசப்படுத்தப்பட்ட மாகாணங்களை ஈவிரக்கமின்றிச் சுரண்டுவதை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இந்தச் சுரண்டலைச் சக்கரவர்த்திகள் ஒழிக்கவில்லை; அதற்கு பதிலாக அதை ஒழுங்குபடுத்தினார்கள். பேரரசு எவ்வளவு அதிகமாக சீரழிந்ததோ, அந்த அளவுக்கு வரிகளும் கட்டாயச் சேவைகளும் அதிகரித்தன, அந்த அளவுக்கு வெட்கமின்றி அதிகாரிகள் மக்களைக் கொள்ளையடிக்கவும் பயமுறுத்திப் பிடுங்கவும் செய்தார்கள். மொத்த மக்களினங்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதிலேயே குறியாக இருந்த ரோமானியர்கள் வர்த்தகம் அல்லது தொழிலில் அக்கறை காட்டியதில்லை. கந்து வட்டியில் மட்டுமே அவர்கள் தமக்கு முந்தியவர்கள், பிந்தியவர்கள் எல்லோரையும் மிஞ்சியிருந்தனர். முன்னரே ஏற்பட்டிருந்து அதன் பிறகு தானாகவே நிலைத்திருந்த வர்த்தகமும் அதிகாரிகள் பிடுங்கும் வசூல்களால் நாசப்படுத்தப்பட்டது. அதிலிருந்து தப்பிப் பிழைத்த வர்த்த

கம் பேரரசின் கிழக்குப் பகுதியில், கிரேக்கப் பகுதியில் தொடர்ந்து நடந்தது. ஆனால் இது நமது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட விஷயம். சர்வவியாபகமான ஏழ்மை, வர்த்தகம், கைத்தொழில்கள், கலைகள் ஆகியவற்றின் நலிவு, மக்கள்தொகையின் குறைவு, நகரங்களின் சீரழிவு, விவசாயம் நசித்துக் கீழ்நிலைக்கு இறங்குதல்—ரோமானிய உலக ஆதிக்கத்தின் இறுதி விளைவு இவையே.

விவசாயம்தான் பண்டைக்கால உலகம் முழுவதிலும் தீர்மானமான உற்பத்திப் பிரிவாக இருந்தது; அது முன்னைவிட இப்பொழுது அதிகத் தீர்மானமானதாகி விட்டது. இத்தாலியின் குடியரசு முடிந்த காலத்திலிருந்து அநேகமாக நிலப்பரப்பு முழுவதையும் அணைத்துக் கொண்டிருந்த பிரம்மாண்டமான பண்ணைகளின் கூட்டுகள் (லாட்டிபூண்டியாக்கள்) இரு வழிகளில் பயன்படுத்தப்பட்டன; ஒரு வழி: மேய்ச்சல் நிலங்களாக—இவற்றிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு ஆடுகளும் மாடுகளும் வைக்கப்பட்டன; அவற்றை கவனித்துக் கொள்வதற்கு சில அடிமைகள் இருந்தால் போதும்; அடுத்த வழி: கிராமாந்திரப் பண்ணைகளாக—இவற்றில் ஏராளமான அடிமைகளைப் பயன்படுத்திப் பழத்தோட்டங்கள் பெரிய அளவில் வளர்க்கப்பட்டன; இவை தோட்ட உடைமையாளர்களின் சொகுசான வாழ்க்கைத் தேவைகளை ஓரளவுக்குப் பூர்த்திச் செய்வதற்கும் ஓரளவு நகரச் சந்தைகளில் விற்பனை செய்வதற்கும் பயன்பட்டன. பெரும் மேய்ச்சல் நிலங்கள் பாதுகாக்கப்பட்டு ஓரளவுக்கு விரிவுபடுத்தவும் செய்யப்பட்டன. ஆனால் கிராமாந்திரப் பண்ணைகளும் அவற்றிலிருந்த பழத்தோட்டங்களும் நசித்தன. அவற்றின் உடைமையாளர்கள் நசித்துப் போனதும் நகரங்கள் சீரழிந்ததும் இதற்குக் காரணமாகும். அடிமையுழைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்த லாட்டிபூண்டியாக்களின் பொருளாதாரம் இனிமேல் லாபமளிக்கவில்லை. ஆனால் அன்று அதுதான் பெருமளவு விவசாயத்துக்குச் சாத்தியமான ஒரே வடிவமாக இருந்தது. சிறு அளவு விவசாயம் என்ற வடிவம் ஒன்றே லாபகரமானதாக மறுபடியும் ஆயிற்று. பண்ணைகள் ஒவ்வொன்றாகப் பிரிக்கப்பட்டன, சிறு நிலத் துண்டுகளாகப் பரம்பரைக் குத்தகைதாரர்களிடம் குத்தகைக்கு விடப்பட்டன. அவர்கள் குறிப்

பிட்ட தொகையைச் செலுத்தி வந்தார்கள் அல்லது அவை பார்ட்டியாரிகள் (partiarii) என்பவர்களிடம் விடப் பட்டன; இவர்களைக் குத்தகைதாரர்கள் என்பதை விட பண்ணை நிர்வாகிகள் என்று கூறலாம். அவர்கள் தமது உழைப்புக்காக வருடாந்தர விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு அல்லது ஒன்பதில் ஒரு பங்கு மட்டுமே கூடப் பெற்று வந்தார்கள். ஆனால் இந்தச் சிறு நிலத் துண்டு கள் கொலோன்கள் (coloni) என்பவர்களிடம்தான் பிரதான மாக வினியோகிக்கப்பட்டன. அவர்கள் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தினார்கள், நிலத் தோடு இணைக்கப்பட்டிருந்தார்கள், நிலங்களுடன் சேர்த்து அவர்களையும் விற்பனை செய்ய முடியும். அவர் கள் அடிமைகளல்ல; அதே சமயத்தில் சுதந்திர மனிதர் களும் அல்ல. அவர்கள் சுதந்திரமான குடிமக்களை மணக்க முடியாது; அவர்கள் தமக்குள்ளே மணந்து கொள்வதும் செல்லத்தக்க திருமணமாகக் கருதப்படவில்லை; அடிமை விஷயத்தில் இருந்ததைப் போல வெறும் காமக்கிழத்தி (contubernium) முறையாகவே கருதப்பட்டது. அவர்கள் மத்திய காலப் பண்ணையடிமைகளுக்கு முன்னோடிகளா வர்.

பண்டைக்கால அடிமை முறை வழக்கில்லாமற் போய் விட்டது. கிராமங்களில் பெரிய அளவு விவசாயத்திலோ, நகரங்களில் தொழில் பட்டறைகளிலோ அது பயனுள்ள லாபம் எதுவும் தரவில்லை. அதன் பொருட்களுக்குரிய சந்தை மறைந்து போய் விட்டது. பேரரசின் வளமான காலங்களில் நடைபெற்ற பிரம்மாண்டமான உற்பத்தி இப்பொழுது சிறு அளவு விவசாயம், சிறு கைத்தொழில் கள் என்ற அளவுக்குத் தாழ்ந்து விட்டது. அங்கே எண் ணற்ற அடிமைகளுக்கு அவசியமில்லை. செல்வர்களின் வீட்டு வேலைகளைச் செய்த அடிமைகளுக்கும் அவர் களின் சொகுசான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டிருந்த அடிமைகளுக்கும் மட்டுமே சமுதாயத்தில் இடம் தரப்பட்டது. ஆனால் சுதந்திர ரோமானியர்கள் (இப்பொழுது எல்லாக் குடிமக்களும் சுதந்திர ரோமானி யர்களே) எல்லா உற்பத்தி வகைப்பட்ட வேலையையும் தம்முடைய கௌரவத்துக்குப் பொருந்தாத] அடிமை உழைப்பு என்று கருதுகின்ற அளவுக்கு மரணத் தறுவாயி

லிருந்த அடிமைமுறை போதிய வீரியம் பெற்றிருந்தது. அதன் காரணமாக, ஒரு பக்கத்தில், தேவையற்ற அடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்தது; அவர்கள் ஒரு சுமையாகி விடவே விடுதலை செய்யப்பட்டார்கள். மறு பக்கத்தில், கொலோன்களின் எண்ணிக்கையும் ஏழைகளாகி விட்ட சுதந்திர மனிதர்களின் (அமெரிக்காவில் முந்திய அடிமை மாநிலங்களில் இருக்கும் poor whites* போன்றவர்கள் இவர்கள்) தொகையும் அதிகரித்தன. பண்டைக்கால அடிமைமுறை இப்படி படிப்படியாக அழிந்ததற்கு கிறிஸ்துவ சமயம் பொறுப்பாளியே அல்ல. ரோமானியப் பேரரசில் பல நூற்றாண்டுகளாக இருந்த அடிமைமுறையின் பலன்களில் அது பங்கு பெற்றுக் கொண்டது. பிற்காலத்தில் கிறிஸ்துவர்கள் செய்த அடிமை வர்த்தகத்தை—வடக்கே ஜெர்மானியர்களோ, மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் வெனிஷியர்களோ நடத்திய அடிமை வர்த்தகத்தைத்—தடுப்பதற்கு அது ஒன்றுமே செய்யவில்லை; அதற்குப் பிந்திய ஆண்டுகளைச் சேர்ந்த நீக்ரோ அடிமை வர்த்தகத்தைத் தடுக்கவும் அது ஒன்றும் செய்யவில்லை.** இனிமேல் அடிமைமுறை லாபகரமாக இல்லாதபடியால் அது அழிந்து விட்டது. ஆனால் அழிந்து கொண்டிருந்த அடிமைமுறை, சுதந்திர மனிதர்கள் செய்து வந்த உற்பத்தி வகைப்பட்ட வேலை கேவலமானது என்று முத்திரை குத்தியதன் மூலம் தனக்குப் பின் தனது விஷக் கொடுக்கை விட்டுச் சென்றது. இந்த முட்டுச் சந்தில் தான் ரோமானிய உலகம் சிக்கிக் கொண்டது. பொருளாதார ரீதியில் அடிமைமுறை சாத்தியமற்றதாகி விட்டது; ஆனால் சுதந்திர மனிதர்களின் உழைப்பு தார்மிகத் தடைக்கு உட்பட்டிருந்தது. முந்தியது சமூக ரீதியான உற்பத்தியின் ஆதார வடிவமாக இனிமேல் இருக்க முடி

---

* —ஏழை வெள்ளையர்களை.—ப-ர்.

** 10ஆம் நூற்றாண்டில் வெர்டேனில் (அதாவது புனிதமான ஜெர்மன் பேரரசில்[35]) அலிகளை உண்டாக்குவது முக்கியமான தொழிலாக இருந்தது; அந்த அலிகள் மூர்களின் அந்தப்புரங்களுக்காக அதிகமான லாபத்தில் ஸ்பெயினுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டார்கள் என்று கிரிமோனாவின் பிஷப் லியூட்பிராண்ட் கூறினார். (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

யாது; பிந்தியதோ இன்னும் அப்படி உருப்பெற முடியாததாக இருந்தது. ஒரு முழுமையான புரட்சிதான் இங்கே உதவ முடியும்.

இதே போன்றுதான் மாகாணங்களின் நிலைமையும் இருந்தது. நமக்குக் கிடைத்திருக்கும் செய்திகளில் மிகப் பெரும்பான்மை கோல் பற்றியவையே. அங்கே கொலோன்களுக்குப் பக்கத்திலேயே சுதந்திரமுள்ள சிறு விவசாயிகளும் இன்னும் இருந்தார்கள். அதிகாரிகள், நீதிபதிகள், கந்துவட்டிக்காரர்கள் ஆகியவர்களின் கொடுமையான கட்டாய வசூல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் அதிகாரத்திலிருந்த நபர்களின் பாதுகாப்பிலும் ஆதரவிலும் பெரும்பாலும் ஒட்டிக் கொண்டனர். அவர்கள் தனித்தனியாக மட்டுமல்ல, முழு கூட்டுச் சமூகங்களாக இப்படிச் செய்தார்கள். 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சக்கரவர்த்திகள் இந்தச் செயலைத் தடை செய்வதற்கு அடிக்கடி உத்தரவுகள் விதிக்கும் அளவுக்கு இது இருந்தது. இந்தப் பாதுகாப்பைத் தேடி வந்தவர்களுக்கு இது எப்படி உதவியளித்தது? பாதுகாப்பு அளித்தவன் அவர்களுடைய நிலத்தைத் தன் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று நிபந்தனை விதித்தான்; அதற்குப் பிரதியாக வாழ்நாள் முழுவதும் அனுபோக உரிமையை அவர்களுக்கு உறுதிப்படுத்தினான். இது ஒரு தந்திரமே. புனித திருச்சபை இதை நினைவில் வைத்திருந்து ஆண்டவனின் மேன்மை மேலும் அதிகரிப்பதற்கும் தனது நிலவுடைமைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும் 9, 10ஆம் நூற்றாண்டுகளில் தாராளமாகக் கடைப்பிடித்தது. ஆனால், அந்தக் காலத்தில், அதாவது 475ஆம் ஆண்டு வாக்கில் மார்சேயின் பிஷப்பான சால்வியானஸ் என்பவர் இத்தகைய கொள்ளையை இன்னும் தீவிரமாகக் கண்டித்துக் கொண்டிருந்தார். ரோமானிய அதிகாரிகளின் ஒடுக்குமுறையும் பெரும் நிலக்கிழார்களின் ஒடுக்குமுறையும் சகிக்க முடியாதபடி ஆகி விட்டதால் பல ''ரோமானியர்கள்'' ஏற்கெனவே அநாகரிகர்கள் கைப்பற்றியிருந்த மாவட்டங்களுக்கு ஓடிப் போய் விட்டார்கள்; அங்கே குடிதங்கி விட்ட ரோமானியக் குடிமக்கள் மீண்டும் ரோமானிய ஆதிக்கத்திற்குள் அகப்பட்டுக் கொள்வோமோ என்று அஞ்சியதைப் போல் வேறெதைப் பற்றியும் அஞ்சவில்லை என்றும்

சால்வியானஸ் கூறுகிறார். ஏழைப் பெற்றோர்கள் அக் காலத்தில் தங்களுடைய குழந்தைகளை அடிமைகளாக விற்று வந்தார்கள் என்பதை இந்த வழக்கத்தைத் தடை செய்த சட்டம் நிரூபிக்கிறது.

ரோமானியர்களைத் தமது சொந்த அரசிலிருந்து விடுதலை செய்வதற்குப் பிரதிபலனாக ஜெர்மன் அநாகரிகர்கள் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கைத் தமதாக்கிக் கொண்டு தம்மிடையே பிரித்துக் கொண்டார்கள். இந்தப் பங்கீடு குல அமைப்புக்கேற்ற முறையில் செய்யப்பட்டது. நாட்டைப் பிடித்தவர்களது தொகை ஒப்புநோக்கில் குறைவாக இருந்தபடியால் பிரிவினை செய்யப்படாமல் பெரிய நிலப்பரப்புகள் மிஞ்சின. அவற்றில் ஒரு பகுதி மக்களினம் முழுவதின் உடைமையாகவும் எஞ்சிய பகுதி இனக்குழுக்கள் அல்லது குலங்களின் உடைமையாகவும் இருந்தன. ஒவ்வொரு குலத்திலும் விளை நிலங்களும் பசும்புல் நிலங்களும் தனித்தனிக் குடும்பங்களிடையே சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டு சம பங்குகளாக விநியோகிக்கப்பட்டன. அக்காலத்தில் அடிக்கடி மறு பங்கீடுகள் நடந்தனவா என்பது நமக்குத் தெரியாது. எப்படியிருப்பினும், ரோமானிய மாகாணங்களில் இந்த நடைமுறை சீக்கிரத்தில் கைவிடப்பட்டது; தனியாருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் தனிச்சொத்தாக, அதாவது அலோடியமாக ஆயின. காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் பொதுவில் உபயோகிக்கப்படுவதற்கென்று பிரிக்கப்படாமலே இருந்து வந்தன. இவற்றை எப்படி உபயோகிப்பது என்பதையும் பங்கு பிரிக்கப்பட்ட விளை நிலத்தில் விவசாயம் செய்யும் முறையையும் பண்டை வழக்கமும் மொத்தக் கூட்டுச் சமூகத்தின் முடிவுகளும் ஒழுங்குபடுத்தி இருந்தன. கிராமத்தில் குலம் எவ்வளவு அதிகமான காலத்துக்கு வாழ்ந்திருந்ததோ, காலப் போக்கில் ஜெர்மானியர்களும் ரோமானியர்களும் எவ்வளவு அதிகமாக ஒன்று கலந்தார்களோ அந்த அளவுக்கு இரத்த உறவுத் தொடர்புகள் பிரதேச உறவுகளுக்கு முன்னால் பின்வாங்கின; மார்க் சமூகத்தில் குலம் ஒன்றுகலந்து மறைந்து விட்டது. எனினும் சமூகத்தில் உறுப்பினர்களின் ஆதி இரத்த உறவு முறையின் அடையாளங்கள் போதிய அளவுக்குக் காணப்பட்டன. இப்படித்தான், குறைந்தபட்சம் மார்க் சமூகங்

கள் பாதுகாக்கப்பட்டு வந்த நாடுகளிலெல்லாம்—பிரான் சின் வடக்குப் பகுதி, இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்காண்டி நேவியா ஆகிய பிரதேசங்களில்—குல அமைப்பு ஒரு பிர தேச அமைப்பாக கண்ணுக்குத் தெரியாதபடியே மாற்றப் பட்டது; அதன் மூலமாக அது அரசுடன் பொருந்திக் கொள்ள முடிந்தது, எனினும் மொத்த குல அமைப்பின் குறியடையாளமான இயற்கையான ஜனநாயகத் தன்மை யைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது; ஆக, பிற்காலத் தில் அதன் மீது பலவந்தமாகச் சுமத்தப்பட்ட சீரழி வின் போது கூட குல அமைப்பின் ஒருசில அம்சங்களைப் பாதுகாத்தது, அதன் மூலம் நவீன காலத்தில் கூட ஒடுக்கப்பட்ட மக்கள் உபயோகிப்பதற்குத் தயாராக இருக்கின்ற ஓர் ஆயுதத்தை விட்டுச் சென்றது.

குலத்தினுள் இரத்த உறவு விரைவாக மறைந்து விட்ட தற்குக் காரணம், நாடுபிடித்தலின் விளைவாக இனக்குழு விலும் மக்களினம் முழுவதிலும் இருந்த குல உறுப்புகள் கூடச் சீரழிந்து போனதேயாகும். மக்களை அடிமைப் படுத்திஆட்சி செய்வதென்பது குல அமைப்புடன் பொருந் தாது என்பதை நாம் அறிவோம். அதை இங்கே பேரளவில் நாம் பார்க்கிறோம். ரோமானிய மாகாணங்களின் எச மானர்களான ஜெர்மானிய மக்களினங்கள் தமது நாடு பிடிப்பை அமைப்பு ரீதியாகச் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் ரோமானிய மக்கள் திரளினரைக் குல அமைப்பு களுக்குள் புகுத்திக் கலப்பதற்கோ அவற்றின் உதவியைக் கொண்டு அவர்களை ஆட்சி செய்யவோ அவர்களால் முடியவில்லை. பெரிதும் தொடர்ந்து செயலாற்றி வந்த ரோமானிய ஸ்தல நிர்வாக உறுப்புகளுக்குத் தலைமை வகித்த ரோமானிய அரசுக்குப் பதிலாக ஒன்றை வைக்க வேண்டியிருந்தது. அந்த பதில் அமைப்பு மற்றொரு அரசாகத்தான் இருக்க முடியும். எனவே, குல அமைப்பின் உறுப்புகள் அரசின் உறுப்புகளாக மாற்றப்பட வேண்டி யிருந்தது; சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் இதை மிகவும் வேகமாகச் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் நாடுகளை வெற்றி கொண்ட மக்களின் முதல் பிரதிநிதி இராணுவத் தளபதியே. வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புக்கு தளபதியின் அதிகாரத்தைப் பலப்படுத்துவது அவசியமாயிற்று.

இராணுவத் தலைமையை அரசனின் ஆட்சியாக மாற்ற வேண்டிய தருணம் வந்து விட்டது. அந்த மாற்றம் நிறைவேற்றப்பட்டது.

பிராங்குகளின் இராஜ்யத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே, ரோமானிய அரசின் விரிந்த நிலப்பரப்புகள் மட்டுமன்றி, பெரிய, சிறிய மாவட்டச் சமூகங்களுக்கும் (Gau) மார்க் சமூகங்களுக்கும் கொடுக்கப்படாதிருந்த மிகப் பெரிய நிலங்கள் அனைத்தும், குறிப்பாகப் பெரிய காடுகள் அனைத்தும் வெற்றி பெற்ற சாலியன் மக்களினத்திடம் வில்லங்கமற்ற உடைமையாக வந்து சேர்ந்தன. பிராங்குகளின் அரசன்—சாதாரண இராணுவத் தளபதியாக இருந்து அரசனாக மாற்றப்பட்டு விட்டவன்—செய்த முதல் வேலை இந்த மக்கள் உடைமையை அரசனின் உடைமையாக மாற்றியதே; மக்களிடமிருந்து அபகரித்து தன்னுடைய பரிவாரத்துக்கு மானியமாக அளித்ததே. இந்தப் பரிவாரம் ஆதியில் அவனுடைய தனிப்பட்ட இராணுவ ஊழியர்களையும் இராணுவத்தின் மற்ற துணைத் தளபதிகளையும் கொண்டிருந்தது, விரைவில் ரோமானியர்களை, அதாவது ரோமானியமயமாக்கப்பட்ட கோல்களை தன்னுள் கொண்டு பெருகியது. அவர்கள் வெகு சீக்கிரத்தில் அவனுக்கு இன்றியமையாதவர்களாகி விட்டார்கள்; அவர்களிடம் எழுத்தறிவு, கல்வி, ரோமான்ஸ் பேச்சு மொழியிலும் லத்தீன் இலக்கிய மொழியிலும் பயிற்சி மற்றும் ஸ்தலச் சட்டங்களைப் பற்றிய அறிவு இருந்தது இதற்குக் காரணமாகும். இவர்களுடன் அடிமைகளும் பண்ணையடிமைகளும் விடுதலை செய்யப்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்கள் அவனுடைய அரசவையாக இருந்தார்கள். அவன் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களை அவர்களிடமிருந்துதான் பொறுக்கி எடுத்துக் கொள்வான். அவர்கள் அனைவருக்கும் பொது நிலத்திலிருந்து சில பகுதிகள் முதலில் அன்பளிப்புகளாகவும் பின்னர் பெனெஃபிசிகளாகவும்[36] கொடுக்கப்பட்டன; ஆதியில், அரசன் உயிரோடிருக்கின்ற காலம் வரைக்கும் நிலத்தைக் கொடுப்பதே பெரும்பாலும் வழக்கமாக இருந்தது. ஆக, மக்களுக்குப் பாதகம் செய்து ஒரு புதிய பிரபுத்துவத்துக்கு அடிப்படை அமைக்கப்பட்டது.

இத்துடன் முடிந்து விடவில்லை. பரந்து விரிந்து கிடந்த பேரரசைப் பழைய குல அமைப்பின் வழிமுறைகளைக் கொண்டு ஆள முடியவில்லை. தலைவர்களின் கவுன்சில் வழக்கொழிந்ததாக ஆகி விடாமல் போயிருந்தால் கூடியிருக்க முடியாது. அதனிடத்தில் அரசனுடைய நிரந்தர அரசவை சீக்கிரத்தில் அமர்த்தப்பட்டது. பழைய மக்கள் சபை வெளிப்பார்வைக்குப் பாதுகாக்கப்பட்ட மாதிரி தோன்றினாலும் மேன்மேலும் இராணுவத்தின் துணைத் தளபதிகளையும் புதிதாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த பிரபுக்களையும் கொண்ட சபையாகிக் கொண்டிருந்தது. பிராங்கு மக்களின் பெருந்திரளானவர்களான சுதந்திரமுள்ள, நிலவுடைமை விவசாயிகள் இடைவிடாத உள்நாட்டுப் போர்களாலும் நாடுபிடிக்கின்ற போர்களாலும் — பிந்தியவை குறிப்பாக மாபெரும் ஷார்லின்கீழ் நடைபெற்றன—குடியரசின் கடைசி காலத்தில் ரோமானிய விவசாயிகளைப் போல களைத்துச் சோர்ந்து வறியவர்களாக இருந்தார்கள்.இந்த பிராங்கு விவசாயிகள்தான் முன்பு இராணுவம் முழுவதிலும் இருந்தார்கள்; பிரான்சின் நிலப்பரப்பு கைப்பற்றப்பட்ட பிறகு அதன் உட்கருவாக இருந்தார்கள். இவர்கள் 9ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிகவும் ஏழ்மையடைந்து விட்டபடியால் அவர்களில் அநேகமாக ஐந்தில் ஒரு நபர் மட்டுமே யுத்தத்துக்கு ஆயுதங்களைக் கொடுக்கக் கூடியவராக இருந்தார். முந்திய இராணுவம் அரசனால் நேரடியாகத் திரட்டப்பட்ட சுதந்திரமுள்ள விவசாயிகளைக் கொண்டிருந்தது; இப்பொழுது அதற்குப் பதிலாக புதிதாக வளர்ச்சியடைந்த பிரபுக்களின் ஊழியர்களைக் கொண்ட இராணுவம் ஏற்பட்டது. இந்த ஊழியர்களில் சார்புள்ள விவசாயிகளும் இருந்தனர்; அரசனைத் தவிர வேறு யாரையும் எசமானராக அங்கீகரிக்க மறுத்த முந்திய விவசாயிகளின் சந்ததியினர் இவர்கள். அதற்குச் சிறிது காலத்துக்கு முன்னால் அந்த விவசாயிகளின் முன்னோர்கள் அரசனைக் கூட எசமானனாக அங்கீகரித்ததில்லை. அவர்களுக்கு எசமானனே கிடையாது. அரசன் ஷார்லின் சந்ததியார்களின் கீழ், உள்நாட்டுப் போர்களாலும் அரச அதிகாரத்தின் பலவீனத்தாலும், அதன் காரணமாக அந்த அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பிரபுக்கள்

செய்த முயற்சிகளாலும், கடைசியில் நார்மன்கள் உட்புகுந்ததாலும் பிராங்கு விவசாயிகள் முற்றிலும் அழிக்கப்பட்டார்கள். அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்த பிரபுக்களின் தொகையில் ஷார்ல் நியமித்த மாவட்ட கவுன்டுகளும் (Gaugrafen)[37] சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தம்முடைய பதவிகளைப் பரம்பரைப் பதவிகளாக ஆக்கிக் கொள்வதற்குத் துடித்தார்கள். மாபெரும் ஷார்ல் இறந்து ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, நானூறு ஆண்டுகளுக்கு முன் ரோமானியப் பேரரசு பிராங்குகளின் காலடியில் நாதியற்றுக் கிடந்த மாதிரியே பிராங்குகளின் பேரரசு நார்மன்களின் காலடியில் நாதியற்றுக் கிடந்தது.

வெளிநாட்டு விவகாரங்களில் பலவீனம் மட்டுமல்ல, உள்நாட்டு சமுதாய ஒழுங்குமுறையும் (அல்லது ஒழுங்கின்மை என்று கூடக் கூறலாம்) அதே மாதிரியாகவே இருந்தது. சுதந்திரமான பிராங்கு விவசாயிகள் தமக்கு முந்தியவர்களான ரோமானிய கொலோன்கள் இருந்த நிலையை ஒத்த விதத்திலேயே இருந்தார்கள். யுத்தம், கொள்ளையினால் நசித்துப் போய் அவர்கள் தமது பாதுகாப்புக்குப் புதிய பிரபுக்களை அல்லது திருச்சபையை நாட வேண்டியிருந்தது. ஏனென்றால் அவர்களைப் பாதுகாக்க முடியாத அளவுக்கு அரசரது அதிகாரம் பலவீனமாக இருந்தது. ஆனால் அந்தப் பாதுகாப்புக்கு அவர்கள் அதிகமான விலை கொடுக்க வேண்டியிருந்தது; தமக்கு முன்னால் கோல் விவசாயிகள் செய்ததைப் போலவே தமது நிலவுடைமையைப் புரவலர்களுக்கு மாற்றித் தர வேண்டியிருந்தது. பிறகு அவர்கள் அதே நிலத்தை வெவ்வேறான, மாறிவந்த வடிவங்களில் குத்தகைதாரர்களாகப் பெற்றார்கள், ஆனால் எப்பொழுதும் புரவலர்களுக்குக் கட்டாய சேவை செய்ய வேண்டும், கட்டாயக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் பெற்றார்கள். சார்பு நிலையின் இந்த வடிவத்துக்குள் ஒரு முறை தள்ளப்பட்ட பிறகு அவர்கள் படிப்படியாகத் தம்முடைய சொந்தச் சுதந்திரத்தை இழந்தார்கள்; சில தலைமுறைகள் கழிந்த பிறகு பெரும்பான்மையானவர்கள் பண்ணையடிமைகளானார்கள். சுதந்திரமுள்ள விவசாயிகளின் வகுப்பு எவ்வளவு வேக

மாக மறைந்து கொண்டிருந்தது என்பதை இர்மினோன் என்பவரால் தொகுத்துக் கொள்ளப்பட்ட சான் ஜெர் மேன் டெ பிரே மடத்தின்—அது முன்னர் பாரிசுக்கு வெளியேயும் இப்பொழுது பாரிசுக்கு உள்ளேயும் இருக்கிறது—நில ஆவணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மாபெரும் ஷார்ல் வாழ்ந்த காலத்திலேயே சுற்றிலுமுள்ள நாட்டுப்புறமெங்கும் பரந்து கிடந்த இந்த மடத்தின் பண்ணைகளில் 2,788 குடும்பங்கள் இருந்தன; அநேக மாக எல்லாமே ஜெர்மானியப் பெயர்களைக் கொண்ட பிராங்குகளே; அவற்றில் கொலோன்கள்—2,080, லிட்கள்—35, அடிமைகள்—220; சுதந்திர விவசாயிகள்—8 மட்டுமே! விவசாயிகளின் நிலத்தைப் புரவலர் தன்னுடைய பெயருக்கு மாற்றிக் கொண்டு விவசாயிகள் அதை வாழ்க்கை முழுவதும் பயன்படுத்துமாறு கொடுக்கின்ற இந்த வழக்கத்தைக் கடவுளுக்கு விரோதமானது என்று சால்வியானஸ் கண்டித்த அதே வழக்கத்தைத் திருச்சபை இப்பொழுது விவசாயிகளை பொறுத்தமட்டில் சர்வாம்சத்திலும் கடைப்பிடித்தது. நிலப்பிரபுத்துவப் பண்ணையடிமைக் கட்டாய வேலை இப்பொழுது மேன்மேலும் வழக்கமாகி வந்தது; அது ரோமானிய அங்காரியாக்களை, அதாவது அரசுக்குச் செய்யப்படுகின்ற கட்டாய வேலைகளை[38] முன்மாதிரியாகக் கொண்டிருந்ததுடன் ஜெர்மானிய மார்க் சமூகத்தின் உறுப்பினர்கள் பாலங்கள், சாலைகள் அமைத்தல் மற்றும் இதர பொதுப் பணிகளில் உழைத்ததையும் உதாரணமாகக் கொண்டிருந்தது. ஆக, நானூறு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் திரளினர் புறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்து சேர்ந்து விட்டது போலத் தோன்றியது.

எனினும் இது இரண்டு விஷயங்களைத்தான் நிரூபித்தது. முதலாவது, நசித்துக் கொண்டிருந்த ரோமானியப் பேரரசில் சமுதாயப் பிரிவுகளின் அமைப்பும் சொத்து வினியோகமும் அன்று விவசாயம், தொழில்துறை ஆகியவற்றின் உற்பத்திக் கட்டத்துக்கு முற்றிலும் பொருத்தமானவையாகவே இருந்தன, ஆகவே அவை தவிர்க்க முடியாதவை; இரண்டாவது, இந்த உற்பத்திக் கட்டம் பின்வந்த நானூறு ஆண்டுக் காலத்தில் பொருட்படுத்தத்தக்க அளவுக்கு இறங்கவோ, ஏறவோ இல்லை, ஆகவே

அது அவசியமாகவே அதே சொத்து வினியோக அமைப்பையும் அதே வர்க்கப் பிரிவினையையும்தான் உண்டாக்கி வைத்தது. ரோமானியப் பேரரசின் கடைசி நூற்றாண்டுகளில் நகரம் முன்னர் நாட்டுப்புறத்தின் மீது கொண்டிருந்த ஆதிக்க நிலையை இழந்து விட்டது; ஜெர்மானியர்களின் ஆட்சியின் தொடக்க நூற்றாண்டுகளிலும் அதைத் திரும்பப் பெறவில்லை. விவசாயமும் தொழில் துறையும் மிகவும் கீழான கட்டத்தில் இருந்திருக்குமென்று இதிலிருந்து அனுமானிக்க முடியும். இப்படிப்பட்ட பொது நிலைமைகள் அவசியமாகவே ஆதிக்கம் செலுத்துகின்ற பெரிய நிலவுடைமையாளர்களையும் சார்பு நிலையிலுள்ள சிறு விவசாயிகளையும் தோற்றுவிக்கின்றன. அடிமை உழைப்பைக் கொண்டு நடத்தப்பட்ட ரோமானிய லாட்டிபூண்டியாக்களின் பொருளாதாரத்தையோ அல்லது பண்ணையடிமை உழைப்பைக் கொண்டு நடைபெற்ற புதிய பெரிய அளவு விவசாயத்தையோ இப்படிப்பட்ட சமுதாயத்துடன் ஒட்டுச் சேர்க்க முடியாது என்பதை மாபெரும் ஷார்ல் தன்னுடைய பிரபலமான இராஜாங்கப் பண்ணைகளில் நடத்திய விரிவான பரிசோதனைகள் நிரூபிக்கின்றன. அந்தப் பரிசோதனைகள் அநேகமாக வெளியே தெரியாமல் மறைந்து போய் விட்டன; அவற்றை மடங்கள் மட்டுமே தொடர்ந்து நடத்தின; மடங்களுக்கு மட்டுமே பலன் கிடைத்தது. ஆனால் மடங்கள் என்பவை பிரமச்சரியத்தின் அடிப்படையில் உருவாகிய, இயற்கைக்கு மாறான சமூக அமைப்புகளாகும். அவை அசாதாரணமான காரியங்களை நிறைவேற்ற முடியும்; அதனால்தான் அவை விதிவிலக்குகளாக இருந்தன.

எனினும் இந்த நானூறு ஆண்டுகளில் முன்னேற்றம் ஏற்படவே செய்தது. ஆரம்பத்திலிருந்த அநேகமாக அதே பிரதான வர்க்கங்களைத்தான் முடிவிலும் நாம் பார்க்கிறோம் என்றாலும் இந்த வர்க்கங்களில் அடங்கிய மக்கள் மாறி விட்டார்கள். பண்டைக்கால அடிமைமுறை மறைந்து விட்டது; உழைப்பது அடிமைத்தனம் என்று பழித்துப் பேசி ஏழைகளாக இருந்த சுதந்திரமான மனிதர்களும் மறைந்து விட்டார்கள். ரோமானிய கொலோனுக்கும் புதிய பண்ணையடிமைக்கும் மத்தியில் சுதந்திரமுள்ள

பிராங்கு விவசாயி இருந்தான். அழியும்படி விதிக்கப்பட்ட ரோமானிய உலகின் ''பயனற்ற நினைவுகளும் வீண் சண்டைகளும்'' செத்துப் புதைக்கப்பட்டு விட்டன. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமூக வர்க்கங்கள் சீரழிந்து வரும் நாகரிகம் என்ற சதுப்பு நிலத்தில் உருவெடுக்கவில்லை, ஒரு புதிய நாகரிகத்தின் பிரசவ வேதனையில் தான் உருவெடுத்தன. புதிதாக வந்த தலைமுறை—எசமானர்களாயினும் சரி, வேலைக்காரர்களானாலும் சரி—அதன் ரோமானிய முன்னோர்களுடன் ஒப்பிடும் பொழுது அசல் மனிதர்களைக் கொண்ட தலைமுறையாகும். வலிமை மிக்க நிலக்கிழார்களுக்கும் தொண்டூழியம் புரியும் விவசாயிகளுக்கும் இடையேயான உறவு ரோமானியர்களுக்குப் பண்டைக்கால உலகின் சீரழிவின் நம்பிக்கைக்கு இடமில்லாத வடிவமாக இருந்தது; அது இப்பொழுது புதிய தலைமுறைக்கு ஒரு புதிய வளர்ச்சியின் தொடக்கப் புள்ளியாக அமைந்தது. மேலும், இந்த நானூறு ஆண்டுகள் எதையும் படைக்கவில்லை என்று தோன்றினாலும் கூட அவை ஒரு மாபெரும் பொருளை—நவீன கால தேசிய இனங்களை—விட்டுச் சென்றன; அதாவது மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த மனிதகுலத்தின் பகுதியைப் புத்தாக்கம் செய்தும் அணியைப் புனரமைத்தும் நடக்கப் போகின்ற வரலாற்றுக்குத் தயாரித்துக் கொடுத்துச் சென்றன. ஜெர்மானியர்கள் உண்மையாகவே ஐரோப்பாவுக்குப் புத்துயிர் அளித்தார்கள்; அதனால் தான் ஜெர்மானிய காலகட்டத்தில் அரசுகள் கலைந்தாலும் அவை நார்மன்-ஸாரசன் ஆதிக்கத்துக்கு உட்படாமல் பெனெஃபிசிக்கள், பாதுகாப்பு முறை (கொமெண்டாத்சியாக்கள்[39]) ஆகியவற்றில் வளர்ந்த நிலப்பிரபுத்துவத்தில் முடிந்தன. மேலும், மக்கள்தொகையும் பேரளவில் அதிகரித்தது; இதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வந்த சிலுவைப் போர்களால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கைக் கூடப் பாதகமின்றித் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு மக்கள்தொகை பெருகியது.

ஜெர்மானியர்கள் செத்துக் கொண்டிருந்த ஐரோப்பாவுக்கு எந்த மந்திரத்தின் மூலமாகப் புதிய சக்தியைப் புகட்டினார்கள்? இனவெறி பிடித்த நமது வரலாற்றாசிரியர்கள் கூறுவதைப் போல, அது ஜெர்மானிய இனத்தின்

உள்ளார்ந்த மந்திர சக்தியா? சிறிதுமில்லை. குறிப்பாக அக்காலத்தில் ஜெர்மானியர்கள் ஆரியக் குழுவைச் சேர்ந்த திறமை மிக்க பிரிவினர்; அவர்கள் வீரியமான வளர்ச்சிப் போக்கில் போய்க் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. எனினும் ஐரோப்பாவுக்குப் புத்துயிரூட்டியது அவர்களுடைய பிரத்யேகமான தேசிய குணங்கள் அல்ல, அவர்களுடைய அநாகரிக நிலையும் குல அமைப்புமே ஆகும்.

அவர்களுடைய தனிப்பட்ட திறமை, துணிவு, சுதந்திர வேட்கை, பொதுக் காரியங்கள் எல்லாவற்றையும் சொந்தக் காரியங்களைப் போல அக்கறையுடன் செய்கின்ற ஜனநாயக உள்ளுணர்வு, சுருக்கமாகக் கூறுவதென்றால், ரோமானியர்கள் இழந்திருந்த குணங்கள் அனைத்தும், ரோமானிய உலகம் என்னும் சேற்றிலிருந்து புதிய அரசுகளையும் புதிய தேசிய இனங்களையும் தோற்றுவிக்கும் சக்தி பெற்ற ஒரே குணங்கள்—இவையாவும் தலைக் கட்டத்தில் இருந்த அநாகரிகர்களின் சிறப்பான அடையாளங்கள், அவர்களுடைய குல அமைப்பின் பலன்கள் என்பதைத் தவிர வேறு என்ன?

ஜெர்மானியர்கள் ஒருதார மணத்தின் பண்டைக்கால வடிவத்தை மாற்றி விட்டார்கள், குடும்பத்தில் ஆணின் ஆதிக்கத்தை மிதப்படுத்தினார்கள் என்றால், மூலச்சிறப்பான உலகம் என்றைக்கும் அறிந்திருந்ததை விட உயர்ந்த நிலையைப் பெண்களுக்கு அளித்தார்கள் என்றால், அவர்கள் அப்படிச் செய்ய முடிந்ததற்குக் காரணம் அவர்களுடைய அநாகரிக நிலை, அவர்களுடைய குல வழக்கங்கள், தாயுரிமைக் காலத்தின் இன்னும் வாழ்கின்ற பாரம்பரியம் என்பதைத் தவிர வேறென்ன?

குறைந்தபட்சம் ஜெர்மனி, வடக்கு பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய மிக முக்கியமான மூன்று நாடுகளில் மார்க் சமூகம் என்ற வடிவத்தில் உண்மையான குல அமைப்பின் சிறு பகுதியைப் பாதுகாத்து நிலப்பிரபுத்துவ அரசில் கொண்டு போய்ப் புகுத்தி, அதன் மூலமாக ஒடுக்கப்பட்ட வர்க்கமாகிய விவசாயிகளுக்கு—மத்திய காலப் பண்ணையடிமை முறையின் மிகக் கடுமையான நிலைமைகளிலும் கூட—பண்டைக்கால அடிமைகளுக்கு அல்லது நவீன காலப் பாட்டாளி வர்க்கத்தின் கையில் உடனே கிடைக்க

முடியாமல் போன ஸ்தல ஒற்றுமை மற்றும் எதிர்ப்புச் சாதனங்களை அவர்களால் கொடுக்க முடிந்தது என்றால், அதற்குக் காரணம் அவர்களின் அநாகரிக நிலை, குல ரீதியில் குடிதங்கும் பிரத்யேகமான அநாகரிக முறை என்பதைத் தவிர வேறென்ன?

கடைசியாக, சொந்த நாட்டில் ஏற்கெனவே கையாண்டு வந்த அடிமையுழைப்பின் மிதமான வடிவத்தை அவர்கள் வளர்த்து சர்வவியாபகமாகப் புகுத்தினார்கள்; அது ரோமானியப் பேரரசிலும் அடிமை முறையை மேன்மேலும் அப்புறப்படுத்தி அதனிடத்தில் அமர்ந்து விட்டது; இந்த வடிவம், ஃபூரியே முதலில் வலியுறுத்திக் காட்டியபடி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு **வர்க்கம் என்ற வகையில்** படிப்படியாக விடுதலை அடைவதற்குரிய சாதனத்தைத் தந்தது (fournit aux cultivateurs des moyens d'affranchissement *collectif et progressif**); எனவே இவ்வடிவம் அடிமை முறையை விட எவ்வளவோ மேலானது; அடிமை முறை என்பது, இடைக்கட்டம் எதுவுமில்லாமல், ஒரு தனிநபர் உடனடியாக விடுதலை பெறுவதையே அனுமதிக்கிறது (வெற்றிகரமான புரட்சியின் மூலம் அடிமை முறை ஒழிந்ததாகப் பண்டைக்காலம் அறிந்ததில்லை); ஆனால் மத்திய காலப் பண்ணையடிமைகளோ, படிப்படியாக வர்க்கம் என்ற வகையில் தமது விடுதலையைச் சாதித்துக் கொண்டார்கள் என்றால், அவர்களுடைய அநாகரிக நிலையைத் தவிர வேறென்ன இதற்குக் காரணம்? அநாகரிக நிலையின் காரணத்தால்தான் அவர்கள்—பண்டைக்கால அடிமை உழைப்பு என்ற வடிவத்திலோ அல்லது கிழக்கு நாடுகளைச் சேர்ந்த வீட்டு அடிமை முறை என்ற வடிவத்திலோ—முழு அடிமை முறைக்கு இன்னும் வந்து சேரவில்லை.

ரோமானிய உலகத்தில் ஜெர்மானியர்கள் புகுத்திய வீரியமுள்ள, உயிரூட்டுகின்ற அனைத்தும் அநாகரிக நிலை என்பதுதான். செத்துக் கொண்டிருக்கும் நாகரிகத்தின் மரண வேதனையில் கஷ்டப்படுகின்ற உலகத்துக்குப் புத்து

---

* —விவசாயிகளுக்குக் **கூட்டு வகையில், படிப்படியாக** விடுதலை அடைவதற்குரிய சாதனங்களைத் தருகிறது. —ப-ர்.

யிர் அளிக்கின்ற சக்தி உடையவர்கள் அநாகரிகர்கள் மட்டுமே என்பது உண்மையே. மேலும், மக்களினங்கள் குடிபெயர்வதற்கு முன்னால் ஜெர்மானியர்கள் எந்த அநாகரிக நிலையின் தலைக்கட்டத்தை நோக்கி முன் சென்றார்களோ, எந்த அநாகரிக நிலையின் தலைக் கட்டத்தில் ஜெர்மானியர்கள் உழைத்து முன்னேறினார் களோ, அதுவே இந்த நிகழ்ச்சிப் போக்குக்கு மிகவும் சாதக மானதாக இருந்தது. எல்லாவற்றையும் இது விளக்கு கிறது.

## IX

### அநாகரிக நிலையும் நாகரிக நிலையும்

மாபெரும் தனித்தனி உதாரணங்களான கிரேக்க, ரோமானிய, ஜெர்மானிய உதாரணங்களிலே குல அமைப்பு கலைந்து மறைந்து போனதை அடையாளங் கண்டு கூறினோம். முடிவாக, அநாகரிக நிலையின் தலைக் கட்டத்தில் ஏற்கெனவே சமுதாயத்தின் குல அமைப்பைப் பலவீனப்படுத்தி வந்த, நாகரிக நிலை தோன்றியதும் முழுமையாக ஒழித்தும் விட்ட பொதுவான பொருளாதார நிலைமைகளை நாம் பரிசீலிப்போம். இதற்கு மார்கன் எழுதிய நூல் தேவைப்படுகின்ற அளவுக்கு மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலும் தேவைப்படும்.

குலம் என்பது காட்டுமிராண்டி நிலையின் இடைக் கட்டத்தில் தோன்றி அதன் தலைக்கட்டத்தில் வளர்ந்து—நமக்குக் கிடைத்துள்ள மூலாதாரங்களால் நாம் முடிவு செய்ய முடிந்த அளவுக்கு—அநாகரிக நிலையின் கடைக் கட்டத்தில் தனது முழு வளர்ச்சியை அடைந்தது. ஆகவே இக்கட்டத்திலிருந்து நம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

இந்தக் கட்டத்தில்—இதற்கு அமெரிக்க செவ்விந்தியர்கள் நமக்கு உதாரணமாகப் பயன்பட வேண்டும்—குல அமைப்பு முழு வளர்ச்சி அடைந்திருந்ததைப் பார்க்கிறோம். ஒரு இனக்குழு சில குலங்களாக, பெரும்பாலும் இரண்டு குலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மக்கள் தொகை அதிகரித்த பொழுது இந்த ஆதிக் குலங்கள் சில சேய்க் குலங்களாகப் பிரிந்தன. இவற்றைப் பொறுத்த மட்டில் தாய்க் குலம் ஒரு பிராட்ரியாகத் தோற்றமளித்தது. இனக்குழுவும் கூட சில இனக்குழுக்களாகப் பிரிந்தது. அவை ஒவ்வொன்றிலும், மிகப் பெரும்பாலும் அதே

குலங்களையே மீண்டும் பார்க்கிறோம். குறைந்தபட்சம் சில சந்தர்ப்பங்களிலாவது, இரத்த உறவுமுறையுள்ள இனக்குழுக்களை ஒரு இனக்குழுக்களின் கூட்டு ஒன்று படுத்தியிருந்தது. இந்த எளிய அமைப்பு எந்த சமுதாய நிலைமைகளிலிருந்து தோன்றியதோ, அவற்றிற்கு முற்றி லும் பொருத்தமாக அது இருந்தது. அது பிரத்யேகமான, இயற்கையான அமைப்பு என்பதைத் தவிர வேறில்லை. இவ்வழியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு சமுதாயத்தில் தோன்றக் கூடிய எல்லா உள் சச்சரவுகளையும் சமனப் படுத்துவதற்கு அதனால் முடிந்தது. வெளியாருடன் ஏற்பட்ட சச்சரவுகள் போரின் மூலம் தீர்க்கப்பட்டன. போரில் ஒரு இனக்குழு அடியோடு அழிந்து போகுமே தவிர அடிமைப்படாது. குலத்தில் ஆள்பவர், ஆளப்படு பவர் என்பது இல்லாததுதான் குல அமைப்பின் பெருமை யும் அதே சமயத்தில் அதன் வரம்புக்குட்பட்ட தன்மை யும் ஆகும். குல அமைப்பில் உள் விவகாரங்களில் உரிமை களுக்கும் கடமைகளுக்கும் இடையில் இன்னும் வேறுபாடு ஏற்படவில்லை. பொது விவகாரங்களில் பங்கெடுப்பதும் இரத்தப் பழி வாங்குவதும் மன்னிப்புக் காணிக்கை செய் வதும் உரிமையா அல்லது கடமையா என்ற கேள்வி செவ் விந்தியனுக்கு முன்னால் ஒருபோதும் எழவில்லை. உண் பதும் உறங்குவதும் வேட்டையாடுவதும் கடமையா அல்லது உரிமையா என்ற கேள்வியைப் போல அதுவும் அவனுக்கு அபத்தமான கேள்வியாகத் தோன்றியிருக்கும். எந்த இனக்குழுவும் குலமும் பல்வேறு வர்க்கங்களாகப் பிரிய முடியாது. இது, இந்த அமைப்பின் பொருளாதார அடித்தளத்தை ஆராய்வதற்கு நம்மை இட்டுச் செல்கிறது.

மக்கள்தொகை மிகவும் நெருக்கமில்லாதிருந்தது. இனக்குழு வசித்த இடத்தில்தான் மக்கள் அடர்த்தியாக இருந்தார்கள். அந்த இடம் பரந்த வேட்டைக் காடுகளால் சூழப்பட்டிருந்தது. இவற்றிற்கப்பால் மற்ற இனக்குழுக் களிலிருந்து அதைப் பிரித்துப் பாதுகாப்பு அளிக்கின்ற நடுநிலைக் காடு இருந்தது. உழைப்புப் பிரிவினை என்பது இயற்கையான வளர்ச்சியே. இது ஆண், பெண் மத்தி யில் மட்டுமே இருந்தது. ஆண்கள் போர் செய்தார்கள், வேட்டையாடினார்கள், மீன் பிடித்தார்கள்; உணவுக் குரிய மூலப் பொருட்களைக் கண்டெடுத்தார்கள், அத்

தொழில்களுக்கு வேண்டிய கருவிகளைப் படைத்தார்கள். பெண்கள் வீட்டை நிர்வாகம் செய்தார்கள், உணவும் துணியும் தயாரித்தார்கள்; சமைத்தார்கள், நெய்தார்கள், துணி தைத்தார்கள். ஆண் தன்னுடைய துறையில் எசமானனாக இருந்த மாதிரி பெண் தன்னுடைய துறையில் எசமானியாக இருந்தாள்; காட்டில் ஆண், வீட்டில் பெண். அவரவர் தயாரித்த, உபயோகித்த கருவிகள் அவரவர்களுக்கே சொந்தம்: போர், வேட்டை ஆயுதங்கள், மீன் பிடிக்கும் சாதனங்கள் ஆண்களுக்கு, வீட்டுப் பொருட்கள் பெண்களுக்கு. சில, பெரும்பாலும் பல குடும்பங்களைக் கொண்டு பொதுவுடைமை ரீதியில் வீட்டு நிர்வாகம் இருந்தது.* பொதுவில் உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட்டவை எல்லாம் பொதுச் சொத்தாக இருந்தன: வீடு, தோட்டம், நீண்ட மரக்கலம் ஆகியவை. ஆக, இங்கே—இங்கு மட்டுமே—''தன் உழைப்பினால் சேர்த்த உடைமை'' என்பதை நாம் பார்க்கிறோம். சட்ட நிபுணர்களும் பொருளியலாளர்களும் இதைத்தான் நாகரிக சமுதாயத்தின் மீது பொய்யான முறையில் கற்பித்திருக்கிறார்கள். நவீன கால முதலாளித்துவ உடைமை இந்த இறுதியான, பொய்மை மிக்க சட்டச் சாக்குப்போக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

ஆனால் மனிதன் எல்லா இடங்களிலும் இந்தக் கட்டத்தில் நின்று விடவில்லை. ஆசியாவில் வீட்டுக்குக் கொண்டுவந்து பழக்கி, கொட்டிலில் இன விருத்தி செய்யக் கூடிய மிருகங்களை மனிதன் கண்டான். காட்டெருமையை வேட்டையாட வேண்டியிருந்தது; வீட்டுப் பசு ஆண்டுதோறும் கன்று ஈன்றது, பாலும் கொடுத்தது. மிகவும் முன்னேற்றமடைந்த சில இனக்குழுக்கள் —ஆரியர்கள், செமைட்டுகள், துரானியர்கள் கூட—காட்டு மிருகங்களை வீட்டில் வைத்துப் பழக்குவதையும் பின்

---

* குறிப்பாக அமெரிக்காவின் வட மேற்குக் கடற்கரையில் அப்படி இருந்தது—பான்கிராஃப்ட் எழுதிய நூலைப் பார்க்க. ராணி சார்லட் தீவுகளைச் சேர்ந்த ஹெய்தாக்களிடையில் சில குடும்பச் சமூகங்கள் 700 நபர் வரை ஒரே கூரையின் கீழ் திரட்டி வைத்திருக்கின்றன; நூட்காக்களிடையில் ஒரே கூரையின் கீழ் இனக்குழுக்கள் மொத்தமாக வசித்தன. (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

னால் கால்நடைகளை வளர்த்து கவனித்துக் கொள்வதையும் தமது பிரதான தொழிலாகக் கொண்டனர். அநாகரிகர்களின் பொதுவான கூட்டத்திலிருந்து கால்நடை வளர்க்கும் இனக்குழுக்கள் தனியே பிரிந்து சென்றன: **இதுதான் சமுதாய ரீதியில் ஏற்பட்ட முதல் மாபெரும் உழைப்புப் பிரிவினை ஆகும்.** கால்நடைகளை வளர்த்த, இந்த இனக்குழுக்கள் மற்ற அநாகரிகர்களை விட அதிகமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தது மட்டுமன்றி, பல்வேறு விதமான பொருட்களையும் அதிக அளவில் உற்பத்தி செய்தனர். அவர்களிடம் பால், பாலால் தயாரிக்கப் பட்ட பொருட்கள், இறைச்சி ஆகியவை மற்றவர்களை விட அதிகமாக இருந்ததுடன் தோல்கள், கம்பளி ரோமம், ஆட்டு ரோமம் ஆகியவையும் இருந்தன; மூலப் பொருட்களின் அளவு அதிகரித்ததனால் நூல்கள், துணி மணிகள் முன்னை விட அதிகமான அளவில் உபயோகிக்கப்பட்டன. இது முதல் தடவையாக முறையான பண்டப் பரிவர்த்தனையைச் சாத்தியமாக்கியது. அதற்கு முந்திய கட்டங்களில் பண்டப் பரிவர்த்தனை எப்பொழுதாவது மட்டுமே நடைபெற முடியும். ஆயுதங்களையும் கருவிகளையும் படைப்பதில் விசேஷமான திறமை தற்காலிக உழைப்புப் பிரிவினைக்குக் கொண்டு சென்றிருக்கலாம். உதாரணமாக, புதிய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளைச் செய்வதற்குரிய பட்டறைகளின் சந்தேகத்திற்கிடமில்லாத மீதமிச்சங்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அப்பட்டறைகளில் தமது திறமையை வளர்த்துக் கொண்ட கம்மியர்கள் மிகப் பெரும்பாலும் சமூகத்துக்காக வேலை செய்தார்கள்; இந்தியக் குலச் சமூகங்களைச் சேர்ந்த நிரந்தரக் கைவினைஞர்கள் இன்னும் இப்படி வேலை செய்கிறார்கள். எப்படியிருப்பினும், அந்தக் கட்டத்தில் இனக்குழுவுக்குள் நடைபெற்ற பண்டப் பரிவர்த்தனையைத் தவிர வேறு விதமான பண்டப் பரிவர்த்தனை தோன்றியிருக்க முடியாது; இனக்குழுவுக்குள் நடைபெற்ற பண்டப் பரிவர்த்தனையும் கூட விதிவிலக்கான விஷயமே. ஆனால் கால்நடை வளர்க்கும் இனக்குழுக்கள் உருப்பெற்ற பிறகு பல்வேறு இனக்குழுக்களின் உறுப்பினர்களிடையில் பண்டப் பரிவர்த்தனை நடைபெறுவதற்கும் அது வளர்ச்சியடைந்து ஒரு முறையான

ஏற்பாடாகக் கெட்டிப்படுவதற்கும் உரிய எல்லாச் சாதகமான நிலைமைகளும் இங்கே இருப்பதைப் பார்க்கிறோம். முதலில் இனக்குழுவுக்கு இனக்குழு தத்தம் குலத் தலைவர்களின் மூலமாகப் பரிவர்த்தனை செய்து வந்தது. ஆனால், கால்நடை மந்தைகள் தனியாகப் பிரிக்கப்பட்ட சொத்தாக மாற்றப்படுதல் ஆரம்பமான பொழுது தனிநபர்களிடையே பரிவர்த்தனை நடைபெறுவது மேன்மேலும் அதிகரித்தது; கடைசியில் அது ஒன்றே பரிவர்த்தனை வடிவமாகி விட்டது. கால்நடை வளர்க்கும் இனக்குழுக்கள் அண்டை மக்களிடம் பரிவர்த்தனைக்குத் தந்த முக்கியமான பொருள் கால்நடைதான். கால்நடை என்ற பண்டமே மற்ற எல்லாப் பண்டங்களையும் மதிப்பிடுவதற்குரிய பண்டமாக ஆயிற்று. மற்ற பண்டங்களுக்கு மாற்றுப் பண்டமாக அது எங்கும் மறுப்பில்லாமல் பெற்றுக் கொள்ளப்பட்டது. சுருக்கமாகக் கூறினால், அது பணத்தின் செயற்பாட்டை மேற்கொண்டது; இந்தக் கட்டத்தில் அது பணத்தைப் போலவே பயன்பட்டு வந்தது. பண்டப் பரிவர்த்தனையின் ஆரம்பத்திலேயே பணம் என்ற விசேஷப் பண்டம் வேண்டும் என்ற கோரிக்கை இப்படி அவசியமாகவும் வேகமாகவும் எழுந்தது.

கடைக்கட்டத்திலிருந்த ஆசியாவின் அநாகரிக மக்களுக்கு காய்கறித் தோட்டக் கலை அநேகமாகத் தெரிந்திருக்காது; மிகவும் சமீப காலத்தைக் குறிப்பதென்றால், அநாகரிகத்தின் இடைக்கட்டத்தில்தான், வயல் விவசாயத்துக்கு முன்னோடியாக அது அவர்களிடையே தோன்றியது. நீண்ட, கடுமையான பனிக்காலத்துக்கென்று கால்நடைத் தீவனத்தைச் சேகரித்துக் கொள்ளாமல் கால்நடை வளர்க்கும் வாழ்க்கையைத் துரானிய சமபூமியின் பருவநிலை அனுமதிக்காது. எனவே புல் வளர்ப்பதும் தானியங்களைப் பயிரிடுவதும் இங்கே இன்றியமையாதவை ஆயின. கருங்கடலுக்கு வடக்கேயுள்ள ஸ்டெப்பி பிரதேசங்களுக்கும் இது பொருந்தும். முதலில் கால்நடைகளுக்காகத்தான் தானியம் பயிரிடப்பட்டது, ஆனால் விரைவில் மனிதனுக்கும் உணவு ஆயிற்று. பயிர் செய்த நிலம் இனக்குழுவின் நிலமாகவே இன்னும் இருந்தது. அது முதலில் குலத்துக்குத் தரப்பட்டது, பிற்காலத்தில் அந்தக் குலம் அதை வீட்டுச் சமூகங்களிடையே

உபயோகத்திற்கு வினியோகம் செய்தது, கடைசியில் தனிநபர்களுக்கு வினியோகம் செய்தது. இவர்களுக்கு சில உடைமையுரிமைகள் இருந்திருக்கலாம், அதற்கு மேலில்லை.

இந்தக் கட்டத்தின் தொழில்துறைச் சாதனைகளில் இரண்டு குறிப்பாக முக்கியமானவை: முதலாவது கைநெசவுத் தறி; இரண்டாவது உலோகத் தாதை உருக்கி உலோகச் சாமான்களைத் தயாரிப்பது. செம்பு, தகரம், அவற்றின் கலவையாகிய வெண்கலம் முக்கியமானவை. வெண்கலத்தைக் கொண்டு பயனுள்ள கருவிகளும் ஆயுதங்களும் செய்யப்பட்டன, ஆனால் அது கற்கருவிகளை அகற்றி விட முடியவில்லை. இரும்பால் மட்டுமே அதைச் செய்ய முடிந்திருக்கும். ஆனால் அதன் உற்பத்தி அதுவரை யாருக்கும் தெரியாது. தங்கமும் வெள்ளியும் நகைகள் செய்வதற்கும் அலங்காரத்துக்கும் பயன்படத் தொடங்கின. செம்பு, வெண்கலத்தை விட அவை ஏற்கெனவே அதிக விலைமதிப்புள்ளவையாக இருந்திருக்க வேண்டும்.

கால்நடை வளர்ப்பு, பயிர்த்தொழில், வீட்டில் செய்யும் கைத்தொழில் ஆகிய எல்லாத் துறைகளிலும் உற்பத்தி பெருகியது. இதனால் மனிதனுடைய உழைப்புச் சக்தி தனது வாழ்க்கைக்கு வேண்டியதைக் காட்டிலும் அதிகமாகவே உற்பத்தி செய்ய முடிந்தது. அதே சமயத்தில், அந்தந்தக் குலத்தின் அல்லது வீட்டுச் சமூகத்தின் அல்லது தனிப்பட்ட குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினனும் அன்றாடம் செய்து வந்த உழைப்பின் அளவு இதனால் அதிகரித்துக் கொண்டே வந்தது. இன்னும் அதிகமான உழைப்புச் சக்தி விரும்பத் தக்கதாயிற்று. யுத்தம் இந்த அதிக உழைப்புச் சக்தியை அளித்தது. யுத்தத்தில் பிடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் அடிமைகளாக்கப்பட்டார்கள். ஆகவே அன்றைக்கிருந்த பொதுவான வரலாற்று நிலைமைகளில் முதல் மாபெரும் சமூக உழைப்புப் பிரிவினை, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, அதனால் பொருட்செல்வத்தைப் பெருக்கி, உற்பத்தித் துறைகளையும் விரிவுபடுத்தி அதன் பின்னே அவசியத் தேவையாக அடிமைமுறையையும் கொண்டுவந்து சேர்த்தது. ஆக, முதல் மாபெரும் சமூக உழைப்புப் பிரிவினையிலிருந்து முதன்முதலாகச் சமுதாயத்தின் மாபெரும்

வர்க்கப் பிரிவினை தோன்றியது: எசமானர்களும் அடிமைகளும், சுரண்டுபவர்களும் சுரண்டப்படுபவர்களும் என்று இரண்டு வர்க்கங்கள் உண்டாயின.

இனக்குழுவின் அல்லது குலத்தின் பொதுச் சொத்தாக இருந்த கால்நடை மந்தைகள் தனிப்பட்ட குடும்பத் தலைவர்களின் சொத்தாக எப்படி, எப்பொழுது மாற்றப் பட்டன என்ற விவரம் இன்றுவரை நமக்குத் தெரியாது. ஆனால், அந்த மாற்றம் பிரதானமாக இந்தக் கட்டத்தில் தான் நடைபெற்றிருக்க வேண்டும். மந்தைகளும் மற்ற புதிய செல்வப் பொருட்களும் குடும்பத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கின. ஜீவனோபாயத்துக்கு வழி தேடுவது எப்பொழுதும் ஆணின் வேலையாக இருந்தது. எனவே அதற்குரிய சாதனங்களை அவன் உற்பத்தி செய்தான்; அவை அவனுடைய உடைமையாக இருந்தன. கால்நடை மந்தைகள் என்பவை வாழ்க்கைக்குரிய புதிய சாதனம். அவற்றை முதலில் பழக்கி பின்பு பராமரித்தது ஆண் செய்த வேலையே. எனவே கால்நடைகள் அவனுக்கே சொந்தம்; அவற்றைப் பரிவர்த்தனை செய்து பெற்ற பண்டங்களும் அடிமைகளும் அவனுக்கே சொந்தம். இப் பொழுது உற்பத்தியிலிருந்து கிடைத்த உபரி எல்லாம் ஆணுக்கே சொந்தமாயிற்று. அதை அனுபவிப்பதில் பெண் பங்கு கொண்டாள், அதன் உடைமையுரிமையில் அவளுக்குப் பங்கு இல்லை. ''காட்டுமிராண்டிப்'' போர்வீரனும் வேட்டைக்காரனும் வீட்டில் இரண்டாம் நிலையை வகித்துக் கொண்டு முதலிடத்தைப் பெண்ணுக்குத் தருவதில் திருப்தியடைந்தார்கள்; ''மென்மையான'' ஆட்டிடையனோ, தனது செல்வத்தைக் காட்டி முண்டியடித்து முதலிடத்தைப் பிடித்துக் கொண்டு பெண்ணை இரண்டாம் நிலைக்குத் தள்ளி விட்டான். அவளால் புகார் செய்யவும் முடியவில்லை. குடும்பத்தில் இருந்த உழைப்புப் பிரிவினை கணவன், மனைவிக்கு இடையில் சொத்து வினியோகத்தை முறைப்படுத்தி வைத்திருந்தது. இந்த உழைப்புப் பிரிவினை மாறாமலேதான் இருந்தது, எனினும் இது முந்திய குடும்ப உறவுமுறையைத் தலைகீழாக்கி விட்டது; ஏனென்றால் குடும்பத்துக்கு வெளியே இருக்கின்ற உழைப்புப் பிரிவினை மாறி விட்டது. வீட்டு உழைப்பு செய்வதுடன் நின்று கொள்ள வேண்டிய நிலை

யினால் முன்னர் பெண் வீட்டில் தலைமை நிலையில் இருந் தாள்; அதே காரணம் இப்பொழுது வீட்டில் ஆணுக்குத் தலைமை நிலையை உறுதிப்படுத்தியது. ஜீவனோபாயத் துக்காக ஆணுடைய உழைப்புடன் ஒப்பிடுகின்ற பொழுது பெண் செய்த வீட்டு வேலை அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. ஆணின் உழைப்புதான் எல்லாம்; பெண்ணின் வேலை ஒரு அற்பமான பங்குதான். சமூக ரீதியில் பயனுள்ள உழைப்பிலிருந்து பெண்கள் விலக்கப் பட்டு, வீட்டு வேலையைச் செய்வதுடன் நிறுத்தப்படு கின்ற வரை பெண்கள் விடுதலை அடைவதோ, ஆண் களுடன் சமமாக இருப்பதோ சாத்தியமில்லை என்பதை ஏற்கெனவே இங்கு காண்கிறோம். பெண்கள் பெரிய, சமூக அளவில் உற்பத்தியில் பங்கு கொள்வதற்கு வசதி யளிக்கின்ற பொழுதுதான், வீட்டு வேலைகளை சொற்ப அளவில் செய்தால் போதும் என்ற நிலை ஏற்படுகின்ற பொழுதுதான் பெண்களின் விடுதலை சாத்தியமாகும். இது நவீன காலப் பெரிய அளவுத் தொழில்துறையின் விளைவாகவே சாத்தியமாயிற்று. இந்தப் பெரிய அளவுத் தொழில்துறை பெண்கள் அதிக அளவில் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு வசதியளிக்கிறது. அது மட்டுமல்ல. இவ் வாறு பெண்கள் ஈடுபடுதல் அதற்கு அவசியமாகவும் இருக் கிறது. மேலும், அது தனிப்பட்ட வீட்டு வேலையைக் கூட ஒரு சமூக உற்பத்தியுடன் இணைக்க முயல்கிறது.

வீட்டில் ஆண் நடைமுறையில் தலைமையைப் பெற்றது அவனுடைய எதேச்சாதிகாரத்துக்கு இருந்த கடைசித் தடையையும் வீழ்த்தி விட்டது. தாயுரிமையை ஒழித்தது, தந்தையுரிமையைப் புகுத்தியது, இணை மண முறையிலிருந்து படிப்படியாக ஒருதார மணத்துக்கு மாறியது ஆகியவை மூலமாக இந்த எதேச்சாதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டது. இது பண்டைக்காலக் குல அமைப்பில் பிளவை ஏற்படுத்தி யது; தனிப்பட்ட குடும்பம் ஒரு சக்தியாகி, குலத்தைப் பயமுறுத்துகின்ற முறையில் எழுந்தது.

அடுத்த படி நம்மை அநாகரிக நிலையின் தலைக் கட்டத்துக்குக் கொண்டுவந்து விடுகிறது. இந்தக் காலப் பகுதியில் எல்லா நாகரிக மக்களினங்களும் தமது வீர யுகத்தைக் கடந்து வந்தன. இரும்பு வாளின் காலகட்டம்

இதுவே; அது மட்டுமல்லாமல், இரும்புக் கலப்பை, கோடாலியின் காலகட்டமும் இதுவே. இரும்பு மனிதனுக்குச் சேவை செய்யத் தொடங்கியது. வரலாற்றில் புரட்சிகரமான பாத்திரத்தை வகித்த மூலப்பொருட்களில் கடைசி, மிக முக்கியமான பொருள் இதுவே; கடைசி—அதாவது உருளைக்கிழங்கை நாம் விலக்கி விட்டால். இரும்பு வயல் விவசாயத்தை முன்னிலும் பெருமளவில் நடத்துவதையும் விரிந்த காட்டுப் பிரதேசங்களில் மரங்களை வெட்டிப் பண்படுத்துவதையும் சாத்தியமாக்கியது. எந்தக் கல்லும் அப்பொழுது அறிந்துள்ள எந்த உலோகமும் எதிர்நிற்க முடியாத அளவுக்கு உறுதியும் கூர்மையும் உள்ள கருவிகளை அது கைவினைஞனுக்கு அளித்தது. இவையெல்லாம் படிப்படியாகத்தான் நடந்தன. முதன்முதலில் தயாரிக்கப்பட்ட இரும்பு பெரும்பாலும் வெண்கலத்தை விட மென்மையாக இருந்தது. இப்படி, கல் ஆயுதங்கள் மெதுவாக மறைந்தன. கல்கோடாலிகள் போரில் உபயோகிக்கப்பட்டு வந்தன, ஹில்டெபிராண்டைப் பற்றிய பாடலில் குறிப்பிடப்படுவது மட்டுமன்றி 1066ஆம் ஆண்டில் ஹேஸ்டிங்ஸ் போரிலும்[40] அவை உபயோகிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது முன்னேற்றம் தடுக்க முடியாததாகி விட்டது; முன்னைவிடக் குறுக்கீடுகள் குறைவு, வேகமும் அதிகம். கல் அல்லது செங்கல்லினால் கட்டப்பட்ட வீடுகள், கொத்தளமும் துவார வரிசைகளும் அமைந்த கற்சுவர்கள் சூழ்ந்த நகரம் இனக்குழு அல்லது இனக்குழுக்களின் கூட்டிற்கு இருப்பிடமாயிற்று. இது கட்டிடக் கலையில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைக் குறித்தது; அதே சமயத்தில், ஆபத்து அதிகரித்திருப்பதற்கும் பாதுகாப்பு அவசியமாகி விட்டதற்கும் இது அறிகுறியாகும். செல்வம் வேகமாகப் பெருகியது; ஆனால் அது தனிநபர்களின் செல்வமே. துணி நெய்தல், உலோகச் சாமான்கள் செய்தல் மற்றும் இதர கைத்தொழில்கள் மேன்மேலும் தனித் தன்மை பெற்று வந்தன; அவை பலப்பல ரகங்களில் மேன்மேலும் அதிகமான கலைச்சிறப்புடன் மிளிர்ந்தன. விவசாயம் இப்பொழுது தானியங்களையும் அவரை வகையைச் சேர்ந்த செடிகளையும் கனிகளையும் அளித்தது மட்டுமன்றி, எண்ணெயையும் மதுவையும் தந்தது. அவற்றைத் தயாரிக்கும் முறை இப்பொழுது

கற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட பல்வேறு செயல்களை ஒரு தனிநபர் செய்வது இனிமேல் சாத்திய மில்லாமல் போய் விட்டது. **இரண்டாவது மாபெரும் உழைப்புப் பிரிவினை** ஏற்பட்டது. விவசாயத்திலிருந்து கைத்தொழில் கள் பிரிந்தன. உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்து, அதனுடன் உழைப்புத் திறனும் அதிகரித்தபடியால் மனித உழைப்புச் சக்தியின் மதிப்பு உயர்ந்தது. முந்திய கால கட்டத்தில் ஆரம்ப நிலையிலும் அங்குமிங்குமாகவும் இருந்த அடிமை முறை இப்பொழுது சமூக அமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாகி விட்டது. அடிமைகள் வெறும் உதவியாளர்களாக இருந்த நிலைமை மாறி விட்டது; அவர்கள் வயல்களிலும் பட்டறைகளிலும் வேலை செய்வதற்குக் கூட்டம் கூட்டமாக அனுப்பப் பட்டார்கள். உற்பத்தி விவசாயம், கைத்தொழில் என்னும் இரண்டு மாபெரும் கிளைகளாகப் பிரிந்ததி லிருந்து பரிவர்த்தனைக்கு உற்பத்தி செய்யும் முறை, அதாவது பண்ட உற்பத்தி முறை பிறந்தது. அத்துடன் வர்த்தகமும் வந்து சேர்ந்தது. அது இனக்குழுவுக்குள் மட்டுமல்ல, இனக்குழுவின் எல்லையோரங்களில் மட்டு மல்ல, கடல்கடந்த நாடுகளுடனும் நடைபெற்றது. இவையெல்லாம் இன்னும் மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையில்தான் இருந்தன. சர்வப்பொதுவான பணப் பண்டம் என்ற முறையில் தங்கமும் வெள்ளியும் முதன்மை அடைந்தன. எனினும் நாணயங்கள் இன்னும் அச்சிடப்படவில்லை. எடையைக் கொண்டுதான் அவை பரிவர்த்தனை செய்யப்பட்டன.

சுதந்திரமான மனிதன், அடிமை என்ற வேறுபாட்டு டன் பணக்காரன், ஏழை என்ற வேறுபாடும் சேர்ந்து கொண்டது; புதிய உழைப்புப் பிரிவினையுடன் சேர்ந்து வர்க்கங்களின் அடிப்படையில் சமுதாயத்தில் புதிய பிரி வினை ஏற்பட்டது. பல்வேறு குடும்பத் தலைவர்களின் செல்வத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் பொதுவுடைமை வீட்டுச் சமூகங்களை—அவை எங்கெல்லாம் இனியும் இருந்தனவோ அங்கே—அழிந்து போகச் செய்தன. இது சமூகத்தின் சாதனங்களின் அடிப்படையில் நிலத்தைப் பொதுவில் பயிரிடுவதை முடிவுக்குக் கொண்டுவந்தது. விளை நிலம் தனிப்பட்ட குடும்பங்களின் உபயோகத்

திற்கென்று, முதலில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கும் பின்னர் சாசுவதமாகவும் கொடுக்கப்பட்டது; இணை மண முறையிலிருந்து ஒருதார மண முறைக்கு மாறுவதுடன் சேர்ந்து முழுமையான தனியுடைமைக்கு மாறுவதும் படிப்படியாகவும் அதே சமயத்திலும் நடைபெற்றது. தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகு ஆயிற்று.

மக்கள்தொகையின் அடர்த்தி அதிகரித்து உள்ளும் வெளியும் இன்னும் நெருக்கமாக ஒன்றுபடுதல் அவசியமாயிற்று. இரத்த உறவுமுறை இனக்குழுக்கள் கூட்டாகச் சேர்வதும் பின்னர் வெகு விரைவில் அவை ஒன்றுகலப்பதும் அதன் பிறகு தனித்தனி இனக்குழுப் பிரதேசங்கள் மக்களினத்தின் ஒரே பிரதேசமாக இணைவதும் எங்குமே அவசியமாயின. மக்களினத்தின் இராணுவத் தளபதி——rex, basileus, thiudans—இன்றியமையாத, நிரந்தரமான அதிகாரியாகி விட்டான். மக்கள் சபைகள் இல்லாத இடங்களிலெல்லாம் அவை அமைக்கப்பட்டன. குலச் சமூகம் இப்பொழுது இராணுவ ஜனநாயகமாக வளர்ச்சியடைந்திருந்தது; இராணுவத் தளபதி, கவுன்சில், மக்கள் சபை ஆகியவை அதன் உறுப்புகளாக ஆயின. இராணுவ ஜனநாயகம்——ஏனென்றால் யுத்தமும் யுத்தத்துக்காகத் தயாராவதும் இப்பொழுது மக்களது வாழ்க்கையின் வாடிக்கையான செயல்களாகி விட்டன. அண்டை மக்களின் செல்வம் மக்களினங்களின் பேராசையைக் கிளறி விட்டது. செல்வத்தைச் சேர்ப்பது வாழ்க்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று என்று அவர்கள் கருதத் தொடங்கினார்கள். இந்த மக்கள் அநாகரிகர்கள்; உற்பத்தி வகைப்பட்ட வேலை செய்வதை விடக் கொள்ளையடிப்பது சுலபமானதாகவும் அதிக கௌரவமானதாகவும் அவர்களுக்குத் தோன்றியது. முன்பு ஆக்கிரமிப்புக்குப் பழி வாங்குவதற்கு அல்லது பற்றாமல் போய் விட்ட பிரதேசத்தை விரிவாக்குவதற்குப் போர் செய்தார்கள்; இப்பொழுது கொள்ளையடிப்பதற்கு மட்டுமே போர் செய்யப்பட்டது, அது ஒரு வாடிக்கையான தொழிலாகி விட்டது. புதிய கோட்டை நகரங்களைச் சுற்றி மாபெரும் அரண்கள் எழுப்பப்பட்டது வெறும் விளையாட்டிற்காக அல்ல; அங்கே வாயைப் பிளந்து கொண்டிருந்த அகழி

கள் குல அமைப்பின் சமாதிகளாகும்; அவற்றின் கொத்தளங்கள் நாகரிக நிலையை எட்டித் தொட்டுக் கொண்டிருந்தன. சமூகத்திற்குள் விவகாரங்களும் இதே மாதிரி மாறுதலடைந்தன. கொள்ளைக்கார யுத்தங்கள் தலைமைத் தளபதியின் அதிகாரத்தையும் துணைத் தளபதிகளின் அதிகாரத்தையும் பெருக்கின. ஒரேயொரு குடும்பத்திலிருந்து பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம், குறிப்பாகத் தந்தையுரிமையைப் புகுத்திய பிறகு, படிப்படியாகப் பரம்பரை வாரிசுரிமையாக மாறி விட்டது. இது முதலில் சகித்துக் கொள்ளப்பட்டது, பிறகு உரிமையாகக் கோரப்பட்டது, கடைசியில் அபகரிக்கப்பட்டது. பரம்பரை அரசவம்சம், பரம்பரைப் பிரபுத்துவம் ஆகியவற்றிற்கு அடிப்படை அமைக்கப் பட்டது. இவ்வாறாக, குல அமைப்பின் உறுப்புகள் மக்களிடம், குலத்தில், பிராட்ரியில், இனக்குழுவில் உள்ள தமது வேர்களிலிருந்து படிப்படியாகப் பிரிக்கப்பட்டன. குல அமைப்பு முழுவதும் அதன் எதிரிடையாக மாற்றப் பட்டது. அது சொந்த விவகாரங்களை சுதந்திரமாக நிர்வகிப்பதற்குரிய இனக்குழுக்களின் அமைப்பு என்பது மறைந்து போய், அண்டையிலிருப்பவர்களைக் கொள்ளை யடித்து ஒடுக்குவதற்குரிய அமைப்பாக மாறி விட்டது. ஆகவே, அதன் உறுப்புகள் மக்கள் சித்தத்தை நிறை வேற்றும் சாதனங்களாக இருந்த நிலை மாறி, சொந்த மக்களை ஆட்சி செய்வதற்கும் நசுக்குவதற்கும் உரிய சுயேச்சையான உறுப்புகளாகி விட்டன. செல்வத்தின் மீது ஏற்பட்ட பேராசை குலத்தின் உறுப்பினர்களைப் பணக்காரன், ஏழை என்று பிரிக்காதிருந்தால், இது ஏற் பட்டிருக்க முடியாது; ''குலத்திற்குள் சொத்து வேறு பாடுகள் நலன்களின் ஒற்றுமையை குலத்தின் உறுப்பினர் களுக்கிடையே உள்ள பகைமுரண்பாடாக மாறாமலிருந் திருந்தால்'' (மார்க்ஸ்), இது ஏற்பட்டிருக்க முடியாது; அடிமை முறை வளர்ச்சியடைந்ததால், ஜீவனோபாயத் துக்கு உழைப்பது அடிமைத்தனமானதென்றும் கொள்ளை யடிப்பதைக் காட்டிலும் மிகவும் இழிவானதென்றும் ஏற்கெனவே பழிக்கப்படத் தொடங்கியிராவிட்டால், இது ஏற்பட்டிருக்க முடியாது.

* * *

இது நம்மை நாகரிக நிலையின் வாயிலுக்குக் கொண்டு வந்து விடுகிறது. உழைப்புப் பிரிவினையில் ஏற்பட்ட கூடுதலான முன்னேற்றம் இதைத் துவக்கி வைத்தது. கடைக்கட்டத்தில் மனிதர்கள் தமது நேரடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே உற்பத்தி செய்து வந்தனர்; தற்செயலாகத் தேவைக்கு அதிகமாக ஏதாவது மிஞ்சினால் அவர்கள் எப்பொழுதாவது அதைப் பரிவர்த்தனை செய்தார்கள். அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தில் கால்நடை வளர்க்கும் மக்களினங்கள் தம் கால்நடைகளின் மூலம் ஒரு சொத்து வடிவத்தைப் பெற்றிருந்தன; போதுமான கால்நடை மந்தைகள் இருக்கும் பொழுது இந்தச் சொத்து அவர்களுடைய தேவைகளுக்கு அதிகமான உபரியை முறையாகக் கொடுத்து வந்தது என்பதைப் பார்க்கிறோம். மேலும், கால்நடை வளர்க்கும் மக்களினங்களுக்கும் மந்தைகள் இல்லாத பின்தங்கிய இனக்குழுக்களுக்கும் இடையில் உழைப்புப் பிரிவினை இருந்ததையும் பார்க்கிறோம். ஆக, உற்பத்தியில் இரண்டு கட்டங்கள் அடுத்தடுத்து இருந்தன; இவை முறையான பரிவர்த்தனைக்குரிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தன. அநாகரிக நிலையின் தலைக்கட்டம் விவசாயத்துக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் மேலும் உழைப்புப் பிரிவினையை உருவாக்கியது; குறிப்பாகப், பரிவர்த்தனைக்கு என்றே விளைபொருட்களில் மேன்மேலும் அதிகமான பகுதி உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் தனித்தனி உற்பத்தியாளர்களுக்கு இடையில் பரிவர்த்தனை நடைபெறுதல் சமுதாயத்துக்கு இன்றியமையாத தேவையாகி விட்டது. நிலைத்து விட்ட இந்த உழைப்புப் பிரிவினைகளை எல்லாம் நாகரிக நிலை வலுப்படுத்தி அதிகப்படுத்தி விட்டது; குறிப்பாக, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தீவிரப்படுத்தி (பண்டைக்காலத்தில் நாட்டுப்புறத்தின் மீது நகரம் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் வகித்த மாதிரியில் அல்லது மத்திய காலத்தில் நகரத்தின் மீது நாட்டுப்புறம் ஆதிக்கம் செலுத்திய மாதிரியில்) இந்த உழைப்புப் பிரிவினைகளை வலுப்படுத்தி அதிகப்படுத்தியது. அத்துடன், அது தனக்குப் பிரத்யேகமான, தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாவது உழைப்புப் பிரிவினையையும்

கூடச் சேர்த்து விட்டது. உற்பத்தியில் பங்கெடுக்காமல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பரிவர்த்தனை செய்வதில் மட்டும் ஈடுபடுகின்ற ஒரு வர்க்கத்தை, வர்த்தகர் களை அது படைத்தது. வர்க்கங்கள் தோன்றுவதற்குரிய முந்திய போக்குகள் எல்லாம் உற்பத்தியுடன் மட்டுமே முழுக்கத் தொடர்பு கொண்டிருந்தன. அவை உற்பத்தி யில் ஈடுபட்டிருந்தவர்களை நிர்வாகிகள், வேலை செய்ப வர்கள் என்று அல்லது பெரிய அளவு உற்பத்தியாளர்கள், சிறிய அளவு உற்பத்தியாளர்கள் என்று பிரித்தன. இங்கே முதல் தடவையாக ஒரு வர்க்கம் தோன்றுகிறது; அது உற்பத்தியில் எந்தப் பங்கும் கொள்ளாமலே உற்பத்தி நிர்வாகம் முழுவதையும் கைப்பற்றுகிறது; பொருளா தார ரீதியில் தன் ஆட்சிக்கு உற்பத்தியாளர்களைப் பணிய வைக்கவும் செய்கிறது; சமுதாயத்தின் எந்த இரண்டு உற்பத்தியாளர்களுக்கும் இடையில் தன்னை இன்றியமை யாத இடைத்தரகனாக்கிக் கொண்டு இருவரையும் சுரண்டுகிறது. பரிவர்த்தனையில் உள்ள கஷ்டமும் ஆபத் தும் உற்பத்தியாளருக்கு ஏற்படாமல் பாதுகாப்பதாகக் கூறியும் அவர்களுடைய விளைபொருட்களுக்குத் தொலை தூரச் சந்தைகளைப் பிடித்துத் தருவதாக சாக்குக் கூறி யும் புல்லுருவிகளைக் கொண்டு ஒரு வர்க்கம் தோன்று கிறது. இவ்வர்க்கத்தினர் உண்மையில் சமுதாயத்தின் சோம்பேறிகள். அவர்கள் மிகவும் அற்பமான சேவை களுக்கு வெகுமதியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உற்பத்தியின் சிறந்த பகுதியை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், பேரளவில் செல்வத்தையும் அதற்குத் தகுந்த சமூகச் செல்வாக்கையும் விரைவாகக் குவிக்கிறார் கள். அதே காரணத்துக்காக நாகரிக நிலையின் கால கட்டத்தில் அவர்கள் புதிதுபுதிதாக கௌரவங்களைப் பெற்றுக் கொண்டே இருக்கவும் உற்பத்தி மீது மேன் மேலும் அதிகமான பிடிப்பைப் பெறுவதற்கும் விதிக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் கடைசியில் சொந்தமாக ஒரு பொருளைப் படைத்து விடுகிறார்கள்; அதுதான் திரும்பத் திரும்ப நடைபெறுகின்ற வர்த்தக நெருக்கடிகள் என்பதாகும்.

நாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்ற வளர்ச்சிக் கட் டத்தில் தான் செய்யப் போகின்ற பெரிய காரியங்களைப்

பற்றி இந்த இளம் வர்த்தக வர்க்கத்துக்கு சூசகமாகக் கூடத் தெரியாது. ஆனால் அது உருப்பெற்றது, தன்னை இன்றியமையாததாக ஆக்கிக் கொண்டது; அது போதும். அத்துடன் உலோகப் பணம், அதாவது நாணயங்கள் உபயோகத்திற்கு வந்தன; அதன் மூலம், உற்பத்தியில் ஈடுபடாதவன் உற்பத்தியாளன் மீதும் அவனுடைய விளைபொருள்கள் மீதும் ஆட்சி செலுத்துவதற்கு ஒரு புதிய சாதனமும் வந்து சேர்ந்தது. பண்டங்களுக்கெல்லாம் பண்டமாக, மற்ற பண்டங்கள் எல்லாவற்றையும் தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பண்டம் கண்டுபிடிக்கப் பட்டு விட்டது; விரும்பத்தக்க எந்தப் பொருளாகவும் தேவைப்படுகின்ற எந்தப் பொருளாகவும் தன்னை மாற்றிக் கொள்ளும் தாயத்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அதை வைத்திருக்கின்ற நபர் உற்பத்தி உலகத்தை ஆட்சி செய்தார். மற்றவர்களைக் காட்டிலும் அது யாரிடம் அதிகமாக இருந்தது? வர்த்தகரிடம்தான். அவனிடம் பண வழிபாட்டுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. எல்லாப் பண்டங்களும், ஆகவே எல்லாப் பண்ட உற்பத்தியாளர்களும் பணத்துக்கு முன்னால் விழுந்து மண்டியிட வேண்டுமென்று அவன் தெளிவாகவே எடுத்துக் கூறினான். அது செல்வத்தின் அவதாரம், அதனுடன் ஒப்பிடுகின்ற பொழுது செல்வத்தின் மற்ற வடிவங்கள் எல்லாம் வெறும் நிழல்களே என்று அவன் நடைமுறையில் நிரூபித்துக் காட்டினான். பணத்தின் ஆதிக்கம் தன்னுடைய இளமைப் பருவத்தில் பூர்விகமான முரட்டுத்தனத்துடனும் வன்முறையுடனும் தன்னை வெளிக்காட்டியதைப் போல பின்னால் என்றைக்கும் காட்டியதில்லை. பணத்திற்குப் பண்டங்களை விற்பது ஏற்பட்ட பிறகு பணத்தைக் கடனாகக் கொடுப்பது வந்து சேர்ந்தது; வட்டியும் கந்து வட்டி முறையும் அத்துடன் வந்தன. பண்டைக்கால ஏதன்ஸ், ரோமாபுரி ஆகியவற்றின் சட்டங்கள் கடன் வாங்கியவர்களைக் கந்துவட்டிக்காரர்களின் காலடியில் ஈவிரக்கமின்றி, நாதியற்ற நிலையில் தள்ளியதைப் போல பிற்காலத்தில் வந்த எந்தச் சட்டமும் தள்ளவில்லை; இவ்விரு சட்டத் தொகுப்புகளும் பொதுச் சட்டம் என்ற முறையில் தன்னியல்பாகத் தோன்றியவையே, பொரு

ளாதாரக் கட்டாயத்தைத் தவிர வேறு எக்காரணத்தினா லும் அவை தோன்றவில்லை.

பண்டங்களின் வடிவத்தில் செல்வம், அடிமைகளின் வடிவத்தில் செல்வம், பண வடிவத்தில் செல்வம் ஆகிய வற்றுடன் நிலத்தின் வடிவத்திலும் செல்வம் தோன்றி யது. ஆதியில் குலம் அல்லது இனக்குழு துண்டு நிலங் களுக்கான உரிமையைத் தனிநபர்களுக்கு வழங்கியிருந் தது. அந்த உரிமை இப்பொழுது நிலைத்து விட்டபடி யால் இந்தத் துண்டு நிலங்கள் அவர்களுடைய பரம்பரைச் சொத்தாகி விட்டன. தம்முடைய நிலங்கள் மீது குலச் சமூகத்துக்கு இருந்த உரிமையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காகவே அந்தக் காலத்துக்குச் சிறிது முன்னாலிருந்து அவர்கள் மிகவும் அதிகமாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த உரிமை அவர்களுக்கு விலங் காகி விட்டது. அந்த விலங்கிலிருந்து அவர்கள் விரைவில் விடுவிக்கப்பட்டனர்—அத்துடன் விரைவாகப் புதிய நிலச் சொத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். முழுமையான, சுதந்திரமான நிலவுடைமை என்பதற்குக் கட்டுப்படுத்தப் படாத, வில்லங்கம் இல்லாத உடைமை என்ற அர்த்தம் மட்டுமல்ல, அதை பராதீனப்படுத்துவதற்கு உரிமையுண்டு என்ற அர்த்தமும் அதிலடங்கும். நிலம் குலத்துக்குச் சொந்தமாக இருந்த வரை இதைச் செய்கின்ற சாத் தியம் இல்லை. ஆனால் புதிய நிலச்சொந்தக்காரன் குலத் தின், இனக்குழுவின் தலைமையான உரிமையின் விலங்கு களை உதறியெறிந்த பிறகு அத்துடன் தன்னை நிலத் துடன் இதுவரை பிரிக்க முடியாதபடிப் பிணைத்திருந்த பந்தத்தையும் அறுத்து விட்டான். இதன் அர்த்தம் என்ன என்பதை, நிலத்தின் மீது தனியுடைமை ஏற்பட்ட பொழுது அதே காலத்தில் அத்துடன் உண்டாக்கப்பட்ட பணம் அவனுக்குத் தெளிவாக உணர்த்தியது. இப் பொழுது நிலம் விற்கப்படக் கூடிய, அடமானம் வைக்கப் படக் கூடிய ஒரு பண்டம் ஆகலாம். நிலத்தின் மீது தனி யுடைமை ஏற்பட்ட உடனே நில அடமானமும் கண்டு பிடிக்கப்பட்டது (ஏதன்சைப் பார்க்க). ஒருதார மண முறை யின் மீது தொத்திக் கொண்டு பொதுமகளிர் முறையும் விபசாரமும் நுழைந்ததைப் போல இப்பொழுது முதலாக அடமானமும் நிலவுடைமையுடன் தொத்திக் கொண்டு

விட்டது. சுதந்திரமான, முழுமையான, பராதீனப் படுத்தப்படக் கூடிய நிலவுடைமை வேண்டுமென்று கூச்சல் போட்டீர்கள் அல்லவா? இதோ வாங்கிக் கொள்ளுங்கள்: tu l'as voulu, George Dandin!*

இப்படி, வர்த்தகப் பெருக்கம், பணம், கந்துவட்டி, நிலச் சொத்து, நில அடமானம் ஆகியவற்றைத் தொடர்ந்து ஒரு சிறு வர்க்கத்திடம் செல்வம் குவிவதும் மத்தியப்படுத்தப்படுவதும் விரைவாக நடந்தன—இது ஒரு பக்கம்; மறு பக்கத்தில், மக்கள் திரளினர் மேன்மேலும் வறுமைக்குள் தள்ளப்பட்டு ஏழைகள் திரள்திரளாகப் பெருகினார்கள். பணம் படைத்த புதிய பிரபுத்துவம்—இது பழைய இனக்குழுப் பிரபுத்துவத்துடன் தொடக்கத்திலிருந்தே இணையாமலிருந்த இடங்களில்—பழைய இனக்குழுப் பிரபுத்துவத்தை இறுதியாகப் பின்னால் தள்ளி விட்டது (ஏதன்சில், ரோமாபுரியில், ஜெர்மானியர்கள் மத்தியில்). சுதந்திரமான மனிதர்களைச் செல்வத்தின் அடிப்படையில் வர்க்கங்களாகச் செய்த பிரிவினையுடன் சேர்ந்து, குறிப்பாக கிரீசில், அடிமைகளின் எண்ணிக்கை பிரம்மாண்டமான அளவுக்குப் பெருகியது.** இவர்களுடைய கட்டாய உழைப்பை அடிப்படையாகக் கொண்டு மொத்த சமுதாயத்தின் மேற்கட்டுமானம் நிர்மாணிக்கப்பட்டது.

இந்த சமூகப் புரட்சியின் விளைவாகக் குல அமைப்பு என்ன ஆயிற்று என்பதை இப்பொழுது பார்ப்போம். அதன் உதவியில்லாமல் வளர்ந்து விட்ட புதிய சக்திகளுக்கு எதிரே அது பலவீனமாகக் கிடந்தது. ஒரு குலத்தின் அல்லது ஒரு இனக்குழுவின் உறுப்பினர்கள் ஒரே

---

* *நீங்கள் கேட்டீர்களே, ஜார்ஜ் தாந்தேன்! (மொலியேர், ஜார்ஜ் தாந்தேன், அங்கம் 1, காட்சி 9).*—ப-ர்.

** *ஏதன்சில் அடிமைகளின் எண்ணிக்கைக்கு, மேலே பக்கம் 117 பார்க்க. கோரிந்த் நகரம் உச்ச நிலையில் இருந்த பொழுது அங்கே 4,60,000 அடிமைகள் இருந்தார்கள், எஜினாவில்—4,70,000; இரண்டு நகரங்களிலும் சுதந்திரமான மக்களைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான அடிமைகள் இருந்தார்கள்.* (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

நான்காவது ஜெர்மன் பதிப்பின் பக்கத்தை எங்கெல்ஸ் இங்கே தருகிறார். இத்தொகுதியில் பக்கம் 192 பார்க்க. —ப-ர்.

பிரதேசத்தில் ஒன்றாகச் சேர்ந்து வசிக்க வேண்டும், அவர்கள் மட்டும்தான் அங்கே வசிக்க முடியும் என்ற நிபந்தனையை அந்தக் குல அமைப்பு ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஆனால் இது என்றோ மறைந்து விட்டது. குலங்களும் இனக்குழுக்களும் எங்குமே ஒன்றாகக் கலந்து விட்டன. எங்கு பார்த்தாலும், அடிமைகளும் பாதுகாப்பு பெற்று வந்தவர்களும் அந்நியர்களும் சுதந்திரமான குடிமக்களிடையே வாழ்ந்து வந்தார்கள். ஒரே இடத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற நிலை அநாகரிக நிலையின் இடைக்கட்டத்தின் முடிவில் கிடைக்கப்பெற்றதாகும். அதற்கு மக்கள் இடப் பெயர்வினாலும் வீடு மாற்றங்களாலும் அடிக்கடி குறுக்கீடுகள் ஏற்பட்டன; வர்த்தகம், வேலை மாற்றம், நிலமாற்றம் எல்லாம் அவற்றைப் பொறுத்தவையாக இருந்தன. குலக் குழுக்களின் உறுப்பினர்கள் இனிமேல் தமது பொது விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஒன்றாகக் கூட முடியவில்லை; மதச் சடங்குகள் போன்ற சில்லறைக் காரியங்கள்தான் கடைப்பிடிக்கப்பட்டன, அவை கூட அலட்சியமாகவே செய்யப்பட்டன. எந்தத் தேவைகளுக்காகவும் நலன்களுக்காகவும் குல உறுப்புகள் நியமிக்கப்பெற்றும் கவனிப்பதற்குத் தகுதியாக்கப்பட்டும் இருந்தனவோ, அவற்றுடன் கூடுதலாகப் புதிய தேவைகளும் நலன்களும் தோன்றின; வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுகின்ற நிலைமைகளில் ஏற்பட்ட புரட்சியினாலும் அதனால் சமூகக் கட்டுக்கோப்பில் ஏற்பட்ட மாறுதலினாலும் இவை தோன்றின. இவை பண்டைய குல அமைப்புக்குப் புறம்பானவை மட்டுமல்ல; ஒவ்வொரு வழியிலும் அதில் குறுக்கிட்டுத் தடுத்தன. உழைப்புப் பிரிவினையால் ஏற்பட்ட கைவினைஞர் குழுக்களின் நலன்கள், நாட்டுப்புறத்துக்கு எதிரிடையாக வுள்ள நகரத்தின் விசேஷத் தேவைகள் ஆகியவற்றிற்குப் புதிய உறுப்புகள் அவசியமாக இருந்தன. ஆனால் இக்கைவினைஞர் குழுக்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு குலங்கள், பிராட்ரிகள், இனக்குழுக்களிலிருந்து வந்த நபர்கள் இருந்தார்கள்; அவர்களில் அந்நியர்களும் இருந்தார்கள். எனவே புதிய உறுப்புகள் குல அமைப்புக்கு வெளியே, அதனுடன் இணைகரமாக, அதே சமயத்தில் அதற்கு எதிராகவே உருப்பெறுதல் அவசியமாயிற்று.

மேலும், ஒவ்வொரு குலக் குழுவிலும் நலன்களுக்கு இடையில் மோதல் வெளிப்பட்டு வந்தது; பணக்காரர்களையும் ஏழைகளையும், கந்துவட்டிக்காரர்களையும் கடனாளிகளையும் ஒரே குலமும் ஒரே இனக்குழுவும் பிணைத்து கொண்ட பொழுது இந்த மோதல் உச்ச நிலையை அடைந்தது. அத்துடன் பெருந்திரளாகப் புதிய குடிமக்களும் இருந்தார்கள்; இவர்கள் குலச் சமூகங்களுக்கு அந்நியர்கள். ரோமாபுரியில் நடந்ததைப் போல இவர்கள் நாட்டில் ஒரு சக்தியாக மாற முடியும்; மேலும், இரத்த உறவு முறையுள்ள குலங்களும் இனக்குழுக்களும் உட்கொள்ள முடியாத அளவுக்கு எண்ணிக்கையில் அதிகமாக இருந்தார்கள். இந்த மக்கள் திரளினருக்கு எதிரே குலச் சமூகங்கள் பிறரை விலக்கி வைத்துள்ள, சலுகையுரிமைகள் கொண்ட அமைப்புகளாக நின்றன. ஆதியில் இயற்கையாக வளர்ந்த ஜனநாயகம் இப்பொழுது வெறுக்கத் தக்கதொரு பிரபுத்துவ முறையாக மாறி விட்டது. கடைசியாக, உள் பகைமைகளை அறிந்திராத சமுதாயத்திற்குள்ளேயிருந்து குல அமைப்பு தோன்றி வளர்ந்தது; அப்படிப்பட்ட சமுதாயத்துக்கு மட்டுமே அது பொருத்தமாக இருந்தது. பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தவிர வேறு கட்டாய அதிகாரம் அதனிடம் இருந்ததில்லை. ஆனால் இப்பொழுதோ ஒரு சமுதாயம் தோன்றியிருக்கிறது; அது தன்னுடைய பொருளாதார வாழ்க்கை நிலைமைகள் அனைத்தின் காரணமாகச் சுதந்திரமான மனிதர்களாகவும் அடிமைகளாகவும், சுரண்டுகின்ற பணக்காரர்களாகவும் சுரண்டப்படுகின்ற ஏழைகளாகவும் பிரிந்து விட வேண்டியிருந்தது. அது இப்பகைமைகளை சமரசப்படுத்த முடியாதிருந்தது மட்டுமல்ல, அவற்றை மேன்மேலும் தீவிரப்படுத்த வேண்டியிருந்தது. இந்த வர்க்கங்கள் ஒன்றோடொன்று இடைவிடாது பகிரங்கமாகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் மட்டுமே இச்சமுதாயம் இருக்க முடியும், அல்லது அது ஒரு மூன்றாவது சக்தியின் ஆட்சியின் கீழ் இருக்க முடியும்; அந்தச் சக்தி ஒன்றோடொன்று போராடிக் கொண்டிருக்கின்ற வர்க்கங்களுக்கு அப்பால் நிற்பதாக வெளியில் காட்டிக் கொண்டு, அவற்றின் பகிரங்கமான சண்டையை ஒடுக்கி, அதிகமாகப் போனால், பொருளாதாரத் துறையில் மட்

டும், சட்ட வடிவம் என்று சொல்லிக் கொள்ளப்படுகின்ற ரீதியில் வர்க்கப் போராட்டத்தை அனுமதிக்கும். குல அமைப்பு காலம் கடந்ததாகி விட்டது. உழைப்புப் பிரிவினையும் அதனால் சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்த விளைவும் அந்தக் குல அமைப்பை உடைத்து விட்டன. அதனிடத்தில் அரசு வந்தது.

* * *

குல அமைப்பின் அழிவுக் குவியல் மீது எழுப்பப்பட்ட அரசின் மூன்று பிரதான வடிவங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு நாம் மேலே விவாதித்தோம். மிகவும் தூய்மையான, மிகவும் மூலச்சிறப்பான வடிவத்தை ஏதன்ஸ் பிரதிநிதித்துவம் செய்தது. அங்கே, குல சமுதாயத்துக்குள்ளே வளர்ந்த வர்க்க பகைமைகளிலிருந்து நேரடியாகவும் பிரதானமாகவும் அரசு தோன்றியது. ரோமாபுரியில் குல சமுதாயம் மற்றவர்களை விலக்கி வைக்கின்ற பிரபுத்துவமாக மாறி விட்டது. அது, எண்ணிக்கையில் அதிகமாக இருந்த பிளெப்ஸ் மத்தியில், அவர்களிடமிருந்து விலகி நின்று கொண்டிருந்தது. பிளெப்சுக்கு உரிமைகள் ஏதுமில்லை, கடமைகள் மட்டுமே உண்டு. பிளெப்சின் வெற்றி பழைய குல அமைப்பை நொறுக்கியது, அதன் அழிவுக் குவியல் மீது அரசை நிர்மாணித்தது. அந்த அரசில் விரைவில் குலப் பிரபுத்துவமும் பிளெப்சும் ஒருங்கே முழுமையாக உட்கொள்ளப்பட்டன. கடைசியாக, ரோமானியப் பேரரசைத் தோற்கடித்த ஜெர்மானியர்களிடையில், விரிவான அந்நியப் பிரதேசங்களைக் கைப்பற்றியதன் நேரடி விளைவாக அரசு தோன்றியது. அப்பிரதேசங்களை ஆட்சி செய்வதற்கு குல அமைப்புக்கு எவ்விதச் சாதனமும் இல்லை. இக்கைப்பற்றலுக்கு முந்திய மக்களினத்துடன் கடுமையாகப் போர் புரிய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை; அதிக வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினைக்கும் அவசியம் ஏற்படவில்லை; தோல்வியடைந்தவர்களும் வெற்றியாளர்களும் அநேகமாக ஒரே பொருளாதார வளர்ச்சிக் கட்டத்தில்தான் இருந்தார்கள்; ஆகவே, சமுதாயத்தின் பொருளாதார அடிப்படை முன்மாதிரியேதான் இருந்தது. இத்தகைய எல்லாக் காரணங்களினாலும் குல அமைப்பு ஒரு மாறுபட்ட,

பிரதேச ரீதியான வடிவத்தில், மார்க் அமைப்பு என்ற வடிவத்தில் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்திருக்க முடிந்தது. பிற்காலத்தில் வந்த பிரபுக் குடும்பங்களிலும் பட்ரீஷியக் குடும்பங்களிலும், டித்மார்ஷென் விவசாயிக் குடும்பங்களைப்* போன்ற விவசாயிக் குடும்பங்களிலும் கூட அது பலவீனமடைந்த வடிவத்தில் தனக்குப் புத்துயிரூட்டிக் கொள்வதும் கூட சிறிது காலத்துக்கு சாத்தியமாக இருந்தது.

ஆகவே, அரசு என்பது வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு சக்தியல்ல என்பது உறுதி; ஹெகல் கூறுவதைப் போல அது ''தார்மிகக் கருத்தின் எதார்த்தம்'', ''பகுத்தறிவின் பிரதிபிம்பம், எதார்த்தம்''** அல்ல. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை எட்டிய சமுதாயத்தின் விளைபொருள் அது. இந்த சமுதாயம் தன்னுடனேயே தீர்வு காண முடியாத ஒரு முரண்பாட்டில் சிக்கிக் கொண்டு விட்டது, சமரசப் படுத்த முடியாத பகைமைகளாகப் பிளவுபட்டு விட்டது, அவற்றைப் போக்குவதற்குத் தனக்குச் சக்தியில்லை என்னும் ஒப்புதலே அது. ஆனால் இந்தப் பகைமைகள், எதிர்மறையான பொருளாதார நலன்களைக் கொண்டிருக்கும் வர்க்கங்கள் வீண் சண்டையில் தம்மையும் சமுதாயத்தையும் அழித்து விடக் கூடாது என்பதற்காக சமுதாயத்துக்கு மேலே இருப்பதாகக் காட்டிக் கொள்கின்ற ஒரு சக்தி அவசியமாக இருந்தது. சண்டையின் கடுமையைத் தணிப்பது, ''ஒழுங்கு'' என்னும் வரம்புக்குள் அதைக் கட்டுப்படுத்துவது அதன் நோக்கம். சமுதாயத்திலிருந்து தோன்றிய, சமுதாயத்துக்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக் கொண்டு, சமுதாயத்திலிருந்து மேன்மேலும்

---

* குலத்தின் தன்மை குறித்து ஏறக்குறைய சரியான கருத்தைக் கொண்டிருந்த முதல் வரலாற்றாசிரியர் நீபூர் ஆவார். டித்மார்ஷென்[41] குடும்பங்களைப் பற்றி அவருடைய அறிவு இதற்குக் காரணமாகும். ஆனால் அவர் செய்த தவறுகளுக்கும் அதுதான் காரணம். அவற்றிலிருந்து யாந்திரிகமான முறையில் அவர் தன் தவறுகளைப் பிரதியெடுத்தார். (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

** ஹெகல், சட்டத் தத்துவஞானத்தின் அடிப்படைகள், பாராக்கள் 257 மற்றும் 360.—ப-ர்.

தன்னை அந்நியப்படுத்திக் கொள்கின்ற இந்தச் சக்தியே அரசு என்பதாகும்.

இந்த அரசு பழைய குல அமைப்பிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. முதலாவதாக, அது தனது குடிமக்களைப் பிரதேச ரீதியில் பிரித்து வைக்கிறது. இரத்த உறவுகளின் மீது அமைக்கப்பட்டு அந்தப் பிணைப்புகளினால் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்த பழைய குலக் குழுக்கள் தேவைக்குப் போதாதவையாகி விட்டன; குல உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவற்றின் முன்நிபந்தனை என்றோ அழிந்து விட்டது பெரும்பாலும் அதற்கு காரணமாகும் என்பதை நாம் பார்த்தோம். பிரதேசம் இருந்தது, ஆனால் மக்கள் அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருந்தார்கள். எனவே பிரதேச ரீதியில் பிரிப்பது என்பது தொடக்க நிலையாகக் கொள்ளப்பட்டது. எங்கெல்லாம் மக்கள் குடியேறினார்களோ, அங்கு அவர்கள் தமது சமூக உரிமைகளையும் கடமைகளையும் ஆற்ற அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் எந்தக் குலம், எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று ஆராயப்படவில்லை. குடிமக்களை இடவாரியாக அமைத்தல் எல்லா அரசுகளுக்கும் பொதுவான குணாம்சமாகும். அதனால் தான் அது இயற்கையானதாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால் ஏதன்சிலும் ரோமாபுரியிலும் குலங்களின்படித் திரட்டி வைக்கின்ற பழைய அமைப்பை அகற்றி அதனிடத்தில் இது வருவதற்கு முன் எவ்வளவு நீண்ட, கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது என்பதை நாம் பார்த்தோம்.

இரண்டாவது குறியடையாளமானஅம்சம் என்னவென்றால், ஆயுதமேந்திய படையாகத் தம்மைத் திரட்டிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு இனிமேல் நேரடியாகப் பொருந்தாத சமூக அதிகாரம் நிறுவப்பட்டது. வர்க்கங்கள் என்ற பிளவு ஏற்பட்ட பிறகு தானாகவே செயல்படுகின்ற மக்களின் ஆயுதமேந்திய அமைப்பு என்பது சாத்தியமற்று விட்டது என்ற காரணத்தால் இந்த விசேஷமான சமூக அதிகாரம் அவசியமாயிற்று. அடிமைகளும் மக்கள்தொகையில் சேர்ந்தவர்களே. 90,000 அதீனியக் குடிமக்கள் 3,65,000 அடிமைகளுக்கு மத்தியில் சலுகை

யுரிமை கொண்ட வர்க்கமாக மட்டுமே இருந்தார்கள். அதீனிய ஜனநாயகத்தின் மக்கள் படை என்பது பிரபுத்துவ வகைப்பட்ட சமூக அதிகாரம் ஆகும். அது அடிமைகளுக்கு எதிராகச் செலுத்தப்பட்டது, அடிமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. எனினும் குடிமக்களையும் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காகப் போலீஸ் படையும் அவசியமாயிற்று என்பதை நாம் முன்னர் விவரித்தோம். இந்தச் சமூக அதிகாரம் ஒவ்வொரு அரசிலும் உண்டு. அது ஆயுதமேந்திய மக்களை மட்டும் கொண்டதல்ல; அத்துடன் பொருள்வகைப்பட்ட துணைக் கருவிகளையும் கூட, அதாவது சிறைகள், பல்வேறு முறைகளில் பலாத்காரத்தைப் பிரயோகிக்கின்ற அமைப்புகள் ஆகியவற்றையும் கொண்டது; இவை அனைத்தையும் பற்றி குல சமுதாயத்துக்கு ஒன்றுமே தெரியாது. வர்க்கப் பகைமைகள் இன்னும் வளராதிருக்கின்ற சமுதாயங்களிலும், எங்கோ மூலையில் ஒதுங்கிக் கிடக்கின்ற இடங்களிலும்—அமெரிக்க ஐக்கிய நாட்டில் சில சமயங்களில், சில பிரதேசங்களில் இப்படித்தான் இருந்தது—இந்த சமூக அதிகாரம் பொருட்படுத்த அவசியமில்லாததாக, மிகவும் சொற்பமாக இருக்கலாம். எனினும் அரசுக்குள் வர்க்க முரண்பாடுகள் மேன்மேலும் கடுமையாகி வருகின்ற அளவுக்கு, அண்டை அரசுகள் பரப்பிலும் மக்கள்தொகையிலும் அதிகரிக்கின்ற அளவுக்கு சமூக அதிகாரமும் மேன்மேலும் பலமடைகிறது. இக்கால ஐரோப்பாவை நாம் பார்த்தால் போதும். அங்கே வர்க்கப் போராட்டமும் நாடுபிடிப்பதிலுள்ள போட்டியும் மொத்த சமுதாயத்தையும் அரசையும் கூட விழுங்குவதாக பயமுறுத்தக் கூடிய அளவுக்கு சமூக அதிகாரத்தை உயர்த்தியிருக்கின்றன.

இந்த சமூக அதிகாரத்தை வைத்திருப்பதற்கு குடிமக்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்தல் அவசியமாகிறது; அவைதான் வரிகள். குல சமுதாயத்தில் இவை முற்றிலும் இல்லை. நாமோ இன்று அவற்றைப் பற்றிப் போதிய அளவுக்கு அறிந்துள்ளோம். நாகரிகம் வளர்ச்சியடைகின்ற பொழுது இந்த வரிகள் பற்றாமல் போகின்றன. அரசு எதிர்காலத்தை அடமானம் வைத்துப் பணம் பெறுகிறது, கடன் வாங்குகிறது, அரசுக் கடன்கள் ஏற்

படுகின்றன. இவற்றைப் பற்றிக் கூட பழைய ஐரோப்பா பல தகவல்களை அளிக்க முடியும்.

சமூக அதிகாரத்தையும் வரி விதிக்கும் உரிமையையும் கொண்ட அதிகாரிகள் இப்பொழுது, சமுதாயத்தின் உறுப்புகள் என்ற நிலையில் சமுதாயத்துக்கு மேலே இருக்கிறார்கள். குல அமைப்பின் உறுப்புகளுக்கு அளிக்கப்பட்டு வந்த சுதந்திரமான, விருப்ப பூர்வமான மதிப்பு இவர்களுக்குக் கிடைத்தால் கூட திருப்தி அளிக்கவில்லை. சமுதாயத்திலிருந்து அந்நியப்பட்டுக் கொண்டு வருகின்ற அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இவர்கள் அசாதாரணமான சட்டங்களின் மூலம் தம்மை மதிக்கும்படிக் கட்டாயப்படுத்த வேண்டும்; இச்சட்டங்களின்படி, இவர்கள் விசேஷமான புனிதத் தன்மையையும் மீறக் கூடாத தன்மையையும் பெற்றிருக்கின்றார்கள். நாகரிக அரசின் மிகவும் கீழ்நிலையிலுள்ள போலீஸ்காரனிடம் குல சமுதாயத்தின் சகல உறுப்புகளுக்கும் இருக்கின்ற மொத்த அதிகாரத்தை விட அதிகமான ''அதிகாரம்'' இருக்கிறது. எனினும் நாகரிக சமுதாயத்தின் வலிமை மிக்க அரசன், மாபெரும் அரசுப் பிரமுகர் அல்லது இராணுவத் தளபதி மிகவும் எளிமையான குலத் தலைவனுக்கு அந்தக் குலம் காட்டுகின்ற கட்டாயமற்ற, எதிர்ப்பு இல்லாத மதிப்பைக் கண்டு பொறாமைப்படக் கூடும். இவன் சமுதாயத்தின் மத்தியில் நிற்கிறான்; அவர்கள் எல்லோரும் சமுதாயத்துக்கு வெளியே, சமுதாயத்துக்கு மேலே இருக்கின்ற ஏதோ ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்த முயலுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

வர்க்கப் பகைமைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்திலிருந்து அரசு தோன்றியது; அதே சமயத்தில் அந்த வர்க்கங்களுக்கு இடையில் நடைபெற்ற மோதல்களின் மத்தியிலிருந்தே அது தோன்றியது. ஆகவே, அது பொது விதியாகவே, மிகவும் வலிமையான, பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கத்தின் அரசாகிறது. அந்த வர்க்கம் அரசின் மூலமாக அரசியல் ரீதியிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகிறது. இவ்வழியிலே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை நசுக்கிச் சுரண்டுவதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது. ஆகவே, பண்டைக்கால அரசு, எல்லாவற்றிற்கும் மேலாக, அடிமை

களை ஒடுக்கி வைப்பதற்கென்று ஏற்பட்ட அடிமையுடைமையாளர்களின் அரசாக இருந்தது; அதைப் போலவே நிலப்பிரபுத்துவ அரசு என்பதும் பண்ணையடிமைகளையும் சார்புநிலையிலுள்ள விவசாயிகளையும் ஒடுக்கி வைப்பதற்கு ஏற்பட்ட பிரபுவம்சத்தினரின் அரசாக இருந்தது; அதைப் போலவே நவீன காலப் பிரதிநிதித்துவ அரசும் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கு ஏற்பட்ட கருவியாகும். எனினும் விதிவிலக்கு என்ற முறையில் சில காலப் பகுதிகள் இருப்பதுண்டு. அவற்றில் சண்டையிடுகின்ற வர்க்கங்கள் பரஸ்பரம் அநேகமாக சம பலத்தைப் பெறுவதினால், வெளிப் பார்வைக்கு மத்தியஸ்தராக இருக்கின்ற அரசு அதிகாரம் சிறிது காலத்துக்கு அவற்றினின்றும் ஓரளவுக்குச் சுதந்திரமாக இருக்கிறது. 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த எதேச்சாதிகார முடியரசு என்பது இப்படிப்பட்டதுதான். அது பிரபு வம்சத்தினருக்கும் முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையில் சமநிலையைக் கொண்டிருந்தது. முதல் பிரெஞ்சுப் பேரரசின், இன்னும் குறிப்பாக இரண்டாவது பிரெஞ்சுப் பேரரசின் போனப்பார்ட்டிசமும் இப்படிப்பட்டதே; அது முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளி வர்க்கத்தையும் மோத விட்டுக் கொண்டிருந்தது. இத்தகைய காரியத்துக்கு மிகவும் சமீப உதாரணம் பிஸ்மார்க்கின் தேசிய இனத்தின் புதிய ஜெர்மன் பேரரசு ஆகும்; அதில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒருங்கே கோமாளிகளாகத் தோற்றமளிக்கிறார்கள். அங்கே, ஒன்றுக்கொன்று எதிராக இருக்கின்ற முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒருங்கே சமப்படுத்தப்படுகின்றனர்; ஏழ்மைப்பட்டுள்ள பிரஷ்ய முட்டாள்தனமான ஜங்கர்களின் நன்மைக்காக இரு சாராரும் சமமாக ஏமாற்றப்படுகின்றனர்.

மேலும், வரலாற்றுக்குத் தெரிந்த அரசுகள் மிகப் பெரும்பாலானவற்றில் குடிமக்களின் உரிமைகள் அவர்களுடைய செல்வ நிலைக்குத் தக்கபடி ஒதுக்கப்படுகின்றன. ஆக, அரசு என்பது உடைமை வர்க்கத்தின் ஸ்தாபனம், உடைமையற்ற வர்க்கத்திடமிருந்து அந்த வர்க்கத்தைப் பாதுகாப்பதற்கே அது இருக்கிறது என்ற உண்மையை இது நேரடியாக வெளியிடுகிறது. உடைமையின்

படி ஏற்பட்ட அதீனிய, ரோமானிய வகுப்பமைப்பிலும் இப்படித்தான் இருந்தது. மத்திய கால நிலப்பிரபுத்துவ அரசிலும் இப்படியேதான் இருந்தது. அங்கே ஒரு நபரின் நிலவுடைமையின் அளவுக்குத் தக்கபடி அவனுடைய அரசியல் அதிகாரம் இருந்தது. நவீன காலப் பிரதிநிதித்துவ அரசுகளின் வாக்குரிமைத் தகுதிகளில் இதைப் பார்க்கலாம். எனினும் சொத்து வேறுபாடுகளுக்குத் தரப்பட்டிருக்கின்ற இந்த அரசியல் அங்கீகாரம் முக்கியமானதல்ல. மாறாக, அரசு வளர்ச்சியின் கீழ்க் கட்டத்தையே இது குறிக்கிறது. அரசின் உச்ச வடிவமாகிய ஜனநாயகக் குடியரசு என்பது நமது நவீன சமூக நிலைமைகளின் கீழ் மேன்மேலும் தவிர்க்க முடியாததாகிக் கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் கடைசியான, தீர்மானகரமான போராட்டத்தை இந்த அரசு வடிவத்திற்குள்தான் நடத்தி முடிக்க முடியும். சொத்து வேறுபாடுகளைப் பற்றி இந்த ஜனநாயகக் குடியரசுக்கு அதிகார பூர்வமாக இன்னும் ஒன்றுமே தெரியாது. இந்தக் குடியரசில் செல்வம் தன்னுடைய அதிகாரத்தை மறைமுகமாகச் செலுத்துகிறது, எனினும் முன்னை விட நிச்சயமாகச் செலுத்துகிறது: ஒரு பக்கத்தில், அதிகாரிகளுக்கு நேரடியாக லஞ்சம் கொடுப்பது (இதற்கு அமெரிக்கா மிகச் சிறந்த உதாரணமாக இருக்கிறது); மறு பக்கத்தில், அரசாங்கத்துக்கும் பங்குச் சந்தைக்கும் இடையில் கூட்டணி அமைத்தல்; அரசுக் கடன்கள் மேன்மேலும் அதிகரிக்கின்ற பொழுது, பங்குச் சந்தையைத் தமது மையமாக வைத்துக் கொண்டு போக்குவரத்து மட்டுமன்றி உற்பத்தியையும் கூட்டுப் பங்குக் கம்பெனிகள் தம்மிடம் குவித்துக் கொள்வது அதிகரிக்கின்ற பொழுது இக்கூட்டணி அமைப்பது மேலும் சுலபமாகிறது. அமெரிக்காவைத் தவிர சமீப கால பிரெஞ்சுக் குடியரசும் இதற்குச் சிறந்த உதாரணமாகும்; இத்துறையில் பழைய அண்ணாவான ஸ்விட்சர்லாந்தும் தன் பங்கைச் செலுத்தியிருக்கிறது. அரசாங்கத்துக்கும் பங்குச் சந்தைக்கும் இடையில் சகோதரக் கூட்டணி ஏற்படுவதற்கு ஒரு ஜனநாயகக் குடியரசு தேவையில்லை என்பதை இங்கிலாந்து நிரூபிக்கிறது, புதிய ஜெர்மன் பேரரசும் நிரூபிக்கிறது. அங்கே பொது வாக்குரிமை வந்தத

னால் அதிகமாகப் பலனடைந்தது பிஸ்மார்க்கா, பிளைஹ்ரோடெரா என்று யாராலும் கூற முடியாது. கடைசியாக, உடைமை வர்க்கம் பொது வாக்குரிமை மூலம்தான் ஆட்சி செய்கிறது. ஆகவே ஒடுக்கப்பட்ட வர்க்கம்—இங்கே பாட்டாளி வர்க்கம்—தன்னுடைய விடுதலையைத் தானே நிறைவேற்றுவதற்குப் பக்குவம் பெறாதிருக்கின்ற வரையில், இன்றுள்ள சமூக அமைப்பு ஒன்றுதான் சாத்தியமானது என்று அதன் பெரும்பான்மையினர் கருதிக் கொண்டிருப்பார்கள். அரசியல் ரீதியில் முதலாளி வர்க்கத்தின் வாலாக, அதன் தீவிர இடதுசாரி அணியாக அமைந்திருப்பார்கள். எனினும் இந்த வர்க்கம் தன்னுடைய சுய விடுதலைக்குப் பக்குவம் அடைகின்ற முறையில் தன்னை ஒரு கட்சியாக அமைத்துக் கொள்கிறது; முதலாளிகளின் பிரதிநிதிகளையல்ல, தன்னுடைய சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இப்படி, பொது வாக்குரிமை என்பது தொழிலாளி வர்க்கத்தின் முதிர்ச்சியை அளக்கின்ற ஒரு கருவியாகும். தற்கால அரசில் அதற்கு மேலாக அது இருக்க முடியாது, ஒரு போதும் இருக்காது. ஆனால் அது போதும். எந்த நாளில் பொது வாக்குரிமை என்ற வெப்ப அளவைக் கருவி தொழிலாளர்களிடையே கொதி நிலையைக் காட்டு கிறதோ, அந்த நாளில், என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும், முதலாளிகளுக்கும் தெரியும்.

எனவே அரசு அனாதி காலத்திலிருந்து இருக்கவில்லை. அரசு இல்லாமலே சமுதாயங்கள் இருந்து வந்துள்ளன. அவற்றிற்கு அரசைப் பற்றியோ, அரசு அதிகாரத்தைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்—சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுறுதலுடன் இது அவசியமாகப் பிணைக்கப்பட்டிருந்தது—இப்பிளவின் காரணமாக அரசு அவசியமாயிற்று. உற்பத்தி வளர்ச்சியில் இந்த வர்க்கங்கள் இருக்க வேண்டியதில்லை என்பது மட்டுமன்றி, அவை உற்பத்திக்கு நேரடியான தடையாவது போன்ற ஒரு கட்டத்தை இப்பொழுது நாம் விரைவாக எட்டி வருகிறோம். முந்திய கட்டத்தில் வர்க்கங்கள் எப்படி உதித்தனவோ, அதே போல் தவிர்க்க முடியாதபடி அவை வீழ்ச்சியடையும். அவற்றுடன் அரசும் தவிர்க்க முடியாதபடி வீழ்ச்சியடை

யும். உற்பத்தியாளர்களின் சுதந்திரமான, சமமான கூட்டுறவு என்ற அடிப்படையில் உற்பத்தியை ஸ்தாபன ரீதியாக நடத்தப் போகின்ற சமூகம், அரசு இயந்திரம் முழுவதையும் அது அப்பொழுது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது பழம்பொருட்காட்சியகத்தில், கைராட்டை, வெண்கலக் கோடாலி ஆகியவற்றுக்கு அருகில் வைக்கும்.

* * *

ஆக, மேலே எழுதியவற்றிலிருந்து, நாகரிகம் என்பது சமூக வளர்ச்சியில் ஒரு கட்டம்; அக்கட்டத்தில் உழைப்புப் பிரிவினை, அதன் விளைவாகத் தனிநபர்களிடையே நடக்கும் பரிவர்த்தனை, அவ்விரண்டையும் இணைக்கும் பண்ட உற்பத்தி ஆகியவை முழு மலர்ச்சியடைந்து இது வரையுள்ள முழு சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றுகின்றன.

சமுதாயத்தின் முந்திய கட்டங்கள் எல்லாவற்றிலும் உற்பத்தி சாராம்சத்தில் கூட்டு முறையில் நடைபெற்றது. அதே போல் சிறிய அல்லது பெரிய பொதுவுடைமைக் கூட்டுச் சமூகங்களுக்குள் விளைபொருட்களை நேரடியாக வினியோகித்தலின் மூலம் நுகர்வு நடைபெற்றது. இந்தப் பொது உற்பத்தி மிகவும் குறுகிய வரம்புகளுக்குள் நடைபெற்றது; ஆனால் அதன் துணை அம்சமாக உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திச் செயல்முறைக்கும் விளைபொருளுக்கும் எசமானர்களாக இருந்தார்கள். விளைபொருள் என்னவாயிற்று என்பது அவர்களுக்குத் தெரியும்; அதை அவர்கள் நுகர்வு செய்தார்கள்; அது அவர்களின் கையை விட்டுப் போகவில்லை. இந்த அடிப்படையில் உற்பத்தி நடந்து கொண்டிருந்த வரை அது உற்பத்தியாளர்களின் கட்டுப்பாட்டை மீறி வளர முடியவில்லை; அவர்களுக்கு எதிராக வினோதமான சக்திகளை அது தோற்றுவிக்க முடியவில்லை; நாகரிக நிலையில் அது முறையாக, தவிர்க்க முடியாதபடி நடைபெறுகிறது.

ஆனால் இந்த உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் உழைப்புப் பிரிவினை படிப்படியாகப் புகுந்தது. அது உற்பத்தியின் கூட்டுத் தன்மையையும் நுகர்வின் கூட்டுத் தன்மையையும் தகர்த்தது, தனிநபர்கள் சுவீகரிப்பதை அது பெருவழக்கான விதியாகச் செய்தது, அத்துடன் தனிநபர்

களிடையில் பரிவர்த்தனையைத் தோற்றுவித்தது—இது எப்படி ஏற்பட்டது என்பதை நாம் மேலே ஆராய்ந்தோம். படிப்படியாக பண்ட உற்பத்தியே மேலோங்கிய வடிவமாகியது.

பண்ட உற்பத்தியுடன், அதாவது சொந்த நுகர்வுக்காக இல்லாமல் பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்தல் நடைபெறும் பொழுது விளைபொருட்கள் அவசியமாகக் கைக்குக் கை மாறுகின்றன. பரிவர்த்தனையின் போது உற்பத்தியாளன் தனது விளைபொருளைக் கொடுக்கிறான்; பிறகு அது என்ன ஆகிறது என்பது அவனுக்குத் தெரியாது. பணமும், அத்துடன் கூடவே வியாபாரியும் உற்பத்தியாளர்களுக்கு இடையில் இடைத்தரகராக வந்தவுடனே பரிவர்த்தனையின் செய்முறை இன்னும் சிக்கலாகி விடுகிறது; விளைபொருளின் கடைசிக் கதி என்ன என்பது இன்னும் நிச்சயமற்றதாகி விடுகிறது. வியாபாரிகளின் எண்ணிக்கையோ அதிகம். ஒருவர் என்ன செய்கிறார் என்பது அடுத்தவருக்குத் தெரியாது. பண்டங்கள் இப்பொழுது கைக்குக் கை மாறுவது மட்டுமல்ல, சந்தைக்குச் சந்தை மாறிப் போகின்றன. உற்பத்தியாளர்கள் தம்முடைய சொந்த வாழ்க்கை நிலைமைகளின் மொத்த உற்பத்தியின் மீது கட்டுப்பாட்டை இழந்து விட்டார்கள்; வியாபாரிகளும் அதைப் பெறவில்லை. விளைபொருட்களும் உற்பத்தியும் இப்பொழுது தற்செயலின் கைப்பாவைகளாகி விட்டன.

எனினும் தற்செயல் என்பது பரஸ்பர உறவின் ஒரு துருவமேயாகும். அதன் எதிர் துருவத்துக்கு இன்றியமையாமை என்று பெயர். இயற்கையில் தற்செயல் ஆட்சி செய்வதாகத் தோன்றுகிறது; ஆனால் அந்த இயற்கையில் ஒவ்வொரு துறையிலும் இத்தற்செயலுக்குள் உள்ளார்ந்த இன்றியமையாமையும் முறையான போக்கும் எப்படித் தம்மை வலியுறுத்துகின்றன என்பதை நாம் நெடுங்காலத்துக்கு முன்பே எடுத்துக்காட்டியுள்ளோம். இயற்கைக்குச் சரியாக இருப்பது சமூகத்துக்கும் சரியானதே. ஒரு சமூக நடவடிக்கை, சமூக இயக்கப் போக்குகளின் தொடர்வரிசை எவ்வளவுக்கெவ்வளவு உணர்வுள்ள கட்டுப்பாட்டுக்கு அடங்காதபடி வலிமை பெற்று விடுகிறதோ, மனிதனால் எட்டிப் பிடிக்க இயலாதபடி மேலே

போய் விடுகிறதோ, தற்செயலின் கையில் சிக்கி விட்டதாக எவ்வளவுக்கெவ்வளவு நமக்குத் தோன்றுகிறதோ அவ்வளவு தற்செயலின் அலாதியான உள்ளார்ந்த விதிகள் இயற்கையான இன்றியமையாமையின்படி இத்தற்செயலினூடே தம்மை வலியுறுத்திக் காட்டிக் கொள்கின்றன. இப்படிப்பட்ட விதிகள் பண்ட உற்பத்தியின், பண்டப் பரிவர்த்தனையின் தற்செயல் போக்குகளைக் கட்டுப் படுத்துகின்றன; இந்த விதிகள் தனி உற்பத்தியாளனுக்கும் பரிவர்த்தனைக்காரனுக்கும் எதிரே விசித்திரமான, ஆரம்பத்தில் முன்னர் தெரியாத சக்திகளாக நிற்கின்றன. அவற்றின் தன்மையை முதலில் கவனமாக ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பண்ட உற்பத்தியின் இந்தப் பொருளாதார விதிகள் இந்த உற்பத்தி வடிவத்தின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் மாற்றியமைக்கப்படுகின்றன. எனினும் மொத்தத்தில் நாகரிக காலப் பகுதி முழுவதும் இந்த விதிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கிறது. இன்றைய நாள் வரை விளைபொருள் தான் உற்பத்தியாளனின் எசமானனாக இருக்கிறது; இன்றைய நாள் வரை சமுதாயத்தின் மொத்த உற்பத்தி கூட்டு முறையில் சிந்தித்து உருவாக்கப்பட்ட திட்டத்தினால் முறைப்படுத்தப்படவில்லை, கண்மூடித்தனமான விதிகளால் முறைப்படுத்தப்படுகிறது. அவ்விதிகள் இயற்கையின் வெறிச் சக்தியுடன் செயல்படுகின்றன. கடைசியாகப் பார்க்கின், கால முறைப்படி வருகின்ற வர்த்தக நெருக்கடி என்ற சூறாவளிகளில் செயல்படுகின்றன.

அநேகமாக உற்பத்தியின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்திலேயே, மனித உழைப்புச் சக்தியால் உற்பத்தியாளனுடைய ஜீவனத் தேவையைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடிந்தது என்று நாம் மேலே பார்த்தோம். இந்தக் கட்டம் பிரதானமாக, உழைப்புப் பிரிவினை முதன்முதலாகத் தோன்றியதுடனும் தனிநபர்களிடையில் பரிவர்த்தனை முதன்முதலில் தோன்றியதுடனும் பொருந்தியிருந்தது எப்படி என்றும் பார்த்தோம். இப்பொழுது மனிதன் கூட ஒரு பண்டம் தான், மனிதனை அடிமையாக்குவதன் மூலம் மனிதச் சக்தியையும் பரிவர்த்தனை செய்யலாம், உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்ற ''பேருண்மை'' சீக்கிரத்தி

லேயே கண்டுபிடிக்கப்பட்டது. மனிதர்கள் பரிவர்த்தனையில் இறங்கினார்களோ இல்லையோ, மனிதர்களே பரிவர்த்தனை செய்யப்பட்டார்கள். இயக்கியவனே இப்பொழுது இயக்குவிக்கப்பட்டான்; மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது நடைபெற்றது.

நாகரிக நிலையில் முழு வளர்ச்சியடைந்த அடிமை முறையுடன் சமுதாயத்தில் முதன்முதலான மாபெரும் பிளவு தோன்றியது, சமுதாயம் சுரண்டுகின்ற வர்க்கம், சுரண்டப்படுகின்ற வர்க்கம் என்று பிளவுற்றது. நாகரிக காலப் பகுதி நெடுகிலும் இப்பிளவு தொடர்ந்து வந்திருக்கிறது. அடிமைமுறை என்பது சுரண்டலின் முதல் வடிவம், பண்டைக்கால உலகத்துக்குப் பிரத்யேகமான வடிவம். அதைத் தொடர்ந்து மத்திய காலத்தில் பண்ணையடிமை முறையும் நவீன காலத்தில் கூலியுழைப்பும் வந்தன. அடிமைத்தனத்தின் மூன்று மாபெரும் வடிவங்கள் நாகரிகத்தின் மூன்று மாபெரும் சகாப்தங்களின் சின்னங்களாகும். பகிரங்கமான அடிமை முறையும் பிற்காலத்தில் ஏற்பட்ட மறைமுக அடிமைமுறையும் நாகரிகத்தின் துணையம்சங்கள் எனலாம்.

எந்தப் பண்ட உற்பத்திக் கட்டத்துடன் நாகரிகம் ஆரம்பமானதோ, அந்தக் கட்டம் பின்வரும் பொருளாதார அம்சங்களால் குறிக்கப்பட்டிருக்கிறது: 1) உலோகப் பணம், ஆகவே பண மூலதனம், வட்டி, கந்துவட்டி முறை ஆகியவை தோற்றுவிக்கப்படுதல்; 2) வியாபாரிகள் உற்பத்தியாளர்களிடையில் இடைத்தரகர்களாகச் செயல்படல்; 3) நிலத்தின் மீது தனியுடைமை, நில அடமானம் ஆகியவை தோன்றுதல்; 4) உற்பத்தியின் பிரதான வடிவமாக அடிமை உழைப்பு நிலவுதல். நாகரிகத்துடன் பொருந்துவதாகவும் அத்துடன் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதாகவும் இருக்கின்ற குடும்ப வடிவம்—ஒருதார மணமுறை, பெண் மீது ஆண் வகிக்கும் ஆதிக்கமும் சமுதாயத்தின் பொருளாதார அலகாகத் தனிப்பட்ட குடும்பம் அமைதலும். நாகரிக சமுதாயத்தை இறுகப் பிணைத்து வைத்திருக்கும் சக்தி அரசுதான். குறியடையாளமான எல்லா காலகட்டங்களிலும் அது ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாக மட்டுமே இருந்து வந்துள்ளது; எல்லா சந்தர்ப்பங்களிலும் அது ஒடுக்கப்பட்ட, சுரண்டப்

பட்ட வர்க்கத்தை அழுத்தி வைப்பதற்கு ஏற்பட்ட இயந்திரமாகத்தான் சாராம்சத்தில் இருந்து வருகிறது. நாகரிகத்தின் மற்ற அடையாளங்கள் பின்வருமாறு: ஒரு பக்கத்தில், சமூக உழைப்புப் பிரிவினை முழுவதற்கும் அடிப்படையாக நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை நிலைக்கச் செய்தல்; மறு பக்கத்தில், உயில்களைப் புகுத்துதல், இவற்றின் மூலம் சொத்துக்கு உரியவர் மரணத்துக்குப் பிறகு கூட தன் விருப்பப்படி சொத்தைச் செலவழிக்க முடிகிறது. இந்த ஏற்பாடு பண்டைக்காலக் குல அமைப்புக்கு நேரடியான அடியாகும். சொலோன் வரும் வரைக்கும் ஏதன்சில் அதைப் பற்றித் தெரியாது. ரோமாபுரியில் அது மிகவும் முந்திய காலத்திலேயே புகுத்தப்பட்டது, ஆனால் துல்லியமாக எப்பொழுது புகுத்தப்பட்டது என்பது நமக்குத் தெரியாது.* ஜெர்மானியர்களிடையே இதைப் பாதிரிகள் புகுத்தினார்கள்; அப்பாவி ஜெர்மானியன் தனது சொத்தைத் தடையின்றி திருச்சபைக்கு எழுதி வைப்பதற்கு இதைப் புகுத்தினார்கள்.

இந்த அமைப்பை அடிப்படையாகக் கொண்ட நாகரி

* லஸ்ஸால் எழுதிய **பெறப்பட்ட உரிமைகளின் அமைப்பு** என்னும் நூல் அதன் இரண்டாம் பகுதியில், ரோமானிய உயில்கள் ரோமாபுரியைப் போலப் பழமையானவை, ''உயில்கள் இல்லாத காலம்'' ரோமானிய வரலாற்றில் ஒருபோதும் இருந்ததில்லை, ரோமாபுரிக்கு முந்திய காலத்தில் இறந்தவர்களை வழிபடுகின்ற வழக்கத்திலிருந்து உயில்கள் அநேகமாக தோன்றின என்ற கருதுகோளைச் சுற்றி வருகிறது. பழைய மரபைச் சேர்ந்த நிச்சயமான ஹெகலியவாதி என்ற முறையில் லஸ்ஸால் ரோமானியர்களின் சமூக உறவுகளிலிருந்து ரோமானியச் சட்ட ஷரத்துகளைப் பெறாமல் சித்தத்தின் ''ஊகமுறைக் கருத்தோட்டத்திலிருந்து'' பெறுகிறார்; இப்படி முற்றிலும் வரலாற்றுக்குப் புறம்பான கூற்றுக்கு வந்து சேர்ந்தார். ரோமானிய வாரிசு முறையில் சொத்து மாற்றம் முற்றிலும் துணை விவகாரமே என்ற முடிவை அதே ஊகமுறைக் கருதுகோளிலிருந்து பெறுகின்ற ஒரு புத்தகத்தில் இதைப் பற்றி வியப்படைய முடியாது. குறிப்பாக முந்திய காலத்தைச் சேர்ந்த ரோமானியச் சட்ட நிபுணர்களின் பிரமைகளை லஸ்ஸால் நம்புவது மட்டுமன்றி, அவற்றையும் மிஞ்சி விடுகிறார். **(எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

கம் பண்டைய குல சமுதாயத்தினால் முற்றிலும் சாதிக்க இயலாத சாதனைகளை சாதித்து விட்டது. ஆனால் நாகரிகம் மனிதனது மிகக் கீழான உணர்ச்சிகளையும் வெறிகளையும் தூண்டி விட்டு, அவனுடைய மற்ற எல்லாத் திறமைகளும் பாதிக்கப்படுகின்ற முறையில் இவற்றை வளர்த்துத்தான் அச்சாதனைகளை நிறைவேற்றியது. நாகரிகத்தின் முதல் நாளிலிருந்து இன்றைய நாள் வரை அப்பட்டமான பேராசைதான் அதை இயக்கும் சக்தியாக இருந்து வந்துள்ளது. செல்வம், அதிகமான செல்வம், இன்னும் செல்வம்; சமுதாயத்தின் செல்வம் அல்ல, இந்த இழிந்த தனிநபரின் செல்வம். இதுதான் நாகரிகத்தின் ஒரே, தீர்மானகரமான குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முயன்ற பொழுது சமுதாயத்தில் விஞ்ஞானம் மேன்மேலும் வளர்ச்சியடைந்தது, கலை மீண்டும் மீண்டும் முழு மலர்ச்சி அடைந்தது என்றால், அவை இல்லாமல் செல்வத்தைக் குவிப்பதில் இன்றைய வளமான சாதனைகளைச் செய்திருக்க முடியாது என்பதே காரணமாகும்.

ஒரு வர்க்கத்தை மற்றொரு வர்க்கம் சுரண்டுதல் நாகரிகத்தின் அடிப்படை என்பதால் அதன் வளர்ச்சி முழுவதும் ஒரு தொடர்ச்சியான முரண்பாட்டிலே இயங்கிச் செல்கிறது. உற்பத்தியில் ஏற்படுகின்ற ஒவ்வொரு முன்னேற்றமும் அதே சமயத்தில் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின், அதாவது அதிக பெரும்பாலான மக்களின் நிலைமையில் ஒரு பின்னடைவாகவும் இருக்கிறது. ஒரு நபருக்கு வரப்பிரசாதமாக இருப்பது அடுத்த நபருக்கு சாபக்கேடாக இருக்கிறது. ஒரு வர்க்கத்துக்குக் கிடைக்கின்ற புதிய விடுதலை என்பது எப்பொழுதும் இன்னொரு வர்க்கத்துக்குப் புதிய ஒடுக்குமுறை என்னும் பொருளாக இருக்கிறது. இதற்கு மிகவும் அழுத்தமான உதாரணம் இயந்திரங்களைப் புகுத்தியதிலிருந்து கிடைக்கிறது; அதன் விளைவு இன்று எல்லோரும் அறிந்ததே. மேலும், நாம் மேலே பார்த்தபடி, அநாகரிகர்களிடையில் உரிமை, கடமை என்று எதையும் வேறுபடுத்த முடியாதிருக்கும் பொழுது நாகரிகம் இவ்விரண்டுக்கும் இருக்கின்ற வேறுபாட்டையும் எதிர்நிலையையும் அடிமுட்டாளுக்கும் கூடத் தெரியும்படித் தெளிவாக்குகிறது; ஒரு வர்க்கத்துக்கு அநேக

மாக எல்லா உரிமைகளையும் கொடுத்து விட்டு இன்னொரு வர்க்கத்துக்கு அநேகமாக எல்லாக் கடமைகளையும் வழங்குவதன் மூலம் இதைச் செய்கிறது.

ஆனால் இது இப்படி இருக்கக் கூடாது. ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்துக்கு நன்மையாக இருப்பது அந்த வர்க்கம் எந்த சமுதாயத்துடன் தன்னை ஒன்றாகக் காட்டிக் கொள்கிறதோ, அந்த சமுதாயத்துக்கும் நன்மையாக இருக்க வேண்டும். ஆகவே நாகரிகம் மேன்மேலும் வளர்ச்சியடைகின்ற பொழுது, தானே அவசியமாகப் படைத்த கேடுகளை அன்பு என்னும் போர்வையினால் மூடி மறைக்கவும் அவற்றை அலங்கரித்துக் காட்டவும் அல்லது அவை இல்லை என்று மறுக்கவும்—சுருங்கக் கூறினால், சம்பிரதாயமான இரட்டை வேடத்தைக் கடைப்பிடிக்குமாறு மேன்மேலும் நிர்ப்பந்திக்கப்படுகிறது. முந்திய சமூக வடிவங்களிலும் நாகரிகத்தின் ஆதிக் காலகட்டங்களிலும் இந்த இரட்டை வேடத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது. சுரண்டுகின்ற வர்க்கம் முற்றிலும் சுரண்டப்படுகின்ற வர்க்கத்தின் நலனுக்காகவே அதைச் சுரண்டுகிறது; சுரண்டப்படுகின்ற வர்க்கம் இதை உணர்ந்து பாராட்டத் தவறினால், இன்னும் கலவரம் செய்ய முனைந்தால், அதன் மூலம் சுரண்டுகின்றவர்களாகிய உபகாரிகளிடம் அது மிகக் கேவலமான, நன்றி கெட்ட தன்மையைக் காட்டுகிறது என்ற பிரகடனத்தில் முடிகிறது இந்தச் சம்பிரதாயமான இரட்டை வேடம்.*

* நாகரிகத்தைப் பற்றி ஷார்ல் ஃபூரியேயின் நூல்களில் பரவிக் கிடக்கின்ற தலைசிறந்த விமர்சனத்தை மார்கன் மற்றும் என்னுடைய விமர்சனங்களுக்குப் பக்கத்தில் வைப்பதற்கு ஆரம்பத்தில் நான் உத்தேசித்திருந்தேன். துரதிர்ஷ்டவசமாக எனக்கு நேரமில்லை. ஒன்றை மட்டும் குறிப்பிடுவதற்கு விரும்புகிறேன்: ஒருதார மணமும் நிலவுடைமையும் நாகரிகத்தின் முக்கியமான குணாம்சங்கள் என்று ஃபூரியே ஏற்கெனவே கருதியிருந்தார்; அதை ஏழைகளுக்கு எதிராகப் பணக்காரர்கள் நடத்தும் யுத்தமாகவும் அவர் வர்ணித்திருந்தார். மேலும், குறைகளுள்ள எல்லா சமுதாயங்களிலும், மோதுகின்ற நலன்களைப் படைத்துள்ள எல்லா சமுதாயங்களிலும் தனிப்பட்ட குடும்பங்கள்தான் (les familles incohérentes) பொருளாதார அலகுகள் என்ற உண்மையை அவர் ஆழமாகப் புரிந்து கொண்டிருப்பதை ஏற்கெனவே அவருடைய நூலில் நாம் பார்க்கிறோம். **(எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

நாகரிகத்தைப் பற்றி மார்கன் அளித்திருக்கும் தீர்ப்பை இப்பொழுது முடிவுரையாகத் தருகிறேன்:

''நாகரிகம் ஏற்பட்டதிலிருந்து செல்வத்தின் வளர்ச்சி மிகவும் பிரம்மாண்டமாக இருப்பதாலும், அதன் வடிவங்கள் மிகவும் வேறுபட்டிருப்பதாலும், அதன் உபயோகம் மிகவும் விரிவானதாக இருப்பதாலும், அதை சொந்தமாக வைத்திருப்பவர்களுடைய நலனுக்காக நடைபெறுகின்ற அதன் நிர்வாகம் மிகவும் அறிவுள்ளதாக இருப்பதாலும், அந்தச் செல்வம், மக்களை எதிர்த்து சமாளிக்க முடியாத ஒரு சக்தியாகி இருக்கிறது. மனித அறிவு தன்னுடைய சொந்தப் படைப்புக்கு முன்னால் தானே குழப்பமடைந்து நிற்கிறது. எனினும் ஒரு காலம் வரத்தான் போகிறது: அப்பொழுது மனித அறிவு உடைமையின்மீது ஆட்சி செலுத்துகின்ற நிலையை அடையும்; அரசு எந்த உடைமையைப் பாதுகாக்கிறதோ, அந்த உடைமையின் பால் அரசின் உறவுகளை மனித அறிவு வரையறை செய்துவிடும்; அந்த உடைமையின் சொந்தக்காரர்களுடைய உரிமைகளின் வரம்புகளையும் அது வரையறை செய்துவிடும். தனிநபர்களுடைய நலன்களைக் காட்டிலும் சமுதாயத்தின் நலன்களே தலைமையானவை; அவை இரண்டும் நியாயமான, இணக்கமான உறவுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். முன்னேற்றம் கடந்த காலத்தின் விதியாக இருந்ததைப் போல எதிர்காலத்தின் விதியாகவும் இருக்க வேண்டுமென்றால், வெறும் செல்வத்தைத் தேடும் வாழ்க்கை மனிதகுலத்தின் முடிவான தலைவிதி அல்ல. நாகரிகத்தின் தொடக்கத்துக்குப் பிறகு கழிந்திருக்கிற காலம் மனிதன் இதுவரை வாழ்ந்திருக்கிற காலத்தில் ஒரு சிறு துளியே ஆகும், இனி வரப்போகின்ற யுகங்களில் ஒரு சிறு துளியே ஆகும். சமுதாயம் தகர்ந்து மறைதல் செல்வத்தை முடிவான நோக்கமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் முடிவு நிலையாகி விடுமென்று தோன்றுகிறது; ஏனென்றால் அப்படிப்பட்ட வாழ்க்கை தனக்குள் சுய அழிவுக்குரிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது. நிர்வாகத்தில் ஜனநாயகம், சமுதாயத்தில் சகோதரத்துவம், உரிமைகளில் சமத்துவம், எல்லோருக்கும் கல்வி ஆகியவை வரப்போகின்ற, முன்னிலும் உயர்வான சமூகக் கட்டத்தை முன்னறிவிக்கின்றன. அனுபவமும் அறிவுத்திறனும் ஞானமும் அந்த சமூகக் கட்டத்தை நோக்கியே உறுதியாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. பண்டைக்காலக் குலங்களில் நிலவிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை, அதை விட ஓர் உயர்வான வடிவத்தில் மறு பிறப்புக் கொள்வதாகும்'' (மார்கன், பண்டைக்காலச் சமூகம், பக்கம் 552).

## பதிப்பாளர் குறிப்புகள்

1 குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் தலைப்புடைய இந்நூல் மார்க்சியத் தத்துவத்தை விளக்குகின்ற அடிப்படையான நூல் ஆகும். இந்நூல் மனிதகுல வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களின் வரலாற்றை விஞ்ஞான ரீதியாகப் பகுத்தாராய்கிறது, பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு தகர்ந்த நிகழ்ச்சிப் போக்கையும் தனிச் சொத்தை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமூகத்தின் உருவாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது, அந்த சமூகத்தின் பொதுவான அம்சங்களை உருவரையாக அளிக்கிறது, வெவ்வேறு சமூக-பொருளாதார அமைப்புகளில் குடும்ப உறவுகளின் பிரத்யேகமான கூறுகளை விளக்குகிறது, அரசின் தோற்றத்தையும் சாராம்சத்தையும் பகுத்தாராய்கிறது, முடிவில் வர்க்கங்கள் இல்லாத கம்யூனிசச் சமூகம் நிறுவப்படுகின்ற பொழுது அந்த அரசு உலர்ந்து உதிருதல் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது என்பதை விளக்குகிறது.—*1.*

2 *Contemporanul* (*''சமகாலத்தவன்''*) — ருமேனியாவில் வெளிவந்த சோஷலிச சஞ்சிகை; யாஸியிலிருந்து 1881 முதல் 1890 வரை வெளியிடப்பட்டது.—*15.*

3 ட்ரொஜன் யுத்தம் பத்து ஆண்டுகள் நடைபெற்றதாக ஹோமர் எழுதிய ''இலியாத்'' மற்றும் ''ஒடிஸி'' என்னும் காவியங்கள் தெரிவிக்கின்றன. ஆஹேய அரசர்களின் கூட்டணி மைசீனிய அரசரான அகமெம்னான் தலைமையில் ட்ராய்க்கு எதிராக இந்த யுத்தத்தை நடத்தியது. ட்ராய் நகரம் உத்தேசமாக கி.மு. 1260இல் நீண்ட காலம் முற்றுகையிடப்பட்டுப் பின்னர் அழிக்கப்பட்டது என்பதை சமீப காலத்தில் அங்கே நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் மூலம் அறிகிறோம். அகழ்வாராய்ச்சிகள் கிரேக்கத் தொல்கதைகளை நிரூபிக்கின்றன.—*18.*

[4] எங்கெல்ஸ் 1888 ஆகஸ்ட்—செப்டெம்பர் மாதங்களில் அமெரிக்காவுக்கும் கானடாவுக்கும் பிரயாணம் செய்தார்.—33.

[5] புயேப்ளோ—நியூமெக்சிகோ (தற்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் மேற்குப் பகுதி மற்றும் வடக்கு மெக்சிகோ) பிரதேசத்தில் குடியேறிய வட அமெரிக்காவின் செவ்விந்திய இனக்குழுக்களின் கூட்டு; பொதுவான வரலாறு மற்றும் கலாசாரத்தைக் கொண்டிருந்தது; மக்கள், கிராமம், கூட்டுச் சமூகம் ஆகியவற்றைக் குறிக்கின்ற pueblo என்னும் ஸ்பானிஷ் மொழிச் சொல்லிலிருந்து இந்தப் பெயர் வந்தது. ஸ்பானிஷ் காலனியாதிக்கவாதிகள் செவ்விந்தியர்களுக்கும் அவர்களுடைய கிராமங்களுக்கும் இந்தப் பெயரைச் சூட்டினார்கள். அவர்கள் 5 அல்லது 6 மாடிகளைக் கொண்ட மாபெரும் கோட்டை மாளிகைகளில் கூட்டாக வசித்தார்கள். ஒவ்வொன்றிலும் ஆயிரம் மக்கள் வரை வசித்தார்கள்.—41.

[6] மார்க்ஸ் எழுதிய இந்தக் கடிதம் தற்பொழுது கிடைக்கவில்லை.—61.

[7] ரீஹர்ட் வாக்னர் எழுதிய "நிபலுங் வளையம்" என்னும் இசை நாடகத்திலிருந்து இந்த மேற்கோள் தரப்படுகிறது. "எட்டா" என்னும் ஸ்காண்டிநேவிய மகாகாவியத்திலிருந்தும் "நிபலுங்குகளைப் பற்றிய பாடல்" என்னும் ஜெர்மானிய மகாகாவியத்திலிருந்தும் இக்கதை வந்தது.—61.

[8] எட்டா மற்றும் ஓகிஸ்ட்ரெக்கா—ஸ்காண்டிநேவிய மக்களின் தொல்கதைகளும் வீர யுகப் பாடல்களும் அடங்கிய தொகுப்பு.—62.

[9] அசாக்களும் வானாக்களும்—ஸ்காண்டிநேவியத் தொல்கதைகளில் இடம் பெற்றுள்ள கடவுள்களின் இரண்டு பிரிவுகள். மத்திய காலத்தைச் சேர்ந்த ஐஸ்லாந்துக் கவிஞரும் புராணக் கதாசிரியருமான ஸ்னோர்ரி ஸ்டுர்லுசன் பண்டைக்காலத்திலிருந்து 12ஆம் நூற்றாண்டு வரையிலும் ஆட்சி செய்த நார்வே அரசர்களைப்பற்றி எழுதிய புராணங்களில் முதல் கதையாக இங்லிங்கா புராணம் இடம் பெற்றிருக்கிறது.—62.

[10] ஆஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளான இனக்குழுக்களில் பெரும்பான்மையாக உள்ள விசேஷக் குழுக்கள், மண வகுப்புகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு குழுவைச் சேர்ந்த ஆண்களும் குறிப்பிட்ட மற்றொரு குழுவைச் சேர்ந்த பெண்களை மட்டுமே திருமணம்

செய்து கொண்டார்கள். ஒவ்வொரு இனக்குழுவிலும் 4 முதல் 8 வரை இப்படிப்பட்ட பிரிவுகள் இருந்தன. —68.

11 **சாடர்னேலியத் திருவிழாக்கள்**—பண்டைக்கால ரோமாபுரியில் அறுவடைத் திருவிழா; சனி (சாடர்ன்) கடவுளின் விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவின் போது மக்கள் வரைமுறையற்ற புணர்ச்சியில் ஈடுபட்டார்கள். சாடர்னேலியா என்னும் சொல் தற்பொழுது காமக் கேளிக்கையை, கட்டுப்பாடில்லாத கொண்டாட்டத்தைக் குறிக்கிறது.—83.

12 ஸ்பெயின் அரசரான ஐந்தாவது ஃபெர்டினாண்டு கத்தோலிக்கர் 1486 ஏப்ரல் 21இல் விவசாயிகளுக்கும் பிரபுக்களுக்கும் இடையில் செய்த மத்தியஸ்தம் இங்கே குறிப்பிடப்படுகிறது. ஸ்பெயின் நாட்டின் ஒரு பகுதியான கடலோனியாவில் நிலப்பிரபுக்களை எதிர்த்து விவசாயிகள் கலகம் செய்ததன் விளைவாக அவர் ஒரு மத்தியஸ்த ஆணை வெளியிட்டார். அதன்படி,விவசாயிகள் நிலங்களோடு பிணைக்கப்படுதல், முதலிரவு உரிமை உட்பட விவசாயிகளால் எதிர்க்கப்பட்ட சில நிலப்பிரபுத்துவ கட்டாய சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன; ஆனால் விவசாயிகள் அதற்கு நட்ட ஈடாகப் பெருந்தொகை கொடுத்தார்கள்.—86.

13 **யாரஸ்லாவின் பிராவ்தா** என்பது ''ருஷ்ய பிராவ்தாவின்'' பழைய வாசகத்தின் முதல் பகுதி ஆகும்; அது பண்டைக்கால ருஷ்யாவின் சட்டத் தொகுப்பு. பண்டைய சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 11 மற்றும் 12ஆம் நூற்றாண்டுகளில் தயாரிக்கப்பட்டது; அக்காலத்தில் நிலவிய சமூக-பொருளாதார உறவுகளைப் பிரதிபலித்தது.

**டால்மேஷியச் சட்டங்கள்**—15—17ஆம் நூற்றாண்டுகளில் போலிட்சில் (டால்மேஷியாவின் ஒரு பகுதி) அமுல் செய்யப்பட்டிருந்த சட்டத் தொகுப்பு; அது போலிட்ஸ் சட்டம் என்று சொல்லப்பட்டது.—97.

14 Calpullis—ஸ்பானியர்கள் மெக்சிகோவைப் பிடித்தபொழுது மெக்சிகோவின் செவ்விந்தியர்கள் மத்தியில் நிலவிய குடும்பச் சமூகங்கள், ஒவ்வொரு குடும்பச் சமூகத்தின் (calpulli) உறுப்பினர்களும் பொதுவான முன்னோர்களைக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் நிலத்தைப் பொதுவில் வைத்திருந்தார்கள்; அதைப் பறிமுதல் செய்ய முடியாது, வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்க முடியாது.—98.

[15] *Das Ausland* (''அந்நிய நாடுகள்'')—பூகோளம், மனித இன இயல் மற்றும் இயற்கை விஞ்ஞானத்தைப் பற்றிய ஜெர்மன் சஞ்சிகை; 1828 முதல் 1893 முடிய வெளியிடப்பட்டது; 1873 முதல் ஷ்டுட்கார்ட்டிலிருந்து வெளியிடப்பட்டது.—99.

[16] 1804இல் முதலாவது நெப்போலியனின் கீழ் அமுல் செய்யப்பட்டிருந்த Code civil என்னும் சிவில் சட்டத் தொகுப்பின் 230ஆம் ஷரத்து இங்கு குறிப்பிடப்படுகிறது.—102.

[17] **ஸ்பார்டியாட்டுகள்**—பண்டைக்கால ஸ்பார்டாவில் முழு உரிமைகளைக் கொண்டிருந்த குடிமக்கள்.

**ஹெலட்டுகள்**—பண்டைக்கால ஸ்பார்டாவில் உரிமைகள் இல்லாத மக்கள்; இவர்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்டு ஸ்பார்டாவின் நிலவுடைமையாளர்களாகிய ஸ்பார்டியாட்டுகளுக்குக் குறிப்பிட்ட கட்டணங்களைத் தருமாறு விதிக்கப்பட்டிருந்தார்கள்.—104.

[18] **ஹாய்ரொடியூல்கள்**—பண்டைக்கால கிரீசிலும் கிரேக்கக் காலனிகளிலும் இருந்த கோயில் அடிமைகள், இரு பாலையும் சேர்ந்தவர்கள். ஆசியா மைனர் மற்றும் கோரிந்த் உட்பட பல இடங்களில் பெண் அடிமைகள் தேவதாசிகளாக இருந்தார்கள்.—109.

[19] **குட்ரூன்**—13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானிய மகாகாவியம்.—128.

[20] **மதச் சீர்திருத்த இயக்கம்**—16ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இதர நாடுகளில் விரிவாகப் பரவிய கத்தோலிக்க மதச் சீர்திருத்த இயக்கம். இந்த இயக்கம் வெற்றியடைந்த நாடுகளில் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து, ஜெர்மனியின் ஒரு பகுதி மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகள்) புரோடஸ்டேன்ட்டு திருச்சபைகள் அமைக்கப்பட்டன.—130.

[21] ஸ்பானியக் காலனியாதிக்கவாதிகள் 1519—1521இல் மெக்சிகோவின் மீது படையெடுத்து அதை பிடித்தது இங்கே குறிப்பிடப்படுகிறது.—147.

[22] **நடுநிலை இனங்கள்**—17ஆம் நூற்றாண்டில் செவ்விந்திய இனக்குழுக்கள் ஏற்படுத்திக் கொண்ட இராணுவக் கூட்டணி; இவை இராகோஸ்களுடன் உறவு உள்ளவை, எரி ஏரியின் வடக்குக் கரையில் வசித்தனர். இந்த இனக்குழுக்கள் இராகோஸ்களுக்கும் ஹூரான்களுக்கும் இடையில் நடைபெற்ற போரில் நடுநிலையைக்

கடைப்பிடித்த காரணத்தால் பிரெஞ்சுக் காலனியாதிக்கவாதிகள் அவற்றுக்கு இப்பெயரைக் கொடுத்தனர்.—*158*.

23 ஸுலூ இன மக்கள் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளை எதிர்த்து *1879—1887*இல் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டம் இங்கே குறிப்பிடப்படுகிறது.
சூடானைச் சேர்ந்த நூபியர்கள், அராபியர்கள் மற்றும் இதர மக்களினங்கள் *1881—1884*இல் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தன. முஸ்லிம் சமயவாதியான முகம்மது அஹமதுவின் தலைமையில் நடைபெற்ற அந்த எழுச்சி வெற்றி பெற்று சுதந்திரமான, மத்தியப்படுத்தப்பட்ட அரசு நிறுவப்பட்டது. ஆங்கிலேயர்கள் *1899*இல்தான் சூடானைப் பிடிப்பதில் வெற்றியடைந்தார்கள்.—*158*.

24 ஆட்டிக்காவில் நிரந்தரமாகக் குடியேறியிருந்த அந்நியர்கள், மெடோய்க்குகள் (metoikos) என்று சொல்லப்படுபவர்கள் இங்கே குறிக்கப்படுகிறார்கள். அவர்கள் அடிமைகளல்ல என்றாலும், அதீனியக் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த எல்லா உரிமைகளும் அவர்களுக்குத் தரப்படவில்லை. அவர்கள் பிரதானமாக கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் மீது விசேஷமான வரி விதிக்கப்பட்டது; அவர்கள் முழு உரிமைகளுள்ள குடிமக்களிலிருந்து ''புரவலர்களைக்'' கொண்டிருக்க வேண்டும், அவர்கள் மூலமாகவே நிர்வாகத்துக்கு மனுக்களை அனுப்ப வேண்டும்.—*189*.

25 **பன்னிரண்டு பட்டியல்கள் என்னும் சட்டங்கள்**—பிளெப்ஸ் எனப்படுகின்ற சாமான்யர்கள் பட்ரீஷியச் சீமான்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் விளைவாக கி.மு. 5ஆம் நூற்றாண்டின் மத்தியில் வகுத்தளிக்கப்பட்ட ரோமானியச் சட்டத் தொகுப்பு. சொத்துடைமையின் அடிப்படையில் ரோமானியச் சமூகத்தில் படிவரிசை முறை ஏற்பட்டதையும் அடிமைமுறையின் பரிணாம வளர்ச்சியையும் அடிமையுடைமை அரசின் உருவாக்கத்தையும் இச்சட்டங்கள் பிரதிபலித்தன. இச்சட்டங்கள் பன்னிரண்டு பட்டியல்களில் எழுதப்பட்டிருந்தபடியால் இப்பெயரைப் பெற்றன.—*195*.

26 **இரண்டாவது பூனிக் யுத்தம்** *(கி.மு. 218—201)*—பண்டைக்காலத்தின் மிகப் பெரிய அடிமையுடைமை அரசுகளான ரோமாபுரிக்கும் கார்தேஜுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம். மத்திய தரைக் கடலின் மேற்குப் பகுதியில் ஆதிக்கம் பெறுவதற்கும் புதிய பிரதேசங்

களையும் அடிமைகளையும் கைப்பற்றுவதற்கும் இந்த யுத்தம் நடைபெற்றது. இரண்டாவது பூனிக் யுத்தத்தில் கார்தேஜ் படுதோல்வி அடைந்தது.—197.

27 ஆங்கிலேயர்கள் 1283இல் வேல்ஸ் பிரதேசத்தை வெற்றி கொண்டிருந்தாலும், அது அச்சமயத்தில் தன்னுடைய சுயாட்சியைத் தக்க வைத்துக் கொண்டது. 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் அது இங்கிலாந்துடன் முழுமையாக இணைக்கப்பட்டது.—213.

28 எங்கெல்ஸ் 1869—1870இல் அயர்லாந்தின் வரலாற்றைப் பற்றிய புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்தார், ஆனால் அவரால் அதை முடிக்க இயலவில்லை. எங்கெல்ஸ் கெல்டுகளின் வரலாற்று ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த பொழுது பண்டைய வேல்ஸ் சட்டங்களைப் பகுப்பாய்வு செய்தார்.—213.

29 1891 செப்டெம்பரில் எங்கெல்ஸ் ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.—217.

30 ஸ்காட்லாந்தின் குன்றுப் பிரதேசக் கிளான்கள், ஆங்கில மற்றும் ஸ்காட்லாந்து நிலவுடைமைப் பிரபுக்கள் மற்றும் முதலாளி வர்க்கத்தினரின் நலன்களுக்காகத் தங்கள் மீது பிரயோகிக்கப்பட்ட ஒடுக்குமுறை மற்றும் நிலம் பறித்தலை எதிர்த்து 1745—1746இல் புரட்சிகர எழுச்சியில் ஈடுபட்டன. குன்றுப் பிரதேச மக்கள் பண்டைய குல அமைப்பை ஆதரித்தார்கள். அந்த எழுச்சி நசுக்கப்பட்ட பிறகு ஸ்காட்லாந்தின் குன்றுப் பிரதேசங்களில் கிளான் அமைப்பு அழிக்கப்பட்டது; குல நிலவுடைமையின் எச்சங்கள் ஒழிக்கப்பட்டன. ஸ்காட்லாந்தின் விவசாயிகள் மேன்மேலும் அதிகமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்; குலச் சட்ட நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டன; குல மரபுகள் சில தடை செய்யப்பட்டன.—218.

31 அலமான்னியச் சட்டம்—5ஆம் நூற்றாண்டு முதல் தற்கால அல்சேஸ், கிழக்கு ஸ்விட்சர்லாந்து மற்றும் ஜெர்மனியின் தென் மேற்குப் பகுதியில் குடிபுகுந்த அலமான்னி என்னும் ஜெர்மானிய இனக்குழுக் கூட்டணியின் பொதுச் சட்டத் தொகுப்பு. அது 6ஆம் நூற்றாண்டின் முடிவுக்கும் 8ஆம் நூற்றாண்டுக்கும் இடையிலுள்ள காலப் பகுதியைச் சேர்ந்தது. எங்கெல்ஸ் அலமான்னியச் சட்டத்தின் LXXXI (LXXXIV) சட்டத்தை இங்கே குறிப்பிடுகிறார்.—219.

32 ஹில்டெபிராண்டைப் பற்றிய பாடல்—வீர யுகத்தைச் சேர்ந்த காவியம். 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த

பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியக் கவிதைக்கு ஒரு உதாரணம். இதில் சில பகுதிகள் மட்டுமே இன்று கிடைத்துள்ளன.—221.

33 ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்து ஜெர்மானிய மற்றும் கோல் இனக்குழுக்கள் நடத்திய கலகம் கி.பி. 69—70இல் நடைபெற்றது (கி.பி. 69—71இல் நடைபெற்றது என்று கூறுவதுண்டு). இக்கலகம் சிவிலிஸ் தலைமையில் கோலின் மற்றும் ரோமானிய ஆட்சியிலிருந்த ஜெர்மானியப் பிரதேசங்களின் பெரும் பகுதியில் நடைபெற்றது. அப்பிரதேசங்களை ரோமாபுரி இழந்து விடக் கூடிய ஆபத்து ஏற்பட்டது. முடிவில் கலகக்காரர்கள் முறியடிக்கப்பட்டு ரோமாபுரியுடன் சமரசம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். —225.

34 Codex Laureshamensis—லோர்ஷ் சமயத் துறவி மடத்தின் பத்திரங்கள் மற்றும் சலுகையுரிமைகளின் பிரதிகளின் தொகுதி; 12ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. 8—9ஆம் நூற்றாண்டுகளின் விவசாயி மற்றும் நிலப் பிரபுத்துவ நிலவுடைமை முறையைப் பற்றிய மிகவும் முக்கியமான வரலாற்று ஆவணமாகும்.—230.

35 **ஜெர்மானிய இனத்தின் புனிதமான ரோமானியப் பேரரசு** 962இல் நிறுவப்பட்டது. ஜெர்மனியும் இத்தாலியில் ஒரு பகுதியும் அதில் அடங்கியிருந்தன. பிற்காலத்தில் பிரான்சின் சில பிரதேசங்கள், செக், ஆஸ்திரியா, நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து மற்றும் இதர நாடுகளும் அதில் சேர்க்கப்பட்டன. இப்பேரரசு மத்தியப்படுத்தப்பட்ட அரசு அல்ல. அது சக்கரவர்த்தியின் தலைமையான அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட நிலப்பிரபுத்துவ ராஜ்ஜியங்கள் மற்றும் சுதந்திர நகரங்களைக் கொண்ட தளர்வான ஐக்கியமாகும். 1806இல் பிரான்சுடன் நடைபெற்ற யுத்தத்தில் ஹாப்ஸ்புர்குகள் தோல்வியடைந்ததால் புனிதமான ரோமானியப் பேரரசின் சக்கரவர்த்தி என்னும் பட்டத்தைக் கைவிடும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர்; அத்துடன் இப்பேரரசு தகர்ந்தது.—243.

36 **பெனெஃபிசி** (beneficium, நேர்ப்பொருளில் சன்மானம்)—அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட நிலம். 8ஆம் நூற்றாண்டின் முதற் பாதியின் போது பிராங்கு அரசில் இத்தகைய மானியங்கள் அளிப்பது வாடிக்கையாகும். துண்டு நிலங்கள் அவற்றுடன் பிணைக்கப்பட்டிருந்த விவசாயிகளுடன் சேர்த்து மானியமாக அளிக்கப்பட்டன. மானியம் பெறுபவர்கள் சில சேவை

களுக்கு (வழக்கமாக, போர் சம்பந்தப்பட்ட சேவைகள்) ஈடாக இந்த நிலங்களை ஆயுட்காலம் முழுவதும் அனுபவிக்க முடியும். பெனெஃபிசி முறை பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தரப் பிரபுக்களைக் கொண்ட நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் உருவாக்கத்துக்கு, விவசாயிகள் பண்ணையடிமைகளாக மாற்றமடைவதற்கு, ஆண்டான்—அடிமை உறவுகள் மற்றும் நிலப்பிரபுத்துவ அடுக்குமுறை வளர்ச்சியடைவதற்குப் பங்களித்தது. பிற்காலத்தில் பெனெஃபிசிகள் பரம்பரைப் பண்ணைகளாக மாற்றப்பட்டன.—247.

37 **மாவட்ட கவுன்டுகள்** (Gaugrafen)—பிராங்கு அரசில் மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு நியமிக்கப்பட்ட அரசரின் அதிகாரிகள். அவர்கள் தண்டனை அளிக்கின்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள், வரி வசூலித்தார்கள், படையெடுப்புகளின் போது துருப்புகளுக்குத் தலைமை தாங்கினார்கள். அவர்களுடைய சேவைக்குக் கூலியாக ஒரு மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட பணத்தில் மூன்றிலொரு பகுதி அளிக்கப்பட்டது, பண்ணைகளும் வெகுமதியாகத் தரப்பட்டன. குறிப்பாக 877க்குப் பிறகு இப்பதவியை வாரிசுகளுக்குக் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்ட பிறகு கவுன்டுகள் சக்திமிக்க நிலப்பிரபுத்துவக் கோமான்களானார்கள்; அவர்கள் எல்லா அதிகாரமும் உடையவர்களானார்கள்.—249.

38 **அங்காரியாக்கள்**—ரோமானியப் பேரரசில் குடிபுகுந்தவர்கள் செய்த கட்டாயச் சேவைகள்; அவர்கள் அரசுப் போக்குவரத்துக்கு வண்டிகளும் குதிரைகளும் அளிக்க வேண்டும். காலப் போக்கில் இக்கட்டாயச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு அக்கடுஞ்சுமை மக்கள் மீது விழுந்தது.—250.

39 **கொமெண்டாத்சியா**— ஒரு விவசாயி அல்லது சிறு நிலவுடைமையாளர் நடைமுறையிலிருந்த வழக்கப்படி (இராணுவச் சேவை, நிபந்தனையின் பேரில் நிலத்தைத் திரும்பப் பெற்று வைப்பதற்கு தனது துண்டு நிலத்தை மாற்றிக் கொடுத்தல்) பலமிக்க பிரபுக்களுடைய ''பாதுகாப்பின்'' கீழ் தன்னை ஒப்படைத்துக் கொள்கின்ற வடிவம். விவசாயிகள் தங்களை இப்படி ஒப்படைத்துக் கொள்ளும்படி பெரும்பாலும் கட்டாயப்படுத்தப்பட்டதன் விளைவாகத் தங்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்தை இழந்தார்கள்; சிறு நிலவுடைமையாளர்கள் பலமிக்க பிரபுக்களின் அடிமைகளானார்கள். 8—9ஆம் நூற்றாண்டுகளிலிருந்து ஐரோப்பாவில் பரவலாக இருந்த இப்பழக்கம் நிலப்பிரபுத்துவ உறவுகளை வலுப்படுத்துவதற்கு உதவியது.—252.

40 நார்மன்டியின் கோமகன் வில்ஹெல்ம் ஆங்கில-சாக்சன் அரசரான ஹெரால்டை 1066 அக்டோபர் 14இல் ஹேஸ்டிங்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் முறியடித்தார். ஆங்கில-சாக்சன் இராணுவம் குல அமைப்பின் எச்சங்களைத் தக்க வைத்துக் கொண்டிருந்தது, துருப்புகள் பூர்விகமான ஆயுதங்களை வைத்திருந்தன. வில்ஹெல்ம் இங்கிலாந்தின் அரசரானார், வெற்றியாளர் வில்ஹெல்ம் என்று பிரபலமடைந்தார். —*264*.

41 டித்மார்ஷென்—இன்றுள்ள ஷ்லேஸ்விக்-ஹால்ஷ்டைனின் தென் மேற்கிலுள்ள பிரதேசம். பண்டைக்காலத்தில் அதில் சாக்சனியர்கள் வசித்தார்கள்; 8ஆம் நூற்றாண்டில் மாபெரும் ஷார்ல் அதைக் கைப்பற்றினார்; பிற்காலத்தில் பல்வேறு திருச்சபை அதிகாரிகளுக்கும் மதச்சார்பற்ற பிரபுக்களுக்கும் அது சொந்தமாயிற்று. 12ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் டித்மார்ஷென் மக்கள்—அவர்களில் பெரும்பான்மையினர் சுதந்திரமான விவசாயிகள்—சுயநிர்வாகம் பெறத் தொடங்கினார்கள். 13ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துக்கும் 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கும் இடையில் டித்மார்ஷென் சுயநிர்வாக விவசாயி சமூகங்களின் கூட்டாக இருந்தது. அந்த சமூகங்களில் பெரும்பாலானவை பழைய விவசாயி குலங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. 14ஆம் நூற்றாண்டு வரை சுதந்திரமான நிலவுடைமையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் கூட்டம் தலைமையான அதிகாரத்தைக் கொண்டிருந்தது; பின்னர் அந்த அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று சபைகளுக்கு மாறியது. 1559இல் டென்மார்க்கின் அரசர் இரண்டாம் பிரெடெரிக் மற்றும் ஹால்ஷ்டைனின் கோமகன்கள் யோஹன் மற்றும் அடோல்ஃபின் படைகள் டித்மார்ஷென் மக்களின் எதிர்ப்பை முறியடித்தன; அப்பிரதேசம் வெற்றியாளர்களுக்கு இடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. எனினும் அங்கே கூட்டு வாழ்க்கை முறையும் பகுதியளவுக்கு சுயநிர்வாகமும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பாதி வரை நீடித்தன.—*276*.

## பெயர்க் குறிப்பகராதி


**அகஸீஸ்** [Agassiz], **லூயீ ஜான் ருடோல்ப்** *(1807—1873)—ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த விலங்கியல் மற்றும் மண்ணியல் அறிஞர்; ஊழிப் பெருவெள்ளம் மற்றும் கடவுள் படைப்பு என்னும் கருத்துமுதல்வாதக் கோட்பாட்டைப் போதித்தார்.—85.*

**அகஸ்டஸ்** *(கி.மு. 63—கி.பி. 14)—ரோமானிய சக்கரவர்த்தி (கி.மு. 27—கி.பி. 14).—196, 198, 237.*

**அப்பியஸ் க்ளாடியஸ்** *(உத்தேசமாக கி.மு. 448இல் மரணம்)—ரோமானிய அரசுப் பிரமுகர்; பன்னிரண்டு பட்டியல்களைத் தயாரித்த டிசெம்விர்கள் கமிட்டியின் உறுப்பினர் (451, 450).—197.*

**அம்மியானஸ் மார்ஸெலினஸ்** *(உத்தேசமாக 332—400)—ரோமானிய வரலாற்றாசிரியர், ''வரலாறு'' என்னும் நூலின் ஆசிரியர்.—114, 151.*

**அரிஸ்டஃபானஸ்** *(உத்தேசமாக கி. மு. 446 — 385)—பண்டைக்கால கிரீசின் மாபெரும் நாடகாசிரியர், அரசியல் இன்பியல் நாடகங்களை எழுதியவர்.—105.*

**அரிஸ்டாட்டில்** *(கி.மு. 384—322)—பண்டைக்காலத்தின் மாபெரும் சிந்தனையாளர்; பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையில் ஊசலாடினார்.—174.*

**அரிஸ்டிடிஸ்** *(உத்தேசமாக கி.மு. 540—467)—பண்டைக்கால கிரேக்க அரசியல்வாதி, இராணுவத் தளபதி.—188.*

**அரிஸ்டோனஸ்** *(கி.மு. 6ஆம் நூற்றாண்டு)—ஸ்பார்டாவின் அரசர் (கி.மு. 574—520); அனாக்சன்டிரிடசுடன் சேர்ந்து ஆட்சி செய்தார்.—104.*

**அலெக்சாந்தர் மாசிடோன்** *(கி.மு. 356—323)—பண்டைக்*

*கால உலகத்தின் மாபெரும் இராணுவத் தளபதி, அரசுப் பிரமுகர்.—98.*

**அனாக்சன்டிரிடஸ்** *(கி.மு. 6ஆம் நூற்றாண்டு)—கி.மு. 560 முதல் ஸ்பார்டாவின் அரசர்; அரிஸ்டோனசுடன் சேர்ந்து ஆட்சி செய்தார்.—104.*

**அனாக்ரியோன்** *(கி.மு. 6ஆம் நூற்றாண்டின் பிற்பாதி)—பண்டைக்கால கிரேக்கக் கவிஞர்.—126.*

**ஆர்டக்ஸெர்க்ஸஸ்**—*பண்டைக்காலப் பாரசீகத்தை ஆட்சி செய்த அகிமினிய மரபைச் சேர்ந்த மூன்று அரசர்களது பெயர்.—206.*

**இர்மினோன்** [Irminon] *(மரணம்: உத்தேசமாக 826)—சான் ஜெர்மேன் டெ பிரே துறவியர் மடத்தின் நிர்வாகி (812—817).—250.*

**உல்ஃபிலா** *(உத்தேசமாக 311—383)—விசிகோத்துகளின் சமய குரு, அரசியல்வாதி, கோத்துகளை கிறிஸ்துவ சமயத்துக்கு மதமாற்றம் செய்தவர்.—206.*

**எங்கெல்ஸ்** [Engels], **பிரெடெரிக்** *(1820—1895)—10, 11, 13, 14, 34, 35, 53, 107, 111, 176, 217, 228, 289.*

**எஷென்பாஹ்**—*வோல்ஃப்ராம் வான் எஷென்பாஹ் என்ற குறிப்பைப் பார்க்க.*

**எஸ்கிலஸ்** *(கி.மு. 525—456)—பண்டைக்கால கிரேக்க நாட்டின் மாபெரும் நாடகாசிரியர்; மூலச்சிறப்பான சோக நாடகங்களை எழுதியவர்.—18, 19, 102, 169, 170.*

**ஸ்பினாஸ்** [Espinas], **அல்ஃபிரேட் விக்டர்** *(1844—1922)—பிரெஞ்சுத் தத்துவஞானி, சமூகவியலாளர், பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை ஆதரித்தவர்.—55, 56.*

**ஓடொவாகர்** *(உத்தேசமாக 434—493)—ஜெர்மானிய பரிவாரங்களின் தலைவர்களில் ஒருவர், 476இல் ரோமானிய சக்கரவர்த்தியை அகற்றி விட்டு இத்தாலியின் முதல் ''அநாகரிக'' ராஜ்யத்தின் அரசரானார்.—234.*

**ஃபிரீமான்,** [Freeman], **எட்வார்டு ஒகஸ்டஸ்** *(1823—1892)—ஆங்கில வரலாற்றாசிரியர், மிதவாதி, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர்.—13.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)*—*பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்டு.— 34, 117, 289.*

ஃபெர்டினாண்டு ஐந்தாவது (கத்தோலிக்கர்) *(1452—1516)—காஸ்டிலின் அரசர் (1474—1504) மற்றும் கவர்னர் (1507—1516), இரண்டாவது ஃபெர்டினாண்டு என்னும் பட்டத்துடன் ஆரகானின் அரசர் (1479—1516).—86.*

கவலேவ்ஸ்கி, மக்சிம் மக்சிமவிச் *(1851—1916)*—*ருஷ்ய விஞ்ஞானி, அரசியல்வாதி, கூட்டு வாழ்க்கை அமைப்பின் வரலாற்றைப் பற்றிய நூல்கள் எழுதியவர்.— 93, 96, 98, 212, 229.*

காயுஸ் *(2ஆம் நூற்றாண்டு)—ரோமானிய வழக்குரைஞர், ரோமானியச் சட்டத்தின் தொகுப்பாசிரியர்.—95.*

கால்வின் [Calvin], ஜான் *(1509—1564)—மதச் சீர்திருத்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர், புரோடஸ்டேன்ட்டிசத்தின் ஒரு பிரிவாகிய கால்வினிசத்தின் ஸ்தாபகர்; அது மூலதனத்தின் ஆதித் திரட்சிச் சகாப்தத்தில் முதலாளி வர்க்கத்தின் நலன்களை வெளியிட்டது. —130.*

கிரிகோரி (தூர் நகரத்து கிரிகோரி) *(உத்தேசமாக 540—594)—கிறிஸ்துவப் பாதிரி, இறையியலாளர், வரலாற்றாசிரியர்; 573 முதல் தூர் நகரத்து பிஷப்.—226.*

கிரிம் [Grimm], யாக்கப் *(1785—1863)—பிரபலமான ஜெர்மன் மொழியியலாளர் மற்றும் கலாசார வரலாற்றாசிரியர், ஜெர்மானிய மொழி, சட்டம், தொல்கதை, இலக்கியம் ஆகியவற்றின் வரலாற்றைப் பற்றிய நூல்களின் ஆசிரியர்.—220.*

கிளாட்ஸ்தன் [Gladstone], வில்லியம் யுவார்டு *(1809—1898)—ஆங்கில அரசுப் பிரமுகர், 19ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் லிபரல் கட்சியின் தலைவர்களில் ஒருவர், பிரதம மந்திரி (1868—1874, 1880—1885, 1886, 1892—1894).— 170, 171.*

கிளிஸ்தேனிஸ்—*அதீனிய அரசியல்வாதி, கி.மு. 510—507இல் குல அமைப்பின் எச்சங்களை ஒழித்து, அடிமைமுறையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத்தை நிறுவிய சீர்திருத்தங்களை நிறைவேற்றியவர்.—189.*

குரோட் [Grote], ஜார்ஜ் *(1794—1871)—ஆங்கில வர*

லாற்றாசிரியர், ''கிரீசின் வரலாறு'' என்னும் பல தொகுதிகளையுடைய நூலை எழுதியவர்.—162, 163—167.

குலான்ஷ் டெ—புஸ்தேல் டெ குலான்ஷ் என்ற குறிப்பைப் பார்க்க.

குவியே [Cuvier], ஜார்ஜ் (1769 — 1832) — பிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி, ஊழிப் பெருவெள்ளம் பற்றிய விஞ்ஞான விரோத, கருத்துமுதல்வாதத் தத்துவத்தின் ஆசிரியர்.—50.

குனோவ் [Cunow], ஹென்ரிஹ் வில்ஹெல்ம் கார்ல் (1862—1936) —ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, வரலாற்றாசிரியர், சமூகவியலாளர், மனித இனவியல் ஆராய்ச்சியாளர்.—99.

கேதே [Goethe], இயோஹன் வோல்ஃப்கான்க் (1749—1832) —மாபெரும் ஜெர்மானிய எழுத்தாளர், சிந்தனையாளர்.—62, 63.

கேய் [Kaye], ஜான் வில்லியம் (1814—1876—ஆங்கிலக் காலனியாதிக்க அதிகாரி, இந்தியாவின் வரலாறு, இனங்களைப் பற்றியும் ஆப்கானிஸ்தானிலும் இந்தியாவிலும் பிரிட்டிஷ் காலனியாதிக்க யுத்தங்களின் வரலாற்றைப் பற்றியும் நூல்கள் எழுதியவர்.—68.

சால்வியானஸ் (உத்தேசமாக 390—484)—மார்சே நகரத்தின் கிறிஸ்துவ சமய குரு, எழுத்தாளர், ''தெய்வ ஆளுகை பற்றி'' என்னும் நூலின் ஆசிரியர்.—244, 245, 250.

சிவிலிஸ், ஜூலியஸ் (1ஆம் நூற்றாண்டு)—படேவியர்கள் என்னும் ஜெர்மானிய இனக்குழுவின் தலைவர், ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்து ஜெர்மானிய மற்றும் கோல் இனக்குழுக்களின் கலகத்துக்குத் தலைமை தாங்கினார்.—225.

சீஸர் (காயுஸ் ஜூலியஸ் சீஸர்) (உத்தேசமாக கி.மு. 100—44)—ரோமானிய இராணுவத் தளபதி, அரசுப் பிரமுகர்.—28, 45, 68, 148, 215, 219, 227, 228, 230, 233, 236.

சுகன்ஹைம் [Sugenheim], சாமுயெல் (1811—1877)—ஜெர்மன் வரலாற்றாசிரியர்.—87.

சுரிடா [Zurita], அலோன்சோ—16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மத்திய அமெரிக்காவில் பணியாற்றிய ஸ்பானிய அதிகாரி.—98.

**செர்வியஸ் துல்லியஸ்** *(கி.மு. 578—534)—தொல்கதையின்படி பண்டைக்கால ரோமாபுரியின் அரசர்.—208.*

**சொலோன்** *(உத்தேசமாக கி.மு. 638—558)—அதீனியச் சட்டத்தை எழுதியவர், மக்களுடைய நிர்ப்பந்தத்தினால் குலப் பிரபுத்துவத்துக்கு எதிராக சில சீர்திருத்தங்களை நிறைவேற்றியவர்.—165, 179, 185, 186, 187, 188, 287.*

**சோஸ்யூர்** [Saussure], **அன்ரீ டெ** *(1829—1905)—ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த விலங்கியலாளர்.—54.*

**டார்க்வினியஸ் சுபெர்பஸ்** *(உத்தேசமாக கி.மு. 534—509)—பண்டைக்கால ரோமாபுரியின் அரசர்; மக்களுடைய எழுச்சியினால் அவர் ரோமாபுரியிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அதன் பிறகு ரோமானியக் குடியரசு நிறுவப்பட்டதாகவும் தொல்கதைகள் கூறுகின்றன.—206, 210.*

**டாசிட்டஸ் (பப்ளியஸ் கர்னீலியஸ் டாசிட்டஸ்)** *(உத்தேசமாக 55—120)—ரோமானிய வரலாற்றாசிரியர், ''ஜெர்மானியா'', ''வரலாறுகள்'', ''வரலாற்றுக் கதைகள்'' என்ற நூல்களின் ஆசிரியர். 13, 28, 44, 45, 112, 151, 221, 222, 225—230, 232, 233, 235, 236.*

**டார்வின்** [Darwin], **சார்ல்ஸ் ராபர்ட்** *(1809—1882)—ஆங்கில இயற்கை விஞ்ஞானி, விஞ்ஞான ரீதியான பரிணாமத் தத்துவத்தின் மூலவர்.—31.*

**டிகயேர்கஸ்** *(கி.மு. 4ஆம் நூற்றாண்டு)—கிரேக்க அறிஞர், அரிஸ்டாட்டிலின் சீடர், வரலாறு, அரசியல், தத்துவஞானம், பூகோளம், இதர துறைகளில் புத்தகங்கள் எழுதியவர்.—163.*

**டியாடோரஸ்** [Diodorus Siculus] *(உத்தேசமாக கி.மு. 80—29)—பண்டைக்கால கிரேக்க வரலாற்றாசிரியர், உலக வரலாற்றைப் பற்றிய நூலை எழுதியவர்.—222, 236.*

**டியூரோ டெ லா மால்** [Dureau de La Malle], **அடோல்ஃப் ஜூல் சீஸர், ஔகுஸ்த்** *(1777—1857)—பிரெஞ்சுக் கவிஞர், வரலாற்றாசிரியர்.—209.*

**டியொனீசியஸ் (ஹாலிகார்னஸ்ஸசைச் சேர்ந்த டியொனீசியஸ்)** *(கி.மு. 1ஆம் நூற்றாண்டு—கி.பி. 1ஆம் நூற்றாண்டு) —பண்டைக்கால கிரேக்க வரலாற்றாசிரியர், ''பண்*

டைக்கால ரோமானிய வரலாறு'' என்னும் நூலின் ஆசிரியர்.—169.

டிரியர் [Trier], கேர்ஸன் *(1851—1918)*—*டென்மார்க்கைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதி, எங்கெல்சின் நூல்களை டேனிஷ் மொழியில் மொழிபெயர்த்தவர்.—15.*

டீட்ஸ் [Dietz], இயோஹன் ஹென்ரிஹ் வில்ஹெல்ம் *(1843—1922)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சமூக-ஜனநாயகப் பதிப்பகத்தின் ஸ்தாபகர்.—14.*

டெமஸ்தேனஸ் *(கி. மு. 384 — 322)* — *பண்டைக்கால கிரேக்க நாவலர், அரசியல்வாதி.—162.*

டேய்லர் [Tylor], எடுவார்டு பர்னெட் *(1832—1917)*—*தலைசிறந்த ஆங்கில மனித இனவியல் ஆராய்ச்சியாளர்; கலாசாரம் மற்றும் மனித இனவியலின் வரலாற்றில் பரிணாம வளர்ச்சி மரபை நிறுவியவர்.—16.*

டைபேரியஸ் *(கி.மு. 42—கி.பி. 37)*—*ரோமானிய சக்கரவர்த்தி (கி.பி. 14—37).—206.*

தியோக்ரிடஸ் *(கி.மு. 3ஆம் நூற்றாண்டு)*—*பண்டைக்கால கிரேக்கக் கவிஞர்.—125.*

தியோடோரிக் [Theodorich]—*விசிகோத்துகளின் அரசர்களான முதலாம் தியோடோரிக் (ஆட்சி செய்த காலம் உத்தேசமாக 418—451), இரண்டாம் தியோடோரிக் (ஆட்சி செய்த காலம் உத்தேசமாக 453—466) மற்றும் ஆஸ்ட்கோத்துகளின் ஒரு அரசரின் (ஆட்சி செய்த காலம் 474—526) பெயர்கள்.—206.*

தூஸிடிடஸ் *(உத்தேசமாக கி.மு. 460—395)*—*பண்டைக்கால கிரேக்க வரலாற்றாசிரியர், ''பெலப்பனீசியப் போரின் வரலாறு'' என்னும் நூலின் ஆசிரியர்.—173.*

நடேஷ்தே [Nădejde], இயோன் *(1854—1928)*—*ருமேனியாவைச் சேர்ந்த கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், சமூக-ஜனநாயகவாதி.—15.*

நியார்கஸ் *(உத்தேசமாக கி.மு. 360—312)*—*மாசிடோனியாவின் கடற்படைத் தளபதி, இந்தியாவிலிருந்து மெசபடேமியாவுக்கு வந்த மாசிடோனியக் கடற்படையின் பிரயாணத்தை வர்ணித்து எழுதியவர்.—98.*

நீபூர் [Niebuhr], பர்த்தோல்ட் கியோர்க் *(1776—1831)*—*ஜெர்*

மன் வரலாற்றாசிரியர், பண்டைக்கால் வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—164, 166, 204, 276.

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) (1769—1821) —பிரெஞ்சு சக்கரவர்த்தி (1804—1814, 1815).— 102, 111, 141.

நெப்போலியன் மூன்றாவது (லுயீ நெப்போலியன் போனப்பார்ட்) (1808 — 1873) — முதலாம் நெப்போலியனுடைய மருமகன், இரண்டாவது குடியரசின் ஜனாதிபதி (1848—1851), பிரெஞ்சு சக்கரவர்த்தி (1852—1870.)—283.

பாங்க் [Bang], அன்தோன் கிரிஸ்தியன் (1840—1913)—நார்வே நாட்டு இறையியலாளர்; ஸ்காண்டிநேவியத் தொல் கதைகள் மற்றும் நார்வேயில் கிறிஸ்துவ சமய வரலாற்றைப் பற்றிய நூல்களின் ஆசிரியர்.—223.

பான்கிராஃப்ட் [Bancroft], ஹியூபெர்ட் ஹாவு (1832—1918) —அமெரிக்க வரலாற்றாசிரியர், வரலாறு, மனித இனவியல் ஆகிய துறைகளில் பல நூல்களை எழுதியவர்.—59, 83, 86, 258.

பாஹொஃபென் [Bachofen], இயோஹன் யாக்கப் (1815—1887) —ஸ்விட்சர்லாந்தின் தலைசிறந்த வரலாற்றாசிரியர், வழக்குரைஞர்; "தாயுரிமை" என்ற நூலின் ஆசிரியர். —14, 16, 17, 18, 20, 21, 24, 25, 29, 33, 52, 53, 67, 69, 81, 83, 84, 87, 92, 134.

பிளினி (காயுஸ் பிளினி சிகண்டஸ்) (23—79)—ரோமானிய அறிஞர், 37 தொகுதிகளைக் கொண்ட "இயற்கை வரலாறு" என்னும் நூலின் ஆசிரியர்.—231, 237.

பிளைஹ்ரோடெர் [Bleichröder], கேர்சன் (1822—1893)— ஜெர்மானிய நிதி முதலாளி, பிஸ்மார்க்கின் தனிப்பட்ட வங்கியாளர், நிதி விவகாரங்களில் அவருடைய அதிகார பூர்வமில்லாத ஆலோசகர், பல்வேறு கள்ள வணிகத் திட்டங்களை ஏற்படுத்தியவர்.—282.

பிஸிஸ்டிராடஸ் (உத்தேசமாக கி.மு. 600—527)—கி.மு. 560 முதல் 527 வரை சில இடைவெளிகளுடன் ஏதன்சை ஆட்சி செய்த கொடுங்கோலன்.—193.

பிஸ்மார்க் [Bismarck], ஓட்டோ, இளவரசர் (1815—1898)— பிரஷ்ய மற்றும் ஜெர்மன் இராஜியவாதி, பிரஷ்ய ஜங்கர் பிரபுக்களின் பிரதிநிதி, பிரஷ்யாவின் அமைச்

*சர்-ஜனாதிபதி (1862—1871), ஜெர்மானியப் பேரர சின் சான்சலர் (1871—1890)—104, 280, 282.*

பீட், வணக்கத்திற்குரிய பீட் *(உத்தேசமாக 673—735)— ஆங்கில-சாக்சன் துறவி, அறிஞர், வரலாற்றாசிரியர். —218.*

புக்கே [Bugge], எல்ஸியஸ் சோபுஸ் *(1833—1907)—நார்வே நாட்டைச் சேர்ந்த மொழியியலாளர், பண்டைக்கால ஸ்காண்டிநேவிய இலக்கியம் மற்றும் தொல்கதை களின் ஆராய்ச்சியாளர்.—223.*

புரோகோபியஸ் (இஸரியாவைச் சேர்ந்த புரோகோபியஸ்) *(உத்தேசமாக 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி—562) —பிஸான்டியத்தின் வரலாற்றாசிரியர், 8 தொகுதி களைக் கொண்ட ''பாரசீகர்கள், வான்டல்கள், கோத்துகளுடன் யூஸ்டினியனால் நடத்தப்பட்ட யுத் தங்களின் வரலாறு'' என்னும் நூலின் ஆசிரியர்.— 114.*

புஸ்தேல் டெ குலான்ஷ் [Fustel de Coulanges], நுமா டெனீ *(1830—1889)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், ''பண் டைக்கால சிவில் கூட்டுச் சமூகம்'' என்னும் நூல் மற்றும் இதர நூல்களின் ஆசிரியர்.—167.*

பெக்கர் [Becker], வில்ஹெல்ம் அடோல்ஃப் *(1796—1846)— ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைக்கால வர லாற்றைப் பற்றிய நூல்களின் ஆசிரியர்.—163.*

பெர்ஸியஸ் *(கி.மு. 212—166)—மாசிடோனியாவின் அரசர் (கி.மு. 179—168).—237.*

பைஸன் [Fison], லோரிமர் *(1832—1907)—ஆங்கில மத போதகர், மனித இனவியல் ஆராய்ச்சியாளர், ஆஸ் திரேலியாவைப் பற்றிய நிபுணர், ஆஸ்திரேலிய மற்றும் ஃபிஜித் தீவுகளின் இனக்குழுக்களைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—72.*

போனப்பார்ட்டுகள்—*நெப்போலியன் முதலாவது, நெப் போலியன் மூன்றாவது என்ற குறிப்புகளைப் பார்க்க.*

போன்னியே [Bonnier], ஷார்ல் *(பிறப்பு 1863)—பிரெஞ்சு சோஷலிஸ்டு, பத்திரிகையாளர்.—62.*

ப்ளுடார்க் *(உத்தேசமாக 46—125)—பண்டைக்கால கிரேக்க எழுத்தாளர், கருத்துமுதல்வாதத் தத்துவ ஞானி.—104.*

மாக்லெென்னான்[McLennan],ஜான் ஃபெர்கூஸன்*(1827—1881)—*

*ஸ்காட்லாந்தைச் சேர்ந்த வழக்குரைஞர் மற்றும் வரலாற்றாசிரியர்; திருமண முறை மற்றும் குடும்பத்தின் வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—14, 21, 22, 23, 24, 25, 26, 28, 29, 30, 33, 34, 49, 79, 101, 141, 212.*

மார்கன் [Morgan], லூயிஸ் ஹென்றி *(1818—1881)—அமெரிக்க விஞ்ஞானி, பூர்விக சமுதாயத்தை ஆராய்ந்தவர், தன்னியல்பான பொருள்முதல்வாதத் தத்துவஞானி.—10—15, 24, 27, 28, 29—36, 39, 45, 50, 52, 53, 61, 64, 65, 71, 78, 108, 136, 137, 138, 139, 145, 155, 164, 166, 170, 174, 176, 189, 202, 204, 218, 227, 256, 289, 290.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—10, 11, 31, 34, 50, 61, 62, 95, 102, 107, 113, 160, 163, 164, 165, 166, 170, 256.*

மார்டினேட்டி [Martignetti], பஸ்காலே *(1844—1920)—இத்தாலிய சோஷலிஸ்ட், மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களை இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்தவர்.—15.*

மெயின் [Maine], ஹென்றி ஸாம்னர் *(1822—1888)—ஆங்கில வழக்குரைஞர், ''பண்டைக்காலச் சட்டம்'' என்ற நூல் மற்றும் இதர நூல்களின் ஆசிரியர்.—130.*

மொம்ஸென் [Mommsen], தெயொடோர் *(1817—1903)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைக்கால ரோமானிய வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—164, 198—201, 204, 206.*

மொலியேர் [Molière], ஜான் படீஸ்ட் *(உண்மையான பெயர் பொக்லேன்) (1622—1673)—மாபெரும் பிரெஞ்சு நாடகாசிரியர்.—272.*

மோஸ்கஸ் *— கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கக் கவிஞர்.—125.*

மௌரர் [Maurer], கியோர்க் லுட்விக் *(1790—1872)—பிரபலமான ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைக்கால மற்றும் மத்திய கால ஜெர்மனியின் சமூக அமைப்பை ஆராய்ந்தவர்.—155, 225, 228.*

யாரஸ்லாவ் விவேகி *(978 — 1054) — கீவ் நகரத்தின் தலைமை இளவரசர் (1019—1054).—97.*

யூரிபிடிஸ் *(உத்தேசமாக கி.மு. 480—406)—பண்டைக்கால கிரேக்க நாடகாசிரியர், மூலச்சிறப்பான சோக நாடகங்களை எழுதியவர்.—105.*

ரவே [Ravé], அன்ரீ—*பிரெஞ்சுப் பத்திரிகையாளர், எங்கெல்சின் நூல்களை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தவர்.—15.*

ரைட் [Wright], ஆஷர் *(1803—1875)—1831 முதல் 1875 வரை செவ்விந்தியர்கள் மத்தியில் வசித்த அமெரிக்க மத போதகர், அவர்களுடைய மொழியைப் பற்றி அகராதி தயாரித்தவர்.—80.*

லப்பாக் [Lubbock], ஜான் *(1834—1913)—ஆங்கில விஞ்ஞானி, உயிரியல், மனித இனவியல் மற்றும் புதைபொருள் ஆராய்ச்சியாளர், டார்வின் ஆதரவாளர், பூர்விக சமுதாயத்தின் வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—27, 28, 30.*

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினாண்டு *(1825—1864)—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்கக் கட்டுரையாளர், வழக்குரைஞர்.—287.*

லாங்கே [Lange], கிரிஸ்தியன் கோன்ரட் லுட்விக் *(1825—1885)—ஜெர்மானிய மொழியியலாளர், பண்டைக் கால ரோமாபுரியின் வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—203.*

லாதாம் [Latham], ராபர்ட் கார்டன் *(1812—1888)—ஆங்கில மொழியியலாளர், மனித இனவியல் ஆராய்ச்சியாளர்.—24.*

லியூட்பிராண்ட் *(உத்தேசமாக 922—972)—மத்திய கால வரலாற்றாசிரியர், பிஷப்.—243.*

லிவி, டிடஸ் *(கி.மு. 59—கி.பி. 17)—ரோமானிய வரலாற்றாசிரியர், ''ரோமாபுரியின் வரலாறு'' என்னும் நூலின் ஆசிரியர்.—199, 203.*

லூதர் [Luther], மார்ட்டின் *(1483—1546)—மதச் சீர்திருத்த இயக்கத்தின் முக்கியமான தலைவர், ஜெர்மனியில் புரோடஸ்டேன்ட்டிசத்தை (லூதரனிசத்தை) நிறுவியவர், ஜெர்மன் பியூர்கெர்களின் சித்தாந்தி.—130.*

லூஸியன் *(உத்தேசமாக 120 — 180) — பண்டைக்கால கிரேக்க எழுத்தாளர், நாத்திகவாதி.—62.*

லெதூர்னோ [Letourneau], ஷார்ல் ஜான் மரீ *(1831—1902)—பிரெஞ்சுச் சமூகவியலாளர், மனித இனவியல் ஆராய்ச்சியாளர்.—53, 54, 55, 59.*

லோங்கஸ் *(2ஆம் நூற்றாண்டின் முடிவு—3ஆம் நூற்றாண்டின் தொடக்கம்)—பண்டைக்கால கிரேக்க எழுத்தாளர்.—125.*

**வாக்னர்** [Wagner], **ரீஹர்ட்** *(1813—1883)—மாபெரும் ஜெர்மன் இசைவாணர், தத்துவஞானத் துறையில் சில நூல்களை எழுதியவர்.—61, 62.*

**வாக்ஸ்முத்** [Wachsmuth], **எர்னஸ்ட் வில்ஹெல்ம் கோட்லிப்** *(1784—1866)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைக்கால உலக வரலாறு மற்றும் ஐரோப்பிய வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—105.*

**வாட்ஸன்** [Watson], **ஜான் போர்ப்ஸ்** *(1827—1892)—ஆங்கில மருத்துவர், காலனியாதிக்க அதிகாரி, இந்தியாவைப் பற்றி சில நூல்கள் எழுதியவர்.—68.*

**வாரஸ் (பப்ளியஸ் குவின்டிலியஸ் வாரஸ்)** *(உத்தேசமாக கி.மு. 53—கி.பி. 9)—ரோமாபுரியின் அரசியல்வாதி, இராணுவத் தளபதி, ஜெர்மானிய மாகாணத்தின் கவர்னர் (கி.பி. 7—9), கலகம் செய்த ஜெர்மானிய இனக்குழுக்களுடன் டியூடபர்க் காட்டில் நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்டார்.—196.*

**விலேடா** *(1ஆம் நூற்றாண்டு)—ஜெர்மானிய புருக்டேரிய இனக்குழுவைச் சேர்ந்த பூசாரிப் பெண், சாமியாடி; ரோமானிய ஆட்சிக்கு எதிரான எழுச்சியில் பங்கெடுத்தாள் (69—70 அல்லது 69—71).—225.*

**வெயிட்ஸ்** [Waitz], **கியோர்க்** *(1813—1883)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், ஜெர்மனியின் மத்திய கால வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—228.*

**வெஸ்டர்மார்க்** [Westermarck], **எடுவார்டு அலெக்சாந்தர்** *(1862—1939)—பின்லாந்தைச் சேர்ந்தவர்; மனித இனவியல் மற்றும் சமூகவியல் ஆராய்ச்சியாளர்.—54, 57, 60, 83.*

**வோல்ஃப்ராம் வான் எஷென்பாஹ்** *(உத்தேசமாக 1170—1220)—மத்திய கால ஜெர்மானியக் கவிஞர்.—115.*

**ஜிரோ-டெய்லோன்** [Giraud-Teulon], **அலெக்ஸீஸ்** *(பிறப்பு 1839)—ஜினீவாவில் வரலாற்றுப் பேராசிரியர், பூர்விக சமுதாயத்தின் வரலாற்றைப் பற்றிய நூல்களின் ஆசிரியர்.—30, 34, 54, 56, 101.*

**ஷார்ல் (மாபெரும் ஷார்ல்)** *(உத்தேசமாக 742—814)—பிராங்கு அரசர் (768—800), சக்கரவர்த்தி (800—814).—248, 249, 250, 251.*

**ஷோமான்** [Schömann], **கியோர்க் பிரெடெரிக்** *(1793—1879)*

—ஜெர்மன் மொழியியலாளர் மற்றும் வரலாற்றாசிரியர், பண்டைக்கால கிரேக்க வரலாற்றைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—*104, 170.*

ஸ்காட் [Scott], வால்டர் *(1771—1832)*—ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பிரபலமான நாவலாசிரியர்.—*218.*

ஹீராட் (கி.மு. *73—4*)—யூதேயாவின் அரசர் (கி.மு. *40—4*).—*206.*

ஹூஷ்கே [Huschke], கியோர்க் ஃபிலிப் எடுவார்டு *(1801—1886)*—ஜெர்மன் வழக்குரைஞர், ரோமானியச் சட்டத்தைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—*203.*

ஹெகடேயஸ் மிலியஸ் (உத்தேசமாக கி.மு. *546—480*)—பண்டைக்கால கிரேக்க வரலாற்றாசிரியர், பூகோள இயல் அறிஞர், கிரேக்க தொல்கதைகள் அடங்கிய நூல்களை எழுதியவர்.—*167.*

ஹெகல் [Hegel], கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக் *(1770—1831)*—மூலச்சிறப்பான ஜெர்மன் தத்துவஞானத்தின் மாபெரும் பிரதிநிதி, புறவயக் கருத்துமுதல் வாதி.—*276.*

ஹெரடோட்டஸ் (உத்தேசமாக கி. மு. *484 — 425*) — பண்டைக்கால கிரேக்க வரலாற்றாசிரியர்.—*68, 105.*

ஹொய்ஸ்லர் [Heusler], ஆன்டிரியாஸ் *(1834—1921)*—ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த வழக்குரைஞர், ஸ்விஸ் மற்றும் ஜெர்மானியச் சட்டத்தைப் பற்றிய நூல்களின் ஆசிரியர்.—*98.*

ஹோமர்—பண்டைக்கால கிரேக்க காவியக் கவிஞர், ''இலியாத்'', ''ஒடிஸி'' ஆகிய காவியங்களின் ஆசிரியர்.—*44, 45, 102, 103, 167, 170, 173.*

ஹோவிட் [Howitt], அல்ஃபிரேட் வில்லியம் *(1830—1908)*—ஆங்கில மனித இனவியல் ஆராய்ச்சியாளர், 1862 முதல் 1901 வரை ஆஸ்திரேலியாவில் காலனியாதிக்க அதிகாரியாகப் பணியாற்றியவர், ஆஸ்திரேலியாவைப் பற்றிய நிபுணர், ஆஸ்திரேலியாவின் இனக்குழுக்களைப் பற்றி நூல்கள் எழுதியவர்.—*72.*

# இலக்கிய மற்றும் புராணப்

# பெயரகராதி

அஃப்ரோடைடி *(கிரேக்கத் தொல்கதை)—காதல் மற்றும் அழகுத் தெய்வம்.—109.*

அகமெம்னான் *(கிரேக்கத் தொல்கதை)—அர்கோஸ் அரசன், ஹோமரின் ''இலியாத்'' என்னும் காவியத்தில் கதைத்தலைவன், ட்ரொஜன் யுத்தத்தில் கிரேக்கப் படைகளுக்குத் தலைமை தாங்கியவர், எஸ்கிலஸ் அகமெம்னானைக் கதைத்தலைவனாகக் கொண்டு ஒரு சோகநாடகத்தை எழுதினார்.—18, 102, 167, 172.*

அதீனா பல்லாஸ் *(கிரேக்கத் தொல்கதை)—முக்கியமான தெய்வங்களில் ஒன்று, யுத்தம் மற்றும் அறிவின் பெண் தெய்வம், அதீனிய அரசைக் காத்து வந்த தெய்வம்.—18, 19, 20.*

அபோல்லோ *(கிரேக்கத் தொல்கதை)—சூரியன் மற்றும் ஒளிக் கடவுள், கலைகளின் தெய்வம்.—18, 19, 20.*

அர்கோனாட்டுகள் *(கிரேக்கத் தொல்கதை)—பறக்கும் நாகம் உறங்காமல் காத்துக் கொண்டிருந்த தங்கக் கம்பளியை எடுப்பதற்கு ''அர்கோ'' என்ற கப்பலில் கோல்ச்சிசுக்குச் சென்ற வீரர்கள்.—222.*

அல்தேயா *(கிரேக்கத் தொல்கதை)—அரசர் தெஸ்டியசின் மகள், மிலியாகரின் தாய்.—222.*

அனெய்டிஸ் — *இரானியத் தொல்கதைகளில் நீர்வளம் மற்றும் இனப்பெருக்கத்தின் பெண் தெய்வமான அனாஹிட்டாவின் பண்டைக்கால கிரேக்கப் பெயர், அனெய்டிஸ் வழிபாடு அர்மீனியாவில் பரவலாக இருந்தது, அங்கே அனெய்டிஸ் ஆசியா மைனரின் இனப்பெருக்கப் பெண் தெய்வங்களுடன் சேர்க்கப் பட்டிருந்தது.—84, 109.*

அஹில்லஸ் *(கிரேக்கத் தொல்கதை)—ட்ரொஜன் யுத்தத்*

தில் பங்கெடுத்த கிரேக்க வீரர்களில் துணிவு மிக்க வர், ஹோமரின் "இலியாத்" என்னும் காவியத்தில் வர்ணிக்கப்படுகின்ற வீர புருஷர்களில் ஒருவர்; அவருடைய வலது குதிகாலில் காயப்படுத்தினால் தான் மரணமடைவார் என்று சொல்லப்பட்டது, குதிகாலில் காயமடைந்து மரணமடைந்ததாகத் தொல்கதை கூறுகிறது.—*102, 172.*

ஆப்ரஹாம்—விவிலிய நூலின்படி, பண்டைக்கால யூத தலைமைக் குரு.—*89.*

இடியோக்ளஸ் (*கிரேக்கத் தொல்கதை*)—தீப்சின் அரசனான ஈடிபசின் குமாரர்களில் ஒருவன், அவன் அரச பதவியைக் கைப்பற்றுவதற்குப் போராடித் தன்னுடைய சகோதரன் பலினீகசைக் கொன்று அப்போரில் தானும் மடிந்தான், இத்தொல்கதையை அடிப்படையாகக் கொண்டு எஸ்கிலஸ் "தீப்சிற்கு எதிராக எழுவர்" என்னும் சோகநாடகத்தை எழுதினார்.—*169.*

உட்டே (நார்வே நாட்டைச் சேர்ந்த உட்டே)—பண்டைக் கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானியக் கவிதையான "குட்ரூனின்" கதைத்தலைவி.—*128.*

எகிஸ்தஸ் (*கிரேக்கத் தொல்கதை*)—கிளிதெம்னெஸ்த்ராவின் காதலன், அகமெம்னானைக் கொலை செய்வதில் பங்கெடுத்தவர், எஸ்கிலஸ் எழுதிய "அகமெம்னான்" மற்றும் "ஹொாயெஃபோராக்கள்" என்னும் சோகநாடகங்களின் (முப்பகுதிகளைக் கொண்ட "ஒரெஸ்தெயாவின்" முதல் மற்றும் இரண்டாவது பகுதிகள்) ஒரு பாத்திரம்.—*18.*

எரினியேக்கள் (*கிரேக்கத் தொல்கதை*)—எஸ்கிலஸ் எழுதிய "ஹொாயெஃபோராக்கள்" மற்றும் "யூமெனிடாக்கள்" என்னும் சோகநாடகங்களில் (முப்பகுதிகளைக் கொண்ட "ஒரெஸ்தெயாவின்" இரண்டாவது மற்றும் மூன்றாவது பகுதிகள்) வருகின்ற பழிவாங்கும் பெண் தெய்வங்கள்.—*18, 19, 20.*

ஏட்ஸெல்—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் மத்திய கால ஜெர்மானியக் கவிதையான "நிபலுங்குகளைப் பற்றிய பாடலின்" கதைத்தலைவன், ஹூணர்களின் அரசன்.—*128.*

ஒடிஸியஸ்—ஹோமரின் "இலியாத்" மற்றும் "ஒடிஸி" காவியங்களின் கதைத்தலைவன், இதாக்காவின் புராண அரசன், ட்ரொஜன் யுத்தத்தில் கிரேக்கப்

படைகளின் தலைவர்களில் ஒருவர், வீரம், தந்திரம், நாவன்மை ஆகிய திறமைகளினால் பிரபலமடைந்தவர்.—*172*.

**ஒரெஸ்தஸ்** *(கிரேக்கத் தொல்கதை)* — அகமெம்னான் மற்றும் கிளிதெம்னெஸ்த்ராவின் மகன், தன்னுடைய தகப்பனாரைக் கொலை செய்ததற்காகத் தன்னுடைய தாயாரையும் எகிஸ்தசையும் பழி வாங்கியவன்; எஸ்கிலஸ் எழுதிய ''ஹொயெஃபோராக்கள்'' மற்றும் ''யூமெனிடாக்கள்'' (முப்பகுதிகளைக் கொண்ட ''ஒரெஸ்தெயாவின்'' இரண்டாவது மற்றும் மூன்றாவது பகுதிகள்) சோகநாடகங்களின் கதைத் தலைவன்.—*18, 19*.

**கஸ்ஸான்டிரா** (கிரேக்கத் தொல்கதை)—ட்ராயின் அரசரான பிரியாமின் மகள், மெய்ஞானி; ட்ராய் முறியடிக்கப்பட்ட பிறகு அகமெம்னானால் அடிமையாகக் கவர்ந்து செல்லப்படுகிறாள், எஸ்கிலஸ் எழுதிய ''அகமெம்னான்'' என்ற சோகநாடகத்தில் ஒரு பாத்திரம்.—*102*.

**கானிமீடு** (கிரேக்கத் தொல்கதை)—தெய்வங்களால் கவர்ந்து செல்லப்பட்ட அழகான இளைஞன், ஒலீம்பஸ் மலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே ஜேயசுக்குக் காதலனாக இருந்தான்.—*106*.

**கிரீம்ஹில்ட்**—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் மத்திய கால ஜெர்மானியக் கவிதையான ''நிபலுங்குகளைப் பற்றிய பாடலின்'' கதைத் தலைவி, புர்குண்டியர்களின் அரசரான குந்தரின் சகோதரி, பிற்பாடு ஸிக்ஃப்ரிடின் மனைவி, அவர் மரணமடைந்த பிறகு ஹுணர்களின் அரசரான ஏட்ஸெலின் மனைவி.—*127, 128*.

**கிளிதெம்னெஸ்த்ரா** (கிரேக்கத் தொல்கதை)—அகமெம்னானுடைய மனைவி; ட்ரொஜன் யுத்தத்தின் பிறகு திரும்பிய கணவனைக் கொலை செய்தவள்; எஸ்கிலஸ் எழுதிய ''ஒரெஸ்தெயா'' என்னும் சோகநாடகத்தின் கதைத்தலைவி.—*18, 19*.

**கிளியோபாத்ரா** (கிரேக்கத் தொல்கதை)—வடக்குக் காற்றின் கடவுளான போரியசின் மகள்.—*222*.

**குட்ரூன்**—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவி, ஹெகெலிங்கர்களின் அரசரான ஹெடலுக்கும் அயர்

லாந்தின் ஹீல்டேக்கும் பிறந்த மகள், ஸீலாந்தின் அரசரான ஹொர்விக் மணம் செய்ய நிச்சயிக்கப்பட்ட பெண்; ஹார்ட்முத்தால் கவர்ந்து செல்லப்பட்டு அவனைத் திருமணம் செய்து கொள்ள மறுத்ததற்காகப் பதின்மூன்று ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டாள், முடிவில் ஹொர்விக் அவளை விடுதலை செய்ய அவரைத் திருமணம் செய்து கொள்கிறாள்.—128.

குந்தர் — பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் மத்திய கால ஜெர்மானியக் கவிதையான "நிபலுங்குகளைப் பற்றிய பாடலின்" கதைத் தலைவன், புர்குண்டியர்களின் அரசன்.—127, 128.

குளோ — லோங்கஸ் (2—3ஆம் நூற்றாண்டு) எழுதிய "டாஃப்னிஸ் மற்றும் குளோ" என்னும் பண்டைக் கால கிரேக்கக் கதையின் தலைவி, டாஃப்னிசைக் காதலிக்கும் ஆடுமேய்க்கும் பெண்.—125.

டாஃப்னிஸ்—லோங்கஸ் (2—3ஆம் நூற்றாண்டு) எழுதிய "டாஃப்னிஸ் மற்றும் குளோ" என்னும் பண்டைக் கால கிரேக்கக் கதையின் தலைவன், குளோவைக் காதலிக்கின்ற ஆடுமேய்ப்பவன்.—125.

டியூகுரோஸ்—ஹோமர் எழுதிய "இலியாத்" என்னும் காவியத்தில் ஒரு கதாபாத்திரம், ட்ராயில் நடைபெற்ற சண்டையில் பங்கெடுத்தார்.—103.

டெமடோகஸ்—ஹோமர் எழுதிய "ஒடிஸி" என்னும் காவியத்தில் ஒரு கதாபாத்திரம், ஃபியேய்ஷன்களின் புராண அரசரான அல்கினோயசின் அரசவையிலிருந்த குருட்டுப் பாடகன்.—173.

டெலமான் (கிரேக்கத் தொல்கதை)—ட்ரொஜன் யுத்தத்தில் புகழ்பெற்ற பண்டைக்கால கிரேக்க வீரன்.—103.

டெலிமாகஸ்—ஹோமர் எழுதிய "ஒடிஸியில்" ஒரு கதாபாத்திரம், இதாக்காவின் அரசனான ஒடிஸியசின் மகன்.—102.

தாந்தேன், ஜார்ஜ்—மொலியேர் இதே பெயரில் எழுதிய இன்பியல் நாடகத்தின் கதைத்தலைவன், பணக்கார விவசாயிக் குடும்பத்தைச் சேர்ந்த வெகுளி, அவன் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த, திவாலாகிப் போன பெண்ணை மணந்து கொள்கிறான், அந்தப் பெண் அவனைத் திறமையாக ஏமாற்றுகிறாள்.—272.

தீஸியஸ் (கிரேக்கத் தொல்கதை)—முக்கியமான கதாபாத்திரங்களில் ஒருவர்; ஏதன்சின் அரசர், அதீனிய

அரசை ஸ்தாபித்தார் என்று தொல்கதைகள் கூறுகின்றன.—177, 178.

**தெஸ்டியஸ்** (கிரேக்கத் தொல்கதை)—இதோலியாவில் பிலூரனின் புராண அரசர்.—222.

**நியோர்ட்** (ஸ்காண்டிநேவியத் தொல்கதை) — இனப் பெருக்கக் கடவுள், பண்டைக்கால ஸ்காண்டிநேவிய மகாகாவியமான ''எட்டாவின்'' கதைத்தலைவன்.—62.

**நெஸ்டர்** (கிரேக்கத் தொல்கதை)—ட்ரொஜன் யுத்தத்தில் பங்கெடுத்த கிரேக்க வீரர்களில் மூத்தவர், அறிவில் சிறந்தவர்.—167.

**பிரேயா** (ஸ்காண்டிநேவியத் தொல்கதை)—இனப்பெருக்கம் மற்றும் காதலின் பெண் தெய்வம், பண்டைக்கால ஸ்காண்டிநேவிய மகாகாவியமாகிய ''எட்டாவின்'' கதைத்தலைவி, பிரெயர் என்னும் கடவுளாகிய தன்னுடைய சகோதரனுடைய மனைவி. —62.

**பலினீகஸ்** (கிரேக்கத் தொல்கதை)—தீப்சின் அரசனான ஈடிபசின் குமாரர்களில் ஒருவன், அரச பதவியைக் கைப்பற்றுவதற்குப் போராடித் தன்னுடைய சகோதரன் இடியோக்ளசைக் கொன்று அப்போரில் தானும் மடிந்தான். இத்தொல்கதையை அடிப்படையாகக் கொண்டு எஸ்கிலஸ் ''தீப்சிற்கு எதிராக எழுவர்'' என்னும் சோகநாடகத்தை எழுதினார்.—169.

**பீனியஸ்** (கிரேக்கத் தொல்கதை)—கண்பார்வை இல்லாத தீர்க்கதரிசி, தன் இரண்டாம் மனைவியினால் தூண்டப்பட்டுத் தன் முதல் மனைவியான கிளியோபாத்ரா (போரியசின் மகள்) மூலம் பிறந்த குழந்தைகளை சித்திரவதை செய்தான், அதற்காக தெய்வங்களால் தண்டிக்கப்பட்டவன்.—222.

**புருன்ஹில்ட்**—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் மத்திய கால ஜெர்மானியக் கவிதையான ''நிபலுங்குகளைப் பற்றிய பாடலின்'' கதைத்தலைவி, ஐஸ்லாந்தின் அரசி, பிற்காலத்தில் புர்குண்டியர்களின் அரசரான குந்தரின் மனைவி.—128.

**போரியாட்டுகள்** (கிரேக்கத் தொல்கதை) — வடக்குக் காற்றின் கடவுளான போரியசுக்கும் ஏதன்சின் அரசி ஒரேய்தியாவுக்கும் பிறந்த குழந்தைகள்.—222.

**மிலிட்டா**—பாபிலோனியத் தொல்கதையில் காதல் மற்

றும் இனப்பெருக்கத்தின் கடவுளான இஷ்தாருக்குத் தரப்பட்ட கிரேக்கப் பெயர்.—84.

மிலியாகர் (கிரேக்கத் தொல்கதை)—காலிடோனின் அரசனாக இருந்ததாகத் தொல்கதைகளில் சொல்லப்படுகின்ற ஈனியசுக்கும் அல்தேயாவுக்கும் பிறந்த மகன், அவன் தன்னுடைய தாயாரின் சகோதரர்களைக் கொன்றான்.—222.

மூலியஸ்—ஹோமரின் "ஒடிஸியில்" ஒரு கதாபாத்திரம், கட்டியக்காரன்.—173.

மெஃபிஸ்டோபிலஸ்—கேதே எழுதிய "ஃபாவுஸ்ட்" சோக நாடகத்தின் முக்கியமான நாடகபாத்திரம்.—62.

மோஸஸ் (விவிலிய நூல்)—தீர்க்கதரிசி, சட்டம் இயற்றுபவர், எகிப்தியர்களால் சிறைபிடிக்கப்பட்ட பண்டைக் கால யூதர்களை விடுதலை செய்து அவர்களுக்குச் சட்டங்களைத் தந்தவர்.—15, 89.

யூமியஸ்—ஹோமரின் "ஒடிஸி" காவியத்தில் ஒரு கதாபாத்திரம், இதாக்காவின் அரசன் ஒடிஸியசின் பன்றிகளை மேய்ப்பவன், எசமானருடைய நெடும் பயணம் முழுவதிலும் அவருக்கு விசுவாசமாக இருந்த ஊழியன்.—173.

ரோமுலஸ்—தொல்கதையின்படி ரோமாபுரியின் ஸ்தாபகர், அதன் முதல் அரசன்.—196, 205.

லோகி (ஸ்காண்டிநேவியத் தொல்கதை)—தீமைகளைச் செய்யும் பேய், நெருப்புக் கடவுள், பண்டைக்கால ஸ்காண்டிநேவியக் காவியமான "எட்டாவின்" கதைத் தலைவன்.—62.

ஜேயஸ் (கிரேக்கத் தொல்கதை) — ஒலீம்பஸ் மலை மீதுள்ள தெய்வங்களின் அரசன்.—172, 173.

ஸிஃப் (ஸ்காண்டிநேவியத் தொல்கதை)—இடிக் கடவுளான தோரின் மனைவி, பண்டைக்கால ஸ்காண்டிநேவியக் காவியமான "எட்டாவின்" கதைத்தலைவி.—221.

ஸிகெபான்ட் (அயர்லாந்தைச் சேர்ந்த ஸிகெபான்ட்)—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானியக் கவிதையான "குட்ரூனின்" கதைத்தலைவன், அயர்லாந்தின் அரசன்.—128.

ஸிக்ஃபிரிட்—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம்

மற்றும் மத்திய கால ஜெர்மானியக் கவிதையான ''நிபலுங்குகளைப் பற்றிய பாடலின்'' கதைத்தலைவன்.—127.

ஸிக்ஃபிரிட் (மோர்லாந்து நாட்டு ஸிக்ஃபிரிட்)—பண்டைக் கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவன், குட்ரூனால் நிரா கரிக்கப்பட்ட மணமகன்களில் ஒருவன்.—128.

ஹாதுபிராண்ட் —பண்டைக்கால ஜெர்மானிய வீர மகா காவியமான ''ஹில்டெபிராண்டைப் பற்றிய பாட லின்'' கதைத்தலைவன், ஹில்டெபிராண்டின் மகன். —221.

ஹார்ட்முத்—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மா னியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவன், ஓர்மனியின் (நார்மண்டியின்) அரசனின் மகன், குட்ரூ னால் நிராகரிக்கப்பட்ட மணமகன்களில் ஒருவன்.— 128.

ஹில்டெபிராண்ட்—பண்டைக்கால ஜெர்மானிய வீர மகா காவியமான ''ஹில்டெபிராண்டைப் பற்றிய பாட லின்'' கதைத்தலைவன்.—221.

ஹில்தே—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற் றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவி, அயர் லாந்து அரசரின் மகள், ஹெகெலிங்கர்களின் அரசர் ஹெடலின் மனைவி.—128.

ஹெடல்—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற் றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மா னியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவன், ஹெகெலிங்கர்களின் அரசர்.—128.

ஹெராக்லஸ் (கிரேக்கத் தொல்கதை)—விளையாட்டுத் திறமைக்கும் மனிதச் சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களுக்கும் பிரபலமடைந்த வீரன்.—222.

ஹெர்விக்—பண்டைக்கால ஜெர்மானிய மகாகாவியம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மா னியக் கவிதையான ''குட்ரூனின்'' கதைத்தலைவன், ஸீலாந்தின் அரசன், குட்ரூனைத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டவர், அவளைச் சிறையிலிருந்து விடு தலை செய்து, பிறகு அவளை மணம் செய்து கொண்டவர்.—128.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை „Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

# மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் நூல்கள்





மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் படைப்புகளை "முன்னேற்றப் பதிப்பகம்" 50க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் பிரசுரித்து வருகிறது. இவை திரட்டு நூல்களாகவும் தேர்வு நூல்களாகவும் குறிப்பிட்ட தலைப்புகளிலான தொகுப்புகளாகவும் தனிப்பட்ட புத்தகங்களாகவும் வெளிவருகின்றன.

இந்தத் தொடர்வரிசையில் அடங்கியுள்ள தொகுதிகளிலும் முக்கியமான படைப்புகளிலும் மார்க்சிய-லெனினிய ஆசான்கள் இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய தம் போதனையை வெளியிட்டுள்ளனர், முதலாளித்துவத்தின் சமூக-பொருளாதார உறவுகளையும் சோஷலிசத்தின் அடிப்படை நியதிகளையும் ஆராய்கின்றனர். இந்நூல்களில் ஆராயப்பட்டுள்ள பிரச்சினைகள் நம் காலத்திற்கும் முக்கியமானவை. எல்லா நூல்களுடனும் நவீன, விஞ்ஞான தகவல் அனுபந்தம் இணைக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றப் பதிப்பகம்

ISBN 5-01-002396-2

C-022
N. C. B. H.
MADRAS-98
ரூ 10.00.-